# திருமறையைப் புரிந்துகொள்வது எப்படி

# இரட்சிப்பைப்

# புரிந்து கொள்வது எப்படி

## பாகம் 1 : டேவிட் ரோப்பரின் பாடங்கள்


விசேஷித்த ஒருவருக்கு

1. ஆதிகாரமுடைமை
2. உங்களை ஒருவர் நேசிக்கிறார்
3. "நான் என்ன செய்ய வேண்டும்?"
4. "எழுத்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (1)
5. ?எழுத்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (2)
6. இயேசு கட்டிய சபை
7. இயேசுவின் சபை : நியமனப் பெயர்
8. இயேசுவின் சபை : அமைப்பு முறை
9. இயேசுவின் சபை : ஆராதனை (1)
10. இயேசுவின் சபை : ஆராதனை (2)
11. இயேசுவின் சபை : ஊழியம்
12. ?மரணபரியந்தம் உண்மையாயிருங்கள்?
13. ? இப்பொழுதே அங்க்கிரக காலம்?

விசுவாசிப்பதற்கு அறைகூவல்


## பாகம் 2 : ஓவன் ஆல்பிரைட்டின் பாடங்கள்


ஓர் அறிமுகம்

1. புழைய ஏற்பாட்டில் சடங்கும் புரிந்து கொள்ளுதலும்
2. புதிய ஏற்பாட்டில் சடங்கும் புரிந்து கொள்ளுதலும்
3. யோவான் ஞானஸ்தானத்தைப் போதித்தார்
4. இயேசு ஞானஸ்நானம் பெற்றார்
5. இயேசு மக்களை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்தினார்
6. இயேசு ஞானஸ்நானத்தைப் போதித்தார்
7. பேதுரு ஞானஸ்நானத்தைப் போதித்தார்
8. எல்லா நாட்டவருக்கும் ஞானஸ்நானம்
9. பவுல் ஞானஸ்நானத்தைப் போதித்தார்
10. தகுதிப் படுத்துகின்ற ஞானஸ்நானமும்
11. பரிசுத்த ஆவியானவரும் ஞானஸ்நானமும்
12. யோசனைகளும் முடிவுகளும்

# விசேஷித்த ஒருவருக்கு

*நாம் ஒருபொழுதும் சந்தித்ததில்லை, ஆனால் நீங்கள் விசேஷித்தவர் என்பதை நான் அறிகின்றேன். இப்பாடங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று யாரோ ஒருவர் நினைத்ததால் நான் அதை அறிகின்றேன். அத்துடன், ஆவிக்குரிய விஷயங்களில் உங்களுக்குப் போதுமான அளவுக்கு ஆர்வம் இருப்பதாலேயே இவ்வெளியீட்டை எடுத்துப் படிக்கத் தொடங்கியிருக்கின்றீர்கள் என்பதையும் நான் அறிகின்றேன். இப்பொழுது மற்றும் இங்குள்ளவைகள் ஆகியவற்றிலேயே ஆர்வம் செலுத்துகின்ற ஒரு உலகத்தில், இது உங்களை மிகவும் விசேஷித்தவராக்குகின்றது!*

*"இதெல்லாம் எதைப் பற்றியது?" என்று நீங்கள் வியப்படையலாம், "ஒவ்வொரு மனிதருக்கும் இரட்சிப்பின் வழிகாட்டி" என்பதே தலைப்பாக இருக்கின்றது; இது நித்திய இரட்சிப்பு என்ற கருத்தைப் பற்றிய வேதாகமத்தின் முக்கியமான பாடமாக இருக்கின்றது.*

*நீங்கள் பள்ளியில் - வாசித்தல், கணக்கு, வரலாறு போன்ற - பல பாடங்களைப் படித்திருப்பீர்கள், ஆனால் இரட்சிப்பு என்பது பற்றிய பாடத்தைக்காட்டிலும் முக்கியமான பாடத்தை நீங்கள் ஒருபொழுதும் படிக்க மாட்டீர்கள். தேவன் ஒருவர் இருக்கின்றார் என்றால் (அவர் இருக்கின்றார் என்பதை பலர் நம்புகின்றார்கள்), மற்றும் பரலோகம் ஒன்று இருக்கின்றது என்றால் (மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உள்ளது என்று பலர் நம்புகின்றார்கள்), இப்போது தேவனைப் பிரியப் படுத்துவது எப்படி என்பதையும், நாம் இறக்கும்போது எவ்விதம் பரலோகம் செல்வது என்பதையும் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது.*

*நாம் கவனம் செலுத்துவதற்காக, நமது பாடத்தின் நோக்கத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்:*

***இலக்கு: நித்திய ஜீவன்***

*வேதாகமம் கூறும் ஒவ்வொன்றைப் பற்றிய எல்லாவற்றையும் நாம் படிக்க முடியாமல் இருக்கலாம். நமது பாடமானது, கிறிஸ்தவராவது எப்படி, இப்பொழுது தேவனைப் பிரியப்படுத்துவது எப்படி, மற்றும் நீங்கள் நித்தியத்திற்கும் தேவனோடு வாழ்வதை நிச்சயப்படுத்திக் கொள்வது எப்படி என்பவைகளில் கவனம் செலுத்துவதாயிருக்கும்.*

*தேவனைப் பிரியப்படுத்துவது எப்படி என்று அறிவதற்கு அவருடைய புத்தகத்தைப் பார்ப்பது என்ற ஒரே வழி மட்டுமே இருப்பதால், விடைகளைக் காண்பதற்கு நாம் வேதாகமத்தைப் பயன்படுத்துவோம்.*

மதத்தைப் பற்றிய நமது சொந்தக் கருத்துக்கள் நம் எல்லாரிடமும் இருக்கின் றன. ஆனால் நீங்களும் நானும் நினைப்பதென்ன என்பது முக்கியமான தல்ல. வேதாகமம் கூறுவது என்ன என்பதே முக்கியமானதாகும்.

இது ஒரு வேதாகமப் பாடமாயிருப்பதால், நாம் வேத வசனங்கள் பலவற்றைப் பார்ப்போம், சில வசனங்கள் மேற்கோளாய் காட்டப்படும், மற்றவைகள் வெறுமனே குறிப்பிடப்படும். ஒவ்வொரு வசனப் பகுதியை யும் உங்களது சொந்த வேதாகமத்தில் சரிபார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் மாறுபட்ட ஒரு மொழிபெயர்ப்பு வேதாகமத்தைப் பயன்படுத்தினால்,[1] வார்த்தைகள் சற்று மாறுபடலாம்; ஆனால் வேதாகமத்தின் நம்பகமான மொழிபெயர்ப்புப் பிரதி ஒன்றை நீங்கள் கொண்டிருக்கும் வரையிலும், இவைகள் அடிப்படையில் ஒரே விஷயத்தை அர்த்தப்படுத்துவதாகவே இருக்கும். நாம் ஒன்றிணைந்து படிக்கையில், King James Version (KJV), the New International Version (NIV) மற்றும் New American Standard Bible (NASB) முதலிய பரவலாகப் பயன்படுத்தப்படும் மொழிபெயர்ப்பு வேதாகமங்கள் பலவற்றிலிருந்து குறிப்புகளை நீங்கள் காண்பீர்கள்.

வேதாகமப் பாடம் என்பது உங்களுக்குப் புதியதாக இருந்தால், வேதாகமத்தில் உள்ள புத்தகங்களைக் கண்டு பிடிக்க உங்கள் வேதாகமத் தின் முதற்பகுதியில் உள்ள பொருளடக்கத்தை நீங்கள் பயன்படுத்தலாம். "2 பேதுரு 3:15, 16" என்பது போன்ற வசனக் குறிப்பை நீங்கள் காணும் பொழுது, "2 பேதுரு" என்பது புத்தகத்தின் பெயராகும்; நிறுத்தக் குறிக்கு (:) முன் உள்ள எண் அதிகாரத்தையும், நிறுத்தக் குறிக்கு (:) அடுத்துள்ள எண்(கள்) வசன(ங்களை)க் குறிப்பதாகவும் உள்ளது. சில வேளைகளில், வசன எண்ணுடன் ஒரு எழுத்தும் தரப்பட்டுள்ளதைக் காண்பீர்கள்; எடுத்துக்காட்டாக, "வ. 15ஆ, 16" என்றால், பதினைந்தாம் வசனத்தின் இரண்டாவது வாக்கியத்திலிருந்து வாசிக்கத் தொடங்கி, 16ம் வசனத்தை முழுவதும் வாசிக்க வேண்டும் என்று அர்த்தமாகும். (வசனங்கள் எல்லா இடங்களிலும் முழு வாக்கியங்களாகப் பகுக்கப்பட்டிருப்பதில்லை.)

ஒரு வசனப் பகுதியைப் படித்து முடித்த பின் அதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களைப் படிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறோம். வசனங்களைத் தனிமைப் படுத்தி, அவைகள் போதிக்காத ஒன்றை போதிப்பது போலத் தோன்றச் செய்வது சாத்தியமாகிறது என்பதால், இவ்விதம் நடக்காதவாறு பார்த்துக் கொள்ளும்படி நாங்கள் விரும்புகின்றோம்! (2 பேது. 3:15, 16ல் வேதவாக்கியங்களைத் திரித்துக் கூறுவதைப் பற்றிப் பேசப்படுகின்றது.)

இதை நீங்கள் அச்சடிக்கப்பட்ட ஒரு பேச்சு என்று எண்ணாமல், ஒரு தனிப்பட்ட பாடமாக எண்ணுங்கள். ஒருவர் - ஒருவருக்குப் போதித்தல் என்ற அணுகுமுறையிலேயே நான் இதை எழுதியிருக்கின்றேன். கையில் ஒரு பேனா அல்லது பென்சிலுடன் இதை வாசிக்கத் தொடங்குங்கள்:

- நீங்கள் வாசிக்கையில் சிலவற்றைக் குறிப்பிடத்தக்கதென்று நினைத்தால், அதைக் குறித்துக் கொள்ளுங்கள்.

- *ஒரு கருத்தில் (சிந்தனையில்) உங்களுக்கு உடன்பாடில்லை என்றால் அதையும் தக்க முறையில் குறித்துக் கொள்ளுங்கள்.*
- *உங்களுக்கு ஒரு கேள்வி எழுந்தால், அதை பக்க ஓரத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.*

*ஒரு பகுதியை நீங்கள் படித்து முடித்ததும், இப்பதிப்பை உங்களுக்குக் கொடுத்த உங்கள் நண்பரைத் தொடர்பு கொள்ளுங்கள். கேள்விகளைக் கேட்பதற்கு ஒருபொழுதும் தயங்காதீர்கள். கேள்விகள் உங்களை முட்டாள்களாகக் காட்டுவதில்லை; உங்களின் கேள்விகள் நீங்கள் சிந்திக்கின்றீர்கள் என்பதையே காண்பிக்கின்றன.*

*சில வேளைகளில், நீங்கள் ஒரு கேள்வி கேட்கும் பொழுது, இன்னும் அதிகமாய்ப் படிக்கும்படியாக உங்களிடத்தில் கேட்கப்படலாம். பதிலானது பின்வரும் பாடம் ஒன்றில் காணப்படலாம் - அல்லது பதில் கொடுக்கப் படுகையில் அதைப் புரிந்து கொள்வதற்கு உங்களுக்குக் கூடுதலான பின்னணி அவசியமாக இருக்கலாம். உங்கள் கேள்விகள் முக்கியமான வைகள் என்பதையும், அவை ஒவ்வொன்றிற்கும் பதில் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நிச்சயமாய் அறியுங்கள்.*

*நமது பாடத்தை நாம் தொடங்கு முன், தயவு செய்து கீழ் உள்ள வினாத்தாளை நிறைவு செய்யுங்கள். இது உங்களைப் பற்றி உங்கள் நண்பர் நன்றாய் அறிய உதவும். மேலும் இதே படிவத்தைப் பற்றி பின்வரும் பாடம் ஒன்றிலும் நாங்கள் குறிப்பிடுவோம். என்ன தகவல் விரும்பப்படுகின்றது என்பதை உறுதியாய் நீங்கள் அறியாமலிருந்தால், உங்களால் முடிந்த அளவு சிறப்பாகப் பதில் கொடுங்கள். நீங்கள் விரும்பினால் விளக்கக் குறிப்புகளையும் கூட்டிக் கொள்ளுங்கள். நன்றி!*

*நாம் படிக்கையில், தேவன் நம் அனைவரையும் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கின்றேன்.*

*டேவிட் ரோப்பர்*

*பெயர்:______________________________*

1. *எப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டேன்: ______________*
2. *இரட்சிப்புக்குப்பின் எவ்வளவு நாட்கள் கழித்து ஞானஸ்நானம் பெற்றேன்: ______________*
3. *ஞானஸ்நானம் பெறுமுன் நான் செய்த அறிக்கை: ______________*
4. *நான் ஞானஸ்நானம் பெற்றதற்குக் காரணம்: ______________*
5. *நான் எவ்விதத்தில் ஞானஸ்நானம் பெற்றேன் (தெளித்தல், ஊற்றுதல் அல்லது மூழ்குதல்): ______________*

*கூடுதல் குறிப்புகள்/கேள்விகள்:*

______________________________

______________________________

______________________________

குறிப்புகள்

[1]*பழைய ஏற்பாட்டின் பெரும்பான்மையான பகுதிகள் ஆதியில் எபிரெய மொழியிலும், புதிய ஏற்பாடானது ஆதியில் கொய்னீ கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டது. ("கொய்னீ" என்றால் "பொதுவான" என்று அர்த்தமாகும்; கொய்னீ கிரேக்கம் என்பது புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் சராசரி மனிதர்களால் பேசப்பட்ட கிரேக்க மொழியாகும்.) வேதாகமமானது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பல மக்கள்* King James Version *(*Common *அல்லது* Authorized Version *என்றும் இது அழைக்கப்படுகின்றது) என்ற ஆங்கில மொழிபெயர்ப்பையே வைத்துள்ளார்கள். இது 1611ஆம் ஆண்டில் வெளியான தாகும். மற்றவர்களோ, நன்கு பழக்கப்பட்ட வார்த்தைகள் கொண்ட தற்கால மொழிபெயர்ப்பை விரும்புகின்றார்கள். (பாடங்களைத் தொடர்ந்து வரும் நிறைவுக் குறிப்புகள் இரண்டு நோக்கங்கள் உடையவைகளாய் இருக்கின்றன.* [1] *சொற்றொடர்களை விளக்குதல் மற்றும்* [2] *கூடுதல் தகவல்களை தருதல். நீங்கள் படித்தது போதுமானதென்று நீங்கள் உணர்ந்தால், நிறைவுக் குறிப்புகளை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.)*

# படிக்கும்போது நீங்கள் கேட்கக் கூடிய கேள்விகள்

### *“அப்போஸ்தலனாகிய பவுல்” யார்?*

*தொடக்கத்தில் பவுல், ‘‘சவுல்’’ என்று அறியப்பட்டார். அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்மேல் வைராக்கியமாயிருந்த ஒரு யூதராயிருந்தார் (பிலி. 3:5, 6). சபை நிலை நாட்டப்பட்ட பிறகு, அவர் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துகின்றவரானார் (அப். 7:58; 8:1, 3; 9:1, 2). அவரது மாற்றத்தின் வரலாறு நடபடிகளின் புத்தகத்தில், 9, 22 மற்றும் 26 ஆகிய மூன்று அதிகாரங்களில் காணப்படுகின்றன. அவர் ஒரு அப்போஸ்தலராகும் கட்டளையைக் கிறிஸ்துவினிடமிருந்து பெற்றுக் கொண்டார் (ரோமர் 1:1; 1 கொரி. 1:1), அக்கட்டளையில் அவர் புறஜாதியார் அல்லது யூதரல்லாதவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் விசேஷித்த ஊழியத்தைப் பெற்றுக் கொண்டார் (அப். 9:15; ரோமர் 11:13; 1 தீமோ. 2:7). புதிய ஏற்பாட்டின் பாதிக்கு மேற்பட்ட புத்தகங்கள் (ரோமர் முதல் பிலேமோன் வரை - மற்றும் ஒருவேளை எபிரெயர் நிருபமும் கூட) அவரால் எழுதப்பட்டவைகள் ஆகும்.*

### *பவுலும், ஏவப்பட்ட மற்ற எழுத்தாளர்களும் கூறியது அல்லது எழுதியது ஏதாவது வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றதா?*

*ஆம்! புதிய ஏற்பாடு முழுவதும், இயேசுவின் புதிய உடன்படிக்கை யாகும்: கிறிஸ்து தாமே சொந்தமாகக் கூறியவைகளும், ஏவப்பட்ட மனிதர்கள் மூலமாகக் கூறியதுமாகிய இரண்டு இதில் அடங்கியுள்ளது. இயேசு தமது மரணத்திற்கு முன்பு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில், தாம் அவர்களுக்குப் போதித்த யாவற்றையும் நினைப்பூட்டுவதற்குப் பரிசுத்த ஆவியானவரை அவர்களிடத்தில் அனுப்புவதாகக் கூறினார் (யோவா. 14:26; யோவா. 16:13ஐயும் காணவும்). பவுலும் மற்றவர்களும் தாங்கள் போதித்தவற்றில் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டனர் (1 கொரி. 2:12, 13ஐக் காணவும்). மத்தேயு 10:40ல் இயேசு என்ன கூறினார் என்று வாசியுங்கள். அப்போஸ்தலருடைய உபதேசத்தை நீங்கள் மறுதலித்தால், இயேசுவையே நீங்கள் மறுதலிக்கின்றீர்கள் - மற்றும், நீங்கள் தேவனையே மறுதலிக்கின்றீர்கள்.*

### *“பிரதான கட்டளை” என்றால் என்ன?*

*இயேசு பரமேறுவதற்கு முன் தம்மைப் பின்பற்றியவர்களுக்குக் கொடுத்த நிறைவான கட்டளையானது பொதுவாக இவ்வாறு குறிப்பிடப்படுவது வழக்கமாகும் (மத். 28:18-20; மாற். 16:15, 16; லூக். 24:46, 47ஐக் காணவும்). பிரதான கட்டளை என்பது “உலக முழுவதிலும்” உள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நபருக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது பற்றியதாகும்.*


**1**

# அதிகாரமுடைமை

*நாம் செயல்படத் தொடங்குமுன்னர், பொதுவான அதிகாரமுடைமை யொன்றை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். முதலாவதாக நாம் உச்சரிப்பில் தரமான ஒரு அகராதியை நமது அதிகாரமுடைமையாக ஒத்துக் கொண்டிராவிட்டால், "C-A-T" என்பது "cat" என்று உச்சரிக்கப்படுகின்றது என்பதைக் கூட நாம் ஒத்துக் கொள்ள மாட்டோம். மார்க்கத்தில் நாம் ஒத்துப் போக வேண்டுமென்றால், முதலில் நாம் நம்மேல் அதிகார முடைமை எது என்பதில் உடன்பாடு காண வேண்டும்.*

## தேவனுடைய வசனம் நம்மேல் அதிகாரமுள்ளதாகும்

*மார்க்கத்தில் எது நம்மேல் அதிகாரமுடையதாய் இருக்க வேண்டும்? உலகத்தில், முஸ்லீம்களின் குர்ஆன் முதல் தொலைக்காட்சியில் சுவிசேஷகர்களின் அறிவிப்பு வரையிலான பலவகைப்பட்ட அதிகார முடைமைகள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. ஆயினும், தேவன் ஒரே ஒரு அதிகாரமுடைமையே அங்கிகரித்திருக்கின்றார்: அது அவரது வசனமாகிய வேதாகமம் ஆகும்.*




*அப்போஸ்தலனாகிய பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்று கூறினார். மேலும் அவர், "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் ... எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16, 17) என்றும் எழுதினார்.*

*"வேதவாக்கியங்கள்" என்ற வார்த்தை "எழுதப்பட்டவைகளை"[1] குறிக்கின்றது. 2 தீமோத்தேயு 3ல் "வேதவாக்கியங்கள்" என்பது எழுதப் பட்ட தேவனுடைய வார்த்தைகளைக் குறிக்கின்றது. "வேதவாக்கியங்கள்" என்பது, பழைய ஏற்பாட்டு எழுத்துக்களையும் (2 தீமோ. 3:15), மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துக்களையும் (2 பேது. 3:15, 16) உள்ளடக்கி*

*யிருக்கின்றன. வேதவசனங்களைக் குறிப்பிடும் இன்னொரு வழிமுறை, "வசனம்" (மத். 13:23; அப். 6:4) என்பதாகும். இன்றைய நாட்களில் நாம் பயன்படுத்தும் சொற்றொடர் "வேதாகமம்" என்பதாகும். "வேதாகமம்"* (Bible) *என்பது அடிப்படையில் "புத்தகம்" என்ற அர்த்தம் தரும் ஒரு கிரேக்க வார்த்தையாகும். வேதாகமம் என்பது "புத்தகங்களுக்கெல்லாம் புத்தகம்" ஆகும். அநேக வேதாகமங்களின் மேல் அட்டையில் "பரிசுத்த வேதாகமம்" என்று அச்சிடப்பட்டுள்ளது. "பரிசுத்த" என்றால் "புனிதமான"[2] என்று அர்த்தமாகும்.*

*"ஏவப்பட்டது" என்ற வார்த்தை "சுவாசிக்கப்பட்டது"[3] என்ற நேரடி அர்த்தம் தருகின்றது. "தேவனால் ஏவப்பட்டது" என்ற சொற்றொடர், வேதாகமமானது "தேவனால் ஊதப்பட்டது" என்று அர்த்தப்படுகின்றது. மனிதனுடைய நாசிக்குள் தேவன் ஜீவசுவாசத்தை ஊதியது (ஆதியாகமம் 2:7) போலவே, அவர் வேதாகமத்தையும் ஊதியதால் அது ஜீவனுள்ள புத்தகமாயிற்று (எபி. 4:12). இது வேதாகமத்தின்மேல் தேவன் தமது கட்டுப்பாட்டை வைத்திருந்தார் என்பதை உருவக நடையில் குறிப்பிடும் ஒரு வழிமுறையாகும். அவர் தாம் விரும்பியவற்றை மட்டும் - அவைகளைக் காட்டிலும் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ எதுவுமின்றி - வேதாகமம் கொண்டிருக்கும்படி நிச்சயப் படுத்திக் கொண்டார்.*

*2 தீமோத்தேயு 3:16, 17ஐ மறுபடியும் வாசியுங்கள். வேதாகமமானது தேவனைப் பிரியப்படுத்துவதற்கு நமக்குத் தேவையான யாவற்றையும் கொண்டுள்ளது என்பதை இவ்வசனங்கள் தெளிவாக்குகின்றன: "இது உபதேசத்துக்குப் பிரயோஜனமுள்ளதாய் இருக்கின்றது"; நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை இது கூறுகின்றது. இது "கடிந்து கொள்ளுதலுக்குப் பிரயோஜனமுள்ளதாய் இருக்கின்றது"; நாம் தவறு செய்யும்போது இது நமக்கு அத்தவறை அறிவிக்கின்றது. இது "சீர்த்திருத்தலுக்குப் பிரயோஜனமுள்ளதாய் இருக்கின்றது"; நமது வாழ்வு முறைகளை மாற்றிக் கொள்ளும்படி இது வற்புறுத்துகின்றது. இது "நீதியைப் படிப்பித்தலுக்குப் பிரயோஜனமுள்ளதாய் இருக்கின்றது"; இது நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகின்றது. இது நம்மை ஏதோ சில நற்கிரியைகளைச் செய்பவர்களாக அல்ல, ஆனால் "எந்த நற்கிரியையும்" செய்யத் தகுதியுள்ளவர்களாய் ஆக்குகின்றது என்பதைக் கவனியுங்கள்.*

*நல்ல புத்தகங்கள் பல எழுதப்பட்டுள்ளன, மாபெரும் பிரசங்கங்கள் பல பிரசங்கிக்கப்பட்டுள்ளன, மற்றும் உதவியளிக்கும் ஆலோசனைகள் பல கொடுக்கப்பட்டுள்ளன - ஆனால் வேதாகமம் மட்டுமே நமது மார்க்க ரீதியான அதிகாரமுடைமையைப் பெற்றிருக்கின்றது. நாம் பாடத்தைத் தொடர்ந்து பார்ப்பதற்கு முன்னர், பின்வருபவற்றை ஒப்புக் கொள்ள வேண்டும்:*

- *நமது பெற்றோர்கள் நமது அதிகார உரிமையுள்ளவர்கள் அல்ல.*
- *மனிதப் பிரசங்கியார் எவரும் அதிகாரமுடையவர்கள் அல்ல.*
- *மாபெரும் மதத் தலைவர் எவரும் அதிகாரமுடையவர் அல்ல.*
- *டேவிட் ரோப்பர் அதிகாரமுடையவர் அல்ல.*

- ______________________ அதிகாரமுடையவர் அல்ல.
  (உங்கள் பெயரை எழுதிக் கொள்ளுங்கள்.)
- வேதாகமத்தைத் தவிர மற்ற எத்தொகுதியும் அதிகாரமுடையது அல்ல.
- வேதாகமம் மட்டுமே நம்மேல் அதிகாரமுள்ளது ஆகும்.

வேதாகமமானது மனிதனுக்கான தேவனுடைய விசேஷித்த வெளிப் படுத்துதல் என்பதில் நீங்கள் 100 சதவிகிதம் நிச்சயமற்றவர்களாய் இருந்தால், இவ்வெளியீட்டின் நிறைவுப் பகுதியில் உள்ள, "விசுவாசிப் பதற்கு அறைகூவல்" என்ற துணைக் கட்டுரையைக் காணவும். அதன் பிறகும் இதைப் பற்றி உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், இந்தப் புத்தகத்தை உங்களுக்குக் கொடுத்த நண்பரிடத்தில் நீங்கள் பேசுங்கள். வேதாகமத்தைப் பற்றி அதிகமாய்க் கற்றுக் கொள்வதற்கு உங்களுக்குக் கால அவகாசம் தேவைப்படலாம் என்பதும் சாத்தியமேயாகும். பவுல், "... விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்று கூறியிருக்கின்றாரே! அப்படியானால் தொடர்ந்து படியுங்கள்.

## புதிய ஏற்பாடு நமது வழியாயிருக்கிறது

"மதத்தில் நமது வழிகாட்டியாக இருப்பது எது?" என்ற கேள்விக்கு இதுவரையில் நாம், "வேதாகமம்" என்று பதில் அளித்தோம். ஆயினும் இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாய் நாம் நமது பதிலை வரையறைப்படுத்த வேண்டியிருக்கின்றது.

வேதாகமத்தில் இரண்டு பெரிய பகுதிகள் உள்ளன: அவை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்பவைகள் ஆகும். உங்கள் வேதாகமத்தை எடுத்து, அதில் புதிய ஏற்பாடு தொடங்கும் இடத்தைக் கண்டு பிடியுங்கள். தமிழ் மொழிபெயர்ப்பில் "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு" என்றுள்ளது. வேதாகமத்தின் முக்கால் பாகத்திற்கு அப்பால்தான் புதிய ஏற்பாடு தொடங்குகின்றது என்பதை கவனியுங்கள். பழைய ஏற்பாடானது, புதிய ஏற்பாட்டைக் காட்டிலும் மூன்று மடங்கு பெரியதாக இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.[4] அவைகளில் ஒரு காரணம்: பழைய ஏற்பாட்டில் "இதை நீ செய்" மற்றும் "இதை நீ செய்யாதே" என்ற கட்டளைகள் பல குறிப்பாகக் கட்டி யமைக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டிலோ கொள்கைகளின் மேல் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.[5]


வேதவசனங்களின் இவ்விரு பகுதிகளையும் நீங்கள் படிக்கையில், இவ்விரு பகுதியிலும் ஒரே விதமான அறிவுறுத்தல்கள் கிடையாது என்பதை நீங்கள் காண்பீர்கள்:

- பழைய ஏற்பாட்டில், ஆராதிப்பவர்கள் ஆலயம் என்று அழைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றிற்குச் சென்றார்கள் (சங். 5:7; ஆபகூக் 2:20); புதிய ஏற்பாட்டிலோ, ஆராதனையானது ஆவியிலும்,

உண்மையிலும் ஏறெடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் (யோவா. 4:21, 23, 24) ஆராதிக்கும் இடம் முக்கியமற்றதாகும்.

- பழைய ஏற்பாட்டில் கர்த்தருக்கு மிருகபலி செலுத்தப்பட்டது (லேவி. 1-5); புதிய ஏற்பாட்டிலோ, இயேசுவே நமது நிறைவான பலியானார் (எபே. 5:2; எபி. 10:12), நாம் நமது வாழ்வை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1; எபி. 13:15).
- பழைய ஏற்பாட்டில் ஒரு விசேஷித்த குழுவைச் சேர்ந்த மனிதர்களுக்கு "ஆசாரியர்கள்" என்ற பட்டம் அளிக்கப்பட்டது (யாத். 28:41; 40:15); புதிய ஏற்பாட்டிலோ, கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்கள் எனப்படுகின்றனர் (1 பேது. 2:5, 9).
- பழைய ஏற்பாட்டில் ஏழாம் நாள் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தது (யாத். 20:8-11); புதிய ஏற்பாட்டிலோ, ஆராதனைக்கென்று நமது விசேஷித்த நாள் வாரத்தின் முதல் நாளாகிய (அப். 20:7; பாடம் 9ல் இதை நாம் ஆராய்வோம்.) ஞாயிற்றுக்கிழமையாக இருக்கின்றது.
- பழைய ஏற்பாட்டில், பன்றியிறைச்சி முதலிய குறிப்பிட்ட சில உணவு வகைகளை உண்பது தடை செய்யப்பட்டிருந்தது (லேவி. 11:7); இந்தத் தடைகள் யாவும் புதிய ஏற்பாட்டில் நீக்கப்பட்டு விட்டன (அப். 10:9-16).

முரண்பாடுகள் என்பது முடிவற்ற வகையில் தொடர முடிந்திருக்கும். இரண்டு ஏற்பாடுகளிலுமே அறிவுறுத்தல்களை முழுமையாகக் கடைப் பிடித்து நடப்பதென்பது நம்மால் இயலாத ஒன்றாகவே இருக்கின்றது. அப்படியென்றால் நாம் எதைக் கடைப்பிடிக்க வேண்டும்? இக்கேள்விக்கு விடையளிக்கப் பின்வரும் வரைபடமானது நமக்கு உதவும்:



இவ்வரைபடத்தின் கீழ் உள்ள வார்த்தைகளை முதலில் பாருங்கள்: "ஏற்பாடு = உடன்படிக்கை = ஒப்பந்தம்." KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு ஆகிய வேதாகம நூல்களில் "ஏற்பாடு" என்ற சொற்றொடரானது "பழைய

ஏற்பாடு" (2 கொரி. 3:14) மற்றும் "புதிய ஏற்பாடு" ("புதிய உடன்படிக்கை") (மத். 26:28; 1 கொரி. 11:25; 2 கொரி. 3:6; எபி. 9:15) என்று பயன்படுத்தப் படுகின்றது. மிகப் பொதுவாக, இவ்வசனப் பகுதிகளில் உள்ள கிரேக்க வார்த்தை KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளில் "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (எபி. 8:6, 7, 13; 9:1; 12:24 ஆகிய வசனங்களை வாசிக்கவும்). பழைய ஏற்பாட்டைப் பற்றி நாம் பேசும்போது, பழைய உடன் படிக்கையைப் பற்றி நாம் பேசுகின்றோம். புதிய ஏற்பாட்டைப் பற்றி நாம் பேசும்போது, புதிய உடன்படிக்கையைப் பற்றி நாம் பேசுகின்றோம்.

உடன்படிக்கை என்றால் என்ன? உடன்படிக்கை என்பது இரு சாராருக்கிடையே ஏற்படும் ஒரு ஒப்பந்தம் ஆகும். பழைய உடன்படிக்கை என்பது தேவனுக்கும் யூதமக்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையாகும் (உபா. 5:1-4). அது யூதர்கள்[6] (மற்றும் யூத மார்க்கத்தைத் தழுவிக் கொண்ட proselytes என்ற யூதமார்க்கத் தமைந்தவர்கள்) தவிர வேறு எவரையும் ஒருபொழுதும் கட்டுப்படுத்திய தில்லை. புதிய ஏற்பாடு என்பது தேவனுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கையாகும் (எபி. 10:16).

இப்பொழுது வரைபடத்தின் மேல்பகுதியைப் பாருங்கள். சிலுவை என்பது இயேசுவின் சிலுவையைக் குறிக்கின்றது. சிலுவையின் இடது பக்கம் உள்ள பகுதி பழைய ஏற்பாட்டுக் காலத்தையும், வலது பக்கம் உள்ள பகுதி புதிய ஏற்பாட்டுக் காலத்தையும் பிரதிநிதிப்படுத்துகின்றது. இடது புறமுள்ள அம்புக் குறி சிலுவையை முன்னோக்கியும், வலது புறம் உள்ள அம்புக் குறி சிலுவையைப் பின்னோக்கியும் இருப்பதைக் கவனியுங்கள்.

பழைய ஏற்பாடானது இயேசு வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தது என்பதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பழைய ஏற்பாடானது நிரந்தரமாய் இருக்க வேண்டும் என்று தேவன் ஒருபொழுதும் விரும்பியதில்லை. எரேமியா பின்வருமாறு எழுதினார்:

> இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப் பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படியல்ல ... (எரே. 31:31, 32அ)[7].

பழைய ஏற்பாடு எவ்வளவு காலம் நீடித்திருக்க வேண்டியதாயிருந்தது? கலாத்தியர் 3ம் அதிகாரத்தில் பவுல் கிறிஸ்தவர்களிடம், பழைய பிரமாணமானது "வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் - " ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தத்திற்காகக் "கூட்டப்பட்டது" (வ. 19) என்று கூறினார். இதே அதிகாரத்தின் வசனம் 16, அந்த "வித்து" (சந்ததி) யார் என்பதைக் கூறுகின்றது: "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே." வசனம் 24ல்

*பவுல், "இவ்விதமாக, ... நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று கூறினார். பழைய ஏற்பாடு என்பது மனித குலத்தைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வர வேண்டியதற்காக இருந்தது - இயேசு வரும் வரையிலும் அது நீடிக்க வேண்டியதாய் இருந்தது. எனவே தான் இடபுறம் உள்ள அம்புக்குறி முன்னோக்கிக் குறிப்பிடுவதாய் இருக்கின்றது.*

*ஆயினும், இந்த அம்புக்குறி ஏன் சிலுவையைச் சுட்டிக் காட்டுகின்றது? பவுல் கொலோசே பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்குத் தாம் எழுதிய நிருபத்தில் இயேசுவின் மரணமானது, ''நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து" போட்டது என்று கூறினார் (கொலோ. 2:14). உருவகமாகப் பேசுவதென்றால், இயேசு சில பிரமாணங்களை அவைகள் இனியும் அமுல் படுத்தப்படுவதில்லை என்று அறிவிக்க அவைகளைச் சிலுவையில் ஆணியடித்தார்.[8] எந்தப் பிரமாணங்களைப் பற்றிப் பவுல் பேசினார்? அவைகளில் சிலவற்றை அவர் (பவுல்) அதே சந்தர்ப்பப் பொருளில் குறிப் பிட்டார்: பிரமாணங்கள் நீக்கிப் போடப்பட்டதால், "போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப் பிறப்பையும் ஓய்வுநாட்களையுங் குறித்தாவது" (கொலோ. 2:16) ஒருவரும் அவர்களை நியாயந்தீர்க்க(அதாவது குற்றப்படுத்த)க் கூடாது என்று எழுதியதுடன், அவர் அப்பிரமாணங்களின் சிலவற்றைப் பற்றியும் கூறினார். இவ்விடத்தில் குறிப்பிடத் தக்க ஒரு கூறாக இருப்பது ஓய்வுநாளாகும். உணவு, பானம் மற்றும் பண்டிகை ஆகியவை பற்றி அநேக கட்டளைகள் தரப்பட்டிருந்தன, ஆனால் ஓய்வுநாளைப் பற்றி ஒரே ஒரு இணைச் சட்டக் கட்டளை மட்டுமே இருந்தது: பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் யாவும் பத்து கட்டளைகளைச் சுற்றியே இருந்தன. அவைகளில் நான்காவது கட்டளையாக "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத். 20:8) என்ற கட்டளை இருந்தது. இவ்விதமாக (பவுலின் சொல் வழக்கைப் பயன்படுத்துவதென்றால்) பழைய ஏற்பாடானது சிலுவையில் அறையப்பட்டது.*

*இப்பொழுது நமது விளக்கப்படத்தில் சிலுவையின் வலது புறத்தை நோக்குவோம். கிறிஸ்துவின் மரணமானது பழைய ஏற்பாட்டின் (உடன்படிக்கையின்) முடிவை அடையாளப் படுத்துவதுடன், புதிய ஏற்பாட்டின் (உடன்படிக்கையின்) தொடக்கத்தைப் பறைசாற்றுவதாகவும் இருந்தது. எபிரெயர் 9:15ல், இயேசு "புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர்"[9] என்று குறிப்பிடப்படுகின்றார். இதன் பிறகு அவ்வசனப்பகுதியில், "ஏனென்றால், எங்கே மரண சாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே" (எபி. 9:16, 17) என்று விளக்கப்படுகின்றது. ''உடன்படிக்கை'' என்று இவ்விடத்தில் பேசப்படுவதானது, நாம் ''நிறைவான உயிலும் ஏற்பாடும்'' என்று*

*அழைக்கின்ற ஒரு விசேஷித்த வகைப்பட்ட ஒப்பந்தமாயிருக்கின்றது.("உடன்படிக்கை" என்ற வார்த்தை இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டு வசனத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி செய்யப்படுகின்றது.) ஒரு மனிதருடைய கடைசி உயில் மற்றும் உடன்படிக்கை எப்பொழுது அமுலுக்கு வருகின்றது? அவர் மரிக்கும்போதுதான். அது போலவே, இயேசுவின் கடைசி உயிலும் மற்றும் உடன்படிக்கையும் அவர் சிலுவையில் மரணமடைந்தபோதுதான் அமுலுக்கு வந்தது.*[10]

*இயேசுவின் பிறப்பானது புதிய ஏற்பாட்டின் ஆரம்பமாகும் என்பது பொதுவாக உள்ள தவறான புரிந்து கொள்ளுதலாகும்; அது உண்மையல்ல. இயேசுவே பழைய ஏற்பாட்டின் கீழ்தான் வாழ்ந்தார். அவர் நல்லதொரு யூதராகவும், பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை எப்பொழுதும் கடைப்பிடிப்பவராகவும் வாழ்ந்தார். (உண்மையில் அவைகளை முழுமையாகக் கடைப் பிடித்தவர் அவர் ஒருவரேயாவார்.) இது சிலரைக் குழப்புகின்றது. எடுத்துக்காட்டாக, இயேசு ஓய்வுநாளைக் கடைப் பிடித்தார் என்பதைச் சுட்டிக்காட்டி (மாற். 1:21; லூக். 4:16), எனவே நாமும் ஓய்வுநாளன்று (வாரத்தின் ஏழாம் நாளில்) ஆராதிக்க வேண்டும் என்று ஒரு கருத்தை வலியுறுத்துபவர்களும் இருக்கின்றார்கள். இயேசு தமது பூமிக்குரிய வாழ்வின்போது, மிருகபலி செலுத்துவது (மத். 5:23; 8:4) உட்படப் பழைய ஏற்பாட்டுக் கட்டளைகள் எல்லாவற்றையும் கைக்கொள்ளும்படி உற்சாகப்படுத்தியிருந்தாரே! (மத். 19:17). கிறிஸ்துவின் பிறப்பினால் அல்ல, ஆனால் அவரது இறப்பினாலேயே புதிய ஏற்பாட்டின் தொடக்கமானது அடையாளப் படுத்தப்படுகின்றது.*

*வரைபடத்தை உற்றுப் பாருங்கள். இயேசுவின் மரணத்திற்கு முன்பு வாழ்ந்த யூதர்கள் பழைய ஏற்பாட்டு அமைப்பின் கீழ் வாழ்ந்தார்கள்; சிலுவையின் இப்புறம் வாழும் நாம் யாவரும் புதிய ஏற்பாட்டு அமைப்பின் கீழ் வாழ்கின்றோம். இயேசுவின் மரணமானது இவ்விரண்டையும் பிரிக்கும் இடமாயுள்ளது.*

*ஆதி கிறிஸ்தவர்களில் சிலர், அதிலும் விசேஷமாய், யூதர்களாயிருந்து பின் கிறிஸ்தவர்களானவர்கள், தாங்கள் பழைய ஏற்பாட்டின் சட்டத்தின் கீழ் இல்லை என்ற உண்மையுடன் போராட்டம் கொண்டிருந்தார்கள். யூதக் கிறிஸ்தவர்களில் சிலர் பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களையெல்லாம் - அல்லது விருத்தசேதனம்*[11] *முதலிய ஒரு பகுதி கட்டளைகளையாவது கைக்கொள்ளும்படி புறஜாதிக்*[12] *கிறிஸ்தவர்களை இணங்க வைக்க முயற்சி செய்தார்கள். கலாத்தியர் மற்றும் எபிரெயர் ஆகியோருக்கு எழுதப்பட்ட நிருபங்கள் உட்பட, புதிய ஏற்பாட்டில் உள்ள பல புத்தகங்கள் இப்பிரச்சனையைப் பற்றி வாதிடுகின்றன. நான் ஏற்கனவே கலாத்தியர் நிருபத்திலிருந்து சில வசனப் பகுதிகளைக் குறிப்பிட்டிருக்கின்றேன்; இப்பொழுது இன்னும் சிலவற்றைப் பகிர்ந்து கொள்கின்றேன்.*

*கலாத்தியர் 3ம் அதிகாரத்தை மறுபடியும் பாருங்கள்: பவுல், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக்*

*கீழானவர்களல்லவே" (வ. 24, 25) என்று கூறினார். முன்பே குறிப்பிட்டபடி, மனிதகுலத்தைக் கிறிஸ்துவை நோக்கி வழி நடத்துவதென்பது பழைய ஏற்பாட்டின் ஒரு முக்கிய நோக்கமாயிருந்தது. அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்ட பிறகு, மக்கள் அந்தப் பிரமாணத்தின் கீழ் "இனியும் இருப்பதில்லை."*

*கலாத்தியர் 5ம் அதிகாரத்தில் பவுல் இதை இன்னும் அதிக உறுதியாக வலியுறுத்தினார். வசனம் 3ல் அவர், ''மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்" என்று கூறினார். இவ்விடத்தில் "விருத்தசேதனம்" என்று குறிப்பிடப்படுவது மார்க்கரீதியான சடங்கைக் குறிப்பிடுகின்றது, இது மருத்துவக் காரணங்களுக்காகத் தேர்ந்து செய்து கொள்ளும் விருத்தசேதனச் செயலைக் குறிப்பிடாது. யூத கிறிஸ்தவர்களில் சிலர், (கலாத்தியாவில் இருந்தவர்கள் போன்ற) புறஜாதிக் கிறிஸ்தவர்களிடத்தில், பழைய ஏற்பாட்டு போதனையின்படியாக புறஜாதி மனிதர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும் என்று போதித்துக் கொண்டிருந்தார்கள். பழைய ஏற்பாட்டின் பிரமாணத்தில் ஒரு பகுதியை நிறைவேற்ற உங்களுக்கு கடமையுண்டு என்றால், அப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்ற நீங்கள் கடமைப்பட்டவர்களாகி விடுகின்றீர்கள் என்பதே கலாத்தியர் 5:3ல் கூறும் கருத்தாய் இருக்கின்றது.*


*பழைய ஏற்பாட்டின் கட்டளைகள் எல்லாவற்றையும் (வருடத்தில் மூன்று முறை எருசலேம் செல்லுதல், மிருக பலி செலுத்துதல், உணவுச் சட்டங்களைக் கடைப்பிடித்தல், இன்னபிற செயல்கள் ஆகியவற்றை) கடைப்பிடிக்க விரும்பும் எவரொருவரையும் நான் அறிந்ததில்லை. ஆயினும், பலர் பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளில் இருந்து, ஓய்வுநாள் ஆசரிப்பு, தனியான ஆசாரியத்துவம் (குருக்கள்) அல்லது ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற சிலவற்றை மட்டும் "பொறுக்கித் தேர்ந்தெடுத்துக் கொள்ள" விரும்புகின்றார்கள். நாம் இவ்வாறு செய்ய முடியாதென்பதைப் பவுல் விளக்கப்படுத்தினார். பழைய ஏற்பாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியை நாம் கடைப்பிடித்தால், அந்தச் சட்டம் முழுவதையும் நாம் கடைப்பிடித்தாக வேண்டும். அதன் ஒரு பகுதியைக் கொண்டு நாம் கட்டுப்படுத்தினால், அது முழுவதையும் கொண்டு நாம் கட்டுப்படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும்.*

*பழைய ஏற்பாட்டைக் கொண்டு கட்டுப்படுத்துவதினால் உண்டான விளைவானது போதுமான அளவு மோசமாயிருந்தது, ஆனால் கலாத்தியர் 5ல் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த விளைவானது மிகவும் மோசமானதாகும். வசனம் 4ல் பவுல், "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என்று கூறினார். பழைய ஏற்பாடானது அடிப்படையாக, கட்டளை - மற்றும் - செயல்கள் என்ற அமைப்பாயிருந்தது, புதிய ஏற்பாடானது அடிப்படையாக கிருபை - மற்றும் - விசுவாசம் என்ற அமைப்பாய் இருக்கின்றது. கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களை*

*விருத்தசேதனம் சடங்காச்சாரத்திற்கு உட்படுத்தினால், அது அவர்களைக் கிறிஸ்துவினிடத்தினின்று பிரித்துவிடும் - ஏனென்றால் எவரொருவரும் ஒரே வேளையில், இரு மாறுபட்ட மார்க்க அமைப்புகளின் கீழ் இருக்க முடியாது என்று பவுல் கூறினார். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் அமைப்பின் கீழோ அல்லது கிருபையின் அமைப்பின் கீழோதான் இருக்க முடியும், ஆனால் அவர்கள் இரண்டின் கீழும் ஒரே வேளையில் இருக்க முடியாது.*

*இதை நான் இன்னொரு வழிமுறையில் கூறுகின்றேன்: அவர்கள் (விருத்தசேதனம் என்ற பழைய ஏற்பாட்டுச் சடங்காச்சாரத்தை ஆசரிப்பதன் மூலம்) பிரமாணத்தின் அமைப்பைத் தேர்ந்து கொண்டார்களென்றால், அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. பிரமாணத்தின் அமைப்பின் கீழ் எவரொருவரும் இரட்சிக்கப்பட முடியாது, ஏனென்றால் எவரொருவரும் பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாது (ரோமர் 3:23; 7:15, 18, 19). நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அது தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தின் மூலமாக மட்டுமே நடைபெற வேண்டும் (எபே. 2:8, 9; 1 பேது. 2:10). இதற்கு மாறாக, கலாத்தியர்கள் பழைய பிரமாணத்திற்குச் செல்ல விரும்புவார்களென்றால், அவர்கள் “கிருபையினின்று விழுந்தவர்கள்” ஆவார்கள்; அவர்கள் “கிறிஸ்துவை விட்டுப் பிரிந்தவர்கள்” ஆவார்கள். இது எவ்வளவு துன்பகரமானது!*


*இன்றைய நாட்களில் நாம் பழைய ஏற்பாட்டின் கீழ் அல்ல, புதிய ஏற்பாட்டின் கீழ்தான் இருக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்வது முக்கியமானதாக இருக்கின்றது. இதில் தவறான புரிந்து கொள்ளுதல் இருந்து விடாதபடிக்கு, நாம் பத்து கட்டளைப் பிரமாணத்தின் கீழ் இருப்பவர்கள் அல்ல[13] என்பதை நான் வலியுறுத்தியாகவேண்டும். சிலுவையில் அறையப்பட்ட உடன்படிக்கையின் இருதயம் போன்ற மையப் பகுதியாக இப்பத்துக் கட்டளைகள் (யாத். 20; உபா. 5) இருந்தன.*




*“நாம் பத்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல என்றால்,*

கொலை, களவு மற்றும் அந்தக் கட்டளைகளால் தடை செய்யப்பட்ட மற்ற குற்றங்களையெல்லாம் நாம் செய்ய முடியும் என்று அர்த்தமாகின்றதா?" என்று சிலர் மறுப்புத் தெரிவிக்கலாம். ஆனால் இது அப்படி அர்த்தப் படுவதில்லை. இன்றைய நாட்களில் மக்கள் கொலை, களவு முதலியவற்றைச் செய்யக் கூடாதென்பது அவைகள் புதிய ஏற்பாட்டினால் தடை செய்யப்பட்டுள்ளதினால்தான் (ரோமர் 13:9; எபே. 4:28). உண்மையில் பார்க்கப் போனால், பத்துக்கட்டளைகளில் ஒன்பது கட்டளைகள் புதிய ஏற்பாட்டில் மறுபடியும் கூறப்பட்டுள்ளன.[14] புதிய ஏற்பாட்டில் கூறப்படாத ஒரே ஒரு கட்டளை, பத்துக் கட்டளைகளில் நான்காவது கட்டளை மட்டுமேயாகும்: "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக'' (யாத். 20:8). இன்றைய நாட்களில் ஆராதனைக்கான நமது விசேஷித்த நாளாக இருப்பது வாரத்தின் முதல் நாள் தான், ஏழாம் நாள் அல்ல.[15]

பழைய ஏற்பாட்டின் கீழ் அல்ல, புதிய ஏற்பாட்டின் கீழ் தான் நாம் இருக்கின்றோம் என்ற இந்தக் கொள்கையானது எழக் கூடிய மத வினாக்கள் பலவற்றிற்கு விடையளிக்கும். சிலர், "வேதாகமத்தில் ஆராதனைக்குரிய பரிசுத்தமான இடமாக ஆலயம் என்று அழைக்கப்பட்ட இடம் இருந்ததே, நாம் ஏன் ஆராதிப்பதற்கென்று பரிசுத்த இடம் ஒன்றை வைத்துக் கொள்ளக் கூடாது?" என்று கேட்கலாம். "ஏனென்றால், அது பழைய ஏற்பாட்டில் இருந்ததே தவிர புதிய ஏற்பாட்டில் இல்லை" என்பதே இதற்கு பதிலாகும். வேறு சிலர், "வேதாகமத்தில் விசேஷித்த உடை அணிந்த தனிப்பட்ட ஆசாரியத்துவம் (குருத்துவம்) பற்றிப் பேசுப்படுகின்றதே, நாம் ஏன் இப்படி வைத்துக் கொள்ளக் கூடாது?" என்று கேட்கலாம். "ஏனென்றால், அது பழைய ஏற்பாட்டில் இருந்ததே தவிர புதிய ஏற்பாட்டில் இல்லை" என்பதே இதற்குப் பதிலாகும். இன்னும் வேறொருவர், "நான் வேதாகமத்தில், தூபங் காட்டுதல் பற்றியும், ஆராதனையில் இசைக் கருவிகள் கொண்டு பாடுதல் பற்றியும் வாசிக்கின்றேன். நாம் ஏன் இப்படிப்பட்ட பழக்கங்களை நடைமுறைப்படுத்தக் கூடாது?" என்று கேட்கலாம். "ஏனென்றால் அது பழைய ஏற்பாட்டில் இருந்ததே தவிர, புதிய ஏற்பாட்டில் இல்லை" என்பதே இதற்குப் பதில் ஆகும்.




நாம் நமது பாடத்தைத் தொடருகையில், புதிய ஏற்பாட்டிற்குச் செல்லுவோம், அங்கு நாம் தேவனைப் பிரியப்படுத்துவது எப்படி

என்பதையும், நாம் மரித்த பின்பு பரலோகத்திற்கு செல்லுவது எப்படி என்பதையும் காண்போம்.

## பழைய ஏற்பாட்டின் மதிப்பு

இப்படிக் கூறுவதினால், கிறிஸ்தவர்களுக்குப் பழைய ஏற்பாடானது மதிப்புடையதல்ல என்று அர்த்தமாகாது என்பதை இவ்விடத்தில் நான் விரைவாக வலியுறுத்துகின்றேன். 1 கொரிந்தியர் 10ல் பழைய ஏற்பாட்டின் நிகழ்ச்சியொன்றைப் பவுல் தமது வாசகர்களுக்கு நினைப்பூட்டிய பிறகு, ''இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (வ. 11) என்று கூறினார். பழைய ஏற்பாடானது நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பல எடுத்துக்காட்டுகளால் நிறைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, நாம் "விசுவாசத்தினாலே பிழைக்க வேண்டும்" (ரோமர் 1:17; கலா. 2:20) என்று புதிய ஏற்பாட்டில் நமக்குக் கூறப்பட்டுள்ளது, ஆனால் அதன் அர்த்தம் என்ன? இதற்கு பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் போன்றோரின் எடுத்துக்காட்டுகளைப் பார்ப்பது ஒரு வழியாகும் (எபி. 11:9, 17ஐக் காணவும்).

ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், ''தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் [அதாவது பழைய ஏற்பாடு] நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4) என்று கூறினார். புதிய ஏற்பாடானது ஒரு நூறு ஆண்டுக்கு சற்றுக் குறைவான கால வரலாற்றையும், அறுபது ஆண்டு கால கிறிஸ்தவ வரலாற்றைப் பற்றியும் மட்டுமே விபரம் கொண்டுள்ளதாயுள்ளது. உடனடி பலன்களுக்கான ஒரு சில எடுத்துக்காட்டுகளே இதில் உள்ளன (எதிர்மறையான ஒரு எடுத்துக்காட்டை அப். 5:1-11ல் காணவும்), ஆனால் நாம் எப்படி வாழ வேண்டும் மற்றும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் நமக்கு என்ன ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் செய்யப் பட்டுள்ளன என்பது பற்றி இது முக்கியமாகக் கூறுகின்றது. அவர் இதைச் செய்கின்றார் என்பதைப் பழைய ஏற்பாடு உறுதிப்படுத்துகின்றது. பழைய ஏற்பாடானது ஆயிரக்கணக்கான வருடங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளதால், கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமைக்குரிய நீண்ட கால விளைவுகளை நாம் அதில் தெளிவாகக் காண முடியும்: மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தபோது, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர்; அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாதபோது, அதன் விளைவுகளை அவர்கள் அனுபவித்தனர். இவ்விதமாக, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களினால் ''தேவன் உண்மையுள்ளவர்'' (1 கொரி. 1:9) என்பது நமக்கு உறுதிப்படுத்தப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டைப் படிப்பதால் வேறு பல பயன்களும் உண்டாகின்றன: உலகத்தின் தொடக்கம் மற்றும் மனிதனின் தொடக்கம் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், உங்களின் அடிப்படை ஆதார நூலாக

இருப்பது பழைய ஏற்பாடுதான் (ஆதி. 1; 2). புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியானது (எடுத்துக்காட்டாக எபிரெயருக்கு எழுதின நிருபம்) பழைய ஏற்பாடு பற்றிய முன்னறிவு சிலவற்றை நாம் கொண்டுள்ளதாக முன் அனுமானம் செய்து கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆகையால் உங்களின் வாசிப்பு மற்றும் பாடத் திட்டத்தில் பழைய ஏற்பாட்டையும் உள்ளடக்கிக்கொள்ளும்படி உங்களை நான் உற்சாகப்படுத்துகின்றேன். இருப்பினும், இன்றைய நாட்களில் நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கின்றோம் என்பதை எப்பொழுதும் உங்கள் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். நித்திய ஜீவன் என்ற நமது இலக்கை அடையத் தேவையான குறிப்பிட்ட அறிவுரைகளை நாம் புதிய ஏற்பாட்டில்தான் காண்கின்றோம்.

## முடிவுரை

நமது மத அதிகாரமுடைமையாக இருப்பது வேதாகமம்தான். குறிப்பாகப் புதிய ஏற்பாடுதான் இன்றைய நாட்களில் நம்மைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையாகும். இந்தக் காரணத்திற்காகவே, புதிய ஏற்பாடானது தகவல் மற்றும் அறிவுறுத்தல் ஆகியவற்றில் நமது அடிப்படை ஆதார நூலாக இருத்தல் வேண்டும். இதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகின்றீர்களா? அப்படியென்றால் நீங்கள் அடுத்த பாடத்திற்குத் தயாராய் இருக்கின்றீர்கள்.

---

குறிப்புகள்

[1]"Scripture" என்ற வார்த்தையுடன் தொடர்புள்ள "Scribble" என்ற வார்த்தை உங்களுக்குப் பழக்கமானதாயிருக்கலாம். [2]"பரிசுத்தம்" அல்லது "புனிதம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பிரித்து வைக்கப்பட்டது" என்று அர்த்தப்படுகின்றது. நான் சிறுபிள்ளைகளுக்குப் போதிக்கும்போது, "பரிசுத்தம்" என்றால் "பிரத்தியேகமான" என்று அர்த்தமாகும் எனப் போதிப்பதுண்டு. [3]யாரேனும் ஒருவர் இறந்து விட்டால், அவர் "கடைசி மூச்சை விட்டார்" (breathed his last) என்றோ அல்லது "மூச்சை விட்டார்" (expired) என்றோ நாம் கூறுவதுண்டு. Expire என்றால் "மூச்சை விட்டுவிடுதல்" என்று அர்த்தமாகும். [4]காரணங்களில் இதுவும் ஒன்றாகும்: பழைய ஏற்பாடு ஆயிரக்கணக்கான வருடங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளது, புதிய ஏற்பாடோ ஒரு நூற்றுக்கும் சற்றுக் குறைவான வருடங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளது. [5]இது, புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்ட சட்டங்கள் இல்லை என்று அர்த்தப்படாது. குறிப்பிட்ட சட்டங்கள் நேர்மறையானவை மற்றும் எதிர்மறையானவை - புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன, ஆனாலும் நமது வாழ்வில் நாம் நடைமுறைப்படுத்தும்படி தேவன் எதிர்பார்க்கும் கொள்கைகளுக்கே வலியுறுத்தல் தரப்பட்டுள்ளது. நாம் நமது குழந்தைகளை நடத்தும் விதம் என்ற விளக்கத்தை நான் இதற்குத் தருவதுண்டு. அவர்கள் சிறுவர்களாக இருக்கும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்குக் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை நாம் தருகின்றோம். அவர்கள் பெரியவர்களாகையில், "நல்ல முறையில் இரு" என்று மட்டும் கூறி, அந்தப் பொதுக் கொள்கையை அவர்கள் செய்யும் எல்லாவற்றிலும் நடைமுறைப்படுத்தும்படி நாம் எதிர்பார்க்கின்றோம். [6]யூதர்கள், ஆபிரகாம் - சாராளின் பேரனான யாக்கோபின் சந்ததியாராக இருந்தார்கள் (இருக்கின்றார்கள்). யாக்கோபின் பெயர் இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டதால், வேதாகமமும் இவர்களை இஸ்ரவேலர்கள் என்று குறிப்பிடுகின்றது. இவர்கள் எபிரெய மொழி

பேசியதால் வேதாகமத்தில் சில நேரங்களில் இவர்கள் எபிரெயர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். [7]எரேமியா 31:33, 34 மற்றும் எபிரெயர் 8:6-13 ஆகியவற்றையும் காணவும். [8]சட்டப்பூர்வமான ஒப்பந்தங்களை வெளியிடுவதில் மாறுபட்ட வழிமுறைகளை மாறுபட்ட சமுதாயங்கள் பின்பற்றுகின்றன. சில சமுதாயங்களில், ஒப்பந்தங்கள் வெளிப்படையாகப் படிக்கப்படுகின்றன; மற்ற சில சமூகங்களில் ஒப்பந்தங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்படுகின்றன. வேதாகமம் (புதிய ஏற்பாடு) எழுதப்பட்ட நாட்களில், ஒரு ஒப்பந்தமானது நிறைவேற்றப்பட்டு, காலாவதியாகி விட்டது என்பதை அறிவிப்பதற்கு அந்த ஒப்பந்தத்தாளை ஒரு பொது இடத்தில் தூண் ஒன்றில் அறைந்து வைப்பது வழக்கமாயிருந்தது. பவுல் கடன் (பாவம்) பற்றிப் பேசும்போதும் கட்டளைகள் (பாவம் பற்றி மனிதனை உணரச் செய்தவைகள்) “சிலுவையில் அறையப்பட்டது” என்று பேசும் பொழுதும் மேற் கூறியதைக் கற்பனையில் கொண்டிருக்கலாம். [9]எபிரெயர் 9:15ன் எஞ்சிய பகுதியானது, இயேசுவின் இரத்தம் புதிய உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்களை மட்டுமின்றி, பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களையும் இரட்சிக்கின்றது என விளக்குகின்றது. [10]இவ்விளக்கமானது விரிவாக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதரின் மரணத்திற்கு பிறகு, அவரது உயிலின் நிபந்தனைகள் வாசிக்கப்பட்டு, அமுல் படுத்தப்படுவதற்கு முன்னதாக “தேர்ந்தாயும் காலம்” ஒன்றுள்ளது.

[11]யூதப் பையன்கள் பிறந்து எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டியது மார்க்கக் கடைமையாக இருந்தது (லேவி. 12:3). [12]“புறஜாதிகள்” என்பது யூதரல்லாதவர்களைக் குறிக்கின்றது. இவ்விளக்கத்தின்படி நான் ஒரு புறஜாதியான், நீங்கள் கூட அநேகமாய் அவ்வகைப்பட்டவரென்றே நினைக்கின்றேன். [13]2 கொரிந்தியர் 3:3, 7, 8 மற்றும் ரோமர் 7:4, 7 ஆகியவற்றைக் காணவும். [14]இவற்றில் சில கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் உள்ளது போலவே வார்த்தைக்கு வார்த்தை அப்படியே புதிய ஏற்பாட்டில் மறுபடியும் கூறப்பட்டுள்ளன; மற்றவை கொள்கைகளில் காணப்படுகின்றன. பத்து கட்டளைகளில் பெரும்பாலானவைகள் எக்காலத்திற்கும் பொருந்தி வரக்கூடிய அடிப்படை மதிப்பீடுகளைக் கொண்டுள்ளன. இவ்விதமாய் அவைகளில் ஒன்பது கட்டளைகள் தேவன் தமது மக்களுடன் ஏற்படுத்திக் கொண்ட புதிய உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. [15]இதைப் பற்றி நாம் பாடம் 9ல் ஆராய்வோம்.

2

# உங்களை ஒருவர் நேசிக்கிறார்

*நீங்கள் என்ன செய்ய வேண்டியது அவசியம் என்பதை இவ்வெளியீடு வலியுறுத்துகின்றது. ஆனால் நாம் செய்யும் எச்செயலும், தேவன் நமக்குச் செய்துள்ளவைகளுடன் எவ்வழியிலாவது ஒப்பிடப்பட முடியும் என்ற கருத்தை உங்களிடத்தில் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. இந்தப் பாடமானது தேவனுடைய அன்பைப் பற்றியதாகும். இப்பாடமானது இதன் தலைப்பைப் பற்றி முற்றிலும் விளக்கம் தராவிட்டாலும், உணர்வுப் பூர்வமான இக்கருத்தைப் பற்றி குறைந்தபட்சம் ஒரு அறிமுகத்தையாவது தரும்.*

## பாவத்தில் இழந்து போகப்படுதல்

நமக்காகத் தேவன் கொண்டுள்ள அன்பைச் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால், அந்த அன்பிற்கான நமது தேவைகளை நாம் முதலில் காண வேண்டும். தேவன் தமது அன்பைக் காண்பிக்கும் முன்பு, மனிதகுலமானது பாவத்தில் இழந்து போகப்பட்டு - நம்பிக்கையற்று, உதவியற்றுக் கிடந்தது.

''பாவத்தில் இழந்து போகப்பட்டு'' என்று நான் கூறும் பொழுது, சொந்தப் பாவத்தைத்தான் குறிப்பிடுகின்றேனே யொழிய, ஆதாமின் பாவத்தைக் குறிப்பிடுவதில்லை. குழந்தை பிறக்கும்போது அது ஆதாமின் பாவக் குற்றகறையுடன் பிறப்பதாகச் சிலர் நம்புகின்றார்கள். ஆயினும், குழந்தையானது சுத்தமாகவும், பரிசுத்தமாகவும் பிறப்பதாக வேதாகமம் போதிக்கின்றது. இயேசு, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 18:3) என்று கூறினார். மீண்டும் அவர் குழந்தைகளைப் பற்றிக் கூறும்போது, "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" (மத். 19:14) என்று கூறினார்.

ஒவ்வொரு நபரும் சொந்தப் பாவங்களுக்குப் பொறுப்பாளியாவார் - தனது தகப்பனுடைய பாவங்களுக்கல்ல, ஆனால் தனது சொந்தப் பாவங்களுக்குப் பொறுப்பாளியாவார் - என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி வலியுறுத்தினார்:

> பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்


*மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும் (எசே. 18:20).*

*உங்கள் தகப்பனுடைய பாவத்தின் விளைவுகளை நீங்கள் சுதந்தரிக்கக் கூடும், ஆனால் உங்கள் தகப்பனுடைய பாவ குற்றத்தை உங்களால் சுதந்தரிக்கக் கூடாது.[1] ஆதாமின் பாவத்தினால் உண்டான விளைவுகளை நாம் அனுபவிக்கின்றோம் - அது சரீர மரணம் ஆகும் (ஆதி. 3:3) - ஆனால் அந்தப் பாவ குற்றத்தை நாம் சுதந்தரிப்பதில்லை.*

*நாம் சுத்தமானவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் பிறக்கின்றோம். நாம் வயதில் வளரும் போது, சரியானது மற்றும் தவறானது ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றோம். நிறைவாக, நமது பாவங்களுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாகின்றோம். இந்த ''கணக்கொப்புவிக்கும் வயது'' என்பது பின்னணி வேறுபாட்டினால், வேறுபட்ட மக்களுக்கு வேறுபட்ட வயதுகளில் ஏற்படுகின்றது. யூதர்கள் ஏறக்குறைய பதிமூன்று[2] வயது என்று இதை நிர்ணயிக்கின்றார்கள், ஆனால் தனி நபரைப் பொறுத்தமட்டில் இவ்வயது ஒரு சில வருடங்கள் வேறுபடக்கூடும்.*


*இவ்விதமாக, குழந்தைப் பருவத்திலேயே மரிக்காமல், வாழும் ஒவ்வொருவரும் பின்னாளில் பாவம் செய்து, பாவியாகின்றார்கள். "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; ... எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி'' (ரோமர் 3:10, 23) என்று வாசிக்கிறோம்.*

*''பாவம்'' என்ற வார்த்தையை நாம் விளக்கிக் கூற வேண்டியது அவசியமாகும். ''பாவம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "குறியைத் தவறவிடுதல்" என்று அர்த்தப்படுகின்றது. கிரேக்க வில் வீரர் ஒருவர் தமது இலக்கைத் தவற விடும்பொழுது, அவர் "பாவம்" செய்து விட்டார் என்று கூறப்பட்டதுண்டு, ஆவிக்குரிய வகையில் இதற்கு இணையான ஒன்றைக் கூறுவதற்கு, தேவனுடைய சித்தமே "குறி" (இலக்கு) என்று நினைத்துக் கொள்ளுங்கள். "எல்லாரும் பாவம் செய்து" என்று ரோமர் 3:23ல் அறிவிக்கப்பட்ட பிறகு, அவ்வசனம் "தேவமகிமையற்றவர்களாகி" என்று கூறுகின்றது. ("மகிமையற்றவர்களாகி" என்பதை இவ்விடத்தில் நான் வலியுறுத்துகின்றேன்.)*




"பாவம்" என்பதற்கு வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் இன்னொரு சொற்றொடர் ''மீறுதல்'' என்பதாகும். நமது முந்திய பாடத்தில், நியாயப்பிரமாணமானது "அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டது" (கலா. 3:19) என்று கவனித்தோம். "Transgression" (மீறுதல்) என்ற ஆங்கில வார்த்தையானது (அது தோன்றிய கிரேக்க வார்த்தையைப் போலவே) "படி தாண்டிச் செல்லுதல்" என்ற அடிப்படை அர்த்தம் உள்ளதாய் இருக்கின்றது.[3] இக்கருத்தை விளக்குகின்ற வேதவசனப் பகுதிகளில் ஒன்று 2 யோவான் 9அ ஆகும்: "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் *மீறி நடக்கிற* எவனும் தேவனை உடையவனல்ல."

வில் வீரர் என்ற விளக்கத்தைத் தொடருவதற்கு, மீறுதல் என்பது இலக்கைத் தாண்டி அம்பெய்தல் அதாவது தேவனுடைய சித்தத்திற்கு அப்பால் செல்லுதல் என்பதாகும் என்று நாம் நினைக்கலாம்.



"செயல் படுத்தும் மற்றும் செயல்படாது விடும் பாவங்கள்" என்பவை பற்றி மக்கள் சில வேளைகளில் பேசுகின்றார்கள். "செயல்படாது விடும் பாவம்" என்றால், நாம் என்ன செய்ய வேண்டுமோ, அதில் தவறி விடுதல் (தேவனுடைய எதிர்பார்ப்புகளில் இருந்து தவறிவிடுதல்) என்று உள்ளது. "செயல்படுத்தும் பாவம்" என்பது நாம் எதைச் செய்யக் கூடாதோ, அதைச் செய்வது (தேவன் நமக்கு நியமித்துள்ள எல்லைகளுக்கு அப்பால் செல்வது) என்பதைக் குறிக்கின்றது (ரோமர் 7:19, 20ஐக் காணவும்).

''பாவம்'' என்று அர்த்தம் தரும் இன்னொரு இணைச் சொல், "அக்கிரமம்" என்பதாகும்.[4] யாக்கோபு 3:6ல் "அநீதி நிறைந்த உலகம்" என்று பேசப்படுகின்றது. ''அக்கிரமம்'' என்று மொழிபெயர்க்கப்படும் வார்த்தையானது அநீதி என்ற கருத்தைக் கொண்டுள்ளது. அக்கிரமத்திற்கான ஒரு விளக்கத்தை ஏசாயா 53:6 தருகின்றது: "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார்." இதில், "அவனவன் தன்தன் வழியிலே போனோம்" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள்: இது தேவனுடைய வழியில் செல்வதற்குப் பதிலாக ஒருவர் தமது சொந்த வழியில் செல்வதைக் குறிப்பிடுகின்றது. இதை நாம் வில் வீரரின் விளக்கத்தில் பயன்படுத்தினால், அவ்வில் வீரர் அம்பெய்கையில் தமது இலக்கை முற்றிலுமாக மறந்து விடும் நிலைமையைச் சித்தரிக்கலாம்.



சில மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தேவனைப் பிரியப்படுத்த “குறிவைத்து” அதில் தவறி விடுகின்றார்கள் என்பது அல்ல, மாறாக அவர்கள் தேவனுக்குத் தாங்கள் கீழ்ப்படிகின்றார்களா இல்லையா என்பது பற்றிக் கவலைப் படுவதில்லை. அவர்கள் தாங்கள் விரும்பியபடி வாழ்வதற்கு முடிவெடுக்கின்றார்கள். அவர்கள் பிடிவாதமாகத் தங்கள் சொந்த வழியிலேயே போகின்றார்கள்.

பாவம் செய்யக் கூடிய பொதுவான இம்மூன்று வழிமுறைகளைப் பற்றிச் சற்று நின்று நிதானித்தறியுங்கள்: நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தவறுவது, தவறென்று நாம் அறிந்ததைச் செய்வது, தேவனுடைய சித்தத்தை முற்றிலுமாகப் புறக்கணிப்பது. அத்துடன், நாம் எதைச் *செய்கிறோமோ* (யாக். 4:17), எதைச் *சொல்கிறோமோ* (மத். 12:37) மற்றும் எதை *சிந்திக்கிறோமோ* (மத். 15:19) அவைகளினால் பாவம் செய்யக் கூடும். இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்க்கும்போது, இந்தச் சத்தியங்கள் உங்களின் சொந்த வாழ்க்கைக்கு எவ்விதம் பயன்படுகின்றது என்பதைக் கவனியுங்கள்:

- நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளில் எப்பொழுதாவது தவறியிருக்கின்றீர்களா?
- நீங்கள் சொல்லக் கூடாதவைகளை எப்பொழுதாவது சொல்லியிருக்கின்றீர்களா?
- நீங்கள் எப்பொழுதாவது தேவனுடைய சித்தத்திற்கு முரணாகச் சிந்தித்து இருக்கின்றீர்களா?

சுருக்கமாய்க் கூறினால், நீங்கள் ஒரு பாவி என்று ஒப்புக் கொள்ள நீங்கள் தயாராயிருக்கின்றீர்களா? உங்களின் இழந்து போகப்பட்ட நிலைமையை நீங்கள் ஒப்புக் கொள்ள முடியாத வரைக்கும், நீங்கள் இரட்சிக்கப்படத் தயாராகவில்லை என்றே அர்த்தமாகும்.

உங்களின் பாவ நிலையை ஒப்புக் கொள்வது முக்கியமானதாக இருக்கின்றது. உங்கள் சொந்தப் பாவக் குற்றங்களை நீங்களே அகற்றிக் கொள்ள வழியெதுவும் இல்லை என்பதைப் புரிந்து கொள்வதும் முக்கியமானதாகும். ஒருவர் தமது வாழ்க்கையில் உள்ள தீயவைகளுக்கு அதிகமான அளவில் நல்லவைகளைக் கொண்டிருந்தால், அந்த நல்லவைகள், தீயவைகளை நீக்கி விடுகின்றது என்ற ஒரு பொதுவான தவறாகப் புரிந்து

கொள்ளுதல் உள்ளது. துரதிருஷ்டவசமாக, நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போயிருக்கின்றோம் என்ற உண்மையைச் சரிப்படுத்த எவ்வளவு நற்செயல்கள் நம்மிடம் இருந்தாலும் அவைகள் போதாது.

உங்கள் பற்றுச் சீட்டுக்குரிய பணங்களைச் செலுத்தாமல் நீங்கள் பெரிய அளவு கடனைக் குவித்துக் கொண்டீர்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒருநாள் நீங்கள், "இது முட்டாள்தனமானது, இப்பொழுதுமுதல் நான் எனது பற்றுச் சீட்டுகள் எல்லாவற்றுக்கும் உடனடியாகப் பணம் செலுத்தி விடுவேன்" என்று முடிவு செய்கின்றீர்கள். இந்தத் தீர்மானத்தை நீங்கள் மிகவும் உண்மையாக பல வருடங்களாகப் பின்பற்றுகின்றீர்கள். இது பாராட்டக் கூடியதுதான் ... ஆனால் தொடக்கத்தில் நீங்கள் வைத்திருந்த கடன்கள் என்னவாயிற்று? உங்கள் தற்போதய பற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்தி விடுவது என்பது உங்களின் கடந்த காலக் கடன்களை ஒருபொழுதும் நீக்கிப் போடாதே.

அது போலவே, நீங்கள் நல்லவை செய்யும்போது, அது பாராட்டக் கூடியதேயாகும், ஆனால் நீங்கள் செய்ய "வேண்டியது" என்ன என்பதைப் பற்றி வேதாகமம் கூறுகின்றது (லூக். 17:10). நீங்கள் "செய்ய வேண்டியதை" செய்யாமல் இருந்ததற்கு இது ஒருபொழுதும் ஈடு செய்ய முடியாது.

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதால், நமது பாவங்களுக்கு நாம் எதைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கின்றது? வேதாகமம் தெளிவாய் உள்ளது: "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23அ). இவ்விடத்தில் "மரணம்" என்று பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை *பிரிவு* என்ற கருத்தை மறைவாக உணர்த்துகின்றது, சரீரமரணம் என்பது உடலில் இருந்து ஆவி பிரிதல் ஆகும் (யாக். 2:26ஐக் காணவும்). ஆவிக்குரிய மரணம் என்பது - பாவத்தின் காரணத்தால் - மனிதன் தேவனிடத்திலிருந்து பிரிதல் ஆகும் (ஏசாயா 59:1, 2ஐக் காணவும்). நித்திய மரணம் என்பது தேவனை விட்டு நிரந்தரமாக பிரிந்திருத்தல் ஆகும் (2 தெச. 1:9).

நமது வாழ்வில் உள்ள பாவத்தின் விளைவாக ஆவிக்குரிய மரணம் உண்டாகின்றது (எபே. 2:1). இந்தப் பாவமானது இயேசுவின் இரத்தத்தினால் நீக்கப்படவில்லையென்றால் இதன் நிறைவு விளைவாக நித்திய மரணம் ஏற்படும் (வெளி. 20:14, 15). மனிதர்கள் தங்கள் பாவத்தில் மரித்தார்களென்றால், அவர்கள் தாம் செல்லும் இடத்திற்குச்(அதாவது பரலோகத்திற்கு; யோவா. 8:24; 14:2-6) செல்ல முடியாதென்று இயேசு கூறினார்.

இன்றைய நாட்களில் உலகத்திற்குப் பல விஷயங்கள் தேவைப்படுகின்றன: சமாதானம், புற்று நோய்க்குப் பூரண குணம், பசிக்குணவளிக்கும் ஒரு வழி. ஆயினும் உலகத்தின் மாபெரும் தேவை தேவன் வேண்டும் என்ற தேவையே ஆகும். ஒரு மனிதர் தாம் பாவி என்பதையும், தம்மைத் தாமே இரட்சித்துக் கொள்ள முடியாது என்பதையும் ஒப்புக் கொள்ளாதவரையில் அவரது ஆத்துமாவுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. உங்களின் இழந்து போகப்பட்ட நிலையை நீங்கள் ஒப்புக் கொள்ளாத வரையிலும் நீங்கள் இரட்சிக்கப்படத் தயாராகவில்லை என்று நான் மறுபடியும் கூறுகின்றேன்.

உங்கள் இரட்சிப்பின் அவசியத்தை நீங்கள் புரிந்து கொண்டிருந்தால், தொடர்ந்து படியுங்கள்.

## கிருபையினாலே இரட்சிக்கப்படுதல்

"ஆச்சரியமான கிருபை" என்பது புகழ் பெற்ற ஒரு கீதம் ஆகும், ஆனால் அதைப் பாடுகின்றவர்களில் பலருக்கு "கிருபை" என்றால் என்னவென்று தெரிவதேயில்லை. ''கிருபை'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "ஈவு" என்பதற்கான வார்த்தையோடு உறவுள்ளதாகும். "கிருபை" என்பது ஈவாகப் பொழியப்பட்டதைக் குறிப்பிடுகின்றது - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இது ஈட்டப்பட்டதல்ல. "கிருபை" என்பது சில வேளைகளில் "தகுதியின்றியே பெற்றுக் கொண்ட சலுகை" என்று விளக்கப்படுகின்றது. ''உங்களுக்குத் தேவை ஆனால் அதற்கு நீங்கள் தகுதியானவரல்ல" என்னும் விளக்கத்தை நான் விரும்புகின்றேன்.

நாம் பாவிகளாயிருப்பதினால் நமக்கு இரட்சிப்பு அவசியமாகும், ஆனால் நாம் இரட்சிப்புப் பெறத் தகுதியானவர்கள் அல்ல. இவ்விதமாக, நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அது தேவனுடைய கிருபையின் மூலமாகவே ஆகும். எபேசியர் 2:8 மற்றும் பிற வசனப் பகுதிகள், கிறிஸ்தவர் கள் "கிருபையினாலே" இரட்சிக்கப்படுவதை வலியுறுத்துகின்றன.

தேவனுடைய கிருபையின் மாபெரும் வெளிப்பாடாகவே அவருடைய குமாரன் நமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்டார். பின்வரும் வசனம் மேற்கோள் காட்டப்பட்டதை (அல்லது) மனப்பாடமாகக் கூறப்பட்டதை நீங்கள் கேட்டிருக்கலாம்: ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' (யோவா. 3:16). தேவன் இவ்வுலகத்தை அவ்வளவாய் அன்புகூர்ந்தார் - தேவன் உங்கள் மீதும் அவ்வளவாய் அன்புகூர்ந்தார் - அதாவது, உங்கள் பாவங்களுக்காக அவர் தம் குமாரனாகிய இயேசுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கச் சித்தமானார். எனக்கு மூன்று மகள்களும், இரண்டு பேரக் குழந்தைகளும் இருக்கின்றார்கள், ஆனால் அவர்களில் யாரையும் நான் இவ்விதமாய் ஒப்புக் கொடுக்க விரும்ப மாட்டேன். தேவன் ஒரே ஒரு குமாரனையே பெற்றிருந்தார், ஆனால் அவரையே நமக்காகத் தேவன் தந்தருளினார்.

''அன்றியும், நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போது, ... கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் ... நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:6-8) என்று பவுல் எழுதினார்.

இயேசு பல காரணங்களுக்காக இவ்வுலகத்திற்கு வந்தார்: தேவனைப் பற்றி நமக்குப் போதிப்பதற்காக (யோவா. 3:2), மக்களுக்கு உதவுவதற்காக (மத். 20:28), நாம் பின்பற்றுவதற்குப் பூரணமான ஒரு எடுத்துக்காட்டைத் தருவதற்காக (1 பேது. 2:21). ஆயினும், மிகவும் முக்கியமாக அவர், "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும்'' (லூக். 19:10) வந்தார். அந்த

*நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, அவர் சிலுவையில் மரிக்க வேண்டியிருந்தது: "... இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22).*

*இயேசுவின் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகக் கூடாதிருந்தது ஏன்? இந்த வினாவிற்கான விடை தேவனுடைய இயல்பில் உள்ளது. தேவனை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாதாகையால்,[5] சிலுவையில் உள்ளது உட்பட - அவருடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களை நாம் முற்றிலுமாகப் புரிந்து கொள்ள முடியாது (1 கொரி. 2:16). இருந்தாலும் இவ்வினாவை ஆழமாகச் சிந்திப்பதில் அதிகமான மதிப்புள்ளது.*

*பின்வரும் சிந்தனைகளைக் கவனியுங்கள்: தேவன் நீதியுள்ள தேவனாயிருக்கின்றார் (சங். 89:14). பரிசுத்தமான தேவன் என்ற வகையில், அவர் பாவத்தைச் சகித்துக் கொள்ளக் கூடாதவராக இருக்கின்றார் (ஏசாயா 6:3); நீதியுள்ளவராயிப்பதற்கு அவர், பாவத்திற்குத் தண்டிப்பவராயிருக்க வேண்டும். தேவன் அன்புள்ள தேவனாகவும் இருப்பதற்காக (1 யோவா. 4:8) நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர் நீதியுள்ள தேவனாக மட்டும் இருந்தால், நாம் எல்லாரும் பாவம் செய்தபடியால், நாம் எல்லாரும் இழந்து போகப்பட்டிருப்போம். அன்பின் தேவன் என்ற வகையில், நாம் ஒருவரும் கெட்டுப் போய் விடக் கூடாது என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது (2 பேது. 3:9); நமக்காகப் பாடுபடும்படி அவர் தம் குமாரனை அனுப்பினார். இயேசு சிலுவையில் மரித்த போது எனது பாவங்களுக்கான - மற்றும் உங்களின் பாவங்களுக்கான - தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார் என்ற உண்மையை நான் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்கின்றேன்.*

> *"... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து" (1 கொரி. 15:3).*
>
> *நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை [இயேசுவை தேவன்] நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5:21).*
>
> *நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார் (ஏசாயா 53:6).*

*இயேசு ஒரு மனிதராக மட்டும், பூரணமான மனிதராகக் கூட மட்டும் இருந்திருப்பாரேயானால், அவரது மரணமானது ஒருபொழுதும் பாவப் பரிகாரமாகியிருக்க முடியாது. மனித குல முழுவதின் பாவங்களைத் தம் மேல் ஏற்றுக் கொண்ட அவர், தேவனுடைய குமாரனாக, பாவமற்றவராக இருந்தார். மாபெரும் மதத் தலைவர்கள் பலர் இருந்துள்ளார்கள், ஆனால் இயேசு கிறிஸ்து என்பவர் மட்டுமே ஒரே ஒரு இரட்சகராவார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல்*

ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவா. 14:6) என்று இயேசு கூறினார்.[6]

நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்னர், பின்வரும் முக்கியமான சத்தியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்: (1) இயேசுவானவர் தேவனு டைய தெய்வீகக் குமாரனாயிருக்கின்றார்.[7] (2) கிறிஸ்து உங்களுக்காகச் சிலுவையில் மரித்தார். (3) நீங்கள் உங்களையே இரட்சித்துக் கொள்ள முடியாது; இயேசுவின் பலியினால் மட்டுமே நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்.

## முடிவுரை

நீங்கள் எவ்வளவு கல்வி கற்றவர் அல்லது கல்லாதவர், நீங்கள் எவ்வளவு பெரிய பணக்காரர் அல்லது ஏழை, நீங்கள் எவ்வளவு கவர்ச்சிகரமான தோற்றம் உள்ளவர் அல்லது இல்லாதவர், உங்கள் தோலின் நிறம் கறுப்பா அல்லது வெள்ளையா, (மனிதர்களின் அளவீட்டின்படி) நீங்கள் எவ்வளவு வெற்றியடைந்தவர் அல்லது அடையாதவர் போன்ற இவை எதுவும் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை; தேவன் உங்களில் அன்பு கூருகின்றார். அவர் தமது மகனை உங்களுக்காக மரிக்க அனுப்புமளவுக்கு உங்கள் மேல் அன்புள்ளவராயிருக்கின்றார். இதற்கு முன்பு இதைப் பற்றி நீங்கள் படித்திராவிட்டால், இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் பற்றிய விபரங்களைப் படிப்பதற்குச் சற்று நின்று நிதானிக்க இப்பொழுது நீங்கள் விரும்பக் கூடும் (அவை பற்றிய விபரங்கள் மத். 26-28; மாற். 14-16; லூக். 22-24; யோவா. 18-21 ஆகியவற்றில் இருக்கின்றன).

பவுல், ''என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20ஆ) என்று எழுதினார். பின்வரும் வார்த்தை களைச் சத்தமாய்க் கூறுங்கள்: "இயேசு என்னை நேசிக்கின்றார், அவர் எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்.'' இவ்வார்த்தைகளை நுகர்ந்து சுவையுங்கள். இவை உண்மையில் உண்மையானவைகளாய் இருக்கின்றன!

---

குறிப்புகள்

[1]எடுத்துக்காட்டாக, ஒரு மனிதர் மிகவும் மோசமான குற்றம் எதையேனும் செய்திருந்தால், அவரது பிள்ளைகள் வெட்கம் மற்றும் தாழ்ச்சியினால் (அச்செயலின் விளைவுகளை) உபத்திரவப்படக் கூடும், ஆனால் அக்குற்றத்திற்காகச் சிறை செல்ல வேண்டியவர் அம்மனிதர் மட்டுமே. (குற்றம் செய்த ஒருவர் மட்டுமே.) [2]யூதப் பையன் ஒருவனுக்கு அவனது பதிமூன்றாவது வயதில் ''கட்டளைகளின் bar mitzvah கொண்டாட்டம் நடைபெறும்.'' பன்னிரெண்டு வயதான போது இயேசு பஸ்காப் பண்டிகைக்குச் சென்றார் (லூக். 2:41, 42). ("bar mitzvah" என்றால் "கட்டளையின் [அல்லது சட்டம்] மகன்" என்று அர்த்தப்படும்). [3]பல கிரேக்க வார்த்தைகள் "transgression" (மீறுதல்) என்று அர்த்தம் தருகின்றன, மாறுபட்ட

மொழிபெயர்ப்புகளில் இவை காணப்படுகின்றன; ஆனால், கலாத்தியர் 3:19ல் பயன்படுத்தப்பட்டுள்ள, ஆங்கிலத்திலும் அதே அர்த்தமுள்ள கிரேக்க வார்த்தையை நான் இங்கு குறிப்பிடுகின்றேன். [4]பாவம் என்பதற்கு "நியாயப்பிரமாணமற்று இருத்தல்" என்பதும் ஒரு இணைச் சொல்லாகும். (ஒரு நவீன மொழிபெயர்ப்பில் 1 யோவான் 3:4ஐக் காணவும்.) இவ்வார்த்தை, "[தேவனுடைய] நியாயப்பிரமாணத்திற்கு முரணாகச் செல்லுதல்" என்று அர்த்தமாகின்றது. "துன்மார்க்கம்" மற்றும் "கீழ்ப்படியாமை" போன்ற மற்ற இணைச் சொற்களும் இருக்கின்றன; ஆனால் பாவத்தின் கருத்தை விளக்குவதற்கு, நான் "மீறுதல்" மற்றும் "அக்கிரமம்" ஆகிய சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். [5]தேவனை முழுவதுமாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நாம் தேவனாயிருக்க வேண்டும். [6]வழி, சத்தியம், ஜீவன் என்ற வார்த்தைகளுக்கு முன் ஆங்கிலத்தில் "the" என்ற சுட்டுச் சொல் உள்ளது. இது மூல பாஷையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக ஆங்கிலத்தில் சாய்வெழுத்துக்களில் தரப்பட்டுள்ளது. [7]இயேசுவின் உயிர்த்தெழுதலின் மீதுள்ள விசுவாசத்தையும் இது உள்ளடக்குகின்றது (ரோமர் 10:9ஐக் காணவும்). உயிர்த்தெழுதல் என்ற உன்னதமான பாடத்தைக் கற்றுக் கொள்ள இவ்விடத்தில் இடம் போதாது. இயேசு தெய்வீக மானவர் என்பதில் நீங்கள் உறுதிப்படாதிருந்தால், இம்முக்கியமான பாடத்தைப் படிக்க நீங்கள் விரும்புவீர்கள். இதுவரை அதைப் பற்றிப் படிக்காதிருந்தால், இவ்வெளியீட்டில், "விசுவாசிப்பதற்கு அறைகூவல்" என்ற துணைக் கட்டுரையை வாசிக்கவும். அத்துடன், இவ்வெளியீட்டை உங்களுக்குக் கொடுத்தவருடன் கலந்துரையாடும்படியும் நான் உங்களை உற்சாகப் படுத்துகின்றேன். இயேசுவைப் பற்றி வேதாகமம் கூறும் விஷயங்களுக்கு (யோவா. 20:30, 31ஐக் காணவும்) நீங்கள் பழக்கப்படவேண்டியதென்பதும் உங்கள் அடிப்படைத் தேவையாயிருக்கச் சாத்தியக் கூறுண்டு. இயேசுவில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்கு, புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வாழ்க்கைப் பற்றிக் கூறும் முதல் நான்கு நூல்களை உங்களால் முடிந்த அளவுக்கு நேரம் ஒதுக்கிப் படியுங்கள்.

௩

# "நான் என்ன செய்ய வேண்டும்?"

*அப்போஸ்தலராகிய பேதுரு, இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தபோது, அவரது பிரசங்கத்தைக் கேட்டவர்கள், "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்கள் (அப். 2:37). சவுலுக்குக் கிறிஸ்து தோற்றமளித்த போது, "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 22:10) என்று சவுல் கேட்டார். பிலிப்பி பட்டணத்தின் சிறையதிகாரி மயிரிழையில் மரணத்திலிருந்து உயிர் தப்பிய பிறகு, அவர் பவுலையும் சீலாவையும் நோக்கி, "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" (அப். 16:30) என்று கேட்டார். "நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியைக் காட்டிலும் முக்கியமான வேறு கேள்வி எதையும் நீங்கள் கேட்க முடியாது.*

## செய்ய வேண்டிய சில விஷயங்கள்

*நீங்கள் இரட்சிப்படைய விரும்பினால், நீங்கள் செய்ய வேண்டிய சில விஷயங்கள் உள்ளன என்பதை ஒருவேளை நாம் முதலாவதாக நிலைநாட்ட வேண்டியுள்ளது. மனிதகுலம் முழுவதற்குமாகக் கிறிஸ்து மரணமடைந்தார் (தீத்து 2:11), ஆனால் எல்லாரும் இரட்சிக்கப்பட்டு விடுவார்கள் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. மனிதர்கள் பயணம் செய்யும் இரண்டு வழிகளைப் பற்றி இயேசு பேசினார்: "ஜீவனுக்குப் போகிற" இடுக்கமான ஒரு வழி, மற்றும் "கேட்டுக்குப் போகிற" விரிவான ஒரு வழி. "அநேகர்" விரிவான வழியிலும், "சிலர்" இடுக்கமான வழியிலும் செல்கிறார்கள் என்று அவர் அழுத்தமாகக் கூறினார் (மத். 7:13, 14). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பலர் இழந்து போகப்படுகையில், வெகு சிலர் இரட்சிக்கப்படுவார்கள்.*

*இரட்சிப்பு என்பது ஒரு ஈவு ஆகும், ஆனால் ஈவு ஒன்று ஏற்றுக் கொள்ளப்படக் கூடும் அல்லது மறுக்கப்படக் கூடும். ஒவ்வொருவரும் தேவனுடைய கிருபையின் ஈவைத் தாங்கள் ஏற்பதா அல்லது புறக்கணிப்பதா என்பதை அவர்களே முடிவு செய்கின்றார்கள். மத்தேயு 7ல் இயேசுவின் கூற்றானது, தேவனுடைய ஈவை ஏற்பவர்களைக் காட்டிலும் அதிகமான பேர்கள் அதைப் புறக்கணிப்பார்கள் என்று அறிவிக்கின்றது.*

*இரட்சிப்பின் ஈவை நாம் எவ்விதத்தில் ஏற்றுக் கொள்ள முடியும்? கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தேவன் தமது வசனத்தில் நமக்குக் கூறுகின்றார். கிறிஸ்து,*

*‘‘பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை” (மத். 7:21) என்று கூறினார். (“பிதாவினுடைய சித்தம்” என்பது என்னால் வலியுறுத்தப்படுகின்றது.) எபிரெய நிருபத்தின் ஆசிரியர், இயேசுவைப் பற்றி, “தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி” (எபி. 5:9) என்று எழுதினார். (“கீழ்ப்படிகிற” என்பது என்னால் வலியுறுத்தப்படுகின்றது.)*

*சிலர் இதை மறுக்கின்றார்கள். மனிதர்கள் இரட்சிக்கப்பட எதையாவது செய்ய வேண்டுமென்றால், இரட்சிப்பானது கிருபையினால் உண்டானதல்ல என்று அவர்கள் கூறுகின்றார்கள். நமது கீழ்ப்படிதலானது நமக்கு இரட்சிப்பை சம்பாதித்து தருவதில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக கீழ்ப்படிதலின் மூலம், நாம் கர்த்தரால் அளிக்கப்பட்டுள்ள இரட்சிப்பை நமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளக் கூடும்.*

*சம்பாதித்தல் மற்றும் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் ஆகியவைகளுக்கிடையில் உள்ள வேறுபாடு என்ன? பின்வரும் விளக்கமானது நீங்கள் இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்கு உதவக்கூடும்:*

*ஒரு வீட்டின் கதவை ஒரு மனிதர் தட்டுகின்றார். கதவருகில் ஒரு பெண்மணி வரும்போது, அம்மனிதர், “நான் மிகவும் பசியாயிருக்கின்றேன். நான் ஒரு உணவை பெற்றுக் கொள்ளக் கூடியதான வேலை ஏதாவது உங்களிடத்தில் இருக்கின்றதா?’’ என்று கேட்கின்றார். அதற்கு அந்தப் பெண்மணி, “வீட்டின் பின் முற்றத்தில் பிளக்க வேண்டிய மரக் கட்டைகள் இருக்கின்றன. அந்த மரக்கட்டைகளை நீங்கள் பிளந்து போட்டால், ஒரு வேளை உணவை நீங்கள் உண்ணலாம்” என்று பதில் கூறுகின்றார்கள். அந்த மனிதர் மரக் கட்டைகளைப் பிளந்து போட்டு விட்டு, கடைசியில் உணவு உண்ண உட்காருகின்றார். நான் உங்களிடம் கேட்கிறேன்: இந்த மனிதர் உணவு உண்ணுகையில், தான் அந்த உணவை சம்பாதித்தாக உணருவாரா? நிச்சயமாக அப்படித்தானே உணருவார்!*

*இப்பொழுது இக்கதையைச் சற்று மாற்றுகின்றேன்: ஒரு வீட்டின் கதவை ஒரு மனிதர் தட்டுகின்றார். கதவருகில் ஒரு பெண்மணி வரும்போது, அம்மனிதர், “நான் மிகவும் பசியாயிருக்கின்றேன். நான் ஒரு உணவை பெற்றுக் கொள்ளக் கூடியதான வேலை ஏதாவது உங்களிடத்தில் இருக்கின்றதா?’’ என்று கேட்கின்றார். அதற்கு அந்தப் பெண்மணி, ‘‘என்னால் சாப்பிடக் கூடிய அளவுக்கும் அதிகமான உணவை இப்பொழுதுதான் நான் உணவு மேசையின் மேல் வைத்துள்ளேன். உள்ளே வாருங்கள், உட்காருங்கள், உங்கள் விருப்பம் போல உணவு உண்ணுங்கள்” என்று பதில் கூறுகின்றார்கள். அந்த மனிதர் அளவற்ற மகிழ்ச்சியுடன் அப்பெண்மணியின் அழைப்பை ஏற்றுக் கொண்டு, அவர்கள் தயாரித்து வைத்திருந்த உணவை ஆனந்தமாக உண்ணத் தொடங்குகின்றார். இப்பொழுது, மறுபடியும் நான் உங்களை கேட்கிறேன்: இந்த மனிதர் இந்த*

உணவை சம்பாதித்துக் கொண்டாரா? இல்லவே இல்லை. இது ''கிருபையினால்'' கிடைத்த ஒரு ஈவு ஆகும். அவர் இதைத் தமக்கு ஏற்புடையதாக்கிக் கொண்டார்.

அவர் எவ்விதத்தில் இதற்குத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டார்? அப்பெண்மணியின் அழைப்பை ஏற்றதினால், அவர்களின் வீட்டுக்குள் வந்ததினால், மற்றும் அவர்களின் உணவு மேசையில் அமர்ந்து அவ்வுணவை உண்டதினால் அவர் இதைத் தமக்கு ஏற்புடையதாக்கிக் கொண்டார். இதை அவர் தமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளாதிருந்தால் என்னவாகியிருக்கும்? அவர், "வேண்டாம், நன்றி" என்று கூறி விட்டுத் தமது வழியில் சென்றிருந்தால் என்னவாகியிருக்கும்? அவர் வீட்டிற்குள் சென்றும் உணவை உண்ண மறுத்திருந்தால் என்னவாகியிருக்கும்? அப்பெண்மணியின் தாராளமான ஈவினால் உண்டான பலனை அவர் பெற்றிருக்க மாட்டார் என்பது தெளிவு. (ஆம், இப்படிப்பட்ட பதில்செயல்கள் மதியீனமானதென்பதை நான் அறிவேன், ஆனால் எல்லாக் காலத்திலும் மக்கள் கர்த்தருடைய அழைப்பைப் [வெளி. 3:20] புறக்கணிப்பதென்பது இதைவிட அதிக மதியீனமானதாகும்.)

நாம் நமது இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது, ஆனால் தேவனுடைய ஈவை-விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினால் - நாம் ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியும், ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டும். நமது விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் உள்ளவை என்ன என்பதை நாம் தொடர்ந்து இதைப் படிக்கையில் தெளிவாய்க் காண முடியும்.

## நாம் என்ன செய்ய வேண்டும்

இயேசு தமது சீஷர்களுக்கு(அல்லது தம்மைப் பின்பற்றுவோருக்கு)ப் பிரதான கட்டளையைக் கொடுத்த பொழுது, "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; ...'' (மாற். 16:15, 16) என்று கூறினார். பவுல், ''ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17) என்று கூறினார். மேலும் அவர், சுவிசேஷமானது (இயேசுவைப் பற்றிய நற்செய்தியானது[1]) "இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16) என்று கூறினார். இயேசுவைப் பற்றியும் அவருடைய வழியைப் பற்றியும் அறிந்து கொள்வதில்தான் இரட்சிப்பு தொடங்குகின்றது. கவனத்துடன் கேட்பவராக அல்லது வாசிப்பவராக, மற்றும் பொறுப்புள்ள, பதில்செயல் புரியும் மாணவராக ஒவ்வொருவரும் விளங்க வேண்டும். இப்பாடத்தின் எஞ்சியுள்ள பகுதியில், சுவிசேஷத்திற்கு நாம் தர வேண்டிய முக்கியமான மூன்று பதில்செயல்களைப் பற்றி நாம் ஆய்வு செய்வோம்.

### இயேசுவில் விசுவாசம் கொள்ளுங்கள்

முதலாவது பதில்செயல் விசுவாசம் அல்லது நம்பிக்கையாகும்:

*''விசுவாசம் கேள்வியினாலே வரும்.'' விசுவாசத்தின் முக்கியத்துவம் யோவான் 3:16ல் வலியுறுத்தப்படுகின்றது: ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.'' கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினால் இரட்சிக்கப் படுகின்றார்கள் என்று போதிக்கும் வசனப் பகுதிகள் பலவற்றில், அப். 16:31; ரோமர் 5:1 மற்றும் எபே. 2:8, 9 ஆகியவையும் இருக்கின்றன. இயேசு, "நானே அவர் [அதாவது மேசியா[2]] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா. 8:24) என்று கூறினார்.*

*"நம்பிக்கை" மற்றும் "விசுவாசம்" ஆகியவை ஒரே அர்த்தமுடையவை களேயாகும். சிலர் "நம்பிக்கை" என்பதும் "விசுவாசம்" என்பதும் வெவ்வேறு அர்த்தமுள்ளவையென்று கூற முயற்சி செய்கின்றார்கள், ஆனால் இவ்விரு வார்த்தைகளும் ஒரே கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகவே உள்ளன. நம்மை இரட்சிக்கின்ற விசுவாசம் (அல்லது நம்பிக்கை) என்பது என்ன? இரட்சிக்கும் விசுவாசம் என்பது "உண்மையுடனிருத்தல்" என்ற சொற்றொடரினால் விளக்கப்பட முடியும். இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நாம் நமது நற்பண்புகள்மேல் நம்பிக்கையாயிருப்பதை நிறுத்தி விட்டு, இயேசு கிறிஸ்துவின் பலியின் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்க வேண்டும்.[3]*

*விசுவாசத்தின் முக்கியத்துவத்தை நாம் அதிகம் வலியுறுத்த வேண்டியதில்லை. கர்த்தருக்கு நாம் தரக் கூடிய நேர்மறையான மற்ற பதில்செயல்கள் எல்லாவற்றுக்கும் விசுவாசமே அஸ்திபாரமாக இருக்கின்றது. யோவான் 1:11, 12ல் இயேசு, "தமக்குச் சொந்தமானதிலே [யூதர்களாகிய மக்கள்] வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.[4] அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர் களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்று நாம் வாசிக்கின்றோம். "ஏற்றுக்கொள்ளுதல்" மற்றும் ''விசுவாசித்தல்'' என்ற சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். இயேசுவில் நாம் விசுவாசம் கொள்ளாமல், அவரை நமது வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ள நம்மால் முடியாது.*

*துரதிருஷ்டவசமாக, சிலர் விசுவாசத்தைத் தனிமைப் படுத்தி, நாம் ''விசுவாசத்தினால் மட்டுமே'' இரட்சிக்கப்படுகின்றோம் என்று போதிக்கின்றார்கள். விசுவாசம் என்பது நமது பதில்செயல்களின் தொடக்கமேயன்றி, முடிவு அல்ல. மறுபடியும் யோவான் 1:11, 12ஐ வாசியுங்கள். ஏற்றுக்கொள்பவர்கள்/விசுவாசிப்பவர்கள் "தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தைப்" பெற்றார்கள். நானும் எனது மனைவி ஜோவும் திருமணம் முடிக்கு முன்பு, திருமண அனுமதி ஆணையொன்றைப் பெற்றுக் கொண்டோம். அந்த அனுமதி ஆணையானது நாங்கள் திருமணம் முடித்துக் கொள்ளும் உரிமையை*

எங்களுக்குக் கொடுத்தது. அது நாங்கள் ஏற்கனவே திருமணம் முடித்து விட்டோம் என்று அர்த்தப்படுத்தவில்லை. அது போலவே, விசுவாசமானது நம்மை இரட்சிப்புக்குச் செல்லும் சாலையில் நம்மை இருத்துகின்றது; அது பயணத்தின் முடிவல்ல. நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகின்றோம், ஆனால் விசுவாசத்தினால் *மட்டுமல்ல*.

இரட்சிக்கும் விசுவாசமானது அந்த விசுவாசத்தை வெளிப் படுத்துவதினின்று பிரிக்கப்பட முடியாததாகும். இது யோவான் 3ம் அதிகாரத்தினால் விளக்கப்பட முடியும். நாம் ஏற்கனவே பார்த்தபடி, வசனம் 16ல் விசுவாசத்தின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. இப்பொழுது அந்த அதிகாரத்தின் கடைசி வசனத்தை வாசியுங்கள்: ''குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ (குமாரனுக்கு கீழ்படியாதவனோ KJV) ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (வ. 36). (''விசுவாசமாயிருக்கிறவன்'' என்பது இவ்விடத்தில் என்னால் வலியுறுத்தப்படுகின்றது.) புதிய ஏற்பாட்டில், ''விசுவாசம்'' மற்றும் ''கீழ்ப்படிதல்'' ஆகிய கருத்துக்கள் ஒன்றிற்குப் பதில் ஒன்று பயன்படுத்தப்படும் இடங்களில் இதுவும் ஒன்றாகும்[5] (ரோமர் 10:16ஐயும் காணவும்). கீழ்ப்படியும் விசுவாசமே இரட்சிக்கும் விசுவாச மாக இருக்கின்றது.

"விசுவாசத்தினாலே மாத்திரம்" (அல்லது "விசுவாசத்தினாலே மட்டும்") என்ற சொற்றொடர் வேதாகமம் முழுவதிலும் யாக்கோபு 2:24ல் மட்டுமே காணப்படுகின்றது, அதில் நாம் ''விசுவாசத்தினாலே மாத்திரம்'' இரட்சிக்கப்படுவதில்லை என்று கூறப்படுகின்றது. KJVயில் இவ்வசனம், "Ye see then how that by works a man is justified,[6] and not by faith only" என்றுள்ளது. New American Standard Bible புத்தகத்தில், "You see that a man is justified by works, and not by faith alone" என்றுள்ளது.

யாக்கோபின் விவாத வரிகளைக் காணும்படி நீங்கள் ஓரிரு நிமிடங்கள் எடுத்துக் கொண்டு யாக்கோபு 2:14-26ஐ வாசித்துப் பாருங்கள். விசேஷமாக வசனங்கள் 14, 17, 20 மற்றும் 26 ஆகியவற்றின்மேல் கவனம் செலுத்துங்கள்:

> என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ... அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.
>
> ... கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? ... அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததா யிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததா யிருக்கிறது.


இரட்சிக்கும் விசுவாசமானது, செத்த, சாரமற்ற, பயனற்ற விசுவாசமாக இருப்பதில்லை. அது உயிருள்ள மற்றும் செயல்படும் விசுவாசமாய் இருக்கின்றது.

***பாவங்களில் இருந்து மனந்திரும்புங்கள்***

*உண்மையான விசுவாசம் தன்னையே வெளிப்படுத்திக் கொள்ளும் வழிகளில் ஒன்று மனந்திரும்புதல் ஆகும். இயேசு, "நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக். 13:3) என்று கூறினார். பேதுரு தமது பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்கு, "மனந்திரும்பி, ஒவ்வொருவரும் … ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38) என்று கூறினார். பவுல், "இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று [தேவன்] எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப். 17:30) என்று கூறினார்.*

*இயேசுவில் நமது விசுவாசம் வளருகையில், நாம் நம்மையே எப்படியிருக்கிறோம் என்று பார்ப்பதற்கு முன்வர வேண்டும்: பாவிகள் இரட்சிப்பின் தேவையில் இருக்கின்றார்கள். (முந்திய பாடத்தில் காணவும்.) இது மனந்திரும்புதலை உண்டாக்க வேண்டும்.*

*மனந்திரும்புதல் என்பது மிகச் சரியாக எதனைக் குறிப்பிடுகின்றது? மனந்திரும்புதல் என்றால் பாவத்திற்காக வருத்தப்படுதல் என்று சிலர் நினைக்கின்றார்கள். மற்றவர்கள் இதை வாழ்க்கையில் மாற்றம் என்று நினைக்கின்றார்கள். ஒரு மனிதர் உண்மையாக மனந்திரும்பும்போது, தாம் செய்திருக்கும் பாவங்களுக்காக வருத்தப்படுவார், அவரது வாழ்வு மாற்றம் அடையும், ஆனால் மனந்திரும்புதல் என்பது இவ்விரு நிலைகளுக்கும் நடுவில் இருக்கின்றது.*




*மேலுள்ள வரைபடத்தில், தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலை உண்டாக்குவதை கவனியுங்கள். 2 கொரி. 7:10ல், "தேவனுக்கேற்ற துக்கம்[7] … இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; …"[8] என்று நமக்குக் கூறப்படுகின்றது. மனந்திரும்புதலின் விளைவாக வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது என்பதைக் கவனியுங்கள். பவுல் சென்ற இடங்களில் எல்லாம் மக்களுக்கு அவர், "அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டும்" (அப். 26:20) என்று அறிவித்தார். மனந்திரும்புதல் என்பது தேவனுக்கேற்ற துக்கத்திற்குப் பிறகும், வாழ்வில் மாற்றம் ஏற்படுவதற்கு முன்னும் உண்டாகின்றது.*

*அப்படியானால், மனந்திரும்புதல் என்றால் என்ன? "மனந்திரும்புதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "புதியதொரு சிந்தையைப் பெறுதல்" என்ற நேரடி அர்த்தமுள்ளதாக இருக்கின்றது. அது மனநிலை மாற்றத்தைக் குறிப்பிடுகின்றது.*

மக்களுக்கு இதை நடைமுறைப்படுத்துகையில், மனந்திரும்புதல் என்பது பாவத்தைப் பொறுத்தமட்டில் ஏற்படும் மனமாற்றமாய் இருக்கின்றது. பாவம் என்பது தேவனுடைய இருதயத்தை உடைக்கின்றது என்பதை உணரும் ஒரு மனிதர், பாவம் எவ்வளவு மோசமானதாயிருக்கின்றது என்பதைக் காண்கின்றார். பாவம்தான் இயேசு சிலுவையில் அறையப்படக் காரணமாயிற்று என்பதை கற்றுக்கொள்ளும் எவரொருவரும் பாவத்தை விலக்குகின்றவராகின்றார். பாவம் நிறைந்த தன்மையை உணர்ந்து வருந்துகின்றவர், தேவனுடைய உதவியினால் சிறந்த ஒரு வாழ்வை வாழ முடியும் என்று தீர்மானம் செய்கின்றார். இந்த முடிவையே "மனந்திரும்புதல்" என்று வேதாகமம் அழைக்கின்றது.

உண்மையான மனந்திரும்புதல் என்பது ஒரு நபருடைய வாழ்வில் எப்பொழுதுமே நல்விளைவு ஒன்றை ஏற்படுத்துவதாயிருக்கும். அது பரிபூரணமான வாழ்வை உண்டாக்குகிறதில்லை, ஏனென்றால் எவர் ஒருவரும் பரிபூரணப்பட்டவர் அல்ல; ஆனால் அது வாழ்வை இன்னும் சிறந்ததாக்கும், வாழ்க்கையில் மாற்றம் இல்லையென்றால், மனந்திரும்புதல் இல்லையென்றே அர்த்தமாகின்றது.

மனந்திரும்புதல் என்பது "மனமாற்றத்தின் கடினமான பகுதி" என்று அழைக்கப்படுகின்றது. அது வாழ்வின் முறையில் மாற்றம் ஏற்படுத்த நம்மை அழைப்பதால் மிகக் கடினமான பகுதியாக இருக்கின்றது. மாற்றம் என்பது சிரமமானதாகும். ஆயினும், நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் - கர்த்தருடைய உதவியுடன் - நாம் மாறுவதற்குப் பிரயாசப்பட வேண்டும்.

### கிறிஸ்துவை அறிக்கையிடுங்கள்

இயேசுவில் உள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தும் இன்னொரு வழி அந்த விசுவாசத்தை அறிக்கையிடுதல் ஆகும். விசுவாசம் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்கிடையே உள்ள நெருங்கிய தொடர்பானது ரோமர் 10:9, 10ல் காணப்படுகின்றது:

> ... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.[9]

நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்பினால், நாம் ''இயேசுவைக் கர்த்தரென்று ... அறிக்கை செய்ய வேண்டும்.'' அறிக்கையிடுதலின் அவசியத்தை கிறிஸ்துவே வலியுறுத்தினார்:

> மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத். 10:32, 33).

*"இயேசுவைக் கர்த்தரென்று ... அறிக்கை செய்ய வேண்டும்"என்பதன் அர்த்தம் என்ன? மறுபடியும் ரோமர் 10ஐயும் மத்தேயு 10ஐயும் பார்க்கவும்:*

- *இது இயேசுவில் உள்ள விசுவாசத்தை அறிக்கை செய்தலாயிருக்கின்றது (எனவே இது பாவங்களை அறிக்கை செய்தல் அல்ல[10]).*
- *இது வாயினால் செய்யப்படும் அறிக்கையாயிருக்கின்றது (எனவே இது வாழ்வினால் மட்டும் செய்யப்படும் அறிக்கையல்ல[11]).*
- *இது மற்றவர்களுக்கு முன்னால் செய்ய வேண்டிய அறிக்கையாயிருக்கின்றது (எனவே இது இரகசிய அறிக்கையல்ல).*

*விசுவாச அறிக்கையொன்று மத்தேயு 16ல் காணப்படுகின்றது. தமது சீஷர்கள் தம்மை யாரென்று நினைக்கின்றார்கள் என்று இயேசு கேட்டார். பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (மத். 16:16) என்று பதில் அளித்தார். "மேசியா" என்ற எபிரெய வார்த்தையின் கிரேக்க வடிவமே "கிறிஸ்து" என்பதாகும், இது "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்ற அர்த்தம் தருவதாகும். யூதர்கள் பல நூற்றாண்டுகளாக மேசியாவுக்காகக் காத்திருந்தார்கள். இயேசுவில் தமக்கிருந்த விசுவாசத்தைப் பேதுரு அவர் தேவனிடத்திலிருந்து வந்த மேசியா என்று வெளிப்படுத்தியதன் மூலம் அறிக்கையிட்டார். ''ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்'' என்ற சொற்றொடரானது, இயேசு தெய்வீகமானவரென்று பேதுரு உணர்ந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.*

*இன்னொரு விசுவாச அறிக்கையானது அப். 8ல் காணப்படுகின்றது. இந்த இரண்டாவது எடுத்துக்காட்டானது ஞானஸ்நானத்திற்கு முன்பு அறிக்கையிடுதலாயிருக்கின்றது. எத்தியோப்பிய மந்திரி ஒருவருக்குப் பிலிப்பு இயேசுவைப் பற்றிப் போதித்துக் கொண்டிருந்தார்.*

> *இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி:[12] இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். [அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான்.[13] அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி]; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான் (அப். 8:36-38).*


*எத்தியோப்பிய மந்திரியின் அறிக்கையானது, ஏறக்குறையப் பேதுருவின் அறிக்கை மத்தேயு 16ல் உள்ளது போலவே இருந்தது என்பதைக் கவனியுங்கள் . இது "வாயினால்" மற்றும் "மனுஷர் முன்பாக" (உண்மையில் பிலிப்பு என்ற ஒரு மனிதர் முன்பாக) செய்யப்பட்ட அறிக்கையாயிருக்கின்றது.*

*நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு, இயேசுவில் நீங்கள்*

கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டியது அவசியமாகும். விசுவாசம் என்பது ஞானஸ்நானத்திற்கு முன்பே உண்டாக வேண்டுமென்று கிறிஸ்து கூறினார் (மாற். 16:16). இவ்விதமாக, ஒரு மனிதர் விசுவாசமுள்ள வராயிருக்கின்றார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுமுன் நான் அவரை வசனப்படியாக ஞானஸ்நானப்படுத்த முடியாது. அவர் விசுவாசிக்கின்றார் என்பதை நான் எப்படி அறிய முடியும்? அவர் எனக்குக் கூற வேண்டும்.

மக்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன், அவர்களிடத்தில் இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அவர்கள் விசுவாசிக்கின்றார்களா என்று வழக்கமாய்க் கேட்பதுண்டு. சிலர் எளிமையாக “ஆம்” என்று பதில் அளிக்கின்றார்கள். மற்றவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பற்றிய எளிய கூற்று ஒன்றைக் கூறுகின்றார்கள். இவ்விரண்டுமே ‘‘நல்ல அறிக்கை’’ பண்ணுதல் என்று கூறத் தகுதியுள்ளவைகளாயிருக்கின்றன (1 தீமோ. 6:12, 13).[14]

இயேசுவைப் பற்றிய உங்கள் அறிக்கையானது நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகும் தொடர வேண்டும் என்பது உண்மையே. ஆதி கிறிஸ்தவர்கள் இயேசுவில் கொண்டிருந்த விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்குச் சில வேளைகளில் மீனின் அடையாளத்தைப் பயன்படுத்தினார்கள்:[15]



“மீன்” என்பதற்கான கிரேக்க வார்த்தை ichthus என்பதாகும். கிரேக்கப் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டால் அவ்வார்த்தை பின்வருமாறு இருக்கும்:

ΙΧΘΨΣ

இவ்வார்த்தையில் உள்ள கிரேக்க எழுத்துக்கள் இயேசுவின் பெயர்கள் மற்றும் பட்டங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதிப் படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன:

- I (iota-ஐயோட்டா) என்பது “இயேசு’’ என்பதற்கான கிரேக்க வார்த்தையான Iesous[16] என்ற வார்த்தையின் முதல் எழுத்து ஆகும்.
- X (chi-சை) என்பது ‘‘கிறிஸ்து’’ என்பதற்கான கிரேக்க வார்த்தையான Christos என்ற வார்த்தையின் முதல் எழுத்தாகும்.
- Θ (Theta-தீட்டா) என்பது “தேவனுடைய” என்று அர்த்தப்படும் Theou என்ற கிரேக்க வார்த்தையின் முதல் எழுத்தாகும்.

- Ψ (Upsilon-உப்சிலன்) என்பது குமாரன் என்பதற்கான கிரேக்க வார்த்தையான *Uios* என்ற வார்த்தையின் முதல் எழுத்து ஆகும்.

- Σ (Sigma-ஸிக்மா) என்பது "இரட்சகர்" என்பதற்கான கிரேக்க வார்த்தையான *soter* என்ற வார்த்தையின் முதல் எழுத்து ஆகும்.

*இந்த எளிய அடையாளத்தைப் பயன்படுத்தியதன் மூலம் ஆதிகிறிஸ்தவர்கள், இயேசுவே கிறிஸ்து என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும், அவரே தங்களின் இரட்சகர் என்றும் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்கள்.*

## முடிவுரை

*இப்பாடமானது - மனந்திரும்புதலுக்கு வழி நடத்துகின்ற, இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுவதற்குக் காரணமான - விசுவாசத்தின் பதில்செயலை மையமாகக் கொண்டுள்ளதாயிருக்கின்றது. அடுத்த பாடத்தில் நாம் ஞானஸ்நானம் என்ற பதில்செயலைப்பற்றி ஆராய்வோம்.*

*இப்பொழுது நான், "இயேசுவில் நீங்கள் விசுவாசம் கொள்கின்றீர் களா?" என்ற கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன். அந்தக் கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று உண்மையாக நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? இது உங்கள் உதடுகளின் விசுவாசமாயிருக்கின்றதா? இந்த விசுவாசம் உங்கள் வாழ்வில் விளைவுகள் ஏற்படுத்தியுள்ளதா? இயேசு, "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோவா. 8:24).*

---

குறிப்புகள்

*[1]"சுவிசேஷம்" என்பதற்கான கிரேக்க மற்றும் ஆங்கில வார்த்தைகள் இரண்டுமே "நற்செய்தி" என்ற நேரடியான அர்த்தமுள்ளவைகளாகும். 1 கொரிந்தியர் 15:1-4ல், இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவையே இந்த நற்செய்தியாகும் என்று பவுல் கூறினார். [2]"மேசியா" என்பது "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற அர்த்தம் உள்ள எபிரெய வார்த்தையாகும். யூத அரசர்கள் முடிசூட்டப்பட்டபோது, எண்ணெயினால் அபிஷேகம் செய்யப்பட்டு, "தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அழைக்கப்பட்டார்கள். யூதர்கள் மாபெரும் அரசருக்காக, நிறைவான அபிஷேகம் பெற்றவருக்காக, மேசியாவுக்காகக் காத்திருந்தார்கள். இயேசுவே அந்த மேசியாவாக இருந்தார், ஆனால் பல யூதர்கள் அதை உணரவில்லை. [3]இயேசுவில் உள்ள விசுவாசம் தேவனில் கொண்டுள்ள விசுவாசத்தையும், வேதாகமத்தின் மீதுள்ள விசுவாசத்தையும் முன் தீர்மானப் படுத்துகின்றது (எபி. 11:6). முந்திய பாடமாகிய "அதிகாரமுடைமை" என்பதில் காணவும். [4]தேசம் என்ற வகையில் யூதர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்காமல் புறக்கணித்தார்கள். [5]KJVயில் இரு இடங்களில் "believeth" என்ற வார்த்தையே உள்ளது, ஆனால் NASBயில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, மாறுபட்ட இரு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. [6]இது, பவுல் எபேசியர் 2:9ல்*

கூறியுள்ளதற்கு முரண்பட்டது போலத் தோன்றலாம். ஆயினும் பவுல், கிரியைகளின் நற்தன்மைகளைப் பற்றிப் பேசினார் என்பதையும், யாக்கோபு கிரியைகளை, விசுவாசத்தின் வெளிப்பாடாகக் குறிப்பிட்டார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். [7]"தேவனுக்கேற்ற துக்கம்" என்றுள்ளது. "தேவனுடைய சித்தத்திற்கேற்ற துக்கம்" என்பது "தேவனுக்கேற்ற துக்கம்" என்றால் என்ன என்பதை விளக்குகின்றது. [8]2 கொரிந்தியர் 7:10ல் குறிப்பிடப்படுகின்ற "லௌகிக துக்கம்" என்பது, தவறு செய்ததால் பிடிப்பட்ட தனிநபர் ஒருவரின் துக்கத்தை அல்லது தனது செயல்களின் விளைவை அனுபவிக்கின்றவர் அடையும் துக்கத்தைக் குறிப்பிடுகின்றது. அவருடைய துக்கமானது அவரது பாவத்திலிருந்து அவரை விலகிச் செய்வதில்லை. [9]இவ்வசனப் பகுதியானது "விசுவாசம் மட்டும்" போதுமானது என்று போதிப்பதாகச் சிலர் ஆலோசிக்கின்றார்கள். ஆயினும், இவ்வசனப் பகுதியில் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்புண்டாகின்றது என்று கூறப்படாமல் விசுவாசத்துடன் கூட சில செயல்களினால் இரட்சிப்பு உண்டாகிறதென்றுதான் உள்ளது. இவ்வசனப்பகுதியில் விசுவாசத்துடன் கூட அறிக்கை செய்தல் வேண்டியிருக்கின்றது. மற்ற வசனப் பகுதிகளில், இது விசுவாசத்துடன் கூடிய மனந்திரும்புதல், அல்லது விசுவாசத்துடன் கூடிய ஞானஸ்நானம் அல்லது வேறு ஏதாவது கூட்டாக உள்ளது. விசுவாசத்துடன் கூட என்பது விசுவாசம் மட்டும் என்று ஆகாது. இரட்சிப்பைப் பற்றி வேதாகமம் கூறுகின்ற *யாவற்றையும்* நாம் கவனிக்க வேண்டும். [10]கிறிஸ்தவர் ஒருவர் தமது பாவங்களுக்கு எவ்விதம் மன்னிப்புப் பெறுகின்றார் என்பதைக் கூறுகையில், நாம் பாவ அறிக்கையைப் பற்றி ஆராய்வோம். ஆனால் ஒருவர் கிறிஸ்தவராவதற்கு முன்பு பாவ அறிக்கை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஞானஸ்நானம் தேவை எனக் கூறும் அச்செயலே, "நான் ஒரு பாவி, எனக்கு இரட்சிப்புத் தேவை" என்று அவர் கூறுவதாக உள்ளது.

[11]நமது *வாழ்க்கையினால்* இயேசுவை அறிக்கை செய்ய வேண்டியது முக்கியமானதாகும், ஆனால் ரோமர் 10 மற்றும் மத்தேயு 10 ஆகியவற்றின் அர்த்தம் இதுவல்ல. [12]ஆங்கிலத்தில் இவ்விடத்தில் "eunuch" என்றுள்ளது. இவ்வார்த்தையானது "விதையடிக்கப்பட்ட ஆண்" என்ற அர்த்தம் தருவது வழக்கமாகும். தேவ நம்பிக்கையற்ற மக்கள் மத்தியில் இருந்த உயரதிகாரிகள் சோதனைக்கு உட்படாமல் இருக்கும்படிக்கு அவர்களுக்கு (உயர் அதிகாரிகளுக்கு) இவ்விதமாய் விதையடிக்கப்பட்டது. [13]சில மொழிபெயர்ப்புக்களில் இவ்வசனப்பகுதியானது வசனத்தில் சேர்க்கப்படாமல், அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளதால், இது அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. எவ்வகையிலும், இவ்வசனமானது ஆதி சபையில் ஞானஸ்நானம் தருமுன்னர் விசுவாச அறிக்கை செய்யும் பழக்கம் இருந்ததைப் பிரதிநிதிப் படுத்துகின்றது. [14]இயேசு "நல்ல அறிக்கை" செய்தபோது (1 தீமோ. 6:14) பிலாத்து கூறியதை அவர் ஆமோதிக்க மட்டுமே செய்தார் (மத். 27:11). [15]வேதாகமத்தில் இருந்தல்ல, உலக வரலாற்றில் இருந்தே இவ்வடையாளத்தைப் பற்றி நாம் அறிகின்றோம். ஆதிக் கிறிஸ்தவர்களின் கல்லறைகளின்மேல் பெரும்பாலும் மீனின் அடையாளம் காணப்பட்டது. [16] இப்பட்டியலில் உள்ள கிரேக்க வார்த்தைகள் பலவற்றின் உச்சரிப்பானது விசேஷித்த அடையாளங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது, அவற்றை எனது மொழிபெயர்ப்பில் மறுபடியும் ஏற்படுத்துவதற்கு நான் முயற்சி செய்யவில்லை. மேலும், கிரேக்க மொழியில் "e" மற்றும் "o" ஆகியவற்றில் இருவகைகள் உண்டு, ஆனால் அவற்றிற்கிடையே நான் எந்த வித்தியாசத்தையும் இவ்விடத்தில் காட்டவில்லை.

4

# “எழுந்து, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்” [1]

*முந்திய பாடத்தின் முன்னுரையில், “இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்ட தனிநபர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இக்கேள்விக்கான பதிலில் ஞானஸ்நானம் என்பது உள்ளடக்கப்பட்டது. யூதர்கள், “சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” (அப். 2:37) என்று கேட்ட பிறகு, பேதுரு “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” (அப். 2:38) என்று பதில் அளித்தார். “ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?” என்று சவுல் கேட்ட பிறகு (அப். 22:10), அவர் நகருக்குள் அனுப்பப்பட்டார். அங்கு அவரிடத்தில் ஒரு பிரசங்கியார் வந்து, “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு” (அப். 22:16) என்று கூறினார். சிறைச்சாலை அதிகாரி, “ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு, நான் என்ன செய்ய வேண்டும்?” (அப். 16:30) என்று கேட்ட பிறகு, அவர் விசுவாசிக்கும்படிக் கூறப்பட்டது (அப். 16:31). அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் தேவனுடைய வசனம் போதிக்கப்பட்டது; பிறகு, “அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப். 16:33).*

*இதுவரைக்கும் நாம் விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நிலைநாட்டி யிருக்கின்றோம். இப்பாடத்தில், கர்த்தருக்கு நாம் அளிக்கும் ஆரம்ப நிலை பதில்செயலில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதும் உள்ளடங்கியிருக்கிறது என்பதைக் காண்போம். விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை பற்றிச் சற்று முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன; ஆனால், ஞானஸ்நானம் பற்றிய கருத்தொருமைப்பாடு இல்லாமை என்பது காலங்களினூடே வந்தது. ஆயினும், இப்படிப்பட்ட முரண்பாடுகள் எதுவும் புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இருந்ததில்லை. இயேசுவைப் பின்பற்ற முடிவு செய்த எல்லாரும், எந்த கேள்வியும் இன்றி, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.*

## ஞானஸ்நானம் என்றால் என்ன?

ஞானஸ்நானத்தைப் பற்றி நாம் கலந்துரையாடுவதற்கு முன், அந்தச் சொல்லின் அர்த்தம் என்ன என்று நாம் புரிந்து கொள்வது அவசியமாகும். "Baptism" என்பது கிரேக்க வார்த்தையின் ஒலியாக்கம் ஆகும். அதாவது, பல ஆண்டுகளுக்கு முன்பு யாரோ ஒருவர் இந்த கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்புச் செய்வதற்குப் பதிலாக, இதிலிருந்து ஒரு ஆங்கில வார்த்தையை ஏற்படுத்தினார் என்று அர்த்தமாகின்றது.[1] "Baptism" என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில் பின்வருமாறு காணப்படுகின்றது:[2]

βαπτισμος

இந்த அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தைக்கு இரு வடிவங்கள் உள்ளன: *baptismos* (மேலுள்ள வடிவம்), மற்றும் *baptisma* ஆகியவையே அவ்வடிவங்கள் ஆகும். *baptizo*[3] என்பது இதன் வினைவடிவம் ஆகும். இவ்வார்த்தைகள் "baptism" மற்றும் "baptize" என்பதற்கு எவ்வளவு ஒத்துள்ளன என்பதை நீங்கள் காண முடியும்.

"Baptize" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? இவ்வார்த்தையை நீங்கள் ஒரு ஆங்கில அகராதியில் தேடினால், நீங்கள் பலவகையான அர்த்தங்களைக் காண முடியும். ஆனால் ஆங்கில அகராதிகள் யாவும் இவ்வார்த்தையின் தற்காலப் பயன்பாட்டைத் தருகின்றனவே யொழிய, வேதாகம அர்த்தங்களைத் தருவதில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். லெக்ஸிகன் என்று அழைக்கப்படும் கிரேக்க அகராதி ஒன்றில் நீங்கள் *baptizo* என்பதன் அர்த்தத்தைக் காண முடியும். Bagster's *Analytical Greek Lexicon* என்ற புத்தகத்தில் நீங்கள் ஆய்வு செய்தால், *bapto* என்ற வார்த்தையே *baptizo* என்பதன் மூல வார்த்தையாக உள்ளது என்பதை நீங்கள் காண முடியும். இவ்வார்த்தைகளின் குடும்பத்தில் உள்ள தகவல்களின் மையமானது கீழே தரப்படுகின்றது:

> *bapto,* ... to dip ... அமிழ்த்த.
> *baptizo,* ... to dip, immerse ... அமிழ்த்த, முழுக்காட்ட
> *baptisma,* ... immersion ... முழுக்காட்டுதல்
> *baptismos* ... an act of dipping or immersion ...
> அமிழ்த்தல் அல்லது முழுக்காட்டுதல் என்ற செயல்பாடு ...
>
> [*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 65.]

"Baptize" என்றால் "முழுக்காட்ட" என்று அர்த்தமாகும், "baptism" என்றால் முழுக்காட்டுதல் என்று அர்த்தமாகும். பேதுரு தமது பிரசங்கத்தைக் கேட்டவர்களிடம், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ... முழுக்காட்டப்படுங்கள் ..." என்றே கூறினார். அனனியாவும் சவுலிடம், "எழுந்து, முழுக்காட்டப்பட்டு, உன் பாவங்கள்

போகக் கழுவப்படு" என்றே கூறினார். "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையின் நேரடி அர்த்தம் "முழுக்காட்டப்படுதல்" என்பதாகும்.

"Baptism" என்ற வார்த்தையானது முழுக்காட்டுதல் நடக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாட்டைக் குறிப்பிடுவதில்லை. இயேசு, பாடுகளினால் ஞானஸ்நானப்படுத்த(முழுக்காட்ட)ப் பட்டார் (மாற். 10:38, 39; லூக். 12:50). அப்போஸ்தலர்கள், பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்த (முழுக் காட்ட)ப் பட்டார்கள் (மத். 3:11; அப். 1:4; 2:1-4). நாம் படிக்க விருக்கும் ஞானஸ்நானம், (அப். 8:36-38; 10:47, 48 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளபடியான) தண்ணீரில் முழுக்காட்டுதல் என்பதாகும்.

ஞானஸ்நானத்தைப் பற்றிய பின்வரும் அடிப்படை விளக்கத்தை மனதில் கொள்ளுங்கள்: முழுக்காட்டுதல். இது நாம் இப்பாடத்தைத் தொடர்ந்து படிக்கையில் அதிகமாய் குழப்பம் உண்டாவதைத் தவிர்க்கும்.

இப்பாடத்திலும், இதற்கு அடுத்து வரும் பாடத்திலும் நாம் மூன்று கேள்விகளைக் கேட்போம்: "ஒருவர் ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும்?"; "ஒருவர் எப்படி ஞானஸ்நானம் பெற வேண்டும்?"; "யார் ஞானஸ்நானம் பெற வேண்டும்?" "ஏன்" என்பதில் நாம் தொடங்குவோம்.

## இயேசுவினால் அறிவுறுத்தப்பட்டது (மாற்கு 16)

இயேசு தமது சீஷர்களுக்குப் பிரதான கட்டளையைக் கொடுக்கையில், பின்வருமாறு கூறினார்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும்[4] சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28:19, 20).

### இயேசுவின் முன்னேற்பாடு

பிரதான கட்டளையைப் பற்றி மாற்கு பின்வருமாறு எழுதியுள்ளார்: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:15, 16).[5] KJVயில், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (வ. 16) என்றுள்ளது. நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்பினால், நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற இக்கூற்றைக் காட்டிலும் இன்னும் எளிமையாக இயேசுவால் கூறியிருக்க முடியாது.

*ஞானஸ்நானத்தைக் குறித்துத் தப்பெண்ணம் கொண்டிருந்த ஒரு மனிதருடன் ஒரு முறை நான் வேதபாடம் படித்துக் கொண்டிருந்தேன். ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றிக் கூறும் வேதவசனப்பகுதிகளை நாங்கள் பார்த்தோம், ஆனால் அவைகளின் தெளிவான உபதேசத்தை அவர் ஏற்க மறுத்தார். நிறைவாக நான், "இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியமானது என்று போதிக்கக் கர்த்தர் விரும்பியிருப்பாரேயானால், இதைக் காட்டிலும் அவர் எவ்விதம் தெளிவாகக் கூறி விளக்கப் படுத்தியிருக்கக் கூடும்?'' என்றேன். அவர் சற்று யோசித்துப் பிறகு, "ஞானஸ்நானம் முற்றிலும் அவசியமென்றால், கர்த்தர், 'விசுவாசமுள்ளவனாகியும், ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்' என்று கூறியிருப்பார் என்று நான் நினைக்கின்றேன்" என்றார். நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்குமாக மாற்கு 16:16ஐ அவர் மேற்கோள் காட்டினார் என்பதை அறியும்போது அவர் ஆச்சரியப்பட்டார்.*

*மாற்கு 16:16 மிகவும் தெளிவாய் இருக்கின்றது, ஆனால் அவ்வப்போது நான் பின்வரும் மறுப்பைக் கேள்விப் படுவதுண்டு: "இவ்வசனத்தின் பின்பகுதியில், விசுவாசமில்லாதவனாகியும், ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று கூறப்படுவதில்லையே. அதில், விசுவாசியாதவன் இழந்து போகப்படுவான் என்று மட்டும் தானே கூறப்படுகின்றது.'' இவ்விவாதத்திற்கான எனது பதில் இதோ: இவ்வசனத்தின் பின்பகுதியில் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுவதென்பது தேவைக்கு அதிகமானதாகும்.*

*இதைக் கவனியுங்கள்: வசனம் 16ன் முற்பகுதியில், விசுவாசம் என்பது ஞானஸ்நானத்திற்கு முன்னதாக வருகின்றது. கர்த்தருக்கு நாம் செய்கின்ற பதில்செயல்கள் எல்லாவற்றிலும் அஸ்திபாரமாக இருப்பது விசுவாசமேயாகும். இயேசுவில் விசுவாசம் கொள்ளாத ஒருவர் மனந்திரும்பவோ அல்லது அறிக்கை செய்யவோ மாட்டார். அது போலவே, இயேசுவில் விசுவாசமின்றி, ஒருவர் வசன ரீதியாக ஞானஸ் நானப்படுத்தப்பட முடியாது. விசுவாசமானது நீங்கலாயிருக்கும்போது - வசனம் 16ல் உள்ளது போல - அது ஞானஸ்நானம் உட்பட விசுவாசத்தினால் உண்டாகும் எந்த பதில்செயலையும் தானாகவே நீக்கலாக்கி விடுகின்றது. "ஞானஸ்நானம் பெறாதவன்" என்று இவ்விடத்தில் சேர்ப்பதென்பது தேவையற்றதாகும்.*

*இக்கருத்தை விளக்குவதற்கு, உங்களை ஒரு கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்காக நான் வேலைக்கு அமர்த்துகின்றேன் என்று கற்பனை செய்து கொள்வோம். நான், ''நீங்கள் கட்டிடத்தைக் கட்டி, சிகப்பு வண்ணம் பூசிக் கொடுத்தால் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பேன்" என்று உங்களிடத்தில் கூறுகின்றேன். அப்பொழுது நீங்கள், ஒரு லட்சம் ரூபாய் பெற வேண்டுமென்றால் இரு செயல்கள் செய்ய வேண்டும் என்று புரிந்து கொள்கின்றீர்கள். அதாவது (1) கட்டிடத்தைக் கட்டுவது மற்றும் (2) அதற்குச் சிகப்பு வண்ணம் பூசுவது. பிறகு நான், "ஆனால் நீங்கள் கட்டிடத்தைக் கட்டவில்லையென்றால், உங்களுக்கு நான் ஒரு லட்சம் ரூபாயைத் தர மாட்டேன்'' என்று கூறினால் எப்படியிருக்கும்?*

*இவ்விரண்டாவது கூற்றிலிருந்து, நீங்கள் அக்கட்டிடத்திற்கு சிகப்பு வண்ணம் பூசுவது தேவையற்றது என்று முடிவு செய்வீர்களா? இல்லை, கட்டிடத்தைக் கட்டத் தவறுதல் என்பது, அக்கட்டிடத்திற்குச் சிகப்பு வண்ணம் பூசுதல் என்ற செயலை தானாகவே நீக்கலாக்கிப் போடுகின்றது. இல்லாத ஒரு கட்டிடத்திற்குச் சிகப்பு வண்ணம் பூசுவது என்பது இயலாத ஒரு செயலாகும். அது போலவே, ஆண்டவராகிய இயேசுவில் முதலாவதாக விசுவாசம் கொள்ளாத ஒருவர் வசனரீதியாக ஞானஸ்நானம் பெறுவதென்பதும் இயலாத செயலாகும்.*

*மறுபடியும் மாற்கு 16:15, 16ன் எளிமையைப் பாருங்கள். தேவனுடைய திட்டமானது படிப்படியாகத் தரப்பட்டுள்ளது:*

*(1) பிரசங்கித்தல் (போதித்தல்)*
*(2) விசுவாசம்*
*(3) ஞானஸ்நானம்*
*(4) இரட்சிப்பு*

## ***மனிதர்களின் திரும்ப வரிசைப்படுத்துதல்கள்***

*துரதிருஷ்டவசமாக, மனிதகுலமானது கர்த்தருடைய எளிமையான ஏற்பாட்டை அப்படியே விட்டு வைப்பதில் திருப்தியடைவது அரிதாயிற்று (2 கொரி. 11:3ஐக் காணவும்). முந்திய பாடம் ஒன்றில் நாம், ஆதாமின் பாவத்தினால் ஏற்பட்ட குற்றத்தின் கறையுடன் குழந்தைகள் பிறக்கின்றன என்ற போதனையைப் பற்றி கலந்துரையாடினோம். அந்தக் குற்றத்தைக் கழுவுவதற்கு ஞானஸ்நானம்[6] அவசியமானது என்று சிலர் வலியுறுத்துகின்றார்கள். அவர்களின் உபதேசத்தின்படி, ஞானஸ்நானம் பெறாத ஒரு குழந்தை இறந்து போகுமென்றால், அது பரலோகம் செல்ல முடியாது.[7] "குழந்தை ஞானஸ்நானத்தை" ஆதரிப்பவர்கள், "ஞானஸ்நானம் பெற்ற" குழந்தை ஒரு குறிப்பிட்ட வயதை அடையும்போது போதிக்கப்பட்டு, "உறுதி பூசுதல்" (திடப்படுத்தல்)[8] பெற வேண்டும் என்று கூறுகின்றார்கள். இவர்கள், கர்த்தருடைய ஒழுங்கு முறையைப் பின்வருமாறு மாற்றிவிடுகின்றார்கள்:*

*(1) ஞானஸ்நானம்*
*(2) இரட்சிப்பு*
*(3) போதனை*
*(4) விசுவாசம்*

*இந்த வரிசைப்படுத்துதல், கர்த்தருடைய வரிசைப் படுத்துதல் அல்ல என்பது தெளிவாகும்:*

| **இயேசு** | **மனிதர்கள் (அ)** |
|---|---|
| *(1) பிரசங்கித்தல் (போதனை)* | *(1) ஞானஸ்நானம்* |
| *(2) விசுவாசம்* | *(2) இரட்சிப்பு* |
| *(3) ஞானஸ்நானம்* | *(3) போதனை* |
| *(4) இரட்சிப்பு* | *(4) விசுவாசம்* |

*நாம் ஏற்கனவே கலந்துரையாடின இன்னொரு உபதேசமானது உலகத்தின் சில பகுதிகளில் பரவலாக மேலோங்கியுள்ளது: அது, "விசுவாசத்தினால் மட்டும்" இரட்சிப்பு உண்டு (அல்லது இரட்சிக்கப் படுவதற்கு "விசுவாசம் மாத்திரம்" போதுமானது) என்ற உபதேசமாகும். இந்தக் கண்ணோட்டம் கொண்டிருப்பவர்கள், இயேசுவில் விசுவாசம் கொண்டதும் ஒருவர் இரட்சிக்கப்பட்டுவிடுகின்றார் என்பதாகப் போதிக் கின்றார்கள்.[9] ஞானஸ்நானம் பெறுவதென்பது நல்லதுதான், ஆனால் அது உண்மையில் அவசியமல்ல என்று இவர்கள் போதிக்கின்றார்கள். இவ்விதமாக, இவர்களின் வரிசைப் படுத்துதல் பின்வருமாறு காணப்படுகின்றது:*

*(1) போதனை*
*(2) விசுவாசம்*
*(3) இரட்சிப்பு*
*(4) ஞானஸ்நானம்*

*மீண்டும் ஒரு முறை, இது இயேசுவால் மாற்கு 16:15, 16ல் கொடுக்கப்பட்ட வரிசைப்படுத்துதலை மாற்றுகின்றது:*

| **இயேசு** | **மனிதர்கள் (ஆ)** |
|---|---|
| *(1) பிரசங்கித்தல் (போதித்தல்)* | *(1) போதித்தல்* |
| *(2) விசுவாசம்* | *(2) விசுவாசம்* |
| *(3) ஞானஸ்நானம்* | *(3) இரட்சிப்பு* |
| *(4) இரட்சிப்பு* | *(4) ஞானஸ்நானம்* |

## *இயேசுவின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டன (அப். 2)*

*இன்றைய நாட்களில் இயேசுவின் வரிசைப்படுத்துதலை மாற்றுபவர்களுக்கு முரண்பட்ட வகையில், கிறிஸ்துவின் ஏற்பாட்டை மிகச் சரியாகப் பின்பற்றிய ஒருவரைப் பற்றிய எடுத்துக்காட்டானது அப். 2ல் தரப்பட்டுள்ளது.*

## வரலாற்றின் தொடக்கம்

*அப். 2ல் பூரணமான சுவிசேஷத்தைப் பேதுரு முதன் முதலாகப் பிரசங்கித்தார். அவரது பிரசங்கமானது இயேசுவை மையமாகக் கொண்டிருந்தது. அவரது பாடத்தின் உச்ச நிலை அப். 2:36ல் காணப்படுகின்றது: "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.'' யூதர்கள் இதைக் கேட்டபொழுது, ''இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்'' (அப். 2:37).*

*இவ்விடம் வரைக்கும் அப். 2, இயேசுவால் அமைக்கப் பெற்ற ஒழுங்கு முறையைப் பின்பற்றியது என்பதைக் கவனியுங்கள்: (1) பிரசங்கித்தல் என்பது இருந்தது (2) இது விசுவாசத்தை உண்டாக்கியது. ("விசுவாசம்" என்ற வார்த்தை வசனம் 37ல் இல்லை, ஆனால் கேட்டவர்கள் பேதுருவின் செய்தியை விசுவாசித்திருக்காவிட்டால், அவர்கள் ''இருதயத்திலே குத்தப்பட்டிருக்க" முடியாது.)*

*பேதுருவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் அநேகர் தங்களின் இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் அடுத்து வருவது என்ன என்பதை அறிய விரும்பினார்கள். இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றியிருந்தால், அவர் (பேதுரு) அவர்களிடம் என்ன கூறியிருக்க வேண்டும்? அவர் அவர்களிடம் (3) ஞானஸ்நானம் பெறுங்கள் (4) அப்பொழுது இரட்சிப்படைவீர்கள் என்று கூறியிருக்க வேண்டும். அவர் அப்படிச் செய்தாரா என்று பார்ப்போம்:*

*"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் [4] பாவமன்னிப்புக்கென்று [3] இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38). ("பாவமன்னிப்பு" பெறுவதென்பதும், பாவத்தில் இருந்து இரட்சிப்படைவது என்பதும் ஒன்றுதான்.) ஆகவே, இயேசுவின் அறிவுறுத்தல்களைப் பேதுரு பின்பற்றினார் என்று நாம் காண்கின்றோம்:*

| **இயேசு** | **பேதுரு** |
|---|---|
| *(1) பிரசங்கித்தல் (போதித்தல்)* | *(1) பிரசங்கித்தல் (போதித்தல்)* |
| *(2) விசுவாசம்* | *(2) விசுவாசம்* |
| *(3) ஞானஸ்நானம்* | *(3) ஞானஸ்நானம்* |
| *(4) இரட்சிப்பு* | *(4) இரட்சிப்பு* |

## இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதி

*இப்பொழுது நாம் இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதியைத் தொடர்ந்து*

காண்போம்: விசுவாசித்தவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறிய பிறகு, பேதுரு அவர்களைக் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்படி உற்சாகப்படுத்தினார். அவர், "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி" (அப். 2:39). "தூரத்திலுள்ள யாவருக்கும்" என்பது புறஜாதியாரைக் குறித்தது. இது எல்லா மக்களுக்குமான தேவனுடைய திட்டமாய் இருந்தது. அடுத்ததாக, நாம் "இன்னும் அநேக வார்த்தைகளாலும் ... மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்" (அப். 2:40) என்று வாசிக்கின் றோம்.

வசனம் 41ல், "அவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்" என்றும், பிறகு நமக்கு, "அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" என்றும் கூறப்படுகின்றது. ஞானஸ்நானம் பெற்று, இவ்விதமாய்ச் "சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்" அவர்களின் பாவங்களில் இருந்து இரட்சிக்கப் பட்டார்கள். வசனம் 47ல், "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" என்று கூறப்படுகின்றது. இது NASBயில் "the Lord was adding to their number day by day those who were being saved" என்றுள்ளது. ("கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் அந்த எண்ணிக்கையோடு சேர்த்துக் கொண்டு வந்தார்.") இதில் "their number" என்ற சொற்றொடரானது இரட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை - வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் இரட்சிக்கப் படுகிறவர்கள் இணைந்த சரீரமாகிய சபையைக்- குறிப்பிடுகின்றது (எபே. 5:23, 25).

கர்த்தர் "இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையோடு சேர்த்துக் கொண்டு வந்தார்" என்ற சொற்றொடரைச் சற்று நினைத்துப் பாருங்கள். மனிதர்கள், "சபையில் சேர்வது" பற்றிப் பேசுகின்றார்கள். மனிதனால் உண்டாக்கப்பட்ட சபையில் வேண்டுமானால் நீங்கள் சேரலாம், ஆனால் கர்த்தருடைய சபையில் நீங்களாகச் சேர முடியாது. "சேருதல்" மற்றும் "சேர்த்துக் கொள்ளப்படுதல்" ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு மிகவும் முக்கியமானதாகும்; ஒரு நபர் ஒரு நிறுவனத்தில் சேரும்பொழுது, அது அவர் செய்யும் ஒரு செயல் ஆகின்றது. ஒரு நபர் ஒரு நிறுவனத்தில் சேர்க்கப்படும் பொழுது, அது அவருக்குச் செய்யப்படும் ஒரு செயல் ஆகின்றது. யார் ஒருவரும் இரட்சிப்பைச் சம்பாதித்துக் கொள்ள முடியாது என்பதால், இரட்சிக்கப்பட்டவர்களுடைய சபையாகிய சரீரத்தில் தாமாகவே ஒருவர் சேர்ந்து கொள்ள முடியாது. மாறாக, கர்த்தருடைய சபையின் உறுப்பினர்கள் கர்த்தரின் கிருபை மற்றும் இரக்கத்தினால், கர்த்தரால் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட முடியும்!

நாமகரணக் கூட்டங்கள் பலவற்றில், இரட்சிக்கப்படுதல் என்பதும், சபையின் உறுப்பினராகுதல் என்பதும் இரண்டு தனிப்பட்ட செயல்பாடுகள் என்பதாகக் கருதப்படுகின்றது. கர்த்தருடைய சபையைப் பொறுத்தமட்டில் இது உண்மையல்ல. ஒரு மனிதரை இரட்சிப்பது

*எதுவோ, அதுவே அவரை கர்த்தருடைய சபையின் உறுப்பினராகவும் ஆக்குகின்றது; அவரை சபையின் உறுப்பினராக்குவது எதுவோ, அதுவே அவரை இரட்சிக்கின்றது. இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொருவரையும் கர்த்தர் தமது சபையில் சேர்க்கின்றார்.*

*இப்பொழுது ஆலோசித்துக் கொண்டிருக்கும் ("ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும்?" என்ற) கேள்விக்குத் திரும்புவதற்கு, அப். 2:38, 41 மற்றும் 47 வசனங்களை மறு ஆய்வு செய்யச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இரட்சிக்கப்பட விரும்புகின்றவர், குறிப்பிட்ட சில அறைகூவல்களை எதிர் கொள்ளுகின்றார்: கடந்த காலத்தின் அறைகூவல் உள்ளது: கடந்த காலப் பாவங்களின் குற்ற உணர்வில் இருந்து விடுதலையை அவர் எப்படி காண முடியும்? நிகழ் காலத்தின் அறைகூவல் உள்ளது: ஒவ்வொரு நாளும் வாழ்வதற்கான பெலத்தை அவர் எங்கு காண முடியும்? எதிர்காலத்தின் அறைகூவல் உள்ளது: மரண பரியந்தம் உண்மையாய் வாழ்வதற்கான ஆதரவை அவர் எங்கு காண முடியும்? இந்த அறைகூவல்களைச் சந்திக்கத் தேவையான ஆதார மூலங்களைத் தேவன் ஞானஸ்நானத்தின்போது தருகின்றார்:*

- *கடந்த காலத்தின் அறைகூவல்: ஞானஸ்நானம் பெறுகின்றவர், "[அவரது] பாவங்களுக்கு மன்னிப்பு" பெறுகின்றார். குற்றச் சுமையானது நீக்கப்படுதல் என்பது எவ்வளவு அற்புதமானதாயிருக்கின்றது!*
- *நிகழ் காலத்தின் அறைகூவல்: அவர் ஒவ்வொரு நாளும் வாழ்வதற்கு உதவி செய்வதற்காகத் தேவனுடைய ஆவியானவரைப் பெறுகின்றார். ஞானஸ்நானம் பெறுகின்றபோது, ஒவ்வொருவரும் (ஞானஸ்நானம் பெறும் ஒவ்வொருவரும்) பரிசுத்த ஆவியானவரை வரமாகப் பெறுகின்றார்கள். இந்த வரமானது, ஞானஸ்நானம் பெற்ற ஒருவரை அற்புதங்கள் செய்பவராக்குவதில்லை, ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான பலம் தருகின்றது (ரோமர் 8, விசேஷமாக வசனங்கள் 13 மற்றும் 26 ஆகியவற்றைக் காணவும்).[10]*
- *எதிர் காலத்தின் அறைகூவல்: அவர் கர்த்தருடைய "ஆதரவுக் குழுவான" சபையின் அங்கமாகின்றார். ஞானஸ்நானம் பெற்ற எவரொருவரும், தங்களுக்குரியவரல்ல. அவரை நேசிக்கவும், உதவி செய்யவும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களையும், சகோதரி களையும் பெறுகின்றார்.*

*இந்த ஆசீர்வாதங்களில் ஏதேனும் ஒன்று கூட ஞானஸ்நானத்தை விரும்புவதற்குப் போதுமானதாக இருக்கக் கூடும், ஆனால் கர்த்தர் இம்மூன்றையும் தருகின்றார்!*

# முடிவுரை

*"ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும்?" என்ற கேள்விக்கான நமது படிப்பை நாம் அடுத்த பாடத்தில் முடித்துக் கொண்டு, "எப்படி?" மற்றும் "யார்?" என்பவைகளைப் பற்றி கலந்துரையாடுவோம். இப்பொழுது, வேதவசனத்தின்படியாக ஞானஸ்நானம் பெறுபவர்கள்மேல் தேவன் பொழிந்தருளுகின்ற ஆசீர்வாதங்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். இந்த ஆசீர்வாதங்களை நீங்கள் பெற விரும்புகின்றீர்களா?*

---

*குறிப்புகள்*

*[1]கிரேக்க வார்த்தையின் வலிமையிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வாறு செய்யப் பட்டிருக்கலாம்: இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "முழுக்காட்டுதல்" என்பதாகும், ஆனால் அதை மொழிபெயர்த்தவர்கள் தெளித்தலை நடைமுறைப் படுத்திக் கொண்டிருந்தார்கள். [2]நமது படிப்புகளில் நான் ஒரு சில எளிய கிரேக்க வார்த்தைகளை உங்களுக்குக் கொடுப்பேன். இது அதிக உபத்திரவமாய் இருக்காதென்று நான் நம்புகின்றேன். [3]இது,* "bap-tid-zo" *என்று உச்சரிக்கப்படுகின்றது. [4]*"Teach all nations" *என்றுள்ளது. "சீஷன்" என்ற வார்த்தை, "கற்றுக் கொள்பவன்" என்று அர்த்தமாகின்றது. ஒரு மனிதருக்குப் போதிப்பதினால் அவரை நீங்கள் சீஷராக்குகின்றீர்கள். [5]தற்போதய* NASB*யில் உள்ளவாறு நான் கொடுத்துள்ளதற்கு ஏறக்குறைய ஒப்பான வகையிலேயே மாற்கு 16:15, 16ஐப் பல மொழிபெயர்ப்புகள் கொடுத்துள்ளன. ஆயினும், சில மொழிபெயர்ப்புகளில் இவ்வசனப்பகுதியானது அடைப்புக் குறிகளுக்குள் தரப்பட்டுள்ளது, ஒன்றிரண்டு மொழிபெயர்ப்புகளில் இவ்வசனப் பகுதியானது பக்கக் குறிப்பாகக் கூடத் தரப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் மாற்கு 16ன் சரியான முடிவைப் பற்றிய சில முரண்பாடுகளேயாகும். எப்படியிருந்தாலும், மாற்கு 16:15, 16ல் உள்ளவற்றை இயேசு கூறினார் என்பதைப் பல கல்வியாளர்கள் ஒப்புக் கொள்கின்றார்கள். [6]இதைப் போதிக்கின்ற பலர், குழந்தைகளை உண்மையில் ஞானஸ்நானப் படுத்துவதில்லை. அவர்கள், குழந்தைகளை முழுக்காட்டுவதற்குப் பதிலாக அக்குழந்தைகளின் மேல் தண்ணீரை ஊற்றி அல்லது தெளித்து விடுகின்றார்கள், ஆனால் அந்தச் சடங்கை அவர்கள் "ஞானஸ்நானம்" என்கின்றார்கள். [7]இது அதிர்ச்சி தரும் சிந்தனையாகையால், ஞானஸ்நானம் பெறாத குழந்தைகள் போகும் இடம் ஒன்றை அவர்களே கண்டு பிடித்துக் கொண்டார்கள், அது நரகத்தைப் போல அவ்வளவு மோசமான இடம் அல்ல என்றார்கள். வேதவசனங்களுக்கு முற்றிலும் புறம்பான இந்த இடம் அவர்களால் "இருட்டுஸ்தலம்"* ("Limbo") *என்று அழைக்கப்படுகின்றது. [8]"திடப்படுத்தல்" என்பது வேதவசனத்தின்படியல்லாத இன்னொரு சடங்கு ஆகும். வேதவசனத்தின்படியல்லாத உபதேசங்களும் நடைமுறைகளும் பெருகுவதாய்க் காணப்படுகின்றது. [9]சில வேளைகளில் "பாவிகளின் ஜெபம்" என்று அவர்கள் அழைக்கும் ஜெபத்தைத் திரும்பக் கூறும்படி மக்கள் கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள். இப்படிப்பட்ட ஜெபமோ அல்லது கருத்தோ வேதாகமத்தில் காணப்படுவதில்லை. [10]பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கின்றார் என்பதும், தேவன் நமக்கு உதவி செய்கின்றார் என்பதும் ஒன்றுதான்.*

5

# “எழுந்து, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்” [2]

*பல வருடங்களுக்கு முன்பு, பால் கறப்பதற்கு முக்காலிகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன (நமது நாட்டில் இன்றும் கூட இவை உபயோகிக்கப்படுகின்றன). உங்கள் மனதில் இந்த முக்காலி ஒன்றைச் சித்தரித்துக் கொள்ளுங்கள். பிறகு, அதன் கால்களில் ஒன்று அகற்றப்படுவதாகக் கற்பனை செய்து பாருங்கள். என்ன நடக்கும்? (எனது மனக்கண்களில் நான், பழுதான அந்த முக்காலியைப் பயன்படுத்திப் பசுவிலிருந்து பால் கறக்க முயற்சி செய்யும் ஒரு மனிதர் கடைசியில் தடுமாறித் தரையில் விழுந்து, தமது பால் வாளியைப் பறக்க விடுவதைக் காண்கின்றேன்!) முக்காலி ஒன்று இரு கால்களுடன் நிலைநிற்காது என்பது தெளிவாகும்.*

*வசனரீதியான ஞானஸ்நானத்தில் மூன்று கூறுகள் ஈடு படுத்தப்படுகின்றன: அது சரியான வழிமுறையில் செய்யப்பட வேண்டும் (“எப்படி” ஞானஸ்நானப்படுத்துதல் என்பது); அது சரியான காரணத்திற்காகச் செய்யப்பட வேண்டும் (“ஏன்?”); மற்றும் அது சரியான நபருக்குச் செய்விக்கப்பட வேண்டும் (“யார்?”). இந்தக் கூறு ஒவ்வொன்றும் முக்காலியின் ஒவ்வொரு கால் போன்றதாகும்: ஒவ்வொன்றும் தேவைப்படுகின்றது; ஒவ்வொன்றும் அவசியமானதாயிருக்கின்றது.*

*முந்திய பாடத்தில் நாம், “ஏன்” ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை கலந்துரையாட தொடங்கினோம். இந்தப் பாடத்தில் நாம் அந்த விவாதத்தை நிறைவு செய்து, “எப்படி?” மற்றும் “யார்?” என்ற கேள்விகளைப் பற்றியும் ஆராய்வோம்.*

## ஞானஸ்நானம்: “ஏன்?”

*முந்திய பாடத்தைப் படித்துச் சற்று நேரம் ஆகியிருப்பதால், ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் பற்றி மாற்கு 16 மற்றும் அப். 2 ஆகியவைகள் கூறுவதென்ன என்று நீங்கள் மறு ஆய்வு செய்ய விரும்பக் கூடும்.*

*“ஏன் ஞானஸ்நானப்படுத்த வேண்டும்?” என்ற கேள்விக்குப் பதில் தரும் மற்ற சில வசனப்பகுதிகளும் இருக்கின்றன. அவற்றில் பல வசனங்களைக் கீழே நான் வரிசைப் படுத்தப் போகின்றேன். அவைகள் ஒவ்வொன்றையும் நிச்சயமாகவே உங்கள் சொந்த வேதாகமத்தில் நீங்கள் வாசித்து, அவை ஒவ்வொன்றின் சந்தர்ப்பப் பொருளையும் பற்றிக்*

கவனம் செலுத்துங்கள்:

*அப். 22:16:* பிரசங்கியார் சவுலிடம், "இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறினார். தண்ணீரானது பாவங்களைக் கழுவுவதில்லை; ஞானஸ்நானம் பெறும் இடத்தில் உள்ள தண்ணீரில் எவ்விதமான மந்திரவாதமோ அல்லது பரிசுத்தமோ இருப்பதில்லை. இயேசுவின் இரத்தம்தான் நமது பாவங்களைக் கழுவுகின்றது (மத். 26:28; வெளி. 1:6). அப். 22ஆம் அதிகாரமானது, ஞானஸ்நானத்தின்பொழுது இயேசுவின் இரத்தம் இதைச் செய்வதாக நமக்குக் கூறுகின்றது.

*கலாத்தியர் 3:26, 27:* கலாத்தியர்களுக்குப் பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" என்று கூறினார் (வ. 26). எப்பொழுது அவர்கள் "விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரரானார்கள்?" பவுல் தொடர்ந்து, "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக[1] ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (வ. 27) என்று கூறினார். நீங்கள் தேவனுடைய புத்திரராக வேண்டுமென்றால், நீங்கள் விசுவாசித்து, ஞானஸ்நான பெற வேண்டியது தேவையாகும். நீங்கள் கிறிஸ்துவின் அங்கமாக வேண்டுமென்றால், நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டியது தேவையாகும். நீங்கள் கிறிஸ்துவை அணிந்து கொள்ள விரும்பினால், நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியது தேவையாகும்.

*1 பேதுரு 3:21:* நோவாவும் மற்ற ஏழு பேரும் பேழைக்குள்ளாகக் காக்கப்பட்டதைப் பற்றி விளக்கிக் கூறிய பிறகு பேதுரு, "அதற்கு ஒப்பனையாக ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" என்று எழுதினார். குளிப்பதோ அல்லது உடலைச் சுத்தம் செய்வதோ ஞானஸ்நானத்தின் நோக்கம் அல்ல.[2] மாறாக, ஞானஸ்நானம் என்பது தேவனுக்கென்று இருதயத்திலிருந்து உண்டாகும் ஒரு பதில்செயலாக இருக்க வேண்டும்: தேவன், "எழுந்து, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்!" என்று கூறுகின்றார். எனது இருதயம் "சரி!" என்று கூறுகின்றது. முந்திய பாடத்தில் குறிப்பிட்டபடி, ஞானஸ்நானம் என்பது, இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் எனக்குள்ள விசுவாசத்தை விளக்கப்படுத்துகின்றது.

"ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கிறது" என்ற வார்த்தைகள் மிகவும் உறுதியானவைகளாயிருக்கின்றது. இப்பொழுது நீங்கள், ஞானஸ்நானம் என்ற செயலில் மட்டுமே தனிச் சிறப்பான விஷயம் உள்ளது என்று இது அர்த்தப்படுத்துவதில்லை என்பதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாது; தேவனுடைய கிருபையினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும். ஆயினும், தேவன் கூறியபடி செய்த மக்கள் பேழைக்குள் இரட்சிக்கப்பட்டது

போலவே, இன்றைய நாட்களில் தேவன் கட்டளையிடுவதைச் செய்கின்றபொழுது - அதாவது ஞானஸ்நானம் பெறும்பொழுது - மக்கள் அவர்களின் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுகின்றார்கள் என்பதை இவ்வசனப்பகுதி அறிவிக்கின்றது. ‘‘ஞானஸ்நானம் இரட்சிக்கின்றது’’ என்பது, நமது இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் அவர் ஞானஸ்நானத்தை உள்ளடக்கியிருக்கிறார் என்ற பொருளில் கூறப்படுகின்றது.

இன்னும் மற்ற வசனங்களும் நமது பட்டியலில் சேர்க்கப் பட முடியும், அவைகளில் சிலவற்றில் ஞானஸ்நானம் என்ற வார்த்தை குறிப்பிடப்படாமல் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 3:3, 5; தீத்து 3:5). ஆயினும், உங்கள் மனதில் உள்ள ‘‘ஏன்?’’ என்ற கேள்விக்கு இங்கு குறிப்பிடப்பட்ட வசனப் பகுதிகள் போதுமானவைகளாய் இருக்கின்றன என்று நான் நம்புகின்றேன்.

## ஞானஸ்நானம்: “எப்படி?”

இப்பொழுது நாம், ‘‘ஒருவர் எப்படி ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும்?’’ என்ற கேள்விக்குத் திரும்புவோம். முந்திய பாடத்தில், “baptism” என்பது “immersion” (முழுக் காட்டுதல்) என்று கிரேக்க அகராதிகள் விளக்குவதாக நாம் குறிப்பிட்டோம். ஆயினும், ஞானஸ்நானம் என்ற செயல்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு கிரேக்க மொழியை அறிவது அல்லது கிரேக்க அகராதியை வைத்திருப்பது என்பது அவசியமானதாகும் என்ற கருத்தை உங்களிடம் ஏற்படுத்திவிட நான் விரும்பவில்லை. ஞானஸ்நானம் என்ற செயல்பாடு வேத வசனங்களில் தெளிவாக இருக்கின்றது.

### யோவானின் ஞானஸ்நானம் (யோவான் 3; மத்தேயு 3)

யோவான் 3:23ல், “சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால்”, யோவான் ஸ்நானன் அங்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்ததாகக் கூறப்படுகின்றது. தலையில் ஊற்றுதல் அல்லது தெளித்தலுக்கு சிறிதளவு தண்ணீரே போதுமானது, ஆனால் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்கு “மிகுதியான தண்ணீர்” தேவைப்பட்டது.

யோவான் கொடுத்த ஞானஸ்நானமானது தண்ணீருக்குள் முழுக்காட்டுதலாயிருந்ததால், “மிகுதியான தண்ணீர்’’ தேவைப்பட்டது. யோவான், இயேசுவை ஞானஸ்நானப்படுத்திய பிறகு கர்த்தர், ‘‘ஜலத்திலிருந்து கரையேறின உடனே’’ (மத். 3:16). தண்ணீருக்குள் செல்லுதல் (மறைமுகமாயுள்ளது) மற்றும் தண்ணீரில் இருந்து கரையேறுதல் (வெளிப்படையாய்க் கூறப்பட்டுள்ளது) என்ற செயல்கள், ஞானஸ்நானமானது முழுக்காட்டப்படுதல் என்ற செயல் ஆகும் என்ற கருத்துக்கு ஏற்புடையதாகவும், தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்ற செயல்களாகும் என்ற கருத்துக்கு ஏற்பில்லாததாகவும் இருக்கின்றது.

## உயர்க்குடி மனிதர் ஒருவரின் ஞானஸ்நானம் (அப். 8)

*எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றமானது நமது மூன்றாவது பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மந்திரி இயேசுவில் கொண்டிருந்த விசுவாசத்தை அறிக்கையிட்டார் என்று நாம் கண்டோம். அடுத்ததாக,*

> *... இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப். 8:38, 39).*

*என்று வாசிக்கின்றோம். பிலிப்புவும், எத்தியோப்பிய மந்திரியும் ''தண்ணீருக்குள் இறங்கினார்கள்'' மற்றும் ''தண்ணீரிலிருந்து கரையேறினார்கள்'' என்பதைக் கவனியுங்கள். இன்றைய நாட்களில் தண்ணீருக்கு வெளியே இருந்து கொண்டு தெளிப்பவர்கள், பிலிப்புவும் கூட அந்த மந்திரிக்குத் தெளித்திருப்பார் என்று கருதி (வசனத்திற்குப் புறம்பாக) பிலிப்புவைத் தண்ணீருக்கு வெளியிலேயே நிறுத்தி விடுவார்கள். மறுபடியும், இச்செயல்பாடானது, முழுக்காட்டுதலுக்கு ஏற்புடையதாகவும், தெளித்தல் அல்லது ஊற்றுதலுக்கு ஏற்பில்லாததாகவும் உள்ளது.*

## ஞானஸ்நானம் - அடக்கம் பண்ணுதல் (ரோமர் 6; கொலோசெயர் 3)

*பவுலின் எழுத்துக்களில் அவர் ஞானஸ்நானத்தை, ''அடக்கம் பண்ணுதல்'' என்ற இயல்புக்கு உட்படுத்தினார். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4) என்று எழுதினார். கொலோசே பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்கள், "ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும்" (கொலோ. 2:12) இருந்ததாக அவர் கூறினார். மரித்தவர்களை அடக்கம் செய்கின்ற காட்சியில், புதைத்தலை நீங்கள் கண்டிருப்பீர்கள். ''அடக்கம் என்ற கருத்தைச் சித்தரிப்பது எது: தெளித்தலா, ஊற்றுதலா அல்லது முழுக்காட்டுதலா?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.*

*புதிய ஏற்பாடு முழுவதையும் ஆராய்ந்து பாருங்கள்: எவரொருவரும்*

*தமது தலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டோ அல்லது ஊற்றப்பட்டோ "ஞானஸ்நானப்படுத்தப்பட்டனர்" என்று ஒரு எடுத்துக்காட்டுகூட நீங்கள் காண மாட்டீர்கள்.*

*வரலாற்றாளர்கள் பலர், முதல் நூற்றாண்டு சபையில் முழுக்காட்டுதல் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டது என்று ஒப்புக் கொள்ளுகின்றார்கள். பல வருடங்கள் வரையிலும் (ஞானஸ்நானத்திற்கு) தெளித்தல் என்பது அறிமுகப் படுத்தப்படாதிருந்தது.[3] ஒருமுறை இயேசு, "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள்" (மாற். 11:30) என்று கேட்டார். யோவான் கொடுத்த ஞானஸ்நானமானது தேவனாலே உண்டானதாயிருந்தது. தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்ற நடைமுறையைக் குறித்து நாம் இதே கேள்வியைக் கேட்டால், "மனிதரால் உண்டாயிற்று" என்பதே அதற்குப் பதிலாயிருக்கும்.*

## ***ஞானஸ்நானம்: "யார்?"***

*ஞானஸ்நானத்தைக் குறித்த மூன்றாவது கேள்வி, "யார் ஞானஸ்நானம் பெற வேண்டும்?" என்பதாகும். சில மார்க்கக் குழுக்களில் குழந்தைகளுக்கு "ஞானஸ்நானம்" கொடுக்கின்றார்கள், ஆனால் குழந்தைகள் சுத்தமாகவும், பரிசுத்தமாகவும் பிறப்பதால் அவைகளுக்கு ஞானஸ்நானம் தரத் தேவையில்லை என்று முந்திய பாடம் ஒன்றில் நாம் தீர்மானித்தோம். பிறகு, யாருக்கு ஞானஸ்நானம் தர வேண்டும்? இக்கேள்விக்கு நாம், "பொறுப்புள்ள தனிநபர் ஒவ்வொருவருக்கும்" என்று பதில் கூற முடியும். "ஒவ்வொருவரும் ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38) (''ஒவ்வொருவரும்'' என்பது இவ்விடத்தில் என்னால் வலியுறுத்தப் படுகின்றது). என்று பேதுரு கட்டளையிட்டார், ஆனால் சில யோக்யா தம்சங்கள் தேவையாயிருக்கின்றது. ஞானஸ்நானம் என்பது மதச் சடங்கோ அல்லது சடங்காச்சாரமோ அல்ல. அது தங்கள் இருதயங்களையும், வாழ்க்கையையும் தயார் செய்து கொண்டவர்களுக்கானதாகும். இவ்விதமாக பேதுரு தமது உரையைக் கேட்டவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு மனந்திரும்புவது தேவை என்று கூறினார் (அப். 2:38).*

*நாம் ஏற்கனவே படித்துள்ள வசனப்பகுதிகள், யார் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற கேள்விக்குப் பதில் தருகின்றன. இவ்வசனப் பகுதிகளை மறுபடியும் வாசிக்க நீங்கள் விரும்புவீர்கள். யார் ஞானஸ்நானம் பெற வேண்டும்?*

- *போதிக்கப்பட்டுள்ளவர் (மத். 28:18, 19; மாற். 16:15, 16).*
- *இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளவர் (மாற். 16:15, 16).*
- *தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பியுள்ளவர் (அப். 2:36-38).*
- *இயேசுவில் கொண்ட விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளவர் (அப். 8:36-39; ரோமர் 10:9, 10).*

குழந்தைகள் இந்த விதிகளுக்கு பொருத்தமானவர்கள் அல்ல.

எப்பொழுது ஒருவர் ஞானஸ்நானம்பெறப் போதுமான வயதுடையவராகிறார்? எப்பொழுது ஒருவர் ஞானஸ்நானம் பெறுவது தேவை? வேதாகமத்தில் இதற்கென்று சரியான வயதாக எதுவும் குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் ஞானஸ்நானம் பெறுபவர் பின்வருபவற்றைப் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு வயதுள்ளவராய் இருக்க வேண்டும்:


- தாம் ஒரு பாவியென்றும், இரட்சிப்பு தமக்குத் தேவையென்றும் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.[4]
- தம்மை இரட்சிப்பதற்காகவே இயேசு மரித்தார் என்று புரிந்து கொண்டிருக்க வேண்டும்.
- ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதென்பது தமது இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பாகம் ஆகும் என்று புரிந்து கொண்டிருக்க வேண்டும்.
- கர்த்தருக்காகத் தாம் தமது வாழ்வைச் சொந்தமான முறையில் ஒப்புக் கொடுக்கிறதைப் புரிந்து கொண்டு இருக்க வேண்டும்.

## ஞானஸ்நானம்:
## "யார்?"; "எப்படி?"; மற்றும் "ஏன்?"

ஞானஸ்நானம் என்பது "யாரை?", "எப்படி?" மற்றும் "ஏன்?" என்று விளக்கப்படுத்தும் ஒரு வேதவசனப் பகுதி ரோமர் 6:3-6 ஆகும்:

> ... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.

இவ்வசனங்களில் உள்ள, ஞானஸ்நானம் பற்றிய போதனையானது பின்வருமாறு வரைபடத்தினால் விளக்கப்பட முடியும்:




*இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் ஞானஸ்நானத்திற்குள்ள உறவைக் கவனியுங்கள்.*[5]

*இயேசு சிலுவையில் மரித்தார் (லூக். 23:33-46; பிலி. 2:8). ஆவிக்குரிய வகையில் பாவத்தில் மரித்துள்ளவர்கள் (எபே. 2:1, 5) விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றின் மூலம் பாவத்திற்கு மரிக்க முடியும் (ரோமர் 6:11).*

*இயேசு ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார் (யோவா. 19:40-42; 1 கொரி. 15:4). அது போலவே கீழ்ப்படிதலுள்ள விசுவாசி ஞானஸ்நானத்தின் தண்ணீர்க் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றார்.*

*இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுப்பப்பட்டார் (மத். 28:1-8; ரோமர் 1:5). அதே போன்ற வழிமுறையில், கிறிஸ்தவர் ''புதிய ஜீவனுள்ளவராய்'' நடந்து கொள்ளும்படி தண்ணீரில் இருந்து எழுப்பப்படுகின்றார்.*

*ஒரு நாமகரணக் கூட்டத்தின் ஞானஸ்நானத்திலும் அல்லது மற்றதிலும் உள்ள தவறு என்ன என்று மக்கள் சில நேரங்களில் கேட்கின்றார்கள். நாமகரணக் கூட்டத்தார் "ஞானஸ்நானம்" என்று கூறுவதான செயல், நாம் படித்துள்ள (ஞானஸ்நானம் பற்றிய) பண்புகளில் ஒன்று அல்லது இரண்டில் அல்லது அதற்கும் அதிகமானவற்றில் குறைவு படுவதாய் உள்ளது. இந்த ''ஞானஸ்நானங்கள்'' கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் உள்ள உறவைத் துண்டித்து அழிக்கின்றன என்பது இன்னும் பரிதாபமானதாகும்:*

- *சிலர் குழந்தைகளை ஞானஸ்நானப் படுத்துகின்றார்கள் - ஆனால் குழந்தையானது பாவத்தில் மரித்திருப்பதில்லை.*
- *சிலர் தண்ணீரைத் தெளித்து, அதை ''ஞானஸ்நானம்'' என்று அழைக்கின்றார்கள் - ஆனால் தெளித்தல் என்பது அடக்கம் பண்ணுதல் ஆகாது.*
- *சிலர் முழுக்காட்டுகின்றார்கள், ஆனால் முழுக்காட்டப்*

*படுபவர் ஞானஸ்நானத்திற்கு முன்பே இயேசுவுக்குள் புதிய ஜீவனுள்ளவராயிருந்தார் ஞானஸ்நானத்திற்குப் பிறகல்ல என்று வலியுறுத்துகின்றார்கள். இவ்விதமாக புதிய ஜீவனுள்ளவர்களாய் எழுப்பப்படுதல் என்ற கற்பிதமானது அழிக்கப்படுகின்றது. (இவர்களின் உபதேசத்தின்படி இவர்கள் மரித்தவர்களையல்ல, "ஜீவனுள்ள" மக்களையே அடக்கம் செய்கின்றார்கள்.)*

*ஒரு நபர், தாம் பெற்றிருந்த ஞானஸ்நானமானது புதிய ஏற்பாட்டின் காலத்தில் நடைபெற்ற ஞானஸ்நானத்திலிருந்து மாறுபட்டது என்று கண்டறிந்தால் அவர் என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்விக்கு ஒரு பதில் (அப். 19ல்) தரப்படுகின்றது. பவுல் எபேசு பட்டணத்திற்கு வந்தபோது, அங்கு அவர் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த பன்னிரெண்டு மனிதர்களைக் கண்டார். அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களாயிருந்தார்கள் என்று அவர் விரைவிலேயே கண்டறிந்தார். யோவானின் ஞானஸ்நானமானது அது தரப்பட்ட காலத்திற்கு ஏற்புடையதாயிருந்த ஒரு ஆயத்த ஞானஸ்நானமேயாகும், ஆனால் அதற்குப் பதிலாக இயேசுவின் ஞானஸ்நானம் இடம் பெற்று விட்டது.[6] யோவானின் ஞானஸ்நானம் செல்லத் தகாததான பிறகு அந்தப் பன்னிரெண்டு பேர் அதைப் பெற்றிருந்தார்கள்.[7] அவர்கள் பெற்றிருந்த ஞானஸ்நானத்தைப் பொறுத்தமட்டில், "எப்படி?" மற்றும் "யார்?" என்பவை சரியாகவே இருந்தன, ஆனால் "ஏன்?" என்பது சரியானதாயில்லை.[8] பவுல் அவர்களுக்கு மேலும் போதித்த பிறகு, "அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 19:5).*

## முடிவுரை

*இப்பொழுது, நீங்கள் உங்களின் ஞானஸ்நானத்தை புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பக் கூடும். இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் நீங்கள் நிரப்பின வினாத்தாளை நினைவு இருக்கிறதா? அதில் உங்களின் பதில்களைப் பாருங்கள். உங்கள்மீது தண்ணீர் தெளிக்கப்பட்டதா அல்லது நீங்கள் முழுக்காட்டப் பட்டீர்களா? நீங்கள் "ஞானஸ்நானப்படுத்தப்பட்டபோது" ("பெயர் சூட்டப்பட்டபோது") நீங்கள் ஒரு சிறு குழந்தையாக இருந்தீர்களா? உங்களுக்குச் செய்யப்பட்டது என்ன என்பதை அறிய முடியாத அளவு சிறு குழந்தையாக இருந்தீர்களா? நீங்கள் சொந்தமாக ஒரு உறுதிப்பாடு எடுக்கக் கூடிய அளவு வயதுள்ளவராயிருந்திருந்தால், மற்றும் முழுக்காட்டப் பட்டிருந்தால் ஞானஸ்நானம் என்பது அவசியமற்ற சடங்கு என்று போதிக்கப்பட்டிருக்க வாய்ப்புப் பெற்றிருந்தீர்களா? எடுத்துக்காட்டாக, ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று உங்களுக்குப் போதிக்கப்பட்டிருந்ததா?*

*உங்களைச் சங்கடப் படுத்துவதற்காகவோ அல்லது நீங்கள் மோசமாக*

உணர வேண்டும் என்பதற்காகவோ நான் இந்தக் கேள்விகளைக் கேட்கவில்லை. மாறாக, நித்தியத்திற்கென்று இரட்சிக்கப்படுதலைக் காட்டிலும் வேறு எதுவும் அதிக முக்கியத்துவமுடையது அல்ல என்பதாலேயே நான் இவைகளைக் கேட்கின்றேன். எவரொருவரும் தமது ஆத்தும இரட்சிப்பை விளையாட்டுக் காரியமாக்க விரும்ப மாட்டார்கள்.

புதிய ஏற்பாட்டின் மாதிரியின்படியான ஞானஸ்நானத்தை நீங்கள் பெற்றிருக்கவில்லையென்று கண்டால், அப். 19ல் உள்ள நேர்மையான சீஷர்களைப் போல் ஆகுங்கள்: முழுக்காட்டப் பெறுங்கள் (அல்லது மறுபடி முழுக்காட்டப்படுங்கள்), ஆனால் இந்த முறை அதை வேதாகமம் போதிக்கின்றபடி சரியாகச் செய்யுங்கள்.

---

குறிப்புகள்

[1]ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் யாவும் "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்றன (எபே. 1:3). அந்த ஆசீர்வாதங்கள் உள்ள இடமான "கிறிஸ்துவுக்குள்ளாவது" எப்படி என்பதைப் பின்வரும் இரண்டு வசனப்பகுதிகள் நமக்குக் கூறுகின்றன: கலாத்தியர் 3:27 மற்றும் ரோமர் 6:3 ஆகியவை ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப் படுகின்றார் என்று நமக்குக் கூறுகின்றன. [2]இதற்கு முரண்பட்ட வகையில், சில வேளைகளில் மக்களை, அழுக்கான குளத்தில் ஞானஸ்நானப்படுத்த வேண்டிய வாய்ப்பு எனக்கு நேர்ந்துள்ளது, ஏனென்றால் அது ஒன்றுதான் முழுக்காட்டுதலுக்கு அவ்விடத்தில் கிடைத்த இடமாகும். [3]கி.பி. 1600 வரையில் தெளித்தல் என்பது முழுகுதலுக்கு மாற்றானது என்பது அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தெளித்தலை அதிகாரமுடைமையாக்கிக் கொண்டது கத்தோலிக்க சபையாகும். [4]இவ்வெளியீட்டில் "கணக்கொப்புவிக்கும் வயது" என்ற குறிப்பை காணவும். [5]இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளே சுவிசேஷத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாகும் (1 கொரி. 15:1-4). [6]"இயேசுவின் ஞானஸ்நானம்" என்றால், இயேசு தமது பிரதான கட்டளையில் கட்டளையிட்ட ஞானஸ்நானம் என்பதை நான் அர்த்தப்படுத்துகின்றேன் (மத். 28:18-20; மாற். 16:15, 16). [7]அநேகமாக அவர்கள், "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய்" (அப். 18:26) ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் விவரித்துக் காட்டும் வரையிலும், "யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்த" (அப். 18:25) அப்பொல்லோவினால் போதிக்கப்பட்டு, ஞானஸ்நானப் படுத்தப்பட்டிருக்கலாம். [8]இயேசுவின் ஞானஸ்நானத்தில் இருந்ததுபோல பரிசுத்த ஆவியின் வரத்தை (அப். 2:38) யோவானின் ஞானஸ்நானம் உள்ளடக்கவில்லை என்பதால், அவர்கள் பெற்ற ஞானஸ்நானத்தின் நோக்கம் (கிறிஸ்துவின் யுகத்தில்) சரியற்றதாய் இருந்தது.

# 6
# இயேசு கட்டிய சபை

*ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுகையில், கர்த்தர் சபையில் அவரைச் சேர்த்துக் கொள்கின்றார் என்று அப். 2ல் இருந்து நாம் கற்றோம். இதே சத்தியத்தைப் போதிக்கும் இன்னொரு வேதவசனப் பகுதி 1 கொரிந்தியர் 12:13 ஆகும், இதில் "எல்லாரும் ... ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்" என்று கூறப்படுகின்றது. நாம் பார்க்கப் போகிறபடி, "சரீரம்" என்ற சொற்றொடர் சபையைக் குறிக்கின்றது.*

*சபை என்றால் மிகச் சரியாக என்னத்தைக் குறிக்கின்றது? "சபை" என்ற வார்த்தையைக் கேட்கையில், பல மக்கள், நாமகரணக் கூட்டமொன்றை நினைத்துக் கொள்ளுகின்றார்கள். இந்தப் பாடத்தைப் படிக்கையில், மனிதரால் ஏற்படுத்தப்பட்ட மத நிறுவனங்களை உங்கள் மனதில் இருந்து அகற்றிப் போடுங்கள். நாம் இயேசு கட்டிய சபையின் (மத். 16:18) மீதுதான் கவனம் செலுத்த விரும்புகின்றோம்.*

## *"சபை" என்ற வார்த்தை எதனை அர்த்தப்படுத்துகின்றது?*

*"சபை" என்ற வார்த்தை ekklesia[1] என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். Ekklesia என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையானது "அழைப்பு" (kaleo) என்பதற்கான வார்த்தையும், "வெளியே" அல்லது "வெளியில் இருந்து" (ek) என்ற அர்த்தம் தரும் முன்னிடைச் சொல்லும் இணைந்துள்ள ஒரு வார்த்தையாகும். Ekklesia என்றால் "வெளியே அழைக்கப்பட்ட[வர்கள்]" என்பதே நேரடியான அர்த்தமாகும். எந்த வகையான ஒரு மக்கள் கூட்டத்தையும் குறிப்பிடுவதற்கு இவ்வார்த்தை உலக வழக்கில் பயன்படுத்தப்பட்டது,[2] ஆனால் இயேசு இதை ஒரு விசேஷித்த வார்த்தையாக்கினார். அவர் கட்டிய சபையைக் குறிப்பிடும் பொழுது, இவ்வார்த்தையானது, உலகத்திலிருந்து "வெளியே அழைக்கப்பட்டு", இயேசுவுடன் ஒரு புதிய உறவுக்குள் அழைக்கப்பட்ட மக்களைக் குறிப்பதாயிருக்கின்றது.[3]*

*"சபை" என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் குறைந்தபட்சம் மூன்று கருத்துக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது:*

- *"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத். 16:18) என்று இயேசு கூறியபோது இவ்வார்த்தையை அவர் உலகளாவிய விதத்தில் பயன்படுத்தினார். உலகளாவிய விதத்தில் சபையைக் குறிப்பிடுகையில், ஒருமைச் சொல்தான் எப்பொழுதுமே பயன்படுத்தப் படுகின்றது, ஏனென்றால் சபை ஒன்றே ஒன்றுதான்*

உள்ளது.[4] ஞானஸ்நானம் பெறுபவர்களைக் கர்த்தர் இந்த சபையில்தான் சேர்க்கின்றார்.

- *Ekklesia* என்ற வார்த்தையானது வட்டார அர்த்தத்தில், உள்ளூர் சபையைக் குறிப்பிடவும் பயன்படுத்தப்பட முடியும். இவ்விதமாகவே நாம், ''கலாத்தியா நாட்டுச் சபைகள்'' மற்றும் ''ஆசியா நாட்டிலுள்ள சபைகள்'' (1 கொரி. 16:1, 19) என்று வாசிக்கின்றோம். ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, அவர் உலகளாவிய சபையின் உறுப்பினராகின்றார்; ஆனாலும் அவர் உள்ளூர் சபையொன்றில் உறுப்பினராகி ஊழியம் மற்றும் ஆராதனை செய்வது அவசியமாகின்றது.[5]
- சில வேளைகளில், புதிய ஏற்பாடானது மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடுவதற்கு *ekklesia* என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது - ஆராதனை செய்தல் என்ற நோக்கத்திற்காக கிறிஸ்தவர்கள் கூடி வந்தார்கள்.[6] எடுத்துக்காட்டாக, 1 கொரிந்தியர் 14:19ல் பவுல் ''சபையில்'' பேசுதல் என்பதைக் குறிப்பிடும் போது, மக்கள் கூட்டத்தில் பேசுவதையே அவர் குறிப்பிட்டார். (அந்த அதிகாரத்தின் 23ம் வசனத்தை வாசிக்கவும்; மேலும் 1 கொரிந்தியர் 11:18ஐயும் காணவும்.)

## சபை என்றால் என்ன?

மக்கள் பெரும்பாலும் கட்டிடம் ஒன்றைச் சுட்டிக்காட்டி “அதோ சபை அங்கிருக்கிறது (church)'' அல்லது ''அது எனது சபை (church)'' என்று கூறுகின்றார்கள். இதுவரை நாம் கூறியவைகளில் இருந்து, சபையானது ஒரு கட்டிடம் அல்ல என்பது தெளிவாகும்.[7] “சபை என்பது ஒருபொழுதும் இடமாக இருந்ததில்லை, ஆனால் எப்பொழுதுமே அது மக்களாகவே உள்ளது” என்று ஒருவர் கூறினார்.

நமது பாடங்களில் ''சபை'' என்ற வார்த்தையை நான் அடிக்கடி பயன்படுத்துவேன். நான் அப்படிச் செய்யும்போது, இயேசுவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டிருக்கின்றவர்களையே குறிப்பிடுகின்றேன்.

### சபை = இரட்சிக்கப்பட்டவர்கள்

சிலர், தாங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதாக நம்புகின்றார்கள், ஆயினும் தாங்கள் எந்த சபையிலும் உறுப்பினர்கள் அல்ல என்று வலியுறுத்துகின்றார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால், அவர்கள் சபையின் உறுப்பினர்களாகவே இருக்கின்றார்கள் - ஏனென்றால், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:47)[8] என்று நாம் பார்த்திருக்கின்றோம். இரட்சிக்கப்படுகின்ற எல்லாரையும் கர்த்தர் சபையில் சேர்த்துக் கொள்வதால், இரட்சிக்கப்பட்டு சபைக்குப் புறம்பே எந்த மக்களும் இருப்பதில்லை.

*இந்த சத்தியமானது புதிய ஏற்பாடு முழுவதிலும் போதிக்கப் படுகின்றது. மூப்பர்களின் குழு ஒன்றிற்குப் பவுல், ''தேவன்[9] தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு'' (அப். 20:28) என்று கூறினார். கிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரித்தார் (2 கொரி. 5:14, 15), ஆனால் அவருக்குத் தங்களை ஒப்புக் கொடுக்கின்றவர்களே அவரது மரணத்தின் பலனைப் பெறுகின்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், உண்மையிலேயே அவருடைய இரத்தத்தால் ''கிரயம் கொள்ளப்பட்டவர்கள்'' அவருடைய சபையில் இருப்பவர்கள் மட்டுமேயாவார்கள்.*

*எபேசியர் 5:23, 25, 27ல் பவுல் ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, ... அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார் ... கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்'' என்று எழுதினார். நீங்களும் நானும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், கிறிஸ்து அன்புகூருகிற ஒன்றின் அங்கமாய் நாம் இருக்க வேண்டும். கிறிஸ்து தம்மையே எதற்காகத் தியாகம் செய்தாரோ, அதன் அங்கமாக நாம் இருக்க வேண்டும். கிறிஸ்து எதை இரட்சிப்பாரோ, அதன் பாகமாக நாம் இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நாம் கர்த்தருடைய சபையின் அங்கமாக இருக்க வேண்டும்.*

## மக்கள் என்னவென்று அழைக்கப்பட்டார்கள்?

*புதிய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களைக் குறிப்பதற்கு "சபை" என்ற பெயர்தான் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது, ஆனாலும் மற்ற சில சொற்றொடர்களும் பயன்படுத்தப்பட்டன.[10] அவை ஒவ்வொன்றும் சபை பற்றிய நமது புரிந்து கொள்ளுதலை அதிகப்படுத்துகின்றது.*

### சரீரம் (உடல்)

*சபை என்றால் சில வேளைகளில் "சரீரம்" என்று அழைக்கப்படுகின்றது. எபேசியர் 1:22, 23ல் பவுல் எழுதும்போது, தேவன் "எல்லாவற்றையும் அவருடைய [அதாவது இயேசுவுடைய] பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என்று கூறினார்.*

*சபை = சரீரம்*

*கொலோசெயர் 1:18ல் கிறிஸ்துவே ''சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்'' (என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று பவுல் எழுதினார்.*

*சரீரம் = சபை*

*"சரீரம்" என்ற சொற்றொடரானது, சபையானது சில வகைகளில் மனித*

*உடலைப் போன்றதென்று நமக்குக் கூறுகின்றது. கிறிஸ்துவே சரீரத்தின் தலையாய் இருக்கின்றார் (எபே. 1:22, 23; கொலோ. 1:18), கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் உடலில் தனித்தனியே அவயவங்களாய் இருக்கின்றார்கள் (ரோமர் 12:4, 5; 1 கொரி. 12:12, 18-27). மனித உடலில் (கைகள் கால்கள், தோள்பட்டை போன்ற) பல அவயவங்கள் இருக்கின்றன, அவை ஒவ்வொன்றிற்கும் வித்தியாசப்பட்ட வேலைகள் இருக்கின்றன. அதே போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும் (சபையிலும்) அநேக உறுப்பினர்கள் இருக்கின்றார்கள், ஒவ்வொருவருக்கும் ஒரு விசேஷித்த பணி உள்ளது, ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் ஆவார்கள்.*

## இராஜ்யம்

*சபையானது "இராஜ்யம்" என்றும் அழைக்கப்படுகின்றது. இயேசு "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று கூறிய பிறகு இயேசு பேதுருவிடம், "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்"[11] (மத். 16:18, 19அ) என்று கூறினார். "சபை" மற்றும் "இராஜ்யம்" என்ற வார்த்தைகளை ஒன்றுக்குப் பதில் ஒன்றாக இயேசு பயன்படுத்தினார்.*

*சபை = இராஜ்யம்*

*கொலோசே பட்டணத்தில் இருந்த சபையாருக்கு தேவன், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினார்" என்று பவுல் கூறினார் (கொலோ. 1:13).*

*"இராஜ்யம்" என்ற சொற்றொடரானது, சபையில் இருப்பவர்கள் இயேசு அரசரின் குடிமக்களாவார்கள் என்று நமக்குக் கூறுகின்றது. இயேசு இப்பொழுது பரலோகத்தில் தமது அரியணையிலிருந்து ஆட்சி செய்கின்றார் (அப். 2:29-36), "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது, பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம்" (1 கொரி. 15:25, 26).*

## குடும்பம்

*சபையைக் குறிப்பிடுவதற்கு, தேவனுடைய "குடும்பம்" என்பது நான் மிகவும் விரும்பும் சொற்றொடர்களில் ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் ... இருக்கிறது" (1 தீமோ. 3:15)[12] என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறினார். இவ்வசனப் பகுதியில் உள்ள "வீடு" என்ற வார்த்தை "குடும்பம்" என்று அர்த்தப்படுகின்றது.[13] என் நண்பரும், கல்விமானுமாகிய* Hugo McCord *அவர்கள் இவ்வசனத்தைப் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்: "தேவனுடைய குடும்பத்திலே நீ நடக்க வேண்டிய வகையை அறியும்படிக்கு ..."[14]*

ஆவிக்குரிய இந்த குடும்பத்தில், தேவன் தகப்பனாக இருக்கின்றார் (மத். 6:9), இயேசு மூத்த சகோதரராக இருக்கின்றார் (எபி. 2:11, 12), மற்றும் கிறிஸ்தவர்கள் யாவரும் சகோதர சகோதரிகளாய் இருக்கின்றார்கள் (யாக் 2:15). எனது சரீரப் பிரகாரமான குடும்பம் எனக்கு அதிக மதிப்புடையதாகும், ஆனால் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமானது எனக்கு இன்னும் அதிக மதிப்புடையதாகும்.

''சபை'', ''சரீரம்'', ''இராஜ்யம்'' மற்றும் ''குடும்பம்'' என்ற சொற்றொடர்கள் ஒரு பொருள் பல சொற்கள் அல்ல; மாறாக அவைகள் ஒரே குழுவைச் சேர்ந்த மக்களை நான்கு மாறுபட்ட வழிகளில் கண்ணோக்கும் சொற்றொடர்களாகும். இதை நான் சற்று விளக்குகின்றேன்: நான் ஒரு தகப்பனாக, கணவனாக, மகனாக மற்றும் சகோதரனாக இருக்கின்றேன். “தகப்பன்”, “கணவன்”, “மகன்” மற்றும் “சகோதரன்” என்ற சொற்றொடர்கள் ஒரு பொருள் பல சொற்கள் அல்ல, ஆனால் அவை யாவும் என்னைக் குறிக்கின்றன. அவை நான் மகிழ்வுடன் அநுபவிக்கும் பலவகை உறவுகளைக் குறிப்பிடுகின்றன. அதுபோலவே, சபையைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நான்கு சொற்றொடர்களும் ஆவிக்குரிய பல வகையான உறவுகளைக் குறிப்பிடப் பயன் படுத்தப்படுகின்றன.

- உலகத்தோடுள்ள உறவைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவர்கள் சபையார் எனப்படுகின்றார்கள் - உலகிலிருந்து இவர்கள் இயேசுவுக்குள் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.
- ஒருவர் மற்றவருடனான உறவைப் பொறுத்தமட்டில், சபை என்பது ஒரு உடலாக இருக்கின்றது: உறுப்பினர்கள் ஒன்றாக, ஒருவர்மேல் ஒருவர் அக்கறையுடன் செயல்பட வேண்டும்.
- இயேசுவுடனான உறவைப் பொறுத்தமட்டில், சபையின் உறுப்பினர்கள் அவரது இராஜ்யத்தில் இருக்கின்றார்கள் - இவர்கள் தங்கள் இருதயங்களையும், வாழ்வையும் அவருக்கென்றே அர்ப்பணித்திருக்கின்றார்கள்.
- தேவனுடைய உறவைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவர்கள் அவரது குடும்பத்தாராக, அவரது அன்புக் குழந்தைகளாக இருக்கின்றார்கள்.

## முடிவுரை

நாம் படித்தவற்றில் இருந்து, கர்த்தருடைய சபையில் அங்கமாயிருப்பதென்பது முக்கியமானதாகும் என்பது தெளிவாக வேண்டும். நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், கர்த்தருடைய சபையில் ஒரு உறுப்பினராய் இருக்க வேண்டியது

*அவசியமானதாகும். எனவே, ‘‘நீங்கள் அவருடைய சபையில் ஒரு உறுப்பினராய் இருக்கின்றீர்களா?’’ என்பது மிக முக்கியமான கேள்வியாகும்.*

---

*குறிப்புகள்*

[1]“Ecclesiastical” *போன்ற வார்த்தைகளில் கிரேக்க மொழியானது பிரதிபலிக்கப் படுகின்றது.* [2]*இது இக்கருத்தில், அப். 19:30, 32, 33, 39, 41 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது.* [3]*நாம் சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டிருக்கின்றோம் (2 தெச. 2:14) மற்றும் நாம் அந்த அழைப்பிற்கு விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றால் பதில்செயல் செய்ய வேண்டும்.* [4]*எபேசியர் 4:4ல் “ஒரே சரீரம்” உண்டு என்று கூறப்படுகின்றது; இப்பாடத்தின் பிற்பகுதியில் நாம் படிக்கப் போகின்றபடி, அந்த சரீரம் சபையாகவே இருக்கின்றது (எபே. 1:22, 23).* [5]*புதிய ஏற்பாட்டில் உள்ள நிருபங்கள் சபை முழுவதற்குமானவைகளென்றாலும், அவைகள் எப்பொழுதுமே உள்ளூர் சபைகளுக்கென்றே எழுதப்பட்டன. உலகளாவிய சபையின் நடைமுறை வெளிப்பாடாகவே உள்ளூர் சபைகள் விளங்குகின்றன.* [6]*“சபைக்குச் செல்லுதல்” என்றால் தேவனை ஆராதிப்பதற்காகப் பரிசுத்தவான்கள் கூடும் கூட்டத்திற்குச் செல்லுதல் என்பது மட்டுமே வேதரீதியாகப் பயன்படுத்தக் கூடிய ஒரே அர்த்தமாகும்.* [7]*சபையானது தனது ஊழியத்தை நிறைவேற்றுவதில் அதற்கு ஒரு கட்டிடம் உதவியாக இருக்கலாம், ஆனால் அந்தக் கட்டிடமே சபையாகி விடாது.* [8]*அப். 2:38, 41 மற்றும் 47க்கான குறிப்புகளைக் காணவும்.* [9]*இது குமாரனாகிய தேவனைக் குறிக்கின்றது. இயேசு “தமது சொந்த இரத்தத்தினாலே” சபையைக் கிரயம் கொண்டார்.* [10]*இராஜ்யத்தைப் பற்றிய இயேசுவின் உவமைகளில், ராஜ்யம்/சபை என்பது ஒரு நிலம், ஒரு திராட்சத் தோட்டம் மற்றும் பழக்கப்பட்ட பிற விஷயங்களுக்கு ஒப்பிடப்படுகின்றது. இவ்விதமாக இச்சொற்றொடர்களின் பட்டியலானது விரிவாக்கப்பட முடியும்.*

[11]*“இராஜ்யத்தின் திறவுகோல்கள்” பற்றி பேதுருவுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தமானது, பேதுரு மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் முக்கியமானவர் என்ற அர்த்தத்தைத் தருவதில்லை. மாறாக, அது இயேசுவை யார் என்று பேதுரு சரியாக கண்டு ஒப்புக் கொண்டதில் முதலாவதாயிருந்ததால் அவருக்குக் கொடுக்கப்பட்ட வெகுமதியாக இருந்தது. மக்கள் பாவமன்னிப்புப் பெறுவது எப்படி என்பதைச் சொல்லும் வாய்ப்பு முதன்முதலாகப் பேதுருவுக்குத் தரப்பட்டது (அப். 2:14-41). மக்களை இராஜ்யத்திற்குள் (சபைக்குள்) அனுமதிக்கும் “திறவுகோல்களை” முதல் முதல் பயன்படுத்தியவர் பேதுரு ஆவார். ஆனால் அவர் மட்டுமே அதைப் பயன்படுத்தியவரல்ல. (எடுத்துக்காட்டாக அப். 22:16ஐக் காணவும்.) (மற்றவர்களும் அதைப் பயன்படுத்தினார்கள்.)* [12]*தேவனுடைய வீட்டைக் குறிக்கும் மற்ற வசனப்பகுதிகள்: எபேசியர் 2:19; 1 பேது. 4:17.* [13]*மூப்பருடைய வீட்டிற்கும் (அவரது குடும்பம்), தேவனுடைய வீட்டிற்கும் (தேவனுடைய குடும்பமாகிய சபை) ஒரு ஒப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. (1 தீமோ. 3:4, 5, 15 ஆகிய வசனங்களைக் காணவும்.)* [14]Hugo McCord, *McCord’s New Testament Translation of the Everlasting Gospel* (Henderson, Tenn.: Freed-Hardeman College, 1988), 205.

# 7
# இயேசுவின் சபை: நியமனப் பெயர்

*நீங்கள் ஞானஸ்நானம் பெறும்பொழுது, கர்த்தர் தமது சபையில் உங்களைச் சேர்ப்பார். அதன் பிறகு நீங்கள் கர்த்தருடைய சபையின் உறுப்பினராகச் செயல்பட வேண்டும். இன்றைய நாட்களில் சபை என்ற பெயரில் பல கூட்டங்கள்*[1] *காணப்படுவதால், இயேசுவின் சபையை அடையாளம் காண்பது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அடுத்து வரும் சில பாடங்களில் நாம், சபையினுடைய பண்புகளைப் புதிய ஏற்பாட்டில் பரிசீலனை செய்வோம். மத நிறுவனம் ஒவ்வொன்றும் அந்தப் பண்புகளின் அடிப்படையில்தான் மதிப்பிடப்பட வேண்டும்.*

*முதலாவதாக நாம், வசனத்தின்படியான நியமனப் பெயர்களைப் பற்றிக் கவனிப்போம். சபையை முழுமையாகவும் சபையின் தனித்தனி உறுப்பினர்களையும் வேதாகமம் எவ்வித நியமனப் பெயர்களால் குறிப்பிடுகின்றது என்று நாம் காண்போம்.*

## நியமனப் பெயர்: பின்னணி

*குறிப்பிட்ட நியமனப்பெயர்களைப் பற்றி நாம் கவனிக்கும் முன்பு, பின்னணி என்ற வழியில் நான் சில வார்த்தைகள் கூற வேண்டியது அவசியமாகின்றது. முதலாவதாக, "பெயர்கள்" என்பதற்குப் பதிலாக நான் "நியமனப் பெயர்கள்" என்று பயன்படுத்தியுள்ளதைக் கவனியுங்கள். நான் இவ்வாறு செய்துள்ளதற்குக் காரணம் என்னவென்றால், புதிய ஏற்பாட்டில் சபைக்கு உரியப் பெயர்ச் சொல்*[2] *எதுவும் தரப் பட்டிருக்கவில்லை.*

*"நியமனப் பெயர்" மற்றும் "பெயர்" ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு என்ன? இதை வாசிக்கையில் அநேகமாக நீங்கள் எதன் மீதாவது உட்கார்ந்து கொண்டிருப்பீர்கள். எனது விளக்கத்திற்காக, அது ஒரு நாற்காலி என்று நாம் வைத்துக் கொள்வோம். நீங்கள் அதை "ஒரு நாற்காலி" (அல்லது "ஒரு இருக்கை" அல்லது அது போன்ற வேறு ஏதாவது) என்று அழைத்தால், அது என்னவாக இருக்கிறது என்பதை மட்டுமே நீங்கள் எளிமையாகக் கூறுகின்றீர்கள். அது ஒரு விளக்க முறையாக இருக்கிறது; அது ஒரு நியமனப் பெயர். ஆயினும், நீங்கள் அதற்கு ஒரு பெயரைக் கொடுக்க முடிவு செய்யக் கூடும். எடுத்துக்காட்டாக, அதை நீங்கள்* "George" *என்று பெயரிடக் கூடும்.* George *என்ற பெயரில் முதல் எழுத்து ஆங்கிலப் பெரிய எழுத்தான* "G" *என்று வரும்:* "George, the chair" *என்பது அதற்கு உரியப்பெயர்ச் சொல்லாகும்.*

*எனது விளக்கமானது அறிவுத்திறனற்றது அல்லது அற்பமானது என்பது உண்மையே, ஆனாலும் நான், புதிய ஏற்பாட்டில் சபைக்கு நியமனப் பெயர்கள்தான் பயன்படுத்தப் படுகின்றன, உரியப்பெயர்ச் சொற்கள் பயன்படுத்தப் படுவதில்லை என்பதை உங்கள் மனதில் பதிய வைக்க முயற்சி செய்கின்றேன். சபையைக் குறித்துப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் யாவும் அது (சபை) என்னவாக உள்ளது என்பதை மட்டுமே கூறுகின்றன.*

*அது உண்மையாகையால், கர்த்தருடைய சபைக்கு நியமனப் பெயர் ஒன்றை நான் பயன்படுத்தும் போதெல்லாம், "church" என்ற வார்த்தையின் முதலில் நான் "c" என்ற சிறிய எழுத்தையே பயன்படுத்துகின்றேன்.[3] இதைப் பற்றி நான் ஒரு பிரச்சனை ஏற்படுத்தவில்லை,[4] ஆனால் நான் உரியப்பெயர்ச் சொல் ஒன்றைப் பயன்படுத்துவதில்லை, நியமனப் பெயரையே பயன்படுத்துகின்றேன் என்பதை வலியுறுத்தவே விரும்புகின்றேன்.*

*இரண்டாவதாக, சபையின் நியமனப் பெயர்கள் யாவும் கிறிஸ்துவையும் அவரது பிதாவையும் கனப்படுத்துகின்றன என்பது நியதியாகும். இயேசு, "எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை"ப் (பிலி. 2:11) பெற்றிருக்கின்றார். நாமகரணக் கூட்டப் பெயர்கள் பெரும்பாலும் நாமகரணக் கூட்டத்தின் பண்புகள், அதைத் தோற்றுவித்தவர் அல்லது சில உபதேசங்கள் ஆகியவற்றையே மேன்மைப்படுத்துகின்றன. கர்த்தர் மட்டுமே மேன்மைப்படுத்தப்பட வேண்டும். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12) என்று பேதுரு கூறினார்.*

## *நியமனப் பெயர்:*
## *முழுமையான வகையில்*

*இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு, முழுமையான வகையில் சபைக்குரிய நியமனப் பெயர்களை முதலில் நாம் காண்போம். புதிய ஏற்பாட்டில் சபையானது பெரும்பாலான முறைகள் "சபை" என்று மட்டுமே எளிமையாகக் கூறப்பட்டுள்ளது (அப். 5:11; 8:1, 3; 9:31; 11:22, 26). ஆகையால் எனது எழுத்திலும், போதனையிலும் சபையை நான் "சபை" என்று மட்டுமே குறிப்பிடுவதுண்டு, வேறு எப்பெயராலும் அதைக் குறிப்பிடுவதில்லை.*

*எப்போதாவது சில வேளைகளில், வேதவசனங்களில் சபையைக் குறிப்பிடுவதற்கு விளக்கமான சொற்றொடர்கள் பயன்படுத்தப் படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, சபையைப் பவுல் "கர்த்தருடைய சபை" (அப். 20:28; ASV)[5] என்று குறிப்பிட்டார். எபிரெயர் 12:23ல் சபையானது "முதற் பேறான[வர்களின்] சர்வசங்கமாகிய சபை"[6] என்று அழைக்கப் படுகின்றது. "தேவனுடைய சபை" (1 கொரி. 1:2; 15:9; 2 கொரி. 1:1; கலா. 1:13; 1 தீமோ. 3:15ஐக் காணவும்) என்பது பலமுறைகள் பயன்படுத்தப்படும்*

ஒரு சொற்றொடர் ஆகும்.

ரோமர் 16:16ல் பவுல், ''கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்''[7] என்று கூறுகையில் தாம் இருந்த பகுதியில் உள்ள உள்ளூர் சபைகள் பலவற்றைக் குறிப்பிட்டார். "கிறிஸ்துவின் சபையார்" என்பது நாமகரணக் கூட்டப் பெயரல்ல, மாறாக அது விளக்கச் சொற்றொடர் ஆகும். ''கிறிஸ்துவின்'' என்றால் "கிறிஸ்துவை சேர்ந்த" அல்லது ''கிறிஸ்துவினுடைய''[8] என்று அர்த்தமாகும். ''கிறிஸ்துவின் சபையார்" என்றால் "கிறிஸ்துவிற்குரிய சபையார்" என்று அர்த்தமாகும். "Christ's church" என்ற சொற்றொடரும் கூட இதையே அர்த்தப் படுத்துகின்றது. "கிறிஸ்துவின் சபை" அல்லது "கிறிஸ்துவின் சபைகள்" என்ற சொற்றொடரை நான் பயன்படுத்தும்போது, கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபை அல்லது சபைகள் என்பதையே நான் அர்த்தப்படுத்துகின்றேன்.

## நியமனப் பெயர்:
## தனிநபர்கள் என்ற வகையில்

சபையில் உள்ள தனிநபர்கள் எவ்வித நியமனப்பெயர் பெறுகின்றார்கள்? (சபையில் உள்ள) தனிநபர்களைக் குறிப்பிடுவதற்குப் புதிய ஏற்பாட்டில் பலவகைச் சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு அவைகளில் சில தரப்படுகின்றன:

- "சகோதரர்கள்"[9] மற்றும் "சகோதரிகள்" (அப். 6:3; 9:30; ரோமர் 16:1; யாக். 2:15). இதுவே மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்றொடர் ஆகும். இது ஒரு குடும்ப (ஆவிக்குரிய குடும்ப) உறவு முறையைக் குறிப்பிடுகின்றது.
- ''பரிசுத்தவான்கள்'' (ரோமர் 1:2; 8:27; 12:13; 15:25). ''பரிசுத்தவான்கள்'' என்றால் ''பாவமற்றவர்'' என்று பொருள் படுவதில்லை, ஆனால் ''பிரித்து வைக்கப்பட்டவர்''[10] என்று பொருள்படும். ஞானஸ்நானத்தின் பொழுது, தேவன் கிறிஸ்தவர்களைத் தமது விசேஷித்த மக்களாகப் பிரித்து வைக்கின்றார் (தீத்து 2:14).
- ''சீஷர்கள்'' (அப். 6:1, 2, 7; 9:1). இந்தச் சொற்றொடரானது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பதற்கு அப். நட. புத்தகத்தில் அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றது. இவ்வார்த்தையானது ''பின்பற்றுபவர்'', "கற்றுக் கொள்பவர்"[11] என்பதைக் குறிப்பிடுகின்றது.

சபையில் உள்ள தனிநபர்களைக் குறிப்பிடும் தனிச் சிறப்புள்ள நியமனப் பெயராக "கிறிஸ்தவர்" என்ற சொற்றொடர் விளங்குகின்றது. நாம் பார்த்திருக்கின்ற மற்ற நியமனப் பெயர்களைப் போல் இல்லாமல் இது ஒரு உரியப்பெயர்ச் சொல்லாக நினைக்கப்பட முடியும் (ஆங்கிலத்தில் இவ்வார்த்தையின் தொடக்கமானது "C" என்ற பெரிய எழுத்தால்

*குறிப்பிடப்படுவதைக் கவனியுங்கள்). புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தையானது அடிக்கடி காணப்படுவதில்லை; ஆனால் அது காணப்படும் இடங்களில், ஒரு தனிச் சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகின்றது. ''முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று'' (அப். 11:26) என்று லூக்கா கூறினார். அகிரிப்பா ராஜாவுக்குப் பவுல் பிரசங்கித்த பிறகு, அந்த ராஜா, ''நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்'' (அப். 26:28) என்று கூறினார். ''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்'' (1 பேது. 4:16) என்று பேதுரு எழுதினார்.*

*புதிய ஏற்பாடானது இயேசுவையும் தேவனையும் மகிமைப் படுத்துவதை நியதியாகக் கொண்டுள்ளது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ''கிறிஸ்தவர்'' என்ற வார்த்தையில் இது தெளிவாய்க் காணப்படுகின்றது: ''கிறிஸ்தவர்'' என்பதில் மூன்றில் இரண்டு பகுதி ''கிறிஸ்து'' ஆகும்.*

*''கிறிஸ்தவர்'' என்பது தமிழ்ப்படுத்திய ஒரு கிரேக்க வார்த்தையாகும்.[12] கிரேக்க மூல வார்த்தையில் ''கிறிஸ்து'' என்பதற்கான வார்த்தையுடன் முடிவில் உரியச் சொல் ஒன்று இணைந்துள்ளது. ''கிறிஸ்தவர்'' என்றால் ''கிறிஸ்துவுக்குரிய ஒருவர்'' என்பதே நேரடியான அர்த்தம் ஆகும்.*

*கிறிஸ்தவர் = கிறிஸ்துவுக்குரிய ஒருவர்*

*ஒன்று கூடிய அடிப்படையில் ''கிறிஸ்துவின் சபை'' என்ற வார்த்தை அர்த்தப்படுத்துவதைப் போன்ற அதே வகையில் தான் இவ்வார்த்தை தனிநபர் என்ற அடிப்படையில் அர்த்தம் தருகின்றது: ''கிறிஸ்தவர்'' என்றால் கிறிஸ்துவுக்குரிய தனிநபர் என்று அர்த்தமாகும்; ''கிறிஸ்துவின் சபை'' என்றால் கிறிஸ்துவுக்குரிய சபை என்று அர்த்தமாகும்.*

*மத ரீதியாக நான் யார் என்று கேட்கப்படும்போது, ''நான் ஒரு கிறிஸ்தவன்'' என்று நான் பதில் கூறுகின்றேன். சில வேளைகளில் நான் அழுத்திக் கேட்கப்படுகின்றேன்: ''ஆனால், நீங்கள் உறுப்பினராக இருக்கும் மத நிறுவனத்தின் பெயர் என்ன?'' என்று கேட்கப்படுகையில், நான், ''கிறிஸ்துவுக்குரிய சபையில் நான் ஒரு உறுப்பினன்'' என்று கூறுவேன். அல்லது ''கிறிஸ்துவின் சபை'' என்று கூறுவேன். எல்லா நேரங்களிலும் நான் எனது கர்த்தரை மகிமைப்படுத்தவே விரும்புகின்றேன்.*

## முடிவுரை

*மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட பெயர்களை வைத்துக் கொள்வதுதான் மதப் பிரிவினைக்கு வழியாகின்றது. இன்றைய நாட்களில் இது உண்மையாகும்; வேதாகமம் எழுதப்பட்ட நாட்களிலும் இது உண்மையாயிருந்தது. பவுல் கொரிந்து நகரில் இருந்த சபைக்கு*

*எழுதியபோது, அச்சபையானது பிரிவினையில் பற்றியெறிந்து கொண்டிருந்தது:*

> *சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஏனெனில் உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டு ... உங்களில் சிலர்: "நான் பவுலைச் சேர்ந்தவன்" என்றும், "நான் அப்பொல்லோவைச்[13] சேர்ந்தவன்" என்றும், "நான் கேபாவைச்[14] சேர்ந்தவனென்றும்", "நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும்" சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன் (1 கொரி. 1:10-12).*

*"பவுலைச் சேர்ந்தவர்" மற்றும் "அப்பொல்லோவைச் சேர்ந்தவர்" என்பது போன்ற சொற்றொடர்கள் - ரோமர் 16:16 பற்றி ஏற்கனவே குறிப்பிட்டபடி - உரிமையுடைமையைச் சுட்டிக்காட்டுகின்றன. "நான் பவுலுக்கு உரியவன்", "நான் அப்பொல்லோவுக்கு உரியவன்" போன்றவையே இவைகளின் நேரடியான அர்த்தம் ஆகும். இன்றைய நாட்களில் நாம் "நான் ஒரு பவுலியன்" அல்லது "நான் ஒரு அப்பொல்லோவியன்" என்று கூறக்கூடும். இவ்விதமாய்த் தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டவர்களைப் பார்த்துப் பவுல், "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" (1 கொரி. 1:13) என்று கேட்டு அவர்களை வெட்கப்படுத்தினார். கிறிஸ்து ஒருவரே மனிதரின் பாவத்திற்காகச் சிலுவையில் அறையப்பட்டார் (1 கொரி. 1:23). விசுவாசிகள் கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுகின்றார்கள் (அப். 2:38); ஆகையால் அவர்கள் அவரது பெயரை மட்டுமே தரித்துக் கொள்ள வேண்டும்.*

*என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்: சரியான ஒரு நியமனப் பெயரும் கூட தன்னில்தான் போதுமானதாயிருப்பதில்லை.* "Mercedes Benz" *என்ற வார்த்தைகளை நான் எனது வாகனத்தின் மேல் எழுதிக் கொள்ள முடியும்; ஆனாலும் அவ்வாறு எழுதுவதினால் எனது வாகனம்* "Mercedes Benz"[15] *ஆகிவிடாது. இருந்த போதிலும், வசனப்படியான நியமனப் பெயர் முக்கியமானதாகும். கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்துப் பேதுரு, "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12) என்று கூறியதை நினைவு கூருங்கள். பின்னாளில் அவர், "அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 பேது. 4:16) என்றும் எழுதினார்.*

குறிப்புகள்

[1]மக்களுடன் நான் படிக்கையில், என்னிடத்தில், "வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் ஒரே ஒரு சபை மட்டும் இருந்தது என்றால், இப்போதுள்ள எல்லா சபைகளும் எங்கிருந்து வந்தன?" என்றோ அல்லது, "ஏன் இத்தனை நாமகரணக் கூட்டங்கள் உள்ளன?" என்றோ அடிக்கடி கேள்வி கேட்கப்படுவது உண்டு. முன்னுரைக்கப்பட்டபடியே மனிதர்கள் சத்தியத்தை விட்டு வழுவிப் போனார்கள் என்பதே இதற்குரிய எளிய பதில் ஆகும் (அப். 20:29, 30; 1 தீமோ. 4:1-3; 2 தீமோ. 4:1-4 ஆகியவற்றை வாசிக்கவும்). [2]ஆங்கிலத்தில் உரியப்பெயர்ச் சொல்லானது பெரிய எழுத்தில் தான் தொடங்கும் என்பது விதியாகும். [3]"Church" என்ற வார்த்தையானது ஒரு வாக்கியத்தின் முதல் வார்த்தையாகவோ அல்லது தலைப்பாகவோ (இப்பாடத்தில் தலைப்பு போன்ற வகையில்) பயன்படுத்தப்படுகையில் இதற்கு விதிவிலக்கு உள்ளது. [4]நான் இதைப் பற்றி ஒரு பிரச்சனை ஏற்படுத்தவில்லை, ஏனென்றால், புதிய ஏற்பாட்டின் முற்காலக் கையெழுத்துப் பிரதிகளில் எல்லாம் பெரிய எழுத்துக்களாகவோ அல்லது எல்லாம் சிறிய எழுத்துக்களாகவோ எழுதப்பட்டன. [5]தமிழ் வேதாகமத்தில் "தேவனுடைய சபை" என்றுள்ளது. இவ்விடத்தில் சந்தர்ப்பப் பொருளானது இது குமாரனாகிய தேவன் என்று நமக்குக் கூறுகின்றது. [6]மூலப் பிரதியில் "முதற்பேறானவர்களின்" என்ற பன்மைச் சொல்லே உள்ளது. "சபை என்பது முதற்பேறானவர்களை - அதாவது கிறிஸ்தவர்களைக் கொண்டதாகும்" என்பதே இச்சொற்றொடரின் அர்த்தமாகும். [7]ரோமர் 16:16 வசனமானது, "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்" என்று தொடங்குகின்றது. அந்த நாட்களில் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் (இன்னும் உலகின் சில பகுதிகளில் பின்பற்றுவது போலவே) முத்தம் கொடுத்து வாழ்த்தினார்கள். இது முத்தம் கொடுத்து வாழ்த்த வேண்டும் என்ற கட்டளையல்ல. "பரிசுத்த" என்ற வார்த்தையே வலியுறுத்தம் பெறுகின்றது. நீங்கள் இதயம் குளிர வாழ்த்தும் போது அதை அர்த்தத்துடன் செய்யுங்கள். நான் வாழும் பகுதியில் இதை நாங்கள், "ஒருவரை ஒருவர் உண்மையுடன் கை குலுக்கி வாழ்த்துங்கள்" என்று கூறுவதுண்டு. [8](Christ's என்ற ஆங்கிலத்தில் உள்ளது போல) கிரேக்க மொழியில் "s" என்பது உரிமையுடைமையைக் காட்ட உடமைக் குறியால் (') குறிக்கப்படுவதில்லை. உரிமையுடைமையைப் பொதுவாக அவர்கள் "இதனுடைய" அல்லது "அதனுடைய" என்று ஆறாம் வேற்றுமைப் பொருளில் குறிப்பதுண்டு. [9]"Brother" என்பதற்குப் பன்மைச் சொல்லாகப் புதிய ஏற்பாட்டில் "brethren" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. [10]"பரிசுத்தமாக்கப்பட்ட" என்ற அர்த்தம் கொண்ட அடிப்படைக் கிரேக்க வார்த்தையிலிருந்துதான் "பரிசுத்தவான்" என்ற வார்த்தையும் வருகின்றது.

[11]ஒரு "சீஷன்" என்பவன் ஏதோ ஒரு தலைவரைப் பின்பற்றுபவனாயிருக்க முடியும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவரா அல்லவா என்பதைச் சந்தர்ப்பப் பொருள் தான் தீர்மானிக்க முடியும். [12]"தமிழ்ப் படுத்திய" என்றால் ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து ஒரு தமிழ் வார்த்தையை அவர்கள் ஏற்படுத்தினார்கள் என்று அர்த்தப்படுகின்றது. [13]அப்பொல்லோ என்னும் பிரசங்கியார் (அகாயாவில் இருந்த) கொரிந்து பகுதியில் சற்று காலம் ஊழியம் செய்தவர் ஆவார் (அப். 18:27, 28ஐக் காணவும்). [14]கேபா என்பது அப்போஸ்தலனாகிய பேதுருவுக்குத் தரப்பட்ட இன்னொரு பெயர் ஆகும் (யோவான் 1:42). [15]Mercedes Benz என்பது மிகவும் விலையுயர்ந்த ஒரு வாகனமாகும்.

8


# இயேசுவின் சபை: அமைப்பு முறை

*சபையானது உண்மையில் எவ்விதமாய் அமைக்கப்பட்டது என்பதைப் பற்றிப் பலர் சிறிதளவே கவனம் செலுத்துகின்றார்கள். இருந்த போதிலும், அமைப்பு முறை என்பது மிக முக்கியமான கருத்தாகும். சபையின் அமைப்பு முறை என்பது சரீரத்தின் எலும்பு மண்டலம் போன்றதாகும். எலும்புக் கூடானது வளைந்திருந்தது என்றால், சரீரம் முழுவதும் அங்கவீனமாகப் போய்விடும்.*

## இயேசுவே தலை

*பெரும்பாலான நாமகரணக் கூட்டங்களில் பூமிக்குரிய தலைவர்களும், பூமிக்குரிய தலைமையகங்களும் இருக்கின்றன, ஆனால் இயேசுவின் சபையானது இயேசுவை மட்டுமே தலைவராகப் பெற்றிருந்தது (பெற்றிருக்கின்றது). இயேசு இருக்கின்ற பரலோகமே சபையின் தலைமையகமாக இருக்கின்றது. தேவன் "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, ... சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22; கொலோ. 1:18ஐயும் காணவும்; இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று பவுல் கூறினார். இயேசு தமது சீஷர்களிடம், "வானத்திலும் பூமிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' (மத். 28:18) (இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று கூறினார்.*

*சபைக்குப் பூமிக்குரிய தலைவர்கள் மற்றும் தலைமையகங்கள் ஆகியவைகளை வேதாகமத்தில் காண முடியாது. நாமகரணக் கூட்டங்கள் பலவற்றின் விஸ்தாரமான அமைப்பு முறை ஏற்பாடுகள் கூட வேதாகமத்தில் காணப்படுவதில்லை. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், சபையுடன் தொடர்புடைய மாவட்ட, தேசீய அல்லது சர்வ தேச அமைப்பு முறைகள் எதுவும் இருந்ததில்லை. உள்ளூர் சபையைவிடப் பெரிய அமைப்பு முறை எதுவும் இருந்ததில்லை.*




மேல் உள்ள வரைபடத்தில் "இயேசுவே தலை" என்பதற்குக் கீழ் உள்ள நீள் உருளை ஒவ்வொன்றும் உள்ளூர் சபை ("உ ச") யைக் குறிக்கும். இவ்வரைபடத்தில் ஒவ்வொரு உள்ளூர் சபையும் தனிப்பட்டதாகவும், மற்றவற்றிலிருந்து சுயாதீனம் உள்ளதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் சபைகள் அன்பினால் கட்டப்பட்டிருந்தன. அவை ஒன்றுக் கொன்று உதவி செய்து கொண்டன (அப். 11:28-30; ரோமர் 15:25, 26), ஆனால் அவைகளுக்கிடையில் அமைப்பு முறைக் கட்டுக்கள் எதுவும் இருந்ததில்லை.


இந்த ஏற்பாடு சில வேளைகளில் "உள்ளூர்த் தன்னாட்சி" என்று அழைக்கப்படுகின்றது. "தன்னாட்சி" என்ற வார்த்தை அதே அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்ட தாகும். கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு உள்ளூர் அமைப்பும் தன்னாட்சி பெற்றதாக, இயேசுவின் அதிகாரத்திற்கு மட்டுமே கீழ்ப்படிகின்றது.

இன்றையப் பல்முனை உலகத்தில் இப்படிப்பட்ட எளிய ஏற்பாடு வேலைக்கு உதவாது என்று சிலர் நினைக்கின்றார்கள். சபையின் ஊழியத்தை நிறைவேற்றுவதற்குக் கூடுதலாகப் பாதிரியார்களின் அமைப்பு என்ற "இயந்திரம்" தேவை என்று அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். ஆயினும் கர்த்தருடைய ஏற்பாடு போதுமானது என்று நான் சாட்சியளிக்க முடியும். எந்த ஒரு மனித நிறுவனத்தின் "ஆதரவு" எதுவுமின்றி நான் ஆஸ்திரேலியாவின் ஊழியப் பணியில் பத்து ஆண்டுகளாக அங்கம் வகித்தேன்: ஓக்லஹாமாவின் மிட்வெஸ்ட் நகரில் இருந்த கிழக்குப் பகுதி கிறிஸ்துவின் சபையாரால் நான் ஆதரிக்கப்பட்டேன். மற்ற கிறிஸ்துவின் சபைகளும் தேவையான நிதியுதவி அளித்தன. தனிப்பட்ட ஊழிய சமுதாயம் என்று எதுவும் தேவைப்பட்டிருந்ததில்லை.

## உள்ளூர் சபை

புதிய ஏற்பாட்டில், உள்ளூர் சபை என்பது மட்டுமே சபையின் அமைப்பு முறைப்பட்ட அலகாக இருந்தது. இப்பாடத்தின் மீதியுள்ள பகுதியில், உள்ளூர் சபைகள் வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் எவ்வித அமைப்பு முறையில் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்துவோம். முழுமையான அமைப்பு முறை பெற்ற சபையான[1] பிலிப்பி பட்டணத்துச் சபைக்குப் பவுல் எழுதிய போது, "இயேசு கிறிஸ்துவின்

ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும்,[2] உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது:'' (பிலி. 1:1) என்று தமது நிருபத்தைத் தொடங்கினார். இவ்வசனத்தில் நான்கு குழுக்கள் குறிப்பிடப்படுகின்றன: பவுலும் தீமோத்தேயுவும் ஊழியர்கள் அல்லது நற்செய்தியாளர்களாயிருந்தார்கள். அவர்கள் சபையாரைப் பொதுவாகக் குறிப்பிடும் "பரிசுத்தவான்கள்" என்ற பெயரால் பிலிப்பி சபையாரைக் குறிப்பிட்டார்கள்.[3] அந்தப் பரிசுத்தவான்களில் ''கண்காணிகள்'' மற்றும் "உதவிக்காரர்கள்" என்று பவுலினால் அழைக்கப்பட்ட இரு குழுவினர் இருந்தார்கள், முழுமையான அமைப்புமுறை பெற்ற சபையொன்றில் இந்த நான்கு குழுக்களும் எவ்விதம் பொருந்தக் கூடும் என்பதற்கான வரைபடம் இதோ:




### கண்காணிகள்: மூப்பர்கள்

சபையின் முன்னோடிகள் ''மூப்பர்கள்'' என்று அழைக்கப்படுகின்றார்கள். இந்த "அலுவலுக்கு"[4] இதுவே மிகப் பொதுவான நியமனப் பெயராகும் (அப். 11:30; 14:23; 15:2; 20:17). "மூப்பர்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "presbuteros" என்பதாகும், இது "வயது முதிர்ந்தவர்"[5] என்று அர்த்தப்படும்; ஆனால் சபைத் தலைமைத்துவத்தைப் பொறுத்தமட்டில், வயதைக் காட்டிலும், பக்குவமே அதிகமாய் வலியுறுத்தப்படுகின்றது. மூப்பர்கள் பக்குவம் வாய்ந்த முடிவெடுக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

மூப்பர்கள் "overseers" (கண்காணிகள்) என்றும் அறியப்பட்டார்கள். பவுல் தீத்துவுக்கு எழுதும்போது, ''மூப்பர்'' மற்றும் "overseer/bishop" (கண்காணி) என்ற சொற்றொடர்களை ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தினார்:

> நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே.

> *குற்றஞ் சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவன் இருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில் கண்காணி யானவன்* [KJV*யில்* "bishop" *என்றுள்ளது*] *தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், ... (தீத்து 1:5-7) (இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன).*

"Bishop" *என்ற நன்கறியப்பட்ட வார்த்தையானது (ஏற்கனவே குறிப்பிட்டபடி)* "overseer" *(கண்காணி) என்ற அர்த்தம் தரும் episkopos என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையிலிருந்து வந்ததாகும். தேவனே மூப்பர்களைக் ''கண்காணிகளாக'' ஏற்படுத்தியதாகப் பவுல் அவர்களிடத்தில் கூறினார் (அப். 20:17, 28). மூப்பர்கள் "கண்காணிப்பு" செய்ய வேண்டும் என்று பேதுரு வலியுறுத்தினார் (1 பேது. 5:1, 2).* "overseer" ("Bishop") *என்ற வார்த்தையானது மூப்பர்களுடைய பொறுப்பின் அளவை வலியுறுத்துகின்றது: ஒரு சபையைக் குறித்த சகல விஷயங்களையும் அவர்கள் கண்காணிக்கின்றார்கள்.*[6]

*மூப்பர்கள்/கண்காணிகள் எனப்படுபவர்கள் "மேய்ப்பர்கள்" என்றும் அழைக்கப்பட்டார்கள். இந்த வார்த்தையானது எபேசியர் 4ல் பெயர்ச் சொல்லின் வடிவத்தில் காணப்படுகின்றது: ''பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, ... அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசியாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபே. 4:12, 13; இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன). "மேய்ப்பர்" (poimen) என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கு* "pastor" *என்ற இலத்தீன் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தையின் வினைவடிவமானது அப். 20ல் மூப்பர்கள்/கண்காணிகள் ''தேவனுடைய சபையை மேய்க்க'' வேண்டுமென்று நியமிக்கப்பட்டதைக் (வ. 28; இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன) கூறும்பொழுது காணப்படுகின்றது. இவ்வினைவடிவமானது 1 பேதுரு 5லும் கூட மூப்பர்கள்/கண்காணிகள் "தேவனுடைய மந்தையை மேய்த்து" என்று கூறும்பொழுதும் காணப் படுகின்றது (வ. 2; இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன). அப். 20 மற்றும் 1 பேதுரு 5 ஆகியவை இம்மூன்று சொற்றொடர்களையும் ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்துகின்றன.*

ELDERS =
OVERSEERS =
PASTORS/SHEPHERDS

*மூப்பர்கள் =*
*கண்காணிகள் =*
*மேய்ப்பர்கள்*

*"Pastor" அல்லது "shepherd" (மேய்ப்பர்) என்பது மூப்பர்களின் பணி விளக்கமாகும். கவனமிக்க மேய்ப்பர்கள் தங்கள் மந்தையைப் பராமரித்துப் பாதுகாப்பது போலவே, மூப்பர்கள் உள்ளூர் சபையாரைப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். சபையின் முன்னோடிகளைப் பற்றி எபிரெயர் 13:17ல், "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால்" என்று கூறப்படுகின்றது. ஒரு மூப்பராக இருப்பது என்பது மிகவும் அச்சத்திற்குரிய பொறுப்பு ஆகும்!*

*இன்றைய நாட்களில், பிரசங்கியார்கள் அடிக்கடி, "pastor" (மேய்ப்பர்கள்) என்று அழைக்கப்படுகின்றார்கள், ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் பிரசங்கியார் என்பவர் சபையொன்றின் "மேய்ப்பராக இருந்ததில்லை." "pastor" (மேய்ப்பர்) என்ற வார்த்தை மூப்பர்களைக் குறிப்பிட்டது, பிரசங்கியார்களாய் இருந்தவர்களுக்கு அது பயன்படுத்தப்படவில்லை.*[7]

*ஒரு சபையின் "மூப்பர்களை"ப் பற்றி நீங்கள் புதிய ஏற்பாட்டில் படிக்கும் எந்த ஒரு இடத்திலும் அது பன்மைச் சொல்லாகவே இருக்கின்றது (அப். 11:30; 14:23; 15:2; 16:4; 20:17; 21:18; 1 தீமோ. 5:17; தீத்து 1:5; யாக். 5:14; 1 பேது. 5:1). எவ்விடத்திலும் நாம் ஒரு சபையைக் கண்காணிப்பதற்கு ஒரு மூப்பர் (அல்லது ஒரு மேய்ப்பர்) மட்டும் இருந்ததாகப் படிப்பதில்லை.*

*மத நிறுவனங்கள் சிலவற்றில், பல சபைகள் உள்ளடங்கிய ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தக் "கண்காணிகள்" (Bishop) இருக்கின்றார்கள். உள்ளூர் சுயாதீனக் கொள்கையை நினைவுகூருங்கள். வேதவசனத்தின் படியாக, மூப்பர்களின் குழுவொன்று அவர்கள் உறுப்பினர்களாய் இருக்கும் உள்ளூர் சபையை மட்டுமே கண்காணிக்க முடியும். பேதுரு, "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து" (1 பேது. 5:2; இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்றுதான் மூப்பர்களுக்குக் கூறினாரே தவிர, "நூறு மைல்கள் சுற்றளவில் உள்ள எல்லா மந்தைகளையும்" என்று கூறவில்லை.*

*மூப்பர்கள்/கண்காணிகள்/மேய்ப்பர்களுக்குரிய தகுதிகள் 1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் தீத்து 1:5-9 ஆகிய வசனப்பகுதிகளில் தரப்பட்டுள்ளது. இவ்வசனங்களைப் படித்துப் பார்க்கச் சில நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அத்தகுதிகளின்படியாக, தேவபக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பஸ்தர்கள் மற்றும் பிள்ளைகள் பெற்று தகப்பனானவர்கள் மட்டுமே மூப்பர்களாகப் பணியாற்ற முடியும். திருமணமாகாதவர்கள் இப்பொறுப்புக்குத் தகுதியுடையவர்கள் அல்ல; குழந்தைகள் இல்லாத மனிதர்களும் இதற்கு தகுதியுடையவர்கள் அல்ல; பெண்கள் இதற்கு தகுதியுடையவர்கள் அல்ல; ஆவிக்குரிய பக்குவமும், நல்ல முடிவெடுக்கும் திறனும் இல்லாதவர்கள் இதற்குத் தகுதியுடைவர்கள் அல்ல.*

*ஒவ்வொரு உள்ளூர் சபையும் தங்களுக்குச் சொந்தமாக மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளன. ஏவப்பட்ட வேத வாக்கியத்தின்படியான தகுதிகளின் அடிப்படையிலேயே அவர்கள் தங்கள் தெரிவை மேற்கொள்ள வேண்டும்.*[8]

## *ஊழியர்கள்: உதவிக்காரர்கள்*

*பிலிப்பியர் 1:1ல் பவுல், “கண்காணிகள் மற்றும் உதவிக்காரர்கள்” (இது என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று குறிப்பிட்டார்.* “Deacon” *என்பது “ஊழியர்” என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையை ஆங்கிலப்படுத்திப் பெறப்பட்டதாகும்.*

*உதவிக்காரர்கள் = ஊழியர்கள்*

*உதவிக்காரர்கள் ‘‘மூப்பர்களின் வலது கை மனிதர்கள்’’ என்று நினைக்கப்படலாம். சபை முன்னோடிகள், தேவன் அவர்கள் செய்யும்படி விரும்பியதைச் செய்ய ஒப்புக் கொடுப்பதற்காக முதல் முதல் “உதவிக்காரர்கள்” உள்ளூர் சபையின் தேவைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டார்கள் (அப். 6:1-6ஐக் காணவும்).*[9]

*உதவிக்காரர்கள் இயற்கையான அதிகாரம் பெற்றவர்களல்ல.*[10] *மூப்பர்கள் இவர்களிடம் ஒப்புவிக்கும் பொறுப்பை நிறைவேற்றும் அதிகாரம் மட்டுமே இவர்களிடத்தில் இருக்கின்றது.*

*உதவிக்காரர்களுக்கான தகுதிகள் 1 தீமோத்தேயு 3:8-13ல் காணப்படுகின்றன. அந்தத் தகுதிகளின் அடிப்படையில் உதவிக்காரர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு சபையினிடம் இருக்கின்றது (அப். 6:3, 5ஐக் காணவும்).*

## *பிரசங்கியார்கள்: சுவிசேஷகர்கள்*

*ஆதி சபையில் பிரசங்கியார்களுக்கு மூன்று நியமனப் பெயர்கள் இருந்தன. முதலாவதாக அவர்கள் “பிரசங்கியார்கள்” (ரோமர் 10:14; 1 தீமோ. 2:7; 2 தீமோ. 1:11) அல்லது “பிரசங்கம்” செய்பவர்கள் (1 கொரி. 1:23) என்று அழைக்கப்பட்டார்கள். “பிரசங்கியார்” என்பதற்கான கிரேக்க வார்த்தை,* “herald” *(அறிவிப்பவர்) என்பதற்கான வார்த்தையாக இருக்கின்றது. ஒரு அரசனின் அறிவிப்பாளர் அரசனின் அறிவிப்புகளை அறிவிப்பது போலவே, இயேசு அரசரின் அறிவிப்பாளர்களாகப் பிரசங்கியார்கள் இருந்தார்கள்.*[11]

*பிரசங்கியார்கள் சில வேளைகளில்* “ministers” *(ஊழியர்கள்) என்று அழைக்கப்பட்டார்கள் (அப். 26:16; ரோமர் 15:15; எபே. 3:7; 6:21) அல்லது “ஊழியத்தைப்” பெற்றிருந்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (அப். 6:4; 2 தீமோ. 4:5). “ஊழியர்” என்ற வார்த்தையானது “உதவிக்காரர்” என்று அர்த்தம் தரும் அதே கிரேக்க வார்த்தையிலிருந்தே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, அது ‘‘ஊழியக்காரர்’’ என்ற எளிய அர்த்தத்தையே தருவதாயிருக்கின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு ஊழியக்காரராக இருக்கின்றார்/இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒரு ஊழியம் அல்லது ஊழியப் பகுதியொன்று இருக்க வேண்டும் (எபே. 4:12; எபி. 6:10; 1 பேது. 4:10, 11). ஆகையால், பிரசங்கியார் என்பவர் சபையின்* “minister” *(ஊழியர்) அல்ல. “ஊழியர்” என்ற வார்த்தையானது*

*பிரசங்கியாரைக் குறிக்கப் பயன்படுகையில், அதை, "அவர் வார்த்தையின் ஊழியர்'' (அப். 6:4ஐக் காணவும்) அல்லது ''அவர் பிரசங்க ஊழியம் செய்கின்றார்" என்று தகுதிப் படுத்துவது நல்லது.*

*புதிய ஏற்பாட்டில் பிரசங்கியார் ஒருவருக்கு "சுவிசேஷகன்" (அப். 21:8; எபே. 4:13; 2 தீமோ. 4:5)[12] என்பதே திட்டமான நியமனப் பெயராயிருந்தது. "சுவிசேஷகன்" என்ற வார்த்தையானது "சுவிசேஷம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது, இது "[இயேசுவைப் பற்றிய] நற்செய்தியைப் பிரசங்கிப்பவர்"[13] என்று அர்த்தப்படுகின்றது.*

*இன்றைய நாட்களில், வசனத்தைப் பிரசங்கிப்பதும் போதிப்பதுமே பிரசங்கியாரின் பொறுப்பாகின்றது. தேவனுடைய செய்தியை அறிவிப்பதென்ற அதிகாரத்திற்கு அப்பால் வேறு எந்த அதிகாரமும் அவர் பெற்றிருப்பதில்லை.[14]*

*ஆண்டுகளினூடே, மனிதர்கள் பிரசங்கியாரை, தேவனால் அவருக்குத் தரப்பட்டிருந்த தகுதிக்கு மேலாக உயர்த்த முயற்சி செய்துள்ளார்கள். வேதவசனத்தின்படியல்லாத பட்டங்கள் அவர் மீது பொழியப் பட்டிருக்கின்றன (மத். 23:9). அவைகளில் "சங்கைக்குரிய" என்ற பெயர் உரிச் சொல்லும் ஒன்று. "சங்கைக்குரிய" என்ற வார்த்தையானது "பயபக்தி செலுத்தத் தக்கவர்"* (*The American Heritage Dictionary,* 3rd ed., s.v. "reverend.") *என்று அர்த்தப்படுகின்றது. இச்சொற்றொடர் ஒரே ஒரு தரம்* KJV[15]*யில் சங்கீதம் 111:9ல் காணப்படுகின்றது: தேவனைப் பற்றிப் பேசுகையில் சங்கீதக்காரர், ''... அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது'' என்று கூறினார். தேவனுடைய நாமம் மட்டுமே ''பயபக்தி செலுத்தத் தக்கதாகும்.'' நான் தேவனல்ல ஆகையால் "சங்கைக்குரிய" என்ற பட்டத்தை நான் சூடிக் கொள்வதில்லை.*

## ***பரிசுத்தவான்கள்: மற்ற உறுப்பினர்கள்***

*உள்ளூர் சபையானது மற்ற பல முக்கிய ஊழியங்களையும், விசேஷித்த பணிகளையும் செய்ய வேண்டியதாயிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, வெளியரங்கமாக வசனத்தைப் போதிப்பவர்கள் இருக்கின்றார்கள் (எபே. 4:13ஐக் காணவும்). இருப்பினும், இச்சமயத்தில் நான், சபையின் மற்ற எல்லா உறுப்பினர்களையும் உள்ளடக்குவதற்கு பிலிப்பியர் 1:1ல் காணப்படுகின்றபடி, "பரிசுத்தவான்கள்" என்ற சொற்றொடரை மட்டுமே பயன்படுத்துவேன். ஒவ்வொரு உறுப்பினரும் மூப்பர்களுக்குக் கீழாக இருந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.[16] எபிரெயர் 13:17ல் ''உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" என்று கூறப்படுகின்றது.*

# முடிவுரை

நீங்கள் எங்கு ஆராதித்து, ஊழியம் செய்வீர்கள் என்பதைக் கவனித்துப் பார்க்கையில், நீங்கள் பின்வருவது போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும்: “இந்த சபையானது சுயாதீனமுடையதா? அல்லது யாரேனும் மனிதத் தலைவர் அல்லது நிறுவனத்திற்கு இது பதில் கூற வேண்டியதாய் உள்ளதா?”; “பிரசங்கியார், சபையின் ‘pastor’ (மேய்ப்பர்) என்று அழைக்கப் படுகின்றாரா?’’; ‘‘அவர் ‘சங்கைக்குரிய’ என்பது போன்ற வேத வசனத்தின்படியல்லாத பட்டங்களைச் சூடிக் கொண்டிருக்கின்றாரா?”

சபையின் அமைப்பு முறை என்பது முக்கியமானதாய் இருக்கின்றது. அது தேவனுடைய திட்டத்தின்படியானதாக இருக்க வேண்டும்.

குறிப்புகள்

[1]பாடத்தின் பிற்பகுதியில், சபையின் நடத்துனர்கள் தேவனால் தரப்பட்ட இத்தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று காணப் போகின்றோம். இருக்கும் மனிதர்கள் இத்தகுதிகள் இல்லாதவர்களாயிருந்தால், நடத்துனர்கள் நியமிக்கப்படலாகாது. இருப்பினும்; இப்படிப்பட்ட விஷயத்தில் சபை குறைவுபடுகிறதென்று கூறப்படுகின்றது (தீத்து 1:5). ஏவப்பட்ட வேதவாக்கியத்தின்படி தகுதிகளைப் பெறும்படியாக மனிதர்களை வளர்க்க வேண்டியது சபையின் தொடர்ந்த கடமையாகும். [2]KJVயில் “bishop” என்றுள்ளது. நாம் பார்க்கப் போகின்றபடி, “bishop” என்ற வார்த்தையின் நேரடியான அர்த்தம் “overseers” (கண்காணிகள்) என்பதாகும். [3]முந்திய பாடத்தை மறு ஆய்வு செய்யவும். [4]“அலுவல்” என்ற வார்த்தையை இவ்விடத்தில் மேற்கோள் குறிகளுடன் நான் கொடுத்துள்ளேன், ஏனென்றால், இது பதவி மட்டுமல்ல, *ஊழியம்* ஆகும் என்று வலியுறுத்த விரும்புகின்றேன். மூப்பராயிருத்தல் என்பது ஒரு பதவி என்பதைக் காட்டிலும் அது ஒரு பொறுப்பு என்பதே மிகவும் ஏற்புடையதாகும். [5](“மூப்பர்கள்” மற்றும் “உதவிக்காரர்கள்” என்பவை போன்ற) சபையின் நடத்துனர்களைக் குறிக்கப் பயன்படும் சொற்றொடர்கள் அந்த நாட்களின் சொல் வழக்கின் ஒரு பாகமாய் இருந்தன. இச்சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் புதிய ஏற்பாட்டில் பொதுவான கருத்திலும் பயன்படுத்தப்பட்டன. ஒரு வார்த்தையானது பொதுவான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது சபையின் நடத்துனர்களுக்கான விசேஷக் கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பதைச் சந்தர்ப்பப் பொருளே தீர்மானிக்கின்றது. [6]மூப்பர்கள் ஆவிக்குரிய விஷயங்களையும், உதவிக்காரர்கள் சரீரத்திற்குரிய விஷயங்களையும் கண்காணிப்பு செய்தார்கள் என்று சில நேரங்களில் கூறப்பட்டது. இது உண்மையல்ல. உதவிக்காரர்கள் சரீரப்பிரகாரமான விஷயங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ நிறைவேற்றும்படி மூப்பர்கள் அவர்களைப் பணிக்க முடியும், ஆனாலும் கூட, சபையைச் சார்ந்த ஒவ்வொரு விஷயத்திலும் மூப்பர்கள்தான் நிறைவான பொறுப்புடைய வர்களாயிருக்கின்றார்கள். [7]பிரசங்கியார் ஒருவர் மூப்பராகத் தகுதிகள் பெற்றால், சபையானது அவரை பொறுப்பிலிருந்து பணிபுரியும்படி கேட்டுக் கொண்டால், அவர் மூப்பர்களில்/கண்காணிகளில்/மேய்ப்பர்களில் ஒருவராகலாம் - ஆனால் வேதவசனத்தின்படி அவர் “*the* pastor” (ஒரே மேய்ப்பர்) என்றாக முடியாது. [8]கூறப்பட்ட தகுதிகளின்படி சபையானது நடத்துனர்களைத் தேர்வு செய்வதற்கான ஒரு எடுத்துக்காட்டானது அப். 6:3, 5ல் காணப்படுகின்றது. [9]“உதவிக்காரர்கள்” என்ற வார்த்தையை நான் மேற்கோள் குறிகளுக்குள் வைத்துள்ளேன், ஏனென்றால் இம்மனிதர்கள் “அலுவல் ரீதியாக” உதவிக்காரர்களா அல்லவா என்பதில் சில கேள்விகள் உண்டு. இருந்த போதிலும், அவர்கள் உதவிக்காரரின் ஊழியத்தைச் செய்தார்கள் மற்றும் ‘‘உதவிக்காரர்’’ என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையின் வினைவடிவம் அப். 6:2ல் பயன்படுத்தப்படுகின்றது. [10]“உதவிக்காரர்களின் வாரியமொன்று” சபையை நடத்த வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிப்பதில்லை.

[11]பிரசங்கியார் ஒருவர் ‘‘முழு நேரப்பணியாளரா?’’ அல்லது அவர் வேறு

*வேலையொன்றைச் செய்து கொண்டே ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்கம் செய்கின்றாரா என்பதெல்லாம் வித்தியாசம் ஏற்படுத்துவது கிடையாது. அவர் பிரசங்கியாராகவே இருக்கின்றார். [12]ஒரு மனிதர் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்து நற்செய்தியைப் பிரசங்கிக்கின்றாரா அல்லது ஓரிடத்தில் இருந்து அதைச் செய்கின்றாரா என்பவை போன்ற விஷயங்கள் "சுவிசேஷகன்" என்ற வார்த்தையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. [13]"சுவிசேஷகன்" என்ற வார்த்தையின் மூல வார்த்தையினுடைய வினை வடிவமானது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படுகின்றது. "நற்செய்தியை அறிவித்தல்" என்பதே இதன் நேரடி அர்த்தமாகும், ஆனால் பொதுவாக இது ''பிரசங்கித்தல்'' என்று மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (அப். 8:35 மற்றும் ரோமர் 1:15 ஆகியவற்றைக் காணவும்). [14]சுவிசேஷகனின் அதிகாரம் என்பதாகப் புதிய ஏற்பாடு எதையும் போதிப்பதில்லை. [15]*NASB*யில் இவ்வார்த்தை* "awesome" *என்றும்,* RSV*யில்* "terrible" *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (சில பிரசங்கியார்கள்* "Awesome" *என்ற பட்டத்தை விரும்பலாம், ஆனால்* "Terrible" *என்பதைப் பற்றி எவரும் கவலைப்படுவதில்லை.) [16]அதாவது, மூப்பர்கள் சபையைப் பாழாக்காத வரையிலும், சபை உறுப்பினர்கள் அவர்களின் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் (அப். 20:28-31).*

# 9
# இயேசுவின் சபை: ஆராதனை [1]

*அமைப்பு முறையானது உடலின் எலும்பு மண்டலம் போன்றதென்றால், ஆராதனையானது இருதயம் போன்றதாகும். "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (மத். 4:10ஆ).*

*ஆராதனையில் என்ன செய்யப்படுகின்றது மற்றும் ஏன் அது செய்யப்படுகின்றது என்ற இரண்டு விஷயங்களும் ஆராதனையின் முக்கியமான இரண்டு அம்சங்களாகும். சமாரியப் பெண்ணிடம் இயேசு, "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், ... தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுது கொள்ளவேண்டும் என்றார்" (யோவா. 4:23, 24). "ஆவியோடு" தேவனைத் தொழுது கொள்வது என்றால், ஒருவர் தமது இருதயத்தில் தொழுது கொள்வதாகும்; அவர்கள் தங்கள் சிந்தனைகளைப் பரலோகம் நோக்கிச் செலுத்துகின்றார்கள். "உண்மையோடு" தேவனைத் தொழுதுகொள்ளுதல் என்பதில், தேவன் தமது வசனத்தில் கட்டளையிட்டுள்ளபடி அவரைத் தொழுது கொள்வதும் அடங்குகின்றது, ஏனென்றால், தேவனுடைய "வசனமே சத்தியம்" (யோவா. 17:17) என்று இயேசு கூறினார்.*

*இந்தப் பாடத்திலும், அடுத்த பாடத்திலும் நாம், இயேசுவின் சபையில் ஆராதனையைப் பற்றி வேதவசனங்கள் என்ன போதிக்கின்றன என்று ஆராயப் போகின்றோம். அப்படிச் செய்கையில் நாம், ஆராதனை என்றால் "என்ன" மற்றும் "எப்படி" என்ற இரு அம்சங்களையும் வலியுறுத்துவோம். தேவனை ஆராதித்தல் என்பதில் சரியான செயல்களும், சரியான எண்ணப்போக்குகளும் உள்ளடங்க வேண்டும்.*

## ஆராதனைக்கான விசேஷ நாள்

வாரத்தின் எந்த நாளிலும் நாம் தேவனை ஆராதிக்க முடியும். சபையானது முதல் முதல் ஸ்தாபித்தபோது, கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் கூடி வந்தார்கள் (அப். 2:46). இருந்த போதிலும், எல்லா கிறிஸ்தவர்களும் வாரத்தின் ஒரு விசேஷித்த நாளில் ஆராதனை செய்யக் கூடி வர வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது.

*பழைய ஏற்பாட்டில், வாரத்தின் ஏழாம் நாள் (யாத். 20:10, 11) - அதாவது சனிக்கிழமைதான் ஆராதனைக்குரிய விசேஷித்த ஓய்வுநாளாக இருந்தது. கிறிஸ்தவத்தில், வாரத்தின் முதல் நாளாகிய - ஞாயிற்றுக்கிழமையே இந்த விசேஷித்த நாளாக இருக்கின்றது. இந்த நாளில்தான் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் (மத். 28:1, 6). இந்த நாளில்தான் ஆதிக்கிறிஸ்தவர்கள் கூடி வந்தார்கள் (1 கொரி. 16:2), இந்த நாளில்தான் அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள் (அப். 20:7). ஞாயிற்றுக்கிழமை "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப் படுகின்றது (வெளி. 1:10).[1]*

*ஆராதனையில் வெளிப்படையாக தெரிவிக்கின்ற ஐந்து காரியங்களைப் பற்றி நாம் படிப்போம். இவைகளில் வேதாகமப் படிப்பும், ஜெபம் மற்றும் பாடுதல் என்ற மூன்றையும் எந்த நாளிலும் செய்யலாம். கர்த்தருடைய பந்தி மற்றும் கொடுத்தல் ஆகிய இரண்டும் வாரத்தின் முதல் நாளுடன் மட்டும் தொடர்புள்ளவையாகும்.*

# ஆராதனையில் வெளிப்படையாக தெரிவிக்கின்றவைகள்

## கர்த்தருடைய இராப்போஜனம்

*ஆராதனையில் நாம் முதலாவதாகக் கவனிக்க விரும்பும் வெளிப்பாடு கர்த்தருடைய இராப்போஜனம் என்பதாகும். இயேசு தமது சீஷர்களுடன் ஆசரித்த கடைசி பஸ்காவின் போது,[2] அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தை நிறுவினார்.*

> *... கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை யாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க்[3] கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் (1 கொரி. 11:23-28; மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20*

*ஆகியவற்றையும் காணவும்).*

*இந்த விருந்தை ஏற்படுத்தியபோது, இயேசு புளிப்பில்லாத அப்பத்தையும்[4] திராட்ச ரசத்தையும்[5] பயன்படுத்தினார். இந்த விருந்தில் முதல் முதல் பங்கேற்றவர்கள் அப்பம் மற்றும் திராட்ச ரசம் ஆகிய இரண்டிலும் பங்கு பெற்றார்கள்.[6]*

*"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று இயேசு கூறிய போது, அந்த அப்பமானது அற்புதமான விதத்திலோ அல்லது மந்திரவாதத்தினாலோ தம்முடைய சதையாக மாறி விடுகிறது என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை. அவர் அவர்களுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார், அவரது மாம்ச உடல் அப்பொழுது பழுதுபடாமலே இருந்தது. எனது பணப்பை* (money purse [or] wallet)*யில் இருந்து நான் ஒரு படத்தை உருவி, ''இதோ என் பேரக் குழந்தைகள்" என்று கூறுகையில் நான் எதை அர்த்தப்படுத்துகின்றேனோ, அதையே அவர் அர்த்தப்படுத்தினார். படமானது எனது பேரக் குழந்தைகளின் குறிப்பு அடையாளமாக இருக்கின்றது. அது போலவே, புளிப்பில்லாத அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தை குறிக்கின்றதாகவும், திராட்ச ரசம் அவரது இரத்தத்தை குறிக்கின்றதாகவும் இருக்கின்றது.*

*கர்த்தரின் இராப்போஜனமானது சில வேளைகளில் ''ஐக்கியம்'' (1 கொரி. 10:16)[7] அல்லது கர்த்தருடைய போஜன பந்தி (1 கொரி. 10:21) என்று அழைக்கப்படுகின்றது. ஏனென்றால் ஆராதிப்பவர்கள் அப்பத்தை பிட்கும் வெளிப்பாட்டுடன் அது தொடங்குகின்றது, ஆராதனையின் இந்த வெளிப்பாடானது "அப்பம் பிட்குதல்"[8] என்றும் அறியப் படுகின்றது. முதல் கிறிஸ்தவர்கள் "... அப்பம் பிட்குதலிலும் ... உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42).*

*புதிய ஏற்பாட்டின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொண்டார்கள். வாரத்தின் முதல் நாள் தோறும் சபை கூடி வந்தது (1 கொரி. 16:1, 2ஐக் காணவும்). அவர்களின் ஆராதனையானது கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதைச் சுற்றியே அமைந்தது. அப். 20ல் பவுல், லூக்கா இன்னும் மற்றவர்களும் துரோவா பட்டணத்திற்கு வந்து சேர்ந்ததைப் பற்றிப் படிக்கின்றோம். பின்னாளில் லூக்கா, "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் ... அவர்களுடனே சம்பாஷித்து, ..." (அப். 20:7) என்று எழுதினார். துரோவாவில் இருந்த சபையார் வாரத்தின் முதல் நாளில் கூடி வந்த போது, அப்பம் பிட்குதலே அவர்களின் முதன்மையான நோக்கமாய் இருந்தது. தொடக்க நூற்றாண்டு களில் சபையில் இருந்த கிறிஸ்தவர்களின் எழுத்துக்கள் இந்த நடைமுறை அநேக வருடங்களாகத் தொடர்ந்திருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன: வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்தவர்கள் கூடி வந்திருக்கையில் கர்த்தரின் பந்தியே அவர்களின் முதன்மையான*

*நோக்கமாய் இருந்தது.*

*கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்பதில் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால், சரியானவைகளைச் செய்வது முக்கியமானதாக இருக்கின்றது: கிறிஸ்தவர்கள் எல்லாரும் புளிப்பில்லாத அப்பம், திராட்ச ரசம் ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும், இதை அவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் செய்ய வேண்டும். இதில் சரியான வழியில் பங்கேற்பதும் முக்கியமானதாகும்: ஆராதனை செய்பவர்கள் இயேசுவின் பலியின் மீதும், அந்தப் பலி தங்களுக்கு எதை அர்த்தப்படுத்துகின்றது என்ற கருத்தின் மீதும் தங்கள் சிந்தனைகளை ஒருமுகப்படுத்த வேண்டும் (1 கொரி. 11:26-29 வரை மறுபடியும் வாசியுங்கள்).*

## தேவனுடைய வசனம்

*கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்படி துரோவாவில் இருந்த சபையார் கூடி வந்தபோது, தேவனுடைய சித்தத்தைப் பற்றிப் பவுல் அவர்களுடன் பேசினார் (அப். 20:7)[9]. தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தல் அல்லது போதித்தல் என்பது தேவனைக் கிட்டிச் சேர்வதற்கான முக்கியமான வழியாகும். வசனத்தை வாசிப்பதற்கோ அல்லது கலந்துரையாடுவதற்கோ ஆதி சபையார் அடிக்கடி கூடி வந்தார்கள் (அப். 2:42; கொலோ. 4:16).*

*வெளியரங்கமான ஆராதனையின்போது பிரசங்கிப்பதில் வேதாகமமானது சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. மனிதர்களின் கருத்துக்களோ அல்லது தத்துவங்களோ அல்ல, மாறாக, தேவனுடைய வசனம் மட்டுமே பிரசங்கிக்கப்பட வேண்டும் (2 தீமோ. 4:1-4).[10] வெளியரங்கமான கூட்டங்களில் ஆண்கள் மட்டும்தான் பிரசங்கிக்கவோ அல்லது போதிக்கவோ வேண்டும் (1 கொரி. 14:34).[11]*

*இருப்பினும், வேதவசனத்தின்படி பிரசங்கிக்கப்பட அல்லது போதிக்கப்பட வேண்டியது "என்ன" என்பதை மட்டும் கடைப்பிடித்தால் போதுமானதல்ல. பிரசங்கியார் ஒருவர் தேவனுக்குப் பிரியமான பிரசங்கம் ஒன்றைக் கூறுவதினாலேயே, அதைக் கேட்பவர் ஒவ்வொருவரும் ஆராதனை செய்கின்றார் என்பது உத்தரவாதமாகி விடாது, ஆராதனை என்பது கேட்பவரின் இருதயத்தில் நடப்பதாய் இருக்க வேண்டும். வந்திருக்கும் ஒவ்வொருவரும் பிரசங்கத்தை உன்னிப்பாகக் கவனித்து, தமது சொந்த வாழ்வில் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.*

## ஜெபம்

*ஜெபம், ஆராதனையின் முக்கியமான ஒரு பாகமாக உள்ளது. தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று பவுல் கூறினார் (1 தெச. 5:17). வேதாகமத்தை நாம் வாசிக்கும்போது, தேவன் நம்முடன் பேசுகின்றார், மற்றும் நாம் ஜெபம் செய்யும்போது தேவனுடன் நாம் பேசுகின்றோம் என்று யாரோ ஒருவர்*

*கூறியிருக்கின்றார். கிறிஸ்தவர்கள் கூடி வந்த போது ஜெபித்தார்கள் என்று புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றது (அப். 2:42; 4:23, 24, 31; 6:6; 12:12).*

*வெளியரங்கமான மற்றும் தனிப்பட்ட ஆராதனை ஆகியவற்றில் ஜெபம் என்பது மிக முக்கியமான பாகமாகும். ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது ஜெப வாழ்க்கையில் நிலையாக வளர்ந்துகொண்டிருக்க வேண்டும் (மத். 6:5-15; 14:23; லூக். 5:16; அப். 10:9; 16:25).*

*வெளியரங்கமான ஆராதனை என்பது பொதுவாக, சபையில் இருக்கும் ஆண்களால் வழி நடத்தப்படும் ஜெபங்கள் பலவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது. பவுல், "அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்" (1 தீமோ. 2:8) என்று எழுதினார். இவ்விடத்தில் "புருஷர்கள்" என்பதற்குப் பயன்படும் வார்த்தையானது "ஸ்திரீகள்" என்பதற்கு நேர் எதிராக "புருஷர்கள்" என்று அர்த்தம் தரும் விசேஷித்த ஒரு கிரேக்க வார்த்தையாகும். வெளியரங்கமான ஆராதனையில் ஆண்கள் மட்டுமே ஜெபத்தில் வழி நடத்திச் செல்ல வேண்டும்.*

*மறுபடியும், உண்மையிலேயே ஆராதனை நடக்காமலேயே, வெளியரங்கமான ஜெபத்தின், ''என்ன'' செய்ய வேண்டும் என்ற பகுதியானது கடைப் பிடிக்கப்படக் கூடும். ஜெபத்தில் வழி நடத்துபவர் தேவனுடைய பிரசன்னத்தைப் பற்றிய விழிப்புணர்வுடனிருந்து, தனது எண்ணங்களை மனிதரிடம் அல்ல மாறாக, தேவனிடத்தில் செலுத்த வேண்டும். ஜெபத்தில் வழி நடத்தப்படுகின்றவர்கள், அந்த ஜெபத்தைத் தங்கள் இருதயங்களில் எதிரொலிக்கச் செய்து, அத்துடன் தங்களின் சொந்த வேண்டுகோள்கள் மற்றும் நன்றியறிதல்கள் ஆகியவற்றையும் சேர்க்க வேண்டும். ஜெபத்தின் முடிவுப் பகுதியில் அவர்கள் (வாய் விட்டோ அல்லது மனதிற்குள்ளாகவோ) "ஆமென்" என்று சொல்ல வேண்டும், அதை அர்த்தப்படுத்த வேண்டும் (1 கொரி. 14:16; மற்றும் மத். 6:13; ரோமர் 16:27; எபே. 3:21 ஆகியவற்றையும் காணவும்).[12]*

## கொடுத்தல்

*ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறும் காணிக்கை[13] கொடுப்பது என்பது தேவன்மேல் உள்ள மதிப்பை வெளிப்படுத்தும் வழிகளில் ஒன்றாகும். கொரிந்து சபையாருக்குப் பவுல் பின்வருமாறு எழுதினார்,*

> *பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக[14] எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்[15] (1 கொரி. 16:1, 2).*

*பழைய ஏற்பாட்டின்படி ஆராதித்தவர்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்டிருந்தது: அதாவது, ஆராதிப்பவர்*

வைத்திருக்கும் எல்லாவற்றிலும் பத்து சதவிகிதம் அவர் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும். இது "தசமபாகம்" என்று அழைக்கப்பட்டது (லேவி. 27:30; உபா. 14:22; மல்கி. 3:8-10). கிறிஸ்தவர்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு குறிப்பிடுவதில்லை. மாறாக, அவர்கள் மனதில் நியமித்தபடி, உதாரத்துவமாக, உற்சாகமாகக் கொடுக்க வேண்டும் என்றுதான் அது போதிக்கின்றது (2 கொரி. 9:6, 7), அத்துடன் அவர்கள் "[தங்களின்] வரவுக்குத்தக்கதாக ... சேர்த்துவைக்க" (1 கொரி. 16:2) வேண்டும். தங்களின் வருமானத்தில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட சதவிகிதம் கொடுக்கின்ற கிறிஸ்தவர்களை நான் அறிவேன், ஆனால் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டதினால் அல்ல, மாறாக நன்றியுணர் வினாலேயே இவ்வாறு கொடுக்கின்றார்கள்.

''வரவுக்குத் தக்கதாக'' கொடுத்தும் கூட ஒருவர் ஆராதனை செய்யாதவராயிருக்கக் கூடும். ஆராதிப்பவர் காணிக்கை செலுத்துகையில், தாம் பெற்ற ஆசீர்வாதங்களுக்கு நன்றியையும், தனது காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகோளையும் ஒரு ஜெபமாக தேவனிடத்தில் ஏறெடுக்க வேண்டும்.

### பாடுதல்

ஆராதனையின் ஐந்தாவது வெளிப்பாடு பாடுதல் ஆகும். கொலோசெயில் இருந்த சபையாருக்கு ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;" (கொலோ. 3:16) என்று பவுல் கட்டளையிட்டார். நமது அடுத்த பாடம் வரையிலும் பாடுதல் பற்றிய கலந்துரையாடுதலை நாம் விட்டு வைப்போம், ஆனால் இவ்வசனப் பகுதி ஆராதனையின் ''என்ன'' என்ற பகுதியை வலியுறுத்துகின்றது: "சங்கீதங்களினாலும் ... ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு ..." மற்றும் "கர்த்தரை ... பாடி." இது இவ்வாராதனை "எப்படி" செய்யப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது: ''உங்கள் இருதயத்திலே ... பக்தியுடன்" என்று வாசிக்கின்றோம்.

## ஆராதனையின் முக்கியத்துவம்

ஆராதனையைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனையை, வெளியரங்கமான ஆராதனையின் மீது அது காட்டும் வலியுறுத்தல்களுடன் நாம் கலந்துரையாடுகின்றோம். இப்பொழுது நாம், "ஆராதனைக்கு நாம் ஒன்றுகூடுவது அல்லது கூடாதிருப்பது என்பது ஏதாவது வேறுபாட்டை ஏற்படுத்துகின்றதா?" என்று கேட்பது தேவையாகின்றது. ஆராதனைக்கு தவறாது செல்வது முக்கியமற்றது என்று பலர் நினைக்கின்றார்கள். வேதாகமம் இதைப்பற்றிப் போதிப்பதென்ன? தேவன் இக்கருத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார் என்று கற்றுக் கொள்ளும்போது சிலர்

ஆச்சரியப்படுகின்றார்கள்.

ஒரு காலத்தில் விசுவாசமாயிருந்த கிறிஸ்தவர்களுக்கு, எபிரெயர் நிருபம் எழுதப்பட்டது (எபி. 10:32-34). ஏதோ சில காரணங்களினால் அவர்கள் மாறுபாடுள்ளவர்களாகி, கவலையற்றவர்களானார்கள் (எபி. 2:4). சபையின் வெளியரங்கமான கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்வது இதில் உள்ளடங்கியிருந்தது (10:25). "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து" (10:24) என்று அவர்களுக்குக் கூறப்பட்டது. அவர்கள் ஒன்றுகூடி வருகையில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல் என்பது அதற்கு ஒரு வழியாகும். இவ்விதமாக நாம், பின்வருமாறு வாசிக்கின்றோம்: "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதைப் போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (10:25; இது என்னால் வலியுறுத்தப்படுகின்றது). இன்றைய நாட்களில் உள்ள மக்களுக்கு, "நாளானது சமீபித்து வருகிறதை" என்பது இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிப்பதாயிருக்கின்றது.[16] கிறிஸ்து எந்த நேரத்திலும் வரக் கூடும், எனவே நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டியது தேவை (மத். 25:13).

ஆராதனைக்கு வருவதில் ஒழுங்கற்று இருப்பவர்கள் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையின் மற்ற பகுதிகளிலும் ஒழுங்கற்று இருக்கின்றார்கள் என்பது பொதுவான ஒன்றாகும். எபிரெயர் 10:26-31ல் இதற்கு எதிராக எச்சரிக்கப்படுகின்றது:

> சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத் தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையும் இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே.

ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று வேதவசனங்களில் நாம் வாசித்திருக்கின்றோம். வாரத்தின் இடை நாட்களில் பல சபைகளில் பக்தி விருத்திக்காகவும், ஐக்கியத்திற்காகவும் கூட்டங்கள் தவறாது நடத்தப்படுகின்றன. கிறிஸ்துவுக்கென்று தம்மை,

*தமது வாழ்வை ஒப்புக் கொடுத்த எவரும் இப்படிப்பட்ட கூட்டங்கள் எல்லாவற்றிலும் தம்மால் கூடுமான அளவு கலந்துகொள்ள விரும்புவார். அவைகள் கிறிஸ்தவ வளர்ச்சியைத் துரிதப்படுத்தி, உண்மையில் முக்கிய மானதை நோக்கி நிலைத்த கவனம் செலுத்தும்படிக்கு அவருக்கு உதவி செய்யும்.*

## *முடிவுரை*

*ஆராதனையைப் பற்றி புதிய ஏற்பாட்டு உபதேசத்தை நீங்கள் கற்றறிந்தீர்கள். நீங்கள் கற்றறிந்த இவைகள் எந்த ஒரு மதக் குழுவையும் பரிசோதிக்கும்படி கேள்விகளைத் தயாரிக்க உதவுவதற்கு போதுமானவை களாகும். எடுத்துக்காட்டாக, "ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கின்றீர்களா?" என்று நீங்கள் கேட்க முடியும். மற்றும், "உங்கள் பிரசங்கியார்கள் தேவனுடைய வசனத்தை அறிவிப்பதில் உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றார்களா?"; "ஆராதனையில் ஆண்கள் மட்டுமே வழி நடத்துகின்றார்களா?" என்றும் நீங்கள் கேட்க முடியும்.*

*இவ்விதம் பரிசோதிக்கையில், உங்கள் சுய இருதயத்தைத் தனிப்பட்ட பரிசோதனை செய்வதைப் புறக்கணித்து விட வேண்டாம். ''கிறிஸ்தவர்களுடன் தேவனை ஆராதிப்பதை நான் மகிழ்ச்சியுடன் அநுபவிக்கின்றேனா?"; "சபை கூடுதலுக்கு நான் வரும்பொழுது, ஆராதனை செய்ய நான் ஆயத்தமாய் இருக்கின்றேனா?"; "அங்கு நான் இருக்கையில் உண்மை யிலேயே நான் ஆராதிக்கின்றேனா?" என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்.[17] இவைகள் முக்கியமான கேள்விகளாகும்.*

---

*குறிப்புகள்*

*[1]ஆதியில் இருந்த ஏவப்பட்டிராத கிறிஸ்தவ எழுத்தாளர்கள், யோவான் "கர்த்தருடைய நாள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகையில் வாரத்தின் முதல் நாளைப் பற்றியே அவ்வாறு கூறினார் என்பதை உறுதிப்படுத்தினார்கள். [2]எகிப்தியர்கள்மேல் சங்காரத்தைக் கொண்டு வந்த தேவன் அங்கிருந்த யூதர்களின் வீடுகளைக் "கடந்து சென்றதை" நினைவுகூரும் வகையில் யூதர்கள் "பஸ்கா" என்று அழைக்கப்பட்ட ஒரு பண்டிகையை ஆசரித்தார்கள் (யாத். 12ஐக் காணவும்). [3]இவ்விடத்தில் தனிப்பட்ட தகுதியுடைமை வலியுறுத்தப்படுவதில்லை (எவரொருவரும் இதில் பங்கு பெறத் தகுதியுடைவர்கள் அல்ல), ஆனால் பங்கு பெறும் விதம் தான் வலியுறுத்தப்படுகின்றது. "அபாத்திரமாய்ப்" பங்கு பெறுதல் என்றால் கிறிஸ்தவர்கள் இயேசுவின் தியாகத்தைத் தங்களின் இருதயங்களில் மதிப்புணர்வுடன் சிந்திக்காது பங்கு பெறுவதைச் சுட்டிக்காட்டுகின்றது. [4]பஸ்கா பண்டிகையின் போது புளிப்பில்லாத அப்பம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது (யாத். 12:15க் காணவும்). [5]மத்தேயு 26:29; மாற்கு 14:25; லூக்கா 22:18 ஆகிய வசனங்களைக் காணவும். இன்றைய நாட்களில்* "fruit of the vine" *என்பது பலவகைச் சாறுகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படக் கூடும்; ஆனால் அந்தக் காலத்தில் மற்றும் அந்த இடத்தில், அது திராட்ச ரசத்தையே அர்த்தப்படுத்தியது. [6]மத அமைப்புகள் சிலவற்றில், தேர்ந்தெடுத்த ஒரு சிலர் மட்டும் திராட்ச ரசத்தில் பங்கு பெற்றுக் கொள்கின்றார்கள். மற்றவர்கள் அப்பத்தில் மட்டும் பங்கு பெறுகின்றார்கள். இது புதிய ஏற்பாட்டு முன்மாதிரியை மீறும் செயல் ஆகும். [7]*NASB*யில்* "sharing" *(பகிர்ந்து கொள்ளுதல்)*

என்றுள்ளது. [8]புதிய ஏற்பாட்டில் "அப்பம் பிட்குதல்" என்ற சொற்றொடரானது சாதாரண உணவையும் குறிப்பிடக் கூடும். சந்தர்ப்பப் பொருள்தான் அது சாதாரண உணவா அல்லது கர்த்தருடைய இராப்போஜனமா என்பதைத் தீர்மானிக்கின்றது. [9]பவுல் அவர்களுக்கு என்ன சொன்னார் என்பதை மிகச் சரியாக நாம் அறியவில்லை, ஆனால் தேவனுடைய வசனமானது எப்பொழுதும் அவருடைய உதடுகளில் இருந்தது என்பதை நாம் அறிகின்றோம். அதே பயணத்தின்போது அவர் மற்ற கிறிஸ்தவர்களுக்கு என்ன சொன்னார் என்பதற்கான எடுத்துக்காட்டு ஒன்றை அப். 20:31, 32ல் காணவும். [10]வேதாகமம் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை எந்த மறுப்புமின்றி முதலாவது பிரசங்கியார் விசுவாசிக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, நாமகரணக் கூட்டங்கள் சிலவற்றின் பிரசங்க மேடைகள் வேதாகமத்தின் ஏவுதலை விசுவாசியாத மனிதர்களால் நிறைந்துள்ளன.

[11]1 தீமோத்தேயு 2:8, 11, 12 ஆகிய வசனங்களையும் காணவும். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் பெண்கள் போதிப்பதற்குப் புதிய ஏற்பாடு அனுமதிக்கின்றது (அப். 18:26), ஆனால் சபையார் ஆராதனைக்காகக் கூடி வந்திருக்கும்போது, பெண்கள் போதிக்கவோ அல்லது பிரசங்கிக்கவோ கூடாது. [12]"ஆமென்" என்றால் "அப்படியே ஆகட்டும்" என்பது ஒரு எளிய விளக்கமாகும். இது வெறுமனே, "ஜெபத்தை முடிக்கும்" வார்த்தையாக மட்டும் இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு பிரசங்கியார் சொல்வதை நீங்கள் ஒப்புக் கொண்டால், உங்கள் ஒப்புதலை "ஆமென்" என்று சொல்லுவதன் மூலம் சுட்டிக்காட்ட முடியும். [13]சாதாரணமாக இது பணமாய்க் கொடுப்பதாகவே உள்ளது, ஆனால் மற்ற பொருட்களையும் காணிக்கையாகக் கொடுக்கலாம். [14]"வரவுக்குத் தக்கதாக" என்றால், சம்பாதித்த எல்லாவற்றையும் குறிக்கின்றது. இந்நாட்களில் முன்னேறுதல் என்ற வார்த்தையின் பயன்பாடு இன்றியே வேதாகமத்தின்படி நாம் அபிவிருத்தி அடைய முடியும். [15]இதை முதலாவது படிக்கையில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தனிப்பட்ட முறையில் பணத்தைச் சேர்த்து வைக்கும்படி கூறுவது போலத் தோன்றும். ஆயினும், தாம் வரும்போது பணஞ் சேர்க்குதல் என்ற செயலைத் தவிர்க்கவே பவுல் இதை அவசியப்படுத்தினார். இது சபையார் மேற்கொள்ள வேண்டிய "சேகரிப்பாக" இருந்தது (வ. 1), இதன் மூலம் பவுல் வருகையில், "பணம் சேர்க்குதல்" செய்யும்படியான தேவை இருக்காது (வ. 2). ஆகவே, "எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" என்ற முயற்சியானது பணமானது பொது நிதியில் (சில வேளைகளில் "சபைக் கருவூலம்" என்று அழைக்கப்படுகின்றது) சேர்த்து வைக்கப்படும் வெளியரங்கமான சபை நடவடிக்கையாகத்தான் இது இருக்க வேண்டும். [16]எபிரெய நிருபத்தின் தொடக்க வாசகர்களுக்கு இந்த "நாளானது" என்பது எருசலேமின் அழிவு நாளாக இருந்ததென்று சிலர் நினைக்கின்றார்கள். [17]சிறு பிள்ளைகளையுடைய தாய்மார்களுக்கு இவ்விடத்தில் நான் ஒரு சிறப்புக் குறிப்பைச் சேர்க்க வேண்டும்: உங்கள் பிள்ளைகள் சிறியவர்களாய் இருக்கையில் நீங்கள் ஆராதிப்பது என்பது மிகவும் கடினமானதாக இருக்கின்றது, ஆனால் இது உங்களின் உண்மையுள்ள வருகையை உருக்குலைத்து விடக் கூடாது. ஆராதனையின்போது உங்களால் முடிந்த அளவு சிறந்த செயல் செய்யுங்கள். "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்" (எபே. 6:4) உங்கள் குழந்தைகளை நீங்கள் வளர்ப்பதை தேவன் புரிந்து கொள்வார்.

10

# இயேசுவின் சபை: ஆராதனை (2)

*முந்திய பாடமானது ஆராதனையின் நான்கு வெளிப்பாடுகளின் மீது கவனம் செலுத்தியது: அவைகள் கர்த்தருடைய இராப்போஜனம், தேவ வசனத்தைப் போதித்தல் மற்றும் பிரசங்கித்தல், ஜெபம் மற்றும் கொடுத்தல் ஆகியவைகள் எனப்படுகின்றன. இந்த பாடத்தில் ஆராதனையின் ஐந்தாவது வெளிப்பாடாகிய பாடுதல் என்பது பற்றி அதிக விபரமாய்க் காண்போம்.*

*பாடுதல் என்பது எப்பொழுதுமே ஆராதனையின் இயல்பான ஒரு வெளிப்பாடாக இருந்துள்ளது. பழைய ஏற்பாட்டில் தாவீது, "கர்த்தரைப்பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" (சங். 27:6இ) என்று கூறினார். புதிய ஏற்பாட்டில், பாடுதலும் ஆராதனையின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றது.*

*நமது தனிப்பட்ட பக்தி முயற்சிகளில் பாடுதல் உள்ளடக்கப்பட வேண்டும். யாக்கோபு, "ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" (யாக். 5:13ஆ) என்று எழுதினார். நம்மில் சிலர், நமது பெற்றோர்கள் அல்லது பெற்றோரின் பெற்றோர்கள் வேலை செய்கையில் பாடல்கள் பாடியதை நினைவுகூரக்கூடும்.*

*பாடுதல் என்பது வெளியரங்கமான ஆராதனையின் பாகமாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டுள்ளார். எபிரெயர் 2:12ஆ வில், "சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்" என்று கூறப்படுகின்றது.[1] "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர்" (எபே. 5:19அ) பேசும்படிப் பவுல், எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குக் கட்டளையிட்டார். மேலும் அவர் கொலோசெயில் இருந்த சபையாருக்கு, "சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும், ஞானப்பாட்டுகளினாலும்" (கொலோ. 3:16) ஒருவருக் கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொள்ளும்படி கூறினார். 1 கொரிந்தியர் 14ல், வெளியரங்கமான ஆராதனைக்கான வழிகாட்டுதல் களைப் பவுல் கொடுக்கையில், "ஆவியோடும் பாடுவேன் ... கருத்தோடும் பாடுவேன்" (1 கொரி. 14:15) என்று சுட்டிக் காட்டினார்.*

*இந்தப் பாடத்தில், வெளியரங்கமான ஆராதனையானது வலியுறுத்தப்படும். இங்கு உள்ளடங்கும் கொள்கைகள் தனிப்பட்ட ஆராதனையிலும் நடைமுறைப்படுத்தப்படலாம்.*

# தேவன் எதை விரும்புகின்றார்

*பாடுதல் பற்றிய புதிய ஏற்பாட்டு வசனப் பகுதிகளின் பட்டியலில் மாற்கு 14:26ம் உள்ளடங்கும். அதில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒலிவமலைக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினார்கள்.[2] அப்பட்டியலில் அப். 16:25ம் உள்ளடங்கும், அதில் நடுராத்திரியிலே "பவுலும் சீலாவும் ... தேவனைத் துதித்துப் பாடினார்கள்." இயேசுவும் அவரைப் பின்பற்றியவர்களும் என்னைப் போலவே பாடுவதில் விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள் என்று இவ்வசனங்கள் எனக்குக் கூறுவதால், இவைகளை நான் மிகவும் விரும்புகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டவற்றுடன், இப்பட்டியலில் பின்வரும் மற்ற வசனங்களும் சேர்க்கப்படும்:[3]*

> *... அந்தப்படி: இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது (ரோமர் 15:9).*

> *... நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் (1 கொரி. 14:15).*

> *உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் ... (எபி. 2:12).*

> *உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக் கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக் கடவன் (யாக். 5:13).*

*ஆராதனையில் பாடுதல் என்பது பற்றி நாம் அறியத் தேவையானது என்ன என்பதை எபே. 5:19 மற்றும் கொலோ. 3:16 ஆகிய வசனங்கள் சுருக்கிக் கூறுகின்றன. இவையிரண்டும் ஒரே மாதிரியான வசனங்களாய் இருக்கின்றன:*

> *சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி (எபே. 5:19).*

> *கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (கொலோ. 3:16).*

*ஒவ்வொருவரும் பாடும்படி தேவன் விரும்புகின்றார் என்று இவ்வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலர் மட்டும் பாடும்படி இக்கட்டளையில் கூறப்படவில்லை. அழகான குரல்கள்*

உடையவர்களுக்கு மட்டும் என்று இது வரைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த அறிவுறுத்தல்கள் முழு சபையாருக்கும் கூறப்பட்டன. எவரொருவரும் வெறுமனே அமர்ந்து கேட்கும்படியாக தேவன் விரும்புவதில்லை; ஒவ்வொருவரும் பாடும்படியாகவே அவர் விரும்புகின்றார்.[4] தனிநபர் ஒருவர் பாடுந்திறமை பெற்றோ அல்லது பெறாமலோ இருக்கலாம், ஆனாலும் கூட அவர், (பழைய ஏற்பாட்டு எழுத்தாளர் ஒருவரின் வார்த்தையில் உள்ளது போல) கர்த்தரைக் "கெம்பீரமாய்ப் பாட" (சங். 95:1)[5] முடியும்.

தேவன், தமது மக்கள் எவ்வகையான பாடல்களை ஆராதனையில் பயன்படுத்துவதை விரும்புகின்றார் என்பதையும் இவ்வசனப் பகுதிகள் நமக்குக் கூறுகின்றன: அவைகள், ''சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாட்டுகள்'' ஆகியவையாகும். இம்மூன்று வகைகளையும் வேறுபடுத்திக் காட்டுவதென்பது மிகவும் கடினமானதாகும்,[6] ஆனால் ''ஆவிக்குரிய'' என்பது இவ்விடத்தில் திறவுகோல் வார்த்தையாக இருக்கின்றது: ஆராதனையில் பயன்படுத்தப்படும் பாடல்கள் மாம்சத்திற்கேற்றதாய் இல்லாமல், ஆவிக்கேற்றதாய் இருக்க வேண்டும்.[7]

மேலும், இவ்விரண்டு வசனங்களும், நமது பாடல்கள் இலக்குள்ளதாயிருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றன: சில வேளைகளில் அவைகள் புறம்பான இலக்குள்ளவைகளாயிருக்கும்: "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு"; "ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு." மற்ற வேளைகளில் அவைகள் மேல் நோக்கிய இலக்குள்ளவைகளாய் இருக்க வேண்டும்: "உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி"; "உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி."

பல பாடல்கள் சக கிறிஸ்தவர்களுக்கோ அல்லது கிறிஸ்துவை ஏற்க வேண்டியவர்களுக்கோ புத்தி கூறும் வகையில் அமைந்துள்ளன:

> அழைக்கிறார், அழைக்கிறார் இதோ!
> நீயும் வா உந்தன் நேசர்
> ஆவலாய் அழைக்கிறார் இதோ.
>
> கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
> கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
> கைவிடா காத்திடும் பரமனின்
> கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்.

மற்ற பாடல்கள் துதி மற்றும் நன்றிகளை, தேவன் மற்றும் இயேசுவை நோக்கிச் செலுத்துவதாக அமைந்துள்ளன,

> நன்றியால் துதிப்பாடு உன் இயேசுவை
> உள்ளத்தால் என்றும் பாடு.

நிறைவாக இவ்வசனப் பகுதிகளில், கிறிஸ்தவர்கள் வெறுமனே தங்கள் உதடுகளினால் மட்டும் பாடக்கூடாது, என்பது வலியுறுத்தப்படுகின்றது;

அவர்கள் தங்கள் இருதயங்களில் "கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி"; "தங்கள் இருதயங்களில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி." ஆராதிப்பவர்கள் தாங்கள் பாடுகின்ற பாடல்களின் வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் "ஆவியோடும் ... கருத்தோடும்" (1 கொரி. 14:15) பாட வேண்டியதாயிருக்கின்றது. இருதயத்திலிருந்து வராத பாடல் எதுவும் நாம் இருக்கும் அறையின் கூரையைக் காட்டிலும் உயர எழும்புவதில்லை.

## தேவன் எதை விரும்பாதிருக்கின்றார்


நாம் படித்த வசனப் பகுதிகளில் மனிதக் குரல் மற்றும் இருதயம் என்ற ''இசைக் கருவிகள்'' மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் கவனித்திருக்கலாம். இசையமைக்கும் எந்திர இசைக் கருவிகளைப் பற்றி குறிப்பு எதுவும் இருக்கவில்லை.[8] புதிய ஏற்பாடு முழுவதையும் நீங்கள் படித்துப் பாருங்கள், அதில் எவ்விடத்திலும் கர்த்தருடைய சபை ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டதாக நீங்கள் காணமாட்டீர்கள்.[9] வீணை மற்றும் பல இசைக் கருவிகள் பழைய ஏற்பாட்டு ஆராதனையில் பயன்படுத்தப்பட்டன (எடுத்துக்காட்டாக, சங்கீதம் 150), ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், கிறிஸ்தவர்களின் ஆராதனையில் அவை இருக்கவில்லை.[10]

நாம் அறிந்த வரையில், ஆதி கிறிஸ்தவர்களுக்கு, ''ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் இருப்பாயாக" என்று ஒருபொழுதும் கூறப்பட்டதில்லை. பின்பு ஏன் கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகள் தவிர்க்கப்பட்டன? கர்த்தருடைய பந்தியில் இட்லியும், தேநீரும் காணப்படாமலிருப்பதன் அதே அடிப்படையில் இருந்தே இம்முடிவு மேற்கொள்ளப்படக் கூடும்: தேவன் மிகச் சரியாகத் தாம் விரும்புவது என்ன என்று கூறும் பொழுது, அதே வகையில் இருந்து மற்ற எல்லாவற்றையும் அக்கூற்று நீக்கி விடுகின்றது.


சில வேளைகளில் இது ''தவிர்த்தலின் கொள்கை'' என்று அழைக்கப்படுகின்றது. "தவிர்த்தலின் கொள்கை" என்ற விளக்கத்தை நீங்கள் ஒருபொழுதும் கேள்விப்படாமல் இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு நாளும் நீங்கள் இந்தக் கொள்கையைப் பயன்படுத்துகின்றீர்கள்: சுவர் ஒன்றுக்கு வெள்ளை வண்ணம் பூசும்படி ஒருவரை நீங்கள் கூலிக்கு அமர்த்தினால், அவரிடத்தில் நீங்கள், "சிவப்பு ... அல்லது நீலம் ... அல்லது பச்சை ... அல்லது கறுப்பு வண்ணம் பூச வேண்டாம்" என்று கூறத் தேவையில்லை. "நீங்கள் விரும்புவதைக் குறிப்பிட்டு, வெள்ளை வண்ணம் பூசுங்கள்'' என்று கூறினால், அது (அக்கூற்று) தானாகவே மற்ற எல்லா வண்ணங்களையும் தவிர்த்து விடுகின்றது.

வேதாகமம் தவிர்த்தலின் கொள்கைக்கான எடுத்துக்காட்டுகளால் நிறைந்துள்ளது. நோவாவுக்கு ஒரு பேழையைக் கட்டும்படி கூறப்பட்டது (ஆதி. 6:14). ''அதை மரத்தினால் கட்டு'' என்று அவருக்குக் கூறப்பட்டிருந்தால் அவர் எந்த வகையான மரத்தையாவது பயன்படுத்தியிருக்க முடியும்: ஓக், பைன், கொப்பேர் மரம் அல்லது அவர்

*விரும்பிய எந்த வகையான மரத்தையும் பயன்படுத்தியிருக்க முடியும்.*





*மாறாக, தேவன் தம்முடைய குறிப்பான அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்: கொப்பேர் மரத்தினால் அதைக் கட்டும்படி நோவாவுக்கு அவர் கூறினார் (ஆதி. 6:14).*[11] *கர்த்தர், "ஓக், அல்லது பைன் அல்லது வேறு எவ்வகையான மரத்தினாலாவது ... பேழையைக் கட்ட வேண்டாம்" என்று கர்த்தர் கூறியிருக்க வேண்டியிராதிருந்தது. அவர் கொப்பேர் மரத்தைக் குறிப்பாகக் கூறியது, மற்ற எல்லா வகையான மரங்களையும் தவிர்த்தது.*





*இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து தப்பிச் செல்வதற்குச் சற்று முன்னதாக, தங்கள் வீடுகளில் மரணம் நேராதபடிக்குத் தங்கள் வீடுகளின் நிலைக்கால்கள் மேலும், நிலைச் சட்டத்தின் மீதும் இரத்தம் பூச வேண்டும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது (யாத். 12:7, 13). "ஒரு மிருகத்தின் இரத்தத்தைப் பயன்படுத்து" என்று தேவன் கூறியிருந்தால் அடிப்பதற்கு அவர்கள், ஒரு மாடு, ஒரு வெள்ளாடு, ஒரு ஆட்டுக்குட்டி, அல்லது வேறு ஏதாவது மிருகத்தைத் தேர்ந்தெடுத்திருக்க முடியும். ஆயினும் தேவன் அவர்களிடத்தில், ஒரு ஆட்டுக் குட்டியின் இரத்தத்தைப் பயன்படுத்தும்படிக் குறிப்பாகக் கூறினார் (யாத். 12:3, 7). தேவன், "ஒரு மாடு, அல்லது ஒரு வெள்ளாடு அல்லது வேறு ஏதேனும் மிருகம்*

ஆகியவற்றின் இரத்தத்தை நிலைக்கால்கள் மற்றும் நிலைச் சட்டத்தின் மீது பூச வேண்டாம்" என்று தேவன் கூறவில்லை. அவர், "ஒரு ஆட்டுக்குட்டி" என்று கூறியபோது, அது மற்ற எந்த வகை மிருகத்தையும் தவிர்த்தது.





நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று தேவன் கட்டளை யிட்டுள்ளார் (அப். 2:38). இந்தக் கட்டளையைப் பொருத்தமட்டில் கர்த்தர், "ஞானஸ்நானம் பெறுபவர் மேல் தண்ணீரைப் பயன்படுத்து" என்று கூறியிருந்தால், நமது கற்பனையில் காணும் ஏதோ ஒரு வகையில் நாம் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். நாம் மக்கள்மேல் தண்ணீரைத் தெளிக்கலாம்; மக்கள்மேல் தண்ணீரை ஊற்றலாம்; மக்களைத் தண்ணீருக்குள் முழுக்காட்டலாம் - ஆனால் நாம் கண்டுள்ளபடி, முழுக்காட்டுதலே வேதவசனத்தின்படியான ஞானஸ்நானமாய் இருக்கின்றது. புதிய ஏற்பாடானது, "தண்ணீரைத் தெளித்தோ அல்லது ஊற்றியோ அதை ஞானஸ்நானம் என்று அழைக்க வேண்டாம்" என்று கூற வேண்டியதில்லை. முழுக்காட்டுதல் குறிப்பாய்க் காட்டப்பட்டபோது, அது தெளித்தல் மற்றும் ஊற்றுதலைத் தவிர்த்தது.




கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு நிறுவனம் செய்தபோது,

"எனது சரீரத்தின் நினைவாகப் பொதுவான ஒரு உணவையும், எனது இரத்தத்தின் நினைவாகப் பொதுவான ஒரு பானத்தையும் பயன் படுத்துங்கள்" என்று அவர் கூறியிருந்தால், சபையானது எந்த உணவையும் பானத்தையும் பயன் படுத்துவது என்று முடிவு செய்யும் முறையில் சுயாதீன முள்ளதாய் இருந்திருக்கும். சிலருக்கு இட்லியும் தேநீரும் பிடிக்கும், மற்றவர்களுக்கு பிஸ்கெட்டும் பாலும் வைக்க விரும்பலாம். இருந்தாலும் நாம் கண்டுள்ளபடி, புளிப்பில்லாத அப்பமும், திராட்ச ரசமும் இயேசுவாலும் ஆதிக்கிறிஸ்தவர்களாலும் பயன்படுத்தப்பட்டது. கர்த்தரைப் பிரியப்படுத்த விரும்புகின்றவர்களுக்கு, "இட்லியும் தேநீரும் பயன்படுத்த வேண்டாம், பிஸ்கெட்டும் பாலும் பயன்படுத்த வேண்டாம்" என்று கூறப்பட வேண்டியிருக்கவில்லை. தேவன் வெளிப்படுத்தியதில் நிலைநிற்பதுடன் அவர்கள் திருப்தியடைய வேண்டியதாய் இருந்தது.





புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்சரசம் ஆகியவற்றிற்குப் பதிலாக இட்லியும் தேநீரும் பயன்படுத்துவது தவறாகும் என்று உங்களால் காண முடிகின்றதா? கர்த்தருடைய பந்தியில் இட்லி மற்றும் தேநீரைச் சேர்ப்பதும் தவறாகும் என்று உங்களால் காண முடிகின்றதா?[12] என் அனுபவத்தில், தனிநபர் ஒருவர் இட்லியையும் தேநீரையும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் சேர்ப்பது தேவ தூஷணமாகும் என்பதைக் காண முடியாவிட்டால், அவர் பாடுதலில் இசைக் கருவிகளின் இசையைச் சேர்ப்பதில் உள்ள தீமையை ஒருபொழுதும் காணமாட்டார்.

ஆராதனையில் பாடுதல் என்ற கருத்திற்கு, தவிர்த்தலின் கொள்கை எப்படி நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்று ஒருவேளை நீங்கள் அறிய விரும்பலாம்: தேவன், "நீங்கள் ஆராதிக்கும்பொழுது இசையைப் பயன்படுத்துங்கள்" என்று கூறியிருந்தால், சபையானது பாடல் பாடுதல், இசைக் கருவிகளை இசைத்தல் அல்லது இவ்விரண்டையும் இணைத்துப்

*பாடுதல் ஆகிய எதையாவது செய்திருக்கலாம் - ஆனால் தேவன், தாம் விரும்பியதைக் குறிப்பிட்டார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *... பாடுவேன் ... (ரோமர் 15:9).*
> *... பாடுவேன் ... (1 கொரி. 14:15).*
> *... உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, (எபே. 5:19).*
> *... உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; (கொலோ. 3:16).*
> *... பாடுவேன் ... (எபி. 2:12).*
> *... ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் (யாக். 5:13).*

*‘‘கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன் படுத்தாதிருப்பாயாக’’ என்று தேவன் கூற வேண்டியதில்லை. அவர், பாடுதலைக் குறிப்பிட்ட போது, அது வேறு எவ்வகையான இசையையும் தவிர்த்தது.*




*ஆதிக்கிறிஸ்தவர்கள் தவிர்த்தலின் விதியைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார்கள் - ஏனெனில் பழைய ஏற்பாட்டு ஆராதனையில் பயன்படுத்தப்பட்ட பல்வகை இசைக் கருவிகளையும் அவர்கள் தங்களுடைய ஆராதனையில் தவிர்த்திருந்தார்கள். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு[13] கத்தோலிக்க சபையானது தனது ஆராதனையில் ஆர்மோனியத்தை அறிமுகப்படுத்தும் வரையிலும் கிறிஸ்தவ ஆராதனையில்* a capella[14] *(வாய்ப்பாட்டு) தான் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கல்வியாளர்கள் பொதுவாக ஒப்புக் கொள்கின்றார்கள்.*

# முடிவுரை

ஆராதனையின் மற்ற எல்லா வெளிப்பாடுகளிலும் உள்ளது போலவே, பாடுதலிலும் சரியான செயல்கள் மற்றும் சரியான எண்ணப்போக்குகள் இருப்பதென்பது சபைக்குத் தேவையானதாகும். தேவன் கட்டளையிட்டிருப்பது எதுவோ, அதை மிகச் சரியாகச் செய்வதில் உறுப்பினர்கள் முதலாவது கவனம் செலுத்த வேண்டும். தேவனை, அவருக்குப் பிரியமான வகையில் ஆராதிப்பதில் அவர்களின் இருதயங்கள் நிலைநிற்க வேண்டும் (எபே. 5:10). ஆராதனையில் இந்த விதமான அல்லது வேறு விதமான வெளிப்பாடு தேவனைப் பிரியப்படுத்தும் என்று நான் நினைக்கலாம், ஆனால் தேவனைப் பிரியப்படுத்தும் வழியை அவர் வெளிப்படுத்தியுள்ள வசனத்தைப் படிப்பதன் மூலம் மட்டுமே நான் *அறிந்து கொள்ள* முடியும்.

கிறிஸ்தவர்கள் பாடுகையில், அவர்களின் இருதயங்கள் தேவனைத் துதிப்பதில் நிலைநிற்க வேண்டும் (அப். 2:47; ரோமர் 14:11; 15:11; பிலி. 1:10; எபி. 13:15). அவர்கள், "[தங்கள்] இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்" (கொலோ. 3:16) பாட வேண்டும். அவர்கள், "... ஆவியோடும் ... கருத்தோடும் ..." (1 கொரி. 14:15) பாட வேண்டும்.

"என்ன" மற்றும் "எப்படி" என்பதைக் கவனித்துப் பார்க்கையில், உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள், தேவனை "ஆவியோடும் உண்மையோடும்" (யோவா. 4:24) தொழுது கொள்ள முடியும்.

குறிப்புகள்

[1]எழுத்தாளர், சங்கீதம் 22:22 என்ற பழைய ஏற்பாட்டு வசனத்தை மேற்கோள் காட்டினார். [2]மத்தேயு 26:30ஐயும் காணவும். [3]தேவனை உதடுகளினால் துதிப்பதைக் குறிப்பிடும் எபிரெயர் 13:15 போன்ற வசனப்பகுதிகளும் இப்பட்டியலில் அடங்கலாம். இந்தச் சந்தர்ப்பப் பொருளில் உள்ள அனைத்து வசனங்களையும் படிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். [4]சில வேளைகளில் (குரல்வளை வியாதியினால்) ஒருவர் பாட முடியாமல் போகும் சந்தர்ப்பம் நேரிடலாம், ஆனால் இவைகள் விதிவிலக்கு தானே தவிர விதியாகி விடுவதில்லை. [5]சங்கீதம் 95:1ஐ வாசியுங்கள், அப்பொழுது நீங்கள் "கெம்பீரமாய்ப் பாடுவது" என்பது கட்டுக்கடங்கா மகிழ்வுணர்வுடன் பாடுதலைக் குறிக்கின்றது என்பதைக் காண்பீர்கள். [6]"சங்கீதங்கள்" என்பவை துதிக்கும் பாடல்கள் என்றும், "கீர்த்தனைகள்" என்பவை அதிக கம்பீரமான பாடல்கள் என்றும், "ஞானப்பாடல்கள்" என்பவை அதிக உற்சாக மூட்டுபவை என்றும் சிலர் நினைக்கின்றார்கள். இம்மூன்று சொற்றொடர்களுக்கும் இடையில் பெரிய வேறுபாடுகளை ஏற்படுத்த நாம் அநேகமாக விரும்புவதில்லை. ஆராதனையில் பாடல் பாடுதல் என்ற ஒரே கருத்தை உற்று நோக்கும் மூன்று வழிகளாக மட்டுமே இவை உள்ளன. [7]ஒரு பாடல் ஆவிக்கேற்றதா அல்லது மாம்சத்திற்கேற்றதா என்பதை நிதானித்து முடிவு செய்ய வேண்டியதாயிருக்கின்றது, ஆனால் தேவன், தமது மக்கள் ஆவிக்குரிய பாடல்களைப் பாடுவதையே விரும்புகின்றார். [8]"இசையமைக்கும் எந்திர இசைக் கருவிகள்" என்பது நீளமான மற்றும் அழகற்ற சொற்றொடராக உள்ளது. காலம் மற்றும் இடத்தைச் சேமிப்பதற்காக இப்பாடத்தின் இப்பகுதியிலிருந்து இனி நான் "இசைக் கருவிகள்" என்று குறிப்பிடும்பொழுது, நான் "இசையமைக்கும் எந்திர இசைக் கருவிகளையே" அர்த்தப்படுத்துகின்றேன். [9]எந்திர இசைக் கருவிகளைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் அவ்வப்போது நீங்கள் காண்பீர்கள், ஆனால் கிறிஸ்தவ ஆராதனையின் சந்தர்ப்பப் பொருளில் அவை காணப்படுவதில்லை (1 கொரி. 13:1ல் உள்ளது போல) இசைக் கருவிகள் விளக்கத்திற்காகவும், மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தின்

அடையாளக் குறிகளின் ஒரு பகுதியாகவும் (வெளி. 5:8ல் தூபவர்க்கத்துடன் இணைந்து வருவது போன்று) குறிப்பிடப்படுகின்றன. ஆயினும், கர்த்தருடைய சபையில் எந்திர இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டதாக ஒரு இடத்தில் கூடக் குறிப்பிடப்படவில்லை. [10]கல்வியாளர்கள் பொதுவாக இதை ஒப்புக் கொள்கின்றார்கள். இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள் ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்துவதற்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து எழுதினார்கள்.

[11]இன்றைய நாட்களில் நாம் “கொப்பேர்” மரம் என்றால் எது என்பதை உறுதியாக அறிய முடியவில்லை, ஆனால் அது முக்கியமற்றது. தேவன் விரும்பிய மரவகை எது என்பதை நோவா அறிந்திருந்தார் என்பதே முக்கியமானதாகும். [12]தேவனுடைய வெளிப்படுத்துதலுடன் வேறொன்றைச் சேர்க்கும் பாவமானது, அவருடைய வெளிப்படுத்துதலுக்குப் பதிலாக இன்னொன்றைப் பயன்படுத்தும் பாவத்தைப் போன்றே மிகவும் மோசமானதாகும் (வெளி. 22:18, 19ஐக் காணவும்). [13]6ம் மற்றும் 7ம் நூற்றாண்டுகளில் இசைக் கருவிகளை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவைகள் இடையில் கலைந்து போயின, கி.பி. 1250 வரையிலும் இசைக் கருவிகள் அறிமுகப்படுத்தப் படவில்லை. [14]A cappella என்பதன் நேரடிப் பொருள் “chapel style” (ஆலய முறைமை) என்பதாகும். இன்றைய நாட்களில் இச்சொற்றொடரானது முற்றிலும் வாய்ப்பாட்டாகவே உள்ள இசையைக் குறிப்பிடப் பயன்படுகின்றது.

11

# இயேசுவின் சபை:

# ஊழியம்

*இயேசுவின் சபையைப் பற்றிய மற்ற தனிச் சிறப்பான அடையாளங்களைக் குறிப்பிட முடியும்,[1] ஆனால் இன்னும் ஒரே ஒரு அடையாளத்தைப் பற்றி மட்டும் நான் கலந்துரையாடுவேன். பிறகு நமது பாடத்தின் இந்தப் பகுதியை நான் நிறைவு செய்து விடுவேன்.*

## சபைக்கு அறைகூவல்

*சபை என்பது தெய்வீக ஊழியம் ஒன்றைப் பெற்ற தெய்வீக அமைப்பாக இருக்கின்றது. ஒருமுறை இயேசு தமது ஊழியத்தைப் பற்றிப் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு விளக்கப்படுத்தினார்: ''இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' (லூக். 19:10). அவரது சபையும் அதே நோக்கத்தை உடையதாகவே இருக்கின்றது. அநேக இலக்குகள் முக்கியமானவைகளாய் இருக்கின்றன, ஆனால் ஒன்றே ஒன்று தான் அதிக அவசரமான முக்கியத்துவம் உடையதாகும்: அது பரலோகம் செல்லுதல் என்பதேயாகும். "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (மத். 16:26அ).*

*''இழந்துபோ[யிருப்பதை]னதை இரட்சித்தல்'' என்ற சபைக்கான அறைகூவலை, குறைந்தபட்சம் மூன்று பொறுப்புக்களாகப் பிரிக்க முடியும்:*

*(1) சுவிசேஷ ஊழியம். ''சுவிசேஷம் அறிவித்தல்'' என்ற வார்த்தையானது, "[இயேசுவைப் பற்றிய] நற்செய்தியைக் கூறுதல்" என்று அர்த்தப்படுகின்றது. இயேசுவின் பிரதான கட்டளையில் நற்செய்தியைக் கூறும் பொறுப்பு கொடுக்கப்பட்டது:*

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் ஆமென் (மத். 28:19, 20).*

> *பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.*

*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் (மாற். 16:15, 16).*

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடத்திலும் இயேசுவைப் பற்றியும், அவரது வழியைப் பற்றியும் போதிக்க வேண்டும்.

*(2) பக்தி விருத்தியூட்டுதல்.* "Edify" என்ற ஆங்கில வார்த்தை ''கட்டியெழுப்ப'' என்று அர்த்தப்படுத்துகின்றது. போதித்தல் மற்றும் ஆறுதல் அளித்தல் மூலமாகக் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் கட்டியெழுப்ப வேண்டும். எபேசியர் 4:15, 16 வசனப் பகுதியானது இந்த அறைகூவல் காணப்படும் ஒரு இடமாகும்:

*அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி [அல்லது கட்டியெழுப்புதல்] உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.*

*(3) தான தர்மங்கள்:* ஆங்கிலத்தில் "benevolence" என்ற வார்த்தையானது மற்றவர்கள் "நன்றாயிருக்க வேண்டும்" என்பதற்காக நாம் செய்யும் உதவிகளைக் குறிக்கின்றது. தான தர்மங்கள் என்பது உணவு, உடை போன்ற சரீரத் தேவைகள் உட்பட தேவைப்படும் பொருட்களைக் கொடுத்து உதவுவதாக உள்ளது. மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய பொறுப்பைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் பல வசனப் பகுதிகள் பேசுகின்றன.

*திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக். 1:27).*

*ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம் (கலா. 6:10).*

பல வகையான செயல்பாடுகளினால் பக்க வழிகளில் செலுத்தப்பட்டு தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியத்தை மறந்து போவதென்பது சபையொன்றிற்கு - எந்த சபைக்கும் - சுலபமானதாயிருக்கின்றது.

## உங்களுக்கு ஒரு அறைகூவல்

*நாம் இணைந்து படிக்கும் நமது பாடமானது செயலூக்க முடையதாவதற்கு அது நமக்குச் சொந்தமானதாகவும் நடைமுறைப் படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இயேசுவின் சபை பற்றிய (இப்பாடம் உட்பட) ஆறு பாடங்களையும் நீங்கள் மறு ஆய்வு செய்யும்படி நான் விரும்புகின்றேன். பிறகு, கர்த்தருடைய சபையைப் பற்றி புதிய ஏற்பாடு போதிக்கின்றவற்றை மற்ற மத அமைப்புகள் சிலவற்றுடன் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கும்படி விரும்புகின்றேன். இந்தப் பயிற்சியின் நோக்கத்திற்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் மார்க்க அமைப்பு எது என்பதைப் பற்றி கவலையில்லை. (அது நீங்கள் விரும்புகின்ற ஒன்றாகவோ அல்லது விரும்பாத ஒன்றாகவோ இருக்கலாம்.) இது தனிச் சிறப்பைக் கண்டறிய உங்களை உற்சாகப்படுத்தும் ஒரு பயிற்சியாகும். உங்களின் ஒப்பீட்டுப் படிப்பில் உங்களுக்கு உதவுவதற்காக முதலில் நீங்கள் கேள்விகளின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க விரும்பக் கூடும்.*

*பின்வருவன போன்று பொதுவான கேள்விகளைக் கேட்க நீங்கள் விரும்புவீர்கள்:*

- *இது தேவனையும், இயேசுவையும் மற்றும் வேதாகமத்தையும் விசுவாசித்து, தேவனுக்குப் பயந்திருக்கும் ஒரு சபையா?*
- *இது தேவனைப் பிரியப்படுத்தி மனிதர்களைப் பெலப் படுத்துவதற்குத் தன்னை ஒப்புக் கொடுத்துள்ள சபையா?*

*நமது பாடத்தின் தொடர்பாக குறிப்பிட்ட சில கேள்விகளைக் கேட்க நீங்கள் விரும்புவீர்கள்:*

- *இந்த சபையானது வேத வசனத்தின்படியான நியமனப் பெயரைக் கொண்டுள்ளதா?*
- *இந்த சபையானது வேத வசனத்தின்படியான அமைப்பு முறையைக் கொண்டுள்ளதா?*
- *இதன் பிரசங்கியார்கள்* “pastors” *(மேய்ப்பர்கள்) என்று அழைக்கப்படுகின்றார்களா? அவர்கள்* “Reverend” *(சங்கைக்குரிய) என்பது போன்ற வேத வசனத்தின்படியல்லாத பட்டங்களைக் கொண்டிருக்கின்றார்களா?*
- *இந்த சபையானது வேதவசனத்தின்படியான ஆராதனையை ஏற்றெடுக்கின்றதா? இது ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் தோறும் கர்த்தருடைய இராப் போஜனத்தைக் கடைப்பிடிக்கின்றதா? இது தனது ஆராதனையில் வாய்ப்பாடல்கள் மட்டுமே பயன் படுத்துகின்றதா?*

*உங்கள் கேள்விகளின் அட்டவணையை நீங்கள் தயாரிக்கும்போது, சபையின் இருதயம் போன்ற முக்கியக் கருத்துடன் தொடர்புடையவைகளைப் புறக்கணித்து விடாதீர்கள்.*

> *... உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே (மத். 22:37-39)*

*என்று இயேசு கூறினார். இப்படிப்பட்ட கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி உங்களை உற்சாகப்படுத்துகின்ற இடத்தில் ஊழியம் செய்யவும் ஆராதிக்கவும் நீங்கள் விரும்புவீர்கள்.*

*இந்தப் பயிற்சியின் கடைசிப் பாகமாக, உங்கள் அட்டவணையை உள்ளூரில் உள்ள கிறிஸ்துவின் சபை ஒன்றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கிறிஸ்துவின் சபைகள் யாவும் முதல் நூற்றாண்டின் சபையை மறுகட்டுமானம் செய்வதாக உரிமைகோருகின்றன. கிறிஸ்துவின் சபைகள் யாவும், "வேதாகமம் பேசும் இடத்தில் பேசுவதாகவும்" மற்றும் "வேதாகமம் அமைதியாயிருக்கும் இடத்தில் அமைதியாய் இருப்பதாகவும்" உரிமை கோருகின்றன. அவர்களின் உரிமைகோருதல்களுக்கு அறைகூவல் விடுங்கள் (அப். 17:11).*

## *முடிவுரை*

*இயேசுவின் சபையானது தேவனுடைய "நித்திய நோக்கத்தின்" பாகமாயிருந்தது (எபே. 3:9, 10). "தேவனுடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய்" இப்பொழுது "தெரிய வரலாயிற்று" (எபே. 3:10). தேவனுடைய மகிமை சபையில் பிரகாசிக்கின்றது (எபே. 3:21). சபையானது, "சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1 தீமோ. 3:15). சபையைப் பற்றிய நமது படிப்பானது, சபையை நீங்கள் இன்னும் அதிகமாய் மதிக்கும்படி செய்தது என்று நான் நம்புகின்றேன். இது (சபை) தேவனுடைய ஆச்சரியமான மற்றும் குறிப்பிடத் தக்க ஈவுகளில் ஒன்றாகும்.*

*இன்றைய நாட்களில் கர்த்தருடைய சபையை அடையாளம் கண்டு அதில் அங்கம் வகிப்பது என்பது முக்கியமானதாக இருக்கின்றது. சபைகள் பெருகியிருப்பது குழப்பத்தை ஏற்படுத்துகின்றதா? ஆம். குழப்பத்தின் நடுவில் இயேசுவின் சபையை கண்டறிவது சுலபமாயிருக்கின்றதா? இல்லை. இருந்த போதிலும், தேவனுடைய உதவியுடன் நீங்கள் அதைக் கண்டறிய முடியும். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றியுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13) என்று கூறிய பவுலைப் போன்ற நேர்மறையான எண்ணப்போக்குடையவர்களாயிருங்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]கர்த்தருடைய சபையின் தனிச் சிறப்பான அடையாளங்களில், அது எப்பொழுது மற்றும் எங்கு நிலைநாட்டப்பட்டது (அப். 2) மற்றும் சபையின் ஒருமைப்பாடு பற்றிய அதன் வலியுறுத்தல் (யோவா. 17:20, 21; 1 கொரி. 1:10-13; எபே. 4:4-6) ஆகியவை உள்ளடங்கக் கூடும்.*

12

# "மரணபரியந்தம் உண்மையாயிருங்கள்"

*நமது படிப்பின் பெரும்பகுதியானது இயேசுவில் நம்பிக்கை வைக்கும் முடிவு, கிறிஸ்தவராகும் முடிவு, எங்கு ஊழியமும் ஆராதனையும் செய்வது என்பது போன்ற முடிவுகளை மேற்கொள்வதாகவே இருந்தது. இப்படிப் போன்ற முடிவுகளை மேற்கொண்ட பிறகு, கிறிஸ்தவ வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் வாழ்வது என்ற கடினமான பணியானது வருகின்றது.*

*நமது இந்த பாடத்தில் இந்த அறைகூவலை மேலோட்டமாக மட்டுமே என்னால் தொட முடியும். ஒரு கிறிஸ்தவர் எப்படி வாழ வேண்டும் என்பது பற்றியே புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதி கூறுகின்றது. கிறிஸ்தவர் என்பவர் தம்மைத்தாமே இயேசுவைப் பின்பற்றுபவராய் நடத்திக் கொள்வதைக் கற்பதில் தமது வாழ்வு முழுவதையும் செலவழிக்கின்றார்.*

## அறைகூவல்

*வேதாகமத்தைப் பற்றி அதிகம் அறியாதவர்கள் கூட, ஒரு கிறிஸ்தவர் தம்மைச் சுற்றி இருப்பவர்களைக் காட்டிலும் அதிகமாக தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் என்று கருதுகின்றார்கள். பவுல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2) என்று கூறினார். இந்த அறைகூவலை இயேசு பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்:*

> *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது (மத். 5:14-16).*

*கலாத்தியர் 5ல் பவுல், தவிர்க்கப்பட வேண்டிய எதிர்மறையான குணங்களையும், வளர்க்கப்பட வேண்டிய நேர்மறையான பண்புகளையும் அட்டவணைப் படுத்தினார்:*

> *மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன:*

*விபசாரம், வேசித்தனம். அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலா. 5:19-23).*

*நீங்கள் பரிபூரணப்பட்ட (குறையே இல்லாத முழு நிறைவான) வாழ்வை வாழ வேண்டும் என்று இது அர்த்தப்படுகின்றதா? இல்லை, இவ்வுலகில் பரிபூரணப்பட்ட வாழ்வை வாழ்ந்தவர் இயேசு ஒருவர் மட்டுமேயாவார். இது நீங்கள் இயேசுவைப் போலாக வேண்டும் என்று அர்த்தப்படுகின்றது. உங்களால் கூடுமான அளவு நீங்கள் சிறந்தவராயிருக்க வேண்டும். பவுல், ''உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' (2 தீமோ. 2:15)[1] என்று கட்டளையிட்டார்.* NIV*யில்* "*Do your best* to present yourself to God as one approved, ..."[2] *என்றுள்ளது. தேவன், ''தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவர்'' (எபி. 11:6)[3] என்று நாம் வாசிக்கின்றோம் - "பரிபூரணத்துடன் தேடுகிறவர்களுக்கு" அல்ல, ஆனால் "ஜாக்கிரதையாய் தேடுகிறவர்களுக்கு" என்றே இவ்விடத்தில் அர்த்தப்படுகின்றது.*

## உண்மை நிலை

*சில வேளைகளில், தேவனைப் பின்பற்றுபவர்கள் கூட தாங்கள் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்வதில்லை என்பது துரதிருஷ்டவசமானது. அவர்களால் எப்படியிருக்க முடியுமோ அப்படி அவர்கள் எல்லா வேளைகளிலும் இருப்பதில்லை. விபசாரம் செய்த தாவீது அரசரிலிருந்து (2 சாமு. 11), தமது கர்த்தரை மறுதலித்த அப்போஸ்தலராகிய பேதுரு வரையிலும் (மத். 26:69-75), தேவனுடைய மக்களாயிருந்தும் பாவம் செய்தவர்களின் எடுத்துக்காட்டுகளினால் வேதாகமம் நிறைந்துள்ளது. கிறிஸ்தவர்களுக்கு யோவான், ''நாம் பாவஞ் செய்யவில்லையென்போமானால், நாம் அவரை[தேவனை]ப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1 யோவா. 1:10) என்று எழுதினார். கிறிஸ்தவர் ஒருவர் பாவம் செய்தால் என்ன செய்ய வேண்டும்?*

### மனந்திரும்புங்கள்

அவர் தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தம்மை மன்னிக்கும்படி தேவனிடத்தில் கேட்க வேண்டும். சீமோன் பாவம் செய்தபோது, பேதுரு, "ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்'' (அப். 8:22) என்று கூறினார். உண்மையான மனந்திரும்புதல் என்பது கடந்த காலத் தவறுகளை மனிதத் தன்மையுடன் முடிந்த அளவுக்குத் திருத்திக் கொள்வதேயாகும்.[4]

### பாவத்தை அறிக்கையிடுங்கள்

பாவம் செய்தோம் என்பதை ஒப்புக்கொள்ளச் சித்தமாயிருப்பதே உண்மையான மனந்திரும்புதலின் இன்றியமையாத ஒரு பாகமாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் தமது பாவங்களைத் தேவனிடத்தில் அறிக்கை செய்ய வேண்டியது தேவை. யோவான், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' (1 யோவா. 1:9) என்று கூறினார். சில வேளைகளில் கிறிஸ்தவரின் பாவம் மற்றவர்களால் அறியப்பட்டால் அல்லது மற்றவர்களைத் துன்பப்படுத்தினால் அவர் மற்றவர்களிடத்தில் தமது பாவத்தை அறிக்கை செய்ய வேண்டியது தேவையாகின்றது. யாக்கோபு, "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர்[5] அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்'' (யாக். 5:16அ) என்று எழுதினார். பாவத்தின் வெளியரங்கமான தன்மையைப் போலவே அறிக்கையிடுதலும் அமைய வேண்டும் என்பதே பொதுவான விதியாகும்.

### ஜெபியுங்கள்

மேற்கோள் காட்டப்பட்ட வசனப்பகுதிகளில் கண்டுள்ளபடி, ஜெபம் என்பது எப்பொழுதும் இருக்க வேண்டும்: கிறிஸ்தவர் ஜெபிக்க வேண்டியது தேவை (அப். 8:22), சில வேளைகளில் அவர் தமக்காக ஜெபிக்கும்படி மற்றவர்களைக் கேட்டுக் கொள்வது தேவை (யாக். 5:16).

## உறுதிப்பாடு

வேதாகமத்தில் எனக்கு மிகவும் விருப்பமான வேதவசனப் பகுதிகளில் ஒன்று, 1 யோவான் 1:7 ஆகும். இதில், "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' என்று கூறப்படுகின்றது. இவ்வசனப் பகுதியில் நிகழ்கால வினைச் சொல் பயன்படுத்தப்படுகின்றது, இது கிரேக்க மொழியில், தொடர்ந்து நடைபெறும் செயலைச்

*சுட்டிக்காட்டுகின்றது. நான் ஒளியில் தொடர்ந்து நடந்தால், கிறிஸ்துவின் இரத்தமானது எனது பாவங்களைத் தொடர்ந்து சுத்திகரிக்கும் என்பதே இதன் நேரடி அர்த்தமாகும்.*

*இது உள்ளக் கிளர்ச்சியூட்டும் ஒரு சத்தியமாகும். ஒருவர் ஞானஸ்நானம் பெற்று, தண்ணீரிலிருந்து வெளி வரும்போது இயேசுவின் இரத்தத்தினால் (வெளி. 1:6) அவரது பாவங்கள் எல்லாம் கழுவப்படுகின்றன (அப். 22:16). பிறகு, அவர் "ஒளியில் நடக்கின்ற" போது, இயேசுவின் இரத்தமானது அவரது பாவங்களைத் தொடர்ந்து கழுவுகின்றது.*

*"ஒளியில் நடத்தல்" என்பதன் அர்த்தம் என்ன? "ஒளியில் நடத்தல்" என்றால் தேவன் தமது பிள்ளைகள் எப்படி நடக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ, அப்படி நடப்பதாகும்.[6] சபை உறுப்பினர்கள் யாவரும் குறைவில்லாத பரிபூரணப்பட்ட வாழ்க்கை வாழ்கின்றார்கள் என்று இது அர்த்தம் தராது, ஏனென்றால், அப்படியிருந்தால், கழுவப்படுவதற்கு அவர்களில் பாவம் எதுவும் இராது. இங்கு, "நடத்தல்" என்பதே திறவுகோல் வார்த்தையாகும். கிறிஸ்தவரின் நடை என்பது அவரின் வாழ்க்கை முறையாகும்.இரட்சிக்கப்பட விரும்புகின்றவர் கிறிஸ்தவ வாழ்க்கை முறையைக் கொண்டிருக்க வேண்டும்.*

*ஒளியில் நடக்கிறவர் பரிபூரணப்பட்டவரல்ல, ஆனால் அவரது இருதயம் தேவன்மேல் மையம் கொண்டுள்ளது. அவர் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குத் தம்மை ஒப்புக் கொடுக்கின்றார். அவர் தமது கிறிஸ்தவ நடைவழியில் தடுக்கி விழக்கூடும்; ஆனால் அவ்வாறு விழுகையில் அவர் மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஜெபம் செய்வார். பிறகு அவர் எழுந்து நின்று தேவனுடன் தமது பயணத்தை மீண்டும் தொடருவார்.*

## வாக்குத்தத்தம்

*எவரொருவரும் தாமாகவே கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியாது, ஆனால் உதவி செய்வதாகத் தேவன் வாக்களித்துள்ளார் (அப். 2:38; ரோமர் 8:13, 26). கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருப்பவர் பின்வரும் வாக்குத்தத்தத்தைப் பெறுகின்றார்:*

> *பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து ... ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் (1 யோவா. 4:4).*

> *தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவா. 5:4).*

*இயேசு பின்வரும் அறைகூவலையும் வாக்குறுதியையும் கொடுத்தார்: "மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தைத்*

*தருவேன்" (வெளி. 2:10ஆ). இவ்விடத்தில் பேசப்படும் "கிரீடம்" என்பது வெற்றியின் கிரீடம் ஆகும். "ஜீவ கிரீடம்" என்பது ஜீவனால் அமைந்த கிரீடம் ஆகும், நித்திய ஜீவனால்.*

*நமது படிப்பின் முன்னுரையில், நமது நோக்கத்தை நாம் பின்வருமாறு விவரித்தோம்:*

***இலக்கு: நித்திய ஜீவன்***

*இயேசுவுக்கு நாம் மரணபரியந்தம் உண்மையாயிருந்தால், அவர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதாக வாக்களித்துள்ளார். இவ்விதமாக நமது இலக்கை நாம் அடைய முடியும்.*

## *முடிவுரை*

*நாம் ஏறக்குறைய நமது பாடத்தின் முடிவில் இருக்கின்றோம். நீங்கள் இதை உங்களுக்குச் சொந்தமான முறையில் நடைமுறைப் படுத்திக் கொள்ள இதுவே தக்க நேரம் ஆகும். நீங்கள் நித்திய ஜீவனை விரும்புகின்றீர்களா? உங்கள் வாழ்க்கையைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்குமளவுக்கு நீங்கள் நித்திய ஜீவனை விரும்புகின்றீர்களா? மரணபரியந்தம் ஒரு உறுதிப்பாட்டை மேற்கொள்ளச் சித்தமாயிருக்கின்றீர்களா?*

*குறிப்புகள்*

*[1]அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன. ''ஜாக்கிரதையாயிரு'' என்பதற்குப் பதிலாக KJVயில் "கற்றுக் கொள்" என்றுள்ளது. நீண்ட காலத்திற்கு முன், "கற்றுக் கொள்" என்ற வார்த்தையானது, "ஜாக்கிரதையான முயற்சி மேற்கொள்" அல்லது "உன்னால் சிறந்ததைச் செய்'' என்ற கருத்தில் பயன்பட்டது. [2]NASBயில் (தமிழில் உள்ளது போல) ''தம்மைத் தேடுகிறவர்களுக்கு'' என்று மட்டுமே உள்ளது, ஆனால் ''தேடுகிற'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அரைகுறையான இருதயத்துடன் தேடுதல் பயன் தராது, அது ஜாக்கிரதையான தேடுதலாய் இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றது. [3]இவ்வெளியீட்டில் உள்ள மனந்திரும்புதல் பற்றிய போதனையை நீங்கள் மறு ஆய்வு செய்ய விரும்பலாம். [4]இது மத அதிகாரி ஒருவரிடத்தில் (குருவிடம்) சென்று ''பாவசங்கீர்த்தனத் தொட்டியில்'' அறிக்கை செய்வதைக் குறிப்பிடுவதில்லை. இது கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் அறிக்கையிடுதலாகும். [5]"தேவன் ஒளியாயிருக்கிறார்'' (1 யோவா. 1:5), எனவே "ஒளியில் நடத்தல்" என்றால் தேவனுடன் நடத்தல் ஆகும். இயேசு "உலகத்திற்கு ஒளியாக" இருக்கின்றார் (யோவா. 8:12), எனவே "ஒளியில் நடத்தல்" என்றால் இயேசுவுடன் நடத்தல் ஆகும். தேவனுடைய வசனம் ஒளி கொடுக்கின்றது (சங். 119:105), எனவே "ஒளியில் நடத்தல்" என்றால் அவரது வசனத்தின்படி நடத்தல் ஆகும்.*

13

# "இப்பொழுதே அநுக்கிரக காலம்"

*இரட்சிப்பைப் பற்றிய ஒரு படிப்பானது புத்திக் கூர்மைக்கான ஒரு பயிற்சியாக மட்டும் இருந்து விடக்கூடாது. கர்த்தரால் அருளப்பட்டிருக்கும் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளும்படி ஒருவரை இது தூண்டாதிருந்தால், இது தனது முழு நோக்கத்தையும் நிறைவேற்றியிருக்கவில்லை என்றாகின்றது. ஏதோ ஒரு சில வழியில் அவரை இது மாற்றவில்லையென்றால், இப்பாடத்திற்குச் செலவிடப்பட்ட நேரம் வீண்.*

## சுய பரிசோதனைக்கான நேரம்

*இது சுய பரிசோதனைக்கான நேரமாய் இருக்கின்றது. இது உங்கள் ஆத்துமாவின் தேவையை குறித்து உங்களுக்கு நீங்களே கட்டுக்கடங்காத நேர்மையுடன் இருக்க வேண்டிய நேரமாகும். உங்களின் ஆவிக்குரிய தேவைகள் என்னவென்று நான் முடிவு செய்ய முடியாது; நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். தேவனுடைய வசனத்தின் போதனையினுடைய அடிப்படை யில் நீங்கள் அதைச் செய்ய வேண்டும்.*

*முதலாவது, தேவன், இயேசு மற்றும் வேதாகமத்தில் உங்களுக்கு உண்மையான நம்பிக்கையுண்டா என்று உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். உங்களுக்கு மிகப் பல சந்தேகங்கள் இருந்தால், இவ்வெளியீட்டை உங்களுக்குக் கொடுத்தவரிடத்தில் அவைகளைச் சொல்லுங்கள், இன்னும் படிக்க ஏற்பாடு செய்யப்படக்கூடும். "… விசுவா சம் கேள்வியானாலே வரும், கேள்வி தேவனுடைய (கிறிஸ்து) வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17; யோவா. 20:30, 31ஐயும் காணவும்) என்பதால் நீங்கள் தொடர்ந்து வேதாகமத்தை வாசிக்கும்படி உங்களை வற்புறுத்துகின்றேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்தால், உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடச் சித்தமாயிருக்கின்றீர்களா?*

*மேலும், உங்களுடைய பாவம் நிறைந்த மற்றும் இழந்து போகப்பட்ட நிலையை நீங்கள் உணர்ந்திருக்கின்றீர்களா? தேவனுடைய உதவியுடன் நல்ல வாழ்க்கை வாழ உறுதி மேற்கொள்வதற்கு நீங்கள் தயாராயிருக்கின்றீர்களா?*

*இக்கருத்து வரையிலும் நீங்கள் "ஆம்" என்று பதில் கூறியிருந்தால், வசனத்தின்படியான ஞானஸ்நானம் பெற்றுள்ளீர்களா என்று உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். "ஞானஸ்நானம்" என்று அழைக்கப்படும்*

சடங்கு அல்லது சடங்காச்சாரங்களைப் பற்றி இங்கு கேட்கவில்லை, ஆனால் புதிய ஏற்பாடு போதிக்கின்றபடி நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா என்றுதான் கேட்கப்படுகின்றது. இந்நூலின் அறிமுகப்பகுதியைத் திருப்பி, நீங்கள் நிறைவு செய்த வினாத்தாளைப் பாருங்கள். அதில் நீங்கள் எழுதியிருப்பதை, ஞானஸ்நானம் பற்றி வேதாகமம் போதிக்கும் கருத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். (4 மற்றும் 5ம் பாடங்களை மறு ஆய்வு செய்யுங்கள்.) வேதாகமத்தில் விவரிக்கப்பட்ட படியாக உங்களுக்கு ஞானஸ்நானம் தரப்படவில்லையென்றால், நிச்சயமாகவே நீங்கள் வேதாகம வசனங்களின்படியான ஞானஸ்நானத்தைப் பெற விரும்புவீர்கள். இவ்வெளியீட்டை உங்களுக்குக் கொடுத்தவருடன் பேசுங்கள்; இதற்கான ஏற்பாடுகளில் அவர் உங்களுக்கு உதவி செய்வார்.

உங்களது ஞானஸ்நானம் வசனத்தின்படியானது என்றால், பிறகு நீங்கள் உங்களின் ஆராதனையைப் பற்றிக் கேட்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் உள்ள சபையைப் போலவே நீங்கள் ஆராதனையும் ஊழியமும் செய்து கொண்டிருக்கின்றீர்களா?

ஒருவேளை நீங்கள் மதரீதியான எந்த ஒரு அமைப்புடனும் இணைக்கப்படாதிருக்கலாம். அப்படியிருந்தால், உங்களுக்கு அருகாமையில் உள்ள கிறிஸ்துவின் சபையை நீங்கள் கண்டு அதை ஆராய்ச்சி செய்யும்படி நான் உங்களை மறுபடியும் வற்புறுத்துகின்றேன். கிறிஸ்துவின் சபை உறுப்பினர்கள் "தங்களைச் சோதித்து அறியும்படி" (1 யோவா. 4:1) உங்களை உற்சாகப்படுத்துவார்கள். இந்தப் பாடங்களைப் படிக்கும்படி உங்களுக்கு அழைப்பு விடுத்தவர், அநேகமாக கிறிஸ்துவின் சபையின் உறுப்பினராகத்தான் இருப்பார்; அப்படியிருந்தால் அவர் உங்களின் கேள்விகளை வரவேற்பார்.

இதற்கு மாறான வகையில், ஒருவேளை நீங்கள் மத அமைப்பு எதனுடனாவது இணைந்திருக்கலாம். அப்படியிருந்தால், சபையைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனை என்ன என்ற வெளிச்சத்தில் அந்த அமைப்பை நீங்கள் சோதித் துப் பார்க்க வேண்டும். (6 முதல் 11 வரையுள்ள பாடங்களை மறு ஆய்வு செய்யுங்கள்.) 11ம் பாடத்தில் நாம் வடிவமைத்த செயல்முறையைப் பயன்படுத்துங்கள். நீங்கள் சார்ந்துள்ள சபையானது வேதவசனங்களின் முன் மாதிரியில் பொருந்தி வரவில்லையென்றால், உங்களின் ஆவிக்குரிய இல்லத்துக்காக நீங்கள் வேறு எங்காவது பார்க்க வேண்டியது தேவையாகும்.

## கீழ்ப்படிதலுக்கான நேரம்

நீங்கள் என்ன செய்யத் தேவை என்பதை நீங்கள் புரிந்து கொண்டதும், நீங்கள் தாமதிக்கக் கூடாதென்பது மிகவும் முக்கியமானதாகும். நீங்கள் உடனடியாகச் செயல்படுவது தேவை. நமது இந்தப்படிப்பை நாம் முடிக்கின்ற இவ்வேளையில், வேதாகமத்திலிருந்து மூன்று வசனப் பகுதிகளைக் கவனிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்:

முதலாவது, யாக்கோபு 4:17 ஆகும். யாக்கோபு, ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், "அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்று கூறினார். "நன்மை செய்ய" நீங்கள் அறிவீர்களா? நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை அறிவீர்களா? நீங்கள் இதை அறிந்தும் செய்யாமல் போனால், அது பாவமாயிருக்கிறது. நீங்கள் கர்த்தரிடத்தில் மறுபடி சேர்க்கப்படத் தேவையாயுள்ளதா? இதைச் செய்யத்தவறினால் அது பாவமாயிருக்கிறது. மதரீதியாக உங்களுக்கு ஒரு மாற்றம் தேவை என்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? நீங்கள் அறிந்ததைச் செய்யாமலிருப்பது பாவமாகும்.

இரண்டாவது வசனப்பகுதி யோவான் 14:15 ஆகும். இயேசு, நீங்கள் என்னிடத்தில் "அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்" என்று கூறினார். நீங்கள் இயேசுவில் அன்புகூர்ந்தால், மற்றும் நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியதென்றால் ஞானஸ்நானம் பெறுவீர்கள். நீங்கள் இயேசுவில் அன்புகூர்ந்தால், மற்றும் அவருடன் மறுபடி சேர்க்கப்படத் தேவையென்றால், நீங்கள் மறுபடி சேர்ந்து கொள்வீர்கள். நீங்கள் இயேசுவில் அன்புகூர்ந்தால், மற்றும் மத ரீதியாக மாறவேண்டியிருந்தால், அந்த மாற்றத்தை நீங்கள் மேற்கொள்வீர்கள்.

மூன்றாவது வசனப் பகுதி 2 கொரிந்தியர் 6:2 ஆகும். பவுல், "அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" என்று எழுதினார். நீங்கள் என்ன செய்ய வேண்டியது தேவை என்று புரிந்து கொண்ட பின்பும், அதை நீங்கள் செய்யாமற்போனால், பின்வரும் மூன்றில் ஏதாவதொன்று நேரிடலாம்:

- நீங்கள் கீழ்ப்படிவதற்கு முன்னால் கர்த்தர் மறுபடி வரலாம். "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (மத். 24:44) என்று அவரது வருகைக்காகக் காத்திருக்கும்படி வேதாகமம் உங்களுக்குக் கூறுகின்றது. தேவனுக்குச் சித்தமானால் அவர் (இயேசு) இன்றைக்கே கூட வரக்கூடும்.
- நீங்கள் கீழ்ப்படிவதற்கு முன்னால் மரணம் ஏற்படலாம். எந்த மனிதரும் வாழ்க்கையைக் குத்தகைக்கு எடுத்திருக்கவில்லை. "... ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி. 9:27) என்று வாசிக்கிறோம்.
- உங்களின் இருதயம் கடினப்பட்டுப் போகலாம். இயேசுவின் அழைப்பை மறுக்கும் ஒவ்வொரு முறையும், மறுக்கும் மனிதரின் இருதயம் அதிகமதிகமாய்க் கடினமடைகின்றது. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதென்பது அதிகமதிகமாய்க் கடினமாகி, அவரைப் புறக்கணிப்பது இன்னும் சுலபமாகிவிடும். மனந்திரும்பக்

*கூடாதபடிக்கு ஒரு நபர் கடினப்படுவதற்குச் சாத்தியக்கூறு உண்டு (எபி. 6:4-6). எபிரெயர் 4:7, 8ல், “இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் ... உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா திருங்கள்” என்று வற்புறுத்தப்படுகின்றது.*

## *முடிவுரை*

*நாம் ஒன்றிணைந்து கற்ற இந்தப் படிப்பானது ‘‘தேவனிடத்தில் சேருகிறதற்கு’’ (எபி. 7:25; யாக். 4:8) செய்யத் தேவையானதென்ன என்பதைப் பற்றிப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவியிருக்கும் என்று நம்புகின்றேன். அப்படியிருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறிந்திருந்தும், அதைச் செய்யத் தாமதிக்க வேண்டாம் என்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். இந்த வெளியீட்டை உங்களுக்குக் கொடுத்தவரிடத்தில் பேசுங்கள்; நீங்கள் இன்று சமாதானத்தையும், நாளை நம்பிக்கையையும் கண்டடைய அவர் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கின்றார்.*

*ஜீவ கிரீடத்தைப் பெறுவதே எனது ஊக்கமான விருப்பமாகும் (வெளி. 2:10). நான் பரலோகத்திற்குச் செல்ல விரும்புகின்றேன். அங்கு தேவன், “[நம்முடைய] கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; [ஏனெனில்] முந்தினவைகள் ஒழிந்து போயின ...’’ (வெளி. 21:4). எனக்கு அன்பானவர்கள் எல்லாரும் அங்கிருக்க வேண்டும் என்பதற்காக நான் தினந்தோறும் ஜெபிக்கின்றேன். உங்களையும் அங்கு காண நான் நம்பிக்கையோடு இருக்கின்றேன். தேவன் உங்களை ஆசீர்வதிக்கிறார்!*

# விசுவாசிப்பதற்கு அறைகூவல்

*லூக்கா 18ல், ஊடுருவக்கூடிய கேள்வியொன்றை இயேசு கேட்டார்: "... மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" (வ. 8).*

*குழப்பம் மற்றும் அமைதியின்மையுள்ள ஒரு காலத்தில் இன்று நாம் வாழ்கின்றோம். இதைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாது நாம் நமது செய்தித்தாளை எடுத்துப் படிக்கவோ அல்லது வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கவனிக்கவோ முடிவதில்லை. உலகம் முழுவதிலும் கலகங்கள் மற்றும் புரட்சிகள் ஆகியவற்றைப் பற்றி நாம் படிக்கின்றோம். ஒவ்வொருவரும் கேள்விகள் உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள், ஆனால் ஒரு சிலர்தான் பதில்கள் உள்ளவர்களாயிருக்கின்றார்கள். "பழையவைகள்" அடிக்கடி வீசியெறியப்பட்டு, அதற்குப் பதில் நிரந்தமற்ற ஒன்று வருகின்றது, இதன் விளைவாக அலங்கோலமான வெற்றிடம் உண்டாகின்றது.*

*இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில், மக்கள் ஒரு காலத்தில் தங்களுக்கு நெருக்கமானதாகவும், மிகவும் பிரியமானதாகவும் கொண்டிருந்த நம்பிக்கைகள் - அவர்களின் விசுவாசமும் உட்பட - தாக்குதலுக்காளாவது தவிர்க்க முடியாததாகும். தேவனிலுள்ள விசுவாசத்தை நேரடியாகத் தாக்குவதை நாம் பார்த்திருக்கின்றோம். தேவன் வேண்டும் என்ற மாபெரும் தேவை பற்றிய உணர்வு கூட இல்லாத நிலையைப் பலர் அடைந்து விட்ட ஓரிடத்திற்கு மனித குலம் வந்து சேர்ந்து விட்டது.*

*வேதாகமத்தின் மீதுள்ள விசுவாசத்தின்மேல் தொடர்ந்து தாக்குதல்கள் செய்யப்படுகின்றன. நவீன விமர்சனப் பள்ளியாளர்கள் வேதாகமத்தில் ஒன்றும் எஞ்சியிராதபடிக்கு அதைச் சீவியெடுத்தெறிகிறார்கள். இயற்கைக்கு மேலான ஏவுதலைப் பற்றி அவர்கள் ஏளனம் செய்கிறார்கள்.*

*இயேசுவின் தெய்வீகத்தின் மீதும் தாக்குதல்கள் தொடர்கின்றன. இவைகள் மிகவும் நுணுக்கமானவைகள் ஆகும். ஏனென்றால், பலர் இயேசுவை மேலான தீர்க்கதரிசியாக, மேலான போதகராக, மேலான வாழ்வாளராக அல்லது மேலான நபராக மதித்து தங்கள் உதடுகளினால் ஆராதிக்கின்றார்கள். இப்படிப்பட்ட கண்ணோட்டமுள்ளவர்கள், எல்லாம் கூறப்பட்டு செய்யப்பட்டபின்பும்கூட இயேசு கிறிஸ்துவின்முன் முழங்கால்கள் யாவும் முடங்க வேண்டியதாயுள்ள ஜீவாதிபதியாக இருக்கின்றார் என்பதை உணருவதில்லை.*

*இந்த தேவபக்தியற்ற தன்மையின் நடைமுறை விளைவாக, சரியான*

அல்லது தவறான எந்த ஒரு தராதரமும் தாக்கப்பட்டன. மக்கள், “சூழ்நிலை ஒழுக்கவியலை” கண்டு பிடித் தார்கள். அதன் பிறகு எது சரி எது தவறு என்ற விஷயங்களில் தேவனுடைய வார்த்தைகளான வேதாகமம் அல்லது கிறிஸ்துவை நாம் சார்ந்திருக்காது போய்விட்டோம். மனிதர் தம்மைத் தாமே நியாயாதிபதியாக்கிக் கொண்டு “அன்பின் சட்டத்தை” மட்டும் தமது ஒரே சட்டமாக்கிக் கொண்டார்கள்.

ஆகையால் நமது காலத்திற்கு கிறிஸ்துவின் வார்த்தைகள் எவ்வளவு பொருத்தமானவைகளாய் இருக்கின்றன! “மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?” (லூக்கா 18:8ஆ).

இந்தப் பாடத்தில் நாம் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்க விரும்புகின்றோம்: “இருபத்தியோராம் நூற்றாண்டில் ஒருவர் தேவனையும் கிறிஸ்துவையும் மற்றும் வேதாகமத்தையும் நம்ப முடியுமா?” விசுவாசம் என்பது காலாவதியாகுவதில்லை என்பதை உறுதிப்படுத்துவதே எனது நோக்கமாகும். இருபத்தியோராம் நூற்றாண்டிலும் ஒருவர் வேதாகம போதனைகளை விசுவாசிக்க முடியும்!

இதைப் பல வழிகளில் செயல்படுத்திக்காட்ட முடியும், ஆனால் இருபத்தியோராம் நூற்றாண்டில் விசுவாசம் கொள்வதென்பது அறிவுக்கு ஏற்புடையது என்ற ஒரு சிந்தனையில் மட்டும் உங்களை வழி நடத்த நான் விரும்புகின்றேன். சத்தியமானது அறிவுடைமையால் மட்டும் ஒருபொழுதும் முழுமையாகக் கண்டு பிடிக்கப்பட முடியாது; அதே வேளையில் ஒருவர் கிறிஸ்தவராகும்போது அவர் தர்க்க ரீதியாகவும் விவேகமாகவும் சிந்திப்பதை நிறுத்தி விட வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதில்லை.

நமது பாடமானது ஒன்றுடன் ஒன்று இணைவு பெற்ற ஒரு தொடராக, சங்கிலி போலக் கட்டியமைக்கப்பட்டுள்ளது. நாம் நமது பாடத்தை முடிக்கும்போது, தெளிவாய் விவரிக்கப்பட்ட ஒவ்வொரு இணைப்புக் கருத்தையும் நீங்கள் பின்னோக்கிப் பார்த்து, உங்கள் சொந்த விசுவாசத்தைச் சோதித்துக் கொள்ள முடியும். சில இடங்களில் நீங்கள், “நான் இவ்வளவு தூரமே செல்ல முடியும், இதற்கு அப்பால் நான் செல்ல முடியாது” என்று கூறலாம். உங்கள் ‘‘விசுவாச அளவானது’’ சரியாய்க் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும். அந்தத் தகவலை உங்களுக்கு இந்த வெளியீட்டைக் கொடுத்தவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்; அது மேலும் படிப்பதற்கான அடித்தளத்தை அமைத்துத் தரும்.

இப்பொழுது, நாம் நமது பாடக் கருத்தில் கவனம் செலுத்துவோம். இங்கு பலவகைப்பட்ட சிந்தனைகளைத் தொட்டு மட்டுமே பார்க்க முடியும், ஆனால் இந்த ஏற்பாடானது உதவிகரமாய் இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.


# தேவன் ஒருவர் இருக்கின்றார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்

*சங்கீதம் 14:1அ-வில் "தேவன் இல்லை என்று மதி கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்" என்று கூறப்படுகின்றது (சங். 53:1ஐயும் காணவும்). எழுத்தாளர் இவ்விடத்தில் புத்திக் குறைவைக் குறிப்பிடவில்லை, ஆனால் எந்த ஒரு மனிதரும் தன்னைச் சுற்றியுள்ள ஏராளமான எண்ணிக்கையான சாட்சியங்களைக் காணத் தம் கண்களைத் திறக்காத மதியீனத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டார்.*

*சங்கீதம் 19:1ல், "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" என்று கூறுகின்றது. ரோமர் 1:20ல், "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற் கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை" என்று கூறப்படுகின்றது.*

*நான் சிறுவனாயிருந்தபோது, பேச்சாளர்கள் அடிக்கடி ஒரு எளிய விளக்கத்தைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் தங்களின் கடியாரத்தை எடுத்துக் காண்பித்து, அந்தக் கடியாரமானது அதைச் செய்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை அறிவிப்பது போலவே, இந்த உலகத்தின் இருப்பும் கூட, இதை உண்டாக்கியவர் இருக்கின்றார் என்பதை அறிவிக்கின்றது. இந்த விளக்கமானது மிக சாதாரணமாகத் தோன்றக் கூடிய அளவுக்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது - ஆனால் மக்கள் உணருவதைக் காட்டிலும் இது மிகுந்த ஆழ்ந்தறிவு உள்ளதாகும்.*

*தேவன் இருக்கின்றார் என்பதற்கான நீளமான ஒரு விவாதத்தை நான் ஏற்படுத்த வேண்டியிருந்தால், மூன்று அடுக்குகளினால் ஆன பிரமிடு வடிவமைப்பொன்றுடன் நான் தொடங்குவேன். அதன் அடிப்படைத் தரத்தை (1) இருத்தல் என்றும் அதற்கு அடுத்த தளத்தை (2) ஒழுங்கமைவு என்றும் மேல் தளத்தை (3) வடிவமைப்பு அல்லது நோக்கம் என்றும் பெயரிடுவேன்.*




*கடியார விளக்கத்தைப் பயன்படுத்தி நான் ஒவ்வொரு தளத்தையும் சுருக்கமாய் விளக்குவேன்:*

*இருத்தல்: கடியாரம் இருக்கின்றது. அது இங்கு இருக்கின்றது. அது இருப்பதென்பது ஒரு உண்மை நிலையாகும். அது எங்கிருந்தோ வந்ததாக இருக்க வேண்டும்.*

*ஒழுங்கமைவு: கடியாரம் இருக்கின்றது என்பது மட்டுமல்ல, அது ஒழுங்கமைவான வகையில் செயல்படுகின்றது. அது, பலவகையான பல்சக்கரங்கள், சக்கரங்கள், கம்பிச்சுருள்கள் மற்றும் பல பாகங்களை ஒன்று சேர்த்து, ஒரே அலகாகச் செயல்படும் வகையில் இணைவு பெற்றுள்ளது. அதன் எல்லாப் பாகங்களும் சரியாக வேலை செய்யும்வரை அது ஒழுங்கமை வான, அளவிடப்பட்ட வழியில் செயல்படுகின்றது.*

*வடிவமைப்பு: கடியாரமானது ஒழுங்கமைவான வகையில் செயல்படுவது மட்டுமின்றி, அவ்வாறு செயல்படுகையில் அது ஒரு நோக்கத்தையும் நிறைவேற்றுகின்றது. யார் அதை உண்டாக்கியிருந்தாலும் சரி, அவர் அதற்கென்று ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டைத் தமது மனதில் கொண்டிருப்பார், மற்றும் பொதுவாக இந்த நோக்கத்தை அது நிறைவேற்றுகின்றது: அது நேரத்தைக் கூறுகின்றது.*

*இது போலவே, நாம் இந்த அண்டத்தை நோக்குகின்றோம், படைத்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதற்கான விவாதத்தின் முக்கியமான மூன்று கருத்துக்கள் பின்வருமாறு: (1) அண்டம் இருக்கின்றது. (2) மேலும், அது ஒழுங்கமைவான வகையில் இயங்குகின்றது; நாம் நமது கடியாரங்களை, தேவனுடைய வானத்தின் மாபெரும் மணிகாட்டு கருவியைக் கொண்டுதான் நேர்ப்படுத்திக் கொள்கின்றோம். (3) வடிவமைப்பு (நோக்கம்) என்பது புல்லின் ஒவ்வொரு இதழிலும், ஒவ்வொரு மரத்திலும் காணப்படுகின்றது.*

*தேவன் இருக்கின்றார் என்பதற்கெதிரான மிகப் பொதுவான விவாதங்கள் யாவும் உண்மையில், ஒழுங்கமைவு மற்றும் வடிவமைப்பு என்ற மேலிரண்டு தளங்களுக்கெதிரானவையாகத் தான் இருக்கின்றன. வெள்ளப் பெருக்குகள், கடுங் காற்று, பூமியதிர்ச்சிகள் அல்லது தங்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட தனிப்பட்ட துன்பங்கள் போன்றவற்றைச் சிலர் சுட்டிக்காட்டக் கூடும். இவைகளின் காரணத்தினால் அவர், தேவன் இல்லை என்று முடிவு செய்கின்றார். ஆயினும் இது தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.*[1]

*இந்த சிந்தனைகள் ஒவ்வொன்றையும் ஆழமாய்ச் சோதித்துப் பார்ப்பதற்கு நேரம் நம்மை அனுமதிப்பதில்லை. ஆகவே இந்தப் பிரமிடின் அஸ்திபாரமாகிய "இருத்தல்" என்பதை நோக்கி நமது கவனத்தைத் திருப்புவோம்.*

*கடிகாரத்தின் விளக்கத்திற்கு நாம் திரும்புவோம். சேதமடைந்த ஒரு கடிகாரத்தை நீங்கள் நடைபாதையில் கண்டால் எப்படியிருக்கும்? அது கீழே போடப்பட்டது - மிதிக்கப்பட்டும் இருந்தது - என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அது சரியாக மணி காட்டுவதில்லை; அது இயங்குவதுமில்லை. இப்படியிருந்தாலும் கூட, அந்தக் கடிகாரத்தைச் செய்தவர் ஒருவர் இல்லை என்று அர்த்தமாகிவிடுமா? இல்லை, இன்னமும் அங்கு - தெளிவாகவும், தவறற்ற வகையிலும் - அது பழுதடைந்த நிலை*

யிலும் கூட சாட்சி இருக்கின்றது. கடியாரம் இன்னமும் இருக்கின்றது.

அது இருக்கிறதென்றால், அது எங்கிருந்து வந்தது?

இரண்டு விதமான இருத்தல்கள் மட்டுமே உள்ளன என்று கூறப்பட்டிருக்கின்றது: அவைகள் மனமும் பொருளும் ஆகும். ஒன்றுமில்லாமையிலிருந்து ஏதொன்றும் வர முடியாதாகையால், இவ்விரண்டில் ஒன்று நித்தியமானதாக இருந்து மற்றதை உண்டாக்கியிருக்க வேண்டும். மனமானது எப்பொழுதும் இருப்பதாக இருந்து, பொருளை உண்டாக்கியிருக்க வேண்டும், அல்லது பொருளானது எப்பொழுதும் இருப்பதாக இருந்து, மனதை உண்டாக்கியிருக்க வேண்டும். உயிரற்ற, சிந்தனையற்ற, ஒழுக்கமறியாத பொருளானது உயிருள்ள, சிந்தனையுள்ள, உணர்வுள்ள, ஒழுக்க உணர்வு பெற்ற மனதை உண்டாக்கியிருக்க முடியாது என்பதால், இது மற்றொரு வகையாகத்தான் இருக்க வேண்டும். நித்தியமான மனமானது, பொருளை உண்டாக்கியிருக்க வேண்டும்.

எனது நண்பர்களில் ஒருவரான ஜிம் வால்ட்ரன் அவர்கள் இதை விளக்கப்படுத்தினார். அவர் பாகிஸ்தானுக்குப் பறந்து செல்லும் விமானம் ஒன்றில் இருக்கையில், தாம் ஒரு ரஷ்யாக்காரருக்கு அருகில் அமர்ந்திருக்கக் கண்டார். அவர்கள் பேசத் தொடங்கினார்கள், விரைவிலேயே உரையாடலானது மத விஷயங்களுக்குத் திரும்பியது. இந்த உலகத்தைத் தேவன் படைத்தார் என்பதை ரஷ்யாக்காரரால் நம்ப முடியவில்லை. கடைசியில் அவரிடம் ஜிம், "ரஷ்யாவில் சிறு குழந்தைகள், களிமண் பொம்மைகள் செய்வதுண்டோ?" என்று கேட்டார். அம்மனிதர் ரஷ்யாவில் சிறு குழந்தைகள் களிமண் பொம்மைகள் செய்கின்றன என்று புன்முறுவலுடன் ஒப்புக் கொண்டார்.

ஜிம், "இது கவனிக்க ஆர்வமுள்ளதாகும், நான் வாழும் பகுதியிலும் குழந்தைகள் களிமண் பொம்மைகளைச் செய்கின்றார்கள். உண்மையில், உலகில் நான் சென்றுள்ள எல்லா இடங்களிலும் குழந்தைகள் களிமண் பொம்மைகளைச் செய்கின்றார்கள்: ஆனால் ஒரு காரியம் நான் கண்டதேயில்லை. களிமண் பொம்மையானது எவ்விடத்திலும் ஒரு சிறு குழந்தையைச் செய்ததை நான் பார்த்ததேயில்லை" என்று கூறினார்.

''மனம்'' மற்றும் ''பொருள்'' ஆகியவற்றைப் பற்றிய கருத்தானது விரைவில் அங்கு ஏற்படுத்தப்பட்டது. மனமானது, பொருளைக் கையாளும் மற்றும் பயன்படுத்தும் திறமை பெற்றதாக இருக்கின்றது. ஆனால் பொருளுக்கு, அத்திறமையில்லை: ஜிம், புன்சிரிப்போடு "குழந்தைகள் களிமண் பொம்மையைச் செய்கின்றன என்ற உண்மையை நம்புவது என்பது, களிமண் பொம்மைகள் குழந்தையை உண்டாக்குகின்றன என்பதைக் காட்டிலும் மிகவும் எளிதாக நம்பக் கூடிய கூற்றாகும் என்பதை நான் எனது சொந்த அனுபவத்தில் கண்டிருக்கின்றேன்'' என்று கூறி முடித்தார்.

சில விஷயம் இருப்பதால், இச்சில விஷயம் எப்போதுமே இருக்கின்றன - ஏனென்றால் ஒன்றுமில்லாமையிலிருந்து சில விஷயம் வரமுடியாது, இவ்வுலகமானது எப்போதும் இருந்துள்ளதா? அல்லது ஏதோ ஒருவேளையில் இது உண்டாக்கப்பட்டதா?

*சில வருடங்களுக்கு முன்பு நான், "விரிவாகும் அண்டத்தில் தேவன் பற்றிய ஆதாரம்'' என்ற தலைப்பில் நாற்பது பல்வகைத் துறை விஞ்ஞானிகளால் எழுதப்பட்ட ஒரு புத்தகத்தை மாபெரும் மகிழ்வுடன் படித்தேன். அதை எழுதியவர்களில் அநேகர், இந்த அண்டமானது "முடியும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது" என்பதைக் காண்பிப்பதற்குத் தங்களின் பல்வகைத் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை ஆதாரங்களாகப் பயன்படுத்தியிருந்தார்கள். அது எரிந்து முடிந்து அணையும் ஒரு நெருப்பிற்கும், சுற்றி நிற்கின்ற ஒரு பம்பரத்திற்கும், இன்னும் மற்ற பல விளக்கங்களுக்கும் ஒப்பிடப்பட்டது. அதை நீங்கள் எப்படிக் கூறினாலும், இரண்டு உண்மைகள் தெளிவாய் இருக்கின்றன: (1) இந்த அண்டமானது நித்தியமானதல்ல மற்றும் (2) ஏதோ ஒரு கட்டத்தில் இதற்கு ஒரு தொடக்கம் இருந்துள்ளது.*[2]

ஒன்றுமில்லாமையில் இருந்து ஏதொன்றும் வர முடியாதாகையால், இந்த அண்டத்திற்குக் காரணமாக உள்ள போதுமான சக்தியொன்றைப் பற்றிய எண்ணத்தை இக்கருத்து நமக்கு விட்டுச் செல்கின்றது. இச்சக்தியானது ஒரு வகையான நித்தியமனமாக - வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தேவனாக - இருக்க வேண்டும்.


*உங்களைச் சுற்றிலும் பாருங்கள். நீங்கள் வாழும் வீடு தானாக ஏற்பட்டதா? எபிரெயர் 3:4 வசனமானது இக்கருத்தை மிகச் சிறப்பாகச் சுருக்கிக் கூறுகின்றது: ''ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன்."*[3]

## தேவன் ஒவ்வொன்றையும் படைத்தார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்

*இந்த அண்டமானது படைக்கப் பட்டிருப்பதால், இதைப் படைத்தவர் ஒருவர் இருக்கின்றார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும் என்பதற்கான தவறற்ற அடையாளங்களை நாம் சுட்டிக் காட்டியிருக் கின்றோம். இப்பொழுது நாம், நமது சிந்தனையைச் சுற்றித் திருப்பி, வேறொரு திசையிலிருந்து இதை நோக்குவோம்: இந்த சிருஷ்டிகர் உண்மையிலேயே இந்த அண்டத்தைப் படைத்துள்ளார். இது தற்செயலாக ஏற்பட்டதில்லை. இது படைக்கப்பட்டது; இது உத்தரவிடப்பட்டது; இது வடிவமைக்கப்பட்டது.*

*நாம் விஷயத்தின் மையப்பகுதிக்குச் செல்வோம். தேவன் ஒவ்வொன்றையும் படைத்தார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையது என்றால், தேவனே மனிதனைப் படைத்தார் - தேவனே உங்களையும் என்னையும் படைத்தார் - என்று நம்புவதும் அறிவுக்கு ஏற்புடையதாகும்.*

*சற்று முன்பு நான் பிரமிடை உங்களுக்கு அறிமுகப்படுத்திய போது, மனிதனுக்கென்று இந்த "ஆதாரங்களை" நடைமுறைப் படுத்துவதை விட்டு நான் விலகியிருந்தேன். ஆயினும், நான் பேசுகின்ற இவ்விஷயத்திற்கு மனிதனே மிகச் சிறந்த எடுத்துக்காட்டு என்று நான் கருதுகின்றேன்.*




*உங்களையே நீங்கள் உற்றுப் பார்க்கச் சற்று நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். மனித உடலைப் போன்ற இயந்திரம் வேறெதுவும் இல்லை. மனிதக் கையைப் போன்ற இயந்திரம் வேறெதுவும் இல்லை.[4] மனிதனின் கண்ணைப் போன்ற புகைப்படக் கருவி வேறு எதுவும் இல்லை. மனிதனின் இருதயத்தைப் போன்ற ஏற்றுக் குழாய் வேறெதுவும் இல்லை. தானே குளிர்விக்கும், தானே குணமடையும் மனிதத் தோலைப் போன்ற கட்டிவைக்கும் ஏற்பாடு வேறு எதுவும் இல்லை. மனிதனின் உள் உறுப்புக்கள் போன்ற தொழிற்சாலை எதுவும் இல்லை. தாவீதின் வார்த்தைகளில், ''நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப் பட்டபடியால்'' (சங். 139:14) என்றுள்ளது.*

*மனித மனத்தை ஒரு எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்ளுங்கள். வியப்படையச் செய்யும் கணணிகளின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்; ஆனாலும் கூட, புதுடில்லி நகரத்தில் உள்ள வானளாவிய கட்டிடங்கள் ஒவ்வொன்றையும் அடுக்கி வைக்கக் கூடிய பெரிய அளவு கணணி ஒன்றை உங்களால் செய்ய முடியுமென்றால், அக்கணணியானது ஒரு சிறு குழந்தையின் மூளையில் உள்ள சக்தி, இயல்பு, திறமை அல்லது படைப்பாற்றல் இவைகளின் தொடக்கத்தைக் கூட அணுக முடியாது.*

*நாம் தாழ்ந்த உயிரினங்களில் இருந்து பரிணாமம் பெற்றதாகப் பரிணாமக்கொள்கை கூறுகின்றது. அந்தக் கொள்கையின்படி, இந்தத் தரத்தில் இருந்த விலங்குகளுடன் போட்டியிடும் அளவுக்கு போதிய பலம் அல்லது வேகம் அல்லது பெரிய உருவம் ஆகியவை நம்மிடம் இல்லாதிருந்ததால், தற்செயலாக நாம் மனம் என்ற ஒன்றைப் பெற்றுக் கொண்டோம் என்று கருத்து நிலவுகின்றது - ஆயினும் நமது மூளைகளின் சக்தியில் மிகச் சிறிய சதவிகிதத்தையே இதுவரையிலும் நாம் பயன் படுத்தியிருக்கின்றோம் என்பதே உண்மையாகும். மனித குலத்தின் முன்னேற்றமானது எந்த ஒரு ''தொடர் வாழ்க்கை'' கொள்கையாலும் விளக்கிக் கூறப்பட முடியாது. தேவன் நமக்கு நமது மனங்களைக் கொடுத்தார் என்பதே எளிமையான உண்மையாகும்; சிந்தனையுள்ள ஒருவர்தான் சிந்திக்கும் நம்மைப் படைத்திருக்கின்றார்.*

*நான் மறுபடியும் கூறுகின்றேன்: தேவன் மனிதனைப் படைத்தார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையது. மனிதக் குரங்கு போன்ற உயிரினத்தின் சாயலில் நாம் உண்டானோம் என்பதை நம்புவதைக் காட்டிலும், நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டோம் என்று நம்புவது அறிவுக்கு மிகமிக ஏற்புடையதாகும் (ஆதி. 1:26)!*

## தேவன் மனிதனுக்கு ஒரு வெளிப்படுத்துதலைக் கொடுத்தார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்

*தேவன் இந்த உலகத்தைப் படைத்திருந்தாரென்றால், மனிதர் எங்கிருந்து வந்தார், அவர் ஏன் இங்கிருக்கின்றார் மற்றும் வாழ்க்கை என்பது எதைப் பற்றியது போன்றவைகளின் தகவலைத் தேவன் மனிதருக்குக் கொடுத்திருக்க வேண்டும்.*

*ஒரு நாள் நீங்கள் உங்கள் வீட்டிற்கு வருகையில், வீட்டின் முற்றத்தில் பெரிய, பளபளப்பான இயந்திரம் ஒன்று இருக்கின்றது என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அது சிக்கலான வடிவமைப்புடன், அழகாகக் கருவியாக்கப்பட்டு, மிக முன்னேறிய கண்டு பிடிப்புகள் உள்ளதாய் இருக்கின்றது; அது முக்கியமான செயல் ஒன்றிற்காகவே வடிவமைக்கப் பட்டுள்ளது என்பது தெளிவு. ஆயினும், அதன் நோக்கங்கள் பற்றிய ஆதாரமோ, அறிவுறுத்தல் பிரதிகளோ ஒன்றும் இல்லை, அந்த இயந்திரத்தின் மீதும் தகவல்கள் எதுவும் அச்சிடப்படவில்லை. அந்தக் கருவியானது எதற்காக வடிவமைக்கப்பட்டது என்பதை ஒருபொழுதும் உங்களால் கண்டறியமுடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது நீங்கள் அநேகமாகப் பின்வரும் இரு முடிவுகளில் ஏதாவதொன்றை அடைவீர்கள்: (1) அதை உண்டாக்கியவர் அதன் நோக்கத்தை வெளிப்படுத்துமுன் மரணமடைந்திருக்க வேண்டும், அல்லது (2) அதை உண்டாக்கியவர் பித்துப் பிடித்தவராயிருக்க வேண்டும்.*

*நம்மைச் சுற்றியுள்ள - மனிதனால் உண்டாக்கப்பட்ட எந்த ஒரு இயந்திரத்தைக் காட்டிலும் நுட்பமானதாகவும், சிக்கல் உள்ளதாகவும் இருக்கின்ற - இந்த உலகத்தைப் பார்க்கும்போது, இதை உண்டாக்கியவர் நமக்கு வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் சொல்லியிருந்ததில்லை என்றால் அவர் இறந்திருக்கவோ அல்லது பித்தமுள்ளவராயிருக்கவோ வேண்டுமென்றுதான் நாமும் முடிவு செய்ய வேண்டியிருக்கும். தேவன் இவ்விரு வகையிலும் அடங்குவதில்லை! ஆகவே அவர் தகவல் அளித்துள்ளார் என்று முடிவு செய்கின்றோம், எபிரெயர் 1:1, 2ல் உள்ள திறவுகோல் வசனமானது முற்றிலும் அறிவுக்கு ஏற்புடையதாக இருக்கின்றது: ''தேவன் … திருவுளம்பற்றினார் …''*

*தேவன் நம்முடன் தகவல் தொடர்பு கொண்டிருப்பாரென்றால், தர அளவைகள் சில உள்ளன என்றும், சரியானவை மற்றும் தவறானவை என்பவைகள் உள்ளன என்றும் அர்த்தமாகின்றது. மனிதன் தனக்குத் தானே*

*தர அளவையாய் இருப்பதில்லை. வேதாகமம், ‘‘மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும்’’ (எரே. 10:23) கூறுகின்றது.*

*அந்தத் தகவல் தொடர்பு என்ன? இன்றைய நாட்களில் பல புத்தகங்கள் உயர் சக்தியொன்றினால் ஏவுதல் பெற்றதாக உரிமை கோரிக்கொள்கின்றன - அவைகள் எல்லாமே பல கருத்துக்களில் மற்றவைகளில் இருந்து ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. தேவனுடைய வெளிப்படுத்துதலை நாம் மிகத்தெளிவாகக் காண்பிக்க வேண்டியது தேவை. நமது சிந்தனையை இன்னும் ஒரு படி உயர்த்திச் செல்லுவோம்: வேதாகமம்தான் தேவன் மனிதருக்கு வெளிப்படுத்தியது என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையது.*

*வேதாகமத்தின் ஏவுதலைச் சுட்டிக்காட்ட எண்ணிலடங்காத ஆதாரங்கள் இருக்கின்றன, அவைகளில் சில: ஒருமைப்பாடு, பழம் பண்பு, நவீனப் பண்பு, வரலாற்று மற்றும் புவியியல் சார்ந்தவைகளில் மிகச் சரியான தன்மை, நியாயமான தன்மை, செல்வாக்கு, அழிக்கப்பட முடியாமை, நிறைவேறிய தீர்க்க தரிசனம் இன்னும் மற்றவை. நமது கால வரையறையின் காரணமாக, நாம் ஏற்கனவே தொடங்கிய சிந்தனை வரிசையிலேயே நிலைத்திருப்போம். இதைக் கவனியுங்கள்: தேவன் உலகத்தைப் படைத்திருந்தால், அவர் மனிதனை இவ்வுலகத்தில் வைத்திருந்தால், அவர் மனிதருக்கு ஒரு வெளிப்படுத்துதலைக் கொடுத்திருந்தால், தேவனுடைய உலகத்தில் மனிதர் வாழ்வதற்கு அந்த வெளிப்படுத்துதலானது மிகவும் ஏற்றதாகும் என்று நம்புவது அறிவுக்கு ஏற்றதாயிருக்குமல்லவா?*[5]

*இந்த உலகம் முழுவதையும் பாருங்கள். எந்த நாடுகள் அதிக வளமுடையதாயிருக்கின்றன, எங்கு மனிதரின் தேவைகள் போதுமான அளவு பூர்த்தி செய்யப்படுகின்றன, எங்கு மனித உயிரானது அதிக மரியாதை மற்றும் பாதுகாப்பைப் பெறுகின்றது என்பதைக் கண்டறியுங்கள். அந்த நாடுகளில் குறைந்தபட்சம் கடந்த காலத்திலாவது - வேதாகமம் அதிகமான செல்வாக்குப் பெற்றிருந்ததை நீங்கள் காண்பீர்கள்.*[6]

*பவுலின் வார்த்தைகள் உண்மையானவையென்று உலகம் முழுவதிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன: ‘‘வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது’’ (2 தீமோ. 3:16, 17).*

*வேதாகமம் ஏவப்பட்டது என்பதற்கு அதற்குள்ளாகவே கட்டமைக்கப்பட்ட ஆதாரம் உள்ளது. வேதாகமம் தேவனிடத்திலிருந்துதான் வந்தது என்பதை ஏற்றுக் கொள்வதில் உங்களுக்குப் பிரச்சனைகள் இருந்தால், அப்புத்தகத்தை நன்கு படித்து அதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். பவுல், ‘‘ஆகையால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்’’ (ரோமர் 10:17) என்று கூறினார்.*

*இதை விளக்கப்படுத்துவதற்கு, நான் திருடர்களுக்குப் பயப்*

படுவதாகவும், எனவே தலையணையின் அடியில் ஒரு துப்பாக்கியை வைத்திருப்பதாகவும் கற்பனை செய்து கொள்வோம். மற்றும், நான் ஒரு இரவில் விழித்துப் பார்க்கையில் ஒரு நபர் எனது வீட்டினுள் புகுந்திருப்பதைக் காண்கின்றேன் என்றும் கற்பனை செய்து கொள்வோம். நான் எனது துப்பாக்கியின் சக்தியை அந்நபரின் மனதில் ஆழப்பதியச் செய்து அவரைப் பயமுறுத்த வேண்டுமென்று விரும்புகின்றேன். நான் என்ன செய்யக் கூடும்?

குறைந்தபட்சம் நான் இரண்டு அணுகுமுறைகளை மேற் கொள்ள முடியும். நான் விளக்குகளை எரியச் செய்து விட்டு, அந்நபரிடத்தில் எனது துப்பாக்கியை காட்டி, "இந்தத் துப்பாக்கியைப் பார்த்தாயா? இதில் வெற்றுக் குழல் ஒன்றுள்ளது. அதன் முடிவில் ஒரு குண்டு பொருத்தப் பட்டுள்ளது. அந்தக் குண்டில் வெடிக்கும் மூடியுடன் துப்பாக்கி மருந்தும், முடிவில் ஒரு காரீய உருண்டையும் இருக்கின்றது. நான் இந்த விசையை இழுத்தால், அது உள்ளிருக்கும் சுத்தியைப் பின்பகுதி நோக்கி இயக்கி, பின்பு அச்சுத்தியானது குண்டினுடைய பின்பகுதியில் வலுவாகத் தாக்கி, துப்பாக்கி மருந்தை வெடிக்கச் செய்து காரீய குண்டினை குழாய் மூலமாக வெளிச் செலுத்தும். உன்னை நோக்கி நான் அதைத் திருப்பினால், பிறகு அது குழாயை விட்டு மாபெரும் வேகத்துடன் வெளியேறி, உனது உடலில் ஒரு பெரிய துளையிடும்" என்று கூறலாம்!

இதற்கு மாறாக, காற்றில் சில முறை நான் சுடலாம்! இது மிகவும் பயன் அளிக்க வாய்ப்பு அதிகம் உள்ளது!

வேதாகமத்தைப் பற்றி நாம் அதிகமாய்ப் பேசலாம், ஆனால் வேதாகமமானது வல்லமையுள்ளது என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும். அது, "ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்" இருக்கின்றது (எபி. 4:12). தனி நபரின் வாழ்க்கைச் சக்கரங்கள், நாடுகள், இனங்கள் மற்றும் சரித்திர வரலாற்றின் ஓட்டம் ஆகியவற்றை இது மாற்றியிருக்கின்றது.

வேதாகமம் தேவனிடத்திலிருந்தே வந்தது என்பதற்கு நிறைவான ஆதாரம் வேண்டுமென்றால், உங்கள் வாழ்வில் அதற்கு (வேதாகமத்திற்கு) ஒரு வாய்ப்பைக் கொடுத்துப் பாருங்கள். அதை வாசியுங்கள், அதைப் படியுங்கள் (உண்மையாக அதைப் படியுங்கள் என்று நான் அர்த்தப் படுத்துகின்றேன்). அதை உங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்துங்கள். அப்பொழுது நீங்கள் J.B. பிலிப்ஸ் அவர்கள் கூறியபடி, அது "சத்தியத்தின் வளையமாய்" இருப்பதைக் காண்பீர்கள்!

## தேவன் மனிதரில் அன்புகூருகின்றார் என்றும் அவர் மனிதருக்கு உதவ விரும்புகின்றார் என்றும் நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்

இந்த உலகத்தைச் சுற்றிலும் நாம் கண்ணோக்குகையில், தேவன் நமது சொந்தமான தேவனாக இருக்கின்றார் என்றும், அவர் நமது தேவைகள்

*ஒவ்வொன்றைப்பற்றியும் கவலைப் படுகின்றார் என்ற உண்மையை நமது மனங்களில் ஆழப்பதிய வைக்க முடியாமல் இருக்கக் கூடாமல் போகிறது. நான் அதை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கும்பொழுதும், தேவன் உறுதியாகவே நம்மில் அன்புகூருகின்றார் என்பது தெளிவாகும்.*

*தேவன் இவ்வுலகை - மாம்சத்தின் தேவைகளை மட்டும் நிறைவு செய்யும்படி - கண்டிப்புடன் செயல்படக் கூடியதாகப் படைத்திருக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவர் அதை அழகானதாகப் படைத்தார். அவர் மலர்களைப் படைத்தார். பல வண்ணப் பறவைகளைப் படைத்தார். அவர் படைத்த ஒவ்வொன்றும் "நன்றாயிருந்தது" (ஆதி. 1:31).*

*ஏதேன் தோட்டத்தில் தேவன் (1) "பார்வைக்கு அழகும்" மற்றும் (2) "புசிப்புக்கு நலமும்" (ஆதி. 2:9) நிறைந்த சகல மரங்களையும் வைத்தார். மனிதனுக்கு "ஏற்ற துணை" ஒன்றைப் படைத்த போது, குழந்தைபெறும் வல்லமை கொண்ட மாமிசத்துண்டு ஒன்றைப் படைத்திருக்க முடியும், அதற்கு மாறாக அவர், மனித வாழ்க்கையைக் கிருபையுள்ளதாக்க ஒரு அழகிய சிருஷ்டியை உருவாக்கினார்.*

*மனிதரின் தேவைகளை நாம் நினைக்கையில், நிறைவாக நாம் ஒழுக்க ரீதியான அல்லது ஆவிக்குரிய தேவைகளுக்கு வருகின்றோம். ஒவ்வொரு நபரும் எப்பொழுதாவது ஒரு வேளையில் ஆவிக்குரிய ஆசைகளை உணர்ந்திருப்பாரல்லவா? தேவனுடைய தர அளவையினின்று தான் ஒருபொழுதும் விழுந்து போனதில்லை என்று சொல்ல எவரொருவராலாவது முடியுமா? ஒவ்வொரு நபரும் ஏதாவது ஒரு நேரத்தில் உதவியற்றவராய் உணர்ந்து, தம்மைவிடப் பெரியவர் ஒருவர் தேவையென்று உணர்ந்ததில்லையா? "எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23) என்று வேதாகமம் கூறுகின்றது.*

*தேவனுடைய அன்பு மற்றும் அக்கறையைப் பற்றி அறிந்த பிறகு நாம், தேவன் நமக்கென்று அருளிச் செய்துள்ள ஆவிக்குரிய நன்மைகளைப் பற்றிப் படிக்கும்போது வியப்படைவதில்லை. அவர் தம்முடைய குமாரனுடைய நபர்த்துவத்தில் நமது பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக் கொண்டு, நமக்கு இயேசுவின் மூலமாக ஆவிக்குரிய உதவியைத் தொடர்ந்து அருளுகின்றார். தேவனுடைய அன்பின் வெளிச்சத்தில் பின்வரும் வசனப்பகுதிகள் போன்றவை அறிவுக்கு ஏற்புடையவை என்று நான் எளிமையாகக் கூற முடியும்:*

> *தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவா. 3:16).*

> *... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து (1 கொரி. 15:3, 4).*

> *வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன*

*தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால் … ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம் (எபி. 4:14-16).*

## தேவன் ஒரு பதில்செயலை எதிர்பார்க்கின்றார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்

*தேவன் நமது ஆவிக்குரிய நலன்களை அருளியிருந்தாலும், அவர் நம்மை எந்திர மனிதர்களாக ஏற்படுத்தவில்லை. நாம் கீழ்ப்படிவதற்கான அறிவுறுத்தல்களைக் கொடுத்திருக்கின்ற அவர், நமக்கு சுதந்திரமான சித்தத்தையும் கொடுத்திருக்கின்றார். அவர் நம்மை சுதந்திரமான ஒழுக்கத்தின் முகவர்களாக ஏற்படுத்தியுள்ளார்; நாம் தேர்வு செய்யும் உரிமை பெற்றவர்களாயிருக்கின்றோம். நாம் விசுவாசிக்க முடியும் அல்லது நாம் விசுவாசியாமலும் போக முடியும். நாம் கீழ்ப்படிய முடியும், அல்லது நாம் கீழ்ப்படியாமலும் போக முடியும். நாம் அன்பு காட்ட முடியும், அல்லது நாம் வெறுக்க முடியும்.*

*விசுவாசத்தின் அடிப்படைக்கான சாட்சியத்தைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கின்றார். அவர் தமது அன்பை எண்ணற்ற வழிகளில் வெளிப்படுத்தியுள்ளார். விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் அன்பு என்ற பதில்செயலை அவர் நம்மிடத்திலிருந்து விரும்பினால் அது அறிவுக்கு ஏற்புடையதாய் இருக்கின்றதா?*

- *விசுவாசம்: எபிரெயர் 11:6ல், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" எனப்படுகின்றது.*
- *கீழ்ப்படிதல்: எபிரெயர் 5:9ல், "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" எனப்படுகின்றது.*
- *அன்பு: 1 யோவான் 4:8ல், "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" எனப்படுகின்றது.*

*தேவன் நம்மை எந்திர மனிதர்களாய் ஏற்படுத்தவில்லை, ஏனென்றால் எந்திர மனிதர்களின் பதில்செயலானது இயக்கப்படுவதாக, தானாக செய்வதாக, அர்த்தமற்றதாக இருக்கின்றது. இதற்கு முரண்பட்ட வகையில், சுதந்திரமான எண்ணமுள்ளவர்களின் பதில்செயலானது அர்த்தமுள்ளதாக இருக்கின்றது.*

*தேவன் நமக்குச் செய்திருக்கின்ற ஒவ்வொன்றையும் நாம் கவனிக்கும் பொழுது, கலாத்தியர் 5:6ல் "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசம்" என்று சுருக்கமாய்க் கூறப்பட்டுள்ள பதில்செயலை அவர் விரும்புகின்றார் - மற்றும்*

*எதிர்பார்க்கின்றார் - என்பது அறிவுக்கு ஏற்புடையதாகும்.*

*இந்த கலந்துரையாடலானது மாபெரும் வகையில் விரிவாக்கப்பட முடியும், ஏனென்றால், தேவனால் விரும்பப்படுகின்ற - மற்றும் கேட்கப்படுகின்ற இந்த பதில்செயல் பற்றிய திட்டமான கற்பித்தல்கள் புதிய ஏற்பாட்டில் நிறைந்துள்ளது. இருந்தாலும் நாம் நமது சிந்தனை வரிசையின் கடைசி ஒரு "இணைப்பை" பார்த்து, இப்பாடத்தை முடித்துக் கொள்வோம்.*

## மனிதர்களைக் கணக்கொப்புவிக்கும்படி தேவன் ஒரு நாளில் அழைப்பார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்

*வாழ்க்கையென்பது இங்குள்ளது மட்டுமல்ல என்பதற்கான சுட்டிக்காட்டுதல்களை நம்மைச் சுற்றிலும் நாம் காண்கின்றோம். ஒவ்வொரு இனமும் அழியாமையைப் பற்றிய கருத்தொன்றைப் பிறவியிலேயே பெற்றுள்ளதாயிருக்கின்றது. உண்மையான தேவனை விட்டு வெகு தொலைவில் இருப்பவர்கள் கூட இந்த வாழ்க்கைக்கு அப்பால் உள்ள ஒரு வாழ்க்கையைப் பற்றிய கருத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.*[7]

*வரப்போகின்ற வாழ்வைப் பற்றிக் கருதுகையில், இந்த வாழ்வில் நமக்குக் கொடுக்கப்பட்டவைகளை எப்படிப் பயன்படுத்தினோம் என்று கணக்கு ஒப்புவிக்கும்படி தேவன் நம்மை அழைப்பார் என்று நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்: நமக்கு ஆசீர்வாதங்கள், வாய்ப்புகள் மற்றும் அறைகூவல்கள் தரப்பட்டுள்ளன. ''மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்'' (1 கொரி. 4:2) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது.*

*கணக்கொப்புவிக்கும் காலத்தை வேதாகமம் "நியாயத் தீர்ப்பின் நாள்" என்று அழைக்கின்றது. எபிரெயர் 9:27ல், "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" என்று கூறப்படுகின்றது.*

*நியாயத்தீர்ப்பு என்ற கருத்தானது அறிவுக்கு ஏற்புடையதென்று நான் நம்புகின்றேன். இந்த வாழ்க்கையில் அடிக்கடி ''புத்தகக் கணக்குகள் நேராவதில்லை." துன்மார்க்கர் பெரும்பாலும் சுகமாய் வாழ்கின்றார்கள்; நல்லவர்கள் பெரும்பாலும் நசுக்கப்படுகின்றார்கள். குற்றவாளிகள் அடிக்கடி விடுதலை பெறுகின்றார்கள், ஒன்றுமறியாதவர்கள் உபத்திரவப்படுகின்றார்கள். தேவன் இருக்கிறார் என்றால் நிச்சயமாகவே ஒரு நாளில் தப்பானவைகள் சரியாக்கப்பட்டு, நியாயமான வழியில் முடிவு செய்யப்படும் என்பது ஏற்புடையதாயிருக்கிறது.*

*''நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிக்கும்'' (ரோமர் 14:12) நாளிலே நீங்கள் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகின்றது.*

## முடிவுரை

நமது சிந்தனைச் சங்கிலியின் ''கண்ணிகள்'' பின்வருமாறு: கீழ்க்கண்டவற்றை நம்புவது அறிவுக்கு ஏற்புடையதாகும்:

- தேவன் ஒருவர் இருக்கின்றார்.
- அவரே ஒவ்வொன்றையும் - விசேஷமாக மனிதனை - படைத்தவர்.
- அவர் மனிதருக்கு வெளிப்பாடு ஒன்றைக் கொடுத்தார் - வேதாகமமே அவ்வெளிப்பாடாகும்.
- அவர் மனிதரில் அன்புகூர்ந்து, உதவுகின்றார் - கிறிஸ்துவின் மூலம் ஆவிக்குரிய வழியில் உதவுகின்றார்.
- அவர் ஒரு பதில்செயலை விரும்புகின்றார், எதிர்பார்க்கின்றார்.
- கடைசியில் மனிதர் தமது சரீர மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் தமது வாய்ப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்திய விதம் பற்றிக் கணக்கொப்புவிக்க தேவனுக்கு முன்பாக அழைக்கப் படுவார்.

அந்த நாளுக்கு ஆயத்தமாவதற்குச் சமீபத்தில் நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள்?

இந்தப்பாடத்தை நாம் முடிக்கையில், இப்பொழுது இயேசுவின் கேள்விக்கு மறுபடியும் திரும்புவோம்: "மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" ஆயினும் நாம் இந்தக் கேள்வியை நமக்குரியதாக்குவோம்: ''மனுஷகுமாரன் வரும்போது உங்கள் இருதயத்திலே விசுவாசத்தைக் காண்பாரோ?'' இது உங்களுக்கான கேள்வியின் மிக முக்கியமான அம்சமாக இருக்கின்றது.

"விசுவாசிக்கின்றேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்" (மாற். 9:24) என்று சத்தமிட்டுச் சொன்ன மனிதனைப்போன்ற நிலையில் நீங்கள் உங்களைக் காணலாம். வேதக்கல்வி ரீதியாகவோ அல்லது உங்கள் வாழ்வைக் கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கப் போதுமான அளவாகவோ இல்லாது, விசுவாசக் குறைவு உங்களிடத்தில் காணப் பட்டால், வேதாகமத்தை வாசித்து, படித்து அதற்குக் கீழ்ப்படியும்படி நான் உங்களை வற்புறுத்துகின்றேன் - அதன் மூலம் கர்த்தர் வரும்போது உங்களிடத்தில் அன்பினால் கிரியைச் செய்யும் விசுவாசத்தை அவர் காண்பாராக!

---

குறிப்புகள்

[1]ஒழுங்கமைவு மற்றும் வடிவமைப்பு ஆகியவைகளினாலேயே முக்கியமாக நமது உலகம் அமைந்துள்ளது. ''பொல்லாங்கின் பிரச்சனையை'' நாம் கலந்துரையாடும் போது, விசுவாசமற்றவர் ''நன்மையின் பிரச்சனை'' என்பதை விளக்க வேண்டிய மாபெரும் அறைகூவலை ஏற்க வேண்டியதாகின்றது. [2]இந்த அண்டமானது குறிப்பிட்ட கால

*இடைவெளியில் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளுகின்றது என்ற ''சுழற்சி'' கொள்கையொன்று உண்டென்று உணர்கின்றேன். ஆனால் அறியப்பட்டுள்ள விஞ்ஞான உண்மைகளுக்கு எதிராக இக்கொள்கை இருப்பதால் இது ஆதரவற்ற கொள்கையாக உள்ளது. [3]இந்த வசீகரமான சிந்தனையை முழுமையாக கலந்துரையாட நேரம் இல்லை. தேவனுக்கான சாட்சியம் என்ற நூலில் எழுத்தாளர்களில் ஒருவர், நமது புரிந்து கொள்ளுதலானது ஒவ்வொன்றும் இயற்கையானதே, கற்றுக் கொள்ளப்படுவதல்ல என்று குறிப்பிட்டார். ஒவ்வொரு குழந்தையும், "அது எங்கிருந்து வந்தது? யார் அதை உண்டாக்கியது?" என்றே கேட்கின்றது. [4]சமீபத்தில் நான் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் நூறாயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவில் உருவான இயந்திரம் ஒன்று காட்டப்பட்டது. அந்த இயந்திரத்தை இயக்குவதற்கு மிகுந்த பயிற்சியும் அனுபவமும் தேவையாயிருந்தது, ஆயினும் அது ஒரே ஒரு நோக்கத்தை மட்டுமே நிறைவேற்றியது, அதாவது கதிரியக்கப் பொருட்களுள்ள, உடையக்கூடிய கொள்கலன்களைக் கையாளுதல். வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், மனிதக் கையின் செயல்களில் ஒன்றை மட்டுமே அதனால் நிறைவேற்ற முடிந்தது. [5]நித்தியத்திற்கான வழியில் இவ்வுலகம் என்பது ஒரு இடை நிற்குமிடம் மட்டுமே என்று வேதாகமம் நமக்குக் கூறுகின்றது; ஆனால் நாம் இங்கிருக்கையில் வேதாகமம் நமக்கு "முழு நிறைவான வாழ்வை" கொடுக்கின்றது என்ற உண்மை இன்னமும் நிலைநிற்கின்றது. [6]இந்த நாடுகள் பலவற்றில், வேதாகமம் இப்பொழுது அதிக செல்வாக்குப் பெற்றிருப்பதில்லை. ஆயினும், வாழ்க்கையின் தத்துவங்கள் உருவாக்கப்பட்ட போது, நாட்டிற்கான வழி நடத்துதல்கள் நிலைநாட்டப்பட்ட ஆதி நாட்களில் வேதாகமம் அங்கு செல்வாக்குடையதாய் இருந்ததால், இந்தக் கூற்று உண்மையாக உள்ளது. [7]மரித்தவர்கள் தங்களின் மறுவாழ்க்கையில் பயன்படுத்துவதற்கென்று உணவையும் மற்ற பொருட்களையும் கல்லறையில் வைப்பவர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள்.*

# ஒரு அறிமுகம்

*அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1 பேது. 3:21).*

ஒரு முகாம் குழுவானது 1967ல் மிசௌரியின் ஸ்பிரிங் ஃபீல்டு அருகில் உள்ள கேம்ப் ஹாப்பி ஹாலோ என்ற இடத்தில் ஒரு பயிற்சித் தொடருக்காகக் கூடியது. முந்திய கோடைக்காலத்தில் நான் இந்தக் குழுவினருடன் கிறிஸ்துவுக்கு மக்களைக் கொண்டு வர நாங்கள் முயற்சிக்கையில் வட கிழக்கு மாநிலங்களில் ஊழியம் செய்திருந்தேன். ஞானஸ்நானம் பெறும்படி மக்களை இணங்கச் செய்வதில் நாங்கள் வெற்றி யடைந்திருந்தோம், ஆனால் அவர்களில் பலர் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்கவில்லை. அவர்களின் பழைய பாவ வாழ்வை முடிவுக்குக் கொண்டு வந்து கிறிஸ்துவுக்கென்று புதிய வாழ்வை வாழும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று வியப்படைந்து கொண்டிருந்தோம். ஞானஸ்நானம் பெற்றவர்களின் வாழ்வானது உறுதிப்பாடின்றி மாற்றமடையாமல் இருந்தது என்று நாங்கள் உணர்ந்தோம். ஞானஸ்நானம் என்பது வெறுமையான சடங்கல்ல, அவர்களுக்கு அது ஒரு புதுப் பிறப்பாகும் என்று நிச்சயப்படுத்த நாங்கள் விரும்பினோம்.

ஞானஸ்நானத்தைப் பொறுத்தமட்டில் குறைந்தது பின்வரும் ஆறு எண்ணப்போக்குகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது:

முதலாவதொரு கண்ணோட்டமானது, ஞானஸ்நானம் கொடுப்பவரது சரியான வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு புனிதச் சடங்கு என்ற வகையில் இது ஒருவரின் பாவங்களைத் தண்ணீரினால் கழுவுகின்றது.

> ஒரு புனிதச் சடங்கு என்பது கிறிஸ்துவினால் தகுதிப் படுத்தப்பட்ட கிருபையை உண்டாக்குகின்ற அளவுக்கு பரிசுத்தமான விஷயமாக உள்ளது. இந்த அடையாளமானது குறிப்பிடுவது மட்டுமானதாயிராமல், ஏதோ ஒரு வழியில் கிருபைக்கு உண்மைக் காரணமாகின்றது … இவ்விதமாக ஊழியர், ஞானஸ்நானம் பெறுபவரின் தலையின்மீது தண்ணீரைக் கொண்டு வரும்போது … சபையின் நாமத்தினாலே செயல்படுகின்ற ஊழியரின் வார்த்தைகளினால் அந்தத் தண்ணீரானது, ஜென்மப் பாவத்தின் பழைய கறையை நீக்கவும், அந்த நபரை சபையின் உறுப்பினராக்கவும் காரணமாகின்றது.[1]

இரண்டாவதொரு கண்ணோட்டமானது, கீழ்ப்படிதலின் செயல் என்ற வகையில், ஞானஸ்நானமானது ஒருவர் தமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகின்றார் என்பதைக் காண்பிக்கின்றது. “இரட்சிப்பை உண்டாக்குவதல்ல, ஆனால் இரட்சிப்பைக் காண்பித்தல் என்பதே ஞானஸ்நானத்தின் நோக்கமாகும் ... இது உருவகம் அல்லது இரட்சிப்பின் அடையாளம் என்பதன் விளக்கம் ஆகும் ... இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமானதாக இருப்பதில்லை.”[2]

அப். 2:38க் குறித்து NIV Study Bibleல் பின்வரும் அடிக்குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது: “ஞானஸ்நானம் பாவமன்னிப்பைத் தோற்றுவிப்பதோ செய்து முடிப்பதோ கிடையாது. மாறாக, ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்தப்படுவதன் மூலமாகவே மன்னிப்பு வருகின்றது.”[3] அதே வேதாகமத்தில் அப். 22:16ஐப் பற்றிப் பின்வரும் விளக்கவுரை ஏற்படுத்தப்பட்டுள்ளது: “ஞானஸ்நானம் என்பது உள்ளான கிருபையின் வெளியான அடையாளமாய் உள்ளது. உண்மை நிலையும் அடையாளமும் புதிய ஏற்பாட்டில் நெருக்கமாய் இணைவு படுத்தப்பட்டுள்ளன.”[4]

மூன்றாவது கண்ணோட்டமானது, கிறிஸ்துவின் கட்டளை என்ற வகையில் இது (ஞானஸ்நானம்) ஒருவரைக் காணக் கூடிய சபையினுள் கொண்டு வருகின்ற செயல்பாடாக உள்ளது.

> ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவினால் கட்டளை யிடப்பட்ட புதிய ஏற்பாட்டின் ஒரு புனிதச் சடங்காக உள்ளது, இது காணப்படும் சபையில் ஞானஸ்நானம் பெறுபவரை அனுமதிக்கும் பரிசுத்தச் சடங்காக மட்டுமின்றி, அவருக்கு கிருபையின் உடன்படிக்கையினுடைய முத்திரையாகவும், கிறிஸ்துவுடன் ஒட்ட வைக்கப்படுவதாகவும், மறுபிறப்பாகவும், பாவங்களுக்கு மன்னிப்பாகவும், புதிய ஜீவனுள்ளவராய் நடந்து கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனிடத்தில் அவர் தம்மை ஒப்புக் கொடுத்தலாகவும் உள்ளது.[5]

நான்காவதொரு கண்ணோட்டமானது, ஒரு சடங்கு என்ற வகையில் இது வயது வந்த ஒருவரையோ அல்லது ஒரு குழந்தையையோ (அது கிறிஸ்தவப்படுத்தப்படும் பொழுது) ஒப்புக் கொடுத்தலின் சடங்காச்சாரமாகவும், குழந்தையின் பெற்றோரை, அக்குழந்தையைக் கர்த்தருக்காக வளர்ப்பதில் ஒப்புக் கொடுப்பதை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது.

> ஞானஸ்நானம் என்பது புதிய ஏற்பாட்டின் அடையாளமாய் இருக்கின்ற வகையில், பெற்றோர் அல்லது காப்பாளர்களின் வேண்டுகோளின் பேரில் சிறுபிள்ளைகள் ஞானஸ்நானப் படுத்தப்படலாம், அவர்கள் அக்குழந்தைகளுக்கு அவசியமான கிறிஸ்தவப் பயிற்சியளிப்பதாக உறுதிப்படுத்துவார்கள்.[6]

கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது எதை அடையாளப் படுத்துகின்றது?

இது ஒருவரின் பாவங்களைக் கழுவுவதில்லை, ஏனென்றால் பாவங்களிலிருந்து கழுவப்படுதல் என்பது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாக மட்டுமே வருகின்றது (எபே. 1:7). மாறாக, இது யெகோவா தேவனிடத்தில் ஒருவர் பரிசுத்த ஒப்புக் கொடுத்தலை ஏற்படுத்திக் கொள்வதற்குச் சாட்சியாகவும், அவர் தம்மை தேவனுடைய சித்தத்தின்படி செய்வதற்கு ஒப்புக் கொடுத்தலின் வெளிப்படையான செயல்விளக்கமாகவும் உள்ளது.[7]

ஐந்தாவதொரு கண்ணோட்டமானது, தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் செயல்முறை என்ற வகையில் ஞானஸ்நானமானது பாவங்களுக்கு மன்னிப்பையும், ஞானஸ்நானம் குறித்து தேவன் வாக்களித்துள்ள மற்ற எல்லா பயன்களையும் கொண்டு வருவதாகவும் உள்ளது, ஞானஸ்நானம் பெறுபவர் இவை யாவற்றையும், இதன் நோக்கத்தையும் புரிந்து கொண்டுள்ளாரா என்பது பொருட்டல்ல.

… ஞானஸ்நானம் பெறுபவர் மன்னிப்பைக் குறித்து அறியாதவராய் இருப்பினும், அவர் பெறும் ஞானஸ்நானம் வேத ரீதியானதென்றே கருதப்பட வேண்டும். ஆகையினால், "பாவங்களின் மன்னிப்பு" என்ற விஷயத்தின் மிகச் சரியான சிறப்புக் கருத்தை ஒருவர் தாம் ஞானஸ்நானம் பெறும் வேளையில் அறிந்துணர வேண்டும் என்ற கருத்தானது சரியற்றதாகும்.[8]

இருப்பினும், திரு. [அலெக்ஸாண்டர்] கேம்ப்பெல் அவர்கள் அற்பமான அடிப்படைகளில் மறுமுழுக்காட்டுதலை அதற்கு நிரூபணமற்ற வகையில் ஆதரிக்கும் நடைமுறையை எப்பொழுதுமே முற்றிலும் எதிர்த்திருந்தார், கிறிஸ்துவின் மேல் உண்மையான ஒரு விசுவாசம் இருந்தால் எல்லா நிகழ்வுகளிலும் இது செல்லத் தக்கதாய் உள்ளது, இருப்பினும், இந்த நிறுவனத்தின் இயல்பு மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின் காலத்தில் ஞானஸ்நானம் பெறுபவருக்கு (இதைப் பற்றி) தகவல் அறிவிக்காத நிலை என்பது இருப்பினும் அப்படியே ஆகும். அவர் நியாயமானதாக நினைத்தது எதுவும் மறுமுழுக் காட்டுதலை நியாயப்படுத்த முடியாது, விதிவிலக்காக இருப்பது, அந்தத் தனிநபர் தம் முதலாம் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் விசுவாசத்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாக உணர்வடைதல் மட்டுமே ஆகும்.[9]

முழுக்காட்டுதலின் வடிவமைப்பைப் பொறுத்தமட்டில், அது முழுக்காட்டப்படுபவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தை அர்த்தப்படுத்தும் விளக்கமாக மட்டுமே உள்ளது, இது முழுக்காட்டுபவர் அல்லது முழுக்காட்டப்படுபவர் ஆகியோரின் பகுதியில் கடமை எதையும் கொண்டிருப்பதில்லை. இது மனிதரையல்ல தேவனைச் சார்ந்ததாகவே, தேவனுக்குரியதாகவே உள்ளது. குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் வாக்குத்தத்தம் செய்யப்பட்டு, அந்த நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்கும் பொழுது, அவர் தம் வார்த்தையில் நல்லவராய் இருக்கின்றார், நான் அவரது ஆசீர்வாதங்களுக்குத் தகுதியானவன் என்பதை நான் அறியாமல்

*இருப்பதால் அவர் அந்த ஆசீர்வாதங்களை நிறுத்திக் கொள்வார் என்று யூகிப்பது அறிவிற்கு ஏற்புடையதே அல்ல. ஆகையால் புதிய ஏற்பாட்டின் வாசகர் எவராலும் நிச்சயமாய் யூகிக்கக் கூடாதிருக்கின்றதான, நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனையாக வாக்குத்தத்தத்தின் அறிவு தேவை என்ற நிலையில்லாத வரையில் வாக்குத்தத்தம் பற்றிய அறியாமையினால் மட்டும் ஒரு மனிதர் இந்த ஆசீர்வாதங்களை இழந்து போய் விடமாட்டார்.*[10]

*ஆறாவதொரு கண்ணோட்டமானது இந்தப் பாடத்தில் பரிசோதனை செய்யப்படுகின்றது. ஞானஸ்நானம் என்பது தேவனுக்கு வசன ரீதியாகப் பதில் செய்வது என்ற வகையில் ஞானஸ்நானத்தைப் பரிசோதனை செய்வதே இப்பாடங்களின் தொடரினுடைய நோக்கமாக உள்ளது. இயேசுவை கிறிஸ்து, கர்த்தர், மீட்பர் மற்றும் தேவகுமாரன் (யோவா. 3:16; அப். 2:36) என்று விசுவாசித்து, அவருடைய இரத்தமானது தன்னுடைய பாவங்களை மன்னிக்கின்றது என்று விசுவாசமுள்ள ஒருவர் (ரோமர் 3:25) ஞானஸ்நானத்தில் தம்மை ஒரு புதிய வாழ்வுக்கும் (ரோமர் 6:4), இயேசுவைத் தரித்துக் கொள்வதற்காகவும் (கலா. 3:27) மற்றும் அவரது பாவமன்னிப்பிற்காகவும் (அப். 2:38) ஒப்புக் கொடுக்க வேண்டும். இவ்விதமாக அவர் மன்னிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கின்றார் (யோவா. 3:5), இது கிறிஸ்துவின் சரீரமாக (1 கொரி. 12:13), அவரது சபையாக (எபே. 1:22, 23) உள்ளது.*

## *முடிவுரை*

*இவைகள், சில வேறுபாடுகளுடன் பெரும்பாலான குழுக்களும் தனி நபர்களும் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கொண்டுள்ள பெரும்பான்மையான எண்ணப்போக்குகளை உள்ளடக்குகின்றன. இந்த எண்ணப்போக்குகளில் சில ஒன்றுடன் ஒன்று ஒத்ததாக இருக்கையில், வேறு சில ஒன்றுடன் ஒன்று முழுமையாக எதிர்க்கின்றதாய் உள்ளன.*

*ஞானஸ்நானம் பெறுகின்ற நபரிடத்தில் இயேசு எதைக் கேட்கின்றார் என்பதைத் தீர்மானம் செய்வதே இந்தப் பாடத்தின் பாரமாக உள்ளது. ஞானஸ்நான தண்ணீரானது பாவங்களை மன்னிக்க வல்லமையுள்ளதாக இருக்கின்றதா? ஞானஸ்நானம் என்பது உள்ளான கிருபையின் வெளியான அறிகுறியாக, ஒருவர் இரட்சிக்கப்பட்டுள்ளதை காண்பிக்கின்ற ஒரு அடையாளமாக மட்டுமே இருக்கின்றதா? இது ஒப்புக் கொடுத்தலின் ஒரு அறிகுறியாக அல்லது ஒரு நாமகரணக் கூட்டத்தில் மக்களை புகுமுகப்படுத்தும் செயலாக மட்டுமே இருக்கின்றதா? ஞானஸ்நானம் பெறுகின்றவர் ஞானஸ்நானத்தின் நோக்கம் மற்றும் வடிவமைப்பை அறியா விட்டாலும், அல்லது அவரிடத்தில் எதிர்பார்க்கக் கூடிய உறுதிப்பாடு என்ன என்பதைப் புரிந்து கொள்ளா விட்டாலும் ஞானஸ்நானம் என்பது செல்லுபடியாகக் கூடியதாக இருக்கின்றதா? தேவனுடைய பிள்ளையாக நாடும் ஒருவரிடத்தில் தேவன் ஒரு வெற்றுச் சடங்காச்சாரத்தை மட்டுமே கேட்கின்றாரா? தேவன் மனிதனுடனான தமது உறவில் ஞானஸ்நானத்தின்*

*நோக்கம் மற்றும் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல் சிறிதும் இல்லாத பதில்செயலை அவனது இருதயத்திலிருந்து எப்பொழுதாவது கேட்டிருக்கின்றாரா? ஒருவர் ஞானஸ்நானம் பெறும்பொழுது தம்மை ஒரு புதிய பிறப்புக்கு ஒப்புக் கொடுக்கின்றாரா? ஞானஸ்நானத்தில், தேவன் அதனுடன் இணைந்துள்ள அர்த்தத்தின் வெளிச்சத்தில் அதை ஒருவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?*

*தேவனுக்குத் தொடர்பற்ற அர்த்தத்திலிருந்து விலகியிருந்தால், அர்த்தமற்று இருக்கக் கூடியதான சரீரப் பிரகாரமான செயல்பாட்டில் ஈடுபடும் நபர் ஒருவரிடம் தேவன் வேண்டுவதென்ன என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு இந்தக் கேள்விகள் பதில் அளிக்கப்பட வேண்டும். வேதாகமத்தைப் பரிசீலனை செய்வதும், தேவனை தமக்காகப் பேச அனுமதிப்பதுமே பதில்களைக் கண்டறிவதற்கான ஒரே வழியாக உள்ளது.*

---

*குறிப்புகள்*

[1]Paul H. Hallett, *What is a Catholic?* (New York: Macmillan Co., 1955), 125. [2]Joe T. Odle, *Church Member's Handbook* (Nashville: Broadman Press, 1962), 22. [3]Kenneth Barker, ed., *The NIV Study Bible* (Grand Rapids, Mich.: Zondervan, 1985), 1648. [4]Ibid, 1690. [5]Westminster Confession, Chapter XXVIII, Article I, *The Constitution of the Reformed Presbyterian Church of America* (Philadelphia, Penn.: Synod of Reformed Presbyterian Churches, 1949), 48. [6]*Manual*, 4th ed. (Kansas City: Nazarene Publishing House, 1923), 26. [7]*The Truth That Leads to Eternal Life* (New York: Watchtower Bible and Tract Society, 1968), 183. [8]Jimmy Allen, *Rebaptism?* (West Monroe, La.: Howard Publishing Co., 1991), 48. [9]Robert Richardson, *Memoirs of Alexander Campbell*, vol. 2 (Philadelphia, Penn.: J. B. Lippincott, 1868-70; reprint, Indianapolis, Ind.: Religious Book Service, 1976), 443-44, quoted in Allen, 84. [10]J. W. McGarvey, “What Is a Valid Immersion?” *The American Christian Quarterly Review,* 1862, quoted in Allen, 94.

# பழைய ஏற்பாட்டில் சடங்கும் புரிந்து கொள்ளுதலும்

*பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன், தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும், நருங் குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங். 51:16, 17).*

ஞானஸ்நானமானது பாவங்களைப் போக்குவதற்கான உள்ளான வல்லமையோ அல்லது திறமையோ பெற்றிருப்பதில்லை என்ற உண்மையின் அடிப்படையில் சிலர் அதை சடங்கு அல்லது சடங்காச்சாரம் என்பதைக் காட்டிலும் அதிகமானதல்ல என்று கருதுகின்றனர். ஞானஸ்நானத்தின் இயல்பைத் தீர்மானிக்க நாடுவதில் பின்வரும் கேள்வியானது கேட்கப்பட வேண்டும்: "வெறுமனே நோக்கமற்ற சடங்கு, அருட்சாதனம் அல்லது சடங்காச்சாரமுடைய ஒரு செயல்பாடானது தேவனுடனான நமது உறவுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டுமென்று பழைய ஏற்பாடோ அல்லது புதிய ஏற்பாடோ கேட்டுக் கொள்கின்றதா?" ஒருவரின் இருதயத்தில் என்ன உள்ளது என்பதைப் பொருட்படுத்தாமல், தேவன் ஒரு செயலை அந்தச் செயலுக்காகவே எப்பொழுதாவது ஏற்றுக் கொள்ளுகின்றாரா?

தேவனுக்குப் பதில்செயலாக உள்ள எல்லா செயல்பாடுகளும் ஒரே வித கொள்கைகளைக் கொண்டதாக இருப்பதில்லை. ஒரு நபர் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால் அல்லது தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதமொன்றைப் பெற வேண்டுமென்றால், அவர் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படும் செயல்பாட்டைக் குறைந்தது ஐந்து கொள்கைகள் கட்டுப்படுத்துகின்றன:

(1) மனிதரின் தகுதிச் செயல்பாட்டின் அடிப்படையில் இன்றி ஒரு நபரின் விசுவாசத்தின் அடிப்படையில் ஒரு ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம்.

(2) ஆசீர்வாதத்தில் உள்ள நன்மையைப் புரிந்து கொள்ளுதல் அல்லது ஆசீர்வாதத்தில் நம்பிக்கையின்மை ஆகியவற்றுடன் கூடிய கண்மூடித்தனமான கீழ்ப்படிதலைக் கேட்கும் விசுவாசத்தின் அடிப்படையில் ஒரு ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம்.

(3) விசுவாசம் மற்றும் அதனுடன் கூடிய ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்கும் செயல்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம்.

(4) விசுவாசத்துடன் கூடிய செயல்பாடிருந்தும் அது தன்னில் தானே பயனை அடைய இயலாத நிலையின் அடிப்படையில் ஒரு ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம். இப்படிப்பட்ட ஒரு செயல்பாடானது ஆசீர்வாதத்திற்காக நம்பி எதிர்பார்த்திருப்பவருடன் உறுதியான தொடர்பு எதுவும் கொண்டிருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக, பயன் பெறுவதற்காக தேவன்மேல் உள்ள விசுவாசத்தினால் இது வற்புறுத்தப்படுகின்றது.

(5) விசுவாசமுள்ளவருக்குத் தரப்படுவதற்கு மாறாக மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதம் அல்லது நிறைவேற்றம் கொடுக்கப்படலாம்.

(கண்மூடித்தனமான விசுவாசம் தவிர) இந்த ஐந்தில் நான்கு கொள்கைகள் ஆசீர்வாதத்தில் விசுவாசம் உள்ளதின் அடிப்படையில் சில வழியில் அமைந்துள்ளன; இருப்பினும், தேவனைப் பிரியப்படுத்துவதற்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான புரிந்து கொள்ளுதல் மற்றும் செயல்பாடு ஆகியவை தேவன் கேட்டுக் கொள்கின்றவைகளுக்கேற்ப மாறுபடக்கூடும். இவைகளுக்கான வேதாகம உதாரணங்கள் சிலவற்றைக் கவனித்துப் பாருங்கள்:

### (1) மனிதத் தகுதியின் செயல்பாடு எதுவுமற்ற விசுவாசம்

ஆபிரகாமின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியானது செயல்பாடு அல்லது மனிதத் தகுதி எதுவுமற்ற ஆனால் விசுவாசத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட ஒரு ஆசீர்வாதத்திற்கு எடுத்துக்காட்டு ஒன்றை அளிக்கின்றது. ஆபிரகாமின் சந்ததியார் வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகுவார்கள் என்று தேவன் அவருக்குக் கூறினார். “அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்” (ஆதி. 15:6). இந்த விஷயத்தில், ஆபிரகாமின் பகுதியிலிருந்து எந்த ஒரு செயல்பாட்டையும் தேவன் கேட்டுக் கொள்ளவில்லை, ஆனால் அவரது விசுவாசத்தின் அடிப்படையில் அவரை நீதிமானாக ஏற்றுக் கொண்டார்.

### (2) கண்மூடித்தனமான கீழ்ப்படிதல்.

கண்மூடித்தனமான கீழ்ப்படிதலுக்கு ஒரு உதாரணமானது 2 இராஜாக்கள் 13:14-19ல் காணப்படுகின்றது. யோவாஸ் அரசரை, ஜன்னலைத் திறந்து கிழக்கு நோக்கி அம்பு எய்யும்படி எலிசா கூறினார். யோவாஸ் எய்தார். எலிசா, “அது கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பும், சீரியரினின்று விடுதலையாக்கும் இரட்சிப்பின் அம்புமானது; நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறிய அடிப்பீர்” என்றார் (2 இரா. 13:17). பின்பு எலிசா யோவாஸ் அரசரிடத்தில் அம்புகளை எடுத்துத் தரையிலே அடிக்கச் சொன்னார். யோவாஸ் தரையை மூன்று முறை அடித்தார். எலிசா அவரிடத்தில், “நீர் ஐந்து ஆறு விசை அடித்தீரானால், அப்பொழுது சீரியரைத் தீர முறிய அடிப்பீர்; இப்பொழுதோ சீரியரை மூன்று விசை மாத்திரம் முறிய அடிப்பீர்” என்று கூறினார் (2 இரா. 13:19).

யோவாசின் செயல்பாடானது தேவனிடத்திலிருந்து வரும்

ஆசீர்வாதத்திற்கான விசுவாசத்தின் முன்மாதிரியாக இருக்கவில்லை, ஆனால் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலாக இருந்தது. யோவாஸ் அம்பை எய்வதற்கும் தரையில் அடிப்பற்குமான நோக்கத்தை எலிசா யோவாசிடம் கூறியிருந்திருக்க முடியும்; அப்பொழுது யோவாசின் செயல்பாடானது தேவனிடத்திலிருந்து வருகின்ற ஆசீர்வாதத்தின்மேல் விசுவாசமுள்ள ஒரு செயல்பாடாக இருந்திருக்கும், தேவனும், யோவாஸ் கீழ்ப்படியும் போது அவருக்கு வெற்றியளிப்பது என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுத்து அதை நிறைவேற்றியுமிருந்திருப்பார். அவருக்கு அது அறிவிக்கப்படவில்லை யாதலாலும், இதன் காரணத்தால் அவர் தேவனுக்குக் கீழ்ப்படிவதினால் வரும் ஆசீர்வாதத்தைப் புரிந்து கொள்ளக் கூடாதிருந்ததாலும், அவர் தமது செயல்பாடுகளுக்குத் தேவன் வெகுமதியளிப்பார் என்று விசுவாசிக்கக் கூடாதிருந்தது. அவரது செயல்பாடுகள் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் விளைவாகவே இருந்தன.

### (3) சாதிப்பதற்கான விசுவாசமும் செயல்பாடும்.

பயன் ஒன்றைச் சாதிப்பதற்காக மக்களைச் செயல்பட ஊக்குவிக்கும் விசுவாசத்திற்கு நோவா பேழையைக் கட்டியது ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. பேழையைக் கட்டுவதற்கும், வரவிருந்த வெள்ளப் பெருக்கில் இருந்து தமது குடும்பத்தைக் காப்பதற்கும் இடையில் ஒரு தொடர்பை நோவாவினால் புரிந்து கொள்ள முடிந்தது, ஆனால் தேவனிடமிருந்து ஒரு வெளிப்படுத்துதலின்றி, வெள்ளப் பெருக்கிலிருந்து தமது குடும்பத்தைக் காப்பாற்றத் தாம் பேழையைக் கட்டுவது தேவை என்பதை அவர் அறிய முடியாதிருந்தது. வெள்ளப் பெருக்கு வரும் என்பதில் அவர் தேவன் மீது விசுவாசமாயிருக்க வேண்டியிருந்தது, மற்றும் அவர் அந்த விசுவாசத்தினால் அவரையும் அவரது குடும்பத்தையும், மற்றும் பல உயிரனங்களையும் பாதுகாப்பாய்ச் சுமப்பதற்கு ஒரு பேழையைக் கட்டும்படி ஊக்குவிக்கப்பட வேண்டியிருந்தது. அவரது விசுவாசமானது அவரையும் மற்றவர்களையும் காத்தல் என்ற பயனைச் சாதிக்கும் ஒரு செயல்பாட்டில் அவரை ஈடுபட வைத்தது. தேவன் அந்தப் பேழையைக் கட்டவுமில்லை அல்லது அந்தப் பேழையைப் பாதுகாப்பாகச் சுமக்கவும் இல்லை. பேழையைக் கட்டுவதென்பது நோவாவின் வேலையாய் இருந்தது, வெள்ளப் பெருக்கின் தண்ணீரானது பேழையை மிதக்கச் செய்தது.

### (4) சாதிக்க முடியாத விசுவாசமும் செயல்பாடும்

பெற்றுக் கொள்ளுகின்ற விசுவாசமானது தேவனிடத்தில் விசுவாசமுள்ள ஒரு நபருக்கு ஆசீர்வாதம் கொடுக்கப்படுகின்றது என்பதைக் கொண்டுள்ளது, ஆனால் அவரது செயல்பாடானது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்துடன் தர்க்க ரீதியான தொடர்பு எதையும் பெற்றிருப்பதில்லை என்பதை உணருகின்றது. இதற்கான நல்லதொரு எடுத்துக்காட்டு, எரிகோவின் மதில்களைச் சுற்றி இஸ்ரவேல் மனிதர்கள் சுற்றி வந்த பொழுது நடந்ததாகும். மதில்களை இடிக்கத் தக்கதாக அவர்கள்

தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருந்ததோடு, அணி வகுத்துச் செல்லுதலுக்கும் விரும்பிய விளைவுகளுக்கும் இடையில் உறுதியான/ நிச்சயமான தொடர்பு எதுவும் காணாத நிலையில் அவர்கள் விசுவாசத்துடன் செயல்பட வேண்டியதாக இருந்தது.

இது போன்ற நிகழ்ச்சிகளில், விசுவாசியானவர் தமது செயல்பாடுகள் ஆசீர்வாதத்தைச் சாதிக்க இயலாது என்பதை அறிகின்றார்; ஆகையால், தேவன் அவருக்காக/தமக்காகச் சாதிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருப்பதைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் தேவன் மீது தாம் கொண்டுள்ள விசுவாசத்தின்படி செயல்படுகின்றார். விசுவாசத்தின் இப்படிப்பட்ட செயல்பாடுகள் கேட்கப்படும் பொழுது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்; இல்லையென்றால், அவர் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலுடன்தான் செயல்பட முடியும். தேவன் அதை எப்படிச் செய்வார் என்றோ அல்லது தாம் கேட்டுக் கொள்ளப்பட்ட செயலைத் தாம் ஏன் செய்ய வேண்டும் என்றோ அவர் அறியாமல் இருக்கலாம், ஆனால் தம்மிடத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்ன என்பதையும், தமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது என்ன என்பதையும் அவர் அந்த வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடன் செயல்படத் தொடங்குமுன் புரிந்து கொள்ள வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையும்படியான விசுவாசத்துடன் ஒருவர் செயல்படவில்லையென்றால், அந்தச் செயல்பாடானது வாக்குத்தத்தத்துடன் தொடர்பற்றதாக உள்ளது, ஆகையால் அது வாக்குத்தத்தம் செய்துள்ளவர் மேல் விசுவாசம் கொண்ட செயல்பாடாக இருப்பதில்லை.

### (5) மற்றவர்களுக்குப் பயன்படும் விசுவாசம்.

தேவன் கானான் நாட்டை ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் சந்ததியினருக்குத் தருவதாக அவர்களிடத்தில் வாக்குத்தத்தம் பண்ணினார் (ஆதி. 12:7; 26:3; 35:12). மற்றவர்கள் (தங்கள் சந்ததியினர்) அந்த ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்றிருந்தாலும், தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற விசுவாசம் அவர்களிடத்தில் (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரிடத்தில்) இருந்தது. "இவர் களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்" (எபி. 11:13).

மற்றவர்கள் மட்டுமே பயன்பெறக் கூடியதான விசுவாசத்திற்கான கூடுதலான உதாரணங்கள் எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் உள்ளன: "விசுவாசத்தினாலே ஈசாக்கு, பெருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான். விசுவாசத்தினாலே யாக்கோபு, தன் மரண காலத்தில் யோசேப்பினுடைய குமாரர்

*இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையில் சாய்ந்து தொழுது கொண்டான். விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்தான்" (எபி. 11:20-22). இந்த மக்கள் தங்களுக்கல்ல, மற்றவர்களுக்கு (தங்கள் சந்ததியார்களுக்கு) வரும் ஆசீர்வாதங்களிலே விசுவாசமுடையவர்களாய் இருந்தனர்.*

## விசுவாசத்தின் பழைய ஏற்பாட்டு உதாரணங்கள்

*தங்களின் விசுவாசத்தினாலே ஆசீர்வதிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு மக்களின் உதாரணங்களை எபிரெயர் 11ம் அதிகாரம் தருகின்றது. பெறப் போகிற ஆசீர்வாதம் எப்படிப்பட்டதாக இருப்பினும், இந்த உதாரணங்கள் பின்வரும் கூறுகளை உள்ளடக்கின: (1) தேவனிடமிருந்து ஒரு கூற்று அல்லது கட்டளை, (2) தேவன் கூறியது பற்றிய ஒரு புரிந்து கொள்ளுதல், (3) மனிதரின் பகுதியில் காணப்படாத ஒரு கூறு, (4) தேவனுடைய வசனமானது மனிதரால் ஏற்றுக் கொள்ளப்படுதல், மற்றும் (5) செயல்பாடு தேவைப்பட்டால், மனிதரால் தக்க செயல்பாடு. கண் மூடித்தனமான கீழ்ப்படிதலினால் செயல்படுவதை அதாவது விசுவாசமும் செயல்பாட்டுடன் இணைந்துள்ள வாக்குத்தத்தத்தைப் புரிந்து கொள்ளுதலும் இல்லாத செயல்பாட்டை விசுவாசமானது எவ்விஷயத்திலும் கேட்பதில்லை.*

### ஆபேல்

*"விசுவாசத்தினாலே ஆபேல் காயினுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் ..." (எபி. 11:4). காயீனுடைய பலியிலும் ஆபேலினுடைய பலியை மேன்மையாக்கியது எது என்பதை பற்றிப் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.*

*செலுத்தப்பட்ட பலியின் வகையல்ல, ஆனால் எண்ணப் போக்குதான் பிரச்சனையாயிற்று என்று சிலர் நம்புகின்றனர். இருப்பினும் இவ்வசனப் பகுதியானது பலியில் வேறுபாடு இருந்தது என்று எடுத்துரைக்கின்றது; ஆபேல், காயீனுடைய பலியிலும் "மேன்மையான பலியை" செலுத்தினார். நியாயப்பிரமாணமானது காயீன் செலுத்தியது போன்ற வகையில் ஆன பலியை, வயலில் விளைந்த தானியத்தின் காணிக்கையை அனுமதித்தது என்பதை (லேவி. 2:1-16) மற்றவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது உண்மையாக இருக்கலாம், ஆனால் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் இப்படிப்பட்ட பலிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டனவா?*

*நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு (ஒரே விதிவிலக்காக காயீனின் காணிக்கை பலி தவிர) விலங்குப் பலிகள் மட்டுமே*

*செலுத்தப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நோவா பேழையை விட்டு வெளியே வந்தவுடன், "சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அவைகளைப் பலி பீடத்தின்மேல் தகன பலிகளாகப் பலியிட்டான்" (ஆதி. 8:20). ஆபிரகாம் ஒரு ஆட்டுக் கடாவைப் பலியிட்டார் (ஆதி. 22:13). ஈசாக்கின் கூற்றானது, ஒரு விலங்குதான் சாதாரணமாகப் பலி பொருளாயிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது, ஏனெனில் பலி செலுத்தும் இடத்தை ஆபிரகாம் கண்ட பொழுது, அவரிடத்தில் ஈசாக்கு, "... தகன பலிக்கு ஆட்டுக் குட்டி எங்கே?" (ஆதி. 22:7) என்று கேட்டார். பார்வோனிடத்தில் மோசே, இஸ்ரவேல் மக்கள் தங்களின் பலிகளைச் செலுத்துவதற்கு கால் நடைகள் தேவை என்று கூறினார் (யாத். 10:25). என்ன பலியிடப்பட்டது என்பதைக் கூறாமல் மற்ற சில வசனப் பகுதிகள் பலி செலுத்துதலைக் குறிப்பிடுகின்றன (ஆதி. 31:54; 46:1; யோபு 1:5).*

*நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு மிருக பலிகள் என்பவை மட்டுமே ஒரே ஒரு வகையான காணிக்கைகளாய் இருந்தன என்று பதிவு செய்யப்பட்டுள்ள உண்மையானது தேவன் மிருக பலிகளைக் கட்டளையிட்டிருந்தார் என்று சுட்டிக்காட்டுகின்றது. வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தின்மேல் கொண்டிருந்த விசுவாசத்தினால் (ரோமர் 10:17ஐக் கவனிக்கவும்), ஆபேல் தேவன் கேட்டுக் கொண்ட பலியைச் செலுத்தினார், ஆனால் காயீன் தாமே தேர்ந்து கொண்ட பலியைச் செலுத்தினார், இது தேவனுக்குக் கீழ்ப்படியும் செயலினால் உண்டான ஒரு பலியாக இருக்கவில்லை.*

*ஆபேல் விசுவாசத்தினால் தமது பலியைச் செலுத்தியதால், அவரது காணிக்கையானது கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் செயல்பாடாக இருக்கவில்லை. அது பெரும்பாலும் தேவனைத் தொழுது கொள்ளும் நோக்கம் கொண்டதாகவோ அல்லது ஒரு பாவநிவாரணப் பலியாகவோ இருந்தது.*

## *நோவா*

*நோவா, கண்மூடித்தனமான கீழ்ப்படிதலுக்கல்ல, விசுவாசத்தினால் செயல்படுவதற்கே ஒரு முன்மாதிரி ஆவார். ஏனென்றால் அவர் தேவனால் எச்சரிக்கப்பட்டிருந்ததால், எதற்காகப் பேழையைக் கட்டினார் என்பதை அறிந்திருந்தார் (ஆதி. 6:13-22). வரவிருந்த வெள்ளப் பெருக்கு பற்றியும் பேழை ஒன்றைக் கட்டுவதன் மூலம் அவரது குடும்பத்தைப் பாதுகாப்பது பற்றியும் தேவன் தம்மிடம் கூறியதை அவர் நம்பினார். பேழையை அவர் ஒரு நோக்கத்திற்காகவே கட்டினார்: தம்மையும், தம் குடும்பத்தையும், பேழைக்குள் வருகிற எவரொருவரையும் மற்றும் உயிரினங்களையும் காப்பாற்றுதல். தேவன் பேழையைக் கட்டச் சொன்னார் என்பதற்காக அவர் அதைக் கட்டியிருந்தாரென்றால், பெருவெள்ளத்திற்கான தயாரிப்பாயில்லாமல் சும்மா அதில் வாழ்வதற்காக மட்டுமே அதைச் செய்திருந்தாரென்றால், அவர் தவறான நோக்கத்திற்காகச்*

*செயல்பட்டதைத் தேவன் அறிந்திருப்பார், சிறிதும் ஐயத்திற்கிடமின்றி அவரது செயல்பாட்டை அவர் (தேவன்) ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்.*

## ஆபிரகாம்

*கண்மூடித்தனமான கீழ்ப்படிதலினால் அல்ல, விசுவாசத்தினால் செயல்பட்டதற்கு ஆபிரகாம் இன்னுமொரு முன்மாதிரியாக இருக்கின்றார். அவர் தாம் அடையவிருந்த இடம் எது என்பதை அறியாதிருந்தாலும், தேவன் அவருக்கு வழியைச் சொல்லவிருந்தார் (ஆதி. 12:1-4) என்பதால், தேவன் கூறுமிடத்திற்குத் தாம் சென்றால், அவர் தம்மை ஒரு மாபெரும் இனமாக்குவார் மற்றும் தம்மை ஆசீர்வதிப்பார் என்ற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்தைப் பெற்றிருந்தார். தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்ததென்ன என்பதை ஆபிரகாம் புரிந்து கொண்டு அதை நம்பினார். அவர் (ஆபிரகாம்) சென்றால் என்ன செய்யப்படும் என்பதைத் தேவன் கூறாதிருந்தால், அல்லது வெறுமனே செல்லும்படி மட்டும் தேவன் கூறியிருந்தால், ஆபிரகாமின் செயல்பாடானது கண்மூடித்தனமான கீழ்ப்படிதலாக மட்டுமே இருந்திருக்கும்; அவர் புரிந்து கொண்டிருந்ததால், தேவனுடைய வாக்குத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தினால் அவர் செயல்பட்டார்.*

*செல்வந்தராகவும், வல்லமை நிறைந்தவராகவும் ஆவதற்கோ, தம் உறவினர்களை விட்டு விலகுவதற்கோ, சாதனை புரிவதை அனு பவிப்பதற்கோ, அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காகவோ ஆபிரகாம் புறப்பட்டுச் சென்றிருந்தால், அவர் தவறான காரணத்திற்காகச் சென்ற வராய் இருந்திருப்பார். அப்படிப்பட்ட ஒரு செயல்பாட்டிற்கு தேவன் நிச்சயமாய்ப் பலன் அளித்திருக்க மாட்டார், ஏனெனில் இருதயத்தைப் பார்க்கின்ற தேவனானவர், ஆபிரகாம் தவறான நோக்கத்திற்காகச் சென்று கொண்டிருந்தார் என்பதையும், தமது (தேவனுடைய) வாக்குத்தத்தத்தைத் தாம் (தேவன்) நிறைவேற்றுவதில் அவருக்கு (ஆபிரகாமுக்கு) விசுவாசம் இல்லையென்பதையும் அறிந்திருப்பார்.*

## யோசுவாவும் இஸ்ரவேலும்

*“விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழு நாள் சுற்றி வரப்பட்டு விழுந்தது” (எபி. 11:30). இஸ்ரவேலர்கள் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலில் செயல்படவில்லை, ஆனால் தாங்கள் மதில்களைச் சுற்றி வந்தால் அவைகள் விழும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தை அவர்கள் அறிந்து நம்பியதால் செயல்பட்டனர் (யோசு. 6:1-5). தேவன் அவர்களை அணி வகுத்துச் செல்லும்படி கட்டளையிட்டிருந்து, ஆனால் அவர்கள் அணி வகுத்துச் சென்றால் தாம் செய்வதென்ன என்பதை அவர்களிடத்தில் கூறாதிருந்தால், அவர்களின் செயல்பாடானது மதில்களை வீழ்த்துவதற்குத் தேவன் மேல் உள்ள விசுவாசத்தின் அடிப்படையிலல்ல, ஆனால் கண்மூடித் தனமான கீழ்ப்படிதலின் அடிப்படையில் மட்டுமே இருந்திருக்கக் கூடும்.*

*இந்த உதாரணமானது சாதிப்பதற்கான ஒரு செயல்பாட்டிற்கும்,*

ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான ஒரு செயல்பாட்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் காண்பிக்கின்றது. இஸ்ரவேலர்கள் வலிவான படையினரைக் கொண்டு மதில்களை இடித்துத் தள்ளியிருந்தால், இது ஆசீர்வாதத்தைச் சாதித்துப் பெற்றுக் கொள்வதற்கான செயல்பாடாக இருந்திருக்கும். மாறாக, அவர்கள் விசுவாசத்தினால் செயல்பட்டு, தங்களின் செயல்பாட்டிற்கும், விரும்பத்தக்க முடிவு விளைவுகளுக்கும் தொடர்பெதையும் காணாதிருந்தனர். ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, தேவன் மதில்களை இடித்துத் தள்ளுவார் என்று அவரை நம்பி அவர்கள் மதில்களைச் சுற்றி வந்தனர். அவர்கள் தங்களின் சொந்த செயல்பாடுகளின் மீதல்ல, ஆனால் தேவன் மீதே விசுவாசம் வைத்தார்கள்.

அணிவகுத்துச் செல்லுதல், உரத்த சத்தமிடுதல் மற்றும் எக்காளங்களை ஊதுதல் ஆகியவற்றைத் தேவன் தேர்ந்து கொண்டது ஏன் என்பதை யோசுவாவும் இஸ்ரவேலரும் புரிந்து கொள்ளத் தேவையில்லாதிருந்தது. இருப்பினும், விசுவாசமுள்ளவர்களாய் இருப்பதற்காக, தேவன் மதில்களை வீழ்த்துவதாக அளித்திருந்த வாக்குத்தத்தத்தை அவர்கள் புரிந்து கொள்வது அவசியமாய் இருந்தது. தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் புரிந்து கொண்டிராமல் அவர்கள் செயல்பட்டிருந் தாலோ, அல்லது (உடற்பயிற்சி செய்தல் அல்லது அணி வகுத்துச் செல்லப் பழகுதல் போன்ற) வேறு சில நோக்கங்களுக்காக அவர்கள் அணி வகுத்துச் சென்றிருந்தாலோ, மதில்களை இடித்துத் தள்ளுவதற்குத் தேவன்மேல் உள்ள விசுவாசத்தினால் அவர்கள் செயல்பட்டிருக்க மாட்டார்கள். எல்லா இருதயங்களையும் அறிகிற தேவனானவர், அவர்கள் தம்மீது கொண்ட விசுவாசத்தினால் அணி வகுத்துச் செல்லவில்லை என்பதை அறிந்திருப்பார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றுக் கொள்ளும்படியில்லாமல் அவர்கள் அணி வகுத்துச் சென்றிருந்தால், அவர்களுடைய செயல்பாடானது வாக்குத் தத்தத்துடன் தொடர்புடையதாக இருந்திருக்காது, ஆகையால் அவர்களின் செயல்பாட்டில் தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று தேவன்மேல் கொண்ட விசுவாசத்தின் செயல்பாடாக அது இருந்திருக்காது. தேவன் மதில்களை இடித்துத் தள்ளுவார் என்று அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் பேரில் தேவன் அதைச் செய்ததால், அப்படிப்பட்ட விசுவாசமின்றி அவர்கள் அணி வகுத்துச் சென்றிருந்தால், தேவன் மதில்களை இடித்துத் தள்ளியிருக்க மாட்டார் என்று கருத்து தொடர்கின்றது.

விசுவாசத்தின் மற்ற உதாரணங்கள் எபி. 11ல் காணப்படுகின்றன. ஆனால் பின்வருவனவற்றைக் காண்பிப்பது போதுமானவைகளாய் உள்ளன:

(1) தேவன் ஒரு ஆசீர்வாதத்தை அளிப்பார் என்று அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும் என்று தேவன் கேட்கின்ற பொழுது, அந்த ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு கண்மூடித்தனமான கீழ்ப்படிதலை விட மேலான ஒன்று கேட்கப்பட்டது.

(2) செயல்படுவதற்குத் தேவன்மேல் விசுவாசம் கொண்டிருந்தவர்கள், கேட்கப்படும் செயல்பாட்டிற்கும் ஆசீர்வாதத்திற்கும் இடையிலிருந்து

*தொடர்பை எப்பொழுதுமே புரிந்து கொண்டிருந்ததில்லை, ஆனால் அவர்கள் செயல்பட்டால் தேவன் எதை வாக்குத்தத்தம் செய்தார் என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர்.*

*(3) சில வேளைகளில், விசுவாசத்திற்கு ஒருவர் தம் சொந்த வேலையினால் ஒரு இலக்கைச் சாதிப்பது என்ற செயல்பாடு கேட்டுக் கொள்ளப்பட்டது.*

*(4) சில வேளைகளில் விசுவாசமானது செயல்பாட்டினால் விளைவைத் தானே பெறுவதற்குப் பதில் தேவன் கொண்டு வருவதைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயல்பாட்டைக் கேட்டுக் கொள்கின்றது.*

*(5) தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றும் தம் வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் செயல்படத் தூண்டும் விசுவாசத்தைக் கேட்டுக் கொள்கின்றார்.*

## பலிகளில் உள்ள நோக்கம்

*பழைய ஏற்பாட்டில் பலியைக் கொண்டு வந்த ஒருவர் தாம் கொண்டு வர வேண்டிய பலியின் வகையைப் புரிந்து கொண்டது மட்டுமின்றி, தமது பலியின் குறிப்பிட்ட இலக்கு அல்லது நோக்கத்தையும் புரிந்து கொண்டிருந்தார்.*

*இஸ்ரவேலர்கள் தங்களின் காணிக்கைகளுக்கு பல விதமான பலிகளையும் நோக்கங்களையும் கொண்டிருந்தனர். குறைந்தது ஐந்து வகையான பலிகளை தர முடிந்திருந்தது: (1) தகன பலி (லேவி. 1); (2) போஜன பலி (லேவி. 2); (3) சமாதான பலி (லேவி. 3); (4) பாவ நிவாரண பலி (லேவி. 4); மற்றும் (5) குற்ற நிவாரண பலி (லேவி. 5). முதற்கனி, குழந்தை பிறப்பு, வியாதியிலிருந்து சுத்திகரிக்கப்படுதல் மற்றும் ஆசாரியனை சுத்திகரிக்கப்படுத்துதல் உட்பட மற்ற பலிகள் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு பலியும் ஒரு குறிப்பிட்ட வகையினதாய் இருக்க வேண்டியதாயிற்று, ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைக் கொண்டிருந்தது.*

*பலியின் நோக்கம் என்பது பலியின் அவசியமான பாகமாய் இருந்தது. அறியாமையினால் பாவம் செய்த ஒருவர், "தான் செய்த பாவத்தினிமித்தம்" (லேவி. 4:28) ஒரு விலங்கை (வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு குட்டியை)க் கொண்டு வர வேண்டியதாயிருந்தது. அவர் மற்ற நோக்கங்களுக்காக பலிகளைக் கொண்டு வர முடிந்திருந்தது, ஆனால் பாவ நிவாரணப் பலியில் அவர் தாம் செய்திருந்த பாவத்திற்காகப் பலி செலுத்த வேண்டியிருந்தது. தேவன் பலியிடும்படி கட்டளையிட்டார் என்பதினால் மட்டும் பலியிடுவது போதுமானதாக இருந்ததில்லை. அந்த பலியானது அவர் (அந்த மனிதர்) செய்திருந்த பாவ(நிவாரண)த்திற்கானதாக இருக்க வேண்டியதாயிற்று. சரியான காரணத்திற்காக இல்லாது ஒரு பலியைச் செலுத்துகின்றவர், பலி செலுத்துவதன் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படிபவராயிருக்கலாம், ஆனால் அதே வேளையில் சரியான நோக்கத்திற்காக அந்தப் பலியைச் செலுத்தாததன் மூலம் அவர் தேவனுக்குக்*

*கீழ்ப்படியாதவராவார்.*

*செயல்பாட்டின் பின்னணியில் இருந்த நோக்கமானது செயல்பாட்டைப் போலவே விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் பாகமாய் இருந்தது. சரியான செயலைக் கூட தவறான நோக்கத்தோடு செய்பவர், தவறான செயலைச் செய்பவர் அல்லது செயல்பாடே செய்யாதவர் போலவே கீழ்ப்படியாமை உள்ளவராய் இருக்கின்றார்.*

## இருதயமும் பலியும்

*பலியைச் செலுத்துகின்ற ஒருவருடைய எண்ணப்போக்கு என்பது கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் ஆகும். தேவன் பலி செலுத்துவதை வெறுமனே கீழ்ப்படிதலின் விஷயம் என்ற வகையிலான ஒரு வெற்றுச் சடங்காச்சாரமாகவோ அல்லது மதச் சடங்காகவோ கட்டளையிடவில்லை. புரிந்து கொள்ளாதவர்களும், உள்ளான ஈடுபாடு இல்லாதவர்களும் தேவன் விரும்பிய பதில் செயலைச் செய்ய முடியாதிருந்தது.*

*தேவன் பலியில் மட்டும் பிரியப்படுவதில்லை, ஆனால் பலி செலுத்தும் ஒருவரிடத்தில் நொறுங்குண்ட இருதயத்தையும், நறுங்குண்ட ஆவியையும் அவர் எதிர்பார்த்தார்:*

> *பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங். 51:16, 17).*

*இளகிய மனமுடைய எந்த நபரும் ஒன்றுமறியாத மற்றும் குற்றமற்ற விலங்கு ஒன்றைத் தாம் மரணத்திற்கு உட்படுத்தும் பொழுது, தாம் பாவம் செய்திருந்ததால் அந்த விலங்கு மரணம் அடைகின்றது என்பதை உணர்ந்து உள்ளான வேதனையை உணருவார். இவ்விதமாக அவர் தமது வழிகளைச் சீர்படுத்தும்படி தூண்டி விடப்படுவார். பலிக்காக மட்டுமே தேவன் பலியில் பிரியப்படுவதில்லை என்பதைப் பல வசனப் பகுதிகள் போதிக்கின்றன. ஆனால் அவர் இருதயத்தின் சரியான நோக்கம் மற்றும் எண்ணப்போக்கு ஆகியவற்றுடனான பலியையே மிகவும் விரும்புகின்றார் (சங். 40:6-8; 51:16, 17; ஏசா. 1:10-14; 66:3; எரே. 6:19, 20; 7:22, 23; ஓசி. 6:6; ஆமோஸ் 5:21-24; மீகா 6:6-8).*

*"இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர் ..." (சங். 51:6). உள்ளான உண்மையுடன் இருக்கும் இருதயத்திலிருந்து வரும் பலியையே தேவன் விரும்பினார் (நீதி. 16:2; 21:2).*

## முடிவுரை

*ஒரு சில விஷயங்களில் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலைத் தேவன் கேட்டுக் கொண்டார், ஆனால் வழக்கமாக அவர், தாம் வாக்குத்தத்தம்*

செய்திருந்ததை நிறைவேற்றுவார் என்று தம் மீது (மக்கள்) விசுவாசம் கொள்ள வேண்டும் என்றுதான் கேட்டுக் கொண்டார். இப்படிப்பட்ட விசுவாசத்திற்கு சரியான செயல்பாடு மட்டுமின்றி, தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளது குறித்து அவர்மேல் விசுவாசமும், இருதயத்தின் சரியான நோக்கமும் எண்ணப்போக்கும் கூட உள்ளடக்கப்படுகின்றன.

# புதிய ஏற்பாட்டில் சடங்கும் புரிந்து கொள்ளுதலும்

*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பதும் கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகின்றவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6).*

பழைய ஏற்பாட்டில் உள்ளது போலவே தேவனுடைய சித்தத்திற்கு மனிதரின் பதில்செயலைக் கட்டுப்படுத்துகின்ற ஐந்து கொள்கைகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன:

(1) தகுதிச் சிறப்பின் செயல்பாடு எதுவுமின்றி ஒரு நபரின் விசுவாசத்தின் அடிப்படையில் ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம் (மத். 9:27-30).

(2) கண்மூடித்தனமான கீழ்ப்படிதலைக் கேட்கின்ற விசுவாசத்தின் அடிப்படையில், அதாவது ஆசீர்வாதத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலோ அல்லது ஆசீர்வாதத்தில் விசுவாசமோ சிறிதும் இல்லாத செயல்பாட்டின் அடிப்படையில் ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம் (அப். 3:4).

(3) விளைவைச் சாதிக்கத் தூண்டுகின்ற செயல்பாடுடன் கூடிய விசுவாசத்தின் அடிப்படையில் ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம். உலகத்தை ஜெயித்தல் (மனித செயல்பாட்டைக் கேட்கின்ற ஒரு விளைவு) என்பது இயேசுவின்மேல் உள்ள விசுவாசத்தின் விளைவாக உள்ளது (1 யோவா. 5:4, 5).

(4) செயல்பாட்டிற்கும் விளைவுக்கும் இடையில் தர்க்க ரீதியான தொடர்பு எதுவும் அறியப்படாத நிலையில், விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த செயல்பாட்டினால் ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம் (யோவா. 9:1-7).

(5) விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கு மாறாக மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கப்படலாம் (மத். 9:1-7).

ஆகையால், ஞானஸ்நானம் என்பது மேற்கண்ட ஐந்து கொள்கைகளில் ஏதேனும் ஒன்றினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## விசுவாசமும் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலும்

ஒரு கட்டளைக்குக் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படியும் செயல்

*பாடானது, ஆசீர்வாதத்தைத் தேவன் கொடுத்தல் பற்றி தேவன்மீது விசுவாசத்தின் அடிப்படையில் செயல்படுவதை விட மாறுபட்ட வகையான புரிந்து கொள்ளுதலையும் உணர்வையும் கேட்பதாக உள்ளது. கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் என்பது என்ன கட்டளையிடப் பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுதலை மட்டுமே கேட்கின்ற வேளையில், விசுவாசமானது என்ன கட்டளையிடப்பட்டுள்ளது என்பதோடு கூட ஒரு கட்டளையுடன் இணைந்துள்ள பயன், ஆசீர்வாதம் அல்லது எச்சரிக்கையையும் புரிந்து கொள்ளுதலையும் கேட்கின்றது. ஒரு குறிப்பிட்ட செயல்பாடு ஏன் கேட்கப்படுகிறது, எங்கு அது நிகழ்த்தப்பட முடியும் அல்லது எதிர்பார்க்கும் விளைவுடன் அதற்குள்ள தர்க்க ரீதியான தொடர்பு என்ன போன்றவைகளை விசுவாசம் கொண்ட ஒரு நபர் புரிந்து கொள்ளத் தேவைப்படாதிருக்கலாம். அவர், செயல்பாட்டிற்கு அப்பால் சிலவற்றில் விசுவாசம் கொண்டு கட்டளைக்குச் சரியானபடி பதில்செயல் செய்வதைப் போதுமான அளவு புரிந்து கொள்ளுதல் மட்டுமே தேவையாய் இருக்கலாம். இல்லையென்றால், அந்த செயல்பாடானது கண்மூடித் தனமான கீழ்ப்படிதலாக மட்டுமே இருக்கும். வாக்குத்தத்தத்துடன் கூடிய ஒரு கட்டளையானது வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதலாக மட்டுமின்றி, தேவன் வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்றுவார் என்று அவர்மேல் விசுவாசம் கொள்ளு வதையும் கேட்கின்றது.*

*ஆபிரகாம் தம் மகனான ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் பலி செலுத்தும்படி தேவன் இட்ட கட்டளையானது புரிந்து கொள்ளுதல் தேவைப்படாத விசுவாசத்தின் செயல்பாடாக, கண் மூடித்தனமான கீழ்ப்படிதலாக மட்டுமே இருந்ததென்று சிலர் மறுத்துரைக்கலாம். இது உண்மையாய் இருப்பதில்லை, ஏனெனில் தேவன் ஆபிரகாமுடன் ஏற்படுத்திக் கொண்ட தம்முடைய உடன்படிக்கையானது ஈசாக்கின் மூலமாக நிறைவேறும் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (ஆதி. 17:17-19). ஆபிரகாம் இந்த வாக்குத்தத்தத்தைப் புரிந்து கொண்டு, அதில் நம்பிக்கையாய் இருந்தார் (எபி. 11:17-19). ஈசாக்கைக் கொல்லுதல் என்பது வாக்குத்தத்தத்தை ஒன்றுமற்றதாக்குவதாகக் காணப்பட்டிருக்கும்; ஆகையால், அவர் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட செயல்பாடானது அவரது விசுவாசத்தின் சோதனையாக இருந்தது, இது தேவன் ஏற்படுத்திய ஒரு வாக்குத்தத்ததைப் புரிந்து கொண்டதன் அடிப்படையில் ஆனதாயிருந்தது.*

*விசுவாசம் என்பது ஒரு கட்டளையுடன் இணைந்துள்ள ஆசீர்வாதத்தைப் புரிந்து கொள்ளும்படி கேட்பதுடன், சரியான நோக்கத்திற்காக ஒருவர் செயல்படும்படியும் கேட்டுக் கொள்ளுகின்றது. கண்மூடித்தனமான கீழ்ப்படிதலுக்கு இவ்விரண்டுமே தேவையில்லாததாயிருக்கிறது.*

# புதிய ஏற்பாட்டு உதாரணங்கள்

பேதுருவும் யோவானும் ஆலயத்திற்குள் சென்று கொண்டிருக்கையில், நாற்பது ஆண்டுகளாகச் சப்பாணியாய் இருந்த ஒரு பிச்சைக்காரனைக் கண்டனர் (அப். 3:2; 4:22). இயேசு கிறிஸ்துவின் வல்லமையின் மூலம் அவர்கள் அந்தச் சப்பாணியைக் குணப்படுத்தினர் (அப். 4:10). இந்த நிகழ்வில் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலும், விசுவாசத்தின் அடிப்படையிலான பதில்செயலும் அடிப்படையாய் இருந்தன என்பது உறுதி. அந்த மனிதரிடத்தில் பேதுரு, "எங்களை நோக்கிப் பார்!" (அப். 3:4) என்றார். இந்தக் கட்டளைக்கு இணங்குதல் என்பதற்கு அவர்களை நோக்கிப் பார்த்தலுக்கான காரணமோ, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தில் விசுவாசமோ, அல்லது ஏற்ற நோக்கமோ எதுவும் தேவைப்பட்டிருந்ததில்லை - கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் மட்டுமே தேவைப்பட்டிருந்தது.

உண்மையில், அந்த மனிதர் (சப்பாணி), "... அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி ..." (தாம் இரந்து கேட்ட ஒரு தர்மம், தாராள மனதுடன் தரப்படும் ஒரு நன்கொடையைப் பெறும்படியான எதிர்பார்ப்புடன், அப். 3:5) ஒரு தவறான காரணத்திற்காகவே அவர்களை நோக்கிப் பார்த்தார். இருப்பினும் "எங்களை நோக்கிப் பார்!" என்று பேதுரு கூறிய பொழுது, அம்மனிதர் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலுடன் கீழ்ப்படிந்தார்.

இருப்பினும், பேதுரு மற்றும் யோவான் ஆகியோரின் அடுத்த கட்டளையானது கண்மூடித்தனமான கீழ்ப்படிதலை விட அதிகமானதைக் கேட்டது, ஏனெனில் அது ஒரு ஆசீர்வாதத்தை மறைமுகமாய் உணர்த்தியது மட்டுமின்றி, புரிந்து கொள்ளுதலையும் விசுவாசத்தையும் கேட்டுக் கொண்டது. அந்த மனிதர், தம்மால் நடக்க முடியாது என்பதை அறிந்திருந்தார்; இதை அவர் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக அறிந்திருந்தார் (அப். 4:22). நடப்பதற்கான ஒரு முயற்சிக்கு கீழ்ப்படிதல் மட்டுமின்றி நடக்கும்படி அவர் கட்டளையிடப்பட்ட நாமமாகிய இயேசுவின் மீது கொண்டுள்ள விசுவாசமும் அவசியமாய் இருந்தது (அப். 3:6).

கட்டளையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது என்ன என்பதை அம்மனிதர் புரிந்து கொண்டிராதிருந்தால், அந்தக் கட்டளையின் மீது கொண்ட விசுவாசத்தில் அவர் செயல்பட்டிருக்க முடியாது. கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் மட்டுமே அவரது தெரிவாய் இருந்திருக்கும். இயேசுவின் நாமத்தின் மூலமாக நடக்கக் கூடும் என்ற வாக்குத்தத்தத்தை அவர் புரிந்து கொண்டதால், இயேசுவின் நாமத்தின் மூலமாகத் தாம் நடக்க முடியும் என்று நம்பி அவர் விசுவாசத்தினால் செயல்பட முடிந்தது (அப். 3:16). தேவன் மட்டுமே காணக் கூடியதும், மனிதர் உய்த்துணர மட்டுமே கூடியதுமான இந்த விசுவாசம் அவரைச் செயல்படத் தூண்டியது; தேவன் அவரை இந்த அடிப்படையிலேயே குணமாக்கினார். அவர் இந்த விசுவாசத்தைக் கொண்டிராவிட்டால் தேவன்

*அவரைக் குணப்படுத்தியிருக்க மாட்டார். எல்லா அற்புதங்களுக்குமே விசுவாசம் தேவைப்பட்டிருந்ததில்லை, ஆனால் அற்புதம் ஒன்று நிகழ்த்தப்பட வேண்டியுள்ளது என்பதைப் புரிந்து கொண்டிருந்தும், ஒரு நபர் விசுவாசத்தில் குறைவு படும்போது, அற்புதம் நிகழ்த்தப்படாதிருந்தது (மத். 13:58).*

## விளைவில் விசுவாசம்

*பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், தேவனுடைய வல்லமையிலும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அவருடைய ஆசீர்வாதத்திலும் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் தேவன் ஒரு ஆசீர்வாதத்தை வாக்குத்தத்தம் செய்த பொழுது, அவர் அந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் முன்பு விசுவாசமும் சரியான பதில்செயலும் அவசியமாய் இருந்தன.*

*இயேசுவின் சொந்த ஊர்ப் பகுதிகளில் அவர், மக்களின் அவிசுவாசத்தினிமித்தம் அநேக அற்புதங்களைச் செய்யவில்லை (மத். 13:58). மக்கள் அவரது கட்டளைகளுக்கு சரீரப் பிரகாரமாகக் கீழ்ப்படிந்த போதிலும், அவர்களின் அவிசுவாசத்தின் காரணமாக அற்புதங்கள் நிகழ்த்தப்படவில்லை என்றே இது அர்த்தமாக வேண்டும். சில நிகழ்ச்சிகளில், வியாதிக்காரர்கள் இயேசுவின் மீது கொண்டிருந்த விசுவாசத்தினால் அவர்கள் பகுதியில் செயல்பாடு எதுவுமின்றியும் கூட இயேசு அவர்களைக் குணப்படுத்தினார் (மத். 9:27-29). மற்றவர்களிடத்திலோ, அவர்களைக் குணப்படுத்தும் முன்பு அவர்களிடத்தில் செயல்பாட்டைக் கேட்டார் (யோவா. 9:1-7), மற்றும் அவர் இன்னும் மற்றவர்களை அவர்களின் அன்புக்குரியவர்களுடைய விசுவாசத்தின் காரணமாகக் குணமாக்கினார் (மத். 9:1-7).*

*விசுவாசத்தின் அடிப்படையிலும் சரியான பதில்செயலின் அடிப்படையிலும் தரப்படுகின்ற ஒரு ஆசீர்வாதமானது கீழ்ப்படிதலை மட்டுமின்றி, புரிந்து கொள்ளப்பட்ட வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்தையும் கேட்கின்றது. இது உண்மையாய் இருப்பதில்லை என்றால், விசுவாசம் அவசியமில்லை, ஏனெனில் தேவன் எதை வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்பதை ஒரு நபர் புரிந்து கொண்டிருக்கவில்லையென்றால், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று அவர் எவ்விதம் விசுவாசம் கொள்ள முடியும்? பவுலின் கூற்றுப்படி, "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று" (ரோமர் 4:20, 21) ஆபிரகாம் முழு நிச்சயமாக நம்பினார். விசுவாசமானது கீழ்ப்படிதலை மட்டுமின்றி, தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளதை நிறைவேற்றச் சித்தமுள்ளவராய் இருக்கிறார் என்ற உறுதிப்பாடு கொள்ளுதலையும் உள்ளடக்கியிருக்கின்றது (மத். 9:28ஐக் காணவும்).*

# கருத்து, நோக்கம் மற்றும் செயல்பாடு

*சரியான கருத்து மற்றும் நோக்கத்துடன் சரியான செயல்பாடும் இணைந்திருக்க வேண்டும் என்று இயேசுவும் அப்போஸ்தலர்களும் தெளிவாகப் போதித்தனர். சரியான செயல்பாடோ அல்லது ஏற்ற நோக்கம் அல்லது கருத்தோ தன்னிலே தேவனுக்கு ஏற்புடையதல்ல.*

## *நீதியுள்ள செயல்பாடுகள்*

*தவறான நோக்கத்திற்காக நீதியுள்ள செயல்பாடுகள் தேவனிடமிருந்து வெகுமதி பெறுவதில்லையென்று இயேசு போதித்தார். "மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை'' என்று அவர் உரைத்தார் (மத். 6:1); நீதியுள்ள செயல்களைச் செய்வதென்பது தேவனால் விரும்பப்படுகின்றது (அப். 10:35); இருப்பினும், சரியான கருத்து அல்லது நோக்கமின்றி நீதியுள்ள செயல்பாடுகளைச் செய்வதென்பது தேவனுக்கு ஏற்புடையதல்ல. அவர் செயல்பாட்டில் எவ்வளவு ஆர்வமுடையவராக இருக்கின்றாரோ அவ்வளவுக்கு கருத்து மற்றும் நோக்கம் ஆகியவற்றிலும் ஆர்வமுடையவராய் இருக்கின்றார்.*

*உபத்திரவத்தைச் சகித்தல். சரியான காரணத்திற்காக ஒருவர் உபத்திரவப்படுத்தப்பட்டால், அப்படிப்பட்ட உபத்திரவமானது தேவனுக்கு ஏற்புடையதாக உள்ளது (மத். 5:10). மனிதர்களிடத்திலிருந்து புகழ்ச்சியைப் பெறுவதற்காகச் சிலர் உபத்திரவத்தைத் தேடிக் கொள்கின்றனர், ஆனால் தவறான நோக்கத்திற்காக ஒருவர் தமது சரீரத்தையே சுடக் கொடுத்தாலும், அது பயனொன்றையும் அவருக்குத் தராது (1 கொரி. 13:3). தேவன் செயலில் ஆர்வம் உடையவராய் இருப்பது போலவே நோக்கத்திலும் ஆர்வம் உடையவராய் இருக்கின்றார்.*

*கொடுத்தல். தேவனைப் பின்பற்றுபவர்கள் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று அவர் கட்டளையிட்டுள்ளார் (கலா. 2:10). தவறான நோக்கத்திற்காகக் கொடுப்பவர்கள் ஏழைக்கு உதவி செய்யலாம், ஆனால் அவர்கள் தேவனிடமிருந்து வெகுமதி பெற மாட்டார்கள் (மத். 6:2-4; 1 கொரி. 13:3).*

*"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று இயேசு கூறியதாகப் பவுல் மேற்கோள் காட்டினார் (அப். 20:35). கொடுக்கிறவராகிய தேவனைப் போலவும் (யோவா. 3:16) அவரது குமாரனும் கொடுக்கிறவருமாய் இருக்கின்றவரும் நமது எடுத்துக்காட்டானவரைப் போலவும் (கலா. 2:20) ஆவதற்குக் கொடுத்தல் என்பது ஒரு கிறிஸ்தவரின் அடிப்படைப் பதில்செயலாய் இருக்கின்றது. தேவன் கட்டளையிட்டுள்ளதால் "விசனமாக அல்லது கட்டாயத்தின் கீழ்'' கொடுப்பதை தேவன் விரும்புகின்றதில்லை (2 கொரி. 9:7). ஒரு செயல்பாட்டில் ஈடுபடுபவரின் பகுதியில் அச்செயல்பாடானது சரியான நோக்கத்துடன் இணைந்திருக்கவில்லையென்றால் அது தேவனுடைய பார்வையில்*

வெறுமையான மற்றும் பொய்யான செயல்பாடாக இருக்கின்றது.

*ஜெபமும் உபவாசமும்.* ஜெபித்து மற்றும் உபவாசிப்பவர்கள் சரியான நோக்கம் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார் (மத். 6:5-7; 16:18). மனிதர்களால் காணப்படுவதற்காகச் செய்யப்படும் ஜெபத்தையும் உபவாசத்தையும் தேவன் புறக்கணிக்கின்றார் (மத். 6:5-7). சரியான நோக்கமற்ற செயல்பாடானது தேவனுக்கு ஏற்புடையதல்ல.

*போதித்தல்.* தேவனைப் பின்பற்றுபவர்கள் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் (2 தீமோ. 2:2). சரியான நோக்கமற்றவர்களால் கூடச் செய்யப்படும் மிகச் சரியான போதனையும் கூட அவருக்கு ஏற்புடையதாக இருந்தாலும் (பிலி. 1:15-18), சரியான நோக்கமின்றி சரியானதைப் போதிக்கின்றவர் தேவனுக்குப் பிரியமற்றவராக இருக்கின்றார் (1 கொரி. 9:16, 17). செயல்பாடு சரியானதாக இருக்கலாம், ஆனால் நோக்கம் தவறானதாக இருந்தால், செயல்பாடானது தேவனுக்கு ஏற்புடையதாயிருப்பதில்லை.

*பாடுதல்.* பாடுதல் என்பது தேவனுடைய கட்டளையாக உள்ளது (எபே. 5:19; கொலோ. 3:16); இருப்பினும், தேவன் பாடக் கட்டளையிட்டார் என்பதால் மட்டும் பாடுதல் போதுமானதாக இருப்பதில்லை. பாடுதல் என்பது இருதயத்திலிருந்து கர்த்தருக்குப் பாடும் இன்னிசையாய் இருக்க வேண்டும் என்றும் தேவனுக்கு தேவைப்படுகின்றது (எபே. 5:19). பாடுதல் என்ற செயல் தேவனுக்கு ஏற்புடையதாயிருப்பதற்கு சரியான நோக்கமும் கருத்தும் கூட இருக்க வேண்டும்.

*கர்த்தரின் பந்தி.* கர்த்தருடைய பந்தி என்பது தேவனுடைய இன்னொரு கட்டளையாக உள்ளது (1 கொரி. 11:23-26). கர்த்தருடைய பந்தியில் புசித்துக் குடிக்கும் கிறிஸ்தவரிடத்தில் நாம், "இதை நீங்கள் எதற்காகச் செய்கின்றீர்கள்?" என்று கேட்க முடியும்.

அவர், "அப்பத்தில் புசித்து திராட்ச ரசத்தில் பானம் பண்ண வேண்டும் என்று தேவன் எனக்குக் கட்டளையிட்டுள்ளார்" என்று பதில் கூறலாம்.

நாம், "நீங்கள் புசிப்பது மற்றும் குடிப்பதன் நோக்கம் என்ன?" என்று கேட்கலாம்.

"தேவன் என்னைப் புசிக்கும்படியும் குடிக்கும்படியும் கட்டளையிட்டுள்ளார்" என்பது பதிலாய் இருக்க முடியும்.

பிறகு நாம், "புசித்தல் மற்றும் குடித்தலுக்கு நோக்கம் ஒன்றும் இருப்பதில்லையா?" என்று கேட்கலாம்.

"எனக்கு நோக்கத்தைப் பற்றித் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம், தேவன் இதைக் கட்டளையிட்டார், எனவே நான் இதைச் செய்கின்றேன் என்பதுதான்" என்று பதிலளிக்கப்படக் கூடும்.

இப்படிப்பட்ட செயலானது, அப்பம் இயேசுவின் சரீரம் ஆகியவற்றிற்கிடையிலும், திராட்சரசம் இயேசுவின் இரத்தம் ஆகியவற்றிற்கிடையிலும் உள்ள உறவைப் புரிந்து கொள்ளாத நிலையில் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலாகவே இருக்கும்.

செயல்பாடு சரியானதாக இருக்கலாம். ஆனால் நோக்கமும் கருத்தும் தவறானதாக இருக்கும். செயல்பாடு தன்னிலே போதுமானதல்ல,

*ஏனெனில் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு, செயல்பாட்டைப் போலவே நோக்கமும் கருத்தும் மிகச் சரியானதாக இருக்க வேண்டும் (1 கொரி. 11:27-31).*

## கருத்தும் நோக்கமும்

*பல விஷயங்களில் செயல்பாடு சரியானதா தவறானதா என்பதை அதன் நோக்கமே தீர்மானிக்கின்றது. சில விஷயங்கள் கருத்து தவறானதாயிருந்தால் மட்டுமே தவறானதாக இருக்கின்றன; விபசாரம் அல்லது மதுபானம் அருந்துதல் போன்ற மற்ற செயல்கள், கருத்து எதுவாயிருந்தாலும் தன்னிலேதானே பாவம் நிறைந்தவைகளாய் உள்ளன.*

*"... ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று" (மத். 5:28) என்று இயேசு கூறினார். ஒரு பெண்ணைப் பார்த்தல் என்பது இருதயத்தில் விபசாரம் என்று இயேசு கூறவில்லை, ஏனெனில் தவறான நோக்கத்தை உள்ளடக்காத பார்வை யானது இருதயத்தில் விபசாரம் அல்ல. ஒரு பெண்ணின் மீது காம உணர்வு கொண்டோ அல்லது அவளிடத்தில் பாலியல் இன்பம் அனுபவிக்கும் நோக்குடனோ அவளைப் பார்ப்பவன் தன் இருதயத்தில் அவளுடன் விபசாரம் செய்தவன் ஆகின்றான். பார்க்கும் செயல் என்பது சரியானதோ அல்லது தவறானதோ அல்ல. அதன் நோக்கம்தான் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது.*

*பெரும்பான்மையான செயல்கள் அவைகளில் ஈடுபட்டுள்ள நபரின் நோக்கத்தைக் கொண்டுதான் சரியானவைகளாகவோ அல்லது தவறானவைகளாகவோ இருக்கின்றன. தேவன் கட்டளையிட்டுள்ளதைச் செய்வதினால் அவருக்குக் கீழ்ப்படிதல் என்பது முக்கியமானதாக உள்ளது, ஆனால் அப்படிப்பட்ட கீழ்ப்படிதல் மட்டும் போதுமானதல்ல. சரியான நோக்கத்திற்கான கீழ்ப்படிதலை மட்டுமே தேவன் ஏற்றுக் கொள்ளுகின்றார்.*

# முடிவுரை

*விசுவாசத்தின் அடிப்படையிலான எந்த ஒரு செயல்பாடும் சரியான புரிந்து கொள்ளுதல், கருத்து மற்றும் நோக்கத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்று தேவன் புதிய ஏற்பாட்டில் கேட்டுக் கொள்ளுகின்றார். சரியான புரிந்து கொள்ளுதல் மற்றும் நோக்கத்தின் அடிப்படையிலான செயல்பாட்டைத் தேவன் வற்புறுத்தவில்லையென்றால், அவர் ஆசீர்வாதத்தின் மீதுள்ள விசுவாசத்தினால் ஆன செயல்பாட்டையல்ல ஆனால் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலையே கேட்கின்றார் என்று ஆகின்றது. கீழ்ப்படிதலுள்ள விசுவாசமே (ரோமர் 1:5; எபே. 2:8; எபி. 5:9) இரட்சிப்பின் அடிப்படையாக உள்ளது, இது தேவனுடைய வாக்குத் தத்தத்தைப் புரிந்து கொள்ளுதலையும் விசுவாசத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இல்லையென்றால், கீழ்ப்படிதலானது தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தின் செயல்பாடாக இல்லாமல்*

கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் செயல்பாடாகவே இருக்கும். சரியான புரிந்து கொள்ளுதல், கருத்து மற்றும் நோக்கம் ஆகியவைகள் அற்ற கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் செயல்பாடுகள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவைகள் என்று நம்புகின்றவர்கள், இப்படிப்பட்ட செயல்பாடுகள் இரட்சிப்பைக் கொண்டு வரமுடியும் என்று யூகிப்பதற்கு முன், புதிய ஏற்பாட்டில் இதன் செயல் விளைவுக்கான எடுத்துக்காட்டுகள் அல்லது கூற்றுக்களைக் கண்டறிய வேண்டும்.

விசுவாசத்தின் கொள்கையில் பின்வருபவை அடங்கியுள்ளன:

(1) வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது என்ன என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். விசுவாசமானது புரிந்து கொள்ளுதலை மறைமுகமாய் உணர்த்தும் கருத்தான தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுதலின் அடிப்படையிலேயே உள்ளது (ரோமர் 10:17).

(2) தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று ஒருவர் விசுவாசிக்க வேண்டும். ஆபிரகாம், "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி"(ரோமர் 4:21)யிருந்தார் என்று பவுல் எழுதினார்.

(3) வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர் என்று ஒருவர் கருத வேண்டும். தேவன்மீது சாராள் கொண்ட விசுவாசத்தைப் பற்றி, "... வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி"னாள் (எபி. 11:11) என்று எழுதப்பட்டுள்ளது.

(4) கேட்கப்படும் செயல்பாட்டிற்கும் விரும்பப்படும் பலனுக்கும் இடையில் தர்க்கரீதியான தொடர்பு எதுவும் இருக்க வேண்டியது அவசியம் என்று கேட்கப்படுவதில்லை. இஸ்ரவேல் மக்கள் தங்கள் செயல் பாட்டிற்கும் எரிகோவின் மதில்கள் விழுதலுக்கும் இடையில் தர்க்கரீதியான தொடர்பு எதையும் யூகித்துணர முடியாதிருந்தனர்; தேவன்மீது தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தினால் அவர்கள் அணிவகுத்துச் சென்று, உரத்த சத்தமிட்டு, எக்காளங்களை ஊதினர். அவர்கள் தரிசித்து நடவாமல், தேவன்மீது விசுவாசத்தினால் நடந்தனர் (எபி. 11:30; 2 கொரி. 5:6).

(5) சுய நிறைவேற்றுகையில் அல்ல, தேவன் நிறைவேற்றுவது எதுவோ அதிலேயே விசுவாசம் வைக்கப்படுகின்றது. தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று ஆபிரகாம் விசுவாசித்தார் (ரோமர் 4:21). எரிகோவைச் சுற்றி அணிவகுத்துச் சென்றவர்கள் தங்கள் திறமையில் அல்ல தேவனுடைய வல்லமையினாலேயே அந்த நகரின் மதில்கள் இடித்துத் தள்ளப்படும் என்று விசுவாசித்தனர். தேவன் ஒரு கட்டளையைக் கொடுத்து, விரும்பிய விளைவுகளை நிறைவேற்றும் செயல்பாட்டிற்கு ஒரு மனிதரை அவரின் விசுவாசமானது தூண்டக் கேட்கும் நிலையில் விதிவிலக்குகள் இருக்கின்றன. நோவா தமது வீட்டாரைக் காத்துக் கொள்வதற்குப் பேழையைக் கட்டியது இப்படிப்பட்ட ஒரு விதிவிலக்காகும் (எபி. 11:7).

(6) தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை எவ்விதம் நிறைவேற்றுவார் என்பதை ஒருவர் அறியாதிருப்பினும், அவரது விசுவாசமானது தேவன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற அவரது வல்லமையை

விசுவாசமானது ஏற்றுக் கொள்ளும். எடுத்துக்காட்டாக, தேவன் திரளான மக்கள் கூட்டத்தை ஆபிரகாமின் மகன் மூலமாக பெருகச் செய்வதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார், ஆபிரகாம் அந்த மகனையே பலி செலுத்தச் சித்தமானார் (எபி. 11:17-19). தேவன் அதை (தம்முடைய வாக்குத் தத்தத்தை) எவ்விதம் நிறைவேற்றுவார் என்று ஆபிரகாம் அறியாதிருந்தார், ஆனால் தேவன் அதை *நிறைவேற்றுவார்* என்று ஆபிரகாம் விசுவாசித் திருந்தார். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்வார் என்று அவரில் விசுவாசம் கொண்ட ஆபிரகாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.

(7) விசுவாசமானது கண்மூடித்தன நியமமான கீழ்ப்படிதலுக்கும் அப்பால் கடந்து செல்லுகின்றது. கேட்கப்படுவதை மனிதர் செய்தால், தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்ததைச் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையை தேவன் மீது வைக்கும்படி விசுவாசம் கேட்கின்றது.

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் (எபி. 11:6). தேவனைப் பிரியப்படுத்துகின்றவர்களிடத்தில் தேவன் செயல்படும் விசுவாசத்தைக் கேட்கின்றார். ஏனென்றால், விசுவாசம் கொண்ட ஒருவர், தேவன் செய்வதாக வாக்குத்தத்தம் செய்துள்ளதைச் செய்து நிறைவேற்றுவார் என்று நம்புகின்றார்.

தேவன் இருக்கின்றார் என்று ஒப்புக் கொள்வதை விட அதிகமானதை தேவனிடத்தில் கொண்டுள்ள விசுவாசம் உள்ளடக்கியிருக்கின்றது. தேவன் தம்முடைய சித்தத்தைச் செய்யத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கின்றார் (எபி. 11:6) என்ற நம்பிக்கையைத் தேவன் கேட்கின்றார். ஒருவர் தாம் செயல்பட்டால் தேவன் கொடுக்கும் பலனைப் புரிந்து கொண்டிராவிட்டால், அவர் தம் செயல்பாட்டிற்குத் தேவன் பலன் அளிப்பார் என்ற விசுவாசத்தினால் செயல்பட முடியாது. ஒருவர் வாக்குத்தத்தம் ஒன்றிற்குக் கீழ்ப்படிய முடியாது, ஆனால் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளதைப் பெற்றுக் கொள்ளும் விசுவாசத்துடன் ஒருவர் செயல்பட முடியும்.

கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் அல்லது வெறுமையான சடங்காச்சாரம் என்பவற்றிற்கு அப்பால் கடந்து செல்லும்படியாக ஞானஸ்நானமானது அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள ஐந்து வகைகளில் ஒன்றில் (எண் 4) மட்டுமே வகைப்படுத்தப்பட முடியும். ஞானஸ்நானம் என்பது தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக விசுவாசத்தின் செயல்பாடாக உள்ளது, இது செயலற்ற விசுவாசம் அல்ல, கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் அல்ல, விளைவைச் சாதிப்பதற்காகச் செயலைத் தூண்டும் விசுவாசம் அல்ல மற்றும் இது மற்றவர்களின் விசுவாசமும் அல்ல. பிற்பாடு (இப்புத்தகத்தின் பிற்பகுதியில்) தரப்படப் போகின்ற ஞானஸ்நானம் பற்றிய பவுலின் கலந்துரையாடலானது ஞானஸ்நானம் என்பது கண்மூடித்தனமான கீழ்ப்படிதலைக் காட்டிலும் மேலானது என்று விவரிக்கின்றது.

தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள ஆசீர்வாதத்தை முயன்று பெறுதலை அல்ல ஆனால் தேவனுடைய வாக்குத்தத்தமான

*ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக விசுவாசத்தினால் செயல்படுதலின் தகுதிகளிலேதான் ஞானஸ்நானமானது பொருந்துகின்றது. ஞானஸ்நானத் திற்கும் பாவமன்னிப்பிற்கும் இடையில் தர்க்கரீதியான தொடர்பெதுவும் கண்டறிய முடியாது என்றாலும், கர்த்தருடைய பந்தியில் உள்ளது போல, ஒரு தொடர்பானது ஞானஸ்நானம் மற்றும் இயேசுவின் மீட்புச் செயல் ஆகியவற்றிற்கு இடையில் இருப்பது பற்றிய புரிந்து கொள்ளுதல் இருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தியில் ஒருவர் புளியாத அப்பத்தைப் புசித்து, பாத்திரத்தில் பானம் பண்ணுவதில் ஆவிக்குரிய கருத்தில் இயேசுவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கேற்கின்றார் (1 கொரி. 10:16; 11:23-26). ஞானஸ்நானத்தில் ஒருவர் தமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியும் பொழுது (ரோமர் 6:4-6, 17, 18; கொலோ. 2:12), இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் பங்கேற்கின்றார். இப்படிப்பட்ட ஒரு புரிந்து கொள்ளுதலும் ஆவிக்குரிய ஈடுபாடும் இல்லாத பொழுது கர்த்தருடைய பந்தி மற்றும் ஞானஸ்நானம் ஆகிய இரண்டுமே கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் வெற்றுச் சடங்குகளாகின்றன.*

*ஞானஸ்நானத்திற்குப் பாவங்களை மன்னிக்கும் உள்ளான வல்லமை கிடையாது. இது, ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படியும் ஒருவர் தமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, சாதிப்பதற்கான தனது சுயதிறமையின் மீதல்ல, ஞானஸ்நானம் கொடுப்பவர் மீதல்ல, தண்ணீரில் அல்ல ஆனால் இயேசுவின் இரத்தத்தின் மீதே விசுவாசம் கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்த வேண்டும் (அப். 2:38). ஞானஸ்நானத்திற்கும், இயேசுவின் இரத்தத்திற்கும், பாவமன்னிப்புக்கும் தேவன் ஏற்படுத்திய உறவை ஒருவர் புரிந்து கொள்ளாதிருந்தால் அவர் தாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இரட்சிக்கும் விசுவாசம் கொண்டிருக்கச் சாத்தியம் இல்லை. ஞானஸ்நானத்தை, இயேசுவின் சுத்திகரிக்கும் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்திலிருந்து பிரிக்கின்ற போதனை எதுவும் ஞானஸ்நானத்தை அவரது இரத்தத்தின் மீது விசுவாசமற்ற ஒரு வெற்றுச் சடங்காச்சாரம் ஆக்குகின்றது.*

*சில செயல்பாடுகள் தங்களிலேயே தவறானவைகளாய் உள்ளன (அதாவது, விபசாரம் போன்றவை) மற்றும் சில செயல்பாடுகள் அவைகளுடன் தொடர்புள்ள நோக்கத்தினால் சரியானவைகளாக அல்லது தவறானவைகளாக உள்ளன (அதாவது, ஒரு மனிதர் ஒரு பெண்ணைப் பார்த்தல் போன்றவை). ஞானஸ்நானத்தைச் சரியானதாக அல்லது தவறானதாக ஆக்கக் கூடிய எதுவும் அந்தச் செயலில் உள்ளாக இருப்பதில்லை; ஆகையால், அந்தச் செயல்பாட்டுடன் தொடர்புள்ள விசுவாசம் மற்றும் நோக்கம் ஆகியவற்றால் மாத்திரமே அது ஏற்புடையதாக அல்லது ஏற்கப்படாததாக ஆக முடியும்.*

# யோவான் ஞானஸ்நானத்தைப் போதித்தார்

*யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங் கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ் நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான் (மாற். 1:4).*

யோவானால் போதிக்கப்பட்டும், செயல் முறைப்படுத்தப்பட்டும் இருந்த ஆயத்த ஞானஸ்நானமானது கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் ஞானஸ்நானமாகவோ, அடையாளமாகவோ அல்லது புரிந்து கொள்ளுதலும் உறுதிப்பாடும் இல்லாத ஒரு வெறுமையான சடங்காச்சாரமாகவோ இருந்ததில்லை. அது நோக்கம் மற்றும் அர்த்தம் ஆகியவற்றைப் புரிந்து கொண்டவர்களுக்கான ஞானஸ்நானமாய் இருந்தது.

தேவனுடைய மகா மனிதரான யோவான் (மத். 11:11), ஆசாரியரான சகரியாவுக்கும் அவரது மனைவி எலிசபெத்துக்கும் அவர்களின் முதிர் வயதில் பிறந்தார் (லூக். 1:5-7, 57). அவர் தமது உறவினரான இயேசுவை விட ஆறுமாதங்கள் மூத்தவராய் இருந்தார் (லூக். 1:36). இயேசு ஞானஸ்நானம் பெற்று, தம் ஊழியத்தைத் தொடங்குவதற்கு ஆறு மாதங்கள் முன்னதாக (லூக். 3:21- 23) யோவான், யோர்தான் நதியருகில் யூதேயாவின் வனாந்தரத்திலே பிரசங்கிக்கத் தொடங்கினார் (மாற். 1:4, 5).

பின்வருவனவற்றைப் படிப்பதினால் யோவானின் ஊழியம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் நோக்கத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்: (1) அவரது ஊழியத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் (2) அவரது பிரசங்கம் மற்றும் (3) அவர் ஞானஸ்நானப் படுத்திய மக்களின் பதில்செயல்.

## யோவானைக் குறித்த தீர்க்கதரிசனம்

கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்காக வனாந்தரத்தில் கூப்பிடும் சத்தமாக இருப்பார் என்று யோவானைக் குறித்து ஏசாயா எழுதினார் (ஏசா. 40:3; இது மத். 3:3; லூக். 3:4; யோவா. 1:23ல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது). யோவான் கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்யும்

தேவ செய்தியாளராய் இருப்பார் என்று மல்கியா தீர்க்கதரிசனம் கூறினார் (மல். 3:1; இ.வ. மத். 11:10; லூக். 1:76; 7:27). இந்த தீர்க்கதரிசி, "நான் [கர்த்தர்] வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்" (மல். 4:5, 6; இ.வ. லூக். 1:17; மத். 11:14; 17:10, 11; மாற். 9:11 -13) என்று அவர் கூறினார்.

யோவானின் பிறப்புக்கு முன்னதாகவே, காபிரியேல் தூதன் சகரியாவிடம், "அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப் படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்" (லூக். 1:16, 17; இ.வ. மல். 4:6) என்று கூறினார். யோவானே வரவிருந்த எலியா என்று இயேசு அடையாளப் படுத்தினார் (மத். 11:11 -14; 17:11- 13). யோவான் பழைய ஏற்பாட்டின் எலியாவாக இருந்ததில்லை (யோவா. 1:21); மாறாக அவர் எலியாவின் ஆவியும் பலமும் உடையவராக வந்தார் (லூக். 1:17).

வரவிருந்த கர்த்தருக்காக ஆயத்தப்படுத்த இஸ்ரவேலர்கள் தங்கள் வாழ்வைச் சீர்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதே யோவானின் ஊழியமாக இருந்தது என்பது தெளிவு (மல். 3:1).

## யோவானின் பிரசங்கம்

"மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத். 3:1, 2) என்பதே யோவானின் செய்தியாக இருந்தது. அவரது ஊழியமானது, "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தை" (லூக். 3:6) உள்ளடக்கியிருந்தது.

யோவான் தம்மிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி உண்மையற்ற விதத்தில் வந்தவர்களை விரியன் பாம்பின் குட்டிகள் என்று கூறிக் கடிந்து கொண்டு, அவர்கள் தங்கள் வாழ்வில் மனந்திரும்புதலுக்கேற்ற ஆதாரத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கோரினார் (லூக். 3:7, 8). அவர் தம்மிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்தவர்களிடம் அவர்கள் விசுவாசிக்க வேண்டியவரான வரவிருந்த மேசியாவுக்காக ஆயத்தப்படுத்துவதில் தங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் (அப். 19:4). அவர் (யோவான்) இயேசுவே மேசியா என்று சாட்சியம் கொடுப்பதற்காக ஞானஸ்நானம் கொடுக்க வந்தார் (யோவா. 1:31 -34), பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது ஒரு புறா வடிவில் வந்திறங்கியதைக் கண்ட பிறகு அந்த சாட்சியத்தை அவர் கொடுக்க முடிந்தது (லூக். 3:21, 22).

யோவான், தாம் எலியாவோ அல்லது எதிர்பார்க்கப்பட்ட மேசியாவோ அல்ல என்று போதித்தார் (யோவா. 1:20, 21). அவர், தம்மை விடப் பெரியவரான மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்த வந்த ஒரு

செய்தியாளராய் மட்டும் இருப்பதாக உரிமைகோரினார். யோவானோ அல்லது வேறு எந்த மனிதரோ செய்ய முடியாத செயலை பரிசுத்த ஆவியானவராலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பதை மேசியா செய்வார் (லூக். 3:16, 17) என்று யோவான் கூறினார்.

## யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றவர்கள்

யோவானிடம் ஞானஸ்நானம் பெற வந்த மக்கள் தங்களின் பாவம் நிறைந்த தன்மையைப் புரிந்திருப்பார்கள், ஏனெனில் அவர்கள் வந்து தங்களின் பாவங்களை அறிக்கையிட்டார்கள் (மாற். 1:5). இராஜ்யம் சமீபத்திருக்கிறது என்ற செய்தியை அவர்கள் ஏற்றுக் கொண்டு, யோவான் தமக்குப் பின் வருகிறவர் என்று கூறியவர் மீது விசுவாசம் கொண்டு, தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, யோவான் வாக்குறுதியளித்த சுத்திகரிப்பை விரும்பினார்கள். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டதினாலும் (மத். 3:6) என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதினாலும் (லூக். 3:10-14) அவர்கள் யோவானின் செய்திக்கு இணங்கி தாங்கள் மனந் திரும்பினதையும், தங்களின் வாழ்வை மாற்றிக் கொள்ள நாடினதையும் சுட்டிக்காட்டினார்கள். ஞானஸ்நானம் பெற்றதினால் அவர்கள் யோவானின் செய்தியில் உள்ளடங்கியிருந்த எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டதைச் செயல் விளக்கப் படுத்தினார்கள்.

யோவான் அவர்களுக்கு வைத்த கோரிக்கையானது, அவர் ஞானஸ்நானம் என்ற சரீரப் பிரகாரமான பதில்செயலை மட்டுமல்ல, ஆனால் தமது செய்திக்கு அர்த்தம் நிறைந்த பதில்செயலாக மனந்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும் கோரினார் என்பதற்கு ஆதாரமாக உள்ளது (லூக். 3:3; அப். 13:24).

## யோவானின் ஊழியம்

யோவான் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தார்? மக்களை ஞானஸ்நானப்படுத்துவது மட்டுமே அவரது முழு நோக்கமாயிருந்ததா? ஞானஸ்நானப்படுத்தப்படுவதால் அவர்கள் தேவன் மீது கொண்டிருந்த விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும் என்று மட்டுமே அவர் விரும்பினாரா? அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய விருப்பம் கொண்டிருந்தார்கள் என்பதை மட்டுமே அவர்கள் நிரூபிக்க வேண்டியிருந்ததா? அவர்கள் பெற்ற ஞானஸ்நானமானது அவர்கள் மன்னிக்கப்பட்டார்கள் என்று காண்பித்ததா? அது அவர்களை மதக் குழு ஒன்றிற்குள் சேர்த்ததா அல்லது தேவனுடைய ஊழியத்திற்கு அவர்களை பிரதிஷ்டை படுத்தினதா? அவர்களின் புரிந்து கொள்ளுதல் மற்றும் அவர்கள் இருதயங்களின் நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அவர்களின் பாவங்களில் இருந்து அவர்களை சுத்திகரிக்கும் வல்லமையை அந்த ஞானஸ்நானம் பெற்றிருந்ததா?

யோவானின் ஞானஸ்நானமானது வெறும் சடங்காச்சாரத்திற்குள் செல்லுவதைக் காட்டிலும் அதிகமானதை கேட்டுக் கொண்டது. யோவானின் ஞானஸ்நானத்தை இலேசானதாகக் கருதியவர்கள் தேவனுடைய ஆலோசனையை இலேசானதாகக் கருதினார்கள், ஏனெனில் அவரது ஞானஸ்நானத்தைத் தள்ளி விட்டவர்கள், "அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள்" (லூக். 7:30). மற்றவர்களோ யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றதினால், தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள் (லூக். 7:29). சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட்டு, கீழ்ப்படிகின்ற ஞானஸ்நானமானது, மனிதருடைய கட்டளைக்கல்ல, ஆனால் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதாக இருக்கின்றது. யோவானின் ஞானஸ்நானத்திற்குப் பதில்செயல் செய்யாதவர்கள் மனிதர்களின் ஆலோசனையை அல்ல, ஆனால் தேவனுடைய ஆலோசனையைத்தான் தள்ளி விட்டார்கள். அவர்கள் பாவமன்னிப்பிற்கான மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் என்ற தேவனுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளத் தவறி விட்டார்கள்.

## யோவானின் ஞானஸ்நானத்தினுடைய விளைவு

வெற்றுச் சடங்காச்சாரம் என்பது நோக்கம் நிறைந்த, இருதயத்தால் தூண்டப் பெற்ற சீர்திருத்தலில் இருந்து மாறுபட்ட விளைவைக் கொண்டுள்ளது. யோவானின் பிரசங்கத்திற்குப் பதில்செயலாக ஞானஸ்நானம் என்ற செயல்பாட்டை மட்டும் செய்வது என்பது இருதயத்தில் எவ்வித செயல் விளைவையும் கொண்டிருந்ததில்லை. மனிதன் கீழ்ப்படியும் எந்த ஒரு சடங்காச்சாரமும் அவனது வாழ்வை மாற்றும் என்ற அவசியம் எதுவுமில்லை.

மக்களை மனந்திரும்புதலுக்குள் கொண்டு வரும் ஒரு முயற்சியாக யோவான் பிரசங்கித்தார். அவர்கள் ஞானஸ்நானம் பெற்றது அவர்களை மனந்திரும்புதலுக்குள் கொண்டு வரவில்லை; பிரசங்கித்தலே அவர்கள் மனந்திரும்பும்படித் தூண்டியது (மத். 12:41), மற்றும் மனந்திரும்புதலே ஞானஸ்நானம் பெறும்படி தூண்டியது. மனந்திரும்பியவர்கள் அவரது ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். மனந்திரும்பாதவர்களோ அவரது ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படியவில்லை அல்லது மனந்திரும்புதலின் குறைபாட்டினால் அவரது ஞானஸ்நானத்தை மறுத்தார்கள்.

பரிசேயரும் சதுசேயரும் மனந்திரும்பாமல் அவரிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்த பொழுது, யோவான் அவர்களுக்கு எதிராகப் பேசினார் (மத். 3:7-9). தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது ஞானஸ்நானம் பெறுதல் மட்டுமே என்றிருந்தால், அவர்களை அவர் ஏற்றுக் கொண்டிருந்திருப்பார், ஆனால் அவர் நாடியது ஞானஸ்நானத்தை மட்டுமல்ல, அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும்படியான மனந்திரும்புதல் அவர்களின் ஞானஸ்நானத்துடன் இணைந்திருக்க

*வேண்டும் என்றே அவர் நாடினார் (லூக். 3:3).*

*யோவானால் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட மக்கள் மனந்திரும்பினவர்களாய் இருந்தார்கள்; அவர்களின் மனந்திரும்புதலினால், அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது மன்னிக்கப்பட்டிருப்பார்கள். மன்னிப்பு என்பது மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் என்ற இரண்டு விஷயங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது, ஏனெனில் அது பாவ மன்னிப்புக்கேற்ற மனந்திரும்புதலின் ஞானஸ்நானமாய் இருந்தது.*

*யோவானின் ஞானஸ்நானத்திற்குப் பதில்செயல் செய்த பலர் அவரது சீடர்களானார்கள் (மத். 9:14; யோவா. 1:35; 3:25; 4:1). சீஷர்களை ஏற்படுத்துவதில் இயேசுவைக் காட்டிலும் மேம்பட்டிருக்க வேண்டும் என்பது அவரது நோக்கமாய் இருந்ததில்லை, ஆனால் அதற்கு மாறாக, தம் சீஷர்களை இயேசுவின் சீஷர்களாவதற்குத் தயாரிப்பதே அவரது நோக்கமாயிருந்தது. இயேசு பெருகி, தாம் குறுகுவதே தமக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தும் என்று யோவான் தம் சீஷர்களுக்குக் கூறினார் (யோவா. 3:25-30).*

*அப்போஸ்தலரான அந்திரேயா (யோவா. 1:35, 40) மற்றும் ஒருவேளை பேதுரு உட்பட யோவானின் சீஷர்களில் பலர் இயேசுவின் சீஷர்கள் ஆனார்கள். யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களில் குறைந்தபட்சம் சிலராவது யோவானின் ஞானஸ்நானமானது இயேசுவைச் சுட்டிக்காட்டியது என்று அறிவிக்கப்பட்ட பொழுது, பின்னாளில் அவர்கள் இயேசுவால் அறிவிக்கப்பட்ட ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் (அப். 19:1-5).*

## *முடிவுரை*

*யோவானின் ஞானஸ்நானமானது தேவனுக்குக் கண் மூடித்தனமாகக் கீழ்ப்படிதலின் செயல்பாட்டைக் கேட்கின்ற சடங்காச்சாரமாய் இருந்ததில்லை. யோவானின் ஞானஸ்நானமானது, (1) தங்கள் பாவங்களை உணர்ந்து, (2) தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, (3) தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை நாடி, (4) விரைவில் வெளிப்படவிருந்த மேசியாவைப் பற்றிய அறிவுறுத்தலை ஏற்றுக் கொண்டு (5) வரவிருந்த மேசியாவின் இராஜ்யத்திற்கென்று தயாரிக்க ஒரு நீதியுள்ள வாழ்வை வாழத் தீர்மானம் செய்த மக்களுக்கானதாய் இருந்தது. யோவானின் ஞானஸ்நானமானது ஒரு வெற்றுச் சடங்காகவோ அல்லது அர்த்தமற்ற ஆச்சாரமாகவோ இருந்ததில்லை. யோவானின் ஞானஸ்நானம் பெற வந்தவர்கள் தங்கள் பதில்செயலானது சரியான நோக்கம் மற்றும் இருதயத்தின் ஆவல் ஆகியவற்றால் ஆனதாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.*

# இயேசு ஞானஸ்நானம் பெற்றார்

*அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப் போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார். அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று (மாற். 1:9-11).*

இயேசு பெற்றுக் கொண்ட ஞானஸ்நானம் யோவானின் ஞானஸ்நானமாயிருந்தது (அப். 1:21, 22). இந்த ஞானஸ்நானத்தை, இயேசு தாம் பரமேறின பிறகு செயல்படுத்த வேண்டும் என்று தம்முடைய சீஷர்களுக்குக் கூறிய ஞானஸ்நானத்துடன் குழப்பிக் கொள்ளக்கூடாது. இந்த இரண்டாவது ஞானஸ்நானமானது "இயேசுவின் ஞானஸ்நானம்" அல்லது "புது உடன்படிக்கை ஞானஸ்நானம்" என்று குறிப்பிடப்படும்.

## இயேசுவின் ஞானஸ்நானத்தைப் பற்றிச் சிலர் கூறியது என்ன

யோவான் இயேசுவுக்குக் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பற்றி ஒரு மதக் குழுவினர், "இது இந்த பூமியில் இயேசு செய்ய வேண்டியதாகப் பிதாவானவர் கொண்டிருந்த விசேஷித்த ஊழியத்திற்காக அவர் (இயேசு) யேகோவாவிற்குத் தம்மையே ஒப்புக் கொடுத்ததின் அடையாளம் ஆகும்" என்று எழுதியுள்ளனர்.[1]

"இயேசு ஞானஸ்நானப் படுத்தப்பட்டது போல நாம் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும்" மற்றும் "இயேசு சரியானதைச் செய்வதற்காக அல்லது தேவனின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக ஞானஸ்நானப் படுத்தப்பட்டார்" என்பது இரண்டாவதொரு கண்ணோட்டமாகும்.[2] இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு, தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது ஒரு நோக்கமாகும் என்று இந்த அணுகுமுறை கண்ணோக்குகின்றது. பின்னாளில், இயேசு யோவானால் பெற்ற ஞானஸ்நானமானது நம்முடைய ஞானஸ்நானத்திற்கு இணையானது என்ற கூற்று ஏற்படுத்தப்பட்டது; இதிலிருந்து பின்வரும் முடிவு பெறப்படுகின்றது:

> ஒருவர் முழுக்காட்டப் படும்போது, மீட்பரைத் தூண்டிய அதே தூண்டுதல் அவரைத் தூண்டியது என்ற நிலைப்பாடு அனு மதிக்கப்பட்டால், மற்றும் அதைக் காண்பிக்கக் கூடுமென்றால், அந்த நபர் மன்னிப்பு பற்றி அறியாதிருந்தாலும், அவரது ஞானஸ்நானமானது வேத வசனத்தின்படியானதென்றே கருதப்பட வேண்டும்.[3]

இயேசு பெற்ற ஞானஸ்நானமானது இவ்வழி முறையில், ஒருவர் ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றி அறிவிக்கப்படக் கூடாமல் அல்லது அறியாமையினால் ஞானஸ்நானத்தின் நோக்கத்தை மறுதலித்த நிலையில் இருப்பினும், அவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது தேவனுக்குக் கீழ்ப்படியும் வகையில் அதைப் பெற்றாரென்றால் அதன் பலன்களைப் பெறுகின்றார் என்று நிரூபிக்கப் பயன்படுகின்றது.

இயேசு ஞானஸ்நானம் பெற்றபொழுது, அவரது நோக்கத்தைப் புரிந்து கொள்வதில் குறைவு பட்டிருந்ததில்லை. எல்லா வகையிலும் அவர் நமது மாதிரியாக இருப்பாரென்றால், நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது புரிந்து கொள்ளுதலில் குறைவுபட்டவர்களாய் இருக்கக் கூடாது. நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற நோக்கமானது இயேசு ஞானஸ்நானம் பெற்ற நோக்கத்திலிருந்து வேறுபட்டதாக உள்ளது.

இயேசு ஞானஸ்நானம் பெற்றபொழுது பாவமற்றவராயிருந்த படியினால், ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்றால் பாவமற்றவராயிருக்க வேண்டும் என்பது மூன்றாவது கண்ணோட்டமாக உள்ளது. இது அப்படியிருக்க வேண்டுமென்றால், ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்புக்குத் தேவையற்றதாகி விடும். இப்படிப்பட்ட எண்ணப் போக்குடையவர்கள், இரட்சிக்கப்படுவதற்காக ஒருவர் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றால் இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் மாத்திரமே தேவை என்ற போதனையிலிருந்து முரண்படுகின்றது என்று நினைக்கின்றனர்.

இயேசு ஞானஸ்நானம் பெற்றதற்கான மேற்கண்ட மூன்று அணுகுமுறைகளுமே இயேசு ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிந்ததை ஒரு வெற்றுச்சடங்காக்குகின்றன. முதலாவது கண்ணோட்டத்தை முன் வைப்பவர்கள், இயேசு எப்பொழுதுமே தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொண்டதாலும், தேவனுடைய சித்தத்தைச் செய்யவே வந்தாலும் (யோவா. 6:38; எபி. 10:7), அவர் தேவனுடைய ஊழியத்திற்குத் தம்மையே முன் வைப்பதற்கு அடையாளப் படுத்துவதற்குத் தேவையற்றிருந்தார். அவர் பூமிக்கு வந்ததினால் ஏற்கனவே அவர் தேவனுடைய சித்தத்தை செய்வதற்குத் தம்மை ஒப்புக் கொடுத்திருந்தார். அவர் பூமிக்கு வந்ததானது தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குப் போதுமான ஆதாரமாக தேவனுக்கு இருந்தது. யோவானால் இயேசு ஞானஸ்நானப் படுத்தப் பட்டதானது மனிதர் நிமித்தமாகவும் இருந்ததில்லை, ஏனெனில் சில மக்களே அவரது ஞானஸ்நானத்தினைக் கண்டிருந்தனர். அவர் ஞானஸ்நானப் படுத்தப்பட்டதில் இது மட்டுமே அடங்கியிருந்ததென்றால், அவரது செயல்பாடானது வெற்றுச் சடங்காகவே இருந்திருக்கும்.

இரண்டாவது கண்ணோட்டத்தைப் பற்றிக் கேட்க வேண்டிய கேள்வி பின்வருமாறு: இயேசுவிடம் மன்னிக்கப்பட வேண்டிய பாவம் எதுவும் இல்லாததாலும், அவர் இழந்து போகப்படாதிருந்ததாலும், அவரது ஞானஸ்நானமானது எவ்வகையில் இழந்துபோகப்பட்ட பாவிகளின் மன்னிப்புக்கான முன்மாதிரியானதாக இருக்க முடியும்? அவரது ஞானஸ் நானம் கீழ்ப்படிதலுக்கான நல்லதொரு முன்மாதிரியாக இருந்த போதிலும், பாவிகள் மன்னிக்கப்படுதலுக்கான முன் மாதிரியைக் கண்டறிய ஒருவர் வேறு எங்காவதுதான் காண வேண்டும் (அப். 2:38-41; 22:16). மேலும் மன்னிப்பு என்பது ஞானஸ்நானத்தை விட மேலானதை உள்ளடக்கியிருக் கின்றது.

இயேசு பெற்ற ஞானஸ்நானமானது அவர் கீழ்ப்படிதலின் முழு நிறைவான பதிவொன்றைக் காத்துக் கொள்வதற்காக தேவனுடைய நீதியுள்ள வேண்டுகோள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றும் ஒரு முயற்சியாக இருந்தது. இதற்கு மறுபுறத்தில், பாவிக்கான ஞானஸ்நானம் என்பது மன்னிப்பளிக்கவும் முழு நிறைவற்ற பதிவொன்றைத் திருத்து வதற்கும், தேவனுடன் சரியான ஒரு உறவுமுறைக்குள் பிரவேசிப்பதற்கு மானதாகும்.

தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக யோவானின் ஞானஸ்நானத்திற்கு வந்த இயேசுவும் மற்றவர்களும் இரண்டு முழுவதும் மாறுபட்ட நோக்கங்களுக்காக வந்தனர். எனது சகோதரர் கிளென், எங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியும் விதத்தில் வனப் பகுதிக்குள் அவனது சகோதரனுடன் (Cousin) அவனது வாகனத்தில் செல்ல அனுமதிக்கப் பட்டார். எனது ஒரு நண்பனுடன் அம்புகளைக் கொண்டு வேட்டையாடு வதற்காக நான் வனப்பகுதியில் சென்றதால் நான் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தேன். இவ்விரு செயல்பாடுகளுமே கீழ்ப்படிதலின் செயல்பாடுகள்தாம், ஆனால் இரண்டு மாறுபட்ட நோக்கங்களுக்கான வையாகும். கிளென், எங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிதலில் எனக்கு ஒரு முன்மாதிரியாயிருப்பதற்காக வனப் பகுதியில் சென்றிருக்க முடியும், ஆனால் எங்களது நோக்கங்கள் இன்னமும் ஒரே மாதிரியாய் இருக்க முடியாதிருக்கும். இதே வழிமுறையில், கீழ்ப்படிதலின் முன்மாதிரியாக இயேசு ஞானஸ்நானப்படுத்தப்பட்டிருக்க முடிந்தது, இருப்பினும் பாவி ஒருவர் கீழ்ப்படியும் அதே நோக்கங்களுக்காக அது (இயேசுவின் ஞானஸ்நானம்) அமைவதில்லை.

மூன்றாவது கண்ணோட்டமும் கூட, புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானத்தை வெறுமையான சடங்காக மட்டுமே ஆக்குகின்றதாக உள்ளது. ஞானஸ்நானம் என்பது மனிதரின் இரட்சிப்புக்கான தேவனு டைய வேண்டுகோளாகவும் ஆவிக்குரிய உள்ளார்ந்த மதிப்பீடுகள் உடையதாகவும் இல்லாதிருந்தால், அது ஒரு அர்த்தமற்ற சடங்காச்சாரமா கின்றது. கீழ்ப்படிதலுக்கு தண்ணீரில் வெளிப்படையாகச் செய்யப்படும் ஒரு வெற்றுச்சடங்கைக் காட்டிலும் தேவன் ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிதலில் அதிக அர்த்தத்தை விரும்புகின்றார் என்பது நிச்சயம்.

## யோவானின் ஊழியத்தில் இயேசுவின் ஞானஸ்நானம் புரிந்து கொள்ளப்பட்டது.

*யோவானின் ஊழியத்தினுடைய சந்தர்ப்பப் பொருளில் இயேசு பெற்ற ஞானஸ்நானம் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்த சந்தர்ப்பப் பொருளுக்கு வெளியே ஒருவர் அர்த்தம் தேடுவாரென்றால், அவரது முயற்சிகள் சலிப்புள்ளதாகவும், தவறாக வழி நடத்தப்பட்டதாகவும், உருக்குலைந்ததாகவும் ஆகின்றன.*

*“யோவான் ஞானஸ்நானத்தைப் போதித்தார்” என்ற பாடத்தில் முன் வைக்கப்பட்டபடி, வரப் போகிறவராயிருந்த மேசியாவுக்கு மக்களை ஆயத்தப் படுத்துவதே யோவானுடைய ஊழியத்தின் நோக்கமாயிருந்தது (யோவா. 1:6-8). (மத். 3:1-3; லூக். 3:1-9; யோவா. 1:15-34 ஆகியவற்றைக் காணவும்). இந்த ஆயத்தப் படுத்துதலில் பின்காணும் விஷயங்கள் அடங்கி யிருந்தன: (1) விரைவில் ஏற்படுத்தப்படவிருந்த இராஜ்யத்தை அறிவித்தல், (2) மேசியா, அரசரை ஏற்றுக் கொள்ள மக்களை ஆயத்தப்படுத்துதல், (3) மனந்திரும்புவதற்கு மக்களைத் தூண்டுதல் மற்றும் (4) மக்கள் மனந்திரும்பியதற்கும், விரைவில் வெளிப்படவிருந்த மேசியாவில் விசுவாசம் கொள்ள விரும்பியதற்கும் ஆதாரமாக ஞானஸ்நானத்தில் ஒப்புக் கொடுக்க அவர்களைக் கொண்டு வருதல்.*

## இயேசுவின் ஞானஸ்நானத்தினுடைய உட்கருத்தும் நோக்கமும்

*உட்கருத்தும் நோக்கமும் மாறுபடக் கூடும். ஒரு தந்தை தமது மகன் குளித்து தன் தலையை சீவிக் கொள்ள வேண்டும் என்று விரும்பலாம். தமது மகன், பார்வைக்கு நன்றாய் இருக்க வேண்டும் என்பது இதன் நோக்கமாயிருக்கையில், தமது மகன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பும் பெண்ணுக்கு அவன் அழகாய்த் தோன்ற வேண்டும் என்பது இதன் உட்கருத்தாயிருக்கலாம். இவ்விஷயத்தில் உட்கருத்தும் நோக்கமும் மாறுபடும்.*

*குறிப்பாகக் கூறப்படவில்லையென்றாலும், தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற விருப்பமே இயேசுவை ஞானஸ்நானம் பெறும்படி தூண்டியது என்பதை ஒருவர் முடிவு செய்ய இயலும். யோவானின் ஞானஸ்நானம் பெற வந்த மற்ற யாவரும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற இதே உட்கருத்தைக் கொண்டிருக்கலாம், ஆனால் அவர்களின் நோக்கம் இயேசுவினுடையது போலவே இருந்திருக்காது. அவர் எல்லா நீதியையும் நிறைவேற்ற வந்தார், அவர்களோ தங்களின் பாவமன்னிப்பின் மூலமாக நீதியுள்ளவர்களாகும்படி வந்தார்கள். இயேசுவும் யோவானைப் பின்பற்றியவர்களும் ஒரே வித நோக்கத்தோடு வந்தார்கள் என்றால், பின்வருமாறு முடிவு செய்யப்பட வேண்டும்: (1) இயேசு ஒரு பாவியாக இருந்ததால் தமது பாவங்களுக்கு மன்னிப்பின் மூலமாக நீதியுள்ளவராகும்படிக்கு தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி,*

*தமது பாவங்களை அறிக்கையிட்டு கீழ்ப்படிதலுடன் ஞானஸ்நானம் பெற்றார், அல்லது (2) ஞானஸ்நானம் பெற வருபவர் எவ்விதமான பாவக் கறையுமின்றி வரவேண்டும், ஏனெனில் இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது எவ்விதப் பாவமும் இல்லாமல் இருந்தார். இவைகளில் முதலாவது முடிவானது இயேசுவைப் பாவியென்றாக்குவதினால் வேத வசனங்களுக்கு (எபி. 4:15) முரண்படுகின்றது. இரண்டாவது முடிவானது பாவமன்னிப்பிற் காகவே ஞானஸ்நானம் உள்ளதென்று போதிக்கும் வேத வசனங்களுக்கு (அப். 2:38; 22:16) முரண்படுகின்றது.*

*ஒரு நீதியுள்ள வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக தாம் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது என்று இயேசு கூறியிருந்தா ரென்றால், ஒருவர் தாமும் அதே காரணத்திற்காக ஞானஸ்நானம் பெற முடியும் என்று முடிவு செய்யலாம். இருப்பினும், இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காகவே தாம் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்த தென்று உரைத்தார். அது மற்ற ஒவ்வொருவரையும் அதே காரணத்திற்காக ஞானஸ்நானம் பெறுவதிலிருந்து விலக்கி வைக்கின்றது, ஏனெனில், எவரொருவரும் இயேசுவில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று ஒப்புக் கொண்ட யோவானும் கூட (மத். 3:14) எல்லா நீதியையும் நிறைவேற்று மளவு நெருங்கி ஒருபொழுதும் வந்ததில்லை (ரோமர் 3:10). இயேசு விதிவிலக்காக இருந்து எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக ஞானஸ்நானம் பெற முடிந்தது.*

*ஞானஸ்நானத்தை மறுக்கின்றவர்கள், இயேசு ஞானஸ்நானம் பெற்றதினால் கொடுத்த சாட்சியத்தையும் மறுக்கின்றனர், மற்றும் அவர்கள் தேவனுடைய நீதியான ஒரு வேண்டுகோளையும் மறுக்கின்றனர். ஞானஸ்நானம் என்பது ஏழைகளுக்கு உதவுதல் அல்லது நற்செயல்கள் செய்தல் போன்ற மனித நீதியின் செயல்பாடல்ல (தீத்து 3:5). இது பரலோகத் திலிருந்து, தேவனிடத்திலிருந்து வந்ததாக உள்ளது; ஆகையால் ஒருவர் இதற்குக் கீழ்ப்படியும் பொழுது, இது தேவனுடைய நீதியான ஒரு வேண்டுகோளை நிறைவேற்றுகின்றது. இயேசு ஞானஸ்நானம் பெறத் தேவையாயிருந்ததற்கு இது ஒரு காரணமாக உள்ளது, ஏனெனில் ஞானஸ்நானம் என்பது தேவனுடைய நீதியான மற்ற எல்லா வேண்டுகோள்களுடனும் உள்ளது.*

## யோவானின் ஞானஸ்நானம் பரலோகத்தில் இருந்து வந்தது

*இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்ற பொழுது, யோவானின் ஞானஸ்நானம் பரலோகத்திலிருந்து வந்தது (லூக். 20:1-8) என்பதை, ஞானஸ்நானம் கொடுக்கும்படி யோவானை தேவனே அனுப்பியிருந்தார் என்பதை உணர்ந்தார். இயேசு எந்த அதிகாரத்தில் செயல்பட்டார் என்று பிரதான ஆசாரியர்கள் மற்றும் மூப்பர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் இயேசு, "யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ?" (லூக். 20:4)*

என்று கேட்டார்.

இந்தக் கேள்வியின் மறைபொருள் தெளிவானதாக உள்ளது. யோவானின் ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்றென்று அவர்கள் கூறினால், அவர்கள் யோவானின் ஞானஸ்நானத்தையும், இயேசுவே மேசியா என்ற அவரது சாட்சியத்தையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். யோவானின் ஞானஸ்நானத்திற்கு அவர்கள் தங்களைச் சமர்ப்பிக்கத் தவறியதானது அது மனிதரால் உண்டாயிற்றென்று அவர்கள் நினைத்ததைச் சுட்டிக்காட்டியது; ஆகையால், அவர்கள் இயேசுவைப் பற்றிய யோவானின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளாதிருந்தனர்.

இந்த முன்னோடிகள் தேவனுடைய ஆலோசனையை (வடிவமைக்கப்பட்ட நோக்கத்தை)ப் புறக்கணித்தனர், ஏனெனில் அவர்கள் யோவானால் ஞானஸ்நானப்படுத்தப்படாதிருந்தனர், அதே வேளையில் யோவானால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டவர்கள் ‘‘தேவனால் நீதிமான்களாக்கப்பட்டனர்’’ அதாவது, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றதினால் தேவனுடைய வழியைச் சரியானதென்று ஏற்றுக் கொண்டனர் (லூக். 7:30).

இந்தச் சந்தர்ப்பப் பொருளில், இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற வந்தார். யோவான், தன்னிலும் வல்லவர் ஒருவரைப் பற்றிய மாபெரும் சாட்சியத்தைச் செய்தியாக அறிவித்தது தம்மைப் பற்றியது என்று இயேசு அறிந்திருந்தார் (மாற். 1:7). இயேசு ஞானஸ்நானம் பெற்றதினால் யோவானின் ஊழியத்தை அங்கிகரித்ததுடன், யோவானின் செய்தியின் செல்லத்தக்க தன்மைக்குச் சாட்சியமும் அளித்தார். யோவானால் ஞானஸ்நானம் பெற இயேசு மறுத்திருந்தால், யோவான் ஒரு வஞ்சகர் என்றும் ஏமாற்றுபவர் என்றும் சுட்டிக்காட்டுபவராய் அவர் இருந்திருப்பார். இயேசு தம்முடைய ஞானஸ்நானத்தினால் யோவான் உரிமைகோரிய ஒவ்வொன்றிற்கும் (மத். 3:3; யோவா. 1:23) மற்றும் தாம் (இயேசு) மேசியா என்று யோவான் கூறிய செய்தி உண்மையென்றும் அவர் சாட்சியம் அளித்தார் (யோவா. 1:15).

யோவான் தமது ஞானஸ்நானம் தேவனிடத்திலிருந்து வந்ததென்று உணர்ந்திருந்தார், ஏனெனில் தேவனே தம்மை ஞானஸ்நானம் கொடுக்கும்படி அனுப்பினாரென்றும், ஞானஸ்நானம் செய்வித்தலினால் மேசியா தமக்கு வெளிப்படுத்தப்படுவார் என்றும் அவர் கூறியிருந்தார் (யோவா. 1:33, 34). யோவான் தேவனுடைய உண்மையான ஒரு தீர்க்க தரிசியாய் இருந்தார் என்று கூறுவதற்காக மட்டுமின்றி, தமது ஞானஸ்நானத்தில் அவர் (இயேசு) யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டு, அதன் பிறகு அவர் (யோவான்) இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று இஸ்ரவேலுக்குச் சாட்சியளிக்க முடிவதற்காகவும் இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற வந்தார் (யோவா. 1:31-33). இந்தக் காரணத்திற்காக இயேசு ஞானஸ்நானம் பெற வந்த செயலானது மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக இயேசு ஞானஸ்நானம் பெற்றார் (யோவா. 1:31), ஆனால் இஸ்ரவேல் மக்களில்

ஒரு சிலரே இயேசு ஞானஸ்நானம் பெற்றதைக் கண்டனர். இயேசு ஞானஸ்நானம் பெற்றதைக் கண்டவர்களில் யோவான் முதன்மையான வராக இருந்தார். இது முக்கியமானதாயிருந்தது, ஏனெனில் இயேசு ஞானஸ் நானம் பெற்றவுடன் பரிசுத்த ஆவியானவர் அவர் மீது இறங்கி வந்த பொழுது, இயேசுவே மேசியாவாக உள்ளார் என்ற தேவனுடைய சாட்சியத்தை யோவான் கண்டிருந்தார். இயேசுவின் ஞானஸ்நானத்தில் நடந்த உடனடி செயல்பாடானது பரிசுத்த ஆவியானவரை இயேசுவுக்கு அனுப்பியதால் தேவன் அளித்த சாட்சியமாக யோவானுக்கு இருந்தது; இயேசு தேவனுடைய குமாரன் என்று இஸ்ரவேலுக்கு யோவான் சாட்சியம் அளித்ததே இதன் முடிவு விளைவாக இருந்தது (யோவா. 1:32-34).

## தண்ணீர் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம்

இயேசுவே தேவகுமாரனாகிய மேசியா (யோவா. 1:31-34) என்று கூற ஒரு சாட்சியாக யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததிலும், மற்றும் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்” (மத். 3:17) என்று கூறியதிலும் தேவன் தண்ணீர் ஞானஸ்நானத்தில் ஒரு முக்கியத்துவத்தை வலியுறுத்த விரும்பினார் என்பது உறுதியாகும். இயேசுவும் கூட தண்ணீர் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த விரும்பியிருக்க வேண்டும். அவர் பாவமற்றவராயிருந்தும் (எபி. 4:15) மற்றும் யோவான் ஞானஸ்நானத்துடன் இணைந்திருந்த பாவ மன்னிப்பைப் பெறத் தேவையற்றிருந்தும் கூட, ஞானஸ்நானம் பெற்றார்.

## விதி விலக்காக இயேசு

இயேசு விதிவிலக்காக இருந்தார். யோவானின் ஞானஸ்நானம் பெற வந்த மற்ற ஒவ்வொருவருக்கும் பாவமன்னிப்பு தேவையாயிருந்தது; அவர்கள் அறிக்கை செய்ய வேண்டிய பாவங்கள் உடையவர்களாகவும், ஞானஸ்நானம் பெறுமுன் மனந்திரும்ப வேண்டியவர்களாகவும் இருந்தனர் (மத். 3:7, 8). அவர்கள் தங்கள் வாழ்வில் குறிப்பிட்ட மாற்றங்களை ஏற்படுத்தும்படியும் (லூக். 3:10-14) வரவிருந்த மேசியாவின் மீது விசுவாசம் கொள்ளும்படியும் (அப். 19:4) அறிவுறுத்தப்பட்டனர். யோவானின் ஞானஸ்நானத்துடன் இணைந்திருந்த இந்த நோக்கங்கள் எதுவும் இயேசுவுக்கு நடைமுறைப் படுத்தப்பட முடியாதிருந்தது, ஆனால் யோவானின் ஞானஸ்நானத்துடன் இணைந்திருந்த மற்ற கருத்துக்கள் (வரவிருந்த இராஜ்யம் மற்றும் வரவிருந்த மேசியா) இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்பட முடிந்திருந்தது. யோவானின் ஞானஸ்நானத்தினு டைய மறைமுகக் கருத்துக்கள் யாவும் இல்லாவிடினும், சில கருத்துக்களாவது இயேசுவுக்கு நடை முறைப் படுத்தப்பட்டன; ஆகையால் யோவானின் ஞானஸ்நானத்திற்கு இயேசு கீழ்ப்படிந்தார்.

நகரில் உள்ள ஒவ்வொரு காரும் (CAR) செவ்வாய்க் கிழமை தோறும்

கழுவப்பட வேண்டும் என்று நகர மேயரால் உத்தர விடப்பட்டதை அறிந்த மேயருடைய மகனின் செயல்பாட்டுக்கு இயேசுவின் ஞானஸ்நானத்தை ஒப்பிட முடியும். திங்கட்கிழமை மாலை அம்மகன் ஒரு காரை வாங்கினார், அது கறையற்றதாக, ஒரு துளி கூட அழுக்கற்றதாக இருந்தது. செவ்வாய்க் கிழமை காலையில் அந்தக் காரைக் கழுவ வேண்டிய அவசியம் இல்லாதிருந்தும் மேயர் என்ற வகையில் தன் தந்தை இட்ட கட்டளைக்கு மரியாதை காட்டும் வகையில், அதை அந்த மகன் கழுவினார். இதைச் செய்ததினால், அந்த மகன் தனது தந்தைக்கு மரியாதை செலுத்தியதுடன் மட்டுமின்றி, தனது தந்தையின் அதிகாரத்திற்கும், தனது தந்தையால் இடப்பட்ட கட்டளைக்கும் தாம் வைத்திருந்த முக்கியத்துவத்தையும் காண்பித்தார். அந்த மகன் தனது காரைக் கழுவினாலும், அவரது பதில்செயலானது மற்றவர்களுடையதைப் போலவே இருந்தாலும், அவரது நோக்கம் மாறுபட்டதாயிருந்தது. அவர் தம் தந்தைக்கு மரியாதை செலுத்தும் வகையில் அதைச் செய்தார். அவர்களோ அவரது தந்தைக்கு மரியாதை செலுத்த மட்டுமின்றி தங்களது கார்களைக் கழுவுவதற்காகவும் அதைச் செய்தார்கள். இதே வழிமுறையில், தேவனுடைய பரிசுத்த குமாரன் தம்முடைய தகப்பனுக்கு மரியாதை செய்வதற்காக யோவானின் ஊழியத்திற்குச் சாட்சியளிக்கவும், தமது தகப்பன் யோவான் மூலமாகக் கட்டளையிட்ட ஞானஸ்நானத்தைப் பெறவும் தம்மை ஒப்புக் கொடுத்தார்.

இயேசு பாவங்களற்றவராக இருந்தார், இவ்விதமாக அவர் பாவமன்னிப்புக்காக மனந்திரும்ப அவசியமற்றவராயிருந்தார். இரட்சிக்கப்படுவதற்கு மனிதர் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு, அதாவது தேவனால் போதிக்கப்பட வேண்டும் (யோவா. 6:45), விசுவாசிக்க வேண்டும் (யோவா. 3:16), மனந்திரும்ப வேண்டும் (அப். 17:30), அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:10), மற்றும் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும் (மாற். 16:16; அப். 2:38; 22:16; 1 பேது. 3:21) என்பதற்கு அவர் ஒரு முன்மாதிரியாக இருக்க முடியாது. இவைகள் குற்றமறியாதவர்களிடமல்ல, அதாவது ஒரு குற்றமும் அறியாத குழந்தைகளிடமோ அல்லது தேவனுடைய பாவமறியாத குமாரனிடமோ அல்ல ஆனால் பாவிகளிடத்தில் கேட்கப்படுபவையாகும். இயேசுவின் முன் உதாரணமானது நம்மிடம் கேட்கப்படுகின்றவைகளை உள்ளடக்குகின்றது என்றால், மேற்கண்ட செயல்களை நாம் செய்யத் தேவையில்லை, ஏனெனில் அவர் இவைகளில் எதையும் செய்யவில்லை. இருப்பினும், நாம் பாவிகளாய் இருக்கின்றோம், நாம் நமது பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக அவர் செய்ய அவசியமற்ற மேற்கண்ட செயல்களைச் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. அவர் செய்த செயலானது, நாம் செய்யத் தேவையாயுள்ள எல்லாவற்றையும் உள்ளடக்கவில்லையென்றால், நமது பாவமன்னிப்பிற்காக நாம் யாவரும் செய்ய அவசியமானவற்றிற்கு அவர் முன் உதாரணமாய் இருக்க முடியாது.

இயேசு தமது பன்னிரெண்டாவது வயதில் தேவாலயத்தில் போதிக்கத் தொடங்கியதால், சிலர் பிள்ளைகளைப் பன்னிரெண்டு வயதில்

ஞானஸ்நானப்படுத்தலாம் என்று தேர்ந்து கொள்ளுகின்றனர். ஆலென் அவர்கள், “உண்மை என்னவென்றால், எல்லா விஷயங்களிலும் அவரே நமக்கு முன் மாதிரியாக இருக்கின்றார்”[4] என்று எழுதினார். எல்லா விஷயங் களிலும் இயேசுவே முன்மாதிரியாக உள்ளார் என்றால், பிள்ளைகள் பன்னிரெண்டு வயதில் தேவனுடைய ஊழியத்தைத் தொடங்குவதற்கு நாட வேண்டும், ஆனால் ஞானஸ்நானம் பெறுவதற்கு முப்பது வயது வரை காத்திருக்க வேண்டும் (லூக். 3:21-23), பிறகு தேவனுக்கென்று ஒரு ஊழியத்தைத் தொடங்க வேண்டும். அந்தச் செயல்பாடானது தேவனுக்குக் கீழ்ப்படிதலின் ஒரு முன்மாதிரியாக மட்டுமே இருந்ததென்றால், முப்பது வயது என்பது ஞானஸ்நானம் பெறவும், தேவனுக்கு ஊழியத்தைத் தொடங்கவும் ஒரு உதாரணமாக இருப்பதில்லையா?

## முடிவுரை

இயேசு ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் தம்முடைய மேசியாத்துவத்தை யோவானுக்கு வெளிப்படுத்தினார், மற்றும் யோவான் தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசியென்று சாட்சியம் அளித்தார். வேறு எந்த மனிதரும் ஒருபொழுதும் சாதிக்க முடியாத செயலான தேவனு டைய *எல்லா* நீதியையும் நிறைவேற்றுதல் என்ற செயலை நோக்கி அவர் (இயேசு) முன்னேறுகையில் நீதியுள்ள இந்தச் செயலுக்கு அவர் கீழ்ப்படிந்தார். இயேசு ஒருவர் மட்டுமே *எல்லா* நீதியையும் நிறைவேற்றும் வகையில் வாழ்ந்தார். மனிதர் பாவியென்ற வகையில் நீதியற்றிருப்பதால் நீதியுள்ளவராவதற்கு ஞானஸ்நானத்தை அணுக வேண்டும். இயேசுவின் ஞானஸ்நானமானது கீழ்ப்படிதலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக, உள்ளது, ஆனால் அது இரட்சிப்பை, பாவமன்னிப்பைப் பெறுவதற்கான எடுத்துக் காட்டு அல்ல.

யோவானின் ஞானஸ்நானத்தில் அடங்கியுள்ள அனைத்தும் இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும், யோவானின் ஞானஸ்நானத்தில் உள்ள கீழ்ப்படிதலின் கொள்கையானது அவருக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆகையால், இயேசு அவருக்கு நடைமுறைப்படுத்தப்பட்டவற்றை நிறைவேற்ற ஞானஸ்நானப் படுத்தப்பட்டார், இவ்வழிமுறையில் அவர் தேவனுடைய நீதியான வேண்டுகோள்கள் அனைத்தையும் காத்துக்கொள்வதற்குத் தம்முடைய முயற்சியைத் தொடர்ந்தார்.

---

குறிப்புகள்

[1]*Let Your Kingdom Come* (n.p.: Watchtower Bible and Tract Society of Pennsylvania, 1981), 69. [2]Jimmy Allen, *Rebaptism*? (West Monroe, La.: Howard Publishing Co., 1991), 6. [3]Ibid., 48. [4]Ibid.

# இயேசு மக்களை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்தினார்

*யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டார்கள் ... இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள் (யோவா. 4:1, 3).*

இயேசு தம்முடைய ஊழியத்தைத் தொடங்கிய பொழுது, காலம் நிறைவேறிற்று (மேசியாவைப் பற்றியும் இராஜ்யத்தைப் பற்றியுமான தீர்க்கதரிசனங்களைத் தேவன் நிறைவேற்றக் காலம் வந்திருந்தது என்று அர்த்தப்படும்; மாற். 1:14, 15) என்பதை அவர் விளக்கப்படுத்தினார். அவர் மக்களிடம், "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது" என்று கூறினார் (மத். 3:1, 2; 4:17). யோவானின் ஊழியத்தைக் கவிந்து கொண்ட அவருடைய ஊழியத்தின் மூலம் பலர் பதில்செயல் செய்து ஞானஸ்நானப் படுத்தப்பட்டனர் (யோவா. 3:22; 4:1).

இயேசு மக்களை ஏன் ஞானஸ்நானத்திற்கு வழி நடத்தினார் என்பது பற்றிய முழு விபரமும் வேத வசனங்களில் தரப்படவில்லை; இருப்பினும், யோவானின் ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் பற்றிய போதுமான தகவல் தரப்பட்டுள்ளது. அவர்களின் ஊழியங்களை ஒப்பிடுவதினால், இயேசு போதித்த ஞானஸ்நானமானது யோவான் போதித்த ஞானஸ்நானத்திலிருந்து மாறுபடுவதில்லை என்று நாம் தெளிவான நம்பிக்கைக்குரிய ஒரு முடிவைப் பெற இயலும்.

## அதே செய்தி

மத். 3:2 மற்றும் லூக். 3:3 ஆகிய சுவிசேஷ விபரங்களை சேர்த்துப் பார்க்கும்போது, யோவான் பாவமன்னிப்புக்கென்று மனந் திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தையும் அத்துடன் கூடுதலாக பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது என்பதையும் பிரசங்கித்தார் என்ற முடிவைப் பெற இயலும். ஆகையால் ஞானஸ்நானப் படுத்தப்படும்படி பதில்செயல் செய்தவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர்.

*யோவானின் செய்திக்குப் பதில்செயல் செய்தவர்களும், இயேசுவின் இராஜ்யத்தைப் பற்றிய செய்திக்குப் பதில்செயல் செய்தவர்களும் ஞானஸ்நானம் பெற்றதால், அவர்கள் ஒரே விதமான செய்திக்கே பதில்செயல் செய்திருக்க வேண்டும். யோவான் மனந்திரும்புதல் பற்றிப் பிரசங்கித்தார், இயேசுவும் அதையே பிரசங்கித்தார். யோவான் வரவிருந்த இராஜ்யத்திற்கு (மக்களைத்) தயார் செய்தார், இயேசுவும் அதையே செய்தார். யோவான் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார்; இருப்பினும், ஞானஸ்நானம் மற்றும் பாவமன்னிப்பு பற்றிய இயேசுவின் பிரசங்கித்தல் குறித்துத் தகவல் தரப்படவில்லை. யோவானும் இயேசுவும் மக்களை ஞானஸ்நானத்திற்கு வழி நடத்தினர். இயேசுவும் யோவானும் போதித்தவை மற்ற அம்சங்களில் இணையாக இருந்தனவென்றால், இராஜ்யம் சமீபித்திருந்ததால் அவர்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுதல் என்ற அதே செய்தியைப் பிரசங்கித்தனர் என்ற கருத்து தொடருமல்லவா?*

*யோவானும் இயேசுவும் பிரசங்கித்த பரலோக ராஜ்யம் அல்லது தேவனுடைய ராஜ்யம் (மத். 4:17; மாற். 1:15) என்பது ஒரு நீதியுள்ள அரசாக இருக்க வேண்டியதாயிற்று (ரோமர் 14:17). அது மனந்திரும்புதல் அதாவது வாழ்வில் மாற்றம், பாவமன்னிப்பு மற்றும் அதற்குள் பிரவேசிப்பவர்களுக்கு ஒரு புதிய ஜீவன் (அப். 26:18; கொலோ. 1:13) ஆகியவற்றைக் கேட்டுக் கொள்வதாயிருக்கும். மக்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் மூலம் யோவானும் இயேசுவும், வரப் போகிற இராஜ்யத்தில் மக்களுக்குப் பிரவேசத்தைக் கொடுக்கும் புதிய பிறப்பிற்காக அவர்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர் (யோவா. 3:5). அவர்களின் இலக்குகளும், அவர்கள் பெற்றுக் கொண்ட பதில்செயலும் ஒரே வகையாய் இருக்குமளவுக்கு, அவர்கள் ஒரே விதமான செய்தியைப் பிரசங்கித்தனர் என்ற முடிவும் கூட ஆரோக்கியமானதாகவே (சரியானதாகவே) காணப்படுகின்றது.*

## அதே நோக்கம்

*இயேசு தம்முடைய செய்தியிலும் ஞானஸ்நானம் கொடுத்தலிலும் யோவானுடையதிலிருந்து மாறுபட்ட ஒரு நோக்கமொன்றைக் கொண்டிருந்திருப்பாரா? இயேசு பயணம் செய்துகொண்டிருக்கையில், தாம் தேவனுடைய குமாரனாகிய மேசியா என்று மக்கள் அறிக்கையிட்ட பொழுது அதை ஒத்துக் கொண்டாலும் (மத். 16:16, 17; யோவா. 4:25, 26; லூக். 22:67-70) இந்த சத்தியத்தை அவர் தாமே அறிவித்துக் கொண்டிருந்த தில்லை. அவர் இதை ஒருவருக்கும் சொல்லக் கூடாதென்றுதான் புத்தி கூறினார் (மத். 16:20). யோவானின் ஞானஸ்நானத்தைப் போலவே இவருடைய ஞானஸ்நானமும் வரவிருந்த மேசியாவின்மேல் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருந்ததே தவிர, இயேசு தேவனுடைய குமாரனாகிய மேசியா என்ற விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருந்ததில்லை.*

*யோவானாலும் இயேசுவாலும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவர்களுடைய சீஷர்களாயினர் (யோவா. 4:1). அவர்களால் அந்த சீஷர்கள் போதிக்கப்பட்டனர், அவர்களின் செய்தியை ஆதரிப்பவர்களாயினர், அவர்களைப் பின்பற்றுபவர்களாயினர். மேசியாவை ஏற்றுக் கொள்ளவும் அவரது இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவும் தயாராக இருந்தனர்.*

## இயேசுவின் வெற்றி

*சிலர், இயேசுவல்ல ஆனால் யோவான் மட்டுமே மக்களைத் தண்ணீர் ஞானஸ்நானம் பெறும்படி இணங்கச் செய்தார் என்று நினைத்தனர், ஆனால் ஞானஸ்நானம் பெறும்படி மக்களை இணங்கச் செய்வதில் இயேசு மிகவும் வெற்றி நிறைந்தவராய் இருந்தார். பரிசேயர்கள், யோவானைக் காட்டிலும் இயேசு அதிகமான மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துச் சீஷராக்கினார் என்று அறிக்கைகளைப் பெற்றிருந்தனர் (யோவா. 4:1). இது உண்மையாகவோ அல்லது உண்மையற்றதாகவோ எப்படியிருப்பினும், இயேசு திரளான மக்களை ஞானஸ்நானத்திற்கு வழி நடத்தினார் என்றே நாம் முடிவு செய்ய வேண்டும்.*

## இயேசுவுக்கு ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம்

*இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுத்ததில்லை என்ற உண்மையானது அவர் ஞானஸ்நானத்தின் மேல் வைத்திருந்த முக்கியத்துவத்தை குறைத்து விடுவதில்லை. அவர் பலரை ஞானஸ்நானம் பெறும்படி இணங்கச் செய்திருந்தார் (யோவா. 4:1) இது இயேசு மக்களை ஞானஸ்நானம் பெறுவதற்கு வற்புறுத்தியதன் ஒரு சுட்டிக்காட்டுதல் ஆகும். இயேசு அவ்வாறு ஊக்கப்படுத்தியிருக்காவிட்டால், அவர்கள் ஏன் ஞானஸ்நானம் பெறும்படி வந்திருக்க வேண்டும்?*

*''மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின்வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார் ... அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11) என்ற யோவானின் கூற்றைச் சிலர், இயேசு தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு சிறிதளவே முக்கியத் துவம் கொடுப்பார் அல்லது புதிய உடன்படிக்கையின் கீழ் அது முக்கியத்துவமற்ற இடத்திற்குக் கீழே தள்ளப்படும் என்று யோவான் போதித்ததாக அர்த்தப்படுத்துவதாக எடுத்துக் கொண்டுள்ளனர். தண்ணீர் ஞானஸ்நானம் முக்கியத்துவமற்றதென்று போதிக்க யோவான் முயற்சி செய்ததில்லை. மாறாக, அவர் தமக்குப் பின்வருகிறவருடைய மாபெரும் தன்மையை வலியுறுத்த நாடினார். யோவான் செய்ய முடியாதிருந்ததை அவர் செய்ய வல்லவராயிருப்பார்: பரிசுத்த ஆவியிலும் அக்கினியிலும் மூழ்கடித்தல். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களிலேயே பெரியவரான யோவான் (மத். 11:11) அவரது மிதியடிகளைச் சுமக்கக் கூடப் பாத்திரராயிருந்ததில்லையென்றால், அவருக்குப் பின் வருகிறவர் அவரைக்*

காட்டிலும் பெரியவராய்த் தானே இருக்க வேண்டும்.

தண்ணீர் ஞானஸ்நானத்தை இயேசு அற்பமாகக் கருதியிருந்தால், அவர் தண்ணீர் ஞானஸ்நானத்திற்குத் தம்மை கீழ்ப் படுத்தியிருக்க மாட்டாரே, அது தேவனிடத்திலிருந்து வந்த அறிவுறுத்தல் என்று நம்பியிருக்க மாட்டாரே (லூக். 20:1-8), தண்ணீர் ஞானஸ்நானத்தை மறுத்தவர்கள்/ புறக்கணித்தவர்கள் தங்களுக்குக் கேடுண்டாகத் தக்கதாக தேவனுடைய ஆலோசனையைப் புறக்கணித்ததாக உரிமைகோரியிருக்க மாட்டாரே (லூக். 7:30), அல்லது அவ்வளவு அதிகமான மக்களை ஞானஸ்நானம் பெற இணங்கச் செய்திருக்க மாட்டாரே (யோவா. 4:1). யோவான் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அனுப்பப்பட்டிருந்தால், அவரிலும் பெரியவர் கூட மக்களை ஞானஸ்நானம் பெறும்படித்தான் வழி நடத்தி யிருந்தால், நிச்சயமாக தேவன் தண்ணீர் ஞானஸ்நானத்தின் மீதே முக்கியத்துவத்தை வைத்திருக்க வேண்டும்.

## மனந்திரும்புதலும் நியாயப்பிரமாணமும்

மனந்திரும்புதல் பற்றி யோவானும் இயேசுவும் போதித்தனர் என்ற உண்மையானது (மத். 3:8; 4:17) அவர்கள் போதித்த ஞானஸ்நானத்துடன் மனந்திரும்புதல் இணைந்திருந்தது என்று சுட்டிக்காட்டுகின்றது. புதிய உடன்படிக்கையானது இன்னும் இயேசுவின் இரத்தத்தினால் அர்ப்பணிக்கப்படாதிருந்தது (எபி. 9:16, 17), மற்றும் பழைய உடன்படிக்கை இன்னமும் அமுலில் இருந்தது. ஆகையால், மனந்திரும்புதல் என்பது யோவான் மற்றும் இயேசு ஆகிய இவ்விருவரின் மூலம் மனமாற்றம் பெற்றவர்கள் அவர்கள் கீழ்ப்பட்டு வாழ்ந்திருந்த உடன்படிக்கையான சீனாய் மலையில் மோசேக்குக் கொடுக்கப்பட்ட பழைய உடன்படிக்கைக்கு அதிகம் தீர்மானமுள்ளவர்களாய் வாழும்படியே எதிர்பார்க்கப்பட்டது. அந்த வேளையில் செயல் முறையில் இருந்த தேவனுடைய ஒரே பிரமாணம் அது ஒன்றேயாகும். புதிய உடன்படிக்கை அவ்வேளையில் இன்னமும் அமுலுக்கு வராதிருந்தபடியால், மனந்திரும்புதல் என்பது புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளினால் அதிக எச்சரிக்கையுடன் வாழ்தலுக்கு ஒருவர் தன் வாழ்வை மாற்றிக் கொள்ளுதல் என்று அர்த்தப்பட முடியாதிருந்தது (எபி. 9:16, 17).

இயேசு தம்முடைய சொந்த ஊழியத்தின் போது, பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும்படி யூதர்களுக்கு அறிவுறுத்தினார். பணக்காரனாயிருந்த இளம் அதிகாரிக்கு, கட்டளைகளுக்கு கீழ்ப்படி என்று அவர் கூறினார் (மத். 19:17) மற்றும் சுத்தமடைந்திருந்த தொழு நோயாளிகள் தங்களை ஆசாரியர்களுக்குக் காண்பித்து, மோசே கட்டளையிட்டிருந்த காணிக்கையைச் செலுத்த வேண்டியிருந்தது (மத். 8:4). யூதர்கள் பழைய உடன்படிக்கையை வினயமாய்க் கடைப்பிடிக்க வேண்டும் என்றே யோவானும் இயேசுவும் நாடினார்கள். அவர்களால் மனமாற்றம் பெற்றவர்கள், முதல் உடன்படிக்கையில் மோசேயினால் கட்டளை

*யிடப்பட்டிருந்த பாவமன்னிப்பிற்கான சமாதான பலிகளை இன்னமும் செலுத்துவது அவசியமாயிருந்தது (லேவி. 4:31). பாவங்களை மன்னிக்கக் கூடாதிருந்த அப்படிப்பட்ட பலிகள் (எபி. 10:1-4) இயேசுவின் மரணத்தின் மூலமாக இரண்டாவது உடன்படிக்கையினால் மாற்றம் பெற்ற போது எடுத்துப் போடப்பட்டன (எபி. 10:9). முதலாம் உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தவர்களுக்கு சிலுவையில் இயேசு பெற்ற மரணத்தினால் பாவமன்னிப்பு சாத்தியமாயிற்று (எபி. 9:15; கலா. 4:5).*

*பழைய பிரமாணத்தின் கீழ் யோவானும் இயேசுவும் போதித்த ஞானஸ்நானமும் மற்றும் பலிகளும் கூட பாவ மன்னிப்பிற்கு இயேசுவின் இரத்தத்தையே சார்ந்திருந்தன. யோவான் மற்றும் இயேசுவால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றது போலவே (மாற். 1:4; லூக். 3:3) மிருக பலியை செலுத்தியவர்களும் மன்னிக்கப் பட்டனர் (லேவி. 4:20, 26, 31, 35; 5:10, 13, 16, 18; 6:7; 19:22; எண். 14:19; 15:22-28; சங். 78:38; 32:5; 85:2; 2 சாமு. 12:13). ஆயினும் இப்படிப்பட்ட மன்னிப்பானது இராஜ்யம் இன்னும் வராதிருந்ததால் இராஜ்யத்திற்குள் பிரவேசித்தலை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாததாக இருந்தது (மத். 4:17; 10:7).*

*பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு பக்தியுள்ள யூதர்களுக்கு, அவர்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார் (அப். 2:38).*

*அதிக எண்ணிக்கையிலான மக்களை ஞானஸ்நானப் படுத்துவதில் யோவான் மிகவும் வெற்றி நிறைந்தவராயிருந்தார் (மத். 3:5) - மற்றும் ஒருவேளை இயேசு இன்னும் அதிகம் வெற்றி நிறைந்தவராயிருந்தார் (யோவா. 4:1). ஒவ்வொருவரும் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு கூறுவதைக் கேட்பதற்கு அவர்கள் அங்கு இருந்திருப்பார்கள். அந்த நாளில் ஞானஸ்நானம் பெற்ற மூவாயிரம் பேர் பெரும்பாலும் இந்த மாபெரும் நிகழ்ச்சிக்கு யோவானாலும் இயேசுவாலும் ஆயத்தம் பண்ணப்பட்டவர்களாகவே இருந்திருப்பார்கள். இல்லையென்றால், பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று எந்த மக்களிடம் கூறினார்களோ அவர்கள் வரவிருந்த இராஜ்யத்திற்கு இருவரில் ஒருவராலும் ஆயத்தம் பண்ணப்படவில்லை என்றும் அவர்கள் ஒவ்வொருவரும் பேதுரு கூறியதைச் செய்திருந்தாலும் அது அவ்வாறே இருந்தது என்றும் தான் முடிவு செய்யப்பட வேண்டும்.*

*இராஜ்யத்தினுள் இருப்பவர்கள் புதிய உடன்படிக்கையின்படியான ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் ஆவர், இது யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் பிரசங்கித்தலின் போது செயல்பாட்டில் இல்லை. ஆகையால் ஆயத்த ஞானஸ்நானத்தினால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டவர்கள் தங்களை இராஜ்யத்திற்குள் பிறக்கச் செய்ய இன்னொரு ஞானஸ்நானத்தை எதிர்பார்த்திருந்திருப்பார்கள்.*

# முடிவுரை

தண்ணீர் ஞானஸ்நானம் என்பது எல்லாமுமாகி விடாது என்றாலும், யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் சீஷர்களானவர்களுக்கு அது ஒரு முக்கியமான தேவையானதாயிருந்தது. ஞானஸ்நானம் பெற மறுத்தவர்கள், யோவானும் இயேசுவும் பிரசங்கித்த தேவ செய்தியை விசுவாசிக்க வில்லையென்றும் மனந்திரும்பவில்லையென்றும் சுட்டிக்காட்டினர். ஆகையால், அவர்கள் தங்களுக்கான தேவசெய்தியைப் புறக்கணித்தனர் (லூக். 7:30). இந்தக் காரணத்திற்காக, அவர்கள் வரவிருந்த மேசியாவையும் அவரது இராஜ்யத்தையும் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாகாதிருந்தனர். இதற்கு மறுபுறத்தில், இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் இயேசு பிரசங்கிக்கப்பட்ட பொழுது அவரை கர்த்தர் என்றும் கிறிஸ்து என்றும் விசுவாசிக்கவும், அவரது இராஜ்யத்தினுள் பிறக்கவும் ஆயத்தம் செய்யப் பட்டிருந்தனர்.

பரலோக இராஜ்யம் சமீபித்திருந்ததால், யோவானும் இயேசுவும் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தனர் என்று காணப்படுகின்றது (மத். 3:2; 4:17). இயேசு பிரசங்கித்த ஞானஸ்நானமானது யோவானால் பிரசங்கிக்கப்பட்ட ஞானஸ்நானத்தின் அதே முக்கியத்துவமும் நோக்கமும் கொண்டதாயிருந்தது.

# இயேசு ஞானஸ்நானத்தைப் போதித்தார்

*அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷர்களாக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து ... (மத். 28:18, 19).*

*யோவானும் இயேசுவும் பூமிக்குரிய தங்களுடைய ஊழியங்களில், பலர் ஞானஸ்நானம் பெறும்படி இணங்கச் செய்தனர் (மத். 3:5, 6; யோவா. 4:1). அவர்களால் மனம் மாற்றப்பட்டவர்கள் அவர்களைத் தேவனுடைய செய்தியாளர்கள் என்று ஏற்றுக் கொண்டு அவர்களைப் பின்பற்றுபவர்களாகி, பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பை நாடி, அவர்களின் செய்திக்கு இணங்க மனந்திரும்பி, வரவிருந்த மேசியாவைப் பற்றியும் அவரது இராஜ்யத்தைப் பற்றியுமான அறிவுறுத்தலை ஏற்றுக் கொண்டனர். பரலோக ராஜ்யம் சமீபித்திருந்ததால், அவர்கள் "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தை" (மத். 3:2; லூக். 3:3) பெற்றுக் கொண்டனர். வரவிருந்த இராஜ்யத்திற்கு ஆயத்தப் படும்படியாக அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர், எனவே இராஜ்யத்தின் ஞானஸ்நானமானது ஆயத்த ஞானஸ்நானத்தைப் போன்றதாகவே இருந்ததென்பது இயல்பானதாகும்.*

## பதில்செயல்

*பரிசேயர் மற்றும் சதுசேயர் (மத். 3:7) உட்படப் பலர் யோவானாலும், இயேசுவாலும் (யோவா. 3:22, 26; 4:1) ஞானஸ்நானம் பெற வந்தனர் என்ற உண்மையானது அந்த வழக்கம் யூதேயா மற்றும் யோர்தான் நதியைச் சுற்றிலும் இருந்த பகுதிகளில் (மத். 3:6) அறியப்பட்டிருந்தது என்பதை மறைமுகமாய் உணர்த்துகின்றது. இயேசுவின் சீஷர்கள் அதைச் செயல் படுத்தினார்கள் (யோவா. 4:2) மற்றும் பின்னாளில் புதிய உடன்படிக்கை யின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்த போது, அதன் அர்த்தத்தையும், நோக்கத்தையும் புரிந்து கொண்டிருந்திருப்பார்கள்.*

*இந்த ஆயத்த ஞானஸ்நானமானது நன்கறியப்பட்டிருந்ததால், புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானம் பாவ மன்னிப்பிற்கானதல்ல வென்றால், கவனம் நிறைந்த ஒரு விளக்கம் அவசியமானதாயிருக்கும். இதற்குப் பதிலாக, பேதுரு, புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானத்திற்கு*

அதே நோக்கங்களையே இயல்பு படுத்தினார் (அப். 2:38). அது (ஆயத்த ஞானஸ்நானம்) இயேசுவின் இரத்தத்தின் மீதோ அல்லது மேசியா என்ற வகையில் அவரது நாமம் அல்லது அதிகாரத்தின் மீதோ கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல என்ற வகையில் குறிப்பிடத் தக்க விதத்தில் மாறுபட்டதாயிருந்தாலும், இதன் ஒற்றுமைப் பண்புகள் தேவனால் திட்டமிட்டபட்டவை என்பதும், உயர்தரமான ஆயத்த ஞானஸ்நானத்தை அது ஏற்படுத்திற்று என்பதும் உறுதியாகும். இதைப் பெற்றுக் கொண்டவர்களை இது பரலோக இராஜ்யத்திற்குள்ளோ, சபைக்குள்ளோ அல்லது கிறிஸ்துவுக்குள்ளோ இடவுமில்லை, அல்லது இதனைப் பரிசுத்த ஆவியின் வரம் தொடரவுமில்லை. இந்த ஆயத்த காலத்தின் போது, யோவான், இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோர், மேசியா வரும்போது இஸ்ரவேல் மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளும்படி ஆயத்தம் செய்தனர் (மத். 10:6; 15:24) ஆனால் மேசியாவாகிய இயேசுவினிடம் அவர்களை மனமாற்றமடையச் செய்யவில்லை. ஆகையால், இந்த ஞானஸ்நானமானது வரவிருந்த மேசியாவின்மேல் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் இருப்பினும், மேசியா என்ற வகையில் இயேசுவின்மேல் கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் இருக்க முடியாதிருந்தது.

## இயேசு ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார்

எருசலேம் தொடங்கி எல்லா நாட்டவருக்கும் தம்முடைய நாமத்திலே பாவமன்னிப்பு பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று இயேசு போதித்தார் (லூக். 24:47). இந்த போதனையில் விசுவாசமும் ஞானஸ்நானமும் உள்ளடங்கியிருந்தன (மத். 28:18, 19; மாற். 16:15, 16). அவரது உயிர்த்தெழுதலுக்கு நாற்பது நாட்களுக்குப் பின் (அப். 1:1, 2), இயேசு பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் பெறுவதற்குத் தேவனுடைய வலது பாரிசத்திற்கு ஏறிச் சென்றார் (எபே. 1:19 -23; 1 பேது. 3:22). இதற்குப் பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் எருசலேமில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவமன்னிப்பை முதன் முதலாகப் பிரசங்கித்தனர். இந்தச் செய்தியானது சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது (லூக். 24:47).

புதிய உடன்படிக்கையின் கீழ் பாவமன்னிப்புக்கு ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்பதற்குப் பலரால் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தப்படும் சிலுவையில் மரித்த கள்ளன், முதன் முதலாக இயேசுவின் நாமத்திலே பாவமன்னிப்பு பிரசங்கிக்கப்படு முன்பு மரித்தான் (யோவா. 19:31, 32). அவன், ஒருவர் புதிய உடன்படிக்கையின் கீழ் பாவமன்னிப்புப் பெற என்ன செய்ய வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இருக்க முடியாது, ஏனெனில் இயேசுவின் நாமத்தில் பாவமன்னிப்பு அளிக்கப்படு முன்பே அவன் மரித்திருந்தான்.

பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானம் என்பது இஸ்ரவேல் மக்களுக்குப்

புதிதானதாக இருந்ததில்லை. இயேசுவின் இரத்தம் மற்றும் இயேசுவின் நாமம் (பாவத்திலிருந்து ''தேவன் விடுவிக்கின்றார்'' அல்லது இரட்சிக்கின்றார் என்பதே இதன் அர்த்தமாகும்; மத்.1:21) மற்றும் கிறிஸ்து என்ற இயற்பெயர் ("மேசியா" என்ற எபிரெய வார்த்தைக்கான கிரேக்கச் சொல், இது "அபிஷேகிக்கப்பட்டவர்" தேவனால் தீர்க்கதரிசியாக, ஆசாரிய ராக மற்றும் இராஜாவாகத் தேர்ந்து கொள்ளப்பட்டவர் என்று அர்த்தப்படும்) ஆகியவற்றுடன் மன்னிப்பானது இணைந்திருந்ததுதான் அவர்களுக்குப் புதிதானதாக இருந்தது. இஸ்ரவேல் மக்கள் மேசியாவின் ஊழியத்தினுடைய சரீரப் பிரகாரமான நிறைவேறுதலுக்காக நோக்கிக் கொண்டிருப்பினும், தேவன் ஆவிக்குரிய ஒன்றை நிறைவேற்றினார்.

## இயேசு கட்டளையிட்ட ஞானஸ்நானம்

இயேசு போதித்த ஞானஸ்நானமானது ஞானஸ்நானம் கொடுப்பவரின் அல்லது ஒரு சபையின் அதிகாரத்தின்படியானதல்ல, ஆனால் வானம் மற்றும் பூமி (மத். 28:18, 19) ஆகியவற்றில் உள்ள அவரது அதிகாரத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். இயேசுவின் அறிவுறுத்துதல்களின்படி ஞானஸ்நானம் பெறுபவர்கள் அவருடைய அதிகாரத்தை ஏற்றுக் கொள்கின்றனர், ஆகையால் அவரது நாமத்திலே ஞானஸ்நானம் பெறுகின்றனர். மனித போதனையின் அடிப்படையில் ஒருவர் ஒரு ஞானஸ்நானத்தைப் புரிந்து கொண்டு, கீழ்ப்படிந்தால், மற்றும் இயேசு கிறிஸ்துவால் போதிக்கப்பட்ட ஞானஸ்நானத்தைப் புரிந்து கொள்ளாது, அதற்குக் கீழ்ப்படியாதிருந்தால், அந்த நபர், இயேசுவின் நாமத்தில் அல்ல, மாறாக, மனிதர் அல்லது சபையின் அதிகாரம் அல்லது பெயரிலேயே ஞானஸ்நானம் பெறுகின்றவராவார்.

### யோவான் 3:3-5

ஒருவர் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்குமுன் ஜலத்தினாலும் ஆவியினாலும் புதுப் பிறப்படைவது அவசியம் என்று இயேசு போதித்தார் (யோவா. 3:3-5). யோவான் மற்றும் இயேசுவால் போதிக்கப்பட்ட பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஆயத்த ஞானஸ் நானமானது ஜலத்தினாலும் ஆவியினாலும் பெறுகின்ற புதுப் பிறப்பாய் இருந்ததில்லை. பரலோக ராஜ்யம் சமீபித்திருந்தாலும், அப்பொழுது அது வந்திருந்ததில்லை (மத். 4:17). மன்னிப்பை மட்டுமே உள்ளடக்கிய தாயிருந்த ஞானஸ்நானமானது இன்னும் வராதிருந்த இந்த இராஜ்யத்திற்குள் ஒருவரைச் சேர்க்க முடியாததாக இருந்தது. மிருக பலிகளைச் செலுத்தியவர்கள் பெற்ற பாவமன்னிப்பானது கொடுத்ததைக் காட்டிலும் (லேவி. 4:20, 26, 31, 35; 5:10, 13, 16, 18; 6:7; 19:22) அதிகமான எதையும் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்குக் கிடைத்த பாவமன்னிப் பானது தர முடியாததாயிருந்தது. இது அவர்களை இராஜ்யத்தினுள் பிரவேசிக்கச் செய்யவும் முடியாததாயிருந்தது. பாவ மன்னிப்பு மாத்திரமே ஒருவரை பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கச் செய்து விடாது.

இராஜ்யத்தினுள் பிரவேசிப்பவர்கள் மேசியாவுடனும் அவரது இராஜ்யத்துடனும் உறவையும், ஒரு புதிய வாழ்வையும் உண்டாக்குவதான புதுப்பிறப்பொன்றை நீரினாலும் ஆவியினாலும் பெற வேண்டும் (ரோமர் 6:4; கலா. 3:27; கொலோ. 2:12, 13).

இந்தப் புதிய பிறப்பின் தண்ணீரானது ஞானஸ்நானமாய் உள்ளது (அப். 8:12, 38, 39), மற்றும் ஆவிக்குரிய இந்தப் பிறப்பின் வாகனமாக உள்ளது தேவ வசனமாகிய உயிரளிக்கும் விதையாகும் (லூக். 8:11; யோவா. 6:63). இந்த விளக்கமானது இயேசுவின் மற்ற போதனைகளுடனும், புதிய ஏற்பாட்டின் எஞ்சிய மற்ற பகுதிகளுடனும் இசைந்ததாக உள்ளது (லூக். 8:11, 12; அப். 11:14; 1 பேது. 1:23 முதலியன).

யோவான் 3:5ஐப் பற்றி ஃபிரெடெரிக் டேல் பர்னர் அவர்கள் தக்கவிதத்தில் பின்வருமாறு விளக்கம் கொடுத்துள்ளார்:

> தண்ணீரும் ஆவியானவரின் வரமும் யோவான் 3:5ல் உள்ளதைக் காட்டிலும் அதிகம் நெருங்கிய இணைவுள்ளதாக வேறெங்கும் காண முடியாது: "ஜலத்தினாலும் ஆவியினாலும்" (of Water *and the* Spirit). யோவான் இரு மாறுபட்ட நிகழ்வுகளை விளக்குவது போல இவ்விடத்தில் "Spirit" என்பதற்கு முன் இன்னொரு "of" (*ex*) என்ற வார்த்தையை இடவில்லை. ஒருமுறை மட்டும் வரும் *ex*ஆனது ஒரே நிகழ்ச்சியை விவரிக்கின்றது. எனவே இந்த ஒருமைத் தன்மையானது ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல் என்ற "ஒரே பிறப்பு" என்ற நேரடி அர்த்தம் தரும் *gennëthë* என்ற செயப்பாட்டு வினைக் கட்டுப்பாட்டின் வினையினால் முற்றிலுமாக நிலை நாட்டப் படுகின்றது ...
>
> "ஜலத்தினாலும் ஆவியினாலும்" பிறத்தல் என்ற ஒரே பிறப்பின் மூலமாகவே மனிதர் ஒருவர் ஆவிக்குரிய முறையில் ஒரே ஒரு தரமாகப் பிறக்கின்றார்."[1]

அதைப் பெற்றவர்கள் எல்லாரையும் பரலோக இராஜ்யத்திற்குள் கொண்டு வரக் கூடியதாக இருக்கிற இந்த ஒருமுறைப் பிறப்பே உலக முழுவதும் சென்று பிரசங்கிக்கும்படியாக இயேசு தம்மைப் பின்பற்றியவர்களுக்குக் கொடுத்ததாக இருக்கின்றது (மாற். 16:15, 16).

## மாற்கு 16:15, 16

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற். 16:15, 16) என்று அறிவுறுத்தினார். செய்யப்பட வேண்டிய எல்லாவற்றையும் நாம் தீர்மானிக்கும் பொழுது, இரட்சிப்பைப் பற்றி வேதாகமத்தில் உள்ள இந்தக் கூற்றும் இதற்கொத்த மற்ற கூற்றுகளும் தனித்தனியே அல்ல, ஒன்று கூட்டி ஆலோசிக்கப்பட வேண்டும். மனந்திரும்புதல் (லூக். 24:47) மற்றும் அறிக்கையிடுதல் (ரோமர் 10:9, 10) போன்ற மற்ற பதில்செயல்களும்,

அத்துடன் இயேசுவின் அடையாளத்துவம் மற்றும் இரட்சிப்பில் அவரது பங்குப் பணி ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல் ஆகியவைகளும் அவசிய மானவைகளாக உள்ளன (யோவா. 8:24).

மாற்கு 16:15, 16 இல்லாமலும் கூட இரட்சிப்பானது கற்றுக் கொள்ளப்பட முடியும். இருப்பினும், இந்த வசனப் பகுதியைப் புரிந்து கொள்ளுதலானது, இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் என்னென்ன செய்ய வேண்டுமென்று தேவன் கேட்கின்றாரோ அவைகளை ஒன்று கூட்டிப் புரிந்து கொள்ள உதவுகின்றது.

நல்லதொரு காரணத்திற்காகவே NASB வேதாகமத்தில் மாற்கு 16:16, ''விசுவாசமுள்ளவனானவன் மற்றும் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த மொழிபெயர்ப்பானது கிரேக்கப் பயன்பாட்டின் ஆதரவைப் பெற்றுள்ளது. "விசுவாசமுள்ளவனானவன்" மற்றும் "ஞானஸ்நானம் பெற்றவன்" என்ற இரு சொற்றொடர்களுமே "இரட்சிக்கப்படுவான்" என்ற பிரதான வினைச் சொல்லினால் தொடரப்படுகின்ற பெயரெச்சங்களாக கிரேக்க மொழியில் உள்ளன. இந்தப் பெயரெச்சங்கள் பிரதான வினையின் செயல்பாட்டிற்கு முன்பே நடக்கின்றவை என்பதைக் குறிப்பிடுவதே இதன் தனிச் சிறப்பாக உள்ளது, ஆனால் இந்தப் பெயரெச்சம் என்பது பிரதான வினையின் செயல்பாட்டிற்கு அடுத்து வரும் செயல் என்று ஒருக்காலும் குறிப்பிடப் படுவதில்லை. இந்த வசனப் பகுதியில், ''விசுவாசித்து'' மற்றும் ''ஞானஸ்நானம் பெற்று'' என்றுள்ள பெயரெச்சங்கள், இவ்விரண்டு செயல்களும், "இரட்சிக்கப்படுவான்" என்ற பிரதான வினையின் செயல் பாட்டிற்கு முன்னதாகவே நடக்கின்றனவாய் உள்ளன என்பதையே சுட்டிக்காட்டுகின்றது, இது ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாக விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று இயேசு கூறியதாகவே அர்த்தப்படுகின்றது.

நிகழ்காலப்பெயரெச்சம் மற்றும் aorist பெயரச்சம் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டும் வகையில் C. F. D. Moule அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> பெயரெச்சம் மற்றும் பிரதான வினை ஆகியவற்றில் முறையே குறிப்பிடப்பட்ட செயல்பாடுகளின் தொடர் நிகழ்ச்சியாக ஒரு முடிவை சந்தர்ப்பப் பொருளானது கோருகின்ற பொழுது, பெரும்பாலும் இது ஒரு நிகழ்காலப் பெயரெச்சமாக மாறுகின்றது என்பது ஒரு செயலுடன் பிரதான வினையின் செயலானது (குறைந்தது ஒரு பகுதியாவது) ஒன்றாய் நிகழ்கின்றது என்பதை மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டுகின்ற அதே வேளையில், Aorist பெயரெச்சமானது பிரதான வினைச் சொல்லில் குறிப்பிடப்பட்டதற்கு முன்பு நடைபெறும் செயலைக் குறிக்கின்றது.[2]

மேற்கண்ட விதியைப் புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஆதாரமற்ற விதிவிலக்குகளின் இரு நிகழ்ச்சிகளால் காண்பித்த பிறகு, Moule அவர்கள், ''புதிய ஏற்பாட்டில் மற்ற விதிவிலக்குகள் உள்ளனவா? நான் அப்படி

ஒன்றையும் அறியவில்லை" என்று கூடுதலாகக் கூறினார்.[3]

''தொடர்ந்து நிகழும் செயல்பாட்டின் தெளிவானதொரு aorist [பெயரெச்சம்]'' பற்றி ஜேம்ஸ் H. மௌல்ட்டன் அவர்கள் எழுதினார் (அதாவது, பெயரெச்சமானது சந்தேகமின்றி சார்ப்பாய்ப் பேசப்படுமளவு பிரதான வினையைத் தொடர்ந்து வருகின்றது என்று தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்ற நிகழ்ச்சி), அவர் கூறியபடி, ''... மற்றும் நான் நிர்வகித்துள்ள இது புதிய ஏற்பாட்டிலோ அல்லது புறம்பாகவோ இணையாக்கப் பட்டிருக்கவில்லை.''[4]

ஜோசப் ஸ்மித் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டபடி,[5] மேக்ஸ்மிலியன் செர்விக் அவர்கள், மோல்ட்டானால் கூறப்பட்டதற்குச் சொல்லுக்குச் சரியான அடிக்குறிப்பு ஒன்றைக் கொடுத்தார்.[6]

> ... ஒரு தொடர் செயல்பாட்டிற்கான பெயரெச்சத்தின் பயன்பாட்டினைப் பெரும்பாலும் உலகளாவிய முறையில் புறக்கணித்தலுக்கான முக்கிய காரணமாக ஒரு தொடர் செயல்பாட்டினைத் தவிர வேறு எந்தக் கருத்தையும் புதிய ஏற்பாட்டிலோ அல்லது வேறு எங்குமோ முன்மாதிரி ஒன்று காணப்படுவதில்லை என்ற உண்மையும், மற்றும் அந்த அடிப்படையில் அப்படிப்பட்ட பயன்பாடு ஒன்று ஒப்புக் கொள்ளப்பட முடியாது என்ற உண்மையும் உள்ளன. "இலக்கணத்தின் எல்லா விதிகளும் மற்றும் நிச்சயமான மொழியின் எல்லாப் புரிந்து கொள்ளுதல்களும் விட்டுக் கொடுத்து விட முடியாதவைகளாயிருக்கின்றன'' (இதை இவருடன் ஸ்கிமீடெல், மௌல்ட்டன் மற்றும் ராபின்ஸன் ஆகியோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர்).

புகழ் பெற்ற A. T. இராபர்ட்ஸன் அவர்கள் aorist பெயரெச்சத்தினால் தொடர் செயல் விளக்கப்படுவதில்லை என்ற தலைப்பின் கீழ், "திருப்திகரமான உதாரணங்கள் எடுத்துக்காட்டப்பட்டிராதிருப்பினும், சில எழுத்தாளர்கள் இது சாத்தியமானதாக உள்ளது என்று கருத்துக் கொண்டுள்ளனர்"[7] என்று எழுதினார்.

பெயரெச்சத்தின் செயல்பாடானது ஒருக்காலும் பிரதான வினைச் சொல்லைப் பின்பற்றுவதில்லை என்ற மிகச் சிறந்த இலக்கண அறிஞர்களின் முடிவானது, கிரேக்க இலக்கணம் "விசுவாசித்து" அல்லது "ஞானஸ்நானம் பெற்று" என்பது "இரட்சிக்கப்படுவான்" என்பதைத் தொடர அனுமதிக்க வில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ''இரட்சிக்கப்படுவான்'' என்பதற்குப் பிறகு ஞானஸ்நானத்தை வைப்பதானது "இலக்கணத்தின் எல்லா விதிகளையும், மொழியின் நிச்சயமான எல்லாப் புரிந்து கொள்ளுதலையும்'' மீறுவதாகின்றது. ஆகையால், சுவிசேஷத்தை விசுவாசிப்பதும் ஞானஸ்நானம் பெறுவதும் இரட்சிப்புக்கு முந்தியிருக்க வேண்டும் என்றே இயேசு அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும்.

கிரேக்க மொழியில் உள்ள இந்தக் கட்டமைப்பானது "இரட்சிக்கப் படுதல்''/''இரட்சிக்கப்படுவான்'' என்ற செயல்பாட்டிற்கு முன்னதாக

*சுவிசேஷத்தை விசுவாசித்தலும் ஞானஸ்நானம் பெறுதலும் அவசியம் என்ற கருத்தை ஏற்படுத்துகின்றது. ''ஞானஸ்நானம் பெறுதல்'' என்பது ''இரட்சிக்கப்படுவான்'' என்பதற்குப் பிறகு வைக்கப்பட வேண்டுமென்றால், "விசுவாசித்து" என்பதும் அவ்வாறே வைக்கப்பட வேண்டும், ஏனெனில் இவையிரண்டும் ஒரே வகையான வினைச் சொல்லாக* "and" *இணைப்புச் சொல்லினால் (கிரேக்கம்: Kai) இணைக்கப்பட்டுள்ளன. இரட்சிப்பை ஞானஸ்நானத்திற்குப் பின்பு வைப்பதற்குப் பதிலாக முன்பு வைக்க நாடுபவர்கள் இவ்வசனத்தின் கிரேக்க மொழிநடைக்கும் நமது கர்த்தருடைய போதனைக்கும் அநீதியிழைக்கின்றனர். இந்தக் காரணத்தினாலேயே, மாற்கு 16:16 வசனத்தில் கிரேக்க இலக்கணமானது* aorist *கொள்கைக்குச் சாத்தியமான விதிவிலக்காக அனுமதிப்பதில்லை என்று நாம் முடிவு செய்ய வேண்டும், இது ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று இயேசு கூறினார் என்பதையே அர்த்தப்படுகின்றது.*

*இவ்வசனத்தில் கிரேக்க மொழியில் உள்ள இன்னொரு கொள்கையும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விசுவாசமும் ஞானஸ்நானமும் தனித்தனியான, தொடர்பற்ற இருசெயல்கள் என்பதாகக் கருதப்பட வேண்டும் என்று இயேசு கூறவில்லை. ஒருவர், ''விசுவாசித்து'' என்ற செயல்பாட்டை முடித்துக் கொண்டு பிறகு "ஞானஸ்நானம் பெறுதல்" என்ற செயல்பாட்டை மேற்கொள்வதில்லை; கிரேக்க மொழிக் கட்டமைப்பானது இதை அனுமதிப்பதில்லை.*

*மாற்கு சுவிசேஷத்தின் மொழிபெயர்ப்பாளர் கையேடு என்ற நூலானது மாற்கு 16:16ஐப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது:*

> *''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்'': இரு பெயரெச்சங்களையும் ஆளுமை செய்கின்ற திட்டவட்டமான ஒருமைச் சுட்டுச் சொல்லானது எந்த மனிதர் இரட்சிக்கப்படுவார் என்று விவரிப்பதில் இரண்டு வினைச் சொற்களையும் இணைக்கின்றது, இந்த எழுவாய் வாக்கியமானது "ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி" என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.*[8]

*வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், இரு பெயரெச்சங்களுடன் ஒரு சுட்டுச் சொல் பயன்படுத்தப்படுவதென்பது இரு பெயரெச்சங்களின் செயல்பாடும் ஒன்றிணைக்கப்பட்ட, ஒரே வேளையில் நிகழ்வதாக உள்ளன. அவை தனித் தனியானவையல்ல என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.*

*''விசுவாசித்தல்'' மற்றும் ''ஞானஸ்நானம் பெறுதல்'' என்ற பெயரெச்சங்களின் செயல்பாடுகளைத் தனித்தனியானவைகளாக இயேசு அர்த்தப்படுத்தியிருந்தால், அவர் ஒவ்வொரு பெயரெச்சத்துடனும் ஒரு சுட்டுச் சொல்லைப் பயன்படுத்தியிருப்பார், ஆனால் அவர் இதைச் செய்யவில்லை. அவர் இரு பெயரெச்சங்களுக்கும் ஒரே சுட்டுச் சொல்லையே பயன்படுத்தினார், இவ்விதமாகவே செயல்பாட்டில் அவை இணைந்துள்ளதைச் சுட்டிக்காட்டினார். இந்தக் காரணத்தினாலேயே,*

இவ்வசனப் பகுதியானது “ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி இரட்சிக்கப்படுவார்” என்றோ அல்லது “ஞானஸ்நானம் பெறுகையில் விசுவாசிப்பவர்” இரட்சிக்கப்படுவார் என்றோ மொழிபெயர்க்கப்பட முடியும்.

இவ்வசனப் பகுதியில் இயேசு ஞானஸ்நானத்தையும் விசுவாசத்தையும் பிரிக்க முடியாத வகையில் இணைத்து, ஞானஸ்நானத்தை இரட்சிப்புக்கு முன்பு விசுவாசத்தினால் தூண்டடப்படுவதாக வைத்தார். இரட்சிப்பு என்பது விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமோ அல்லது ஞானஸ் நானத்தின் அடிப்படையில் மட்டுமோ அமைவதில்லை; ஞானஸ்நானம் பெறுகையில் சுவிசேஷத்தில் விசுவாசமுள்ளவராயிருக்கும் நபர்தான் இரட்சிக்கப்படுவார்.

சுவிசேஷம் என்பது பிரசங்கிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதைக் கவனியுங்கள் (மாற். 1:15); ஆகையால், சுவிசேஷம் என்பதே விசுவாசிக்கப்பட வேண்டியதாகும் (மாற். 16:15). சுவிசேஷம் என்பது இயேசுவே மேசியா, அவரே சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்து மற்றும் கர்த்தராக உயர்த்தப்பட்டவர், அவர் நமது பாவங்களில் இருந்து நம்மை மீட்டு, பரலோகத்தில் நமக்கு நித்திய ஜீவனைத் தர வல்லவர் என்ற உண்மையை உள்ளடக்குகின்றது (1 கொரி. 15:1-4). நம் பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதை சுவிசேஷம் உள்ளடக்கியிருக்கிறது என்றால், ஞானஸ்நானம் பெறுகின்றவர் தாம் ஞானஸ்நானப் படுத்தப்படுகையில், இயேசுவின் மரணமானது தம்மைத் தமது பாவங்களில் இருந்து இரட்சிக்கின்றது என்று விசுவாசிக்க வேண்டும். இது நடைபெறவில்லை யென்றால், அவர் ஞானஸ்நானம் பெறுகையில், இவ்வசனப் பகுதியின் கிரேக்க மொழிக் கட்டமைவில் தெளிவாய்ச் சுட்டிக்காட்டப்படும் வேண்டுகோளான ஞானஸ்நானம் பெறுகையில் சுவிசேஷத்தை விசுவாசித்தல் என்பதைக் கொண்டிருப்பதில்லை.

இரட்சிப்புக்கு அவசியமான எல்லா வேண்டுகோள்களும் மாற்கு 16:15, 16ல் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன, ஏனெனில் சுவிசேஷத்தில் எல்லா வேண்டுகோள்களும் அடங்கியுள்ளன. இருப்பினும், எல்லா வேண்டுகோள்களும் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை; சுவிசேஷத்தின் முழுச் செய்தியும் இவ்வசனத்தில் கூறப்படவில்லை. சுவிசேஷத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற எல்லாவற்றையும் புரிந்து கொள்வதற்கு வேதவசனங்களின் மற்ற கூற்றுகள் அவசியமானவைகளாய் இருக்கின்றன; ஆகையால், ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி இரட்சிக்கப் படுவதற்குத் தேவையான எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேதவசனத்தின் மற்ற கூற்றுகள் தேவைப்படுகின்றன.

## யோவான் 3:16, 36

“தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான்” (யோவா. 3:16) மற்றும் “விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்” (மாற். 16:16) என்று உரைத்தவற்றில் இயேசு எவ்விதத்திலும் தமக்குத்தாமே

முரண்படவில்லை. நித்திய ஜீவன் என்பது விசுவாசித்தலுடனும், கடந்த காலப் பாவத்திலிருந்து மீட்பு என்பது ஞானஸ்நானத்துடனும் சரியாக இணைவு பெற்றுள்ளது. விசுவாசித்தல் என்பது ஒருவருடைய வாழ்வில் தொடர்ச்சியான ஒரு அம்சமாகவும், விசுவாசத்தின் விளைவாக ஞானஸ்நானம் என்பது ஒருமுறை நடக்கும் நிகழ்ச்சியாகவும் (எபே. 4:5) உள்ளது.

"விசுவாசிக்கிறவன்" (யோவா. 3:16, 36) என்பது கிரேக்க மொழியில் நிகழ் காலப் பெயரெச்சமாக உள்ளது. கிரேக்க இலக்கணமானது, ''நிகழ்காலப் பெயரெச்சம் என்பது 'தொடர்' செயல்பாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.''[9] மற்றும் "நிகழ்காலப் பெயரெச்சமானது நிகழ்கால முற்றாவினை போன்ற காலமற்றதும், தொடர்ந்து இருப்பதுமாக உள்ளது"[10] என்று கூறுகின்றது.

இயேசுவைத் தொடர்ந்து விசுவாசிப்பதினால் அவருக்குத் தொடர்ந்து கீழ்ப்படியும்படி தூண்டப்படுபவர்களுக்கே நித்திய ஜீவன் கொடுக்கப்படும் என்று இது அர்த்தப்படுகின்றது (லூக். 6:46; மத். 7:21; 28:20). இப்படிப்பட்ட கீழ்ப்படிதலின்றி ஒருவர் ஜீவனைக் காண முடியாது, ஆனால் அவர் மீது தேவ கோபம் தங்கியிருக்கும் (யோவா. 3:36). "விசுவாசியாதவன்" (யோவா. 3:36; ''கீழ்ப்படியாதவன்'' என்று NASB, RSV இன்னும் மற்ற மொழிபெயர்ப்புகளில் சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்பது "கீழ்ப்படியாத", "கீழ்ப்படியாதிருக்கின்ற" அல்லது "கீழ்ப்படிதலற்ற" என்று அர்த்தப்படும் *apeitho* என்ற கிரேக்க வார்த்தையாகும், இது இவ்வாறே ரோமர் 2:8; 10:21; 1 பேது. 2:7, 8; 3:1, 20; 4:17 ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்டதொரு கூற்றானது ஒருவர் இயேசுவால் தரப்படும் நித்திய ஜீவனைப் பெறு முன்பு விசுவாசமானது கீழ்ப்படிதலுடன் இணைந்திருக்க வேண்டும் என்று காண்பிக்கின்றது. இயேசுவைப் பொறுத்தமட்டில் ஞானஸ்நானம் என்பது நித்திய ஜீவனைக் கொண்டு வருகின்ற கீழ்ப்படிதலின் ஒரு பகுதியாக உள்ளது (எபி. 5:9; இ.வ. மாற். 16:16).

கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதங்களுக்குள்[11] ஒருவரைக் கொண்டு வருவதற்கு ஞானஸ்நானம் அவசியம் இல்லை என்று சிலர் மனநிறைவு கொண்டுள்ளனர், ஏனென்றால் விசுவாசம் மட்டுமே ஒருவரைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறதென்று அவர்கள் நம்புகின்றனர். அவர்கள் "on" (கிரேக்க வார்த்தை *eis* இது பெரும்பாலான நிகழ்வுகளில் " into" என்று அர்த்தப்படுகின்றது, மற்றும் எல்லா நிகழ்வுகளிலும் அந்த அர்த்தத்தின் அதே கருத்தினைத் தக்க வைத்துக் கொள்கின்றது) என்பது யோவான் 3:16, 36ல் உள்ளது போன்ற "விசுவாசித்து" என்ற சொற்றொடரில் கிறிஸ்துவுக்குள் விசுவாசம் கொள்வதை அர்த்தப்படுத்துகின்றது என்று திருப்திப்பட்டுக் கொள்ளுகின்றனர். அந்த "விசுவாசித்து" என்பது இது போன்ற பல வசனப் பகுதிகளில் தொடர் செயல்பாட்டை விளக்கும் நிகழ்காலப் பெயரெச்சமாக (ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுள்ளபடி) இருப்பதே இதன் பிரச்சனையாக உள்ளது. ஒருவர் இயேசுவுக்குப் புறம்பே இருந்து கொண்டு அவ"ரில்", *eis* விசுவாசம் கொள்வதினால் இயேசுவுக்குள் தொடர்ந்து வர முடியுமா?

*அப்படியொரு மாறுபடும் நிகழ்ச்சி முடியாததாக இருக்கிறது. "விசுவாசித்து" என்பது பெரும்பாலும் ஒருவர் இயேசுவினுடைய சித்தத்திற்குப் பதில்செயலாகத் தமது நம்பிக்கையைத் தொடர்ந்து இயேசுவின்மேல் வைத்தல் என்றே அர்த்தப்படுகின்றது.*

*ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்விதத்தில் பிரவேசிக்கின்றார் என்பதை எடுத்துரைப்பதற்கு, "ஞானஸ்நானம் பெறுதல்" என்பதைப் பவுல், aorist indicative ஆகவே பயன்படுத்தினார் (ரோமர் 6:3; கலா. 3:27). Aorist என்பது குறிப்பிட்ட செயல்பாடாக இருப்பதால், இது அந்த ஞானஸ்நானத்தையே சுட்டிக்காட்டுகின்றது, அது நிறைவாகும்போது, அந்த நிகழ்வானது விசுவாசியைக் கிறிஸ்துவு"க்குள்", eis வைக்கின்றது. விசுவாசித்தல் மட்டும் ஒருவரைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குவதில்லை, அல்லது ஞானஸ்நானம் மட்டும் அதைச் செய்வதில்லை. ஞானஸ்நானம் என்பது விசுவாசிக்கும் நபரை, இரட்சிப்பு மற்றும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களைப் பெறும் இடமான கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகின்றது.*

*''விசுவாசித்தல்'' என்பது eis என்ற முன்னிடைச் சொல்லுடன் பயன்படுத்தப்படும் பொழுது, அது ஒருவரைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது என்று சிலர் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர், ஆனால் அப். 2:38ல் உள்ள அந்த eis என்பது ஒருவர் ஞானஸ்நானம் பெறும்பொழுது பாவமன்னிப் பிற்குள் பிரவேசிக்கின்றார் என்று அர்த்தப்பட முடியாது. விசுவாசித்த யூதர்களிடத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று, eis (*"into"* என்பது பல மொழிபெயர்ப்புகளில் *"for"* என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது) ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு கூறினார் (அப். 2:38). இருப்பினும், eis என்பது ஒருவர் கிறிஸ்துவுக்"குள்" விசுவாசித்தல் (யோவா. 3:16, 36) என்று அர்த்தப்படுத்துவதாக ஒருவர் உறுதிப்படுத்த விரும்பினால், பின்பு ஏன் அப். 2:38ல் eis என்பதற்கு* "into" *"க்குள்" என்ற அர்த்தம் தரக்கூடாது? இது, பேதுரு ஒவ்வொருவரும் பாவ மன்னிப்பிற்"குள்" ஞானஸ்நானம் பெறும்படி போதித்தார் என்று அர்த்தம் தருவதாகி விடும்.*

*"விசுவாசித்து" என்பது ஒரு செயல்பாட்டின் வினைச் சொல் அல்ல. அதனால் தான் eis என்பது ''விசுவாசித்து'' என்பதுடன் இணைந்து வருகையில் அது* "into" *"க்குள்" என்பதற்குப் பதிலாக,* "on" *"வில்" என்று மொழிபெயர்க்கப்படுகின்றது.*

## *முடிவுரை*

*இயேசு தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பிறகு, தம்முடைய சீஷர்களை உலக முழுவதற்கும் சென்று சகல ஜாதியாரையும் சீஷர்களாக்கும்படி அனுப்பினார். இந்த முதல் செய்தியாளர்கள் இயேசுவும் யோவானும் போதித்திருந்த பாவமன்னிப்புக் கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஆயத்த ஞானஸ்நானத்திற்கு நன்கு பழக்கப்பட்டிருந்தனர். இந்த ஞானஸ்நானமானது கிறிஸ்துவின் இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய கூறான கிறிஸ்துவின் சபைக்குள்*

ஞானஸ்நானம் பெறுவதற்கு மக்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தது.

பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் என்பது முதன் முதலாக மனம் மாறிய இவர்களுக்குப் புதியதாக இருந்ததில்லை, ஏனெனில் அவர்களில் பலர் ஆயத்த ஞானஸ்நானம் பற்றி அறிந்திருந்தனர். கிறிஸ்துவின் அதிகாரம் மற்றும் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள் ஞானஸ்நானம் என்பது மட்டுமே புதிதாய் இருந்தது. இயேசுவிடமிருந்து அறிவுரை பெற்று மற்றும் இயேசு போதித்தவற்றை நினைப்பூட்டும்படியாகப் (யோவா. 14:26) பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்று (அப். 2:4) ஒரு குறுகிய காலத்திலேயே அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை முதலாவது எருசலேமில் பிரசங்கித்து, பின்பு உலக முழுவதிலும் அதைப் பிரசங்கித்தார்கள்.

---

குறிப்புகள்

[1]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 257-58. [2]C. F. D. Moule, *An Idiom-Book of New Testament Greek,* 2d ed. (Cambridge: Cambridge University Press, 1953), 99. [3]Ibid., 100. [4]James H. Moulton, *A Grammar of New Testament Greek,* vol. 1, 3d ed., (Edinburgh: T. & T. Clark, 1906), 133. [5]Maximilian Zerwick, *Biblical Greek,* trans. Joseph Smith (Rome: n.p., 1963), 88. [6]See Moulton, 134. [7]A. T. Robertson, *A Grammar of the Greek New Testament,* 4th ed., (Nashville: Broadman Press, 1923), 861. [8]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook on the Gospel of Mark* (London: United Bible Societies, n.d.), 511. [9]Moule, 99. [10]Robertson, 891.

[11]இந்த ஆசீர்வாதங்கள், ஒரு "புது சிருஷ்டி"யாக்கப்படுதல் (2 கொரி. 5:17) மற்றும் "நமது அக்கிரமங்களுக்கு மன்னிப்பு" கொடுக்கப்படுதல் (எபே. 1:7), "இரட்சிப்பு" (2 தீமோ. 2:10), "நித்திய ஜீவன்" (1 யோவா. 5:11), மற்றும் "ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்" (எபே. 1:3) ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

# பேதுரு ஞானஸ்நானத்தைப் போதித்தார்

*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார் (அப். 2:38).*

*பேதுரு தமது சகோதரரான அந்திரேயாவினால் இயேசுவினிடம் கொண்டு வரப்பட்டார் (யோவா. 1:40, 41). யோவானின் சீஷர் என்ற வகையில் (யோவா. 1:35) அந்திரேயா பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஆயத்த ஞானஸ்நானம் பெற்றிருந்தார். அவர் இயேசுவைப் பற்றி யோவான் மூலமாக அறிந்த பிறகு (யோவா. 1:35-42) இயேசுவைச் சந்திக்கும்படி பேதுருவை அழைத்து வர மிகவும் ஆவலுள்ளவராயிருந்தார்; பெரும்பாலும் அவர் (அந்திரேயா) யோவானின் செய்தியைப் பேதுருவுடன் பகிர்ந்திருப்பார். அப்பொழுது பேதுரு பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்திற்குப் பழக்கமானவராய் இருந்திருப்பார். அவர் யோவான் பிரசங்கித்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்திருக்கலாம் (லூக். 3:3). இயேசுவைப் பின்பற்றியவர்கள் ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் அவரது சீஷர்களா னார்கள் (யோவா. 4:1). பேதுரு இயேசுவின் சீஷரானபோது அநேகமாக ஞானஸ்நானம் பெற்றிருப்பார் (லூக். 6:13, 14).*

## பேதுரு ஞானஸ்நானத்தைப் போதித்தார்

*அப்போஸ்தலர்கள் மற்றும் இயேசுவின் சீஷர்கள் மத்தியில் பேதுரு மிகவும் அறியப்பட்டவராக நின்றிருந்தார். அப்போஸ்தலர்களின் பெயரட்டவணைகள் எல்லாவற்றிலும் (மத். 10:2; மாற். 3:16; லூக். 6:14; அப். 1:13) அவரது பெயர் முதலில் தோற்றமளிப்பது குறிப்பிடத் தக்கதாகும். இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்குப் பின்பு அவர் (பேதுரு) இயேசுவின் பின்பற்றாளர்கள் மத்தியில் முன்னோடித்துவத்தை உடனடியாக எடுத்துக் கொண்டாலும் (அப். 1:15; 2:14, 37), இந்த உண்மையானது பேதுரு மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் கூடுதலான அதிகாரம் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. இது சபையின் தொடக்க நாட்களில் அவருக்கு இயேசு ஒரு முன்னோடித்துவப் பணிப்பொறுப்பைக் கொடுத்தார் என்று மட்டுமே அர்த்தப்படுகின்றது. அவரும் மற்ற அப்போஸ்தலர்களும் எதைக்*

*கட்டி மற்றும் கட்டவிழ்ப்பார்களோ, அது பரலோகத்திலும் "கட்டப்படும்" மற்றும் "கட்டவிழ்க்கப்படும்" என்று இயேசு கூறினார் (மத். 16:19; 18:18). இவ்வசனங்களில் NASB மொழிபெயர்ப்பானது கிரேக்க மொழியின் நிறைவுச் செயப்பாட்டுப் பெயரெச்சத்தை உண்மை நிறைவுடன் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது, இது அப்போஸ்தலர்கள் தங்கள் சொந்தத்தில் கட்டவோ அல்லது கட்டவிழ்க்கவோ மாட்டார்கள், ஆனால் ஏற்கனவே பரலோகத்தில் கட்டி மற்றும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளவற்றையே அவர்கள் கட்டி மற்றும் கட்டவிழ்ப்பார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.*

*இயேசு தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அப்போஸ்தலர்களை அனுப்பிய பொழுது, இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறியதைப் பேதுரு அங்கிருந்து கேட்டார், இயேசு அவர்களிடத்தில்,*

> *வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து (மத். 28:18, 19).*
>
> *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் (மாற். 16:16).*
>
> *அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப் படவும் வேண்டியது (லூக். 24:47) என்று கூறினார்.*

*இயேசு கூறியிருந்த எல்லாவற்றையும் நினைப்பூட்டப்படவும் (யோவா. 14:26) மற்றும் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்படவும் (யோவா. 16:13) உதவி செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வாக்குத் தத்தத்திற்காக (லூக். 24:49; அப். 1:4-8) மற்ற அப்போஸ்தலர்களுடன் பேதுருவும் எருசலேமில் காத்திருந்தார். அவர்கள் இயேசுவைப் பற்றிய தங்கள் சாட்சியத்தை எருசலேமில் தொடங்கி பிறகு உலகின் மற்ற பகுதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது (அப். 1:8). இவ்வழி முறையில் ஆயத்தம் செய்யப்பட்டிருந்த பேதுரு (மற்றும் பிற அப்போஸ்தலர்கள்) இயேசுவின் போதனைகளை மற்றவர்களுக்கு மிகச் சரியாக வெளிப்படுத்த முடிந்தது.*

## எருசலேமில்

*பெந்தெகொஸ்தே நாளன்று (அப். 2:1), எருசலேமில் (அப். 2:5), பேதுரு உலக வரலாற்றிலேயே முதன் முதலாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பாவமன்னிப்பைப் பற்றி எருசலேமில் பிரசங்கித்தார் (லூக். 24:47). இந்த*

*சுவிசேஷமானது பிற்பாடு உலகின் மற்ற பகுதிகளில் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது (அப். 1:8). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்றிருத்தல் பற்றி இயேசு ஏற்படுத்தியிருந்த கூற்றானது (மத். 28:18), அவர் (இயேசு) ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் (அப். 2:36) தம்முடைய பணிப் பொறுப்பைத் துவங்கும் இடமாகிய தேவனுடைய வலது பாரிசத்திற்கு வல்லமையில் உடனடியாக உயர்த்தப்படுவதை அர்த்தப்படுத்தியது (அப். 2:35; 1 பேது. 3:22) என்று பேதுரு புரிந்து கொண்டிருந்தார். பேதுரு தமது முதல் பிரசங்கத்தில் தம் உரையைக் கேட்ட யூதர்கள் இந்த உண்மைகளைப் புரிந்து கொள்ளும்படியும் மற்றும் அவர்கள் தங்கள் மேசியாவைச் சிலுவையில் அறைந்த குற்றம் செய்திருந்ததை உணரும்படியும் (அப். 2:33-36) இணங்கச்செய்ய வகை தேடினார். இயேசுவே ஆண்டவர் மற்றும் கிறிஸ்து என்று கூறி தம்முடைய பிரசங்கத்தை முடித்தார்.*

*இந்த அறிவிப்பு அவர்களின் இருதயத்தை ஆழமாகக் குத்தியது என்பது இயேசு ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் உள்ளார் என்று பேதுருவின் அறிவிப்பை அவர்கள் விசுவாசித்தனர் என்று சுட்டிக்காட்டுகின்றது. இயேசுவே ஆண்டவர் மற்றும் மேசியா என்று விசுவாசித்தலானது அவரது இரத்தத்தின் மூலமாக (எபி. 10:19, 20) அவருடைய நாமத்திலே (அப். 4:12) பாவமன்னிப்பை நாடுவதையும் எஜமானர் மற்றும் அரசர் (லூக். 6:46) என்ற வகையில் அவருக்கு ஒப்புக் கொடுத்தலையும் அர்த்தப்படுத்துகின்றது.*

### *புதிய வழி*

*''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப். 2:38) என்று பேதுரு கூறியதன் மூலம் அவர் பாவமன்னிப்புக்கான இந்தப் புதிய வழியை முன் வைத்தார்.* NIV*யின் முதல் பதிப்பானது, "உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக நீங்கள் ஒவ்வொருவரும் மனந் திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுங்கள். மற்றும் நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்று கூறுகின்றது.*

## *பாவமன்னிப்பு*

*சிலர், ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்கான முன் தேவையாய் இருப்பதில்லை என்று போதித்துள்ளனர், மற்றும் சிலர் ஒருவர் தாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது தமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்று புரிந்து கொள்வது அவசியமில்லை என்று உறுதிப்படுத்தியுள்ளனர். முந்தின கண்ணோட்டமானது விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்ற இறையியல் நோக்கினால் எடுக்கப்படுகின்றது. பிந்தியதானது, ஒருவர் தம் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவே ஞானஸ்நானம் பெறுவதினால் அவர் ஒரு கட்டளைக்குப் பதில் வாக்குத்தத்தத்திற்குக் கீழ்ப்படியவே முயற்சி செய்கின்றார் என்ற இறையியலின் அடிப்படையில்*

அமைந்துள்ளது.[1] இந்தக் காரணத்திற்காகவே, ஒருவர் தாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது தமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வது அவசியமில்லை என்று போதிக்கப்படுகின்றது.

ஒருவர் தம் சரீரத்திலிருந்து அழுக்கை நீக்கும் அதே வழிமுறையில் தண்ணீரினால் தமது பாவங்களைக் கழுவ முயற்சி செய்தால், அவர் ஞானஸ்நானத்தை தமது பாவங்களைக் கழுவும் ஒரு செயலாகவே ஏற்படுத்த நாடுவார் - இது இரட்சிக்காது என்று வேதாகமம் போதிக்கின்ற ஒரு செயல் வகையாகும் (எபே. 2:8). இதற்கு மாறாக, ஒருவர் இயேசுவின் இரத்தம் தம் பாவங்களைக் கழுவும் என்ற தமது விசுவாசத்தினால் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தாரென்றால்,[2] அவரது ஞானஸ்நானம் நீதியின் கிரியையாய் இருப்பதில்லை (தீத்து 3:5), ஆனால் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய தேவனுடைய கிரியையின் மேல் விசுவாசம் கொண்ட ஒரு செயல்பாடாக இருக்கும் (கொலோ. 2:12). இந்த நிலைப்பாட்டிலிருந்து வருகின்ற ஞானஸ்நானமானது ஒரு மனிதர் தம் பாவங்களை நீக்குவதற்கான செயல்பாடாக இருப்பதில்லை, ஆனால் அவர் தம் பாவங்களை நீக்குவதற்குச் சுத்திகரிக்கும் வல்லமையுள்ள இயேசுவின் இரத்தத்தின்மீது கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்ததா யிருக்கும்.

## இயேசுவின் நாமத்தில் மன்னிப்பு

பேதுருவின் பிரசங்கித்தலினால் கொண்டு வரப்பட்ட இயேசுவின் மேலுள்ள விசுவாசமானது மக்களை “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்ற கேள்வியைக் கேட்கும்படி தூண்டிற்று. அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று பேதுரு கூறினார். அவரது வசனத்தை ஏற்றுக் கொள்ளுதல் (அப். 2:41) என்பது அவர்கள் இயேசுவை மேசியா என்று ஒப்புக் கொண்டதையும், தங்கள் வழிகளைச் சீர்ப்படுத்துவதையும், மற்றும் பாவமன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுதலையும் அர்த்தப்படுத்திற்று.

“மனந்திரும்புதல்” என்றால் அவர்கள் தங்கள் பாவங்களே தங்களின் பிரச்சனையாயிருந்தது என்று உணர்வு பெற வேண்டியிருந்தது என்று அர்த்தப்படுத்தியது, மற்றும் “பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுங்கள்” என்பது மனந்திரும்பி ஞானஸ் நானம் பெறுபவர்களுக்கு இயேசுவிடமிருந்தே சுத்திகரித்தல் வந்தது என்பதை அவர்கள் உணர வேண்டும் என்றும் அர்த்தப்படுத்திற்று. புதிய ஏற்பாட்டில் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எவரும் இயேசுவினிடத்தில் முதன்முதலாக மனந்திரும்பி இவர்களின் புரிந்து கொள்ளுதலில் இருந்து மாறுபாடான வகையில் வேறொரு புரிந்து கொள்ளுதலைப் பெற்றிருந்ததாகக் காண்பிக்கப்படவில்லை. இவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டவைகளே தொடர்ந்து வந்த மற்றவர்களும் கேள்விப்படும்படி பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது (லூக். 24:47), இது இந்த செய்தியானது எடுத்துச்

செல்லப்படும் இடங்கள் எல்லாவற்றிலும் மன்னிப்புக்கு இதே வேண்டுகோள்களே எழுப்பப்படும் என்று அர்த்தப்படுத்துகின்றது.

மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய இரண்டுமே "பாவங்களின் மன்னிப்புக்கானவைகளாகும்." பேதுரு, "உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி மனந்திரும்புங்கள், மற்றும் உங்கள் பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டிருப்பதனால் ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று கூறவில்லை. "பாவ மன்னிப்புக்கென்று" என்பது "மனந்திரும்புதல்" மற்றும் "ஞானஸ்நானம் பெறுதல்" ஆகியவற்றுடன் சமமாகவே தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. மனந்திரும்புதலுடன் இணைந்துள்ள அதே நோக்கமானது ஞானஸ்நானத்துடனும் இணைந்துள்ளது. அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி மனந்திரும்ப வேண்டியிருந்ததென்றால், அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெறவும் வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப் பட்டிருந்ததால் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்ததென்றால், அவர்கள் தங்கள் பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டிருந்ததால், மனந்திரும்ப வேண்டியிருந்தது என்றும் அர்த்தமாகி விடும். "மற்றும்" என்ற இணைப்புச் சொல்லானது "பாவமன்னிப்பு" என்ற நோக்கத்திற்காக "மனந்திரும்புதல்" மற்றும் "ஞானஸ்நானம் பெறுதல்" ஆகியவற்றைச் சமமாக இணைக்கின்றது. அவர்கள் ஒரு நோக்கத்திற்காக மனந்திரும்பி, வேறொரு நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெறக் கூடாதிருந்தது; மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய இரண்டுமே ஒரே நோக்கத்திற்கானதாகவே இருந்தது.

''உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி'' (''உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குள்ளாக" என்ற நேரடிப் பொருள் கொண்ட) என்ற சொற்றொடரானது "இரு பிரதான வினைகளையுமே மாற்றியமைக்கின்றது; உங்கள் பாவங்களிலிருந்து திரும்புங்கள் மற்றும் ஞானஸ்நானம் பெறுங்கள்''[3] என்பதாக நியூமன் அவர்களும் நிடா அவர்களும் எழுதினார்கள்.

"பாவமன்னிப்புக்கென்று" என்ற சொற்றொடரில் உள்ள "என்று" என்ற சொல்லானது *into* என்ற அடிப்படை அர்த்தம் தரும் *eis* என்ற கிரேக்க வார்த்தையாக உள்ளது. கல்வியறிவின் கனமானது இந்த வசனப் பகுதியில் *eis* என்பது "ஒரு கண்ணோக்குடன், அல்லது விளைவினால் - அதாவது நிறைவான அல்லது தொடர்ந்து வரும்"[4] என்று மிகச் சரியாக ஆதரிக்கின்றது.

Oepke அவர்கள் *eis* (அப். 2:38)ஐ ''தொடர்ந்து வரும் மற்றும் நிறைவான" என்ற தலைப்பின் கீழ் அட்டவணைப் படுத்தினார். அவர், "இந்த முன்னிடைச் சொல்லானது ஒரு குறிப்பிட்ட முடிவை நோக்கிய செயல்பாட்டின் இலக்கைக் குறிக்கின்றது" என்று எடுத்துரைத்தார். பிற்பாடு அவர், "*eis* என்பதின் நிறைவான விசையானது இம்முன்னிடைச் சொல்லின் விளக்கமானது சுயாதீனமான வினை அடைவிளக்கமொன்றின் முன்னிடை விளக்கத்துடன் இணையுமளவுக்கு அதிகரித்தது'' என்றும் கூடுதலாகக் கூறினார். இதன் மற்ற எடுத்துக்காட்டுகளுடன் அவர், ''யோவான் ஞானஸ்நானம் கொடுக்கிறார், மற்றும் இயேசு பாவமன்னிப்புக்காகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்துகிறார் (மாற். 1:4; லூக். 3:3; மத். 26:28; இ.வ.

*அப். 2:38)''[5] என்ற கருத்தை முன் வைக்கின்றார்.*

*தாயெர் அவர்கள் eis என்பதை "ஒரு பொருளானது நிறைவேற்று வதற்காக தழுவப்படும் ஒரு முடிவு''[6] என்ற தலைப்பின் கீழ் ஞானஸ்நானத்துடன் இணைந்திருக்கின்றது என்ற நிலையில் வைத்தார். அவரது மொழியகராதியானது ஞானஸ்நானம் பற்றிய பாடம் ஒன்றை வாசகருக்குக் குறிப்பிடுகின்றது, அப்பாடத்தில் அப். 2:38 வசனமானது ''... பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படி'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.*[7]

*பாவெர், கிங்ரிச் மற்றும் டேங்க்கர் ஆகியோர் அப். 2:38ல் உள்ள eis என்பதை "ஒரு இலக்கைக் குறிப்பிடுவதற்கு" என்ற தலைப்பின் கீழும், ''இதற்காக என்ற நோக்கத்தைக் குறிப்பிடுவதற்கு'' என்ற துணைத் தலைப்பின் கீழும் அட்டவணைப்படுத்தினர். பின்பு அவர்கள் அச்சொற்றொடரை இவ்விடத்திலும் மற்ற வசனப் பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்ட வகையில் மொழிபெயர்த்தனர், "பாவமன்னிப்புக் கென்று, ஆகவே பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக மத். 26:28; இ.வ. மாற். 1:4; லூக். 3:3; அப். 2:38.''[8]*

*மத். 26:28ல் உள்ள ''பாவமன்னிப்புண்டாகும்படி'' என்ற சொற்றொடரானது ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய அதே சொற்றொடராகவே உள்ளது (மாற். 1:4; லூக். 3:3; அப். 2:38). இயேசு நம் பாவமன்னிப்புக்காக, அதைப் பெற்றுக் கொள்வதற்காக, "அதற்காக" (eis) மரித்தாரென்றால், நாம் அவர் நமக்களித்துள்ள மன்னிப்புக்காக, அதைப் பெற்றுக் கொள்வதற்காக, "அதற்காக" (eis) ஞானஸ்நானம் பெற வேண்டும், ஏனெனில் "பாவமன்னிப்புண்டாகும்படி" என்ற சொற்றொடரானது இந்த வசனப் பகுதிகளில் அதே கிரேக்க வார்த்தைகளை உள்ளடக்கியிருக்கின்றது. இருப்பினும், இச்சொற்றொடரில் உள்ள eis என்பது ஏனென்றால் என்று அர்த்தப்படுமென்றால், நமது பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டதால் நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று மட்டுமின்றி, நமது பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டதால் இயேசு தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் என்றும் அர்த்தமாகி விடும். இந்த விளக்கமானது அவரது மரணத்தை அர்த்தமற்ற இரத்தம் சிந்துதலாக்கி விடும், மற்றும் நமது பாவங்கள் ஞானஸ்நானத்திற்கு முன்பே மன்னிக்கப்பட்டு விட்ட தென்றால் ஞானஸ்நானம் என்ற செயலானது ஒரு வெறுமையான சடங்காச்சாரமாகி விடும். இயேசு ஒரு காரணத்திற்காக மரித்தார் என்பதாலே eis என்பதன் இந்தப் பயன்பாடானது குறிக்கோள் மற்றும் நோக்கம் ஆகியவற்றை விளக்குவதாய் இருக்க வேண்டும்.*

*இயேசு உணர்வுடன், அறிந்த நிலையில், மற்றும் பெரும் விருப்புடனேயே பாவமன்னிப்புக்''காக'' (eis) மரித்தார். அவர் தமது இரத்தத்தைப் பாவமன்னிப்பு''காக'' (eis) சிந்துவதை அறிந்து மற்றும் புரிந்திருந்தார்; ஆகையால், பாவமன்னிப்புக்"காக" (eis) நாம் ஞானஸ்நானம் பெறுகிறவர்களாயிருந்தால், நாம் எதற்காக ஞானஸ்நானம் பெறுகிறோம் என்ற நோக்கத்தை நாமும் அறிந்தவர்களாய் இருக்க வேண்டும். eis என்பது அறியப்பட்ட ஒரு நோக்கத்திற்காக இயேசு தம்முடைய இரத்தத்தைச்*

*சிந்தினார் என்று அர்த்தப்படுத்துகிற தென்றால், அதைத் தொடர்ந்து நாமும் கூட அறியப்பட்ட ஒரு நோக்கத்திற்காகவே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றாகின்றது. மத். 26:28ல் உள்ள eis என்பது இயேசு தாம் எதற்காகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் என்பதை அறிந்திருந்தார் என்று விளக்கப்படுவதில்லை என்று எவர் மனநிறைவு கொள்ளுவார்? இதே சொற்றொடரானது ஞானஸ்நானம் தொடர்பாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதால், eis என்பது நாம் எந்த நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெறுகின்றோம், eis என்பதை அறிந்தவர்களாய் இருக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து விளக்கப்படுத்துவதில்லையா?*

*அப். 2:5, 37, 38ல் பேதுரு யூதர்களுக்காகக் கொடுத்திருந்த அறிவுறுத்துதலினால் அவர்கள் தாங்கள் எந்த நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெற்றிருந்தோம் என்பதைப் புரிந்திருந்தனர். புதிய உடன்படிக்கையின் கீழ் முதன் முதலாக மனம் மாறியவர்கள் என்ற வகையில் அவர்கள் எல்லா நாடுகளிலும் பின்தொடர்ந்து வந்த எல்லா சந்ததியார்களுக்கும் ஒரு முன்மாதிரியை அமைத்து வைத்தனர். பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை அவர்கள் புரிந்திருந்தார்களென்றால், நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு நாம் அதே உண்மையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். சரியான குறிக்கோள் மற்றும் நோக்கம் இல்லாத ஒரு செயலானது அந்தச் செயலைச் செய்வதில் தவறு ஏற்படுத்துவது போலவே அது கீழ்ப்படியாமையைக் குறிப்பதாகவும் உள்ளது. ஞானஸ்நானம் பெறுபவர் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவே தாம் ஞானஸ்நானம் பெறுகிறதை அறிந்திருக்க வேண்டும்.*

*சிலர், ''க்காக'' என்பது பாவமன்னிப்பைப் பெறும் ''ஒரு கண்ணோட்டத்துடன்" என்று அர்த்தப்படுவதை ஒப்புக் கொண்டுள்ளனர், ஆனால் அவர்கள் வினைச் சொற்கள் நபர் மற்றும் எண்ணிக்கையில் உள்ள அவர்களின் எழுவாய்களுடன் ஒத்திருக்க வேண்டும் என்பதாலும், ''மனந்திரும்பி'' என்பது முன்னிலைப் பன்மையிலும் ''ஞானஸ்நானம் பெறுங்கள்" என்பது படர்க்கை ஒருமையிலும் இருப்பதால் "மனந்திரும்பி" மற்றும் ''ஞானஸ்நானம் பெறுங்கள்'' என்பவைகள் ''பாவ மன்னிப்புக்கென்று" என்பதைத் தகவமைக்க இணைக்கப்பட முடியாது என்று வாதிடுகின்றனர். இதிலிருந்து அவர்கள் பாவமன்னிப்பு என்பது ''மனந்திரும்புதல்'' என்பதுடன் இணைக்கப்பட முடியும், ஆனால் "ஞானஸ்நானம் பெறுதல்" என்பதுடன் இணைக்கப்பட முடியாது என்று முடிவு செய்கின்றனர்.*

*இது கிரேக்க மொழியிலக்கணத்தில் உள்ள கொள்கையை மீறுவதாகக் காணப்பட்டாலும், ஒரு முன்னிலைப் பன்மைப் பெயர்ச் சொல்லை படர்க்கை ஒருமைப் பெயர்ச் சொல்லோடு பயன்படுத்தி ஒரு கிரேக்க மரபுச் சொல்லை வழங்குவது சாதாரணமானதே என்று காண்பிக்க ஏராளமான ஆதாரம் கிடைக்கின்றது. மொழி மரபுப் பயன்பாட்டில் எழுவாயும் பயனிலையும் ஒத்திசையத் தவறும் நிகழ்வுகள் யோவா. 9:3; லூக். 8:30; மத். 6:19; மாற். 4:41; 1 கொரி. 15:50; மற்றும் யாக். 5:2, 3 ஆகியவற்றில் உள்ளன.*

இவை கிரேக்க மொழியிலக்கணத்தை மீறுதல் அல்ல, ஆனால் மொழிமரபுப் பயன்பாடுகளை நிலைநாட்டுபவைகளாக இருக்கின்றன.

ஞானஸ்நானத்திற்கும் பாவமன்னிப்புக்கும் இடையில் உள்ள இணைப்பைப் பலவீனப் படுத்துவதற்குப் பதிலாக, பாவமன்னிப்புடன் ஞானஸ்நானத்திற்குள்ள உறவின் முக்கியத்துவத்தை அப். 2:38ன் கட்டமைப்பானது வலியுறுத்துகின்றது. கரோல் டி. ஓஸ்பர்ன் அவர்களின் ஒரு கட்டுரையானது கிரேக்க மரபுச் சொற்களின் இப்படிப்பட்ட பயன்பாடுகளின் எடுத்துக்காட்டுகளை அளிக்கின்றது.[9] இதே கட்டுரையில் J. கிளேஸ் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து எடுத்தாளப்படும் ஒரு மேற்கோளானது விசேஷமாய்க் கவனிக்கத் தக்கதாகும்:

> … படர்க்கை ஒருமைப் பெயர்ச் சொல்லின் முக்கியத்துவமானது மொழி மரபில், ஒரு குழுவிடம் பேசுபவர் அக்குழுவின் தனி நபர்களைக் குறிப்பிடும்படி முன்னிலைப் பன்மைச் சொல்லின் முக்கியத்துவத்தைப் உடன்பாட்டு வகையில் பயன்படுத்த அனு மதிக்கின்றது. இந்தப் பரவுகை முக்கியத்துவப் பயன்பாட்டில், பேசுபவர் இப்படிப்பட்ட வலிவார்ந்த முக்கியத்துவத்தை அவர் ஏற்படுத்தும் கட்டளையுடன் இணைத்து படர்க்கை ஒருமைச் சொல்லின் முக்கியத்துவமானது அந்தக் குழுவில் உள்ள ஒரு தனிநபர் கூட விதி விலக்காகி விடாதபடிக்கு தம் கருத்தைத் தெளிவாக்கு கின்றார்.[10]

இப்படிப்பட்ட பயன்பாட்டின் எடுத்துக்காட்டுகள் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பின் யாத். 16:29; யோசு. 6:10; 2 இரா. 10:19 மற்றும் சகரி. 7:10 ஆகிய வசனப் பகுதிகளில் காணப்படுகின்றன.

பேதுரு ஞானஸ்நானத்தைப் பாவமன்னிப்பிலிருந்து இணைப்பற்றுப் போகச் செய்வதற்குப் பதிலாக, தம்முடைய உரையைக் கேட்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற அவசியத்தை மிக அதிகமாக வலியுறுத்தினார். பேதுரு தம் உரையைக் கேட்டவர்கள் ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் காக ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறியதன் முக்கியத்துவத்தை நீக்கிப் போட நாடும் மற்ற விளக்கங்கள், கிரேக்க மொழி வழக்கின் நிலைநாட்டப்பட்ட மரபு வகைக்கு அநீதி இழைக்கின்றன.

‘‘பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுங்கள்’’ என்பதே கட்டளையாக உள்ளது. ‘‘ஞானஸ்நானம் பெறுங்கள்’’ என்பது மட்டும் கட்டளையாக இருப்பதில்லை. ஒருவேளை இது கட்டளையாயிருந்திருந்தால், ஒருவர் எந்த ஒரு காரணத்திற்காகவும் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக ஞானஸ்நானம் பெற முடிந்திருக்கும். இருப்பினும், ‘‘ஞானஸ்நானம் பெறுங்கள்’’ என்பது மட்டும் வெறும் கட்டளையாக இருப்பதில்லை. பாவியொருவர் ஞானஸ்நானம் பெற வருகையில் “பாவ மன்னிப்பு” என்பதே அவரது இலக்காக இருக்க வேண்டி யுள்ளது. அவர் தம் இழந்து போகப்பட்டிருந்த நிலையை உணர்ந்தறிந்து, இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்டு, சுத்திகரிக்கும் அவருடைய

*இரத்தத்தின்மேல் விசுவாசம் கொண்டு, அவருடைய சித்தத்திற்குத் தமது வாழ்வைக் கீழ்ப்படிதலுடன் மாற்றியமைக்கத் தீர்மானம் செய்கிறவராய் இருக்க வேண்டும்.*

*பரலோக இராஜ்யம் சமீபித்து இருந்ததினால் (மத். 10:2, 7) யோவானாலும் (மத். 3:2) மற்றும் இயேசுவாலும் (மத். 4:17) மற்றும் பாவ வாழ்வை மாற்றும்படியான அப்போஸ்தலர்களுடைய செய்தியினாலும் பிரசங்கிக்கப்பட்டவற்றினாலும் பேதுரு இந்நிலைக்குக் கட்டுப்படுத்தப்பட்டவராயிருந்தார், மேலும் அவர், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, விசுவாசிப்பவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்ற இயேசுவின் கட்டளைக்கும் கீழ்ப்படிந்திருந்தார் (மத். 28:19; மாற். 16:15, 16).*

## *1 பேதுரு 3:21*

*பேதுரு பின்னாளில் எழுதிய ஒரு நிருபத்தில், பெந்தெகொஸ்தே நாளன்று தாம் எடுத்துரைத்தவற்றுடன் தமது கூற்றை இணைவாக்கினார்: ''அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேது. 3:21).*

*இவ்வசனத்தைக் குறித்து இராபர்ட் ஜி. பிரேட்கர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *... இது, நேரடியாக ''ஒப்பனையான ஞானஸ்நானம் எது'' என்பதை மொழியாக்கப்படுத்துகின்றது. ஒரு ''ஒப்பனையானது'' என்பது ''மாதிரி'' என்று அறியப்பட்ட முன்புள்ள ஒரு பொருள் அல்லது செயலினால் குறிப்பிடப்பட்டுக் கருதப்படும் பொருள் அல்லது செயல் ஆகும். வெள்ளப் பெருக்கின் தண்ணீரானது ஞானஸ்நானத்தின் ஒரு "மாதிரி" யாக இருந்தது.*
>
> *... இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது: இந்த இப்பொழுது முந்திய 20ம் வசனத்திற்குப் பதில் அளிக்கின்றது. ஒரு மொழிபெயர்ப்பானது அர்த்தத்தை உண்மையுடன் பிரதிநிதிப் படுத்துவதாகவும் ''இப்பொழுது ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது'' என்று மிகத் தெளிவாகக் கூறுவதாகவும் இருக்க வேண்டும். இரட்சிப்பு என்பது எப்பொழுதுமே தேவனுடைய கிரியையாகவே உள்ளது, ஆனால் இவ்விடத்தில் கீழே விளக்கப் பட்டுள்ளபடி ஞானஸ்நானமானது இரட்சிப்பைக் கொண்டு வருவதாக உள்ளது.*
>
> *ஞானஸ்நானம் ஒருவரை இரட்சிக்கிறது என்று கூறுவதன் மூலம் எழுத்தாளர் அர்த்தப்படுத்துவதென்ன என்பதை அவர் உடனடியாக விளக்கப்படுத்துகின்றார்: அது உடலின் அழுக்கைக் கழுவுகின்ற சரீரப் பிரகாரமான நிகழ்ச்சியல்ல, ஆனால் உள்ளாக ஏற்படுகின்ற ஆவிக்குரிய அனுபவமாய் இருக்கின்றது.[11]*

*அரிகியா மற்றும் நிடா ஆகியோர் 1 பேதுரு 3:20, 21ஐப் பற்றிப் பின்வருமாறு எடுத்துரைத்தனர்:*

> *"மாதிரி" என்பது "ஒப்பனையானதை" நிழலிடுகின்றது, அதாவது, அது (மாதிரி) என்பது இப்பொழுது கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு உண்மை நிலையின் முழுமையற்ற ஒரு அடையாளமாகும்.*
>
> *எவ்வகையிலும், அது எப்படியிருப்பினும் இப்பொழுது அந்த "ஒப்பனையானதே" அவர்களை இரட்சிக்கின்றது.*
>
> *வசனப் பகுதியானது, தனது நிலைப்பாட்டின்படி ஞானஸ்நானத்தை (அல்லது ஞானஸ்நானத்தின் தண்ணீரை) இரட்சிப்பின் முகமையாக ஏற்படுத்துகின்றது. இருப்பினும், இம்முழு வசனப் பகுதியையும் கவனமாகப் படித்தலானது, இப்பொழுது நம்மை இரட்சிக்கின்றது என்பது ஒருவேளை வசனத்தின் முடிவில் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் என்பதுடன் இணைந்து செல்வதைச் சுட்டிக்காட்டுகின்றது (1:3ஐ ஒப்பிடவும்).[12]*

*மற்ற ஆழ்ந்த சிந்தனைகளுக்குப் பின் இவ்வசனத்தை மொழி பெயர்ப்பதில் ''வசனம் 21ல் கடைசி வாக்கிய உறுப்பை இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது என்பதுடன் இணைப்பது மிகச் சிறந்ததாக இருக்கலாம், ஞானஸ்நானம் பெறுவதினால் தேவன் இப்பொழுது நம்மை இயேசு கிறிஸ்துவின் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கின்றார்" என்ற ஆலோசனையை அவர்கள் முன் வைத்தனர்.[13]*

*பேதுருவினால் கூறப்பட்ட இந்தக் கூற்றானது அப். 2:38ல் உள்ள அவரது எடுத்துரைப்புக்கு இசைவானதாக உள்ளது. தேவன் மேல் கொண்ட விசுவாசமே நோவா வரவிருந்த அழிவின் காரணமாக பேழையை ஆயத்தம் பண்ணும்படிக்கு அவரை ஊக்குவித்தது (எபி. 11:7). இது இழந்து போகப் பட்டுள்ள ஒரு நபர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் பாவமன்னிப்பு பெறும்படி தம் மனச்சாட்சியினால் தூண்டப்படுவதன் வகையைச் சேர்ந்ததாகவே உள்ளது. ஞானஸ்நானம் என்பது இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் அளிக்கப்படும் இரட்சிப்புடன் பிரிக்க முடியாதபடி ஏதோ ஒரு வகையில் இணைக்கப் பட்டுள்ளது.*

*''தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து'' என்பது ''நல்மனச்சாட்சிக்காகத் தேவனைப்பற்றும் உடன்படிக்கையாயிருந்து" என்பதன் சிறந்த மொழிபெயர்ப்பாக இருப்பது 1 பேதுரு 3:21ன் இன்னொரு ஆழ்ந்த சிந்தனையாக உள்ளது.[14] இவற்றில் எந்த மொழிபெயர்ப்பு சரியானது என்பதைப் பொருட்படுத்தாத வகையில், மனச்சாட்சியானது வேண்டுகோளில் ஈடுபாடு கொண்டதாக உள்ளது. ஒருவர் தாம் எதற்காக வேண்டுகோள் விடுக்கின்றார் என்பதை புரிந்து கொள்ளாதிருந்தால், அவர் எப்படித் தமது வேண்டுகோளை மேற்கொள்ள முடியும்? துன்புறுத்திய சவுலின் மனச்சாட்சியைப் போலவே (1 தீமோ. 1:13) அவர் கிறிஸ்தவராவதற்கு முன்பே கொண்டிருந்த மனச்சாட்சியைப்*

*போலவே (அப். 23:1) நல்மனச்சாட்சியை உடைய பாவி ஒருவரால் தேவனிடத்தில் இரட்சிப்புக்காக வேண்டுகோள் விடப்படுகிறது என்பது மிகவும் ஏற்புடையதாக உள்ளது. சீரழிந்த மனச்சாட்சியானது ஒரு நபரை இவ்விதமான வேண்டுகோள் விடுக்கும்படித் தூண்டாது.*

*பாவத்திலிருந்து இரட்சிக்கும்படியான வேண்டுகோளானது ஒருவர் தம் பாவங்களை ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிவதினால் மட்டும் மன்னிக்கும்படி நாடுதல் என்று அர்த்தப்படுத்துவதில்லை. இது, அவர் தம் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற அவரது மனச்சாட்சி தூண்டுகின்றது, அவர் இரட்சிப்புக்காக தேவனிடத்தில் வேண்டுகோள் விடுக்கின்றார் என்றுதான் அர்த்தப்படுகின்றது. ஞானஸ்நானத்திற்கும் பாவமன்னிப்பிற்கும் இடையில் உள்ள சரியான தொடர்பைப் புரிந்து கொண்டவர்கள்தான் இவ்விதமான ஒரு வேண்டுகோளை விடுக்க முடியும்.*

*இயேசுவின் மீட்பின் செயலினுடைய பலனைப் பெறுவதற்கு ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தின் இன்றியமையாத பதில்செயலாகும் என்று பேதுரு கருதினார். பேதுரு தம் உரையைக் கேட்டவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கட்டளையிட்டதில் வியப்பேதும் இல்லை (அப். 10:48; இ.வ. 2:38).*

## *முடிவுரை*

*இயேசுவின் நாமத்தினாலே இரட்சிப்பு என்பதை முதன்முதலாகப் பிரசங்கிக்கும்படி பேதுரு இயேசுவால் பயிற்றுவிக்கப்பட்டவரும், தேர்ந்து கொள்ளப்பட்டவருமாயிருந்தார். தமது உரையை எருசலேமில் முதன் முதலில் கேட்டவர்களிலிருந்து (பலரை) அவர்கள் தாங்கள் இழந்து போகப்பட்ட நிலையில் இருந்ததை உணருவதற்கு அவர் (பேதுரு) உதவி செய்தார். அவர்கள் இயேசுவில் விசுவாசம் கொண்டவர்களாகி, என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். அவர்கள் இயேசுவைப் பின்பற்றக் கூடும்படியாகத் தங்கள் வாழ்வில் இன்றியமையாத மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று பேதுரு அவர்களுக்குக் கூறினார். அவருடைய வசனத்தை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டவர்கள் தாங்கள் மனந்திரும்பி இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும் பொழுது தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று புரிந்து கொள்ளுதலுடன் ஞானஸ்நானம் பெற்றனர் என்பது தெளிவு (அப். 2:38-41). இந்தச் செய்தியானது அந்த விசேஷித்த பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு போதித்த யூதர்களுக்கு மட்டுமானதல்ல, ஆனால் உலகத்தில் உள்ள மற்ற யாவருக்குமானதுமாகும் (லூக். 24:47).*

குறிப்புகள்

[1]Rubel Shelly, *I Just Want to Be a Christian* (Nashville: 20th Century Christian, 1986), 120-27; Jimmy Allen, *Rebaptism*? (Monroe, La.: Howard Publishing Co., 1991), 41, 48, 155, 206, 210, 211. [2]*பாடங்கள் 2 மற்றும் 3 ஆகியவற்றில் அடங்கியுள்ள தேவனுடைய சித்தத்திற்குப் பதில்செயல் செய்தலை ஆளக்கூடிய கொள்கைகளின் விவாதத்தில் நான்காவது கொள்கையின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.* [3]Barkley M. Newman and Eugene A. Nida, *A Translator's Handbook on the Acts of the Apostles* (New York: United Bible Societies, 1972), 60. [4]C. F. D. Moule, *An Idiom-Book of New Testament Greek,* 2d ed. (Cambridge: Cambridge University Press, 1953), 70. [5]A. Oepke, *"eis"* in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1976), 2:429. [6]Joseph Henry Thayer, *A Greek-English Lexicon of the New Testament* (New York: American Book Co., 1973), 185. [7]Ibid., 94. [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt, F. Wilbur Gingrich, and Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 1979), 229. [9]Carroll D. Osburn, "The Third Person Imperative in Acts 2:38", *Restoration Quarterly* 26 (Second Quarter 1983): 81-84. [10]Ibid., 83.

[11]Robert G. Bratcher, *A Translator's Guide to the Letters From James, Peter and Jude* (London: United Bible Societies, 1984), 109. [12]Daniel C. Arichea and Eugene A. Nida, *A Translator's Handbook on the First Letter From Peter* (New York: United Bible Socities, 1980), 119-21. [13]Ibid. [14]Hugo McCord, *New Testament* (Henderson, Tenn: Freed-Hardeman College, 1988).

# எல்லா நாட்டவருக்கும் ஞானஸ்நானம்

*பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் ... என்றார் (மாற். 16:15, 16).*

*இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் எருசலேம் தொடங்கி (லூக். 24:47) உலகமெங்கும் போய் எல்லா நாட்டவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக் கட்டளையிட்டார் (மத். 28:19; மாற். 16:15, 16). பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவே (அப். 2:1) இயேசுவின் நாமத்தில் பாவமன்னிப்பு அளிப்பது பற்றி முதன் முதல் அறிவித்தவராயிருந்தார். அந்தச் செய்தியானது அங்கிருந்தவர்களுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் மற்றும் தூரத்திலுள்ள யாவருக்கும் - எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள எல்லா மக்களுக்கும் ஆனதென்று அவர் கூறினார் (அப். 2:39). நடபடிகளின் புத்தகமானது ஆதி கிறிஸ்தவர்கள் தங்களுக்கு இயேசு கொடுத்திருந்த நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுகையில் செயல்பட்டவைகளை எடுத்துரைக்கின்றது (அப். 1:8).*

*நடபடிகள் புத்தகத்தில் காணப்படுகிறபடி ஞானஸ்நானம் பற்றிய ஒரு நல்ல தொகுப்புரையை ஃப்ரெடெரிக் டேல் புரூனர் அவர்கள் எழுதினார். அவர், "நடபடிகளில் ஞானஸ்நானம் என்பது தனிப்பட்ட இரட்சிப்பின் எல்லா உண்மைகளுக்கானவற்றை உள்ளடக்கும் சொற்பாங்காக இருக்கின்றது: சுவிசேஷ செய்தி, மனந்திரும்புதல், மன்னிப்பு, பரிசுத்த ஆவியானவரின் வரம், மற்றும் சபைக்குள் ஏற்கப்படுதல்."[1]*

*நடபடிகள் புத்தகமானது இரட்சிக்கப்படுவதற்கு மனிதர் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் கொண்டுள்ள மனமாற்றத்தின் ஏதாவது ஒரு பதிவேடு ஒன்றில் உள்ளடக்குவதில்லை; இதற்குப் பதிலாக, இது சில நிகழ்ச்சிகளில் மனந்திரும்புதலைக் குறிப்பிடுகின்றது, மற்றும் பெரும் பான்மையான நிகழ்ச்சிகளில் செய்தியைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெறுதலைக் குறிப்பிடுகின்றது. இந்த மூன்று தேவைகளில் ஏதாவதொன்று உள்ளடக்கப்பட்டிருக்கும்போது, மற்றவைகள் யூகித்துக் கொள்ளப்பட வேண்டியவைகளாய் உள்ளன. இது உண்மையல்ல வென்றால், இரட்சிப்புக்கு இவைகளைக் காட்டிலும் அதிகமான ஏதொன்றையும் சுட்டிக்காட்டும் மற்ற வசனங்களின் எடுத்துரைப்புக்கள்*

*வினயமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவைகள் அல்லவென்றாகிறது (மாற். 16:16; அப். 2:38).*

*முதல் நூற்றாண்டு உலகத்தில் சுவிசேஷமானது எப்படிப் பரவத் தொடங்கியது என்பதை நடபடிகளின் புத்தகம் கூறுகின்றது. ஆதிக் கிறிஸ்தவர்களின் செயல்பாடுகள் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் (நாமத்தின்) அடிப்படையில் அமைந்திருந்தன (கொலோ. 3:17). இந்த செயல்பாடுகள் உபதேசம், அற்புதங்கள் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன (அப். 2:38; 3:6, 16; 4:10, 12, 30; 5:41; 8:12, 16; 9:27, 28; 10:43, 48; 15:26; 16:18; 19:5; 22:16).*

## செய்தி

*பெந்தெகொஸ்தே நாளன்று உண்டான திரளான பதில்செயலுக்குப் பின்னும், மற்றும் அதைத் தொடர்ந்த பல மனமாற்றங்களிலும் (அப். 2:41; 4:4; 5:14; 6:1, 7) பவுல் என்று பின்னாளில் அறியப்பட்ட (அப். 13:9) சவுலின் (அப். 8:3) செயல்பாட்டினால் உபத்திரவம் எழுகின்ற வரைக்கும் சபையானது எருசலேமையே அடிப்படை மையமாகக் கொண்டிருந்தது. பிறகு அது உலகின் மற்ற பகுதிகளுக்குப் பரவத் தொடங்கிற்று. பிலிப்பு சமாரியாவின் பட்டணத்திலும் (அப். 8:5) பிறகு எத்தியோப்பிய மந்திரிக்கும் (அப். 8:35) கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்.*

*கிறிஸ்துவைப் பிரசங்கித்தல் என்பது இயேசு கிறிஸ்துவின் நாமம் (அப். 8:5, 35), ஞானஸ்நானம் (அப். 8:12, 36), இயேசுவின் மரணம் (அப். 2:23, 36; 3:15; 4:10; 5:30; 10:39; 13:28), அவரது இராஜ்யம் (19:8; 20:25; 28:23, 31) மற்றும் அவரது உயிர்த்தெழுதல் (அப். 2:24, 32; 3:15; 4:2, 10, 33; 10:40; 13:30; 17:3, 18, 31; 23:6; 24:15, 21; 26:8, 23; 1 கொரி. 2:1, 2) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது என்பது தெளிவு. இயேசுவின் மரணம் அல்லது இரத்தம் பாவங்களை மன்னிக்கிறது என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் எங்குமே கூறப்படவில்லை. ஆகிலும் இது செய்தியில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவா. 1:7). அவருடைய இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாகவே நீதிமானாக்கப்படுகின்றோம் (ரோமர் 3:25), மற்றும் இரத்தம் சிந்துதலின்றி பாவமன்னிப்பு இல்லை (எபி. 9:22). பவுல் கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிப் பிரசங்கித்தது பற்றி நடபடிகளின் புத்தகம் பதிவு செய்யவில்லையென்றாலும் (அப். 13:16-47; 14:15-17; 17:22-31; 20:18-35; 22:3-21; 23:6; 24:10-21; 26:4-23 ஆகியவற்றில் உள்ள பவுலின் உரைகளை ஆய்வு செய்து பார்க்கவும்), பவுல் தாம் சிலுவையைப் பற்றிப் பிரசங்கித்ததாக எழுதியுள்ளார் (1 கொரி. 2:1, 2). மனமாற்ற நிகழ்ச்சிகளில் கூறப்பட்ட மற்றும் செய்யப்பட்ட ஒவ்வொன்றும் நடபடிகளின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதற்கு இது ஆதாரமாயிருக்க வேண்டும். இரட்சிப்பின் முழுமையான சித்தரிப்பானது இரட்சிப்பைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனைகளின் ஒருங்கமைவை*

*ஒன்று கூட்டி வைத்துப் பார்ப்பதினால் மட்டுமே உறுதிப்படுத்தப்பட முடியும்.*

## *பிலிப்புவின் பிரசங்கம்*

*பிலிப்பு பிரசங்கித்த விஷயமானது எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளன்று (அப். 2:1) பேதுரு பிரசங்கித்திருந்ததைப் போலவே இருந்திருக்க வேண்டும் (அப். 2:38; லூக். 24:47). அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்த (அப். 2:42) மற்றவர்களுடன் பிலிப்புவும் எருசலேமில் அந்த அப்போஸ்தலர்களுடன் இருந்தார் (அப். 6:2-5). ஆகையால் அவர், அவர்களின் உபதேசத்திற்கு நன்கு பழக்கப்பட்டிருப்பார். அவர்கள் பிரசங்கித்ததையே அவரும் பிரசங்கித்திருப்பார். மக்கள் பேதுருவின் பிரசங்கத்திற்குப் பதில்செயல் செய்திருந்தது போலவே (அப். 2:41) ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் பிலிப்புவின் பிரசங்கத்திற்கும் பதில்செயல் செய்தனர் என்ற உண்மையினால் இந்த சத்தியமானது வலுவூட்டப் படுகின்றது (அப். 8:12, 35-39).*

*பேதுரு பிரசங்கித்ததைக் கேட்டவர்கள் பக்தியுள்ள யூதர்களாய் இருந்தபோதிலும் (அப். 2:5), மற்றும் பிலிப்பு பிரசங்கித்ததைக் கேட்டவர்கள் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக இரட்சிப்பு தேவையாயிருந்த பாவிகளாய் இருந்தார்கள் (ரோமர் 3:23-25). இந்தக் காரணத்திற்காகவே எல்லா மக்களுக்கும் நடைமுறைப்படுத்தக்கூடிய செய்தியானது (அப். 15:9) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. எருசலேம் தொடங்கி எல்லா நாடுகளிலும் இந்தச் செய்தியானது பிரசங்கிக்கப்படும் என்று இயேசு கூறியிருந்தார் (லூக். 24:47). தேவன் மனித குலத்துடனான தம்முடைய செயல்பாடுகளில் சீரானவராகவும் பாரபட்சமற்றவராகவும் இருக்கின்றார் (ரோமர் 2:5-11). பேதுருவின் முதல் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் யாவரும் மனந்திரும்பித் தங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்படி வேண்டியிருந்தது என்றால் (அப். 2:38), பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் உட்பட எங்குமுள்ள எல்லா மக்களும் அதையே செய்யும்படியாகவே வேண்டியதாயிருந்தது.*

*ஆகையால் பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டு பதில்செயல் செய்த அனைவரும் ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 8:12, 38). இது கூறப்பட வில்லையென்றாலும் கூட, பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு பிரசங்கித்த செய்தியையே அவர்களெல்லாரும் போதித்தனர் என்ற முடிவைப் பெற இயலும். நடபடிகளின் புத்தகமானது தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறப்பதை விளக்குகின்ற தேவனுடைய தெய்வீக விளக்கவுரை நூலாக உள்ளது. தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு நீதியுள்ள மற்றும் நீதியற்ற யாவரும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று தெய்வ பக்தியுள்ள நிக்கொதேமுவிடம் இயேசு கூறினார் (யோவா. 3:3-5; அப். 8:12).*

*எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம் பற்றி புரூனர் அவர்கள் பின்வருமாறு நன்கு விளக்கியுள்ளார்:*

பாவமன்னிப்பு பற்றியோ அல்லது அதை அந்த மந்திரி விசுவாசித்தார் என்பது பற்றியோ இவ்வசனப் பகுதியில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஞானஸ்நானமானது இவை எல்லாவற்றையும் கூறுகின்றது. நடபடிகளில் ஞானஸ்நானமானது "பரிசுத்த ஆவியானவரின் வரம்" பற்றிக் கூறுவதற்கு (2:38-41) சற்றும் குறைவற்ற வகையில் "விசுவாசம்" மற்றும் "பாவமன்னிப்பு" பற்றிக் கூறுகின்றது. நடபடிகளில் ஞானஸ் நானம் என்பது தனிப்பட்ட இரட்சிப்பின் எல்லா உண்மைகளையும் உள்ளடக்கிய சொற்பாங்காய் உள்ளது: சுவிசேஷத்தின் செய்தி, மனந்திரும்புதல், மன்னிப்பு, பரிசுத்த ஆவியானவரின் வரம் மற்றும் சபையில் ஏற்றுக் கொள்ளப்படுதல்.[2]

எத்தியோப்பிய மந்திரியைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதிலிருந்து குறிப்பிட்ட சில முடிவுகளைப் பெற இயலும்: (1) அவருக்கு இயேசுவைப் பற்றிப் போதிக்கப்பட்டிருந்தது (அப். 8:35); (2) அவர் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் இயேசுவின் சித்தத்திற்குப் பதில்செயல் செய்ய விரும்பினார் (அப். 8:36); (3) அவர் இயேசுவை மேசியா என்று விசுவாசித் தார்; (4) அவர் யூதராயிருப்பதினின்று கிறிஸ்தவராயிருப்பதற்கு மாறச் சித்தம் கொண்டிருந்தார் (8:36) - மனந்திரும்பச் சித்தமுள்ளவராயிருந்தார்; மற்றும் (5) அவர் பாவமன்னிப்பை பெறுவதற்காக, தமக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தி ஞானஸ்நானம் பெற்றார். (அப். 8:38). அவரது மனமாற்றத்தின் பதிவேடானது இயேசுவைப் பின்பற்றுபவர்களாய் ஆன மற்ற எல்லாருடையது போல அதே மாதிரியைப் பின்பற்றுவதாயிருந்தது என்பதே இங்கு மறைவான கருத்தாக உள்ளது.

## சவுலின் மனமாற்றம்

பவுல் என்றும் அறியப்பட்ட (அப். 13:9) சவுலின் மனமாற்றம் பற்றிய மூன்று விபரக் குறிப்புகள் ஒருமுறை லூக்காவினால் அறிக்கையாய் எழுதப்பட்டதாகவும் (அப். 9:1-20) மற்றும் இருமுறை சவுலினால் கூறப்பட்டதாகவும் (அப். 22:1-16; 26:1-18) உள்ளன, இவை சபையின் வரலாற்றில் இவரது மனமாற்றத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டு கின்றன. (அப். 26:16ல் இயேசுவால் எடுத்துரைக்கப்பட்டபடி) இயேசு ஒரு நோக்கத்திற்காகவே, அவர் (இயேசு) அவரை (சவுலை) ஒரு அப்போஸ்தலராக ஊழியப்படுத்தவே சவுலுக்குத் தரிசனமானார். அவர் (சவுல்) புறஜாதிகளுக்கு ஒரு விசேஷித்த பிரதிநிதியாகவேண்டியிருந்தது (கலா. 1:1; அப். 26:16-18).

சவுல் இரட்சிக்கப்பட்டிருந்தார் என்று அவருக்கு நிச்சயப் படுத்துவற்காக அவருக்கு இயேசு தரிசனமாகவில்லை, அதற்கு மாறாக அவர் (சவுல்) என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட தமஸ்குவுக்குச் செல்ல வேண்டும் என்று இயேசு கூறினார் (அப். 9:6; 22:10) மற்றும் பிறகு அவருக்கு (சவுலுக்கு) அறிவுறுத்த அனனியாவை அனுப்பினார் (அப். 22:14-16). பவுல் கிறிஸ்துவுக்கென்று செய்யவிருந்த ஊழியத்தினால் அவர் ஒரு விசேஷித்த நபராய் இருந்தாலும், அவர் (பவுல்) தமது பாவங்களில் இருந்து

*சுத்திகரிக்கப்படுவதற்கு மற்ற ஒவ்வொருவரும் பதில்செயல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட அதே வழியிலேயே பதில்செயல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார் (அப். 22:16).*

*அப். 22:16ன் மீது புரூனரின் விளக்கவுரையானது ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியானது:*

> *அனனியாவின் அறிவுறுத்தல்களைப் பவுல் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருகின்றார், இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு (22:16). பவுலின் பாவத்தைப் போக்குதல் என்பது ஞானஸ்நானத்தில் செய்து முடிக்கப்பட வேண்டியதாயிருக்கின்றது. நடபடிகளில் பெந்தெகொஸ்தேக்குப் பிறகு ஞானஸ்நானம் பற்றிய முதல் குறிப்பில் கூட இந்த இணைப்பு ஏற்படுத்தப்படுகின்றது ... பாவமன்னிப்புக்கென்று ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (2:38).*
>
> *... பவுல் எழுந்து, ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது. எவரேனும் இதை ஒரு வேலை அல்லது நிபந்தனை என்று அழைக்க விரும்பினால் - மற்றும் அவர் இந்தச் சொல் வழக்கைப் பயன் படுத்தலாகாது என்று அறிவுறுத்தப்பட்டிருந்தால் - பின்பு, ஞானஸ்நானத்திற்கு நடத்தல் என்பது மட்டுமே ஒரே ஒரு ''நிபந்தனையாக'' உள்ளது. இருந்த போதிலும், லூக்கா தாமே வலியுறுத்தியதுபோல இந்த நடையானது ராஜரீகமான கர்த்தரின் மூலம் கிரியை செய்யும் விசுவாசத்தினால் பெலப்பட்டதாக உள்ளதென்று வலியுறுத்தப்படக்கடவது (இ.வ. எ.கா. அப். 3:16).*
>
> *இருப்பினும் இது மனிதரின் பொறுப்பாக உள்ளது, நாம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள தவறும் பொழுது இன்னொரு திசையில் நாம் தவறு செய்யக் கூடும் (அதாவது, ஆவிக்குரியதற்ற, வன்முறையான பொறுப்பு, ஆனால் எளிய ஞானஸ்நானத்தைப் பற்றியதே) இதை நடபடிகளில் மேற் கொள்ளப்பட்ட வினயத்துடனேயும் நாம் செய்யக்கூடும்.*
>
> *இந்தப் பொறுப்பின் அளவை உயர்த்தும்படிக்கு ''எழுந்து'' என்பதற்குப் பிறகு "ஞானஸ்நானம் பெற்று" மற்றும் "கழுவப்படு" என்ற இரண்டு பிரதான வினைச் சொற்கள்* aorist *இடைக் கட்டளையாக வைக்கப்பட்டுள்ளன. இந்த இடைக் குரலானது ''உன்னை ஞானஸ்நானப்படுத்திக் கொள்'' என்று அர்த்தப்பட அவசியமில்லை, மற்றும் இது "உன்னைக் கழுவு" என்று அர்த்தப்பட முடியாது, ஆனால் "உன்னை ஞானஸ்நானப் படுத்த அனுமதித்து இவ்விதமாகச் சுத்திகரிக்கப்படு" என்று இலக்கண ரீதியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் மற்றும் முடியும் ... இருந்த போதிலும் இது நடப்பதற்கு அனுமதித்தவர் பவுலே - மற்றும் பவுல், அனுமதித்தார் ஆகிய இரு சொற்களில் பொறுப்புள்ளதை நாம் காண்கின்றோம், இருப்பினும் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் தெய்வீக அளவுகள் மற்றும் அவைகளின் எப்பக்கத்தையும் இழந்து விடுதல் என்பது அதிகம் இழப்பதாக உள்ளது.*
>
> *பவுல் நிபந்தனைகளின் அட்டவணைகள் எதற்கும் கட்டளை*

*யிடப்படவில்லை ஆனால் அவர் தம்மை ஞானஸ்நானம் பெறும்படி அனுமதிக்க வேண்டியவராயிருந்தார் மற்றும் "ஒரு மனிதனுடைய கீழ்ப்படிதலினாலே" என்ற (ரோமர் 5:19) பவுலின் விளக்கத்தை நாம் பயன்படுத்துவதென்றால், ஞானஸ்நானத்தில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட நிபந்தனைகள் யாவற்றையும் தேவன் நடைமுறைப் படுத்துகின்றார்.[3]*

*எனவே அப். 22:16ஆனது, ஞானஸ்நானத்தில் பாவம் கழுவப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்றும், இந்த இடத்திற்கு விசுவாசத்தில் தம்மை எடுத்துச் சென்று தாம் ஞானஸ்நானம் பெறும்படி அனுமதிப்பது கேட்பவருடைய பொறுப்பாக உள்ளது என்றும் நமக்குப் போதிக்கும். இவ்வசனமானது ஆவிக்குரிய ஞானஸ்நானம் பற்றிய நடபடிகளின் முழுப் போதனையையும் தொகுத்துரைக்கின்றது. இவ்வசனத்தில் பவுல் தம் வாழ்வில் பாவம் நீக்கும் நிகழ்ச்சியை ஒரு வாக்கியத்தில் விளக்கியுரைக் கின்றார், மற்றும் இது இப்பொழுது நடபடிகளின் வண்ணமிகு வசனங்களில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள ஆழமான உபதேசங்களுடன் மென்மையான வலைப் பின்னலாக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே கிறிஸ்தவராயிருப்பவரின் நோக்கம் கொண்ட ஆவியின் பிரயாசத்தினால் ஞானஸ்நானத்திற்கு முன்போ அல்லது பின்போ பாவமானது நீக்கப்படுவதில்லை, அது ஒரு மனிதரைக் கிறிஸ்தவராக்குகின்ற ஞானஸ்நானத்திலேயே நீக்கப்படுகின்றது. இது தேவனுடைய கிருபையாக உள்ளது.[4]*

*பவுல் இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டவராக, தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருந்த நிலையில் ஞானஸ்நானம் பெற்றார். அவர் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்துவதற்காகத் தமஸ்குவை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் என்பதில் இது தெளிவாகின்றது, ஆனால் நகருக்குள் செல்ல வேண்டும், அவர் என்ன செய்ய வேண்டும் என்று அங்கு கூறப்படும் என்ற இயேசுவின் கட்டளைக்கு அவர் கீழ்ப்படிந்தார் (அப். 9:6; 22:10). அவர் அங்கு சென்று சேர்ந்த பொழுது, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த நாடுவதற்குப் பதிலாக மற்ற அறிவுறுத்தலுக்காகக் காத்திருக்கையில் அவர் உபவாசித்து (அப். 9:9) ஜெபித்தார் (அப். 9:11). அவர் விசுவாசித்திருந்து, மனந்திரும்பியிருந்தாலும், இன்னமும் அவரது பாவங்கள் கழுவப்பட்டிருக்கவில்லை; கிறிஸ்துவில் அவர் கொண்ட விசுவாசம் அவரது மாற்றத்திற்குக் காரணமாயிற்று, ஆனால், "... நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத்தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு'' (அப். 22:16) என்று அவருக்குக் கூறப்பட்டது.*

*பவுல் "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு" ஞானஸ்நானம் பெற்றுப் பாவங்கள் நீங்கக் கழுவப்பட வேண்டுமென்று அனனியா கூறியதால், பவுலின் பாவங்கள் ஞானஸ்நானத்தில் அல்ல, மாறாக அவர் ஜெபம் செய்த பொழுது கழுவப்பட்டன என்று சிலர் முடிவு செய்தனர். இப்படிப்பட்டதொரு முடிவானது பின்வரும் இரண்டு காரணங்களினால்*

உண்மையாய் இருக்க முடியாது:

(1) "தொழுது கொண்டு" என்பதற்கான வார்த்தையானது epikalleomai என்பது, இது தொழுது கொள்ளப்படும், இரண்டாம் பெயரினால் குறிப்பிடப்படுகின்றது (லூக். 22:3; அப். 1:23; 4:36; 10:5; முதலியன) அல்லது எவரொருவரிடத்திலாவது ஏற்படுத்தப்படும் வேண்டுகோளுக்குக் குறிப்பிடப்படுகின்றது (அப். 25:11, 12, 21, 25). பாவியானவர் இரட்சிப்புக்கான தம் வேண்டுகோளை இயேசுவின் நாமத்தினால் ஏறெடுக்கின்றார் (அப். 2:21; ரோமர் 10:13). பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுரு தமது பிரசங்கத்தில் அப். 2:21ல் (''கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்"), யோவேல் 2:32ஐ மேற்கோள்காட்டிய உண்மையும் கூட சில தனிச் சிறப்பாகக் காணப்பட வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று கேட்பவர்களுக்கு அவர், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38) என்று கூறினார். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பது ஞானஸ்நானம் பெறுகையில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவமன்னிப்பிற்கு வேண்டுகோள் விடுத்தல் என்பது தெளிவு. இது இரட்சிப்புக்காக கர்த்தருடைய நாமத்தில் வேண்டுகோள் விடுக்கையில் நடக்க வேண்டியதாக உள்ளது.

(2) அப். 22:16ல் "தொழுது கொண்டு" என்பது, "எழுந்து" மற்றும் "ஞானஸ்நானம் பெற்றுக் கொள்" என்ற பிரதான வினைச் சொற்களைத் தொடர்ந்து வரும் aorist பெயரெச்சமாக உள்ளது. இராபர்ட்ஸன் அவர்களின் கூற்றுப்படி, "aorist பெயரெச்சத்திற்கு முன்னதாக வினைச் சொல் வரும் பொழுது, அது ஒரே நேரத்தில் நிகழும் செயலின் பெயரெச்சமாகவே ஏறக்குறைய எப்பொழுதுமே உள்ளது.''[5] இது, "ஞானஸ்நானம் பெற்று" மற்றும் "கழுவப்படு" என்ற பிரதான வினைகளின் செயல்கள் நடக்கும் போதே, ''தொழுது கொண்டு'' என்ற aorist பெயரெச்சத்தின் செயல்பாடானதும் நடைபெறுகின்றது என்று அர்த்தப்படுகின்றது. ஒருவர் ஞானஸ்நானம் பெறும் காலமே அவர் சுத்திகரிப்பிற்கான தமது வேண்டுகோளை ஏறெடுக்கும் காலம் ஆகும் (1 பேது. 3:21ஐக் காணவும்).

## மற்ற ஞானஸ்நான நிகழ்ச்சிகள்

நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள மனமாற்றத் தகவல் ஒவ்வொன்றும் லூக்காவின் முன் வைப்பினுடைய நோக்கத்தின்படி முழுமைத்தன்மையில் மாறுபடுகின்றது. கலவையானதொரு சித்தரிப்பானது மன்னிப்பும் ஒரு புதிய வாழ்வுமே *அவசியம்* என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இயேசுவே *செய்தியாயிருந்தார்*, இயேசுவின் மீது விசுவாசம் மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் ஆகியவைகளே கேட்டுக் கொள்ளப்பட்ட *பதில்செயல்* ஆக இருந்தது. மனமாற்றத்தின் ஒவ்வொரு தனி நிகழ்ச்சியிலும் இந்தக் கூறுகள் யாவையும் பதிவு

*செய்யப்பட்டிருக்கவில்லை; இருப்பினும், லூக்காவின் எழுதும் முறைமை யானது ஒரு நிகழ்ச்சியில் சில விஷயங்கள் கேட்டுக் கொள்ளப்பட்ட தென்றால், அது எல்லா நிகழ்ச்சியிலும் கேட்டுக் கொள்ளப்பட்டது என்பதையே சுட்டிக்காட்டுகின்றது, இது மனமாற்றத்தின் எல்லா நிகழ்ச்சி களும் ஆராய்ந்து பார்க்கப்படும் பொழுதே மனமாற்றத்தின் சித்தரிப்பானது நிறைவடைகின்றது என்று அர்த்தப் படுத்துகின்றது.*

*கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டார் (அப். 2:22-36; 4:12; 8:5, 35; 10:36-43); இருப்பினும், இது எல்லா நிகழ்ச்சிகளிலும் குறிப்பிடப்படவில்லை (16:13, 32; 18:4). கிறிஸ்துவைப் பற்றி என்ன பிரசங்கிக்கப்பட்டது என்பது எல்லா வேளைகளிலும் உள்ளடக்கப்படவில்லை (அப். 8:5, 35), ஆனால் இயேசுவைப் பற்றிய செய்தியானது அவரை சிலுவையில் அறையப்பட்ட மற்றும் உயிர்த்தெழுந்த கர்த்தராகவும் உலகத்தின் இரட்சகராகவும் காண்பிக்கும் இன்றிமையாத போதனை யாவற்றையும் நிச்சயமாக உள்ளடக்கியதாய் இருந்திருக்கும். இரட்சிக்கப்படுவதற்கு மனிதர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய விஷயத்திலும் இது உண்மையாக உள்ளது; ஏனெனில் எந்த ஒரு (மனமாற்ற) நிகழ்ச்சியும் கூறப்பட்ட ஒவ்வொன்றையுமோ (அப். 2:40) அல்லது செய்யப்பட்ட ஒவ்வொன்றையுமோ வெளிப்படுத்துவதில்லை.*

*சில நிகழ்ச்சிகளில் விசுவாசிக்கும்படி தனிநபர்களுக்குக் கூறப்பட்டது (அப். 10:43; 13:39; 16:31); சில நிகழ்ச்சிகளில் மனந்திரும்பும்படி அவர்களுக்குக் கூறப்பட்டது (அப். 2:38; 3:19; 17:30; 26:20); மற்றும் சில நிகழ்ச்சிகளில் ஞானஸ்நானம் பெறும்படி அவர்களுக்குக் கூறப்பட்டது (அப். 2:38; 10:48; 22:16). பல நிகழ்ச்சிகளில் அவர்கள் விசுவாசித்தனர் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது (அப். 4:4; 8:12, 13; 9:42; 11:17, 21; 13:12, 48; 14:1; 17:4, 12, 34; 18:8; 19:18). எந்த ஒரு நிகழ்ச்சியிலும் எவரேனும் ஒருவர் மனந்திரும்பினார் என்று பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பல நிகழ்ச்சிகளில் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது (அப். 2:41; 8:12, 38; 9:18; 16:15, 33; 18:8; 19:5). ஒழுங்கு படுத்தப்பட்ட சித்தரிப்பானது இரட்சிப்பை நாடின அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றனர் என்று சுட்டிக்காட்டுகின்றது.*

*எல்லா நிகழ்ச்சிகளிலும் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் என்பது எடுத்துரைக்கப்பட்டிருக்கவில்லை (அப். 8:38, 39; 9:18; 16:33; 18:8; 22:16), ஆனால் அப்படியிருந்தது என்று யூகிக்கப்பட முடியும் (அப். 4:12). விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் மனந்திரும்பியிருந்தனர் என்று எடுத்துரைக்கப்படவில்லையென்றாலும் (யோவானால் மனம் மாறியவர்கள் மனந்திரும்பினர் என்று கூடப் பதிவு செய்யப்படவில்லை, மத். 3:2; லூக். 3:3), அவர்கள் மனந்திரும்பியிருந்தனர் என்று யூகிக்கப்பட முடியும். இதுவே ஞானஸ்நானத்தின் விஷயத்திலும் உண்மையாய் உள்ளது; விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்று எல்லா நிகழ்ச்சிகளிலும் எடுத்துரைக்கப்படவில்லையென்றாலும், அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்பது யூகிக்கப்பட முடியும், ஏனெனில்*

விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர் இரட்சிக்கப்படுவார் என்று இயேசு எடுத்துரைத்திருந்தார். ஏவப்பட்ட பேச்சாளர் எவரும் தம் உரையைக் கேட்பவர்களிடத்தில் இரட்சிப்புக்கு இயேசு கேட்டுக் கொண்ட எல்லாவற்றையும் கூறத் தவறியிருக்க மாட்டார்.

## இரட்சிப்பற்ற நிகழ்ச்சிகள்

பதிவு செய்யப்பட்ட மனமாற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர் புள்ள சில நிகழ்ச்சிகள் இரட்சிப்புக்கான கிறிஸ்துவின் கேட்டுக் கொள்ளுதல்களுடைய பாகமாய் இருந்ததில்லை மற்றும் அவை மனமாற்றத்தின் மற்ற நிகழ்ச்சிகளில் எதிர்பார்க்கப்பட வேண்டியவைகளும் அல்ல: (1) இயேசு தனிப்பட்ட வகையில் சவுலுக்குத் தரிசனமானார், ஆனால் அவரை (பவுலை) ஒரு விசேஷித்த சாட்சியாகத் தாம் (இயேசு) தேர்ந்து கொண்டிருந்ததை அவர் (பவுல்) அறியச் செய்வதற்காகவே இவ்வாறு தரிசனமானார் (அப். 26:16-18). இயேசு பவுலுக்குத் தரிசனமான பிறகும் கூடப் பவுல் இன்னமும் தமது பாவங்களிலேயே இருந்தார், அவர் தமது பாவங்கள் கழுவப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது (அப். 22:16). (2) கொர்நேலியுவும், அவரது வீட்டாரும் மற்றும் அவரது நண்பர்களில் சிலரும் ஞானஸ்நானம் பெறுமுன்பு பரிசுத்த ஆவியானவரைப் பெற்றனர்; ஆயினும், இது யூதர்களைப் போலவே புறஜாதியாரும் இரட்சிப்புக்கு ஏற்றவர்கள் என்பதைப் பின்வரும் எல்லா சந்ததியாருக்கும் அறிவிப்பதற்காகத் தேவன் நிகழ்த்திய ஒரு விசேஷித்த நிகழ்ச்சியாகும் (அப். 15:7-9). பேதுரு அவர்களுக்குக் கூறிய வசனங்களின் மூலமாகவே அவர்களுக்கு இரட்சிப்பு உண்டாயிற்று (அப். 11:14), அவ்வசனத்தில் இயேசுவின் மீது விசுவாசம் கொள்வதும் (அப். 10:43) மற்றும் ஞானஸ்நானம் பெறுவதும் (அப். 10:47, 48) உள்ளடக்கப்பட்டிருந்தது.

புறஜாதியாரிலிருந்து முதன்முதலில் மனமாற்றப்பட்ட இவர்களைப் பற்றி புரூனர் பின்வருமாறு எழுதினார்:

> அதிகாரம் பதினொன்றில் பேதுரு செசரியாவில் என்ன நடந்தது என்பது பற்றி எருசலேம் சபையாருக்கு மறு ஒத்திகை காட்டினார். ‘‘ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே’’ (வ. 15) பரிசுத்த ஆவியானவர் கொர்னேலியு வீட்டார் மீதும் இறங்கினார் என்பதை அவர் வலியுறுத்துகின்றார். இந்தக் குறிப்பு இன்றியமை யாததாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் “எப்பொழுதும் ஒவ்வொரு வரிடத்திலும் செய்கின்றது போலவே” கொர்நேலியு வீட்டார் மேலும் இறங்கினார் என்று பேதுரு கூறுவதில்லை ... ஆனால் செசரியாவில் நடந்ததற்கு இணையானதாகப் பேதுரு ‘‘ஆதியிலே’’ நடந்த ஒரு நிகழ்வை மட்டுமே கொண்டு வர முடிந்தது என்ற விஷயமானது, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு பெந்தெகொஸ்தேயின் வெளிப்படுத்துதலானது குறித்த நிலைக்குக் கொண்டு வருதலாக மட்டுமின்றி அநேகமாக அறியப்படாததாகவும் இருந்தது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றது.[6]

*புறஜாதியார் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிக்க வேண்டும் என்று தேர்ந்து கொள்ளுதலை தேவன் ஏற்படுத்தியிருந்ததாலும், அவர்களைப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தியதன் மூலம் அவர் அதை அறியச் செய்திருந்ததாலும் (அப். 15:7-9), கொர்நேலியுவும் அவரது வீட்டாரும் ஞானஸ்நானம் பெறுவதைத் தடுக்கும் உரிமை மனிதருக்கு இல்லாதிருந்தது (அப். 10:47). அப்படிச் செய்வதென்பது தேவனைத் தடை செய்தலாய் இருக்கும் (அப். 11:17), அந்த அடிவைப்பை எடுத்து வைக்கப் பேதுரு மனமில்லாதவராய் இருந்தார். வழக்கத்திற்கு மாறாகப் பரிசுத்த ஆவியானவரைத் தருதல் என்ற இச்செயலானது வழக்கமான செயல் முறைமை என்று கருதப்படலாகாது. பரிசுத்த ஆவியானவருக்குள்ளாகப் புறஜாதியாரின் ஞானஸ்நானம் என்பதன் மூலமாக, இரட்சிப்பு என்பது புறஜாதியாருக்கும் உரியது என்பதைத் தேவன் நிரூபித்தார், மற்றும் புறஜாதியார், ஞானஸ்நானம் பெற்ற யூதர்களைப் போன்ற அதே தராதரமுள்ள கிறிஸ்தவர்களாய் இருக்க முடியும் என நிரூபித்தார். எல்லாக் காலத்திற்குமாக ஒருமுறை தேவன் நிரூபித்ததை மீண்டும் ஒருமுறை நிரூபிக்க அவசியம் இல்லாதிருந்தது; இந்தக் காரணத்திற்காகவே, தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்னதாகப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது மீண்டும் எப்பொழுதும் நடைபெறாது.*

## *1 கொரிந்தியர் 12:13*

*‘‘நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந் தீர்க்கப்பட்டோம்’’ என்று 1 கொரிந்தியர் நிருபம் கூறுகின்றது. யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இராஜ்யத்தைத் திறந்த இந்த இரண்டு நிகழ்ச்சிகளைக் காட்டிலும் அதிகமான தடவைகள் பரிசுத்த ஆவியான வரின் ஞானஸ்நானம் தரப்பட்டது என்று காட்டுவதற்குச் சிலர் இந்த வசனத்தைப் பயன்படுத்த நாடுகின்றனர். புரூனர் பின்வருமாறு நன்முறையில் சுட்டிக்காட்டினார்,*

> *சில கிறிஸ்தவர்களுக்கு மட்டும் கிறிஸ்துவின் ஞானஸ்நானத்திற்கு அப்பால் பரிசுத்த ஆவியானவருக்குள் இரண்டாவது, தொடர்ந்த மற்றும் தனிப்பட்ட ஞானஸ்நானம் இருப்பதாக இவ்வசனம் பேசுகிறது என்று விளக்கம் தரப்பட்டால், இவ்வசனத்தின் வார்த்தைகளுக்கு - ‘‘எல்லாரும் ... எல்லாரும்’’ - மீறுதல் செய்யப்படுவது மட்டுமின்றி கொரிந்தியர் நிருபத்தின் சந்தர்ப்பப் பொருளாக உள்ள இந்த வசனத்தின் நோக்கத்திற்கே மீறுதல் செய்யப்படுகின்றது. கொரிந்தியருக்கான பவுலின் செய்தியின் பாரமானது கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எல்லாரும் ஒருமைத்தன்மையுடன் உள்ளனர் என்பதாகவே உள்ளது.*[7]

*எல்லா விசுவாசிகளையும் ஒரே சரீரத்திற்குள்ளாக்கி ஒருமைப்படுத்து*

வதற்காக இந்த ஒரே ஞானஸ்நானத்தை எல்லாரும் பெற்றிருந்ததாகப் பவுல் கூறினார். எல்லாக் கிறிஸ்தவர்களும் இந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தனர் என்பதே அவரது விவாதத்தின் மறைபொருளாய் உள்ளது; ஆகையால், அவர்கள் எல்லாரும் அவர்களின் இனம், பின்னணி அல்லது சமூக நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது ஒரே சரீரத்திற்குள் இருந்தனர். சிறப்பான சிலர் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர் என்றால், அவர்கள் பவுல் போதித்த படியான ஒருமைப்பாட்டிற்குள் தங்களைக் கொண்டு வரும் ஒரே ஆவியினாலே ஞானஸ்நானம் பெறாதிருந்தனர் என்றாகி விடுகின்றது.

நடபடிகளின் புத்தகத்தின்படி, தண்ணீர் ஞானஸ்நானமே விசுவாசிகள் எல்லாராலும் பெறப்பட்ட ஒரே ஞானஸ்நானமாக உள்ளது, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமானது மிகவும் சிலருக்கே தரப்பட்டது. இந்தக் காரணத்திற்காகவே, தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் எல்லா விசுவாசிகளையும் ஒரே சரீரத்துக்குள் உட்படுத்து கின்றார் என்று அர்த்தப்படுகிறது என்றே 1 கொரி. 12:13 வசனமானது பொருள் கொள்ளப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ் நானப்படுத்தப்படுவதன் மூலம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக்கப் படுகின்றனர் என்று முடிவு செய்வதற்கு நடபடிகள் புத்தகத்தின் வரலாற்று ஆதாரங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை.

## முடிவுரை

யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் ஆயத்த ஊழியத்தின் மீது ஆதி சபையானது எப்படி உண்மை நிறைவுடன் கட்டியெழுப்பப்பட்டது என்பதை நடபடிகளின் புத்தகம் வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்கள் தங்களுக்கு இயேசு போதித்தவற்றையே பிரசங்கித்து நடைமுறைப் படுத்தியிருந்தனர். தங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டிருந்தவர்கள் சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த கர்த்தரும் இரட்சகரும் என்ற வகையில் இயேசுவின் இரத்தத்தின் மீது தாங்கள் கொண்ட விசுவாசத்தினாலேயே அவ்விதமாய் சுத்திகரிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெற்று அவருக்கே தங்கள் வாழ்வை ஒப்புக் கொடுத்தனர். அவர்களின் ஒப்புக் கொடுத்தலினால், அவர்கள் பழங்கால உலகத்தில் எரியூட்டப்பட்ட விளக்காய் இருந்து இயேசுவின் மூலம் வழிகாட்டும் சுடரொளியைப் பெற்றிருந்தனர். அவர்களின் ஞானஸ்நானம் என்பது அவர்களின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக இருந்து, அதனால் உலக வரலாற்றிலும் அது ஒரு திருப்பு முனையாகிற்று.

குறிப்புகள்

[1]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 189. [2]Ibid. [3]Ibid., 216-17. [4]Ibid., 218. [5]A. T. Robertson, *A Grammar of the Greek New Testament,* 4th ed., (Nashville: Broadman Press, 1923), 1113. [6]Bruner, 194. [7]Ibid., 292.

# பவுல் ஞானஸ்நானத்தைப் போதித்தார்

*... பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான் ... கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 18:5-8).*

*பவுல் - இவர் சபையை மிகவும் துன்புறுத்திய சவுல் என்றும் அறியப்பட்டவர் - இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மாபெரும் பிரசங்கியார் ஆனார். அவர் இயேசுவைத் தரிசித்த பிறகு மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்து, பிறகு தனது பாவங்கள் கழுவப்படுவதற்காக ஞானஸ்நானம் பெற்ற பிறகு அவரது ஊழியம் தொடங்கிற்று (அப். 22:16). ஒரு காலத்தில் பவுல் துன்புறுத்தியிருந்த விசுவாசத்திற்கே அவர் கீழ்ப்படிந்து, பிரசங்கிக்கத் தொடங்கினார் (கலா. 1:23). அதை அவர் மனிதர் களிடமிருந்து கற்றுக் கொண்டதில்லை (கலா. 1:11, 12) ஆனால் ஆவியானவர் மூலமாக (எபே. 3:3) இயேசுவிடமிருந்தே (1 கொரி. 14:37) கற்றுக் கொண்டார்.*

*பவுல் தாம் ஒரு அப்போஸ்தலர் என்ற வகையில், ஆதியில் பன்னி ரெண்டு அப்போஸ்தலர்களும், புதிய ஏற்பாட்டின் மற்ற தீர்க்கதரிசிகளும் போதித்த அதே செய்தியையே போதித்தார். இந்தக் காரணத்திற்காகவே பவுலின் சுவிசேஷமானது ஏவபட்ட மற்றவர்களுடையதைப் போலவே உண்மையான ஒரே சுவிசேஷமாக இருந்தது. வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் எவரும் சபிக்கப்பட்டவராய் இருப்பார் (கலா. 1:8, 9). பேதுருவின் கூற்றுப்படி, பவுலின் எழுத்துக்கள் பேதுரு எழுதியிருந்தவை களுக்கு இணக்கமானவைகளாகவும், மற்ற வேத வசனங்களைப் போலவே அதே அதிகாரமுடையவைகளாகவும் இருந்தன (2 பேது. 3:15-17). பவுல் போதித்த யாவையும் ஏவப்பட்ட மற்ற மனிதர்கள் போதித்தவற்றின் பிரதிபலிப்பென்றே கருதப்பட முடியும்.*

*பவுலின் சில பிரசங்கத்தினுடைய சுருக்கக் குறிப்புகள் நடபடிகளின் புத்தகத்தில் பாதுகாக்கப்பட்டிருப்பினும் (13:16-41; 14:15-17; 22:1-21; 26:2-23), அவரது சுயஞானஸ்நானம் பற்றிய குறிப்பு தவிர (22:16), ஞானஸ்நானத்தைப் பற்றிய அவரது எடுத்துரைப்புகள் எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கப்படவில்லை. அவரது பிரசங்கத்தைக் கேட்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் (16:15, 33; 18:8) என்பது அவரது பிரசங்கத்தில் ஞானஸ்நானமும் உள்ளடங்கியிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.*

*ஞானஸ்நானம் பற்றிய அவரது புரிந்து கொள்ளுதலையும், அவர் சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்திருந்ததையும் அவரது நிருபங்கள் வெளிப் படுத்துகின்றன (1 கொரி. 1:16).*

*ஞானஸ்நானம் என்பது ஒரு வெற்றுச் சடங்கோ, ஒரு வீணான சடங்காச்சாரமோ அல்லது கண்மூடித்தனமான கீழ்ப்படிதலோ அல்ல என்றும், அது இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு இருதய மாற்றத்துடனான ஒரு பதில்செயல் என்றும் பவுலின் நிருபங்கள் விவரிக்கின்றன.*

## *ரோமர் 6:1-18*

*ரோமர் 5ல் அவரது வாழ்வு, இரத்தம் மற்றும் மரணம் (5:9, 10) ஆகியவற்றின் மூலமாக நீதிமானாக்கும் (5:2, 15, 17, 20, 21), இரட்சிக்கும் மற்றும் தேவனிடத்தில் நம்மை ஒப்புரவாக்கும் கிருபையின் (5:1, 9, 10) அடிப்படை என்று பவுல் முன் வைக்கின்றார். இந்த பயன்கள் ஒருவர் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை ஞானஸ்நானத்தின் மூலம் பகிர்ந்து கொள்ளுகையில் கிருபையினால் தரவழைக்கப்படுகின்றன, இவைகள் பாவத்தை உற்சாகப்படுத்துவதற்கானவைகள் அல்ல (ரோமர் 6:1, 2) ஆனால் பாவம் நிறைந்த வாழ்வில் இருந்து நம்மை விடுவிப்பதற்கானவைகளாகும் (ரோமர் 6:2). ஞானஸ்நானமானது இருதயத்திலிருந்து ஏற்ற விதத்தில் புரிந்து கொள்ளப்பட்டு, கீழ்ப்படியப் படும் பொழுது, ஒரு மரணத்தையும், பாவத்திலிருந்து விடுதலையையும் கொண்டு வரும் (ரோமர் 6:4-6, 17, 18).*

*ரோமர் 6:3, 4ல் ஞானஸ்நானம் பற்றிய பவுலின் கலந்துரை யாடலானது இயேசுவின் மரணத்தினால் வரும் பயன்களை கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தின் வழியாகச் சாத்தியமுள்ளதாவதாக இருப்பினும், இயேசுவின் மரணத்தினால் வரும் பயன்களுக்குக் கதவைத் திறக்கும் ஒரு செயல்பாடாக ஞானஸ்நானத்தை முன் வைப்பதில்லை. மாறாகப் பவுல், பாவத்திற்கு மரித்தல் என்பது ஞானஸ்நானத்தின் பொழுது ஒருவர் இயேசுவின் மரணத்தை இருதயத்தி லிருந்து வரும் ஒரு பதில்செயலினால் பகிர்ந்து கொள்கின்ற செயலாக, இதை இயேசு நமக்குச் செய்துள்ளதற்காகப் பதிலாகச் செய்து பாவத்திலிருந்து விடுதலை பெற்ற புதிய வாழ்வை விளைவிக்கும் செயலாகக் காண்பிக்க விரும்பினார்.*

*“ஞானஸ்நானத்தின் மூலம் ஒருவர் இயேசுவின் மரணத்திற்குள்ளாகப் பிரவேசிக்கின்றார். ஒருவருடன் மரணத்தில் பிரவேசித்தல் என்பது அவருடன் மரணமடைதல் என்று அர்த்தப்படுத்துவதால், ஞானஸ்நானம் என்பது இயேசுவுடனான ஒரு மரணத்தைக் கொண்டு வருவதாக உள்ளது. இந்த விஷயத்தில், மரணம் என்பது பாவத்திற்கு மரித்தல் ஆகவும் அதைத் தொடர்ந்து ஒருவரின் கடந்த காலப் பாவத்திலிருந்து விடுதலையான புதிய வாழ்வையும் கொண்டதாய் இருக்கின்றது” என்று பவுல் சொல்கிறார். “பாவத்திற்கு மரித்து” (ரோமர் 6:2) என்ற சொற்றொடரின் மூலம்*

கிறிஸ்தவர்கள் பாவத்திற்கு செய்யும் ஊழியம் மற்றும் செயல்முறை ஆகிய வற்றிற்கு மரிக்கின்றனர் என்று பவுல் அர்த்தப்படுத்தினார். இந்த மரணமானது பாவத்திலிருந்து விடுதலை பெற்ற ஒரு புதிய வாழ்வை, இனியும் பாவத்தை இலக்காகக் கொண்டிராத வாழ்வை விளைவிக்க வேண்டும். ஞானஸ்நானமே பாவத்திற்கு மரிக்கும் இடமாயுள்ளது, ஏனெனில் ஒருவர் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் செய்யப் படுவதினால் பாவத்திற்கு மரிப்பதில் பிரவேசிக்கின்றார்: "... பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6:6). இவ்வழி முறையில், ஞானஸ்நானத்தில் பாவத்திற்கு மரித்தவர் "பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்" (ரோமர் 6:7, 18).

இயந்திரத்தனமான சரீரப் பிரகாரமான ஒரு செயல்பாடு மட்டும் பாவத்திலிருந்து விடுதலையான ஒரு புதிய வாழ்வைச் செயல்படுத்தி விடும் என்ற முடிவை எவரொருவரும் எடுத்து விடாதிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகப் பவுல், ''பாவத்திலிருந்து விடுதலையான'' ஒருவர் "ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியும்" நபராய் ஆகும் பொழுது (ரோமர் 6:17) "நீதிக்கு அடிமையாகிறார்" என்று கூறப் புகுந்தார் (ரோமர் 6:18). ஞானஸ்நானச் செயல்பாட்டின் மூலமாக இது நடைபெறுகின்றது, ஆனால் ஒரு நபர் சரீரப் பிரகாரமாகச் செய்யும் செயல்பாட்டினால் மட்டும் இது நடப்பதில்லை. இயேசு அடக்கம் பண்ணப்பட்டது போல ஒரு நபர் சரீரப் பிரகாரமாக அடக்கம் செய்யப்படுவதுடன், அவர் தமது பழைய வாழ்வுக்கு மரித்து புதிய வாழ்வுக்குள் பிரவேசிக்க அதை (பழைய வாழ்வை) அடக்கம் பண்ணுவதில் ஆவிக்குரிய வகையில் ஈடுபடுவதினால் இது நடந்தேறுகின்றது.

பவுல் ஞானஸ்நானத்தை ஒரு பலியாக முன் வைத்தார், அதை ஒரு மிருக பலியாக அல்ல, ஒருவருடைய சுயத்தைப் பலியிடுதலாக முன் வைத்தார் (ரோமர் 6:6). இவ்வழியில், பாவத்திற்குப் பலி செலுத்துதல் என்பது புதிய உடன்படிக்கையின் கீழ் இன்னமும் நிலவுகின்றது - இது ஒரு மிருகத்தைப் பலியிடுதல் அல்ல, ஆனால் பாவியொருவர் கிறிஸ்துவுக்காகப் புதிய வாழ்க்கை வாழும்படியாக அவருடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டவராகும் பொழுது (கலா. 2:20; ரோமர் 12:1) தமது பழைய இயல்பைப் பலி செலுத்தியவராயிருத்தல் வேண்டும். பவுலைப் பொறுத்த மட்டில் இந்த மரணமும் சிலுவையில் அறையப்படுதலும் நிகழும் பொழுதுதான் இது ஞானஸ்நானமாயுள்ளது, ஆனால் ஒப்புக் கொடுக்கப் பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிபவருக்கு மட்டுமே இது உரியதாகும் (ரோமர் 6:6, 7, 17, 18).

வெற்றுச் சடங்கு என்பது இப்படிப்பட்ட ஒரு பலியைச் செயல்படுத்த முடியாது. ஞானஸ்நானத்திற்கு குற்ற உணர்வுடன் மற்றும் பாவத்தின் அடிமைத்தனத்துடன் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளாமல் ஞானஸ்நானமானது தேவனுக்குக் கீழ்ப்படிதலாயிருக்கும் என்று முடிவு செய்தலானது அந்தச் செயல்பாட்டின் முழுக் கருத்தையும் தவறவிடுதலாயிருக்கின்றது. ஞானஸ்நானம் என்பது ஒரு புதிய வாழ்வை

*விளைவிக்கின்ற வகையில் ஒரு நபரை பழைய வாழ்வுக்கு மரிக்கச் செய்வதாக உள்ளது. ஞானஸ்நானம் பெறுகின்றவர் பாவத்தை நீக்கிப் போட்டு, அதை இனியும் செயல்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கு மளவுக்கு பாவத்தைப் பற்றிய கவலையுள்ளவராய் இருக்கிறார். இவ்வழிமுறையில் அவர் ஞானஸ்நானத்தில் பாவத்திற்கு மரித்து புதிய வாழ்வு வாழ விடுதலை பெற்றவராகின்றார் (ரோமர் 6:6).*

*பசியாயிருக்கும் ஒரு நபர் அவருக்கு உணவளிக்கப்பட்டால் அதை எடுக்க விரைவார், ஆனால் மரித்துப் போன ஒருவர் அவருக்கு விருப்பமான உணவு அவரது மூக்கின் கீழ் வைக்கப்பட்டாலும் அதை எடுத்துக் கொள்ள முடியாது. இதே வகையில், பாவத்தில் ஈடுபட்டிருந்து ஆனால் பாவத்திற்கு மரித்துள்ள ஒருவர் இனியும் பாவத்தினால் கவர்ந்திழுக்கப்படக் கூடாது.*

*மனந்திரும்புதல் என்பது ஒரு புதிய வாழ்வைத் தொடங்குவதற்காக இருதயத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஆகும்; ஞானஸ்நானத்துடன் இணைந்திருக்கையில் இது ஞானஸ்நானத்தில் அவருடனே கூட அடக்கம் பண்ணப்படுவதால் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை அடையாளப் படுத்தும் இருதயம் கொண்ட நபரிடம் புதிய ஜீவனை வளரச் செய்யத் தீர்மானிக்கின்றது. இவ்வழிமுறையில், ஒருவர் ஞானஸ்நானம் பெறும்பொழுது ஒரு புதிய பிறப்பானது ஏற்படுகின்றது. புறம்பான செயல்பாடு மட்டும் இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதில்லை. (அது அவ்விதம் கொண்டு வர முடிந்ததென்றால், பலம் மிகுந்தவர் மற்றவர்களை புதிய வாழ்க்கைக்குள் கொண்டு வருவதற்காக வலுக்கட்டாயமாக ஞானஸ்நானப் படுத்த முடியுமே.) இப்படிப்பட்ட ஒரு மாற்றமானது இருதயத்திலிருந்து வரும் பதில்செயலால் மட்டுமே கொண்டு வரப்பட முடியும். இந்த முடிவு உண்மையாயிருப்பதில்லையென்றால், பவுல் ரோமர் 6:1-18ல், இருதயமானது ஒரு சரீரப் பிரகாரமான செயலினால் மட்டும் மாற்றப்படுகின்றது என்பதில் நிறைவடைந்தார் என்றாகி விடும், இது பழைய ஏற்பாட்டுடனோ அல்லது புதிய ஏற்பாட்டுடனோ ஒத்துப் போகாத ஒரு முடிவாக உள்ளது.*

## கலாத்தியர் 3:26, 27

*ஞானஸ்நானத்திற்கும் மாற்றப்பட்ட வாழ்வுக்கும் இடையிலுள்ள இதே வகையான ஒரு தொடர்பு கலா. 3:26, 27ல் உள்ளது. இவ்விடத்தில் பவுல் ஞானஸ்நானத்தை விசுவாசத்தினால் ஒருவர் தேவனுடைய பிள்ளையாகும் தருணமாக, கிறிஸ்துவை அணிந்து கொள்ளுமிடமாக முன் வைத்தார். தேவனுடைய பிள்ளையாயிருத்தல் என்பது தேவனுடன் உறவு படுத்தப்பட்டிருப்பதையும், தேவ இயல்பைப் பெற்றிருக்கும் ஒரு கருத்தையும் உள்ளடக்குகின்றது. ("குமாரன்" அல்லது "குழந்தை" என்பதன் பயன்பாடானது கிரேக்க மொழியில் huios எனப்படும், இது சில வேளைகளில் அந்த இயல்பு என்று அர்த்தப்படுகின்றது, மத். 23:15; லூக். 16:8; யோவா. 12:36; எபே. 2:2; 1 தெச. 5:5).*

*ஒருவர் தேவனுடைய இயல்பை மேற்கொள்வதினால் கிறிஸ்துவை*

*அணிந்து கொள்கின்றார். ஞானஸ்நானத்தின் புறம்பான செயல்பாடு தன்னிலே ஒரு நபரின் இயல்பில், கடினப்பட்ட ஒரு குற்றவாளியை சபை கூடிவரும் கட்டிடத்திற்கு இழுத்து வந்து, அவரை ஒரு மரியாதைக்குரிய குடிமகனாக அல்லது ஒரு "பரிசுத்தவானாக" ஆக்கும் செயல் விளைவைச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஒரு மாற்றமானது இருதயத்திலிருந்து வரும் ஒரு பதில்செயலினால் மட்டுமே கொண்டு வரப்பட முடியும். இருதயத்திலிருந்து ஏற்ற வகையில் புரிந்து கொண்டு, பதில்செயல் செய்யும் நபர் மறுபடியும் பிறந்தவராயிருக்கின்றார், அதாவது அவர் ஞானஸ்நானம் பெறும்பொழுது தேவனுடைய பிள்ளையாகின்றார். வெறும் சடங்காச்சாரமானது இப்படிப்பட்ட ஒரு மாற்றத்தைக் கொண்டு வர முடியாது.*

## ஒரே ஞானஸ்நானம்

*ஒருமைப்பாட்டைப் பற்றிய ஒரு ஆய்வுரையில் பவுல் ஒரே ஞானஸ்நானம் என்பதை ஒரே சரீரம், ஆவி, நம்பிக்கை, கர்த்தர், விசுவாசம் மற்றும் தேவன் ஆகியவற்றுடன் கூடக் குறிப்பிட்டார் (எபே. 4:4-6). இவைகளில் மூன்று தேவ இயல்புகளாகும் (ஆவி, கர்த்தர் மற்றும் தேவன் அவர்கள் உறவுமுறையின் வரிசையில் ஏறுமுக ஒழுங்கில் வைக்கப் பட்டுள்ளன); சரீரம் மற்றும் விசுவாசம் ஒருமைப்பாட்டைக் கொண்டு வருவதற்காகத் தேவத்துவத்தின் மூவரால் அளிக்கப்பட்டவைகளாய் இருக்கின்றன மற்றும் இரண்டு (நம்பிக்கையும் ஞானஸ்நானமும்) மனிதரின் பதில்செயலாய் இருக்கின்றன. இந்த ஏழின் அட்டவணையில் ஞானஸ் நானமும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்ற உண்மையானது ஒருமைப் பாட்டிற்கான தேவனுடைய திட்டத்தில் ஞானஸ்நானம் என்பது சில முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றது.*

*ஞானஸ்நானமானது ஒருமைப்பாட்டைக் கொண்டு வர முடியும், ஏனெனில் இருதயத்திலிருந்து பதில்செயல் செய்கின்றவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகின்றனர் (தேவனுடைய இயல்பைப் பெறுகின்றனர்) மற்றும் அவர்கள் கிறிஸ்துவை அணிந்து கொள்கின்றனர். இவ்வழிமுறையில், ஞானஸ்நானமானது எல்லா விதப் பின்னணியுடைய மக்களையும் ஒரே ஆவிக்குரிய இயல்பைப் பெற்ற மக்களாக மாற்றுகின்றது, அவர்களை "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீன னென்றும், ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; [ஆனால் அதற்குப் பதிலாக] ... எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28) என்ற வகையிலாக்குகின்றது. இதனுடன் இணைந்துள்ள எந்த ஆவிக்குரிய செயல்களும் இல்லாத சரீரப் பிரகாரமான எந்த செயல்பாடும் ஒரே வகையான இயல்பையும் ஒருமைப்பாட்டையும், வித்தியாசப்பட்ட மக்களிடையே கொண்டு வர முடியாது. சுவிசேஷத்தின் உபதேசத்திற்குப் பதில்செயல் என்ற வகையில் இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படிதல் மட்டுமே இப்படிப்பட்ட மாறுதலையும் ஒன்றிணைப்பையும் உண்டாக்க முடியும்.*

# கொலோசெயர் 2:11-13

*கொலோ. 2:11-13ல் பவுல் ஞானஸ்நானத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு ரோமர் 6:3, 4ல் காணப்படும் இதே வகையான உருவகத்தைப் பயன்படுத்தினார்; இருப்பினும், பவுல் கூடுதலான ஒரு நோக்கத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார். ரோமர் 6:1-18ல் பவுல், அந்தக் கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் ஏன் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கக் கூடாது என்பதற்குக் காரணங்களைக் கொடுத்தார். கொலோ. 2:11-13ல் அவர் இயேசுவின் மாபெரும் தன்மை (கொலோ. 2:9, 10) மற்றும் அவருக்குள் இருப்பவர்களால் பெறப்படும் பயன்கள் ஆகியவை பற்றிக் கலந்துரையாடினார்.*

*கிறிஸ்துவுக்குள் இருக்கும் நபர் பரிபூரணராக்கப் படுகின்றார் (கொலோ. 2:10), வாழ்க்கையைப் பற்றிய அவரது மாம்சப் பிரகாரமான அணுகுமுறை நீக்கப்படுகின்றது, மற்றும் அவரது மீறுதல்கள் மன்னிக்கப் படுகின்றது. அவர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுகையில் இது நடைபெறுகின்றது (கொலோ. 2:11-13). இவ்விடத்தில் "விருத்தசேதனம்" என்ற வார்த்தை வாழ்க்கையைப் பற்றிய ஒருவரது சரீரப் பிரகாரமான அணுகுமுறையை நீக்குவதை விவரித்து ஒப்பிடும் வழி வகையில் பயன்படுத்தப்படுகின்றது. ''உங்கள் அக்கிரமங்களில் மரித்தவர்களாய்" என்ற சொற்றொடரானது தேவனை விட்டுப் பிரிந்த நிலையையும் பாவத்திற்கு உதவியற்ற நிலையில் கீழ்ப்படிந்து, அதனால் அந்நபர் ஆவிக்குரிய வாழ்வற்று விடப்படுதலையும் விவரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் ஞானஸ்நானம் பெறும் முன்பு (கொலோ. 2:13) அவர் பாவத்தில் மரித்தவராய் (ஆவிக்குரிய வாழ்வற்றவராய்) மற்றும் விருத்தசேதனமற்றவராய் (இன்னமும் மாம்சப் பிரகாரமான வாழ்வை வாழ்பவராய்) இருக்கின்றார். அவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது, ஒரு மாற்றம் ஏற்படுகின்றது; அவர் விருத்தசேதனம் பண்ணப் படுகின்றார் (வாழ்வு பற்றிய அவரது பழைய அணுகுமுறை நீக்கப்படுகின்றது), மற்றும் அவர் ஜீவனுள்ளவராக்கப் படுகின்றார் (ஒரு புதிய ஆவிக்குரிய வாழ்வு தரப்படுகின்றது). ஆவிக்குரிய ஈடுபாடு இணைந்திராத சரீரப்பிரகாரமான செயல் எதுவும் ஒருவருடைய வாழ்வில் இப்படிப்பட்டதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஞானஸ்நானம் என்பது ஒரு மந்திரவாதமான, பொருள் உணராச் செயல்பாடு என்ற வகையில் வாழ்வை மாற்றுவதில்லை; இதற்குப் பதிலாக இதன் நோக்கம், அர்த்தம் மற்றும் ஆவிக்குரிய ஈடுபாடு ஆகியவற்றைப் புரிந்து கொள்பவரின் வாழ்வை இது ஆவிக்குரிய வகையில் மாற்றுகின்றது.*

*கொலோ. 2:12, 13ன்படி, ஞானஸ்நானத்தில் இரு விஷயங்கள் நடந்தேறுகின்றன: (1) ஒருவர், இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய தேவன் ஆவிக்குரிய மரணத்திலிருந்து தம்மையும் ஆவிக்குரிய வாழ்வுக்கு உயிர்ப்பிக்க முடியும் என்று விசுவாசம் கொண்டுள்ளதால் அந்நபர் மரணத்திலிருந்து வாழ்வுக்குக் கொண்டு வரப்படுகின்றார்; மற்றும் (2) அவர் கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணப்பட்டு, கூட*

*உயிர்த்தெழுந்து, கூட வாழ்வதால் அவர் ஆவிக்குரிய வகையில் விருத்தசேதனம் பண்ணப்படுகின்றார். ஞானஸ்நானத்திற்கு சரீரப் பிரகாரமாக ஒருவர் தம்மை ஒப்புக் கொடுப்பதினால் அவர் இயேசு கிறிஸ்துவின் அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவன் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்கின்றார். இந்த உண்மையானது உணரப்பட்டு ஆவிக்குரிய வகையில் பகிர்ந்து கொள்ளப்பட்டால், அந்தச் செயல்பாடானது அவரது மாம்சப் பிரகாரமான பழைய வாழ்வை நீக்கிப் போட்டு அவரை ஆவிக்குரிய புதிய வாழ்வுக்குள் கொண்டு வரும். இப்படிப்பட்டதொரு செயல்முறையின் மூலமாக அவர் மறுபடியும் பிறப்பார், அவர் ஒரு புதிய ஜீவனுக்குள் வருவார் (யோவா. 3:3-5), மற்றும் அவரது எல்லா மீறுதல்களும் மன்னிக்கப்படும் (கொலோ. 2:13).*

## விசுவாசம், கிருபை மற்றும் ஞானஸ்நானம்

*வாழ்வை மாற்றி பாவங்களுக்கு மன்னிப்பைக் கொண்டு வரும் ஞானஸ்நானம் என்பது தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள ஆசீர் வாதத்தைக் கொடுப்பார் என்று அவர் மேல் கொண்டுள்ள விசுவாசத்தின் அடிப்படையிலான ஞானஸ்நானமாய் உள்ளது. ஞானஸ்நானம் பெறுபவர் அந்த ஆசீர்வாதமானது பெறப்படக் கூடியது என்று புரிந்து கொள்ளும் பொழுதுதான் விசுவாசம் நிலவ முடியும். ஞானஸ்நானத்திலேயல்ல ஆனால் தங்கள் பாவங்களை மன்னிப்பதற்கான தேவனுடைய கிரியையின் மேல் தங்கள் விசுவாசத்தை வைப்பவர்களுக்கே (கொலோ. 2:12) இயேசு கிருபையினாலே இரட்சிப்பை அளிக்கின்றார்.*

G. R. *பீஸ்லே - முர்ரே அவர்கள், விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்குப் பதில்செயல் செய்பவர்களுக்குக் கிருபையின் மூலமாகக் கிடைக்கும் தேவனுடைய வரங்களைச் சரியாகக் குறிப்பிட்டார்:*

> *விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்கு தேவனால் கொடுக்கப்படும் கிருபையின் இந்த அடையாளமானது பெற்றுள்ள ஒரு பின்விளைவானது தப்பிக்கக் கூடாததாக எனக்குத் தோன்றுகின்றது: விசுவாசத்திற்குத் தேவனுடைய கிருபையுள்ள அளிப்பானது ஞானஸ்நானத்தின் சந்தர்ப்பப் பொருளுக்குரியதாக இருக்கின்றது, இது ஞானஸ்நானத்திற்குத் தேவனுடைய கிருபையுள்ள அளிப்பானது விசுவாசத்திற்கான அளிப்பாகவே உள்ளது என்று எண்ணப்படுமளவுக்கு உள்ளது. விசுவாசமானது இவ்வித வரங்களை உரிமைகோரத் தகுதி படைத்தது அல்ல மற்றும் ஞானஸ்நானமானது இவைகளை உண்டாக்கும் வல்லமை பெற்றதுமல்ல; எல்லாமே மனிதரை விசுவாசத்திற்கும் ஞானஸ் நானத்திற்கும் கொண்டு வருகிறவரும், தம்முடைய ராஜரீகத்தினாலே தம்முடைய அளிப்பை இவ்விதம் கட்டளையிட வல்லவருமாகிய தேவனால்தான் ஆகின்றது. ஆகையால் விசுவாசமானது தன்னிலே போதுமானது என்று குறிப்பிடலாகாது; சுவிசேஷம், வாக்குறுதிகள், சபை மற்றும் அவைகளின் தேவைகள் ஆகியவற்றைக் கிறிஸ்துவே கொண்டு வருகின்றார். ஞானஸ்நானம் என்பது தானாகவே செயல்*

*படுவது என்றும் கருதப்படக் கூடாது. விசுவாசத்தின் பணியை தேவன் ஞானஸ்நானத்தைக் கேட்கும் மனிதரின் எண்ணப்போக்கைக் கருதாது செயல்படுகிறார் என்றோ அல்லது தேவன் ஞானஸ்நானத்தில் செய்வதைப் புரிந்து கொள்ளாத நிலையில் உள்ளது போதும் என்றோ அல்லது ஞானஸ்நானத்திற்குப் பிறகு ஏற்ற பதில்செயல் செய்யும் ஒரு விருப்பமானது சாட்சியாகும் என்றோ குறிப்பிடுவது தவறானதாக உள்ளது. மாறாக, ஞானஸ்நானம் என்பது விசுவாசத்திற்காக தெய்வீக நியமனம் பெற்ற கிருபையின் முன் தீர்மானமாக உள்ளது.*[1]

## எபே. 2:4-9 மற்றும் கொலோ. 2:12, 13 ஆகியவற்றின் ஒப்பீடு

*இரட்சிப்புக்கு விசுவாசம் ஒன்று மட்டுமே அவசியமானது என்று உரிமைகோருவதற்கு மதக் குழுவினர் பலர் எபே. 2:8, 9ஐப் பயன் படுத்துகின்றனர். இதை அவர்கள் நம்புவதாலும், ஞானஸ்நானத்தை ஒரு கிரியை என்று கருதுவதாலும், ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்காக தேவனால் கேட்கப்படுபவைகளில் ஒன்று என்பதை அவர்கள் தவிர்த்து விடுகின்றனர்.*

*இவ்விதமாக வாதம் செய்தல் என்பது இரட்சிப்பில் இருந்து விசுவாசத்தை நீக்குவதாயுள்ளது, ஏனெனில் 1 பேது. 3:21ல், "இப்பொழுது ஞானஸ்நானம் நம்மையும் இரட்சிக்கிறது" என்று பேதுரு எழுதினார். அந்த வசனத்தில் உள்ளடக்கப்படாத எல்லாவற்றையும் தவிர்க்கும்படி ஒவ்வொரு வசனமும் தனித்தனியே நிற்க வேண்டுமென்றால், விசுவாசமும் மனந்திரும்புதலும் இரட்சிப்புக்கு அவசியமானவைகளல்ல, ஏனெனில் அவைகள் 1 பேது. 3:21ல் குறிப்பிடப்படவில்லை. வேதாகமத்தின் எந்த ஒரு வசனமும் மற்ற வசனங்களில் தேவனுக்கு அவசியமாய் இருப்பவைகளைத் தவிர்ப்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடாது. அப்படிச் செய்வதானது வேதாகமம் தனக்குத்தானே முரண்படுகின்றது எனச் செய்து விடும். வேதாகமத்தைச் சரியாகக் கையாளுவதற்கு, ஒருவர் மற்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டவைகளைத் தவிர்த்து விடக் கூடாது, ஆனால் மற்ற வசனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லாவற்றையும் உள்ளடக்க வேண்டும். ஒருவர் இவ்வழி முறையில் வேதாகமத்தை அணுகினால் வேதாகமானது தன்னில் தானே இசைவானதாயிருக்கும்.*

*எபே. 2:4-9 மற்றும் கொலோ. 2:12, 13 ஆகியவற்றின் ஒரு ஒப்பீடானது எபே. 2:8 மற்றும் 1 பேது. 3:21 ஆகியவற்றிற்கு இடையே உள்ள இசைவைக் காண்பிக்கின்றது. இந்த வசனங்களில் பல்வேறு விளக்கங்களைப் பற்றிய பவுலின் பயன்பாடானது ஒருவரால் புரிந்து கொள்ளப்படும் போது இந்த இசைவு உறுதியானதாகின்றது. அவர், "தேவனோ ... அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள், ... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்'' (எபே. 2:4-7). எபே. 2:8ல் அவர் ''கிருபையினாலே*

இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று வசனம் 5ல் காணப்படும் சொல் விளக்கத்தை மீண்டும் எடுத்தாளுகின்றார்.

ஒருவர் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறார் என்பதைப் பவுல் நம்பினாரா இல்லையா என்பது கேள்வியல்ல, ஆனால் ஒருவர் எப்பொழுது கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறார் என்று அவர் நம்பினார் என்பதே கேள்வியாயுள்ளது. இதை எபேசுவில் இருந்த சபையார் பவுலின் நேரடியான போதனையின் மூலம் புரிந்து கொண்டிருப்பார்கள், நாம் மற்ற எழுத்துக்களில் ஆராய்ச்சி செய்வதினால் அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்று கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த விஷயத்தைப் பற்றிய பவுலின் புரிந்து கொள்ளுதலானது அவர் கொலோசேயில் இருந்த சபையாருக்கு எழுதியதில் தெளிவாய் உள்ளது:

> ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப் பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமை யினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, உங்கள் அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து (கொலோ. 2:12, 13).

எபேசியர் மற்றும் கொலோசெயர் நிருபங்களுக்கிடையே உள்ள பொருள் தொடர்புகளைக் கவனியுங்கள்: (1) அக்கிரமங்களில் மரித்திருத்தல் (எபே. 2:5; கொலோ. 2:13), (2) அவருடனே கூட உயிர்த்தெழுதல் (எபே. 2:6; கொலோ. 2:12), (3) அவரோடே கூட வாழ்தல் (எபே. 2:5; கொலோ. 2:13), (4) விசுவாசத்தின் மூலமாக (எபே. 2:8; கொலோ. 2:12), (5) கைகளினால் அதாவது கிரியைகளினால் ஏற்படுத்தப்படாமை (கொலோ. 2:11; எபே. 2:9), மற்றும் (6) இரட்சிக்கப்படுதல், அதாவது எல்லா மீறுதல்களும் மன்னிக்கப்படுதல் (எபே. 2:8; கொலோ. 2:13).

இந்தக் கூற்றுக்கள் யாவும் ஒன்று போல உள்ளன என்ற உண்மையானது பவுல் அதே நிகழ்ச்சியைக் கையாண்டு கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுத்துவதாயிருக்க வேண்டும். அவரது வாசகர்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது தங்கள் அக்கிரமங்களிலிருந்து விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருந்தனர். எபே. 2:8ல் உள்ள "இரட்சிக்கப்பட்டீர்கள்" என்ற சொற்றொடரானது ஒரு முற்றெச்ச வினையாக உள்ளது, இது பவுல் கடந்த காலச் செயல்பாட்டின் காரணத்தினால் நிலவும் ஒரு நிலைமையைக் கருதினார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. "மன்னித்து" (கொலோ. 2:13) என்பது ஒரு aorist எச்சவினையாக இருத்தலானது கடந்த காலச் செயல்பாடு எப்பொழுது நிறைவாக்கப் பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

இது எப்பொழுது நடைபெறுகிறதென்று பவுல் கூறுகின்றார்? ஞானஸ்நானத்தில் ஒருவர் அடக்கம் பண்ணப்பட்டு விசுவாசத்தினாலே அவரோடே கூட உயிர்ப்பிக்கப்படுதல் என்பது தேவனுடைய கிரியையாய்

*இருக்கின்றது (கொலோ. 2:12).*

*பவுலின் கூற்றுப்படி இரட்சிப்பு என்பது கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு ஏற்படுவதாக உள்ளது. இருப்பினும், ஒருவர் கிறிஸ்துவுடன் உயிர்ப்படைந்து அவருடன் வாழும்படியாக்கப்படும் வரைக்கும் கிருபையினாலான அந்த இரட்சிப்பு வருவதில்லை (எபே. 2:5). தேவனுடைய கிரியையில் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் ஒருவர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப் பிக்கப்படும் பொழுது இது நடந்தேறுகின்றதென்று பவுல் தெளிவாகப் போதித்தார் (கொலோ. 2:12, 13). இரட்சிப்பை மற்றும் மன்னிப்பைக் கொண்டு வரும் தேவகிருபையானது ஒருவர் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுகையில் விசுவாசத்தின் மூலமாகக் கொண்டு வரப்படுகின்றது. விசுவாசமானது ஞானஸ்நானத்தைத் தவிர்க்கின்றது என்று போதிக்கும் எவரொருவரும் எபேசியர் மற்றும் கொலோசெயர் நிருபங்களில் உள்ள பவுலின் போதனையில் காணப்படும் இணைப்புறவை அழிக்கின்றார்.*

*எபே. 2:4-9 மற்றும் கொலோ. 2:12, 13 ஆகியவை இணைக்கப்படும் பொழுது, இரட்சிப்பின் மீதான பவுலின் போதனையானது உறுதியானதாகின்றது:*

> *நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த பொழுதே தேவன் நம்மை ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணி தேவனுடைய கிரியை மீதுள்ள விசுவாசத்தினால் அவரோடே கூட உயிர்ப்பித் துள்ளார் [இது நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது, ரோமர் 6:3], இது நமது மீறுதல்கள் யாவற்றையும் மன்னித்து நம்மைக் கிறிஸ்துவோடு கூடி வாழச் செய்கின்றது (கிருபையினாலே நீங்கள் இரட்சிக்கப் பட்டீர்கள்) மற்றும் வருங்காலங்களில் அவர் (தேவன்) கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அவரின் இரக்கத்தின் கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியங்களைக் காண்பிக்கும்படியாக நம்மை கிறிஸ்து இயேசுவுடன் உன்னதங்களில் அமரப் பண்ணினார். ஏனெனில் நீங்கள் கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; அது உங்களால் ஆனதல்ல, அது தேவனு டைய ஈவாக உள்ளது; எவரொருவரும் மேன்மை பாராட்டாத படிக்கு இது [சொந்தக் கரங்களினால் ஆன] கிரியைகளின் விளைவல்ல.*

*ஞானஸ்நானமானது பாவங்களை மன்னிக்கும் உள்ளான வல்லமையைத் தன்னிலே பெற்றிருப்பதில்லையாகையால், ஒருவர் ஞானஸ்நானம் பெறுகையில் வருகின்ற இரட்சிப்பானது தேவனுடைய கிருபையின் மூலமாகவே வர வேண்டும், இது ஒருவர் தேவனுடைய கிரியை மீது தாம் கொண்டுள்ள விசுவாசத்தின் காரணத்தினால் தம்மை ஞானஸ்நானத்தில் ஒப்புக் கொடுக்கும் பொழுது அவரது அக்கிரமங்களை நீக்கி இரட்சிப்பைக் கொண்டு வருவதற்கு இயேசுவினுடைய சுத்திகரிக்கும் இரத்தத்தை அளிக்கின்றது. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு என்பது ஞானஸ்நானத்தைத் தவிர்ப்பதில்லை, ஆனால் அதை உள்ளடக்குகின்றது, ஏனெனில் பவுல் இதையே போதித்தார் (எபே. 2:4-9ஐ*

*கொலோ. 2:12, 13 உடன் ஒப்பிடுதலில் இருந்து இது ஆதாரமாயுள்ளது, இது எபே. 2:8 மற்றும் 1 பேது. 3:21 ஆகியவற்றுடன் இணைவாகவும் உள்ளது).*

## *1 கொரிந்தியர் 1:17*

*1 கொரி. 1:17ல் பவுல், "ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்" என்று உரைத்தார். இந்த வசனத்தில் ஞானஸ்நானம் முக்கியமானதா யிருப்பதில்லை என்று பவுல் சுட்டிக்காட்டினார் என்று சிலர் போதித்துள்ளனர். இப்படிப்பட்ட ஒரு முடிவானது சத்தியத்திலிருந்து தொலைவில் உள்ளதாயிருக்கின்றது, ஏனெனில் பவுல் ஞானஸ்நானத்தைச் செயல்படுத்தியிருந்தார் மற்றும் பல மக்களை ஞானஸ்நானம் பெறும்படிக்கு இணங்கச் செய்தும் இருந்தார் (அப். 18:8).*

*கிரேக்க மொழியின் இந்தக் கட்டமைப்பானது* (*ou*, not ... *alla*, but) *''ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படியல்ல, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே" என்று மொழிபெயர்க்கப்பட்டதானது முதல் சிந்தனையை இல்லாததாக்காமல் இரண்டாவது சிந்தனையை வலியுறுத்துவதாக உள்ளது. இந்தக் கட்டமைப்பின்மீது இராபர்ட்* W. *ஃபங்க் அவர்கள், "Ou ... alla என்பது, முதல் கூறானது முற்றில் இல்லாததாக்கப்படாதபடிக்கு, ஆனால் தொணியிறக்கம் மட்டுமே செய்யப்பட்ட நிலையில் 'அவ்வளவு அதிகமான அளவில் இன்றி' என்றும் அர்த்தப்படுகின்றது: மாற். 9:37 ... , மத். 10:20, யோவா. 12:44, அப். 5:4 முதலியன."*[2] *இணைப்புச் சொல்லுடனான இந்த எதிர்மறைத் தன்மை குறித்து மேக்ஸ்மில்லியன் ஜெர்விக் அவர்கள், "... ஒரு கருத்தின் மீது அதிக வலியுறுத்தம் செய்வதற்காக மற்றொரு கருத்தை எதிர்மறையாகக் குறிப்பிடுவது எபிரெய இனக் குழுவின் தனித்தன்மையாக விளங்கிற்று, அ அல்ல ஆனால் ஆ என்பதில் ஆ - வைப் போல அ அவ்வளவு அதிகம் அல்ல, அல்லது அ - விற்குப் பதிலாக ஆ என்ற கருத்துள்ளது." எடுத்துக்காட்டுகளாக இவர் 1 கொரி. 1:17; மத். 10:20; யோவா. 12:44; மாற். 9:37; மத். 10:20; யோவா. 7:16 ஆகியவற்றைத் தருகின்றார்.*[3] *மற்ற இலக்கண அறிஞர்களும் இதே உற்று நோக்கலையே ஏற்படுத்தியுள்ளனர்.*[4]

*பவுல் 1 கொரி. 1:17ல் தம்மை ஞானஸ்நானம் கொடுப்பதற்கு மட்டுமல்ல சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குமே கிறிஸ்து அனுப்பினார் என்றே கூறினார். கிறிஸ்து ஞானஸ்நானத்தை முக்கியமற்றதாகக் கருதினார் என்று அவர் கூறவில்லை, ஆனால் சுவிசேஷம் முதல் முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் ஞானஸ்நானம் இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் அவர் கூறினார். இது உண்மையாகவே உள்ளது, ஏனென்றால் ஞானஸ்நானம் பெற்றும் சுவிசேஷத்தையும் ஞானஸ் நானத்துடன் இணைந்துள்ள அர்த்தத்தையும் புரிந்து கொள்ளாதவர்கள் ஞானஸ்நானம் பெற்றதினால் மட்டும் பயன் அடைந்து விடுவதில்லை. இரட்சிப்பு என்பது ஞானஸ்நானம் பெறுதலை விட அதிகமானதாக உள்ளது; ஆகையால் ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள உறுதிப்*

பாட்டின் பொறுப்புகளை மேற்கொள்ளும்படிக்கு, கேட்பவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பதற்கு முன்னுரிமை தரப்படுகின்றது. ஞானஸ்நானம் பெறுகின்றவர்கள் சுவிசேஷத்தைப் புரிந்து கொண்டிருப்பதின் அவசியத்தைப் பவுல் மறைமுகமாய் உணர்த்தினார்.

## 1 கொரிந்தியர் 12:13

ஞானஸ்நானம் பற்றிய பவுலின் போதனையைக் காண்பிக்கும் இன்னொரு வசனப் பகுதியாக உள்ளது 1 கொரி. 12:13 ஆகும். இதைப் பற்றியதொரு கலந்துரையாடலை முந்தின பாடத்தில் காணவும்.

## முடிவுரை

ஞானஸ்நானம் என்பதை இயேசுவின் மீட்புச் செயலுக்கு இருதயத்திலிருந்து வரும் பதில்செயல் என்பதாகப் பவுல் கண்டார். இதை அவர் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுக்கும் ஒருவரின் வாழ்வில் விளைவு ஏற்படுத்தக் கூடியதாகக் கருதினார். அவர் ஞானஸ்நானத்தை, ஒருவர் புதிய வாழ்விற்காக இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய வற்றுடன் இணையும் சரீரச் செயல்பாடாகச் சித்தரித்தார், இதில் ஒருவர் தேவனுடன் புதியதொரு உறவு கொள்ள ஒரு புதிய வாழ்வில் பிரவேசித்து, கிறிஸ்துவை அணிந்து கொண்டு, பழைய மனிதனிலிருந்து மாறி புதிய நபராகி, தனது கடந்த காலப் பாவம் நிறைந்த வாழ்விலிருந்து விடுதலையாகி, எல்லா அக்கிரமங்களும் மன்னிக்கப்பட்டவராகின்றார். வெறுமையான ஒரு சடங்காச்சாரத்திற்கு ஒப்புக் கொடுத்தல் என்பதைக் காட்டிலும் ஞானஸ்நானம் என்பது மேலானதென்று பவுல் கருதினார்.

---

குறிப்புகள்

[1]G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 273. [2]Robert W. Funk, *A Greek Grammar of the New Testament* (Chicago: University of Chicago Press, 1961), 233. [3]Maximilian Zerwick, *Biblical Greek,* trans. Joseph Smith (Rome: n.p., 1963), 150. [4]See, for example, James H. Moulton, *A Grammar of New Testament Greek, vol. 1, 3rd* ed., (Edinburgh: T. & T. Clark, 1906), 329.

# தகுதிப் படுத்துகின்ற ஞானஸ்நானம்

*அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு ... நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 19:1-5).*

*புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானமானது அறிமுகப் படுத்தப் பட்ட பிறகு, யோவானின் ஆயத்த ஞானஸ்நானமானது போதுமானதாக இல்லாது போயிற்று. யோவானின் ஞானஸ்நானம் பெற்றிருந்தவர்களில் குறைந்தபட்சம் ஒரு சிலராவது இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றனர் என்பது அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர்கள் இயேசுவின் இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்டனர் என்ற விளக்கத்திற்கு ஆதாரமாக உள்ளது (அப். 19:1-5). யோவானின் ஞானஸ்நானம் இனியும் போதுமானதாக இல்லாதிருந்தது; ஆகையால் ஏதாவதொரு ஞானஸ்நானம் புதிய உடன்படிக்கையின் ஒரே ஞானஸ்நானமாயிருப்பதில்லை (எபே. 4:5) என்பது தெளிவாகின்றது. ஒருவர் புதிய ஏற்பாட்டின் கோரிக்கைகளை நிறைவேற்றாத ஞானஸ்நானத்தைச் சார்ந்திருக்கக் கூடாது, ஆனால் புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கு மீண்டுமாக ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும்.*

*புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான (எபி. 12:24) இயேசுவின் மரணத்தின் மூலமாகப் புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்த பிறகு புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானமானது பிரசங்கிக்கப்பட்டது (எபி. 9:15-17). இஸ்ரவேல் இனத்தாருக்குப் புதிய உடன்படிக்கை நிலைநாட்டப்படும்படியாக (எபி. 10:9) பழைய உடன்படிக்கையானது எடுத்துப் போடப்பட்டது (யாத். 34:28, 29; 1 இரா. 8:9, 21; உபா. 5:1- 5), இது யோவான், இயேசு (மத். 15:24) மற்றும் அப்போஸ்தலர்கள் (மத். 10:5, 6) ஆகியோரின் ஆயத்த ஊழியம் போலவே இருந்தது.*

# ஞானஸ்நானத்திற்கு முன்பு செய்யப்பட வேண்டியவைகள் யாவை?

## போதனை

*புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானம் என்பது யோவானுடைய ஞானஸ்நானத்தைப் போன்றதாகவே இருப்பினும் (லூக். 3:3-13), சில வித்தியாசங்ளைக் கொண்டிருந்தது. சுவிசேஷத்தைக் குறித்த அறிவுறுத்தலானது இதற்கு முன் வர வேண்டியதாயிற்று (மாற். 16:15, 16). இதைப் பெற்றுக் கொண்டவர்கள் இயேசுவைப் பற்றி அறிந்திருந்தவர்களாய் இருந்தனர் (அப். 2:37, 41; 8:14; 11:1; 16:14; 18:8; 19:5 )*

## இயேசுவில் விசுவாசம்

*போதனையின் மூலமாகவே இயேசுவில் விசுவாசம் வந்தது (யோவா. 17:20; 20:30, 31; அப். 15:7; 17:11; ரோமர் 10:17) இது ஞானஸ்நானத்திற்கு முன்பு செய்யப்பட வேண்டியதாகும் (மாற். 16:16; அப். 8:12; 18:8; 19:4, 5). விசுவாசமின்றி மனிதரின் எந்தச் செயலும் தேவனைப் பிரியப்படுத்த முடியாது (யோவா. 8:24; எபி. 11:6). இயேசுவைக் கர்த்தரென்றும், மேசியா வென்றும் (ரோமர் 10:9; 1 யோவா. 5:1), அவரது உயிர்த் தெழுதல் (ரோமர் 10:9), மற்றும் அவரது இரத்தம் (ரோமர் 3:25; 5:9) ஆகியவற்றில் உள்ள விசுவாசமே இரட்சிப்பைக் கொண்டு வருகின்ற விசுவாசமாயிருக்கின்றது. இந்த விசுவாசம் இல்லையென்றால், ஒருவர் உலர்ந்த பாவியாக தண்ணீருக்குள் சென்று, நனைந்த பாவியாக வெளியே வருவார்.*

## மனந்திரும்புதல்

*பெந்தெகொஸ்தே நாளன்று விசுவாசத்தினால் தூண்டப்பட்டு, என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட யூதர்களிடத்தில் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறும்படியாகப் பேதுரு கூறினார் (அப். 2:38). ஒருவரின் வாழ்வில் மாற்றம் ஒன்றுக்கு வழி நடத்துகின்ற வகையில் சிந்தையில் ஏற்படும் ஒரு மாற்றமே மனந்திரும்புதலாகும் (மத். 3:8; அப். 3:19; 26:20).*

*ஆழ்ந்த வருத்தம், தவறுக்கு வருந்துதல் மற்றும் இருதயத்தின் வருத்தம் போன்றவை மனந்திரும்புதலாக இருப்பதில்லை; இருப்பினும், இப்படிப்பட்ட உணர்வுகள் மனந்திரும்புதலுக்கு வழி நடத்திச் செல்ல முடியும் (2 கொரி. 7:8, 9). மனந்திரும்புதல் என்பது ஒருவர் தமது வாழ்வை மாற்றிக் கொள்ளத் தீர்மானம் செய்கின்ற வேளையாகும். ஞானஸ்நானம் என்பது அந்த முடிவின் முத்திரையாக உள்ளது (ரோமர் 6:4). ஞானஸ்நானம் என்பது இயேசுவுக்காகப் புதிய வாழ்க்கை வாழ உறுதிப் படுத்தும் முத்திரைக்குப் புள்ளியிட்ட கோட்டில் கையொப்பம் இடுவதாக உள்ளது.*

## அறிக்கை செய்தல்

அறிக்கையிடுதலை ஞானஸ்நானத்துடன் நேரடியாக இணைக்கின்ற ஒரே வசனப் பகுதி அப். 8:37 ஆகும். இவ்வசனத்தைப் பற்றி ஹியூகோ மெக்கார்டு அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> 4ம் நூற்றாண்டின் ஆலெப் மற்றும் சில முந்திய கையெழுத்துப் பிரதிகளில் வ. 37 இல்லாதிருப்பதானது பெரும்பாலான வசன விமர்சகர்கள் இவ்வசனத்தைப் புறக்கணிக்கக் காரணமாயிற்று. ஆறாம் நூற்றாண்டிலிருந்து என்பதே இவ்வசனப் பகுதியைக் கொண்டுள்ள மிக முந்திய ஒப்பீடு ஆகும், இது இரண் டாம் நூற்றாண்டின் இலத்தீன் கையெழுத்துப் பிரதிகளிலும் மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் இரேணியுஸின் எழுத்துக்களிலும் காணப்படுகின்றது. இதற்கு மறுபுறத்தில், உள்ளான ஆதாரங்கள் இதன் தக்க வைத்தலுக்குச் சாதகமாய் உள்ளன, ஏனெனில் இதனை விட்டு விடுதல் என்பது எதிர்பாராத ஒரு இடைவெளியை விட்டு வைக்கின்றது. தான் ஞானஸ்நானம் பெறத்தடையென்ன என்று பிலிப்புவிடம் கேட்ட எத்தியோப்பிய மந்திரி, பதிலுக்காகக் காத்திராமல் இரதத்தை நிறுத்தி ஞானஸ்நானத்திற்குத் தயாரானார் என்றாகி விடுகின்றது. இவ்வசனத்தை உள்ளடக்குதலே இவ்விபரத்தைக் கோர்வை யுடையதாக்குகின்றது. அத்துடன், அப். 8:37ன் அறிக்கையிடுதலானது புதிய ஏற்பாட்டின் மற்ற விபரங்களுடன் இசைவுடைய தாயிருக்கின்றது (ரோமர் 10:9, 10; பிலி. 2:11; 1 தீமோ. 6:13; 1 யோவா. 4:15).[1]

இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கையிடுதலானது விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுதல் என்பவைகள் போலவே (மாற். 16:16) இரட்சிப்புக்கான முன் வேண்டுகோளாக உள்ளது (ரோமர் 10:9). ஞானஸ்நானம் பெறுபவர் இயேசுவின் மீது தாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடாதிருந்தால் ஒரு விசுவாசியைத் தான் ஞானஸ்நானப் படுத்துகின்றோம் என்பதை ஞானஸ்நானம் கொடுப்பவர் எவ்விதம் அறிவார்?

Ean ("if" - ஒருவேளை/ஆல்) என்பது aorist நிபந்தனைச் சொல்லான *Omologeses* ("Confess" "அறிக்கையிடுதல்", ரோமர் 10:9) உடன் வரும் கிரேக்க மொழிக் கட்டமைப்பானது இரட்சிக்கப்படுவதற்கான ஒருமுறை செய்யப்படும் ஒரு அறிக்கையைக் குறிப்பிடுகின்றது. ஃபங்க் அவர்கள்[2] aorist நிபந்தனைச் சொல்லை "நன்னடத்தைக் குறிப்புள்ள, உள்ளே நுழையும் உரிமையுள்ள, சிக்கலான"தென்று விவரித்தார். இது நிபந்தனைச் சொல்லானது ஒருமுறை நடக்கும் செயல்பாடாக உள்ளது, இது தொடர்ந்து, காலம் ஆகக் கூடிய அல்லது தொடர்ந்து செய்யப்படுகின்ற செயலாய் இருப்பதில்லை என்று அர்த்தப்படுகின்றது. ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு இயேசுவைக் கர்த்தர் என்று ஒரு முறை அறிக்கை செய்ய வேண்டும்.

பீஸ்லே - முர்ரே அவர்கள் ரோமர் 10:9ஐ "இயேசுவே கர்த்தராயிருக்கிறார்" என்ற அறிக்கையுடன் சரியான வகையில்

*இணைந்துள்ளார். ஞானஸ்நானத்தை நாடுபவரின் உதடுகளில் இந்த அறிக்கை இருக்கின்றது. அவர் மத்தேயு 28:18 மற்றும் தானியேல் 7:13, 14 ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பானது, "இயேசுவைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார் என்று தாம் கொண்டுள்ள விசுவாசத்தின் பேரில் ஞானஸ்நானம் பெறுகின்ற மனிதரால் 'இயேசு கர்த்தராயிருக்கிறார்' என்று அறிக்கையிடப்படும் எளிமையானதொரு அறிக்கையாக உள்ளதென்று யூகிக்கப்படுகின்றது."[3]*

*பிற்பாடு அவர் ரோமர் 10:9, 10ஐப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:*

> *இவ்விடத்தில், விசுவாசமானது கர்த்தரிடத்தில் அதன் நோக்கத்திற்காக அல்லது நீதியைப் பெறுவதற்காக வைக்கப்படுகின்றது, மற்றும் அறிக்கையானது இரட்சிப்பைப் பெறும் செயல் விளைவிற்காக அல்லது அதைப் பெறுவதற்காக வைக்கப்படுகின்றது என்பது தெளிவாகும், இவ்வரத்தைப் பெறும் வேளையானது குறிப்பிடப்பட வில்லை, ஆனால் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் இல்லை, கர்த்தரிடத்திற்குத் திருப்பப்பட்ட விசுவாசமானது நாடிய கிருபையை அறிக்கையினால் பெறுவதைப் போலவே ஞானஸ்நானத்தில் தேவனுடைய இரட்சிப்பையும் பெறுகின்றது.[4]*

*இந்தக் கலந்துரையாடலைக் குறித்து அவர் பின்வருமாறு எழுதினார்:*

> *ரோமர் 10:9ல் உள்ள சுவிசேஷத்தின் கூற்றானது "இயேசுவே கர்த்தராயிருக்கின்றார்" என்ற ஞானஸ்நான அறிக்கைக்கு உருக் கொடுக்கின்றது என்பதை நாம் மறுபடி நினைக்கின்றோம். மனிதனின் பகுதியில் ஞானஸ்நானம் என்பது இயேசுவே கர்த்தர் என்ற விசுவாசத்தின் அறிக்கையாக உள்ளது, நம்மை அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொடுத்தலாகவும், கர்த்தர் தம்முடைய மீட்பின் மூலமாகக் கொண்டு வந்த அளவற்ற கிருபையின் மீதுள்ள விசுவாசத்தினால் இது தகுதிப்படுத்தப்பட்டதாகவும் உள்ளது. ஞானஸ்நானத்தில் சுவிசேஷ அறிவிப்பும் விசுவாசத்தின் கேள்விப்படுதலும் கரைக்க முடியாத ஒரு செயல்பாடாக இணைக்கப் படுகின்றது, இது ஒரே வேளையில் கிருபை மற்றும் விசுவாசத்தின், தேவன் மற்றும் மனிதனின் செயல்பாடாக உள்ளது.[5]*

*உயிர்த்தெழுந்த கர்த்தரில் உள்ள விசுவாசமானது இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கையிடுதல் மற்றும் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுதல் என்ற இரு செயல்களாலும் ஒருவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது விளக்கப்படுகின்றது.*

## *பிறந்த குழந்தையின் ஞானஸ்நானத்தைப் பற்றிய விஷயம் என்ன?*

*புதிய உடன்படிக்கையின் கீழ், ஒருவர் தமக்கு சுவிசேஷம் போதிக்கப்பட்டு, தம் பாவங்களை மன்னிக்க இயேசுவின் இரத்தத்தின் மீது*

விசுவாசம் கொண்டு, இயேசுவுக்காக ஒரு புதிய வாழ்வை வாழ உறுதி மேற்கொள்வதில் மற்றும் இயேசுவே உயிர்த்தெழுந்த கர்த்தரும் மேசியாவுமாக இருக்கிறார் என்று அறிக்கை செய்திருக்கும் வேளையில் ஞானஸ்நானம் பெறுவதற்குத் தயாராக இருக்கின்றார். பிறந்த சிறு குழந்தைகள் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதவர்களாய் இருக்கின்றனர்.

முதலாவதாக, பிறந்த சிறு குழந்தைகள் பாவிகளாய் இருப்பதில்லை. ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய கொள்கைகளைப் பொறுத்தமட்டில் இவர்கள் பார்வையற்றவர்களாய் இருக்கின்றனர் (உபா. 1:39; ஏசா. 7:16), எனவே இவர்கள் பாவமற்று இருக்கின்றனர் (யோவா. 9:41). இவர்கள் தங்கள் பெற்றோரின் குற்றங்களைச் சுமப்பதில்லை, ஏனெனில் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த செயலினாலேயே நீதிமானாகவோ அல்லது துன்மார்க்கராகவோ இருக்கின்றனர் (எசே. 18:20). பரலோக ராஜ்யமானது சிறுபிள்ளைகளைப் போல் உள்ளவர்களுக்குரியதாக இருக்கின்றது (மத். 19:14).

இரண்டாவதாக, சிறுகுழந்தைகள் ஜென்மப் பாவத்துடன் பிறக்கின்றனர் என்று நிரூபிக்கப் பயன்படுகின்ற வேத வசனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன அல்லது ஏற்பற்ற வகையில் மொழிபெயர்க்கப் படுகின்றன. நேரடியாக மொழிபெயர்க்கப்படுகையில் சங். 51:5 வசனமானது “இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள்”[6] என்று கூறுகின்றது. ஒரு சில விதிவிலக்குகள் தவிர (NIV மற்றும் NRSV இதை ஜென்மப் பாவம் பற்றிய உபதேசத்துடன் மொழிபெயர்த்திருப்பதைக் கவனிக்கவும்) பெரும்பாலும் எல்லா மொழிபெயர்ப்புக்களும் இதனை ஒத்துக் கொள்ளுகின்றன. தாவீது தமது பிறப்புக்குப் பிந்திய நிலைமை பற்றி விமர்சிக்கவில்லை, ஆனால் அவர் பிறந்த சூழ்நிலை பற்றிப் புலம்பினார். இவ்வசனமானது தாவீது ஒரு பாவியாகப் பிறந்தார் என்று கூறுவதில்லை.

“குளிரின் மரணத்தில் நான் கர்ப்பந்தரிக்கப்பட்டு மோன்ட்டனாவில் ஒரு பனிப் புயலில் நான் பிறந்தேன்; நான் இந்தப் பரிதாபமான சூழலில் வாழ்வதில் வியப்பெதுவுமில்லை” என்று ஒருவர் கூறுவது போல தாவீது தம் முறையீட்டை ஒரு கவிதை நடையில் விளக்கப்படுத்திக் குரல் எழுப்பினார். இப்படிப்பட்ட ஒரு கூற்றானது அவர் ஒரு பனிக் கட்டியாகப் பிறந்தார் என்று அவர் நம்பியதாக அர்த்தப்படுவதில்லை, மாறாக அவர் தொடர்ந்து வாழ வேண்டியிருந்த விரும்பத் தகாத சூழல் பற்றிய தனிப்பட்ட புலம்பலின் அளவீடாகவே இது இருந்தது.

லெஸ்லீ எஸ். மெக்காவ் அவர்கள், “கர்ப்பந்தரித்தல் என்ற சரீரப் பிரகாரமான செயல்பாடு தன்னில்தானே பாவம் நிறைந்த படிவானது அவர் மேல் சுமத்தப்பட்டது என்று இது மறைபொருளாய் உணர்த்துவதில்லை. இவ்வசனமானது நாம் மனுக்குலத்தின் உறுப்பினராய் இருக்கிறோம் என்ற உண்மையினால் பாவத்தின் உண்மை நிலையில் நாம் விடுவித்துக் கொள்ள இயலாதபடி சிக்கிக் கொள்ளுகின்றோம் என்று மட்டுமே அர்த்தப் படுகின்றது” என்று கூறினார்.[7]

*ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவம் மரணத்தை, குழந்தைப் பிறப்பில் வேதனையை, சபிக்கப்பட்ட ஒரு பூமியை மற்றும் நன்மை தீமை பற்றிய அறிவை விளைவித்தது (ஆதி. 3:1-22), ஆனால் அது அவர்களின் பின் சந்ததியார்க்கு சுதந்தரிக்கப்பட்ட குற்றத்தை அல்லது மோசம் போன நிலையை விளைவிக்கவில்லை. அது போலவே, ஒரு குழந்தையானது கொடுமைக்காரனின் தாக்குதலின் விளைவுகளினால் துன்பமடையக் கூடும் என்றாலும், அந்தத் தாக்குதலின் குற்றத்தைச் சுமப்பதில்லை என்பது போலவே, நாமும் ஆதாம் ஏவாளின் பாவத்தினுடைய விளைவுகளினால் துன்புற்றாலும், அவர்களின் பாவக் குற்றத்தைச் சுமப்பதில்லை. நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த செயல்களுக்கான கணக்கையே நியாயத் தீர்ப்பு நாளில் ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (2 கொரி. 5:10).*

*நன்மை தீமை பற்றிய அறிவானது அவர்களின் இயல்பை மோசம் போக்கவில்லை, ஏனெனில் தேவன், "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத் தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்" (ஆதி. 3:22) என்று உரைத்தார். நன்மை தீமையைப் பற்றிய தேவனுடைய அறிவானது அவரது இயல்பை மோசம் போக்கி விட்டது என்று ஒருவரும் கூற மாட்டார்கள் என்பது நிச்சயம். இப்படிப்பட்ட அறிவானது மனிதருக்கு ஒழுக்க ரீதியான தேர்ந்தெடுத்தலை மேற்கொள்வதற்கு (ஏசா. 7:16) சுயாதீனம் அளிக்கின்றது, இது மனிதன் தன் சுய திருப்தியை பூர்த்தி செய்கின்ற விருப்பத்தினாலும், சாத்தானால் மனிதர் முன் வைக்கப்பட்டுள்ள சோதனைகளினாலும் சரியாகக் கையாளாத பொறுப்பாக ஆகி விடுகின்றது.*

*மூன்றாவதாக, பிறந்த சிறு குழந்தைகள் தங்கள் ஆவிகளைத் தேவனிடத்திலிருந்து பெறுகின்றனர் (பிர. 12:7; சகரி. 12:1), இவர் ஆவிகளின் பிதாவாயிருக்கிறார் (எபி. 12:9). உலகத்தினுள் வருகின்ற ஒவ்வொரு நபருக்கும் தேவன் பொல்லாங்கின் ஆவியைக் கொடுப்பதில்லை, ஏனெனில் தேவன் பொல்லாங்கின் பிறப்பிடமாயிருப்பதில்லை.*

*நான்காவதாக, குழந்தை ஞானஸ்நானத்திற்கான முன் மாதிரி எதுவும் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. வீட்டாருடைய ஞானஸ்நானங்களும் இதற்கு விதி விலக்காக இருப்பதில்லை. விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் ''ஸ்திரீகளும் புருஷர்களும்'' (அப். 8:12) மட்டுமே, இச்சொற்றொடரானது பிறந்த குழந்தைகளை உள்ளடக்குவதில்லை.*

*வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டபடி "வீடு" அல்லது "வீட்டார்" என்பது சாதாரணமாகக் குழந்தைகளையல்ல வயது வந்தவர்களையே உள்ளடக்கியது. யோசேப்பு இஸ்ரவேல் மக்களுக்கு உணவு கொடுத்தது பற்றி வசனத்தைக் கவனியுங்கள்: ''... உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் ..." (ஆதி. 47:24). மக்களின் தொகுதியைக் குறிக்க "வீடு" அல்லது "வீட்டார்" என்பது பயன் படுத்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பிறந்த குழந்தைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததில்லை என்பதைச் சந்தர்ப்பப் பொருளானது தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கின்றது (யோவா. 4:53; பிலி. 4:22; தீத்து 1:11; எபி. 11:7), ஏனெனில் இவ்வசனங்களில் விவரிக்கப்பட்டவற்றை பிறந்த குழந்தைகள் புரிந்து கொள்ள முடியாத மனநிலையிலேயே இருந்தனர்.*

*வீட்டாரின் மனமாற்றங்கள் என்று அழைக்கப்படுவனவற்றுக்கும் இதுவே உண்மையாக உள்ளது:*

*(1) இஸ்ரவேலின் குடும்பத்தார் (அப். 2:36) பேதுருவிடத்திலிருந்து கற்றுக் கொண்டனர் (அப். 2:14-36), என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர் (அப். 2:37), மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறப்பட்டது (அப். 2:38), வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்றனர். பிறந்த குழந்தைகள் பாவங்களை உடையவர்களாயிருப்பதில்லை, அவர்கள் இவ்வசனத்தின் கோரிக்கைகளின்படி பதில்செயல் செய்ய முடியாதவர்களாயிருந்தனர், எனவே அவர்கள் அப். 2:41ன் ஞானஸ்நானங்களில் உள்ளடக்கப்பட்டிருக்க முடிந்திராது.*

*(2) கொர்நெலியுவின் வீட்டார் தேவனுக்குப் பயந்திருந்தனர் (அப். 10:2), செய்தியைக் கேட்க வந்திருந்தனர் (அப். 10:33), வசனத்தை ஏற்றுக் கொண்டனர் (அப். 11:1), பாஷைகளில் பேசினர் (அப். 10:44-46) மற்றும் ஞானஸ்நானப் படுத்தப்படும்படிக் கட்டளையிடப்பட்டனர் (அப். 10:48). பிறந்த குழந்தைகள் இந்தச் செயல்களில் உள்ளடக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.*

*(3) லீதியாளின் குடும்பத்தார் "அவள் வீட்டார்" மற்றும் "என் வீட்டில்" (அப். 16:15) என்பதாகக் குறிப்பிடப்படுகின்றனர், இது அவள் கணவரை உடையவளாய் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டும். இல்லையென்றால் அவள் "எங்கள்" வீட்டில் என்று கூறியிருப்பாள், அவள் திருமணமானவள் அல்லது பிள்ளைகளை உடையவள் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கொடுக்கப்பட முடியாது.*

*(4) பிலிப்பியச் சிறையதிகாரியின் வீட்டிலிருந்த யாவருக்கும் பவுல் கர்த்தருடைய வசனத்தை எடுத்துரைத்தார் (அப். 16:32). அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு விசுவாசமுள்ளவர்களாயும் சந்தோஷமுள்ளவர்களாயும் ஆனார்கள் (அப். 16:34). பிறந்த குழந்தைகள் இந்தச் செயல்பாடுகளில் பங்கேற்க முடிந்திராது.*

*(5) கிறிஸ்புவும் அவரது வீட்டார் யாவரும் கர்த்தர் மீது விசுவாசம் கொண்டனர் (அப். 18:8). பிறந்த குழந்தைகள் கர்த்தரை விசுவாசிக்கும் திராணியுடையவர்கள் அல்ல. இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்புவின் வீட்டாரில் அவர்கள் உள்ளடக்கப்பட்டிருக்க மாட்டார்கள் (1 கொரி. 1:14).*

*(6) ஸ்தேவானுடைய வீட்டாருக்குப் பவுல் ஞானஸ்நானம் கொடுத்திருந்தார் (1 கொரி. 1:16). இந்த வீட்டார் கிறிஸ்தவர்களுக்கு ஊழியம் செய்தவர்களாயும் இருந்தனர் (1 கொரி. 16:15), இந்தச் செயல்பாடானது பிறந்த குழந்தைகளால் செய்யக் கூடாததாக உள்ளது.*

*வீட்டாரின் ஞானஸ்நானங்களின் அடிப்படையில் குழந்தை ஞானஸ்நானத்திற்கு மேற்கொள்ளப்படும் விவாதமானது அதிகமானவைகளைக் கற்பனைக்கு விட்டு வைக்கின்றது. குழந்தை ஞானஸ்நானமானது புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானமென்று தகுதி பெறுவதில்லை, ஏனெனில் பிறந்த குழந்தைகளிடத்தில் மன்னிக்கப்பட வேண்டிய*

*பாவங்கள் எதுவும் இல்லை (அப். 2:38; 22:16) மற்றும் அவர்கள் புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானத்திற்கான முன் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதவர்களாய் இருக்கின்றனர்.*

## விருத்தசேதனமும் ஞானஸ்நானமும் இணையானவைகளாய் இருக்கின்றனவா?

*சிலர் சிறு குழந்தைகளின் ஞானஸ்நானமானது விருத்தசேதனத்திற்கு இணையான ஞானஸ்நானமாய் உள்ளதென்று வாதிடுகின்றனர். இதற்கு அவர்கள் இவ்விரு நிகழ்ச்சிகளுமே குழந்தைகளை தேவனுடன் ஒரு உடன்படிக்கை உறவில் முத்திரையிடுகின்றன என்று கூறுகின்றனர். வேதாகமமானது விருத்தசேதனத்திற்கும் ஞானஸ்நானத்திற்கும் இடையில் ஒரு இணைவையல்ல ஆனால் ஒரு ஒப்பீட்டையே ஏற்படுத்துகின்றது. யாவே ஒரு குழந்தையின் தேவனாயிருக்கிறார் (ஆதி. 17:7-11) என்பதன் முத்திரையாக அல்லது அடையாளமாக ஆண் குழந்தை பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டது (லேவி. 12:3), ஞானஸ்நானமோ ஒருவரைத் தேவனுடைய பிள்ளையாக்கும் ஆவிக்குரிய பிறப்பாக உள்ளது (யோவா. 3:3-5; கலா. 3:26, 27). அப்படியென்றால், பரிசுத்த ஆவியின் வரத்தினால் அவரைத் தேவன் தமக்குச் சொந்தமானவராக முத்திரை யிடுகின்றார் (2 கொரி. 1:22; கலா. 4:6; எபே. 1:13, 14; அப். 2:38) நேரடியான கருத்தில் மாம்சமானது விருத்தசேதனத்தில் நீக்கப்படுவதாலும், உவமைக் கருத்தில் மாம்சமான(எண்ணமான)து ஞானஸ்நானத்தில் நீக்கப் படுவதாலும் (கொலோ. 2:11, 12) ஞானஸ்நானம் விருத்தசேதனத்துடன் ஒப்பிடப்படுகின்றது. இந்த ஒருமைத் தன்மையானது ஞானஸ்நானம் விருத்தசேதனத்திற்கு இணையானதென்று அர்த்தப்படுத்துவதில்லை. விருத்தசேதனத்தில் மாம்சத்தின் நுனித்தோலானது நீக்கப்படுவது போலவே இருதயத்தின் கீழ்ப்படிதலில் இருந்து பெறும் ஞானஸ்நானமானது ஒருவரின் கடந்த கால மாம்ச எண்ணங்களை நீக்கினாலும், இது இச்செயல்பாட்டிலேயே அவ்விதமாய் நீக்கப்படாமல், தேவனுடைய செயல்பாட்டினாலே நீக்கப்படுவதாயிருக்கின்றது. ஞானஸ்நானம் என்பது ஆவிக்குரிய வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய பிறப்பாய் உள்ளது, விருத்தசேதனமோ மாம்சப் பிறப்பிற்குப் பின்பு ஒரு சிறிய மாம்சப் பகுதியை மட்டுமே மாற்றக் கூடியதாக உள்ளது.*

*இஸ்ரவேலரின் பிறப்பே அவர்களைத் தேவனுடைய உடன்படிக்கை யின் மக்களாக்கிற்று, அவர்கள் விருத்தசேதனத்தினால் முத்திரையிடப் பட்டனர்; ஞானஸ்நானம் நம்மைத் தேவனுடைய மக்களாக்குகின்றது, நாம் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகின்றோம். பழைய ஏற்பாட்டின் சரீரப் பிரகாரமான உண்மை நிலைகள் யாவும் புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய உண்மை நிலைகளின் உருவகங்களாக அல்லது மாதிரிகளாக இருந்தன. ஆகையால் வேதாகமமானது விருத்தசேதன முத்திரையால் தொடரப்படும் மாம்சப் பிறப்பை ஞானஸ்நானத்தினால் பெறப்படும் ஆவிக்குரிய பிறப்பிற்கும் பரிசுத்த ஆவியின் வரத்தினால்*

முத்திரையிடப் படுதலுக்கும் இணைவாக்குகின்றது. ஞானஸ்நானமும் விருத்தசேதனமும் இணைவானவைகளாய் இருப்பதில்லை; மாறாக, பிறப்பு என்பது ஞானஸ்நானமாக உள்ளது, விருத்தசேதன முத்திரை என்பது பரிசுத்த ஆவியானவரின் முத்திரைக்கு இணையானதாக உள்ளது.

## ஞானஸ்நானத்தின் செயல்பாடு என்ன?

ஞானஸ்நானம் என்பது தெளித்தலா, ஊற்றுதலா அல்லது முழுக்காட்டுதலா என்பது கவனத்திற்குரிய இன்னொரு கருத்தாக உள்ளது. கிரேக்க வார்த்தையான *baptizo* என்பது முழுக்காட்டுதல் என்றே அர்த்தப்படுகிறது என்பதைக் கல்வியாளர்கள் பலர் ஒப்புக் கொள்கின்றனர். "அமிழ்த்துதல்" என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையான *baptizein* என்ப திலிருந்து பிற்கால இலத்தீன் வார்த்தையான *baptizare* என்பதும், இதிலிருந்து பழைய பிரெஞ்சு வார்த்தையான *baptizer* என்பதும், இதிலிருந்து இடைப்பட்ட ஆங்கில வார்த்தையான *baptizein* என்பதும், இதிலிருந்து ஆங்கில ஒலியாக்க வார்த்தையான *baptize* என்பதும் வளர்ந்தன என்பதை சொற்தோற்ற ஆய்வுப்படி அகராதிகளும் மதச் சிந்தனையின் முன் முடிவுக் கருத்திற்குப் புறம்பான கலைக் களஞ்சியங்களும் ஒரு சேர ஒப்புக் கொண்டன.

"Baptize" என்ற ஒலியாக்கச் சொல்லைப் பயன்படுத்தாத பெரும்பாலான (வேதாகமப்) பதிப்புகள் கிரேக்க மொழி வார்த்தையான *baptizo* என்பதை "immerse" என்று மொழிபெயர்க்கின்றன. கிரேக்க அகராதிகள் "baptize" என்பதற்கு "immerse" "அமிழ்த்து" என்றே அர்த்தம் கொடுக்கின்றன.[8]

Baptizo என்பதன் அர்த்தத்தைத் தீர்மானிக்க புதிய ஏற்பாட்டில் அதன் பயன்பாட்டைக் கவனித்தல் என்பதே நல்லதொரு வழி முறையாகும். Immersion என்பதே அதன் பொருள் என்பதற்குச் சந்தர்ப்பப் பொருள் சாதகமாய் உள்ளது. யோவான் மக்களிடத்திற்குத் தண்ணீரைக் கொண்டு வர வில்லை; அவரால் ஞானஸ்நானம் பெறும்படிக்கு மக்கள் யோர்தான் நதிக்கு வந்தனர் (மத். 3:6). அவர் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு அதிக தண்ணீர் உள்ள இடத்தைத் தேர்ந்து கொண்டார் (யோவா. 3:23). புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள ஞானஸ்நானங்களில் மக்கள் தண்ணீர் உள்ள இடங்களுக்கு வந்து, தண்ணீருக்குள் சென்று, தண்ணீரில் இருந்து கரையேறினார்கள் (மத். 3:16; மாற். 1:10; அப். 8:38, 39). தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது ஞானஸ்நானமாகத் தகுதி பெறுமென்றால், மேற் கூறப்பட்ட இப்படிப்பட்ட செயலானது அனாவசியமான அசௌகரியமாக இருந்திருக்குமே.

ஞானஸ்நானத்தை இயேசு கிறிஸ்துவுக்குள் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுதல் என்பதுடன் பவுல் ஒப்பிட்டார் (ரோமர் 6:4; கொலோ. 2:12). தெளித்தலோ அல்லது ஊற்றுதலோ இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை மறுபடியும் நிகழ்த்துவதில்லை. The Confraternity (தோழமைக் கூட்டுறவு) மொழிபெயர்ப்பு வேதாகமமானது, ரோமர் 6:4ஐப்

பற்றி, "தொடக்க கால சபையில் முழுக்காட்டுதலினால் சாதாரணமாக ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட வகை பற்றித் தூய பவுல் மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றார். தண்ணீருக்குள் இறங்குதல் என்பது உடலானது கல்லறைக்குள் இறக்கப்படுவதையும், மேலேறுதல் என்பது புதியதொரு வாழ்வுக்கு உயிர்த்தெழுதலையும் குறிக்கின்றது. தூய பவுல் ஞானஸ்நானச் சடங்கில் ஒரு வெறும் அடையாளத்தை விட அதிகமானதை தெளிவாகக் காண்கிறார் என்பது தெளிவு."[9]

ரோமர் 6:3-9க்கான எருசலேம் வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் உள்ள அடிக்குறிப்பொன்று, ''பாவி தண்ணீருக்குள் முழுக்காட்டப் படுகிறார் ('baptize' என்பதன் சொல் வரலாற்று அர்த்தம் 'அமிழ்த்துதல்' ஆகும்") என்று விளக்கம் அளிக்கின்றது.

சிலருக்கு ஞானஸ்நானம் என்பது மூழ்குதலோ, தெளித்தலோ அல்லது ஊற்றுதலோ எதில் சம்பந்தப்படுகிறது என்பது சிறிய விஷயமாகத் தோன்றுகின்றது. இருப்பினும், ஞானஸ்நானம் என்பதன் அர்த்தம் மூழ்குதல் என்று தெளிவாய் இருக்கையில், தெளித்தலையோ அல்லது ஊற்றுதலையோ ஞானஸ்நானத்தின் வடிவமாகத் தேவன் ஏற்றுக் கொள்வாரா என்பதை யார் அறிவார்? ஒருவேளை இந்நிகழ்ச்சியில் இயேசுவின் கூற்றொன்று நடைமுறைப் படுத்தப்படலாம்: ''கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ள வனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்" (லூக். 16:10). தாம் சிறிய விஷயமென்று கருதுகின்றதை ஒருவர் மாற்றச் சித்தமாயுள்ளாரென்றால், அவர் விசுவாசிப்பதற்கு ஒத்துப் போகாத வேதாகமத்தின் மற்ற போதனைகள் எவற்றை யெல்லாம் அவர் மாற்றுவாரோ? (மத். 5:19ஐக் காணவும்).

## ஞானஸ்நானம் கொடுப்பவரைப் பற்றிய விஷயம் என்ன?

ஞானஸ்நானத்தின் செயல்விளைவானது, ஞானஸ்நானம் கொடுப்பவரின் எண்ணப்போக்கு அல்லது ஆவிக்குரிய நிலையைச் சார்ந்திருப்பதில்லை. அப்படியிருந்ததென்றால், ஒருவர் தாம் ஞானஸ் நானம் பெற்ற பொழுது தம் பாவங்கள் மன்னிக்கப்பட்டதா இல்லையா என்று ஒருக்காலும் அறியாதவராகவே இருப்பார். ஞானஸ்நானம் கொடுப்பவரின் தகுதிகள் பற்றிப் புதிய ஏற்பாட்டில் எதுவும் கூறப்பட வில்லை. இதற்குப் பதிலாக, ஞானஸ்நானம் பெறுபவரின் புரிந்து கொள்ளுதல் மற்றும் உறுதிப்பாடு ஆகியவை மிக முக்கியமானவை என்று வேத வசனங்கள் கூறுகின்றன. பலனைப் பெற்றுக் கொள்வதற்கு, ஞானஸ்நானம் பெறுபவர் இருதயத்திலிருந்து கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 6:17, 18).

விசுவாசம் மற்றும் தேவனுடைய சித்தத்தின் மேல் உறுதிப்பாடு ஆகியவற்றுடன் ஞானஸ்நானம் பெற வருகிறவர் அவரை ஞானஸ்நானப் படுத்துபவரின் எண்ணப்போக்கு மற்றும் நிலை ஆகியவற்றைப்

பொருட்படுத்தாது, கிறிஸ்தவராகி புதிய வாழ்வில் பிரவேசிக்கின்றார். இது உண்மையல்லவென்றால், தேவன் இரட்சிப்பை ஞானஸ்நானம் பெறுபவரைச் சார்ந்ததாக மட்டுமின்றி ஞானஸ்நானம் கொடுப்பவரைச் சார்ந்ததாகவும் ஏற்படுத்தியுள்ளார் என்றாகிறது. இது தேவனுடைய வசனத்தில் எங்கும் காணப்படாத ஒரு போதனையாகும்.

## முடிவுரை

மதவுலகில் ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுவதெல்லாம் புதிய உடன்படிக்கையின் ஒரே ஞானஸ்நானமாய் இருப்பதில்லை (எபே. 4:5). ஞானஸ்நானம் என்பது ஒருவருடைய பாவங்களை மன்னிப்பதற்கு இயேசுவின் இரத்தத்தின் மேல் கொண்டுள்ள விசுவாசத்துடன் இருதயத்திலிருந்து கீழ்ப்படிதலினால் ஆனதாகும். இதில் கடந்த காலத்தின் பாவங்களுக்கு மரித்து இயேசுவுக்காகப் புதிய வாழ்வு வாழும் உறுதிப்பாடு அடங்கியுள்ளது. ஞானஸ்நானத்தைத் தேவனுக்குக் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிதல் என்றாக்கும் எந்த போதனையும் ஞானஸ்நானத்தை மலிவானதாக்கி, அதை ஒரு வெற்றுச்சடங்காகவும், ஞானஸ்நானச் செயல்பாட்டிலிருந்து இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தை நீக்குவதாகவும், அத்துடன் இணைந்துள்ள வாழ்க்கையை மாற்றும் உறுதிப் பாட்டை நீக்குவதாகவும் ஆக்குகின்றது. ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டவர்கள் புதிய எஜமானராகிய இயேசு கிறிஸ்துவுக் கென்று தாங்கள் புதிய வாழ்வை வாழும்படிக்கு தங்கள் பாவங்களை நீக்கிப் போட விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இவ்வழி முறையில் தங்கள் வாழ்வை அவருக்கு ஒப்புக் கொடாமல் இருக்கின்றவர்கள் ஒரே உண்மையான ஞானஸ்நானமாகிய புதிய உடன்படிக்கையின் ஞானஸ்நானத்தைப் பெறுவதினால் பதில்செயல் செய்வது அவசியமாகும்.

---

குறிப்புகள்

[1]Hugo McCord, *New Testament* (Henderson, Tenn.: Freed-Hardeman College, 1988), 520. [2]Robert W. Funk, *A Greek Grammar of the New Testament* (Chicago: University of Chicago Press, 1961), 174. [3]G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 87. [4] Ibid., 103. [5]Ibid., 272. [6]Jay P. Green, *A Literal Translation of the Bible* (Peabody, Mass: Hendrickson Publishers, 1987), 495. [7]Francis Davidson, Alan M. Stibbs, and Ernest Frederick Kevan, *The New Bible Commentary* (Grand Rapids. Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 448. [8]See A. Oepke, *"bapto,"* in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 1:545; Walter Bauer, *A Greek English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt, F. Wilbur Gingrich, and Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 1979), 131. [9]*Confraternity Translation of the Bible,* St. Joseph ed. (New York: Catholic Book Publishing Co., 1963), 163. [10]*The New Testament of the Jerusalem Bible* (Garden City, N.Y.: Doubleday and Co., 1966), 177.

# பரிசுத்த ஆவியானவரும் ஞானஸ்நானமும்

*நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (1 கொரி. 12:13).*

*புதிய பிறப்பில் பரிசுத்த ஆவியானவரின் பணிப் பொறுப்பானது யோவான் 3:3-5ன் கலந்துரையாடலின் கீழ் "இயேசு ஞானஸ்நானத்தைப் போதித்தார்" என்ற பாடத்தில் ஆராயப்பட்டது. ஞானஸ்நானத்துடன் தொடர்புடைய பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பற்றிய பாடம் ஒன்று இப்பொழுது கவனத்திற்குரியதாயுள்ளது.*

*ஞானஸ்நானத்தில் ஒருவர் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்கின்றார் (யோவா. 3:5). மரித்திருந்த அவர் பாவத்திலிருந்து விடுதலையான புதிய பிறப்பிற்கு வருகின்றார் (ரோமர் 6:4-7) மற்றும் இயேசுவின் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை ஞானஸ்நானத்தில் பகிர்ந்து கொள்வதால் (கொலோ. 2:12, 13) அவர் மன்னிக்கப்படுகின்றார் (அப். 2:38). உலக முழுவதிலும் நற்செய்தியான சுவிசேஷமானது பரவத் தொடங்குகையில் ஞானஸ்நானத்திற்கான போதிய எடுத்துக்காட்டுகள் நடபடிகளில் தரப்பட்டுள்ளன (அப். 2:38-47; 8:12, 35-39; முதலிய பிற).*

*ஒருவர் ஞானஸ்நானத்தில் புதுச் சிருஷ்டியாகின்றார் (2 கொரி. 5:17; கலா. 6:15) மற்றும் தம் இருதயத்தில் இருந்து வரும் விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் அவர் தேவனுடைய பிள்ளையாகின்றார் (ரோமர் 6:4, 17, 18; கலா. 3:26, 27; கொலோ. 2:12, 13). ஒருவர் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளதால் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளையாகின்றார், அவருக்குப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகின்றார். யோவான், "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" (யோவா. 7:39) என்று எழுதினார். நாம், "இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்" (அப். 5:32; இ.வ. 1 தெச. 4:8) என்றும் நாம் வாசிக்கின்றோம். பெந்தெகொஸ்தே நாளன்று முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்டவர்களிடத்தில் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே*

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என்று கூறினார். பவுல், "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" (கலா. 4:6) என்று எழுதினார்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோமர் 8:16). நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கிறோம் என்பதற்கு அவர் நம்முடைய ஆவிக்குச் சாட்சியிடுகிறதில்லை, ஆனால் அதற்குப் பதிலாக, நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கிறோம் என்பதற்கு அவர் நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சியிடுகிறார், இது நாம் "எங்கள் பிதாவே" என்று கூறும் பொழுது தேவன் உண்மையிலேயே நமது பிதாவாய் இருக்கிறார் என்று அவர் நம்முடனே கூட சாட்சியிட முடியும் என்று அர்த்தப்படுத்துகின்றது.

தேவனுடைய புத்திரர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் முத்திரையிடப்படுகின்றனர், இது அவர்கள் தேவனுக்குரியவர்கள் என்பதற்கு ஒரு உறுதிப்பாடாக உள்ளது. பவுல், "உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" (2 கொரி. 1:21, 22) என்றும், "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் ... ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே. 1:13, 14) என்றும் எழுதினார்.

தேவனுடைய புத்திரர்களை அவருடையவர் என்று முத்திரை போடுவதற்காகவே தேவனுடைய புத்திரர்களுக்கு ஆவியானவர் அருளப்படுகின்றாரே தவிர (கலா. 4:6) அவர்களைப் புத்திரர்களாக்கு வதற்காக அல்ல. "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9).

பொதுவான விதியொன்று நிலைநாட்டப்பட்டுள்ளது. உலகத்திலுள்ள இழந்துபோகப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள முடியாது (யோவா. 14:17), ஆனால் விசுவாசித்துக் கீழ்ப்படிகின்ற வர்களுக்கு, தேவனுடைய புத்திரர்களுக்கு அவர் அருளப்படுகின்றார்.

## பரிசுத்த ஆவியானவரின் வரம்

தேவனுடைய புத்திரர்களுக்கு அருளப்படும் "பரிசுத்த ஆவியானவரின் வரம்" என்பது ஆவியானவரால் அருளப்படுகின்ற அற்புதங்கள் செய்யும் வல்லமை தருதல் அல்ல ஆனால் ஆவியானவர் வந்து உள்ளாக வாசம் பண்ணுதல் ஆகும் (1 கொரி. 6:19, 20; 2 தீமோ. 1:14). ஆவியானவர் உள்ளாக வாசம் செய்யும் வரமானது கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்குக்

*கிறிஸ்தவருக்கு வல்லமை அளிக்கின்றது (எபே. 3:16). ஆவியானவரின் வரத்தினுடைய வல்லமையளித்தலானது அவ்வரத்தைப் பெற்றவர்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்த வல்லமையளித்தது (எபி.2:3, 4).*

*அப். 8:14-17 வசனப் பகுதியானது இந்த விதிக்கு விதி விலக்காக இருப்பதில்லை:*

> *சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது, அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்த வர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும் படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.*

*சமாரியாவிலிருந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது, பொதுவான விதிப்படி அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் பரிசுத்த ஆவியானவரின் உள்ளாக வாசம் பண்ணுதலை அவர்கள் பெற்றிருந்தனர்; அவர்கள் உடனடியாக ஆவியானவரால் வல்லமை யளிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னாளில் அப்போஸ்தலர்களின் கைகள் அவர்கள் மேல் வைக்கப்பட்டதன் மூலம் அவர் அருளப்பட்டார் (இ.வ. அப். 19:5, 6).*

*பவுலின் கைகள் வைக்கப்பட்டத"னால்" அல்லது "மூலம்" (dia என்ற கிரேக்க முன்னிடைச் சொல்லாகும், இது ஆறாம் வேற்றுமைச் சொல்லுடன் பயன்படுத்தப் படுவதாக, இன்னொரு செயல்பாடுகளினால் நடக்கும் வழிமுறைகளின் முகமை என்று அர்த்தப்படுகின்றது) தீமோத்தேயு ஒரு வரத்தைப் பெற்றுக் கொண்டார் (2 தீமோ. 1:6). இது பெரும்பாலும் மூப்பரின் கைகள் வைக்கப்பட்ட''துடன்'' (meta என்பது ஆறாம் வேற்றுமைச் சொல்லுடன் பயன்படுத்தப்படும் ஒரு முன்னிடைச் சொல்லாகும், இது "இத்துடன் துணையாக" என்று அர்த்தப்படுகின்றது) தரப்பட்ட வரமாக இருந்தது (1 தீமோ. 4:14). நல்ல காரணத்திற்காகப் பவுல், இவ்வரத்தைத் தீமோத்தேயு எப்படிப் பெற்றார் என்று விவரித்ததில் இரு வித்தியாசப்பட்ட முன்னிடைச் சொற்களைப் பயன்படுத்தினார் என்பது உறுதி. பவுலின் கைகள் என்ற முகமையின் மூலமாகவும், மூப்பரின் கைகள் அத்துடன் இணைந்திருந்த வகையிலும் இயேசு தீமோத்தேயுவுக்கு ஒரு வரத்தை அருளினார். அந்த வரம் அருளப்பட்டதற்குப் பவுலின் கைகள் முகமையாய் இருந்தன, மற்றும் பவுலுடன் கூடவே மூப்பர்களும் தங்களின் கைகளை வைத்து தீமோத்தேயு அவ்வரத்தைப் பயன்படுத்தும்படி பொறுப்பளித்தனர்.*

## புறஜாதியாரிலிருந்து முதலில் மனம் மாறியவர்கள்

அப். 10 மற்றும் 11ல் புறஜாதியாரிலிருந்து முதலில் மனம் மாறியவர்களிடத்தில் இந்தப் பொது விதிக்கு ஒரு விதிவிலக்கை நாம் காணுகின்றோம். பெரும்பாலான விதிவிலக்குகள் ஒரு கருத்தை நிரூபிப்பதற்காக முக்கியமானவைகளாய் உள்ளன. இயேசுவின் அற்புதங்களைப் பொறுத்தமட்டில் இது உண்மையாக இருந்தது. சராசரியான சாதாரண மனிதர்கள் செய்ய முடிந்தவற்றையே மட்டும் அவர் செய்திருந்தாரென்றால், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்க முடிந்திராது. மனிதர் தம் இயல்பான வல்லமையினால் செய்ய முடிந்திராதவற்றைச் செய்ததன் மூலம் இயற்கையின் நியதிகளுக்கு அப்பாற்பட்டதைச் செய்ததின் மூலம் அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று நிரூபித்தார் (யோவா. 20:30, 31; அப். 2:22).

தேவன் ஒரு விதி விலக்கைப் பயன்படுத்தியதன் மூலம், தாம் புறஜாதியாரை இரட்சிப்புக்கு ஏற்றுக் கொண்டு, ஆபிரகாமின் சந்ததியாரை வைத்த அதே தரத்தில் புறஜாதியாரையும் வைப்பதாக நிரூபித்தார். இது யூதர்கள் ஏற்றுக் கொள்வதற்குக் கடினமான உண்மை நிலையாக இருந்தது. வழக்கமான முன்மாதிரியானது - ஞானஸ்நானம் பெற்ற பிறகு அப்போஸ்தலர்களின் கைகள் வைக்கப்படுவதால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கொடுக்கப்படுதல் என்பது - புறஜாதியாரின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட போதும் அவர்கள் கிறிஸ்தவ சமூகத்தில் யூதரிலிருந்து மனம் மாறியவர்களுக்குச் சமமான நிலையில் வைக்கப்பட வேண்டும் என்பதை யூதக் கிறிஸ்தவர்களுக்கு மெய்ப்பிக்கப் போதுமான நிரூபணமாய் இல்லாதிருந்திருக்கலாம். தேவனுடைய விதிவிலக்கு இல்லாத நிலையில் புறஜாதியிலிருந்து மனம் மாறியவர்களை ஏற்றுக் கொள்ளுதல் என்பது அப்போஸ்தலர்களால் இசைவு பெற்றதாக மட்டுமே காணப்பட்டிருக்கும். ஆதியிலே யூதர்களுக்கு அருளியிருந்தது போலவே, புறஜாதியாருக்கும் பரிசுத்த ஆவியானவரை அருளியதன் மூலம் தேவன் எவ்வித மனித முகமையுமின்றி நேரடியாகச் செயல்பட்டு, புறஜாதியாருக்கும் இரட்சிப்பு அளிக்கப்பட வேண்டும் மற்றும் தேவனுடைய எல்லாப் பிள்ளைகளும் சமமானவர்களே என்பதை எல்லாக் காலத்திற்கும் நிரூபித்தார். தேர்ந்தெடுத்தல் பேதுருவினுடையதல்ல, ஆனால் தேவனுடையதே என்பதைத் தேவன் நிரூபித்தார்.

எருசலேமின் சபையாரால் எழுப்பப்பட்ட மறுப்புக்களுக்குப் பதில் அளித்ததில் (அப். 11:3). "... தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்?" (அப். 11:17) என்ற கேள்வியைப் பேதுரு சரி நிறைவாகக் கேட்க முடிந்தது. பிற்பாடு அவர், "... புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்து கொண்டார். இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினது போல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சி கொடுத்தார்" (அப். 15:7, 8) என்று உரைத்தார். பரிசுத்த ஆவியானவரால்

புறஜாதியார் வல்லமை பெற்றிருந்ததைப் பேதுரு கண்ட பொழுது, தேவனுடைய தேர்ந்தெடுப்பானது அவரை (பேதுருவை), “நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா?” (அப். 10:47) என்று கேட்கச் செய்தது. இந்த விதிவிலக்கானது பேதுருவுக்கு மனிதரல்ல தேவனே தேர்ந்தெடுத்தலை மேற்கொள்கிறார் என்பதற்கான போதுமான அளவு நிரூபணமாயிருந்தது. தேவனுடைய விதிகளுக்கு அவர் மட்டுமே விதிவிலக்கொன்றை ஏற்படுத்த முடியும், மற்றும் அப்படிப்பட்ட விதிவிலக்கானது தேவன் செயல்படுகின்றார் என்பதை நிரூபிக்கின்றது.

பேதுருவின் குறிப்புரை பற்றிய ஃபிரெடெரிக் டேல் புரூனர் அவர்களின் உற்று நோக்கலானது மீண்டும் குறிப்பிடத் தகுதியானதாக உள்ளது: “அவர், ‘ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே’ (வ. 15) கொர்நேலியுவின் வீட்டாரின் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் என்பதை வலியுறுத்துகின்றார். இந்தக் குறிப்புரை முக்கியமானதாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் ‘எப்பொழுதும் ஒவ்வொருவரிடத்திலும் செய்வது போலவே’ கொர்நேலியுவின் வீட்டார் மேலும் வந்திறங்கினார் என்று பேதுரு கூறுவதில்லை.”[1]

பிற்பாடு புரூனர் அவர்கள், “நேரடியாய்க் கூறுவதென்றால், ‘பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுதல்’ என்பது தொடர்ந்து செல்லும் சபைக்கு நடபடிகள் போதிக்கும் ஒரு உபதேசமாயிருப்பதில்லை, ஏனென்றால் இச்சொற்றொடரானது யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகியோரை சபைக்குள் உட்படுத்தும் துவக்க நிலைகளில் மட்டுமே காணக் கிடைக்கின்றது.”[2]

நடபடிகளின் புத்தகமானது பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களுக்கும், மற்றும் கொர்நேலியு வீட்டாருடன் அவருடைய புறஜாதி நண்பர்களுக்கும் என்ற இரண்டு நிகழ்ச்சிகளைப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நான நிகழ்ச்சிகளாக விவரிக்கின்றது. பவுலும் கூடப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டிருக்கலாம். அவர் தாம் மனிதரால் அல்ல ஆனால் இயேசு கிறிஸ்துவாலேயே ஒரு அப்போஸ்தலராக்கப்பட்டதாக உரைத்தார் (கலா. 1:1). அவரை அப்போஸ்தலராக்கிய வல்லமையளித்தலானது மனித முகமையின் மூலம் வந்ததென்றால், அவர் மனிதர்களால் அப்போஸ்தலராக்கப்பட்டார் என்றாகின்றது; அவர் தமது அப்போஸ்தலத்துவமானது மனித முகமையினால் தமக்கு அளிக்கப்பட்டது என்பதை அவர் மறுத்துள்ளதால், அவருக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் கொடுத்ததன் மூலம் இயேசுவே அவரை (பவுலை) அப்போஸ்தலத்துவத்திற்கு வல்லமைப் படுத்தினார் என்று நாம் யூகிக்க வேண்டும்.

புறஜாதியார் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு முன்னராகவே மற்றும் அப்போஸ்தலர்களின் கைகள் வைக்கப்படாமலேயே (இது பொது விதியிருந்து ஒரு விதிவிலக்காகும்) பரிசுத்த ஆவியானவரின் பலப்படுத்துதலைப் பெற்றனர்; இருப்பினும், அவர்கள் ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய பிள்ளைகளாவதற்கு முன் பரிசுத்த ஆவியானவர்

அவர்களுக்குள் வாசம் பண்ணியதைப் பெற்றிருந்தார்கள் என்பதற்கான சுட்டிக்காட்டுதல் எதுவும் இதில் இல்லை. மனந்திரும்புதல், ஞானஸ்நானம் மற்றும் பாவமன்னிப்பு (அப். 2:38) ஆகியவற்றைப் பெற்ற பிறகு பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுதல் என்ற பொதுவான கொள்கையானது, இவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும், நடபடிகள் புத்தகத்தின் மனமாற்ற நிகழ்ச்சிகளில் பரிசுத்த ஆவியானவரின் வரம் குறிப்பிடப் பட்டிராத மற்ற நிகழ்ச்சிகளில் போலவே (அப். 8:35-39; 16:15, 33; 18:8) இதுவும் உள்ளது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பற்றிய இந்த இரு நிகழ்ச்சிகள் தவிர மற்ற யாவற்றிலும் அப்போஸ்தலர்களின் கைகள் வைத்ததால் தான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையளிக்கப் பட்டதென்றே பதிவு செய்யப்பட்டுள்ளது (அப். 8:14-17; 19:5, 6; 2 தீமோ. 1:6).

## பரிசுத்த ஆவியானவரும் மனமாற்றமும்

பாவியொருவரை மனம் மாறச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் நேரடியாகக் கிரியை செய்ததாக எந்த ஒரு அறிக்கையும் நடபடிகளின் புத்தகத்தில் இல்லை. மாறாக, எழுதப்பட்ட வசனம் இல்லாத அவ்வேளையில் ஒரு செய்தியாளர் மூலமாக அவர் கிரியை செய்ததாகவே கூறப்படுகின்றது, மற்றும் இந்தக் காரணத்திற்காக பரிசுத்த ஆவியானவரால் சத்தியத்திற்குள் வழி நடத்தப்பட வேண்டியது அவசியமாயிருந்தது (எபே. 3:3-5). பரிசுத்த ஆவியானவருடைய உறுதிப்படுத்தும் ஊழியமானது (யோவா. 16:7-11) தேவ வசனத்தினுடைய முகமையின் மூலமாக நடத்தப்பட்டது (யோவா. 6:63; அப். 2:37; 11:14; 24:25). பரிசுத்த ஆவியானவரின் நேரடிச் செயல்பாடல்ல, ஆனால் வசனமே விசுவாசத்தின் அடிப்படையாக உள்ளது (யோவா. 17:20; அப். 17:11, 12; ரோமர் 10:17).

மக்களை தேவனுடைய புத்திரர்களாக்குவதற்காகவோ அல்லது விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் அவர்களை நடத்துவதற்காகவோ பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படவில்லை. தேவனுடைய பிள்ளையாய் இருந்த (கலா. 4:6) தேவ வசனத்தின் மூலமாகப் பிறந்த (1 பேது. 1:23), விசுவாசித்த (யோவா. 7:39) மற்றும் கீழ்ப்படிதலுள்ள (அப். 5:32) மக்களுக்கே அவர் அருளப்பட்டார்.

பாவியாயிருப்பவர் வசனத்தை ஏற்றுக் கொள்பவராவதற்காக பரிசுத்த ஆவியானவர் வந்து அவரது இருதயத்தைத் திறக்க வேண்டும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். புறஜாதியாரின் முதல் மனமாற்றமானது இப்படிப் பட்டதொரு உரிமைகோருதலை மறுக்கின்றது. ஆவியானவர் வருவதற்கு முன்பாகவே அவர்களின் இருதயங்கள் ஏற்கனவே திறக்கப்பட்டிருந்தது, ஏனெனில் அவர்கள், "... தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்" (அப். 10:33) என்று பேதுருவிடத்தில் அவர்கள் கூறினார்கள். ஆவியானவரின் முகவர் என்ற வகையில் வசனத்தின் மூலம் ஒரு இருதயம் திறக்கப்படலாம்; இருப்பினும் வசனத்தைத் தனது

இருதயத்திற்குள் அனுமதிப்பதென்பது மனிதருடைய பொறுப்பாகவே உள்ளது (லூக். 8:15). பரிசுத்த ஆவியானவர் செய்தியாளருக்குச் செய்தியைக் கொடுத்தார், ஆனால் இழந்து போகப்பட்டுள்ளவருடைய இருதயங்களில் வசனத்தை நிலைநாட்ட அவர்களிடத்தில் அவர் நேரடியாகச் செயல்படவில்லை. விசுவாசம் என்பது பரிசுத்த ஆவியானவரின் நேரடியான செயல்பாட்டினால் அல்ல மாறாக செய்தியின் மூலமாகவே வருகின்றது (ரோமர் 10:17). இந்த உலகமானது பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதில்லை (யோவா. 14:17), ஏனெனில் விசுவாசித்து (யோவா. 7:39) கீழ்ப்படிகின்றவர்களிடத்திலேயே (அப். 5:32) அவர் வருகின்றார், ஆகையால் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றார்கள் (கலா. 4:6).

வேதாகமமானது எந்த நிகழ்ச்சியிலும் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை உணர்வுப் பூர்வமான அனுபவங்களுடன் சமானமாக்குவதில்லை. பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு இவ்விதமான அணுகுமுறையைக் கொண்டிருத்தலில் உள்ள பிரச்சனை என்னவென்றால், இது நம்பகமற்ற மற்றும் நம்பிக்கைக்குத் தகுதியற்ற (நீதி. 28:26) மனித உணர்வுகளின் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமான இயல்பின் மீது (எரே. 17:9) கட்டப்படுகின்றது என்பதே ஆகும்.

சிலர் தாங்கள் ஞானஸ்நானம் பெறும்பொழுது எவ்வித உணர்வையும் உணராத காரணத்தினால் ஞானஸ்நானத்தின் அவசியத்தைத் தள்ளி விட்டிருக்கையில், மற்ற சிலர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பிருந்த ஒரு உணர்வினால் தாங்கள் ஞானஸ்நானமின்றியே தாங்கள் இரட்சிக்கப் பட்டதாக உணர்ந்துள்ளனர். ஞானஸ்நானமானது எவ்வித உணர்வுக்கும் காரணமாவதில்லை, ஆனால் சந்தோஷமடைவதற்கு அது ஒரு காரணத்தைக் கொடுக்கின்றது (அப். 8:39; 16:33, 34). இந்த சந்தோஷமானது அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று அவர் இயேசு கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தின் காரணமாக வருகின்றது.

உணர்வுகளும் ஞானஸ்நானமும் திருமணச் சடங்குடன் ஒப்பிடப்படக் கூடியவைகளாக உள்ளன. அந்தச் சடங்கிற்கு முன்னும், சடங்கின் போதும், சடங்கிற்குப் பின்னும் உள்ள உணர்வுகள் திருமணத்தை முத்திரையிடுவதில்லை. அந்தச் சடங்கானது நிச்சயமாகவே சந்தோஷத்திற்கு காரணமாக இருந்த போதிலும் கூட அது தன்னில்தானே பெண் மற்றும் மாப்பிள்ளை ஆகியோர் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள உணர்வுகளை மாற்றுவதில்லை. உணர்வுகளைப் பெற்றிருத்தலல்ல, ஆனால் திருமணக் கடமைகளை நிறைவேற்றுவதே ஒரு திருமணத்தைச் சட்டப்பூர்வமானதாக்குகின்றது.

இது போலவே, ஞானஸ்நானம் என்பது சந்தோஷமடையக் காரணமாக உள்ளது, ஆனால் ஒருவருடைய இரட்சிப்பை உறுதிப்படுத்தப் பரிசுத்த ஆவியானவர் இருதயத்தில் உணரும் உணர்வை அருளியதாக வேதாகமம் எந்த ஒரு (ஞானஸ்நான) நிகழ்ச்சியிலும் பதிவு செய்வதில்லை. இரட்சிப்பு என்பது பரிசுத்த ஆவியானவர் இருதயத்தில் புரிகின்ற நேரடிக் கிரியையின் விளைவாக அல்ல, ஆனால் இருதயத்திலிருந்து

*(ரோமர் 6:17, 18) கீழ்ப்படிதலின் (எபி. 5:9) விளைவாகவே உள்ளது.*

## *முடிவுரை*

*விசுவாசித்து, கீழ்ப்படிந்து, தேவனுடைய பிள்ளைகளாகின்றவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகின்றார். இழந்து போகப்பட்டுள்ளவர்களைத் தேவனுடைய பிள்ளைகளாக்குவதற்காக அவர் அருளப் படுவதில்லை. எந்த நபருடைய விசுவாசமானது அவர் தம் வாழ்வைச் சீரமைத்து தமது பாவத்தைச் சுத்திகரிப்பதற்காக ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுவதால் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தலை ஏற்படுத்தும்படியாக அவரை அசைக்கின்றதோ, அந்த நபருடைய இருதயத்திற்குள் அவர் (பரிசுத்த ஆவியான வர்) பிரவேசிக்கின்றார்.*

*நேர்மையான மற்றும் உண்மையான இருதயங்களுடன் இழந்து போகப்பட்ட நிலையில் உள்ளவர்கள் வசனத்தின் மூலமாக எட்டப் படுகின்றனர் (லூக். 8:15), ஆனால் மூடப்பட்ட இருதயங்களைக் கொண்டவர்கள் வசனத்தைப் புறக்கணிக்கின்றனர் (மத். 13:15). பாவியின் இருதயத்தைத் திறப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் அதில் நேரடியாகக் கிரியை செய்வதில்லை; அதற்குப் பதிலாக, வசனத்திற்குத் திறக்கின்ற மற்றும் தேவ வசனத்திற்குக் கீழ்ப்படிதலினால் சுத்திகரிக்கப்பட்டுள்ள இருதயத்தினுள் அவர் பிரவேசிக்கின்றார் (1 பேது. 1:22; அப். 2:38).*

---

*குறிப்புகள்*

[1]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 194. [2]Ibid., 195.

# யோசனைகளும் முடிவுகளும்

*உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபே. 4:4-6).*

மாறுபட்ட குழுக்களும் மற்றும் தனிநபர்களும் ஞானஸ்நானத்தின் அர்த்தம் மற்றும் நோக்கம் பற்றிய தங்களின் புரிந்து கொள்ளுதலில் மாறுபடுகின்றனர். இந்தப் புரிந்து கொள்ளுதல்களில் சில ஞானஸ்நானத்தை கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினுடைய இரட்சிக்கும் வல்லமையின் மீதுள்ள விசுவாசத்தினாலான அர்த்தமும் நோக்கமும் நிறைந்த செயல் பாடாக்குவதற்குப் பதில் அதை ஒரு வெற்றுச் சடங்காச்சாரமாகவே ஆக்குகின்றன.

ஞானஸ்நானத்தைப் புரிந்துகொள்வதற்கு ஒருவர் தேவனுடைய கட்டளைகள் மற்றும் வாக்குத்தத்தங்களுக்கான பதில் செயல்களை ஆளும் ஐந்து கொள்கைகளையும் (''பழைய ஏற்பாட்டில் சடங்கும் புரிந்து கொள்ளுதலும்'' என்ற பாடத்தைக் காணவும்) மற்றும், ஆவல் மற்றும் செயல்பாடு ஆகியவை பற்றிய கலந்துரையாடுதலையும் (''புதிய ஏற்பாட்டில் சடங்கும் புரிந்து கொள்ளுதலும்'' என்ற பாடத்தைக் காணவும்) மறுகண்ணோட்டம் செலுத்த வேண்டும். சில செயல்பாடுகள் ஒரு பயனை அடையவோ அல்லது உண்டாக்கவோ வல்லமையுடையவைகளாயிருக்க, மற்ற செயல்பாடுகள் எந்த விஷயத்தையும் அடையத் தம்மிலே வல்லமையற்றவைகளாய் இருக்கின்றன. தாம் செய்கின்ற செயலானது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டு வர முடியாது என்று ஒருவர் அறிந்தால், பிறகு அவர் அந்த ஆசீர்வாதத்தை அளிக்கக் கூடிய இன்னொரு செயல்பாட்டின் மீது விசுவாசம் கொள்ள வேண்டும். ஆகையால், அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளவர் தாம் வாக்குத்தத்தம் செய்துள்ளதை நிறைவேற்றுவார் என்பதில் விசுவாசம் கொண்டு அதைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் செயல்பட வேண்டும்.

ஒருவரின் சொந்த செயல்களினால் சாதிக்கப்பட்ட விளைவுகளுக்கும், இன்னொருவரின் செயலின் மீதுள்ள விசுவாசத்தின் காரணமாகப் பெறப்பட்ட பயன்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருக்கின்றது.

எரிகோ நகரத்தின் மதில்கள் வீழ்ந்த நிகழ்ச்சியானது (யோசுவா 6) இதற்கு நல்லதொரு விளக்கமாக உள்ளது. யோசுவா மற்றும் இஸ்ரவேல் மக்கள் ஆகியோரின் செயல்பாட்டின் காரணமாக அந்த மதில்கள் விழவில்லை. தேவன் அவற்றை விழச் செய்வார்/இடித்துத் தள்ளுவார் என்று அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணத்தினால் தேவன் அம்மதில்களை இடிந்து விழச் செய்தார். அவர்கள் தங்களுக்குக் கட்டளையிடப்பட்ட செயலானது மதில்களை இடிந்து விழச் செய்ய முடியாதிருந்தது என்று அவர்கள் அறிந்திருந்தனர். தேவன் செய்வதாக வாக்குத்தத்தம் பண்ணியிருந்த விஷயத்தின் மேல் உள்ள விசுவாசத்தின் காரணமாகவே இஸ்ரவேல் மக்கள் செயல்பட்டனரே அன்றி, தங்கள் சொந்த செயல்பாட்டின் வல்லமை மீது விசுவாசம் கொண்டு அவர்கள் செயல்பட வில்லை. தேவன் மதில்களை இடிந்து விழச் செய்வார் என்று அவர் மீது விசுவாசம் கொள்ளாமல் அவர்கள் மதில்களைச் சுற்றி அணிவகுத்துச் சென்றிருந்தால், தேவன் மதில்கள் இடிந்து விழும்படி செய்திருக்க மாட்டார். இது அவர் சரியாகச் செயல்படத் தவறியதால் அல்ல ஆனால் அவர்களின் விசுவாசக் குறைவினாலேயே அப்படி ஆகியிருக்கும். தேவன் என்ன செய்வார் என்பதைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் இன்றி அவர்கள் செயல்பட்டிருந்தால், அவர்களின் செயல்பாடானது, கிரியை செய்ய வல்லவரான தேவன் மீதுள்ள விசுவாசத்தினாலின்றி கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் அடிப்படையிலேயே இருந்திருக்கும்.

## தேவன் மீதுள்ள விசுவாசத்தின் செயல்பாடு, ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் என்பது, ஒருவர் நம்புகிறாரா அல்லது புரிந்து கொள்ளுகிறாரா என்பதைப் பொருட்படுத்தாமல் சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு உடல் அழுக்கை நீக்கும் ஒரு குளியல் போன்றதல்ல. ஞானஸ்நானமானது பாவங்களை நீக்குவதற்கான உள்ளான வல்லமையைத் தன்னிலே பெற்றிருப்பதில்லை; இயேசுவின் இரத்தம் மாத்திரமே அதைச் செய்ய முடியும். மனிதரின் செயல்பாடொன்றின் வல்லமையினால் தேவனுடைய ஈவு வருவதில்லை, ஆனால் மனிதர் செயல்படுவதற்குக் காரணமான விசுவாசத்திற்கே தேவன் பலன் அளிக்கின்றார். யோசுவாவும் இஸ்ரவேல் மக்களும் தாங்கள் செய்த செயலானது மதில்களை இடிந்து விழப் பண்ணாது என்று உணர்ந்து, விசுவாசத்தினால் செயல்பட்டது போல, ஞானஸ்நானம் பெறுகின்றவர்கள் தாங்கள் செய்யும் செயலானது தங்கள் பாவத்தை நீக்க வல்லமை உடையதாயிருப்பதில்லை என்று உணர்ந்து, விசுவாசத்தினாலே செயல்படுகின்றனர்.

இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசம் கொண்டவர்களுக்கு இரட்சிப்பு அளிக்கப்படுகின்றது (ரோமர் 3:23-25). பாவங்களை மன்னிப்பதற்கு இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் இல்லாத ஞானஸ்நானமானது சிலுவையில் அவரது மரணத்திற்கு முற்றிலும் தொடர்பற்றதாகவும், அவரது இரத்தத்தின்

மீதுள்ள விசுவாசத்தின் செயல்பாடு என்பதல்லாததாகவும் உள்ளது. ஒருவர் தம்மைச் சுத்திக்கரிக்க இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசம் அற்றவராகவே ஞானஸ்நானத்தின் மூலம் இரட்சிக்கப்படக் கூடுமென்றால், அவரது ஞானஸ்நானமானது தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக என்றிருப்பினும், இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசமின்றியே அவர் இரட்சிக்கப்படக் கூடும்.

ஒருவர் பாவ மன்னிப்பைப் பெறுகிறோம் என்பதை அவர் ஞானஸ்நானம் பெறுகையில் புரிந்து கொள்ளாதிருந்தாலும் அவர் பாவமன்னிப்பைப் பெற முடியும் என்பதற்குச் சிலர் கொடுத்திருக்கும் விளக்கங்களுக்கு செசில் மே, ஜூனியர் அவர்கள் ஒரு பதிலுரை எழுதினார்:

> நோயுள்ள மனிதர்கள் சரியான மருந்தை உட்கொண்டால், அது அவர்களைக் குணமாக்கும் நோக்கம் கொண்டதாயுள்ளது என்பதை அவர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அந்த மருந்து அவர்களைக் குணமாக்கும். அவர்கள் தாங்கள் ஏற்கனவே நலமாக இருப்பதாகத் தவறாக நினைத்திருந்தாலும் கூடத் தங்கள் மருத்துவர் அல்லது பெற்றோருக்கு கீழ்ப்படிவதற்காக அம்மருந்தை உட்கொண்டாலும், அந்த மருந்து அப்பொழுதும் கூட வேலை செய்யும்.[1]

இன்னொரு விளக்கத்தைக் கொடுத்த பிறகு அவர் பின்வருமாறு எழுதினார்:

> இருப்பினும் இந்த விளக்கங்கள் செயல்பாடு மற்றும் வாக்குத்தத்தம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவின் கருத்தில் முறிந்து போய் விடுகின்றன. மருந்து என்பது சாதாரணமாகவே உள்ளாகக் குணப்படுத்துதலுடன் தொடர்புடையதாகும் … இரட்சிப்பு என்பது கிருபையினால் உண்டாகின்றதென்பது துல்லியமாய் இருக்கும் காரணத்தால், அது ஞானஸ்நானம் பெறுவதினால் அல்ல, விசுவாசத்தினாலே ஈட்டப் படுவதாயிருக்கின்றது, அது தண்ணீரில் உள்ளான மதிப்பீடுகளினாலோ அல்லது செயலினாலோ நிறைவேற்றப் படுவதல்ல, ஒருவர் இரட்சிக்கும் விசுவாசம் கொண்டுள்ளாரா என்பது போலவே ஞானஸ்நானம் மற்றும் இரட்சிப்புக்கு அதனுடன் உள்ள தொடர்பு பற்றிப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்ன என்பதும் தகுந்ததாகவே உள்ளது.
>
> நாம் இரட்சிப்புக்கான நமது தேவையைக் காண்கின்றோம், கிறிஸ்து அளிக்கின்ற நீதிமானாக்குதலுக்காக நாம் அவர்மீது நம்பிக்கை கொள்ளுகின்றோம், மற்றும் அவர் ‘‘விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்’’ என்று கூறியுள்ள காரணத்தினால் ஞானஸ்நானம் பெறுகின்றோம். இரட்சிக்கப்படுதல் ஞானஸ்நானம் பெறுதலிலே உள்ளது, ஞானஸ்நானத்தையும் இரட்சிப்பையும் வாக்குத்தத்தத்தால் கிறிஸ்து இணைத்துள்ளார் என்று அவர் மீது கொள்ளும் விசுவாசம் தவிர ஞானஸ்நானம் மற்றும் இரட்சிப்பு ஆகியவை வேறெந்த தொடர்பு இல்லாதிருக்கும் பொழுது, நாம் விசுவாசத்தின் மூலமாகக் கிருபையினால் இரட்சிக்கப் படுகின்றோம் என்பதை விசுவாசிக்கின்றோம்.[2]

ஞானஸ்நானம் தன்னிலேயே பாவத்தை நீக்குமென்றால், ஞானஸ்நானம் பெறுபவரின் விசுவாசம் அல்லது புரிந்து கொள்ளுதல் இன்றியே பாவமானது நீக்கப்பட்டு விடும். ஞானஸ்நானம் என்ற செயலானது பாவத்தை நீக்க முடியாதாகையால், பாவங்கள் நீக்கப்பட இன்னொருவர் நமது பாவங்களுக்காக இரத்தம் சிந்திய இயேசு என்பவர் மீது விசுவாசம் கொள்ளுதல் என்பது அவசியமாகின்றது. இது உண்மையல்ல வென்றால், இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தினால் பாவங்கள் நீக்கப்படுவாதாயிராமல், தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்ற சடங்காச்சாரச் செயலின் அடிப்படையில் அமைந்ததாக, இயேசுவின் இரத்தத்தினுடைய சுத்திகரிக்கும் வல்லமையை ஒன்றுமற்றதாக ஆக்கி விடுவதாக இது அமைந்து விடும். இப்படிப்பட்டதொரு அணுகுமுறையானது ஞானஸ்நானத்தை மனிதனின் பாவம் நிறைந்த நிலை மற்றும் இயேசுவின் இரத்தத்தினுடைய வல்லமை ஆகியவற்றிற்கு முற்றிலும் தொடர்பற்றதாக்கி விடும்.

ஞானஸ்நானமல்ல, இயேசுவின் இரத்தமே பாவத்தை நீக்கும் வல்லமை கொண்டுள்ளது என்பதால், ஞானஸ்நானத்தின் பயனானது அவரது இரத்தத்தின் மீது ஒருவர் கொண்டுள்ள விசுவாசத்தினாலேயே பெறப்படுகின்றது. ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதினால் மட்டும் மன்னிப்பு உண்டு என்பதானது ஞானஸ்நானத்தை இயேசுவின் இரத்தத் தின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் ஏற்படுத்துவதற்குப் பதிலாக பாவமன்னிப்பின் அடிப்படையில் ஏற்படுத்துவதாகி விடும். இயேசுவின் இரத்தத்தினுடைய இரட்சிக்கும் வல்லமையின் மீது விசுவாசமின்றி, கிரியைகளினாலேயே இரட்சிப்பு உண்டு என்பதை விட புதிய ஏற்பாட்டுக்கு அதிக முரண்பாடான வேறு உபதேசம் எதுவும் கிடையாது (எபே. 2:8; ரோமர் 3:25).

மேற்கண்ட முடிவுகளிலிருந்து சில கண்ணோட்டக் கருத்துக்கள் மாறுபடுகின்றன:

> ... கர்த்தர் மக்களைக் கீழ்ப்படியும்படிக் கட்டளையிட்டதும், அதன் நோக்கத்தை அவர் நிறைவேற்றுகின்றதுமான கட்டளைகளில் பிந்தியதையல்ல முந்தியதையே அவர்கள் செய்ய வேண்டும். உண்மையில், பிந்தியதை அவர்கள் செய்ய முடியாது. ஞானஸ் நானத்துடன் தொடர்புடைய வகையில் "பாவமன்னிப்பு" (அப். 2:38) என்பது மனிதர்கள் ஞானஸ்நானம் பெறும் பொழுது தேவன் நிறைவேற்றுகின்ற ஒரு நோக்கமாக உள்ளது. "பரிசுத்த ஆவியின் வரம்" என்பது ஒரு வாக்குத்தத்தமாக உரைக்கப்பட்டிருந்தாலும், அது மன்னிப்பு என்ற அதே வகையில் பொருந்துவதாக உள்ளது, ஏனெனில் இவ்விரண்டு ஆசீர்வாதங்களுமே மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுபவர்கள் மீது தேவனால் பொழியப்படுகின்றவைகளாகும். "பாவமன்னிப்பு" என்பதோ அல்லது "பரிசுத்த ஆவியின் வரம்" என்பதோ ஞானஸ்நானக் கட்டளையின் பாகமாய் இருப்பதில்லை. இவ்விரண்டுமே கட்டளைக்குக் கீழ்ப்படிவதைத் தொடர்ந்து வரும் விளைவுகளாய் உள்ளன. ஞானஸ்நானத்தில் தேவன் பாவமன்னிப்பை யும் பரிசுத்த ஆவியின் வரத்தையும் வழங்குகின்றார் என்று மக்கள்

அறிந்திருக்க வேண்டும் அல்லது இவ்விரண்டில் ஒன்றையோ அல்லது இவ்விரண்டு பயன்களையுமே அவர்கள் மறுதலிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்கான வெளிப்படையான கூற்று எதையும் கர்த்தரிடத்திலிருந்து எவரொருவரும் ஒருக்காலும் காண மாட்டார்கள்.[3]

தேவனே பாவங்களை மன்னிக்கின்றார் என்பதை எவரொருவரும் மறுப்பதில்லை. இருப்பினும், இன்னொருவரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளதைப் பெறும் நோக்கத்திற்கு ஒருவர் பதில்செயல் செய்ய இயலும். எரிகோவின் மதில்களைத் தேவன் இடிந்து விழப் பண்ணுவார் என்று இஸ்ரவேல் மக்கள் விசுவாசம் கொண்டிருந்தனர். எனவே அவர் வாக்குத்தத்தம் செய்திருந்ததைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு அவர்கள் பதில்செயல் செய்தனர்.

“மூந்நூறு ரூபாய்க்காக உங்கள் கையை நீட்டுங்கள்!” என்ற கூற்றிற்கும், “உங்கள் கையை நீட்டுங்கள்!” என்ற கூற்றிற்கும் இடையே ஒரு வித்தியாசம் உள்ளது. பிந்திய கூற்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமோ அல்லது ஆசீர்வாதமோ இல்லாத ஒரு கட்டளையாக உள்ளது. முந்திய கூற்றானது கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் நோக்கத்துடனான செயல்பாடு மற்றும் வாக்குறுதியில் விசுவாசம் ஆகியவற்றைக் கோருகின்றது, பிந்திய கூற்றோ கண்மூடித்தனமான கீழ்ப்படிதலுக்கப்பால் விசுவாசத்தையோ அல்லது நோக்கத்தையோ கோருவதில்லை.

முதலாவது கூற்றின்படியாகக் கையை நீட்டுதல் என்பது அவ்விதம் நீட்டுபவர் முந்நூறு ரூபாய்க்காக தமது கையை நீட்டாதவரை அவரை முந்நூறு ரூபாயைப் பெறும் தகுதியுடையவராக்குவதில்லை. அவர் தமது கையை ஒரு கை குலுக்கலுக்காகவோ அல்லது வேறு சில காரணங்களுக் காகவோ நீட்டலாம், ஆனால் இந்தச் செயலானது முந்நூறு ரூபாயைப் பெறுவதற்கு அவரைத் தகுதிப் படுத்துவதில்லை. கையை நீட்டும் மனிதருடைய சிந்தனையை ஒருவர் அறிய முடிந்தால், அவர் தம் கையை முந்நூறு ரூபாயைப் பெறுவதற்காகவா அல்லது வேறு எதற்காகவா, எதற்கு நீட்டுகிறார் என்பதை அறிந்து கொள்வார். இரண்டாவது கூற்றைக் கவனியுங்கள். வாக்குறுதி செய்யப்பட்டது என்ன என்பதை ஒருவர் அறிந்திராவிட்டால் அல்லது புரிந்து கொண்டிராவிட்டால் அவர் எப்படி யாரோ ஒருவர் முந்நூறு ரூபாய் கொடுப்பார் என்ற விசுவாசம் கொள்ளவோ அல்லது முந்நூறு ரூபாய்க்காகத் தம் கையை நீட்டவோ முடியும்?

பழைய பிரமாணத்தின் கீழ், மிருகங்கள் நன்றிப் பலிகளாகவோ/ ஸ்தோத்திர பலிகளாகவோ, சமாதான பலிகளாகவோ அல்லது பாவ நிவாரண பலிகளாகவோ பலி செலுத்தப்பட முடிந்திருந்தது (லேவி. 4:27, 28). ஒவ்வொரு பலியும் ஒரு நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட வேண்டியிருந்தது; எடுத்துக்காட்டாக, ஒருவர் ‘‘தாம் செய்திருந்த பாவத்திற்காக” பாவ நிவாரணப் பலியொன்றைக் கொண்டு வரவேண்டி யிருந்தது. பல்வேறு வகையான பலிகளுக்கான மிருகங்கள் ஒரே வகையைச்

சேர்ந்தவைகளாயிருக்கலாம், ஆனால் ஒவ்வொரு பலியும் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகவே செலுத்தப்பட வேண்டியதாயிருந்தது.

இஸ்ரவேல் புத்திரர்களில் ஒருவர் ஒரு ஆட்டுக்குட்டியை ஆசாரியரிடம் கொண்டு வந்து தாம் ஒரு பலி செலுத்த விரும்புவதாக அறிவிக்கிறார் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அந்த ஆசாரியர் அவரிடத்தில், "இந்த பலியை நீங்கள் கொண்டு வந்தது எதற்காக?" என்று கேட்பார்.

அதற்கு அந்த மனிதர், ''தேவன் பலியிடுதலைக் கட்டளை யிட்டுள்ளதால்'' என்று பதில் அளிப்பார்.

அதற்கு அந்த ஆசாரியர், "பலிகளுக்குப் பல்வேறு நோக்கங்கள் உள்ளன, உங்கள் நோக்கம் என்ன?" என்று கேட்பார்.

அதற்கு அந்த மனிதர், ''தேவன் பலியிடுவதைக் கட்டளை யிட்டுள்ளார்'' என்று பதில் அளிப்பார்.

அதற்கு அந்த ஆசாரியர், ''அது போதுமானதல்ல. உங்கள் பலியிடுதலுக்கு நீங்கள் ஒரு நோக்கம் கொண்டிருத்தல் வேண்டும்" என்பார்.

அதற்கு அந்த மனிதர், ''நான் எதற்காக இந்தப் பலியைச் செலுத்துகிறேன் என்று நான் அறியேன். தேவன் பலி செலுத்தும்படி கட்டளையிட்டுள்ளார் என்பதை மட்டும் நான் அறிவேன்" என்பார்.

அதற்கு அந்த ஆசாரியர், "இது உங்கள் பாவங்களுக்கான பலியா?" என்று கேட்பார்.

அதற்கு அந்த மனிதர் மறுப்புரையாக, "பாவங்களை மன்னித்தல் என்பது தேவனுடைய பகுதியாகும். பாவமன்னிப்புக்கு நான் கீழ்ப்படிய முடியாது. நான் தேவனுக்குக் கீழ்ப்படிய மட்டுமே விரும்புகிறேன்'' என்பார்.

அதற்கு அந்த ஆசாரியன், "உங்கள் பலியிடுதலுக்கு நீங்கள் ஒரு நோக்கம் கொண்டிருக்கவில்லையென்றால், நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது" என்று தெரிவிக்கக் கூடும். "தேவன் பலியிடுதலைக் கட்டளை யிட்டதுடன் பலியிடுதலைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகச் செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளார்" என்றும் அவர் கூறுவார்.

அதற்கு அந்த மனிதர், ''எனது பாவம் ஏற்கனவே மன்னிக்கப் பட்டாயிற்று. தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காகப் பலி செலுத்துவதே எனது நோக்கமாய் உள்ளது" என்று கூறலாம்.

ஆசாரியர் முடிவாக, "பலியிடுதல் என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்காக இல்லாத வரையில், நான் அதைச் செலுத்த முடியாது. நான் இதை ஒரு நன்றிப் பலியாகவோ அல்லது ஒரு சமாதான பலியாகவோ அல்லது ஒரு பாவநிவாரண பலியாகவோ செலுத்துவேன், ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படி வதற்காக மட்டும் என்று இதை என்னால் செலுத்த இயலாது'' என்று கூறுவார்.

தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது பலி என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்கியதாயிருக்கும், ஏனெனில் கீழ்ப்படிதல் என்பது சரியான நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த செயலையும் வேண்டிக் கேட்கின்றது.

இன்றைய நாட்களில் ஞானஸ்நானமானது பல்வேறு நோக்கங்

களுக்காக(உதாரணமாக, நாமகரணக் கூட்டமொன்றில் உறுப்பினர் ஆவதற்கு அல்லது ஒருவர் இரட்சிக்கப்பட்டுள்ளார் என்று காண்பிப் பதற்கு)த் தரப்படுகின்றது. தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது ஞானஸ்நானம் பெறுவதற்கான ஒரு காரணமாய் இருந்தாலும், தேவன் செய்வதாக வாக்குத்தத்தம் பண்ணியுள்ளதில் கொண்டுள்ள விசுவாசத்தை ஒன்றுமற்றதாக்குகின்ற கீழ்ப்படிதலானது தேவனுக்குக் கீழ்ப்படிதலாக இருப்பதில்லை.

## கூற்று 1: "இயேசு நமக்கு உதாரணமாக இருக்கின்றார்"

ஞானஸ்நானம் பெறுவதற்கான நமது நோக்கத்திற்கு இயேசு ஒரு உதாரணமாக விளங்குகின்றார் என்று கூறப்பட்டுள்ளது: "இயேசு ஞானஸ்நானம் பெற்றவாறே நாமும் ஞானஸ்நானம் பெற வேண்டும் ... என்று நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது."[4] இயேசு பல வழிகளில் நமக்கு உதாரணமாக இருக்கின்றார், ஆனால் மனந்திரும்புதல் தேவையாயிருக்கின்ற (அப். 3:19) பாவமன்னிப்புக்கு அவர் நமது உதாரணமாக இருக்க முடியாது, ஏனெனில் அவரிடத்தில் மனந்திரும்ப அல்லது மன்னிக்கப்பட ஏதுவான பாவம் எதுவும் இல்லாதிருந்தது.

இயேசு தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காகவே ஞானஸ்நானம் பெற்றார், அவர் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறவில்லை. யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்தவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக வந்தனர். வருவதற்கு இது ஒரு நல்ல காரணமாகவே இருந்தது, ஆனால் அவர்கள் வந்ததற்கு இது ஒன்று மட்டுமே காரணமாக இருந்ததில்லை. அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடவும் (மத். 3:6) மற்றும் யோவானால் அறிவிக்கப்பட்ட மன்னிப்பைத் தேடவும் வந்தனர் (லூக். 3:3).

இந்த நோக்கத்திற்காக இயேசு வரத் தேவையில்லாதிருந்தது என்ற உண்மையானது இந்த நோக்கத்திற்காக மற்ற யாவரும் வரத்தேவை யாயிருந்தது என்ற உண்மையை ஒன்றுமற்றதாக்கி விடுவதில்லை, மற்றும் நாம் இந்த நோக்கத்திற்காக வரவேண்டிய நமது தேவையையும் இது ஒன்றுமற்றதாக்குவதில்லை. நமது கரங்கள் அழுக்காயுள்ளன என்பதை உணர்ந்து அதைக் கழுவுவதற்கு வருகின்ற மக்களைப் போன்றவர்களாகவே நாம் இருக்கின்றோம். இயேசுவின் இரத்தத்தின் மூலமாக சுத்திகரிக்கப் படுதலை நாடுதல் என்பதே நாம் அவரிடத்தில் வருதலுக்கும் அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்தலுக்குமான நோக்கமாயிருக்க வேண்டும். நாம் நம்மைக் கழுவிச் சுத்திகரித்துக் கொள்வதில்லை என்ற உண்மையானது இந்த சுத்திகரிப்பை பெறும் நோக்கத்திற்காக ஞானஸ்நானத்தின் மூலம் நாம் இயேசுவினிடத்தில் வர முடியாது என்று அர்த்தப்படுத்துவதில்லை. நாம் இந்த நோக்கத்திற்குக் கீழ்ப்படிய முடியாது, ஆனால் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுதல் என்ற நோக்கத்திற்கு நாம் வர முடியும். இந்த நோக்கத்திற்காக வரும்பொழுது

தேவன் நமது விசுவாசத்தைக் காண்கின்றார், மற்றும் நமது விசுவாசத்தின் அடிப்படையில் அவரே நமது பாவங்களை மன்னிக்கின்றார். வேறொரு நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெற வருபவர் தாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இயேசுவின் இரத்தத்தின் மூலம் அவர் பாவங்களை மன்னிப்பதாகத் தேவன் ஏற்படுத்திய வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் கொண்டவராய் பதில்செயல் செய்வதில்லை.

ரூபல் ஷெல்லி அவர்களின் பின்னாளைய சில கூற்றுக்கள் முரண் பட்டவைகளாயிருப்பினும், பின்வருமாறு அவர் சரியாக உற்று நோக்கினார்: “தனிப்பட்ட விசுவாசமே மிக முக்கியமான விஷயமாய் உள்ளது. ஒருவர் புரிந்து கொள்வது என்ன? இவ்விஷயத்தில் அவரது உள் நோக்கம் என்ன?”[5]

எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காகவே தாம் ஞானஸ்நானம் பெற வந்ததாக இயேசு கூறினார், இது அவர் தமது ஞானஸ்நானத்திற்கான நோக்கத்தை அறியாதிருந்ததில்லை என்று அர்த்தப்படுத்துகின்றது, இயேசுவைப் பின்பற்றுவதற்கு நாம், ஞானஸ்நானம் நமக்காகக் கொண்டுள்ள நோக்கம் என்ன என்பதை அறிந்தவர்களாய் வர வேண்டும், இது நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக நாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு வர வேண்டும் என்று அர்த்தப்படுகின்றது.

## கூற்று 2: “ஆவியானவரின் வரமும் பாவமன்னிப்பும் ஒரே வர்க்கத்தை உடையனவாய் இருக்கின்றன”

சுத்திகரித்தல் என்பதே ஞானஸ்நானத்தின் நோக்கம் என்பதைப் புரிந்து கொள்ளுதலின் அவசியத்தைச் சிலர் மறுத்திருக்கின்றனர்:

> ‘‘பரிசுத்த ஆவியின் வரம்’’ என்பது ஒரு வாக்குத்தத்தமாக உரைக்கப்பட்டிருந்தாலும், இது பாவமன்னிப்பு என்பதின் வகையிலேயே பொருந்துவதாய் உள்ளது, ஏனெனில் இவ்விரண்டுமே மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுபவரின் மீது தேவன் பொழியும் ஆசீர்வாதங்களாய் உள்ளன. “பாவ மன்னிப்பு” என்பதோ அல்லது “பரிசுத்த ஆவியின் வரம்” என்பதோ ஞானஸ்நானக் கட்டளையின் பாகமாய் இருப்பதில்லை.[6]

அப். 2:38 வசனமானது, “மனந்திரும்பி ... ஞானஸ்நானம் பெறுங்கள் மற்றும் நீங்கள் பாவமன்னிப்பையும் பரிசுத்த ஆவியையும் பெறுவீர்கள்” என்றோ அல்லது “பாவமன்னிப்புக்காகவும் மற்றும் பரிசுத்த ஆவியின் வரத்திற்காகவும் நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்” என்றோ கூறுவதில்லை. இவ்வசனமானது, ‘‘நீங்கள் மனந்திரும்பி ... பாவ மன்னிப்புக்கென்று ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்’’ என்றே கூறுகின்றது. பாவமன்னிப்பும் மற்றும் பரிசுத்த ஆவியின் வரமும் கிரேக்க

*வார்த்தையான* eis ("for" *''க்கு''* ) *என்பதற்குச் சமமாக தொடர்பு படுத்தப் படவில்லை.* "For" *''க்கு'' ''க்கென்று''* (eis*) என்பது பாவமன்னிப்புடன் மட்டுமே தொடர்பு படுத்தப்பட்டுள்ளது ("பாவமன்னிப்புக்கென்று ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்"), இது பரிசுத்த ஆவியின் வரத்துடன் தொடர்பு படுத்தப்படவில்லை ("பரிசுத்த ஆவிக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்"). ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்புக்கென்று தானே தவிர, பாவமன்னிப்புக்கென்றும் மற்றும் பரிசுத்த ஆவியின் வரத்திற்கென்றும் ஆனதல்ல. பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுவதென்பது பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கான நிபந்தனையாக உள்ளது.*

*இந்த வேறுபாட்டை பல்வேறு மொழிபெயர்ப்புகள் வெளிக் கொண்டு வருகின்றன:*

> *மனந்திரும்பி ... பாவமன்னிப்புக்கென்று ... ஞானஸ்நானம் பெறுங்கள், மற்றும் நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* (NIV *மற்றும்* Green, *ஒரு நேரடியான மொழிபெயர்ப்பு).*

> *மனந்திரும்பி, ... பாவமன்னிப்புக்கென்று ... ஞானஸ்நானம் பெறுங்கள், மற்றும் நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* (NASB, RSV, NRSV).

*இந்த மொழிபெயர்ப்புகள் யாவும் "பாவமன்னிப்பு" என்ற வார்த்தைக்குப் பிறகு (தமிழில் ''பெறுங்கள்'' என்ற வார்த்தைக்குப் பிறகு) ஒரு புள்ளியையோ அல்லது காற்புள்ளியையோ இடுவதன் மூலம், பரிசுத்த ஆவியின் வரம் என்பது மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு அருளப்படு வதாகும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்விதமாக, ஒருவர் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்காக ஞானஸ்நானம் பெறுவதில்லை, அதற்குப் பதிலாக பாவமன்னிப்பைப் பெறுவதற்காகவே ஞானஸ்நானம் பெறுகின்றார், பரிசுத்த ஆவியின் வரம் இதனைத் தொடர்ந்து வருவதாயுள்ளது.*

*ஞானஸ்நானம் என்பது புதிய பிறப்பைக் கொண்டு வருவதை அடக்கியுள்ளது. பரிசுத்த ஆவியின் வரம் என்பது மறுபடியும் பிறந்தவர்களுக்கு (கலா. 4:6) அந்தப் பிறப்பு ஏற்பட்ட பிறகு தரப்படும் வரமாய் இருக்கின்றது. ஒருவர் மீண்டும் பிறப்பதற்காக ஞானஸ்நானம் பெறுகின்றார், மற்றும் ஒருவர் மறுபடி பிறந்துள்ள காரணத்தினால் அவருக்கு பரிசுத்த ஆவி அருளப்படுகின்றார். ஞானஸ்நானமும் பரிசுத்த ஆவியின் வரமும் சம அளவில் பாவமன்னிப்புடனும் புதிய பிறப்புடனும் உறவு படுத்தப்படுவதில்லை. ஒரு வெற்றுச் சடங்கினால் புதிய பிறப்பு நடை பெறுவதில்லை, ஆனால் ஞானஸ்நானம் பெறுகையில் சுத்திகரிப்பையும் புதிய வாழ்வையும் நாடும் நபரின் பகுதியில் உள்ள மனப்பூர்வமான முயற்சி மற்றும் ஈடுபாடு ஆகியவற்றால் இந்தப் புதிய பிறப்பு ஏற்படுகின்றது.*

## கூற்று 3: “ஞானஸ்நானத்திற்‘குள்’ உள்ள ஒவ்வொன்றையும் ஒருவர் புரிந்து கொள்ளத் தேவையில்லை”

*ஞானஸ்நானம் என்பது பின்வருவனவற்றுக்குள்ளாக்குகின்றது அல்லது பின்வருவனவற்றிற்‘‘குள்’’ இருக்கிறது என்று சிலர் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்:*

*(1) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே (மத். 28:19).*

*(2) பாவமன்னிப்பு (அப். 2:38; மாற். 1:4; லூக். 3:3; மத். 26:28).*

*(3) கர்த்தராகிய இயேசுவின் நாமம் (அப். 19:5).*

*(4) கிறிஸ்து (ரோமர் 6:3).*

*(5) கிறிஸ்துவின் மரணம் (ரோமர் 6:3).*

*(6) கிறிஸ்துவின் சரீரமாகிய சபை (1 கொரி. 12:13).*

*இவ்விதமாக அவர்கள், அப். 2:38ல் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் பாவமன்னிப்பைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்ததென்றால், ஞானஸ்நானம் எவற்றிற்‘‘குள்’’* eis (“into” *க்குள்)*[7] *ஆக்குகின்றதோ அவை எல்லாவற்றையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியிருந்திருக்குமே என்று வாதிட்டுள்ளனர்.*

*மத். 28:19, அப். 19:5, ரோமர் 6:3 மற்றும் 1 கொரி. 12:13 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட கிரேக்கச் சொற்றொடர்கள் அப். 2:38ல் உள்ள சொற்றொடரில் இருந்து மாறுபடுகின்றன என்பதே இதில் உள்ள பிரச்சனையாக இருக்கின்றது. அப். 2:38, மாற். 1:4, லூக். 3:3 மற்றும் மத். 26:28 ஆகியவற்றில் உள்ள eis என்பதன் வலிவு பின்வரும் வகையில் கருதப்பட வேண்டும் என்று* Oepke *அவர்கள் சுட்டிக்காட்டினார்: “eis என்பதன் நிறைவு வலிவானது அத்துடன் இணைந்துள்ள முன்னிடைச் சொல் விளக்கமானது தனிப்பட்ட வினையுரிச் சொல் விளக்கமாகும் அளவுக்கு உயருகின்றது.’’*[8] *ஞானஸ்நானத்துடன் eis என்பதன் மற்ற பயன்பாடுகள் ‘‘ஒரு தனிப்பட்ட வினையுரிச் சொல் விளக்கமாகும்’’ “இணைவு முன்னிடைச் சொல்” விளக்கமாயிருப்பதில்லை; ஆகையால், அவைகள் அப். 2:38 அல்லது மாற்கு 1:4க்கு இணையானவைகளாய் இருப்பதில்லை.*

*ஞானஸ்நானம் பெறுவதற்கான நமது நோக்கங்களைத் தேவன் அறிகின்றார்; இந்த அடிப்படையிலேயே அவர் பரிசுத்த ஆவியை அருளுகின்றார். பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகப் பலிகளைக் கொண்டு வந்தது போலவே, நமது பாவங்களிலிருந்து நம்மைச் சுத்திகரிக்கும் நோக்கத்திற்காக நாம் ஞானஸ்நானம் பெற வர வேண்டியுள்ளது. மற்ற சில நோக்கங்களுக்காக வருகின்றவர்கள் ஞானஸ்நானத்துடன் தேவன் இணைத்துள்ள அர்த்தத்தைத் தவற விடுகின்றனர்.*

## கூற்று 4: "ஆபிரகாமின் பயணம் ஒரு உதாரணமாக உள்ளது"

*ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கான நோக்கத்தை அறியத் தேவையில்லை என்பதை ஆபிரகாமின் பயணமானது விளக்கி யுரைக்கின்றது என்று சிலர் கூறியுள்ளனர்.*

> *ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காகத் தமது சொந்த நாட்டை விட்டு, தாம் எங்கு போகிறோம் என்ற கருத்து எதுவும் இல்லாதிருந்தும் ஏதோ ஓரிடத்திற்கு ஒரு பயணத்தைத் தொடங்கினார் (எபி. 11:8). தேவன் அவரை எங்கு வழி நடத்திச் சென்றார் என்பதை அவர் அறிந்திருந்தால், அவர் இன்னும் அதிக கீழ்ப்படிதலுடன் இருந்திருப்பார் அல்லவா?*[9]

*ஒருவர் தாம் ஞானஸ்நானம் பெறுவதன் நோக்கத்தை அறியத் தேவையில்லை என்பதை நிரூபிக்க ஆபிரகாமின் பயணத்தைப் பயன்படுத்துவதில் இரண்டு பிரச்சனைகள் எழுகின்றன. முதலாவது, ஆபிரகாமுக்குத் தேவனுடைய கூற்றானது அவர் (ஆபிரகாம்) தம் சொந்த நாட்டை விட்டு தாம் (தேவன்) காண்பிக்கும் இடத்திற்குப் போக வேண்டும் என்ற ஒரு கட்டளையை மட்டும் உள்ளடக்கியதாய் இருந்த தில்லை. ஆபிரகாம் இதைச் செய்தால் அவரைப் பெரிய ஜாதியாக்கி அவருக்குள் இந்தப் பூமியின் சகல குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதாகத் தேவன் அவரிடத்தில் கூறினார் (ஆதி. 12:1-3). இரண்டாவதாக, ஆபிரகாம் தமது சொந்த நாட்டை விட்டுத் தாம் எங்கு செல்கிறோம் என்பதை அறியாதிருந்தார் ஆயினும், எங்கு செல்ல வேண்டும் என்று காண்பிப்பதாகக் கூறிய தேவனுடைய வாக்குத்தத்தமின்றி அவர் விடப்பட்டிருக்கவில்லை (ஆதி. 12:1).*

*ஞானஸ்நானத்தில் இதற்கு இணையானது பல வேளைகளில் நடந்துள்ளது. ஒரு நபர் பாவமன்னிப்புக்காக தண்ணீரில் ஞானஸ்நானம் பெறத் தீர்மானம் செய்தவராக, எங்கு ஞானஸ்நானம் பெறுவது என்பதை அறியாதவராகக் கிளம்பி வெளியே சென்றார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தின் மீதுள்ள விசுவாசமே இரட்சிப்புக்குத் தேவையான விசுவாசமாக உள்ளது (ஒருவர் தண்ணீரைக் காணும்படி எங்கு செல்கின்றார் என்பதில் அல்ல). ஆபிரகாமின் விசுவாசத்தைப் பொறுத்தமட்டிலும் கூட இது உண்மையாயிருந்தது; அவருடைய விசுவாசமானது தேவனுடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தின் மீது இருந்ததே தவிர, தேவன் தம்முடைய வாக்குத் தத்தங்களை எங்கு நிறைவேற்றுவார் என்பதில் அல்ல.*

*ஆபிரகாம் தாம் எங்கு செல்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளாதிருந்தார், ஏனென்றால் அவர் எங்கு சென்று கொண்டிருந்தார் என்பதைத் தேவன் அவருக்கு இன்னமும் வெளிப்படுத்தாதிருந்தார், ஆனால் அவர் சென்றால் தேவன் தாம் என்ன செய்வோம் என்பதை வெளிப் படுத்தியிருந்தார். இதில் அவர் (ஆபிரகாம்) தம் விசுவாசத்தை வைத்தார்.*

நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டால், அவர் என்ன செய்வார் என்று தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் என்ன செய்வார் என்று நாம் அறிந்து கொள்ள முடியும் என்று இது அர்த்தமாகின்றது, மற்றும் இதில் நாம் நம்முடைய விசுவாசத்தை வைக்க வேண்டும்.

## கூற்று 5: "இஸ்ரவேலர்கள் எரிகோவில் தங்கள் செயல்பாட்டிற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்ததில்லை"

எரிகோவின் மதில்களைச் சுற்றி இஸ்ரவேலரின் அணி வகுத்து நடந்து செல்லுதல் பற்றி, ''அவர்கள் (இஸ்ரவேலர்கள்) அணி வகுத்துச் செல்வதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளத் தவறியிருந்து, ஆனால் அணி வகுத்துச் சென்றிருந்தார்கள் என்றால், தேவன் அந்த மதில்களை (விழாமல்) நிற்கச் செய்திருப்பாரா?" என்ற கேள்வி கேட்கப்பட்டுள்ளது.[10] தேவன் அவர்களுக்குப் போதுமான, வெளிப்படையான மற்றும் முழுமையான அறிவுறுத்தல்கள் கொடுத்திருந்தார், மற்றும் அவர் தாம் கட்டளையிடப்பட்டிருந்ததை அவர்கள் செய்தால் தாம் செய்வதென்ன என்பதையும் தெளிவாய் உரைத்திருந்தார் (யோசுவா 6). அவர்கள் அதைப் புரிந்து கொண்டார்கள், ஆகையால் தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணினதைச் செய்வார் என்ற விசுவாசத்துடன் அணி வகுத்துச் சென்றார்கள். இந்த விசுவாசத்தின் அடிப்படையில் தேவன் அந்த மதில்களைச் சிதையச் செய்தார் (எபி. 11:30).

அவர்களின் விசுவாசம் எதின் மேலிருந்தது? அவர்களின் அணி வகுத்த நடையிலா? அவர்களின் ஆர்ப்பரிப்பிலா? அவர்களின் எக்காளங்களை ஊதியதிலா? மதில்களைத் தேவன் இடிந்து விழச் செய்வார் என்று அவர் மீது கொண்ட விசுவாசமே அவர்களை அணி வகுத்துச் செல்லும்படி தூண்டிற்று. *அவர்களின் விசுவாசத்தினாலேயே* தேவன் மதில்களை இடிந்து விழச் செய்தார் என்ற உண்மையானது, மதில்களை இடிப்பதற்கு அவர்கள் அவர் மீது விசுவாசம் கொள்ளாதிருந்தால், அவர்கள் அணிவகுத்துச் சென்றிருந்தாலும், ஆர்ப்பரித்து மற்றும் எக்காளங்கள் ஊதியிருந்தாலும் அவர் மதில்களை இடிந்து விழச் செய்திருக்க மாட்டார் என்றே அர்த்தப்படுகின்றது.

மதில்களை இடிந்து விழச் செய்தல் என்பதே தேவனுடைய வாக்குத்தத்தமாய் இருந்தது. தேவன் தமது பங்கை நிறைவேற்றுவதற்கு, அவர்கள் விசுவாசத்துடன் அணிவகுத்து, ஆர்ப்பரித்து மற்றும் எக்காளம் ஊதுதல் என்பது அவர்களின் பங்காயிருந்தது. அவர்கள் தேவனுடைய பங்கைப் புரிந்து கொள்ளாதிருந்தால், தேவன் தமது பங்கை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடன் அவர்கள் செயல்பட்டிருக்க முடியாது.

நமது விஷயத்தில், நமது பாவங்களை மன்னித்தல் என்பது தேவனுடைய பங்காக உள்ளது. தேவன் தம்முடைய பங்கை நிறைவேற்றுவார்

என்ற விசுவாசத்துடன் நாம் ஞானஸ்நானம் பெறுவதென்பது நமது பங்காக உள்ளது. நாம் தேவனுடைய பங்கைப் புரிந்து கொள்ளாவிட்டால், தேவன் தம்முடைய பங்கை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடன் நாம் செயல்பட முடியாது.

போதுமான அளவு புரிந்து கொள்ளுதல் இல்லாமை என்பது விசுவாசத்தைத் தடை செய்து, அதினால் இரட்சிப்பையும் தடை செய்கின்றது என்பதை அறியுமளவுக்கு சாத்தான் கூர் மதியாளனாய் இருக்கின்றான். "ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்" (மத். 13:19), "அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு" (லூக். 8:12) அவன் இவ்வாறு செய்கின்றான். புரிந்துகொள்ளுதல் என்பதே விசுவாசத்தின் அடிப்படையாய் உள்ளது (ரோமர் 10:17), மற்றும் விசுவாசம் என்பது தேவன் ஏற்றுக் கொள்ளும் செயலுக்கு அடிப்படையாக உள்ளது (எபி. 11:6); ஆகையால், இரட்சிப்புக்குப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகின்றது (மத். 13:15). பாவமன்னிப்புக்கு அவசியமானது என்ன என்பதைப் புரிந்து கொள்ளாத ஒருவர், பாவமன்னிப்புக்கு அவசியமானதைச் செய்தாலும் கூட அவர் விசுவாசத்தினால் செயல்பட முடியாது; அவர் தாம் செய்கின்ற செயலுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்துக்கும் இடையில் உள்ள உறவைப் புரிந்து கொள்ளாதிருக்கின்றார். இப்படிப்பட்ட செயலானது விசுவாசத்தின் செயல்பாடாயிராமல் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் செயல்பாடாகவே இருக்கும். கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் செயல்பாடல்ல ஆனால் இயேசுவின் சுத்திகரிக்கும் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையிலான கீழ்ப்படிதலின் செயல்பாடுதான் இரட்சிப்பாக உள்ளது.

## கூற்று 6: "எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் ஒருவர் ஞானஸ்நானம் பெறுகின்றார்"

ஞானஸ்நானம் பெறுபவருக்குக் கிடைக்கின்ற ஆசீர்வாதங்கள் பலவற்றை அட்டவணைப் படுத்திய பிறகு, ஜிம்மி ஆலென் அவர்கள் பின்வரும் உற்று நோக்கலை ஏற்படுத்தினார்:

> ஒருவர் தாம் முழுக்காட்டப்பட்ட வேளையில் கர்த்தரால் தரப்படுகின்ற ஆசீர்வாதமான பாவமன்னிப்பைப் பற்றிப் புரிந்து கொள்ளாதிருந்தால் அந்தத் தனிநபர் மறுமுழுக் காட்டப் படுதல் அவசியம் என்று தர்க்கரீதியாக ஒருவர் மனநிறைவு கொள்வாரென்றால், இதைத் தொடர்ந்து, அவர் தேவனால் நிறைவேற்றப்படும் இன்னொரு காரணத்தைப் புரிந்து கொள்ளத் தவறியிருந்தால், அதை அவர் கற்றவுடன் அவருக்கு இன்னொரு ஞானஸ்நானம் தேவையாயிருக்கும்.[11]

*ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நாம் செயல்படும் பொழுது, மற்ற பல ஆசீர்வாதங்களுக்கு நாம் ஒரு கதவைத் திறக்க முடியும். இந்த ஆசீர்வாதங்கள் அந்தச் செயல்பாட்டின் நோக்கமாயிராமல் அந்தச் செயல்பாட்டின் விளைவாயிருக்க முடியும்.*

*ஒரு மனிதர் ஒரு திருமண உரிமத்தை வாங்கி, இருக்கைகளின் நடுவே முன்னே சென்று திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்திற்காக திருமணத்தில் "நான் வாக்குக் கொடுக்கிறேன்" என்று கூறலாம். திருமணம் செய்து கொள்வதற்காக அவர் இந்த விஷயங்களைச் செய்வதன் விளைவாக திருமணத்துடன் இணைந்துள்ள ஆசீர்வாதங்கள் பலவற்றை அவர் தமக்குக் கிடைக்கும்படிச் செய்ய முடியும். இதே வழிமுறையில், பாவியாயிருப்பவர் தேவனுடன் தமது உறவைச் சரியாக்கிக் கொள்வதற்காக, இனியும் தேவனிடத்திலிருந்து பிரிந்திராதபடிக்குத் தமது பாவங்கள் மன்னிக்கப்படும் படியாக ஞானஸ்நானம் பெற வேண்டியுள்ளது. இவ்வழி முறையில் பதில்செயல் செய்வதென்பது கிறிஸ்துவுக்குள் உள்ள சகல ஆசீர்வாதங் களுக்கும் கதவைத் திறக்கும் (எபே. 1:3).*

*ஞானஸ்நானம் பெறுகின்றவர் அந்தப் புதிய உறவுடன் இணைந்துள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. திருமணம் செய்து கொள்ளுகின்ற ஒரு மனிதரைப் போலவே, ஞானஸ்நானம் பெறுகிறவரும் அந்த உறவுமுறைக்குள் நுழைவதற்கு இன்றியமையாதது என்ன மற்றும் அந்த நோக்கத்திற்கான செயல்பாடு என்ன என்பதை மட்டும் அறிந்திருத்தல் போதுமானது. இதைச் செய்வதினால், ஞானஸ்நானத்தின் சகல ஆசீர்வாதங்களும் புரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும், புரிந்து கொள்ளப் படாதிருந்தாலும் அவருக்குக் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் அவர் ஒரு புதிய ஆசீர்வாதத்தை அறிந்தாரென்றால், அவர் ஒவ்வொரு ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகவும் மீண்டும் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அர்த்தப் படுத்தாது, இது திருமணமான ஒரு மனிதர் புதிய ஆசீர்வாதம் ஒவ்வொன்றையும் அறியும் போது மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறுவதை விட மிகையானதல்ல. ஞானஸ்நானம் பெறவோ அல்லது திருமணம் செய்து கொள்ளவோ அவசியமானதைச் செய்தல் என்பது அந்தப் புதிய உறவின் ஆசீர்வாதங்கள் யாவும் கிடைப்பதற்கு ஏற்கனவே வழி வகுத்த செயலாகின்றது.*

*செசில் மே Jr. அவர்கள் சரியாகவே பின்வருமாறு அவதானித்துள்ளார்:*

> *"பரிசுத்த ஆவியின் வரம்" என்பதைக் காட்டிலும் "பாவமன்னிப்பு" என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டுமா என்பது கேள்வியல்ல. ஒருவர், "பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டுள்ளன என்பதால்" என்பதற்கு மாறாக "பாவமன்னிப்புக்கென்று" என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமா என்பதே கேள்வியாகும்; "நான் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற காரணத்தால்" என்பதற்கு மாறாக "கிறிஸ்துவுக்குள்"; ... ஏனெனில் ஞானஸ்நானம் பெறுபவர் இரட்சிப்பு தமக்கு ஏற்கனவே கிடைத்து விட்டது என்று நம்புவதானது ஞானஸ்நானத்திற்கான வேதாகம நோக்கம் ஒவ்வொன்றையும் ஒன்றுமற்றதாக்குகின்றது.*[12]

## கூற்று 7: "ஞானஸ்நானத்திற்கான ஒரு நோக்கமானது மற்ற எல்லாவற்றையும் உள்ளடக்குகின்றது"

*தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்ற ஒரு நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெறுதல் என்பது மற்ற நோக்கங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கு கின்றதென்று கூறப்பட்டுள்ளது.*

> *ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கான எல்லாக் காரணங்களையும் புரிந்து கொண்டிருக்க வேண்டும், அல்லது மற்ற எல்லா காரணங்களையும் அரவணைத்துள்ள ஒரு காரணத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று காணப்படுகின்றது ... மற்ற எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற ஒரு காரணமாக இருப்பது தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்ற காரணம் ஆகும் என நான் நம்புகின்றேன். பிதாவுக்குக் கீழ்ப்படிவதற்காக இயேசு ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:15-17), ஞானஸ்நானம் பெறுவதற்கு அவர் கொண்டிருந்ததைக் காட்டிலும் உயர்வான நோக்கத்தை வேறு எவரும் கொண்டிருக்க முடியாது.*

*இயேசுவின் ஞானஸ்நானத்தில் உள்ள நோக்கங்களில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அவர் ஞானஸ்நானம் பெற்றதற்கான மற்ற நோக்கங்களைக் காணாமல் விட்டுவிடுவதற்கும், நாம் ஞானஸ்நானம் பெற வேண்டியதற்கான நோக்கங்களை மதியாமல் இருப்பதற்கும், நாம் ஞானஸ் நானம் பெறுவதற்கான ஒரு நோக்கம் இந்த ஒரு நோக்கம்தான் என்று முடிவு செய்வதற்கும் ஒருவருக்கு என்ன உரிமையுள்ளது?*

*தேவனுக்கு கீழ்ப்படிவதற்காக இயேசு ஞானஸ்நானம் பெற்றதில் பாவமன்னிப்பு, இரட்சிப்பு மற்றும் புதிய வாழ்வு ஆகியவை உள்ளடங்கிற்றா? இல்லையென்றால், தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கான ஞானஸ்நானமானது ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள எல்லா நோக்கங்களையும் உள்ளடக்குவதில்லை என்றாகின்றது. இயேசுவின் ஞானஸ்நானத்தினுடைய நோக்கமாகிய தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்ற நோக்கமானது நமது ஞானஸ்நானத்திலும் உள்ளடங்கியிருக்கின்றது, ஆனால் இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் சாத்தியமாக்கப்பட்ட பாவமன்னிப்பின் மூலமாக தேவனுடனான புதிய ஒரு உறவில் பிரவேசிக்கும் நோக்கத்தை உள்ளடக்குமளவுக்கு இது அதற்கப்பாலும் செல்லுகின்றது. ஞானஸ்நானத்தை இதற்குக் குறைவானதாக ஏற்படுத்து கின்ற எவரும் அதை கண்மூடித்தனமான கீழ்ப்படிதலின் அடிப்படை யிலான வெற்றுச் சடங்காகவே ஆக்குகின்றனர், அவர்கள் இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தை அவமாக்குகின்றனர். வேதாகமத்தில் எவ்விடத்திலும் புரிந்து கொள்ளுதலற்ற, அர்த்தமில்லாத ஒரு சடங்கானது மனிதரைத் தேவனுடன் சரியான உறவு முறைக்குள் கொண்டு வந்ததாகக் காணப்படவில்லை.*

## முடிவுரை

ஞானஸ்நானத்தின் மூலம் ஒருவர் தேவனுடன் ஒரு புதிய உறவுக்குள் பிரவேசிக்கின்றார், இது சகல ஆசீர்வாதங்களுக்கான கதவைத் திறக்கின்றது. ஞானஸ்நானம் என்பது தேவனுடைய கட்டளைக்குக் கண்மூடித்தனமாகப் பதில் செயல் செய்வதைக்காட்டிலும் மேலானதாகும், ஏனெனில் இது ஒருவருடைய பாவம் நிறைந்த கடந்த காலத்தை உணர்ந்தறிதலையும், இயேசுவின் கர்த்தத்துவம் மற்றும் பாவங்களை மன்னிக்கும் அவரது வல்லமை ஆகியவற்றில் விசுவாசத்தையும், இயேசுவுக்காக வாழ்வதற்கான ஒரு தீர்மானத்தையும், தேவனுடன் ஒரு புதிய உறவில் பிரவேசிப்பதற்கான விருப்பத்தையும் உள்ளடக்குகின்றது. இருதயத்தில் இப்படிப்பட்ட புரிந்து கொள்ளுதலோடும் நோக்கத்தோடும் ஞானஸ்நானம் பெற்றிராத நபர், தாம் புதிய உடன்படிக்கையின்படியான ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க வில்லை என்று உணர்ந்தறிய வேண்டும் மற்றும் இந்த காரணத்திற்காக, இயேசுவின் மீது அவர் விசுவாசம் கொண்டுள்ளதால் தேவனுடனான தமது உறவை சரிப்படுத்த வேண்டிய தனது வாழ்வின் அவசியமான மாற்றங் களைச் செய்யத் தீர்மானித்தவராக, இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, இயேசுவின் இரத்தத்தினால் தன் பாவங்கள் சுத்திகரிக்கப் படும்படி ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் கூட அடக்கம் பண்ணப்பட்டு பாவமன்னிப்பின் மூலமாக தேவனுடனான புதியதொரு உறவில் பிரவேசிக்க வேண்டும்.

---

குறிப்புகள்

[1]Cecil May, Jr., "The Nature of Faith, and the 'Rebaptism' Question," Magnolia Bible College *Preacher Talk* 8 (March 1992):3. [2]Ibid. [3]Jimmy Allen, *Rebaptism?* (West Monroe, La.: Howard Publishing Co., 1991), 41. இந்தப் பணியானது (எழுத்துக்களானது) இதை எழுதியவர் மீதுள்ள எவ்வித விரோதத்தினாலும் இன்றி, இதனுடைய விரிவான முன் வைப்புகளாலும் மற்றும் இவருடன் ஒத்துப் போகின்றவர்களின் எழுத்துக்களில் இருந்து பெறப்பட்டுள்ள ஏராளமான மேற்கோள்களினாலுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. [4]Ibid., 46; பக். 47-48ல் கூடக் காணவும். [5]Rubel Shelly, *I Just Want to Be a Christian* (Nashville: 20th Century Christian, 1986), 124. [6]Allen, 41. [7]Ibid., 117. [8]A. Oepke, "*eis*," in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 2:429. [9]Allen, 42. [10]Ibid., 43. [11]Ibid., 173. [12]Cecil May, Jr., "The Purpose of Baptism, and the 'Rebaptism' Question" Magnolia Bible College *Preacher Talk* 8 (February 1991): 3. [13]Allen, 173.